சதாசிவ மான்மியம்

ஆசிரியர்

"புவனேஸ்வரிதாசன்"

பதிப்பாளர்

ஸ்ரீ ஸதாசிவ ப்ரம்மேந்திர ஸரஸ்வத் யவதூத ஸ்வாமிகள்
அதிஷ்டானம்

புவனேசுவரி நகர் :: புதுக்கோட்டை-1

விலை] 1965 [ரூ. 3-00

2-6

சதாசிவ மான்மியம்

ஆசிரியர்

" புவனேசுவரிதாசன் "

பதிப்பாளர்

ஸ்ரீ ஸதாசிவ ப்ரம்மேந்திர ஸரஸ்வத் யவதூத ஸ்வாமிகள்
அதிஷ்டானம்

புவனேசுவரி நகர் :: புதுக்கோட்டை-1

விலை] 1965 [ரூ. 3-00

2-6

முகவுரை

ஞானயோக சக்கரவர்த்தியான சதாசிவப் பிரம்ம அவதூத ஸ்வாமிகள் சரித்திரத்தை உலகம் அறியவேண்டும் என்ற எண்ணத்தால் இக்காவியம் உரையோடு வெளியிடப்பெறுகிறது. பலவகை விருத்தங்களால் இயன்ற இச் சதாசிவ மான்மியம் அம்மகானை நேரில் காணப்பெறும் பேறு பெருத ஒரு கவிஞரால் உரையோடு இயற்றப்பட்டுள்ளது. அந்த மகான் புதுக்கோட்டை அதிஷ்டானத்தில் அடங்கிப் பல ஆண்டுகள் ஆயின. அவர் அடங்கிய பூமியே தெரியாதிருந்த காலம் ஒன்று உண்டு. அதனைக் கண்டுணர்ந்து உலகம் அறிய உரைத்த மகா புருஷர் சேந்தமங்கலத்தில் அடங்கியிருக்கிர சுயம்பிரகாசப் பிரம்மேந்திர அவதூத ஸ்வாமிகளே. இப்புண்ணியத்தலத்தில் மிகவும் அழகிய சிற்பச் சிறப்பு அமைந்த திருப்பணிகள் இயற்றிப் புவனேசுவரி தேவியையும் பிரதிஷ்டை செய்து நித்ய நைமித்தகங்கள் சிறப்பாக நடைபெறும்படி செய்யும் புண்ணியத்தை யேற்றுக் கொண்டவர்கள் தமிழகத்திலும் பிற நாடுகளிலும் நிறைந்திருக்கின்ருர்கள். அவர்கள் எல்லாரும இம்மகா சரித்திரத்தைப் படித்துப் பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்தால் இந்நூல் அதிஷ்டானப் பதிப்பாக வெளியாகிறது. இதனை இயற்றி உரையும் அமைத்துத் தந்த புவனேசுவரி தாசன் இது போன்ற பிற கைங்கரியங்களும் திருத்தமாகச் செய்து குருநாதர் பரம குருநாதர் தத்தாத்திரேய பரம்பரைத் தவச்செல்வர் முதலிய ஞான மூர்த்திகளின் திருவருள் பெறுவாராக.

பதிப்பாளர்.

பொருளடக்கம்

2-6



ஸ்ரீ புவனேசுவரி

ஸ்ரீ:

சதாசிவ மான்மியம்

காப்பு

" சிவநேசர் பணிந்து வாழ்த்தும்
  திருவடித் துணைப்போ துள்ளான்
புவனேசி நகரம் வாழும்
  புராதன கணேச மூர்த்தி
தவநேசர் சுயம்பிர காசர்
  சற்குரு சதாசி வேந்திரர்
சிவநேச சரிதம் செப்பச்
  சிறந்தநற் றுணையா வானே."

உரை :- சிவபக்தியுள்ள நன்மக்கள் என்றும் பணிந்து வாழ்த்தும் இரண்டு திருவடி மலர்களை உடையவனும் புதுக்கோட்டைப் புவனேசுவரி நகரத்திற் கோயில் கொண்டிருப்ப வனும் ஆன பழமைமிக்க கணேசமூர்த்தி தவவாழ்வில் மிக்க மனப் பற்று உள்ள தத்தகிரி சுயம்பிரகாசப் பிரம்மேந்திர அவ தூத ஸ்வாமிகளின் சற்குருவான சதாசிவப் பிரம்மேந்திர சரஸ்வதி அவதூத ஸ்வாமிகளின் பிரம்மானந்த அனுபவமான திவ்ய சரித்திரத்தினைத் தமிழ் மொழியால் உரைத்தற்கு உரிய சிறந்த நல்ல துணைவன் ஆவான்.

விளக்கவுரை :- புதுக்கோட்டை நகரின் வடகிழக்குப் பகுதியில் உள்ள சதாசிவ அதிஷ்டானத்தில் மகாசமாதி பெற் றிருக்கும் சதாசிவப் பிரம்மத்தின் திவ்ய சரித்திரத்தை உலகத் துக்கு இனிய எளிய தமிழ்ச் செய்யுளால் அமைத்து உரையும்

செய்து அர்ப்பணம் செய்யப்புகும் ஆசிரியர் அவ்வதிஷ்டானத்திலே எழுந்தருளியிருக்கும் வரதமூர்த்தியான விநாயகனை வழிபட்டுத் திருப்பணித் தொடங்குகின்றார். புவனேசுவரி நகரம் என்ற புதுப்பெயரை இந்நகரப் பகுதி பெறக்காரணமாக உள்ள புவனேசுவரி தேவியின் வைபவம் இந்நூலிற் சிறிது உரைக்கப்படும். அதிஷ்டானத்தில் உள்ள விநாயகர் முன்பு இந்நிலத்தில் மறைந்து இருந்து சமீப காலத்தில் வெளிப்பட்டவர். இம்மான்மிய நாயகரான சதாசிவர் நெரூரில் அடங்கிய சதாசிவப் பிரம்மத்தின் வேறு என்று தெளிவாக விளங்கும் பொருட்டே சுயம் பிரகாசர் சற்குரு என்ற அடைமொழி கொடுத்துச் சிறப்பிக்கப் பெறுகின்றார். புராதன சதாசிவர் புதுவை அரசில் பல தருமங்கள் விளங்கக் காரணமாக இருந்த மகான். அவர் வாழ்ந்த காலம் பதினேழு பதினெட்டாம் நூற்றாண்டாம். இச் சதாசிவ முனிவர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர். புதுக்கோட்டையில் அதிஷ்டானம் அமைந்து விளங்கும் பெருமை இப்பின்னைச் சதாசிவர்க்கே உள்ளது.

"முருகப் பெருமான்"

"ஒருமுக வுருவ மேற்றான்
ஒருமையின் விளக்கம் சொல்வான்
கருமமே பக்தி ஞானம்
காண்புற முயலும் மூர்த்தி
தருமமே யொருமை யான
சதாசிவ பிரம காதை
தருமரோ வகத்துள் நின்று
தண்டமேந் தியகை யானே" 2

உரை :- ஆறுமுகங்கள் தனக்கு இருந்தும் ஞானோபதேச அவசரத்தில் ஒருமுகம் உள்ள திருவுருவத்தையே தக்கதாக ஏற்றுக்கொண்டவனும், அத்வைத சித்தாந்தத்தின் விளக்கத்தை அருளும் திருவாய் மலர் உள்ளவனும், கருமயோகம், பக்தியோகம்,

ஞானயோகம் என்ற மூவகை யோகங்களும் தனித்தனியாகவும் ஒருங்கு கூடியும் காணவேண்டும் என்று இன்றும் முயன்று கொண்டிருக்கும் பரம்பொருளும், தண்டாயுதத்தைக் கையில் ஏந்திய பெருமானும் ஆகிய திருமுருகன் அத்வைத சித்தியே தம் தருமமாகப்பெற்று உலகிலே சஞ்சரித்த சதாசிவப் பிரம்மேந்திரர் திவ்ய சரித்திரத்தை நம் மனத்துள் நின்று தானே தருவான்.

விளக்கவுரை :- இறைவன் அருளால் அன்றி எதுவும் நிகழாது. ஆதலின் அவனே உள் நின்று இம் மான்மியத்தை அருள்கின்ருன் என்று உரைக்கப்பட்டது. ஞான ஸ்கந்தமூர்த்தி திருவேரகத்தில் ஒரு முகத்தோடு இருப்பதும், பழனியில் தண்டபாணி ஒரு முகத்தோடு இருப்பதும் அகத்துக்கு அப்பாற்பட்ட பொருளை விளக்கி உலகை உய்யக்கொள்ளவே ஆகும். அத்தகைய மூர்த்தியே இந்த ஞான பூமியில் இருக்கின்ருன்.

"சிவபெருமான்"

"சதாசிவ பிரம நாமம் தரித்தருள் ஞான மூர்த்தி
சதாசிவ சரித மோதும் சக்தியை நல்கா நிற்கும்
சதாசிவ முதலாவாய சதகோடி நாமம் தோன்றச்
சதாசிவ மயமாய் நிற்கும் தனிப்பெரும் பரமன் ருனே"

உரை :- சதாசிவப் பிரம்மம் என்ற திருப்பெயரைப்பூண்டு உலகில் விளையாடிய ஞானமூர்த்தியின் எப்பொழுதும் மங்களமாக உள்ள மகாத்மியத்தை உரைக்கும் ஆற்றலைச் சதாசிவன் முதலிய நூறு கோடி நாமங்கள் உலகத்திலே பரவும்படி என்றும் எங்கும் ஆனந்தமயமாய் நிற்கும் தனிப்பெரும் பரமன் நமக்கு அருள்வான்.

விளக்கவுரை :- பரப்பிரமமே சதாசிவமாகி மற்ற மூர்த்திகளைத் தன்னுளே தோன்றச் செய்து ஐந்தொழில் நிகழ்த்துவது

அம்மூர்த்திக்குப் பலகோடி நாமங்கள் உண்டு. நாமம் உருவம் இல்லாத ஒன்றே அடியார் பொருட்டு இக்கோலம் பூண்டது. சிவம்— மங்களம் ஆனந்தம் முதலிய பொருள்கள் உள்ளது.

"திருமால்"

"ஆயிரம் சிரங்கள் உள்ளான் ஆயிரம் விழிகள் கொண்டான்
ஆயிரம் பதங்கள் உள்ளான் ஆயிரம் கால்கள் கொண்டான்
ஆயிரம் மறைகள் தேடி ஆயிரம் வகையால் ஓதும்
ஆயிரம் உருவம் பூண்ட அரவணைப் பரமன் காப்பே" 4

உரை :- ஆயிரம் முடிகள், ஆயிரம் விழிகள், ஆயிரம் பாதங்கள், ஆயிரம் கைகள் உள்ளவனும் ஆயிரக்கணக்கான வேதங்கள் தேடி ஆயிரம் வகையாலே ஓதுகின்ற ஆயிரம் உருவம் பூண்டு அரவப் பாயலிலே கண்வளரும் நாராயணன் இக் காவியத்துக்கு உரிய காப்பு ஆவன்.

விளக்கவுரை :- வேதத்தின் பகுதியான புருஷஸூக்தத்தில் முதற்கண் வரும் கருத்து இச்செய்யுளில் வந்தது. ஆயிரம் மறைகள் என்றது. "அநந்தாவை வேதா:" என்ற கருத்தை ஒற்றியது. எல்லையற்ற வேதவாக்கியங்கள் பலபடியாகப் புகழ்ந்து பேசிய பரமாத்மா ஆகிய திருமால் இங்கு துதிக்கப் படுகிறான். காப்பு என்ற சொல் காவற் கடவுள் ஆன திருநாராயண மூர்த்தியின் செயலை உணர்த்தி நின்றது.

"நான்முகன்"

"அரியவாம் பொருளை யெல்லாம்
அகங்கொளும் மறைக ளெல்லாம்
தெரியலாம் படிநன் கோதத்
திசைமுக நான்கும் கொண்ட

பெரியமாதேவன் ஞானப்
பெண்டினுக் குரிய கொண்கள்
உரியமெய் யருள் பெற் றிந் நூல்
ஓதுவாம் பணிவி ேனாடே '' 5

உரை :- அருமையான பொருள்களை யெல்லாம் தன்னகத்தே அடக்கி வைத்திருக்கும் வேத சுருதிகளையெல்லாம் நன்கு பொருள் விளங்கும்படி ஓதுவதற்கென்றே நான்கு திசைகளுக்கும் நான்கு முகங்கள் கொண்ட பெருந்தேவனும் ஞானமே உருவமான கலைமகளுக்கு உரிய நாயகனும் ஆகிய பிரமதேவன் திருவருள் பெற்று இந்நூலைப் பணிவோடு ஓதுவோம்.

விளக்கவுரை :- தத்துவப் பொருளை விளக்குவது வேதம். உலகப் பொருள்களையும் வேதம் விளக்குவது உண்டு. பிரமன் வேதம் ஓதிப் பொருள் தெளிந்தே படைப்புத் தொழில் பூண்டான். கலைமகள் ஞானசக்தி ஆதலின் ஞானப்பெண்டு எனப்பட்டாள்.

ஓதுதல்-இயற்றுதற்கும் பயிலுதற்கும் பொதுவினை

" தக்கிணாமூர்த்தி "

" மைக்கணாள் தொடர்பு நீங்கி மாதவர் நால்வர் தேறத்
தக்கிணா மூர்த்தி யாகித் தத்துவம் தெளித்த தேவன்
கைக்கணா மலகம் போன்று கருப்பொருள் கண்ட ஞானி
திக்கெணா முடையார் காதை செப்பவே யருள் செய்வானே"

உரை :- கருவிழி கொண்ட இறைவியின் தொடர்பிலிருந்து பிரிந்து ஏகாகியாகித் தவமுனிவர் ஆகிய ஸனகாதியர் தெளியும்படி தக்கிணாமூர்த்தி உருவத்தில் கல்லாலின் கீழ் அமர்ந்து பரதத்துவத்தை விளக்கியருளிய தேவன் அகங்கையிலே கண்ட நெல்லிக் கனியைப் போல உலக மூலப்பொருளைத் தெளிந்த ஞானியான சதாசிவப் பிரமம் என்ற திருப்பெயர் பூண்ட திக்கையே உடையாகக் கொண்ட மகாத்மாவின் திருச்சரிதையை உரைக்க அருள் செய்வான்.

விளக்கவுரை :- இறைவி கண் மை தீட்டியதன்று. இயற்கைக் கருமை சிறப்பது; நால்வர்–சனகர் முதலிய முனிவர். ஆமலகம்-நெல்லியின் கனி அகம்புறப் பகுதி விளக்கமாதல் குறிப்பு : திக்கு எண் ஆம் உடை - திக்கு என்றே எண்ணத் தக்க உடை - திகம்பரம்

" தத்தாத்திரேய மூர்த்தி "

" சுத்தவத் துவிதா னந்த சொருபமாய் விளங்கு கின்ற
முத்தவே தாந்த ஞான மோனியார் காதைகூற
சத்தசத் திவையே யென்று சாற்றுவான் குருவாய் வந்த
தத்த வாத் திரயன் பாத சரோருகம் தலைவைப் பாமே." 7

உரை :- சுத்த அத்வைத ஆனந்த ஸ்வரூபமாக விளங்கிய முத்த சிகாமணியும் வேதாந்த ஞான சிரோமணியும் மௌனவிரத மகாமணியும் ஆகிய சதாசிவப் பிரம்மேந்திர அவதூத ஸ்வாமிகள் திருச்சரிதம் கூற இது சத்து இவை அசத்து என்று விளக்கும் ஞான குருவாக அவதரித்த தத்தாத்திரேய முனிவர் பாத தாமரையைத் தலையில் வைத்து வணங்குவோம்.

விளக்கவுரை :- தத்த சப்பிரதாயத்தின் மதம் அத்வைதமே. தத்தாத்ரேயர் இச் சம்பிரதாயத்தின் பரமகுரு மோனியார் என்றது சதாசிவப் பிரம்மேந்திர அவதூதரை சத்: பிரமவஸ்து ஒன்று. அசத் - அதற்கு அந்யமாய் உலகத்தில் இருப்பதாகத் தோன்றும் பொருள் எல்லாம், அத்திரி முனிவர்க்கும், அனசூயா தேவிக்கும் மும்மூர்த்திகள் அருளிய செல்வர் ஆதலின் தத்த ஆத்திரேயர் என்ற பெயர் பெற்றார் தத்தாத்ரேயர் மும்மூர்த்தி உருவம் ஆனவர் என்பதை அவர் திருவுருவமே நன்கு விளக்கும். மூன்று முகங்களும் ஆறு கரங்களும் உள்ள அம்மூர்த்தி சங்க சக்கரம் சூலம் கமண்டலம் சின் முத்திரை என்ற அம்சங்களைத் தாங்கும் கரங்களை உடையவர், அவதூத சன்யாஸ பரம்பரைக்கே பரமாசார்யார் ஆதலால் அவர் திருவுருவம் திகம்பரமாகவே அமைந்து பூசனைக்கு உரியதாக விளங்கு

வது தெளிவாம் இந்த ஞான மூர்த்தியின் அவதாரங்கள் பதினாறு என்பர்-பின்னாளில் இச்சம்பிரதாயத்தின் தலைவர்களாக வந்த மகாத்மாக்கள் பலர் இம்மூர்த்தியின் அவதாரம் என்றே கருதப்பட்டனர். இப்பெருமானை வணங்கி அருள் பெற்றாலன்றி முக்தர் வேதாந்தி மௌனி என்று உலகம் மதித்த சதாசிவ முனிவர் சரித்திரம் நிறைவேறாது.

"புவனேசுவரி"

"மும்மை மூர்த்தியர் பல்கோடி
முறையுற வழிபாடாற்றும்
அம்மையை அருளின் வெள்ளம்
அலைபடும் விழியினாளைப்
பொய்ம்மையை விழுங்கும் ஞானப்
புவனேசி தன்னைப்போற்றி
தம்மையே தெளியு ஞானி
சதாசிவர் சரிதம் சொல்வாம்" 8

உரை :- பலகோடி மும்மூர்த்திகள் முறைப்படி தன் உலகத்தில் வந்து பணிந்து வழிபாடு இயற்றும் சிறப்புள்ள அன்னையைத் திருவருள் வெள்ளம் அலை அலையாக எழுந்து பாயும் விழிகள் உள்ளவளை, அழிபொருளை விழுங்கும் ஞானமே உருவமாக உள்ள புவனேசுவரியைப் போற்றி ஆத்ம தத்துவம் தெளிந்த ஞானியான சதாசிவர் சரித்திரத்தை உரைப்போம்.

விளக்கவுரை :- புவனேசுவரி என்ற அம்பிகையின் திருக்கோயில் புதுக்கோட்டையில் உள்ள சதாசிவ அதிஷ்டானத்திலே தெற்கு நோக்கிய அமைப்போடு தோன்றியுளது. தேவீ பாகவதத்தில் புவனேசுவரி மான்மியம் மிகச் சிறப்பாக உரைக்கப்பட்டுள்ளது. பெண்ணுருவம் பூண்டு புவனேசுவரியைத் தரிசிக்கச் சென்ற மும்மூர்த்திகள் அங்கு முன்பே பணிபூண்டிருந்த பல மும்மூர்த்திகளைக் கண்டதாக அங்கு உரைக்கப்படும். மும்மூர்த்திகள் புவனேசுவரியை வணங்கித் துதித்த துதிகளும்

அங்கு உண்டு. புவனேசுவரியின் திருக்கோயில் பதினெட்டு அரண்களுக்குள் அமைந்திருப்பதாகவும் பர்கவதம் கூறும். இவ்வரண்களையும் இவற்றுள் இருக்கும் காவலையும் கடந்து அகத்தே சென்று சிந்தாமணி பீடத்தில் இருக்கும் புவனேசுவரியைக் காண வேண்டும் என்று அப்புராணம் தெளிவிக்கிறது. ஞானம் உதயம் ஆனதும் பொய்த்தோற்றம் எல்லாம் தாமே அழியும். ஆத்ம வஸ்து நானே என்று தெளிவதே உண்மையான ஞானம் என்று வேதாந்த சாத்திரங்கள் உரைக்கும். ஞானமே புவனேசுவரியின் திருவுருவம் என்று இங்கு தெளிவாக உரைக்கப்படுகிறது.

"குருமரபு"

" ஒருமையை யழிவே யில்லா
 உண்மையை யுணர்ந்து தேற்றும்
பெருமையை முறையே பெற்ற
 பீடு சால் மரபுதன்னை
இருமையை யழித்த ஞானத்
 திறை சதாசிவனார் காதை
அருமையை அறிந்து கூற
 அகமுறப் பணிவா நின்றே" 9

உரை:- என்றும் எங்கும் அழிவு பெறாத உண்மையான ஒருமையைத் தாமும் உணர்ந்து தம் மரபினர்க்கும் அருள் புரியும் பெருமையை முறையே பெற்ற மகிமை மிக்க அத்வைத குரு பரம்பரையை இருமை உணர்ச்சியை அழித்த ஞானத் தலைவரான சதாசிவ முனிவர் சரித்திரத்தை அருமை அறிந்து கூறுதற்காக மனமாரப் பணிவோம்

விளக்கவுரை:- அத்வைத குருபரம்பரையில் நாராயணன் முதன்மை பெறுகின்றான். சுகப்பிரமத்துக்கு அங்கு சிறந்த இடம் உண்டு. அவதூத ஸந்யாஸ பரம்பரையில் சுகமுனிவர்க்குத் தனி மதிப்பு உண்டு. இக்குரு மரபு சதாசிவன் முதலாகத்

தொடங்குவதும் உண்டு. சதாசிவன் வேறு நாராயணன் வேறு என்ற எண்ணம் இச் சம்பிரதாயத்தார்க்கு இல்லை. சதாசிவ மான்மியத்தில் அருமைப் பொருள்கள் பல பொதிந்துள்ளன. அவற்றை அறிந்து கூறுவதற்குச் சில வாழ்நாட் பல்பிணிச் சிற்றறிவாளரால் இயலாது. ஆதலின் இக்குரு மரபினர் அப் பொருளையெல்லாம் அவ்வப்பொழுது ஆசிரியர் உள்ளத்திலிருந்து விளக்கி அருளவே இந்நூல் இனிது நிறைவேறும் என்ற குறிப்பு இங்கு அமைந்துள்ளது. இருமையை அழித்த ஞானத்தின் இறைவர் என்று இக்காவிய நாயகர் உரைக்கப்படுகின்றார். இவர் இயற்றிய நூல்களும் வாழ்ந்த வாழ்க்கையும் இவ்வுண்மையை நன்கு விளக்கியுரைத்தற்கு உரிய சான்றுகளாக அமைந்துள்ளன. குருமரபிலே அத்வைத சித்தியை அநுபவித்த பலர் இருந்தனர். அவர் ஒவ்வொருவரையும் தனித்தனி பெயர் கூறி வணங்குவது எளிதன்று. ஆதலின் மரபுக்கே பொதுவாக இவ் வணக்கம் உரைக்கப்பட்டது.

அவையடக்கம்

அறிவின துருவமென்றும் ஆனந்த கனமேயென்றும்
செறிவுறு மெய்ம்மையென்றும் தெளிவிலா தோதப் பெற்ற
குறிகுண மில்லா வொன்றிற் குளித்த மாமுனிவர் காதை
அறிவினை அறியா நெஞ்சேன் அறைவதெத் துணிவி னாலே

உரை :- ஞானத்தின் உருவம் என்றும், ஆனந்த கனம் என்றும், உலகம் எங்கும் செறிந்திருக்கும் உண்மையென்றும், இன்னது என்று தெளிவு இல்லாமல் வேதங்களால் ஓதப்பெற்ற குறியும் குணமும் இல்லாத ஒரு பெரும் பொருளான பிரமத்தில் மூழ்கிக் குளித்த சதாசிவ முனிவர் சரித்திரத்தை அறிவின் தன்மை யறியாத மனம் உள்ள அளியேன் உரைப்பது எத்துணிவால் ?

விளக்கவுரை :- "இப்படியன், இந்நிறத்தன், இவ் வண்ணத்தன் இவன் இறைவன் என்று எழுதிக்காட்டொணுதே" என்பது அப்பர் திருவாக்கு. வேதமும் பரம்பொருளைப் பற்றிப் பல படியாக உரைத்து இன்னது இது என்று தெளிவியாமலே நேதி வாசகத்தில் நின்றது. அப்பொருளுக்குக் குறியும் குண மும் இல்லை என்பது "அநிர்த்தேசியம்" என்ற சொல்லால் நன்கு விளக்கப்பட்டது. ஆனந்தகனமான அப்பொருள் எல்லை யற்ற பெருங்கடல் போன்றது. அக்கடலுள்ளே உலகை மறந்து, உயிர் உணர்வு மறந்து குளித்த முனிவர் சதாசிவப் பிரமம் என்ற பெயர் பூண்ட பெரியார். அவர் மகாத்மியத்தை உரைக்கத் துணிந்த ஆசிரியன் தன் சிறுமையும் காவிய நாயகர் தவப் பெருமையும் தூக்கிப் பார்த்து அறிவினை அறியா நெஞ்சேன் என்று தன் சிறுமையை விளக்குகின்றுன். அறிவு அழிபடும் பொருள் அன்று. அறிவு பிரமமயம் ஆனந்தமயம். சத்திய வஸ்துவும் அதுவே. இவ்வறிவின்பக் கடலில் ஆழ்ந்த மாமுனி வர் மான்மியத்தை அறிவின் உருவமே அறியாத ஆசிரியன் எங்ஙனம் செப்பத் துணியலாம்? துணிந்த துணிவே அறியா மையின் முடியாம்-வெற்றியோ தோல்வியோ எது விளையினும் தன் செயலால் இல்லை என்று அறிந்த அளவே ஆசிரியன் தன்மையாம்.

முதலாவது

" உலக வாழ்க்கைப் படலம் "

'' சான்றவர் கவிதை போலச் சவியுறத் தெளிவு பெற்றுத்
தோன்றிய வுயிர்கட் கெல்லாம் சொல்லரு மின்ப நல்கி
யான்றவ முடைமை காண்மின் என்பதே போலப் பாயும்
வான்றவ ழலைகொள் கோதா வரிநதி சிறக்கும் நாடே'' 1

உரை :- உயர்ந்த புலவர் கவிதை போல ஒளியோடு தெளிவு பெற்று உலகத்தில் தோன்றிய உயிர்களுக்கெல்லாம் இன்னது என்று சொல்லுதற்கு அரிய இன்பத்தைத் தந்து நான் தவம் உடையவளாய் இருப்பதைக் காண்மின்கள் என்று உரைப்பவள் போல நன்செய் நிலத்தூடே பாயும், வானம் முட்டத்தவழும் அலைகளையுடைய கோதாவரி நதியின் பெருக்கால் சிறப்புற்ற நாடு.

விளக்கவுரை :- சதாசிவப் பிரம்மேந்திரர் ஆந்திர நாட்டுப் பிறப்பினர். அவர் முன்னோர் வாழ்ந்த நாடு கோதாவரி நதி தீரத்தில் உள்ள செழிப்புமிக்கதோர் நல்லூர். ஊரை உரைக்குமுன் நாட்டை உரைக்கக் கருதி அந்நாட்டுக்கு வளம் தரும் நதியைச் சிறப்பித்தவாறு.

'' அம்பக மும்மைப் பேர்கொள்
அசலத்தி னிழிவ தாகி
அம்பக மமுத முண்மை
அனைவர்க்கும் விளக்கு நீர்மை

உம்பரே புகழக் கொண்ட
உயர்வொப்பில் குடிஞைப் பாங்கர்
சம்பக மெனவே நின்ற
தவளவீச் சுரமொன் றுண்டே." 12

உரை :- திரியம்பகம் என்ற பெயர்கொண்ட மலையி லிருந்து இறங்குவதாய், நீரில் அமுதம் உண்மையை உயிர்களுக் கெல்லாம் விளக்கும் தன்மையை உம்பரே புகழும்படி கொண்டிருக் கும் உயர்வும் ஒப்பும் இல்லாத கோதாவரி நதியின் கரையில் சிவதலமாக விளங்கிய தவளேச்சுவரம் என்ற நகரம் உண்டு.

விளக்கவுரை:- அம்பகம்-விழி அம்பகம்; மும்மை-திரியம் பகம் கோதாவரி பிறக்கும் மலை திரியம்பகம் என்ற பெயர் பெறும் அம்பு அகம் - நீரில் அசலம் - மலை; நீர்மை - தன்மை; அமுதம் உண்மை-அமிருதத்வம்; உம்பர்-தேவர்; குடிஞை-நதி சம்பு+ அகம்-சிவாலயம். தவள ஈச்சுரம்-கோயில்கொண்ட இறைவன் பெயர்-பூண்ட திருத்தலம், தவளேசுவரம் என்றுள்ளது.

" வெண்மையைத் திருநீற் ருனே விளக்கிய மேனி யீசன்
பெண்மையி னரசை வாமம் பிறங்குற வைத்த பெம்மான்
அண்மையி னடையா முன்னே அன்பருக் கருளும் கண்ணன்
உண்மையி னொருமை தேற்றும் உருவமாய் விளங்கு மூரே"

உரை :- திரு நீற்றுப் பூச்சாலே வெண்மையை விளக்கிய திருமேனியைக்கொண்ட சிவபெருமான், பெண்மையின் அரசான மலைமகளைத் தன் இடப் பாகத்திலே விளக்கமுற அமர்த்தியருளிய பரமன்; தன் அருகில் அடையா முன்னே மெய்யன்பருக்கு அருள் பொழியும் திருவிழிகள் உள்ள தவளேசுவரன் உண்மையின் ஒரு மைத் தன்மையைத் தெளிவிக்கும் உருவமாக விளங்கும் ஊர் அது.

விளக்கவுரை :- தவளேசுவரன் என்ற திருநாமம் இறைவனுக்கு எங்ஙனம் வந்தது என்பதைத் திருநீற்ருனே வெண்மையை விளக்கும் ஈசன் என்ற தொடரால் உரைத்தவாரும். பெண்மையரசு புவனேசுவரி மகிளா மண்டலத் தலைவி அருகில் வந்து தலைவணங்குமுன்னே அவள் அருள்வாள் என்பது அவள் அருட்சிறப்பை விளங்குவது. திருவிடைமருதூரில் அத்வைத தத்வம் விளக்கிய இறைவனே இங்கும் அதனை விளக்கியிருக்கிருன்.

'' வேதநன் கோதித் தேர்ந்த விபுதவே தியர்வா ழூராய்
போதமே யாத லாகாப் பொருளிலே மூழ்கு சான்ரோர்
சீதமே வெம்மை வென்று திருத்தவம் பூணும் சேக்கை
ஈதெனு வுலகம் பேசும் இசைமிகு மிருக்கை யன்றே '' 14

உரை :- வேத வாக்கியங்களைப் பொருளோடு நன்கு ஓதித் தோற்றம் பெற்ற அறிவு சிறந்த அந்தணர் வாழும் ஊராகி அறிவுக்கு விளக்கம் ஆகாத பொருளிலே மூழ்கும் பெருமக்கள் சீதோஷ்ண சுக துக்கங்களை வென்று திருத்தவம் பூணும் இடம் இது என்று உலகம் புகழும் பெருமை மிக்க தலமாம்.

விளக்கவுரை :- வேதத்தை அத்யயனம் செய்தவளவில் அமையாது அதன் பொருளையும் நன்கு உணரவேண்டும் என்று முயலும் பெருமக்கள் விபுத வேதியர் எனப்பெற்ருர். போதம் ஆதல் - விளங்குதல். போதம் ஆகாத பொருள் - பரம்பொருள். சீதோஷ்ண சுக துக்கங்களை வென்ற மனவுறுதியே தவச்சிறப்புக்கு அடிப்படை. சேக்கை-இருக்கை. ஒரு பொருள்.

'' உள்ளத்தால் உணரத் தக்க
ஒருபொருள் உணர நோற்ருர்
வெள்ளத்தால் மிகுந்த யாற்ருள்
வேதஞ்சொல் கடன்களாற்றி

எள்ளத்தான் இடமேயில்லா
இனியநன் னெறியில் வாழ்ந்தார்
கொள்ளத்தான் கொடுத்தற்குந்தான்
கூசிலா மறையோர் ஊரே" 15

உரை:- உள்ளத்தாலே உணரத்தக்க ஒரு பெரும் பொருளை உணரத் தவம் புரிந்தவரும் வெள்ளம் மிக்க கோதாவரி நதியில் வேதம் உரைத்த கடன்களை இயற்றி இகழ்தற்கு இடமே இல்லாத இனிய நல்ல நெறியில் வாழ்ந்தவரும் கொள்ளவும் கொடுக்கவும் கூச்சம் அடையாதவருமான மறை வேதியர் வாழ்ந்த புண்ணிய நகரம் அது.

விளக்கவுரை :- அகத்தால் உணரத்தக்கபொருள் ஆத்ம தத்துவம். கோதாவரி பல்லாயிரம் நன்செய்களை வளர்க்கும் வெள்ளம் உள்ளது. வேதப் பிராமணர் தமக்கு வேதம் விதித்த ஓதல் ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்ற அறு தொழில்களுள் முன் நான்கையும் நதிக்கரையில் நிகழ்த்துவர் பின் இரண்டையும் தம் இல்லங்களில் நிகழ்த்துவர். அந்தணர் கொள்ளவும் கூசார்; கொடுக்கவும் கூசார்.

" பத்திர வசலம் வாழ்ந்த பரம கோதண்டராமன்
பத்தியின் மிகுந்த நெஞ்சர் பழம்பெருந் தவங்கொள் தூய
அத்திரி குலத்து வந்த அந்தணரொருவர் ஞான
சக்தியை மனத்தா லேத்தித் தவநன்கு வாழ்ந்தாரங்கே" 16

உரை :- பத்திராசலம் என்ற திவ்ய க்ஷேத்திரத்திலே கோயில் கொண்டருளிய பரமனான கோதண்டராமமூர்த்தியினிடம் பக்தி மிகுந்த மனம் உள்ளவரும் பழம்பெருமை பொருந்திய தவத்தால் தூயவரும் ஆத்திரேய கோத்திரத்திற் பிறந்தவருமான வேதியர் ஒருவர் தவளேசுவரத்தில் ஞான சக்தியான புவனேசுவரியை மனத்தால் துதித்து நன்கு வாழ்ந்தார்.

விளக்கவுரை :- தவளேசுவரத்தில் இருந்த புராதன சிவாலயத்தை யொட்டி ஒரு பழைய அக்கிரகாரம் உண்டு. அந்த அக்கிரகாரத்தில் ஆத்திரேய கோத்திரத்தில் பிறந்த அந்தணர் ஒருவர் வாழ்ந்தார். அவர் வேத சாஸ்திர விற்பன்னர் குலத்திலே பிறந்தவர். ஆதலால் இயற்கையாகவே பக்திஞான வைராக்கிய சம்பத்துக்களிற் சிறந்தவராய் இருந்தார். ஆந்திர மொழியிலும் வடமொழியிலும் சிறந்த புலவராகவும் இருந்தார். தவநன்கு-மிகவும் நன்ருக என்று பொருள்பகும்.

" வேதத்தின் வழியே தோன்றும் வியத்தகு நூல்கள் எல்லாம்
சாதத்தின் பயனி தென்றே சான்றவர் குலத்தே கற்று
நாதத்தின் இரத மெல்லாம் நன்கனம் தெளிந்து ஞான
போதத்தின் மூழ்கா நின்ற புனிதரா மவரென் பாரே " 17

உரை :- வேதத்தின் வழி நூல்களாகத் தோன்றிய வியக்கத் தக்க சாத்திரங்களை யெல்லாம் தம் பிறப்பின் பயன் இவற்றை ஓதுவது என்று துணிந்து, சிறந்த புலவர் குரு குலத்திலே கற்று, நாத மயமான சங்கீதத்தின் சுவை வகை யெல்லாம் நன்கு தெளிந்து ஞான அனுபவத்தில் மூழ்கிய புனிதர் என்று அவரை உலக மக்கள் புகழ்ந்துரைப்பார்.

விளக்கவுரை :- நியாயம், வைசேஷிகம், வியாகரணம், பூர்வ மீமாம்சை, உத்தர மீமாம்சை என்ற சாத்திரங்களை முறைப்படி கற்றுத் தேர்ச்சி பெற்ற பெரியார் இவர். நாதப் பிரம்ம உபாசனையிலும் மனம் உருகி ஈடுபட்டவர். ஞான ஆனந்த அநுபவமான ஆத்ம போதத்திலும் ஈடுபட்டவர்.

" சுருதியுட் பொருளைத் தேர்ந்து சுகமய சலதிக்கண்ணே
திருதியிற் சிறந்து நீந்தும் செயலினல் தேவதேவன்
பருதியுட் பிறங்குமுண்மை பயின்ற நூற்றுணையாத் தேர்ந்து
கருதியுட் களிப்பினலே கதிரவன் வணக்கம் செய்வார் " 18

உரை :- வேதத்தின் உட்பொருளை ஆராய்ந்து உணர்ந்து அதன் படலுக மன உறுதி சிறந்து சுகமயமான பெருங்கடலில் நீந்தி இன்புறும் செயல் உடையார். பரமன் சூரிய மண்டலத் தினிடையே விளங்கும் உண்மையைத் தாம் பயின்ற நூல்களின் துணையாலே தெளிந்து அவனையே தியானித்து உள்ளக் களிப் பாலே சூரிய நமஸ்காரத்தையும் நியமத்தோடு செய்வார்.

விளக்கவுரை :- சுருதியின் உட்பொருள் வேதாந்த தத்து வம். சுகமய சலதி-பரமானந்தப் பெருங்கடல். திருதி-தைரி யம். உறுதி, தீரனுக்கு உரிய பண்பு. தீரன் ஒருவனே அப் பொருளை அறிந்து அனுபவிப்பான் என்று உபநிடதமும், கீதை யும் உரைக்கும். தேவதேவன் சதாசிவனும், நாராயணனும் ஆம். சூரிய மண்டலத்தின் இடை நிலத்தில் இருப்பதாக உரைக்கப்பெறும் பரம்பொருள் இப்பெயர் உள்ளது என்று துணிதற்கு இயலாது.

" அணையினுற் புனலைத் தேக்கி
அயலுள நிலங்கள் எல்லாம்
இணையிலாச் சிறப்பை யெய்த
இயக்குமுன் வெள்ளையப்பன்
கணையெனுத் திருமால் தன்னைக்
கையிலே பிடித்த தேவன்
அணையிலாக் கருணையானே
ஆண்டதிச்சிற்றூ ரன்றே" 19

உரை :- அணையாலே தண்ணீரைத் தேக்கி அருகேயுள்ள நிலங்கள் எல்லாம் ஒப்பில்லாத பெருமை பெறும்படி அரசினர் அமைக்கு முன்னே தவனேசுவரன், திருநாராயணனையே திரிபுர சங்காரத்துக்குரிய அம்பு என்று கையிலே பிடித்த தேவன் அணையிடுவதற்த அரிய கருணையாலே ஆட்சி புரிந்திருந்தது இச்சிறிய ஊரேயாகும்.

விளக்கவுரை :- கோதாவரி நதியிலே பெரியதோர் அணைக்கட்டு அமைந்திருக்கும் தலம் தவளேசுவரம் ஆம். அணை தோன்றுமுன் இந்நிலத்தில் இருந்த சிற்றூர்கள் சில அழிந்தன. தவளேசுவர ஆலயத்திற் கோயில்கொண்ட இறைவன் இவ்வக்கிர காரத்தின மக்களுக்குத் தாயும் தந்தையும் ஆனான்.

" பவளமே நிகர்க்கு மேனிப் பரமனை மறைமே லானை
உவளக மதனிற் தேவி யுடனுறை மணாளன் றன்னை
கவளமே தெவிட்டும் வேழம் காவல் பூண் தனியினானை
தவளவீச் சிரத்து வாழ்வார் தாயெனப் போற்றி னாரே" 20

உரை :- பவளம் போல் சிவந்த திருமேனி கொண்ட பரமனை வேதங்களின் முடிவில் விளங்கும் ஒளியுருவுடையானை அந்தப் புரத்திலே இறைவியோடு இன்புற்றிருப்பான் போல் திருவிளையாடல் புரியும் மணவாளக் கோலம் உள்ள பெருமானை உண்ணக் கொடுக்கும் கவளம் தெவிட்டுகின்ற பெரிய யானைகள் காவல் பூண்ட திருக்கோயில் உடையானைத் தவளேச் சுரத்தில் வாழும் அந்தணர் எல்லாரும் தாய் என்று கருதிப் போற்றினர்.

விளக்கவுரை :- தவளேச் சுவரத்தில் வாழ்ந்த அந்தணர் பெருமையை உரைத்த ஆசிரியன் மனத்தில் அக்குலத்தார் பெருமைக்கு ஊற்றாக இருந்த இறைவன் ஆலயம் உள்ளிட்ட நகரமே அணைக்கட்டால் மறைய நேர்ந்த வரலாறு, புகுந்து இச் செய்யுட்கள் எழுந்தன என்று கூறுதல் வேண்டும். இன்று தவளேசுவர ஆலயமும் அக்கிரகாரமும் முன்னாளில் இருந்த சிறப் போடு இல்லை என்ற உண்மை இங்கு உணரத்தக்கது. இப் புண் ணிய பூமியில் தோன்றிய குலத்தின் பெருமை இனி விளக்கப்படும்.

" அப்பெருங் குலத்து வந்த அந்தணர் பெருமான் ஞாலத்
தொப்பரும் புகழே பூண்ட உத்தமர் இராமன் பாலும்
முப்பெரும் பொருளாய் நின்ற முதுபரம் பொருளின் பாலும்
மெய்ப்பெரும் பக்திபூண்ட விபுதர் நீங்கினர் அவ்வூரே" 21

உரை :- முன் உரைத்த அப்பெருங்குலத்திலே பிறந்த அந்தணர் பெருமான் உலகத்தில் ஒப்பற்ற புகழ் பூண்ட உத்தமர் இராமபிரானிடமும் மூன்று பெரும் பொருளாக இருந்த பழமை யான பரம்பொருளினிடமும் உண்மையான பெரும் பக்திபூண்ட அறிஞர் அவ்வூரை நீங்கினர்.

விளக்கவுரை :- மும்மூர்த்திகளையும் ஒரே மனத்தோடு தியானிக்கும் உத்தமர் ஒருவர் இக் குலத்தில் வந்தார். அவர் இராம பக்தியிலும் மிக்கவர். முன்னோர் வாழ்ந்த தவள ஈச்சுரத்தில் அணைக்கட்டால் வாழ்வுக்கு இடையூறு நேர்ந்ததால், புராதன கிராமத்தின் நீங்கிப் புதியவூர் தேடிப் புறப்பட்டார். இவரும் சிறந்த புலவரும் தவச்செல்வரும் ஆவர்.

''வேத்திரமேந்து நந்தி வியனிலத் தடைந்தாற் போன்று
சாத்திரம் அனைத்தும் தேர்ந்த சாந்தராம் வேதமூர்த்தி
சாத்திரி விசயவாடா சார்ந்தனர் சிலநாள் வாழ்ந்தார்
கோத்திரம் விளங்கும் நல்ல குமரரைப் பெற்று ரன்றே'' 22

உரை :- திருக்கயிலாயத்திலே சிவ சந்நிதியில் பிரம்பு ஏந்தி இறைவனை வணங்க வரும் தேவரை அடக்கிச் செலுத்தும் அதிகாரம் படைத்த திரு நந்தி தேவரே பூமியில் வந்தாற் போன்று சாத்திரம் எல்லாம் தேர்ந்த சாந்தரான வேதமூர்த்தி சாஸ்திரியார் தவளேசுவரம் நீங்கி விசயவாடா நகரத்திற்கு வந்தார். அங்கு சிலநாள் வாழ்ந்து தம் கோத்திரத்தை விளக்கும் நல்ல குமாரர் ஒருவரைப் பெற்றார்.

விளக்கவுரை :- நந்தி தேவர் கயிலாயத்தில் ஈசுவர தரிசனத்திற்காக வரும் அன்பர்களை வரவேற்று அவன் அருளுக்கு ஆளாக்கும் திருப்பணி பூண்டவர் இப்பணிக்கு அடையாளமாக ஒரு பொற் பிரம்பை ஏந்தியிருக்கிறார். சிலாத முனிவர் குமாரரான இவர் தவச் சிறப்பாற் சிவனருள் பெற்றுக்

கலை எல்லாம் நிரம்பப் பெற்றவர். வேதமூர்த்தி சாஸ்திரி இவர் போற் புலமை படைத்த மெய்யன்பர் என்று கூறப்படுகிறார்.

" ஒருமையுள் ஊறுமுள்ளத்
துத்தமர் வேத மூர்த்தி
அருமையுள் அருமை யாக
அமுதமே போலத் தோன்றும்
ஒருமையாண் மகவைப்பெற்றார்
உள்ளுவப்பெய்தா நின்றார்
அருமையே அருமையென்றார்
அறிவுசா லொளி நூலோரே." 23

உரை :- அத்வைத அனுபவத்தில் ஊறும் உள்ளத்தை யுடைய உத்தமரான வேதமூர்த்தி சாத்திரியார் அருமைப்பொருள் களுள் மிகவும் அருமையாக அமுதமே போலத் தோன்றும் ஒருமை ஆண்மகவைப் பெற்றார். அதனால் மனமகிழ்ச்சி அடைந்தார். அறிவுமிக்க ஒளி நூற் புலவர்கள் இப்பிறவி அருமையே அருமை! என்றார்.

விளக்கவுரை :- சனக மன்னன்போல வாழ்ந்த வேத மூர்த்தி ஒரு மகனைப் பெற்றார். அருமையென்று உரைக்கப்படும் பொருள்களுள் மிகவும் அரும்பொருளான அமிர்தம் போலத் தோன்றியவர் இக்குமாரர். அமிர்தம் என்பது தேவர் உண்ணும் அமுதம். அழிவற்ற அத்வைத அனுபவம் என்ற இருபொருள் உள்ளது. ஒருமை ஆண்மகவு-ஏகபுத்ரன். ஒருமை ஆண்மகவு. அத்வைத அனுபவம் அடைதற்கென்றே பிறந்த குமாரன். ஒளி நூல்-சோதி சாத்திரம். சோதிடம்.

" மகவென வருவார்தம்மை மன்மகிழ் வுறவே நோக்கி
இகமென விருப்பமெல்லாம் எய்தவும் பரமென் றுன்றோர்
முகமலர் மலர்ந்துநன்கு மொழிந்ததுபெறவும் பெற்றேன்
மகசத முயன்றான் வாழ்வும் மதிக்கிலே னென்று ரன்றே'

உரை :- வேதமூர்த்தி தம் அருமருந் தன்ன குமாரராக வந்த புண்ணியரை மனமகிழ்ச்சியுற நோக்கி இம்மை வாழ்வு என்று இருப்பன எல்லாம் அடையவும், பரம் என்று உயர்ந்த பெருமக்கள் தம் முகமலர் மலர்ந்து நன்கு மொழிந்த பெரும் பேறு பெறவும் பெற்றேன். நூறு அசுவமேத யாகம் முயன்ற இந்திரன் வாழ்வையும் மதிக்கமாட்டேன் என்றார்.

விளக்கவுரை :- இகம்-இம்மை. நன்மைகள்; பரம்-மறுமைப்பேறு மோட்சம் என்பது இவ்விருமைக்கும் அப்பாற்பட்டது ஆம். முகம்-வாய்; வடமொழியில் முகம் என்பது வாயையும் குறிக்கும். மகசதம் - நூறு வேள்விகள்; இம்மைப்பேறு - இவ்வுலகத்தில் பெறுவது மறுமைப்பேறு - சுவர்க்கபோகம்; இந்திரனையே மதியாத மனநிலை பெற்றார் என்பது மகப்பேற்றால் வந்த பெருமிதம்.

“ பாத்திரமறித்து பிச்சை பகவனே யிட்டான் போலும்
சாத்திர நுணுக்கமோர்ந்து சதாசார சம்பத் தேய்ந்த
கோத்திர மிதனிலின்ன குமாரனை யளித்தா னென்றே
சூத்திர நான்குதேர்ந்த சொல்வலார் நினைந்தாரன்றே” 25

உரை :- எல்லாம் வல்ல இறைவனே இக்குலம் தக்க நிலம் என்று திருவுள்ளம் கொண்டு சாத்திர சூக்ஷமங்களை நன்கு தெளிந்து சதாசாரம் என்ற பெருஞ்செல்வம் பொருந்திய இந்த ஆத்திரேய கோத்திரத்தில் இந்தக் குமாரனை அருளிச் செய்தான் என்று நான்கு சூத்திரங்களின் பிரயோகம் அறிந்த நாவின் மன்னர் தமக்குள் நினைத்தார்.

விளக்கவுரை :- பாத்திரம் அறிந்து பிச்சையிடு என்பது ஒரு பழமொழிப்பகுதி. இறைவன் அருளால் அன்றி எதுவும் நிகழ்வதில்லை என்ற உறுதிபடைத்த வேதமூர்த்தி தமக்கு வாய்த்த புத்திர ரத்னத்தின் ஜாதகத்தை ஆராய்ந்து அவர்க்கு அமைந்திருக்கும் பரிவ்ராஜகயோக பாவத்தை நன்கு உணர்ந்து,

அத்தகைய புண்ணிய மூர்த்தி தம் குலத்திலே பிறப்பதால் முன் ஏழுதலை முறையும் பின்வருவாரும் மீளா வாழ்வு பெறும் தகுதி பெறுவார் என்ற உண்மையை உணர்ந்து இஃது இறைவன் அருளிய பிச்சை என்று துணிந்தார். யோகப்ரஷ்டன் செல்வம் மிக்க குலத்திலே பிறப்பான். அது அமையாதாயின் வறுமையே வாழ்வாகக்கொண்ட யோகிகள் குலத்திலே பிறப்பான் என்று கூறிய கண்ணன் இப்பிறப்பே அவனுக்கு வாயப்பதில் மிகச் சிறந்தது என்று கூறுவது இங்கு நினைக்கத்தக்கது. சூத்திரம் நான்கு. ஆபஸ்தம்பம், ஆசுவலாயனம். போதாயனம் பாரத்வாஜம் என்று கருதத் தகும். வியாச சூத்திரம், ஜைமினி சூத்திரம், பாதாஞ்சல சூத்திரம், நாரத சூத்திரம் என்று உரைப்பதும் இம்மகான் சரித்திரத்திற் பொருந்துவது ஆகும். கல்விக் கடலான இவர் யோகிகள் குலத்தே பிறந்தவர். ஆதலின் ஏக புத்திரனுகை இத்தகைய அற்புத சிசுவைப் பெற்ருர்.

“ அருமருந்தன்ன செல்வர்
அகத்தினைமுகத்தே கண்டார்
பெருமருந்துணரு மின்னுன்
பிறவிவெம்பிணிக்கே யென்ருர்
கருவிருந்துழலும் வாழ்வைக்
கடியவே பிறந்தானுகி
ஒருவிருந் துலகுக் கென்றே
உலவுவான் எனவும் சொற்ருர்.” 26

உரை :- பெறற்கு அரியதான அமுதம் போன்ற செல்வர் மனத்தின் நாட்டத்தை அவர் முகத்திலே கண்டார். இவன் பிறப்பு என்ற கொடிய பிணிக்கு அமைந்த பெருமருந்தை உணர்தல் வல்லவன் ஆவன் என்று கூறினுர். கருப்பத்திலே இருந்து உழலுகின்ற உலக வாழ்வைக் கடிந்து ஒழிக்கவே பிறந்தவனுகி உலகுக்கே ஒரு பெரும் புதுமையாக இவன் உலவுவான் என்றும் சொன்னுர் அப்பெரியோர்.

விளக்கவுரை :- தேவர் அரும்பாடுபட்டுத் திருப்பாற் கடலைக் கடைந்து பெற்ற அமுதம் இங்கு உவமை ஆக வந்தது. பெருந்தவம் புரிந்து புத்ரகாமேஷ்டி புரிந்து பெற்ற பிள்ளையும் அருமருந்து போல்வான். இக்குலத்தின் பழம் பெருமையை நன்கு வளர்க்க வந்த குமாரர் ஆதலின் இவர் அருமருந்தன்ன செல்வர் ஆயினர். தந்தை குமாரன் முகத்தை முதல் முதல் நோக்கும்போதே அவர் அகத்தில் உள்ள பிரமானந்த அநுபவச் செல்வத்தை உணர்ந்தார். பிறவிப் பிணிக்குப் பெரு'ருந்து ஞானத்தை அடைய உதவும் பரம வைராக்கியமே ஆகும். பிறப்பதும் இறப்பதும் ஆகக் கருப்ப வாசத்திலே உழலும் சாமானிய வாழ்க்கையை ஒழித்து உலகில் எவரும் எளிதிற் பெருத விசேட வாழ்வைப் பெறவல்ல குமாரர் இவர் என்பதைத் தந்தையார் தெரிந்து கொண்டார். உலகுக்கு ஒரு விருந்து என்ற தொடர் மொழி உலகம் எல்லாம், உலகத்து உயிர்கள் எல்லாம் இப்புனிதரை எதிர்காலத்தில் நோக்கும் போது இவர் ஒரு அவதார புருஷர், அதிமானுஷ சக்தி உள்ளவர். ஞான விஞ்ஞான திருப்தாத்மா, ஆனந்தாதீத அனுபவி என்று அறியப் போகின்ருர். ஆதலின் இவர் ஒரு புதுமையே என்று எண்ணி உள்ளம் மருள் கின்ருர். எதிர்காலத்தில் உலக மக்கள் இப் புண்ணியரைப்பற்றி எண்ணும் எண்ணத்தைப் பிறந்த அன்றே தந்தை உணர் கின்ருர்.

மதலையைத் துணிந்து நோக்கி
மற்றவர் பெருமை தோந்து
குதலையை மிழற்ரு முன்னே
கோடியைக் கொடுத்து மெய்தா
விதலையை யொழிக்கத் தக்க
மெய்யறி வுறுவ னென்றே
பதலையை அடைந்த மாடப்
பண்பினை யெய்தி ஞரே 27

உரை :- குமாரரைக் கூர்ந்து நோக்கி அவர் பெருமையை நன்கு உணர்ந்து மழலை பேசு முன்னே கோடி பணம் கொடுத்தும் பெறுதற்கு அரியதும், நடுக்கத்தை ஒழிக்கத் தக்கதும் ஆன மெய்யறிவைப் பெறுவார் என்று தெரிந்து உறுதிச் சார்பான ஒன்றைப் பெற்ற மாடம் போன்ற குணத்தைப் பெற்றூர்

விளக்கவுரை :- மதலை–குழந்தை. குதலை-மழலைச்சொல் மிழற்றுதல் - மெல்ல உரைத்தல். மெய்யறிவு - கோடி பணம் கொடுத்தும் பெறற்கு அரியது. மனத்தின் தளர்ச்சியை ஒழிக்க வல்லது. மாடம் சாயாது நிற்கத் தக்க உறுதியாக அமையும் பெருந்தூண் பதலை எனப்படும்.

" வெற்றியி னுறையுளென்றே
விளம்புநற் பெயர் பூண்டுள்ள
நற்றிரு நகரில் வாழ்ந்த
ஞானவாழ்வமைந்த சான்றோர்
புற்றினி லுறையு நாகம்
பூண்டவன் அருளேயிந்த
முற்றிய ஞானயோக
மூர்த்தியாய் அடைந்த தென்றூர் " 28

உரை:- வெற்றிக்கு உறைவிடம் என்று உரைக்கும் விஜயவாடா என்னும் நற்பெயர் பூண்டுள்ள அழகுமிக்க திரு நகரில் வாழ்ந்த ஞான வாழ்வு அமைந்த பெருமக்கள் புற்றில் உறையும் நாகத்தை ஆபரணமாகப் பூண்ட பரமன் அருளே இந்தப் பூரண ஞானயோக மூர்த்தியாய் அவதரித்தது என்றூர்.

விளக்கவுரை :- வேதமூர்த்தி சாஸ்திரியர்க்கு அமைந்த புத்திர பாக்கியத்தை அறிந்த ஞானச் செல்வர் பலர் அவர் திருமாளிகைக்கு வந்து அவர் குமாரர் முகமண்டலத்தை நோக்கி,

"ஐய, இஃது அரும்பெற்ற செல்வம். ஒரு குலத்திலே பல நூற்றுண்டுக்கு ஒரு முறை தோன்றும் அபூர்வம் ஆன அவதார மூர்த்தி. இச்செல்வர் அறிவின் செல்வர். கலையின் செல்வர். பக்திச் செல்வர். ஞானச் செல்வர். வைராக்யப் பெருஞ் செல்வர் என்று உலகம் புகழ நாளைக்கு இருப்பார் என்று தம் தம் ஞான விசேஷத்திஞல் அறிந்த உண்மையைக் கூறிச் சென்ருர்.

" சிவம்புரி செல்வர் சிந்தை
தெளிந்ததை மறைத்துத் தாயின்
தவம்புரி பெருமை தன்னைத்
தமக்குள்ளே யடக்கி வைத்தார்
அவம்புரி யுலக வாழ்வின்
அகப்படா மழலைச் செல்வர்
பவம்புரி வலையுட் பட்டும்
படாத பேரொளி கொண்டாரே " 29

உரை :- மங்களமான செயல்களையே செய்யும் மனப் பண்பு உள்ள வேதமூர்த்தி சாத்திரியார் தம் சிந்தையிலே தம் குமாரர் எதிர்காலத்தைப் பற்றித் தெளிந்த உண்மையை மறைத்து வைத்து அக்குழவியை ஈன்றதாயின் தவம் புரிந்த பெருமையை தம் மனத்துள்ளே அடக்கி வைத்தார். வீணே நிகழும் உலக வாழ்வில் அகப்படாதிருக்கும் அரும் பிறவி பெற்ற மழலைச் செல்வர் பிறவி தரும் வலையுட்பட்டும் அதனுட்படாத பேரொளியோடு விளங்கிஞர்.

விளக்கவுரை :- ஞானியர் உரைத்த செய்தியைக் கேட்ட வேதமூர்த்தி தம் மனவுணர்வாலும் குமாரர் எதிர்கால நிலையைத் தெளிவாக அறிந்து கொண்டாராயினும் தம் மனைவியாரிடம் சிசுவின் ஜாதக பாவத்தைக் கூருது மறைத்து வைத்தார். சங்கரரை ஈன்ற தாயும் அவர் துறவு பெற எளிதில் அனுமதிக்க வில்லை என்ற உண்மையை இவர் அறிந்தே இங்ஙனம் செய்தார்.

ஒளிகளை நோக்கி நோக்கி யுய்த்துணர் தெளிஞர் பல்லோர்
அளிகளை மதுவை யூட்டும் அலர்ந்தசெங் கமலம் போலும்
ஒளிவளர் முகத்துச் செல்வர் உம்பருக் கரிதாம் பேற்றை
எளிதினில் எய்தும் உண்மை இயம்பினர் தந்தை பாலே 30

உரை :- வான மண்டலத்திலே ஒளியுருவத்தோடு விளங்கும் கிரகங்களை நோக்கி உய்த்துணரும் சோதிடர் பலர், வண்டுகளை மதுவை உண்ணச் செய்யும் அலர்ந்த செந்தாமரைபோன்ற ஒளிவளரும் முகத்தையுடைய குமாரர், தேவருக்கு அரிய பேற்றை எளிதில் அடையும் உண்மையைத் தந்தையாரிடம் உரைத்தார்.

விளக்கவுரை :- சாத கருமம், நாம கரணம் முதலிய சம்ஸ்காரங்கள் நிகழும்போது இத் திருமாளிகைக்கு வந்த சோதிட நூல் வல்ல சான்றோர் இச்செல்வர். பரமஞானமூர்த்தியாக விளங்குவார் என்று கூறி வாழ்த்திச் சென்றார் தந்தை அவ்வாழ்த்தின் உட்பொருளை நன்கு உணர்ந்தார். தாயோ உலக மக்கள் போன்று கல்விச் செல்வராக விளங்குவார் என்று உணர்ந்தார்.

“ சங்கர குரவர் கோயில் சங்கரன் உறையும் கோயில்
பங்கய நாபன் கோயில் பதுமையின் எழில்சால் கோயில்
கங்கன கரத்து வாணி கலந்துறை கமலக் கோயில்
எங்கணு மகனார் வாழ்வில் ஏற்றமே வேண்டு வாரே ” 31

உரை :- விஜயவாடா நகரில் ஒரு சிறு குன்றத்தின்மேல் உள்ள சங்கர குரவன் திருக்கோயில், பரமசிவன் வீற்றிருக்கும் கோயில், பதுமநாபனான திருமால் உறையும் கோயில், திருமகள் வீற்றிருக்கும் அழகுமிக்க கோயில், கங்கணம் அணிந்த திருக்கரம் உள்ள கலைமகள் உறையும் தாமரைக் கோயில் எங்கும் வேதமூர்த்தி தம் குமாரர் வாழ்வின் ஏற்றத்தையே வேண்டுவாரானார்.

விளக்கவுரை :- மூர்த்தி பேதம் அறியாத சதாசாரமும் சாத்விக பக்தியும் உடையவர் இப்புண்ணியர். இவர் குமாரர் இவர் போலவே மனப் பண்பு பெற்று வளர்வார் ஆனுர்.

அகவையைந் தணுகும் போதே அக்கரம் அறிவித் திட்டார்
மகவைநன் ஞான மார்க்கம் வளர்க்கவே நினைவு கொண்டார்
தகவையம் மகனுர் வாழ்வில் தாபிக்கும் வேத மூர்த்தி
மிகவையே மதியா நெஞ்ச மேதக வூறச் செய்தார் 32

உரை :- ஐந்து வயது ஆகும்போதே குமாரர்க்கு அக்ஷர அப்பியாசம் செய்வித்தார். அவரை நல்ல ஞான மார்க்கத்தில் வளர்க்கவே நினைவு கொண்டார். அவர் வாழ்விலே சிறந்த தகுதியை நிறுவும் கருத்துக்கொண்ட வேதமூர்த்தி உலக வாழ் வின் ஏற்றத்தை மதியாத மனச்சிறப்பு அவரிடம் ஊறும்படிச் செய்தார்.

விளக்கவுரை :- அக்ஷரம் என்ற சொல் எழுத்தையும் குறிக்கும்: பரப்பிரம்மத்துக்கும் பெயராக அமைவது. குழந் தைக்கு இளம் பருவத்திலே அக்ஷராப்பியாசம் செய்யும்போதே அஷ்டாக்ஷர மந்திர உபதேசத்தோடு தொடங்குவது இந்நாட்டுச் சம்பிரதாயம். ஆதலின் அன்றுமுதலே பரப்ப்ரம்ம மயமான அக்ஷர உபதேசம் செய்யப்பட்டதாகவே கருதத்தகும். அகவை-ஆண்டு வயது-; மகவு-குழந்தை தகவு-சத்குணம்; தாபித்தல்-ஸ்தாபித்தல்.

வடமொழி வடுகு நன்னர் வரன்முறை பயின்ற செல்வர்
மடமொழி மனத்தின் பண்பான் மன்னவர் மொழியும் கற்ருர்
வடமுறை யிறைவன் போன்ற மாதவர் ஒருவர் பாற்சென்று
இடமுறு மறையி னந்தம் இயம்பிய பொருளும் கேட்டார் 33

உரை :- ஆரிய மொழி, தெலுங்கு என்ற இரு மொழிகளை யும் சம்பிரதாயக் கிரமமாகப் பயின்ற இவ்விளஞ் செல்வர் அறி

யாமை அகலும் மனப்பண்பாலே அந்நாளில் இந்நாட்டை யாண்ட மன்னர்க்குரிய மொழியான ஆங்கிலத்தையும் கற்றுக் கொண்டார். கல்லாலின் கீழிருந்து தத்துவ உபதேசம் செய்த தக்ஷிணாமூர்த்தியைப் போன்ற ஒரு தவச் செல்வரிடம் விரிந் தகன்ற வேதாந்த சாஸ்திரம் உரைத்த பொருளேயும் கேட்டு உணர்ந்தார்.

விளக்கவுரை :- ஐந்து வயதில் வித்யாப்பியாசம் தொடங் கிய இச் செல்வர் முதலில் வடமொழி பயின்று பிறகு தம் தாய் மொழியான ஆந்திரமும் கற்றூர் பிறகு அரச மொழியான ஆங்கிலமும் கற்றுக் கொள்ளலானூர். இளமையிலேயே கல்விச் செல்வம் சிறப்புறப் பெற்றூர்.

“ எழுமைநல் லகவை தன்னே
எய்துமுன் வேத நூலுள்
முழுகுறும் உரிமை நல்கும்
முதன்மைசால் சடங்கு செய்து
வழுவலு மனத்து ஞான
மறைவலார் மகனூர் கேட்கக்
கெழுமிய வன்பி ஞலே
கிளத்தினர் வேத மெல்லாம்” 34

உரை :- ஏழு பிராயம் அடையுமுன்னே வேத நூல்களில் மூழ்கும் உரிமையைத் தம் குமாரர்க்கு நல்கும் முதன்மை சிறந்த உபநயனம் என்ற சடங்கு நிகழ்த்தி குற்றமற்ற மனம் உள்ள ஞான வேதியரான வேதமூர்த்தி தம் மைந்தர் செவியேற்க உரு கிய அன்பினூல் வேதம் எல்லாம் ஓதி வைத்தார்.

விளக்கவுரை :- பரம்பரையாக வேத நூல்களே ஓதி யுணர்ந்த குலத்திலே பிறந்த செல்வர் ஆதலின் கர்ப்பாஷ்டமத் தில் உபநயனம் செய்விக்கப் பெற்றூர். உபநயன ஸம்ஸ்காரம்

வேதம் ஓதுவதற்கு அதிகாரம் தருவதாம். வேத சாஸ்திர பாரங்கதர் குலத்தில் வந்த இச் செல்வர் இளமையிலே அத்துறை யிற் பயிற்சி பெற்றார்.

“ வானாட்டுக் கலைக்கண் மிக்க
வளர்ச்சியைக் கண்ட செல்வர்
ஈனாட்டுக் கலைகள் தம்முள்
இயன்றள வுயர்ச்சி யெய்த
மேனாட்டுத் துறைகள் எல்லாம்
விளம்புறுமொழிதேர் வுற்றுக்
கோனாட்டின் அறநூல் கற்கும்
குறிப்பினர் ஆயி னாரே ” 35

உரை :- தேவ பாடையில் உள்ள கலைகளில் மிக்க அறிவு வளர்ச்சி பெற்ற செல்வர் இந்நாட்டுக் கலைகளில் இயன்ற அளவு உயர்ச்சி அடைய வேண்டி மேல்நாட்டு நூல் துறைகளை எல்லாம் விளம்பும் ஆங்கில மொழியை நன்கு தேர்ந்து நாட்டை அரசாண்ட ஆங்கில மன்னர் நாட்டில் வழங்கும் அற நூல்களைக் கற்கும் குறிப்புள்ளவர் ஆனார்.

விளக்கவுரை:- வானாட்டுக் கலை என்றது-வடமொழியாற் கற்கும் கலை வகைகளை ‘ஈனாடு-இவ்வுலகம், இந்நாடு; ஈனோர்க்கு உரைப்பாம் என்று திருத்தக்கதேவர் உரைப்பர். மேனாட்டுத் துறைகள் - பாச்சாத்திய சாத்திர சம்பிரதாயங்கள்; கோனாடு- ஆங்கில அரசர் ஆளும் உரிமை நாடு. அவர் அறநூல் - சட்ட நூல்கள்.

“ மைந்தர்நூல் கற்கும் நோக்கம்
மனமுற வறிந்த தந்தை
அந்தணர் வேத நூற்கண்
ஆழ்வதே பொருத்த மாகும்

சிந்தனை திரிந்து மாயும்
தேயத்து நூல்கள் தேறல்
பந்தனை வளர்க்கு மென்றே
பரிவுற வருந்தினரே ". 36

உரை :- தம் குமாரர் மேனாட்டு அறநூல் கற்கும் நோக்கம் கொண்டிருப்பதை மனமுற அறிந்துகொண்ட தந்தையர் வேதிய குலத்தார் வேத நூலுள் ஆழ்வதே பொருத்தம் ஆகும். எண்ணம் வேறுபட்டு அழியும் நாட்டுமொழிகளில் உள்ள உலக நூல்களைக் கற்றுத் தெளிவது உலகப் பற்றை வளர்க்கும் என்று பரிந்து வருந்தினர்.

விளக்கவுரை :- ஆரிய நூல்களிலும் வேத நூற்றுறைகளிலும் தம் மைந்தர் ஆழ்ந்த அறிவுபெற வேண்டும் என்று விருப்பிய வேதமூர்த்தி சாஸ்திரியார் அவர் மேனாட்டு மொழியிலும் மேனாட்டார் தர்ம சாத்திரத்திலும் பற்றுள்ளம் கொண்டதை உணர்ந்து தம் குல தர்மம் தவறுவதாக மனம் வருந்தினர். தந்தை மனம் வருந்தியதை மைந்தரும் உணர்ந்து கொண்டார்.

" எந்தையீர் நந்த முன்னோர்
எத்துறை நிலைத்தா ரென்று
நித்தையே தவிர நீவிர்
நிகழ்த்துதல் கேட்டு ளேனல்
சந்தையே புகன்று வேத
சாத்திரம் பயின்ற பண்டை
விந்தையே சிறந்த வித்தை
விழையு மென் னுளமுநன்கே " 37

உரை :- என் தந்தையீரே, நம் முன்னோர் முன்னாளில் எந்த நூற்றுறைகளில் புகுந்து பொருள் தெளிந்து இன்பம்

அடைந்தார் என்று நிந்தை தவிர நீர் உரைக்க நான் கேட்டிருக்கின்றேன் சந்தை சொல்லி வேத சாத்திரங்களைப் பயின்ற அத்தகைய விந்தை சிறந்த பண்டைய விந்தையையே என் மனமும் விரும்பும்.

விளக்கவுரை :- திளைத்தல்-மூழ்கி இன்புறுதல்-; எந்தை-என் தந்தை என்பதின் மரூஉ மொழி; சந்தை புகல்தல்-குரு ஒரு வாக்யத்தை ஒரு முறை கூற, சீடர் அதை மூன்று முறை உரைத்து மனப்பாடம் செய்யும் முறை; விந்தை - வியப்பு; வித்தை-சாஸ்திர ஜாலம்.

" உலகமே உயிரேயெல்லாம்
ஒருமையின் தோற்ற மென்றே
அலகிலா அறிவின் மிக்க
ஆரியர் பெருமான் சொற்றூர்
விலகிலா மேலைநாடு
மிகுபுகழ்க் கீழை நாடும்
உலகுளேயிருப்ப வென்றே
உணருதல் தரும மன்றே " 38

உரை :- உலகம், உயிர் முதலிய எல்லாம் ஒருமைப்பெரும் பொருளின் தோற்றம் என்று எல்லையற்ற அறிவின் மிக்க நம் பரமசாரியர் சங்கரர் உரைத்தார். ஒன்றை விட்டு ஒன்று விலகா திருக்கும் மேல்நாடும் மிக்க புகழ்பெற்ற கீழ் நாடும் உலகத்துள், இருப்பவை என்றே நாம் உணருதல் தருமம் அன்ரே!

விளக்கவுரை :- உலகம் உயிர் என்று உள்ள எல்லாம் தோற்றம். உண்மை பிரமம் ஒன்றே. அதுவே இப்படிக் காட்சி கொடுக்கிறது. எல்லாம் பிரமமே என்று அறிவதே உண்மையான அனுபவ வேதாந்த ஞானம் என்பது நூற்றுணிபு. சங்கரர் எல்லையற்ற அறிவுள்ளவர்-, ஆரியர்-ஆசாரியர்,-ஆரியர் பெருமான். ஆசாரியர் பரம்பரையில் மிக்க சிறப்புக்கு உரியவர்

மேல் நாடு கீழ்நாடு இரண்டும் வேறு வேறு என்றே தோன்றினு லும் உலகத்துள் இருப்பவைதானே என்ற உண்மை உரைக்கப் பட்டது.

பண்டையர் தந்த நாட்டிற்
பயிற்றிய நீதி நூலும்
வண்டயர் மாலே வேய்ந்த
மன்னவர் வாழ்க்கை நூலும்
கண்டவர் நெஞ்சம் பற்றும்
கருத்துள நியாய நூலும்
தொண்டர்தம் பெருமை சாற்றும்
தூய்மைசால் பக்தி நூலும் 39

உரை :- நம் முன்னோர் நம் நாட்டில் ஓதியும் ஓதுவித்தும் வந்த தரும சாஸ்திரங்களையும் வண்டுகள் மொய்க்கும் மாலே சூடிய மன்னர் வாழ்க்கைகளை விவரிக்கும் சரித்திரங்களையும் பார்த்தவர் மனத்தைப்பற்றும் கருத்துச் செறிவுள்ள நியாயவை சேஷிக சாஸ்திரங்களையும் பக்தர் மகிமைகளை உரைக்கும் தூய்மையான பக்தி மான்மியங்களையும்.

விளக்கவுரை :- இச்செய்யுள் வேறு இரண்டு செய்யுட் களோடு இசைவுற்றுக் குளகமாக முடிகிறது. தரும சாஸ்திரங்கள் மனு பராசராதிகளால் இயன்றவை. மன்னர் வாழ்வு புராணங் களில் இடையே வருகிறது. நியாய சாஸ்திரத்தில் இக்குடும்பம் மிக்க பயிற்சி பெற்றது. தொண்டர் பெருமை பக்த விஜயங் களில் வரும்.

வேத வேதாந்த நுட்பம் வெளிப்பட விளக்கு நூலும்
நாதமா பிரமந் தன்னே நமக்கருள் இனிய நூலும்
சூதனே புகன்ற பன்மைத் தொன்மைய புராண நூலும்
ஏதமே யில்லா வுண்மை இசையிதி காச நூலும். 40

விரை :- வேத வேதாந்த நுட்பங்களை வெளிப்படையாக விளக்கும் சாஸ்திரங்களையும் நாதமயமான பிரமத்தை நமக்கு அருளும் இனிமை மிக்க சங்கீத சாஸ்திரங்களையும் சூதபுராணிகர் விளக்கியுரைத்த பலவகைப்பட்ட பழமைப் புராணங்களையும் குற்றமற்ற உண்மையை உரைக்கின்ற இதிகாசங்களையும்.

விளக்கவுரை :- வேதாந்த சாஸ்திரங்கள் பிரம சூத்திரம், பகவத் கீதை, உபநிஷதம் என்னும் மூன்றும் ஆகும். இவை ப்ரஸ்தானத்ரயம் என்று பெயர் பெறும். சங்கீத சாஸ்திரங்கள் நாரத சம்பிரதாயம், ஹநுமத் சம்பிரதாயம் முதலிய பேதம் உள்ளவை. புராணங்கள் மகாபுராணம், உபபுராணம் என்று இருவகைப்படும் தலபுராணங்களும் இவற்றுள் அடங்கு கின்றன. இதிகாசங்கள் இராமாயணம், பாரதம் என்ற இரண்டும் ஆகும். இவைகளை எல்லாம் வேதம் ஓதிய பின்பு கற்று உணர்வது பண்டைய முறை. அம்முறைப்படி இவரும் கற்றுக்கொண்டார்.

"அரியநம் குலத்துச் செல்வம்
ஆமென அளியேன் பெற்றேன்
பெரியநம் நாட்டை யாளும்
பெற்றியார் மொழியும் கற்றேன்
உரியவம் மன்னர் நீதி
யோம்புறு நெறியைத் தேர்ந்து
கரியமா லரச னென்று
கழறிய கருத்தோர் வேனே" 41

உரை :- அளியேன் இந்நூல் வகைகளை யெல்லாம் அரிய நம் குலத்தின் பரம்பரைச் செல்வம் ஆம் என்று கருதிக் கற்றுக் கொண்டேன். நம்பெரு நாட்டை இன்று அரசாள்கின்ற தகுதி யுடையார் தாய்மொழியான ஆங்கிலத்தையும் கற்றுக்கொண் டேன். இன்று நமக்கு உரியவராயிருக்கும் அம்மன்னர் நீதி

பரிபாலனம் செய்யும் நெறியை ஆராய்ந்து திருமாலே அரசனுவன் என்று நம்முன்னோர் கூறிய கருத்தை உணர்வேன்.

விளக்கவுரை :- பூர்விக சம்பிரதாயப்படி வேண்டிய நூல்களை யெல்லாம் கற்றுக்கொண்டாலும் தாம் இருக்கும் காலநிலை அரசியல் நிலை முதலிய நிலைக்கும் பொருந்தப் புதுமையாகக் கற்கவே வேண்டும் என்று கருதிய மேனாட்டு நியாய நீதி பரிபாலனங்களை உரைத்தார்.

பழமையு ளிருக்கு மாண்பு பயிற்சியா லறிந்த நீவிர்
கிழமையி னறியே னெய்தக் கிளர்வுறு புதுமை யுள்ளே
குழமகன் புகுவதாலே குறையுள தெனவே யெண்ணல்
அழகிலை எனவே சொல்லின் அகங்கருகிடுமோவையீர்!

உரை :- "புராதன சம்பிரதாயத்தில் இருக்கும் மகிமையை அனுபவத்தால் அறிந்திருக்கும் நீங்கள் உரிமையாகவே அறியாதிருக்கும் நான் அடையத் துடிக்கும் நூதன சம்பிரதாயத்தில் இளமகன் புகுவதால் குற்றம் உண்டாம் என்று எண்ணுவது அழகில்லை என்று சொல்வேனுகில் அதனைக் கேட்டு உங்கள் மனம் கருகுமோ ஐயன்மீர்!"

விளக்கவுரை :- பாரதீய நாகரிகத்தின் சிறப்பை விளக்கும் பண்டை நூல்களை நன்கு பயின்று அவற்றுள் ஊறி இருப்பதால் அவை சொல்லும் சன்மார்க்கத்திற்கு அப்பாற்பட்ட எவையும் சத்தாகா என்ற எண்ணமே கொண்டிருக்கும் தந்தையார் முகம் நோக்கி மகனுர் அச்சம், பணிவு மரியாதை பக்தி எல்லாம் விளங்க ஒரு சிறு வினு எழுப்புகின்றுர். அதனை வினுவுருவத்தில் சொல்லாமல் வேண்டுகோள் போலவே தெரிவிக்கிறுர். பழமை நன்று புதுமை தீது என்று கூறுவது ஒரு திறத்தார் கருத்தாம். புதுமை நன்று பழமை தீது என்பது ஒரு வகையார் கருத்தாம். இவரோ பழமையில் நல்லதெல்லாம் கொண்டு புதுமை யுள்ளும் நல்லவற்றைக் கொள்ள நினைப்பவர்

" புராதன தருக்கம் தேர்ந்து புதுமையாம் தருக்கம் தேர்ந்து
நிராதர வுரிய வென்றே நிருபர்தாய் மொழியி னுள்ளே
தராதர முணர வேய்ந்த தருக்கநூல் விடுத லாமோ
வராதன வுளவோ தந்தாய் மனமுறக்கற் குங்காலே" 43

உரை :- புராதன தர்க்கத்தை நன்கு தேர்ந்து நவீன தர்க்கத்தையும் கற்றுக் கொண்டிருக்கும் நாம் இன்று நம்மை ஆள்வோர் தாய் மொழியில் அமைந்திருக்கின்ற தராதரத்தை உணர உதவும் தர்க்க நூலைக் கற்காமல் கைவிடலாமா? மனமுற நாம் கற்போமாகில் நமக்கு வராத கலையும் உண்டோ? தந்தாய்.

விளக்கவுரை :- வித்தை சிறந்த செல்வர் தம் கருத்தைத் தெளிவாகத் தந்தை திருமுன் உரைக்கின்ருர். வடமொழியில் ஆழ்ந்து அகன்ற பயிற்சி பெற்ற அவர் புராதன தர்க்கமும் நவீன தர்க்கமும் கற்ற நாம் பாச்சாத்தியர் வளர்த்திருக்கும் அதி நவீன தர்க்க சாஸ்திரத்தைக் கற்றுக்கொள்ள வேண்டாமா? 'கற்ருல் நமக்கு வராதது உண்டா' என்கிருர்.

" மனுநீதி கற்ரே மேனும்
மற்றதன் உரைகள் எல்லாம்
உனுநீதி மார்க்கம் எல்லாம்
உளமுற வுணர்ந்தோ மேனும்
பினுநீதி முனிவர் நூல்கள்
பெட்புறப் பயின்ரே மேனும்
இனுநீதி பிறநாட் டுண்டென்
றெண்ணுதல் நன்ரு மன்ரே" 44

உரை :- மனு தர்ம சாஸ்திரத்தை நாம் கற்ரேம் ஆயினும், அதற்கு அமைந்த உரைகளை எல்லாம் அவை கருதும் நீதி மார்க்கம் எல்லாம் நம் மனத்திலே பொருந்தத் தெளிவாகப் பயின்று உணர்ந்தோமேனும், மேலும் நீதி நூல் இயற்றிய

பராசரர் யாக்ஞ வல்கியர், சங்க லிகிதர் முதலிய பெருமக்கள் நூல்களை எல்லாம் அன்போடு பயின்றுமெனும் அயல்நாடுகளில் இவைகளின் வேருக நீதி நூல்கள் உண்டு என்று எண்ணுதல் நன்றே யாம்.

விளக்கவுரை :- மனு தர்ம சாஸ்திரத்திற்குச் சிறந்த இரு உரைகள் உண்டு. உரைகளை முறைப்படி பயின்றல் அன்றி அந்நூலின் உட்பொருளைத் தெளிவாக உணர்தல் இயலாது. பராசரஸ்ம்ருதி முதலிய பிறஸ்ம்ருதிகளும் நன்கு கற்கத் தக்கன. இவற்றைத் தவிர ஆபஸ்தம்பர், கௌதமர் முதலிய முனிவர்கள் இயற்றிய ஸ்ம்ருதிகளும் உண்டு. இவற்றை எல்லாம் கற்ற பெருமக்களான மேனுட்டார் தம் நாகரிக முறைக்கு ஏற்ப இயற்றியுள்ள தரும சாத்திரங்களைக் கற்றுத் தெளிவது நன்றேயாம்.

“ இன்றுநம் புனித நாட்டை
இனிதாளு மினத்தி னோர்பால்
நன்றுறு மறிவின் செல்வம்
நாமுமே பெறுதல் வேண்டும்
ஒன்றுறு மனத்தி னேடே
யொட்டிநாம் வாழு மக்கள்
சென்றுணர் கலைகள் நாமும்
தெளிவது நன்றே யன்றே. ” 45

உரை :- இன்று நம் புண்ணிய பூமியை நன்ருக அரசாள்கின்ற வெள்ளையரிடம் நன்கு பொருந்தியிருக்கும் அறிவுச் செல்வத்தை நாமும் பெறவேண்டும். ஒற்றுமைப்பட்ட மனத்தோடு ஒட்டிக்கொண்டு வாழும் அம்மக்கள் தேடி அறிந்த கலைகளை யெல்லாம் நாமும் தெளிந்து கொள்வது நன்றன்றே!

விளக்கவுரை :- இவ்வரலாறு நிகழும் காலம் பத்தொன்பதாம் நூற்றுண்டின் இடைப்பகுதி. ஆதலால் அக்கால மக்கள் மனநிலை இங்கு பிரதிபலிக்கிறது. ஆங்கிலேய மக்கள் அறிவின்

செல்வம் உலகத்துக்கே பொதுச் செல்வமாக விளங்குவதை இன்று நாம் அறிவோம். அந்நாளில் வைதிக சிரத்தை மிக்க குடும்பத்தார் இச் செல்வத்தைத் தொடவும் கூசியிருந்தார்.

" இங்நகர் தன்னுள் நாயேன் எய்தவே விழையும் செல்வம்
மன்னவே சாலை யில்லை மற்றுநூல் நிலையம் இல்லை
சென்னைமா புரிக்கண் சென்று திசை திசைபுகழும் நீதி
துன்னவே பயிற்றும் சாலை சோர்வறப் புகுவேன் யானே "

உரை :- இவ் விஜயவாடா நகரத்தில் நான் அடைய நினைக்கும் செல்வத்தைப் பெறத்தக்க கலாசாலைகளோ புத்தக சாலைகளோ இல்லை. சென்னை நகரத்துக்குச் சென்று எட்டுத் திசை மக்களும் புகழும் பெருமை பொருந்திய நீதி பரிபாலன முறையை நன்கு பயிற்றும் சட்டக் கல்லூரியில் சோர்வின்றி நான் புகுந்து கற்கவேண்டும் என்றார்.

விளக்கவுரை :- ஆந்திர தேசத்தில் இச்சரிதம் நிகழ்ந்த நாளில் சட்டக் கல்லூரி இருக்கவில்லை. சென்னையில் உள்ள சட்டக் கல்லூரி மிக்க சிறப்புப் பெற்றிருந்தது. இப்புண்ணியர் மேனாட்டுக் கலைகளை நன்கு கற்றுச் சட்டத்திலும் தேர்ச்சி பெற்று நியாயவாத வாழ்க்கை பெற விழைந்தார். ஆதலின் விஜயவாடா வாழ்வைத் துறந்து சென்னைக்குச் சென்று வாழ விழைந்தார். அக் குறிப்பைத் தந்தையிடம் தெரிவித்தார். மேல் நாட்டுக் கல்வி முறையில் புது மயக்கம் புகுந்து கொண்டிருந்த காலத்தில் வைதிக குடும்பச் செல்வர் மனம் கூறும் கருத்துக்கள் இவை என்பதை நாம் உணரவேண்டும்.

" குடக்கணே வளர்ந்த ஞானக் கூறுகள் அனைத்தும் தேற
வடக்கணே காளி கட்டம் வரைசெலும் நிலையோ வில்லை
இடக்கணே யிருந்து மேன்மை யெய்தலு மெளிதன் றாகும்
மடக்கணே துறவு பூண்டு மடங்கவோ நினைப்பின் றையே "

உரை :- மேல் நாட்டில் வளர்ந்துள்ள ஞானக் கூறுகளை யெல்லாம் தேறித் தெளிய வடநாட்டில் உள்ள காளிகட்ட நகரம் வரையிற் போகும் நிலைமை நமக்கு இல்லை. இருக்கும் இடத்திலேயே யிருந்து வேண்டும் மேன்மையை அடைவதும் எளியதன்ருகும். இன்று ஒரு மடத்தில் அடங்கித் துறவறம் மேற்கொண்டு மடங்கவும் நினைப்பு இல்லை. ஐயே!

விளக்கவுரை:- தெற்கு + கண் = தெற்கண் என்று ஆவது உண்டு. அங்ஙனமே வடக்கு+கண், குடக்கு+கண், என்பவை வடக்கண் குடக்கண் என்று ஆவதுண்டு. இடம்+கண், மடம்+கண் என்பவை இடக்கண், மடக்கண் ஆயின. காளி கட்டம்-கல்கத்தா நகரம் - அங்கு சட்டக்கல்வி உண்டு.

"ஆதலால் விரைவில் நாமே
அந்நகர் அடைதல் நன்ரும்
காதலால் அடியேன் கற்கக்
கருதிய வெல்லாம் கற்பேன்
ஈதலால் உயர்ந்தார் ஆங்கும்
இருப்பரே நந்தம் வாழ்க்கை
போதலால் இறங்கா தென்றே
புகலுவே னென்ருர் நன்றே" 48

உரை :- ஆதலால் நாமே விரைவில் சென்னைமா நகரத்தை அடைவது நல்லதாம். ஆசையால் அடியேன் கற்கக் கருதிய கலைகள் எல்லாம் கற்பேன். கொடைக் குணத்தால் உயர்ந்த பெருமக்கள் அந்நகரத்திலும் இருப்பார். நம் வாழ்க்கை முறை அந்நகரத்துக்குப் போதலால் இழிநிலை அடையாது என்று நான் உரைக்கத் துணிவேன் என்ருர்.

விளக்கவுரை :- குமாரர் தந்தையார் ஏற்றுக்கொள்ளத் தக்க வழியில் தம் கருத்தை விளக்கியுரைத்து விஜயவாடா நகரத்திலிருந்து சென்னைக்குப் போவதால் தம் குடும்ப வாழ்க்கைக்கு

எவ்வகையிலும் சிறுமை உண்டாகாது என்று தெரிவிக்கிறார். கற்கக் கருதிய கலைகள் பல என்பதையும் குறிப்பிடுகிறார். சென்னை நகரத்தில் ஆந்திரர் அதிகமாக வாழத் தொடங்கிய காலம் அதுவே. சென்னப்பன் அரசில் அந்நகாம் ஆங்கிலக் கும்பெனியார் வசம் ஆயிற்று. அவன் விஜயநகரத்து அரசர் வழி அரசாண்டவன். சிரங்கராயன் என்ற பெயர் பூண்டிருந்த வன். அவன் தந்த பட்டயமே சென்னையை ஆங்கிலேயருக்கு உரிமையாக்கியது.

" மைந்தர்வாய் மொழியைக் கேட்ட
மறைப்பெருஞ் செல்வர் சொல்வார்
எந்தைஎம் தந்தை தந்தை
எந்த மூத்தப்பன் ஏனோர்
முந்தைநாள் நடந்த மார்க்கம்
முற்றிலும் துறந்து செல்வான்
சிந்தைநீ கொள்கின் றாயே
செல்வயான் என்சொல் வேனே " 49

உரை :- குமாரர் சொன்ன உண்மைச் சொல்லைக்கேட்ட வேதப் பெருஞ்செல்வர் ஆன தந்தையார் கூறுகின்றார். எம் தந்தையாரும் எம் பாட்டனாரும் எங்குலமுன்னவரும் பிறரும் முன்னாளில் உறுதியென்று பற்றி நடந்த சன்மார்க்கத்தை முற்றிலும் துறந்து செல்ல நீ மனம் கொள்கின்றாயே, குமார ! நான் என் சொல்வேன் ?

விளக்கவுரை :- எந்தை-என் தந்தை. தந்தை - தந்தை பாட்டனார். மூத்தப்பன்-குல முதல்வர் ஆக உள்ள ஒரு பெரியோர். ஏனோர்-குலத்தோடு ஒட்டிய தொடர்புள்ள குல சம்பிரதாயம் தெரிந்த பிறர். பிராசீன மார்க்கம் X ஆதுனிக மார்க்கம். போராட்டம், நிகழும் முறை இது.

" பிறந்தநின் பிறப்பின் வாய்ப்பைப்
பேசிய வொளிநூன்மன்னர்
சிறந்தநன் மொழிகள் கூறச்
செவியுறக் கேட்டு ளேன்யான்
இறந்தநம் குலத்து முன்னோர்
எவருமே செல்லா மார்க்கம்
அறந்தரும் பொருளு நல்கும்
ஆயினீ புகுத லாமே " 50

உரை :- பிறந்த உன் பிறப்பின் யோக பாவங்களைச் சாதக உதவியாலே எடுத்துரைத்த சோதிட சாத்திர விற்பன்னர் சிறந்த நல்ல சொற்களையே கூற நான் என் காதார அவற்றைக் கேட்டிருக்கிறேன். முன்பு இங்கு வாழ்ந்து இன்று சுவர்க்கத்தில் இருக்கும் நம் குலத்து முன்னோர் எவரும் செல்லத் துணியாத வழிதான் அறமும் பொருளும் தரும் என்று துணிவாயாயின் நீ புகலாம்.

விளக்கவுரை :- இளஞ்செல்வர் ஏகபுத்திரராக இப்பெருங் குலத்திற் பிறந்தபோது ஜாதகம் கணித்த தெய்வஞ்ஞர் எதிர் காலத்தில் அவர் எய்தும் நிலையை நன்கு விளக்கியுரைத்திருப்பதைத் தந்தையார் அறிவார். தாயும் மகனும் அறியமாட்டார். அதனை நினைவு கூர்ந்த தந்தையார் மகனார் புகும் புது வழியைப் பற்றி உண்மையாக மனம் வேறுபட்டுத் தம் கருத்துக்களைத் தெளிவிக்க முயல்கின்றார்.

" உலகமா குரவ னுகும் உத்தமன் உரைத்த மெய்ம்மை
இலகவே படைத்த வுள்ளத் திப்பொருள் புகுதல் நன்றே
கலகமே வளரு ஞாலக் கலைகளில் மிகைகண்டாலும்
அலகறு மொளியின் ஞான அநுபவ மிழத்த லாமோ" 51

உரை :- உலகப் பெருங்குரவர் ஆன உத்தமர் சங்கரர் உரைத்த மெய்ப் பொருளை விளங்கப் படைத்த மனத்தில் இழிவான பொருள் புகுவது நன்ருகுமோ? கலகமே வளர இடம் ஆக உள்ள உலகத்துக் கலைகளிலே பெருமை கண்டாலும் அவற்றை விரும்பி ஒளியுள்ள ஞான ஆனந்த அநுபவத்தை இழக்கலாமா?

விளக்கவுரை :- சங்கர குருவர் உபதேசத்தால் அறிவுள்ள மக்கள் பெற்ற ஊதியம் ஞான ஆனந்த அனுபவமான ஜீவன் முக்த நிலைமை ஆகும். இத்தகைய உயர்ந்த நிலைக்கு உரியவர் உலக வாழ்வுக்கு உதவும் கலைகளில் மனத்தைப்போக்கி அவற்ருல் மயங்கிக் கலங்கி வாழ்வது அவர் இயற்கைக்குப் பொருந்தாது.

" அறமிரண் டென்று கொண்ட
அறிவுரையறிவா யன்றே
பிறபொருள் வேண்டா நின்ற
பிரவிருத்தி தருமமொன்று
நிறைமன நிலையை நல்கும்
நிவிருத்தி தருமம் ஒன்றே
உறவிவை யுணர்த லன்ருே
உறுகலைக் கல்வியாமே " 52

உரை :- தருமம் இரண்டு என்று வெளியிட்ட ஞான குருமூர்த்திகளை அறிவாய் அன்றே-உலகத்திற் காணப்படும் பிற பொருள்களை அனுபவிக்க விரும்பும் பிரவிருத்தி தருமம் ஒன்று. நிறைந்த மனச்சாந்தி நிலைமையைத் தரும் நிவிருத்தி தருமம் ஒன்று இவ்விரண்டையும் தெளிவாக உணர்வது அன்ருே உண்மையான சாஸ்திர அப்பியாசம் ஆகும்.

விளக்கவுரை :- அறம் இரண்டு. அவற்றுள் ஒன்று உலக வாழ்வுக்கு வழிவகுப்பது. மற்றது துறவு நெறிக்கு வழி

வகுப்பது என்று உரைத்தவர் ஆசாரிய சங்கரர். பகவத்கீதா பாஷ்யத்தின் தொடக்கத்தில் இக் கருத்து வரும். ஆத்மானந்த அநுபவத்துக்குப் பிற பொருள்களின் உதவி சிறிதும் வேண்டுவது இன்று என்பது சங்கரர் திருவுள்ளக் கிடக்கை. இதனை வற்புறுத்துகிறார் தந்தையார் இங்கு மகனார் மனத்தின் போக்கை மாற்றும் கருத்தால்.

“ எதனையே தரும நூலென்
றெண்ணியே கற்க நிற்பாய்
அதனைநா மறிதலாலே
அகவாழ்வு சிறப்ப துண்டோ
மதனையே பெருக்கும் செல்வ
வாழ்விலே மயக்க முற்றாய்
இதனையே யறியாய் சென்னை
யேகுவாம் என்கின் றாயே” 53

உரை :- எதனையோ நீ தரும சாஸ்திரம் என்று எண்ணிக் கற்க முன்னிற்கின்றாய்; அந்நூலை நாம் கற்றறிதலாலே நம் அக வாழ்வு சிறப்புறுவதுண்டோ! மதத்தைப்பெருக்கும் செல்வ வாழ்வில் மயக்க முற்றாய். நன்மையை உணராமல் சென்னைக்குப் போவேன் என்கின்றாய்.

விளக்கவுரை:- தரும சாஸ்திரங்களிலே பலவற்றை உரைகளோடு பயின்றிருக்கும் இப்பெரியோர் அயல்நாட்டு நீதி பரிபாலன நூல்களில் நன்மதிப்பு வையாத காரணத்தால் எதனையோ தரும நூல் என்று எண்ணிக் கற்க நிற்பாய் என்று கேட்கின்றார். “ கூனியை வால்மீகி’ “ எங்கோ பிறந்தவள் ” என்று உரைப்பது இங்கு நினைக்கத் தக்கது.

" வளமிகு குடிஜை கோதா
வரிக்கரை வாழ்ந்து வந்தோம்
அளவறு புனல் கொள்கிருஷ்ணை
அடைகரை வதித லானும்
குளமுறு நீரை யன்றிக்
குளிக்குநீர் அறியாச் சென்னை
பளகற வாழ்தற் கேற்ற
பதியெனக் கருது வாயோ ? " 54

உரை :- நீர் வளம் மிகுந்த நதியான கோதாவரிக் கரையில் நாம் வாழ்ந்து வந்தோம். அளவில்லாத நீர் கொழிக்கும் கிருஷ்ணவேணி நதியைச் சார்ந்த கரைப்பக்கம் வாழவந்தோம். குளத்தில் உள்ள நீரைத் தவிர வேறு குளிக்கும் நீரை அறியாத சென்னை நகரையும் நாம் குற்றமற வாழ்தற்கு ஏற்ற நகரமாக நீ நினைப்பாயோ ?

விளக்கவுரை :- வளம் மிகுந்த நதியான கோதாவரியின் கரையிலே தவளேசுவரத்தில் வாழ்ந்த குடும்பம் அங்கு அணைக்கட்டால் விளைந்த தீங்குகளை மாற்றிக்கொள்ளும் பொருட்டுக் கிருஷ்ணவேணிக் கரையில் உள்ள விஜயவாடா நகர்க்கு வந்தது. நதி தீர வாழ்விற் பழக்கம் கொண்ட குடும்பத்தார் ஆதலின் நதிப் பெருக்கை யறியாத சென்னையை இழித்து உரைக்கிறார். சென்னையில் உள்ள அடையாறும் கூவமும் நதியே ஆயினும் ஆசார சீலர் ஸ்நான பானங்களுக்கு உரிய தகுதியை இழந்தன.

" தேசார வாழும் எண்ணம் சித்தத்தே கொள்வா யாயின்
மாசார வாழு மாக்கள் மலிந்துள நகர்க்கேன் போதி
ஆசார அநுட்டா னங்கள் அழகுற அமையா ஊரில்
வீசார வார வாழ்வில் விருப்பமோ செல்வச் சேயே ! 55

உரை :- ஒளி நிரம்ப உலகத்தில் வாழ வேண்டுமென்று உன் மனத்திலே நினைப்பாயாயின் குற்றமே அழுக்கே மிகப்

பெற்று வாழும் மக்கள் நிறைந்துள்ள சென்னை நகர்க்கு ஏன் போகின்றாய்? ஆசாரங்களும் அநுட்டானங்களும் அழகுமிக அமைந்திருக்கும் பேறு இல்லாத சென்னையில் வீசுகிற ஆரவார வாழ்க்கையில் விருப்பமோ செல்வக்குமாரனே !

விளக்கவுரை :- ஆசார அநுஷ்டானங்களைச் சென்னை நகர மக்கள் காப்பது அருமை என்பது வேதமூர்த்தி கருத்து. ஆரவார வாழ்வு பிறர் வாழ்வை வீசவே உதவும் என அவர் நினைக்கின்றார். பிறர்வாழ்வைச் சிதையாமலே தர்மம் உள்ளது கொண்டு அமைந்து வாழ்வதே சிறப்பாம்.

'ஐயநீ நாளை யெய்தும்
அருஞ்சிறப் பறிய மாட்டாய்
வையமே வானே வாழ்த்தும்
மதிப்புனக் குரிய தாகும்
மெய்யென மயங்கும் பொய்யில்
வீழ்ந்துநீ மயக்கங் கொள்ளத்
தொய்யல் வாழ்வகத்து வீழத்
துணிதியோ அருமைப் பேறே" 56

உரை :- ஐய, நீ நாளை அடைய இருக்கும் அருமைச் சிறப்பை இன்று அறியமாட்டாய். உலகமும், வானமும் வாழ்த்தும் மதிப்பு உனக்குரியதாம். மெய்யென மயங்கும் பொய்யில் வீழ்ந்து மயங்கிக் கிடக்கவே, நிலையற்ற வாழ்விலே வீழ்ந்துழலத்துணிகின்றாயோ ? அருமைச் செல்வனே!

விளக்கவுரை:- செல்வர் பிறந்தகாலத்தில் அவர் ஜாதக பாவத்தை ஆராய்ந்துணர்த்திய தெய்வஞர் சொற்களைக் கேட்ட வேதமூர்த்தி சாஸ்திரியார் தம் மகனாரிடம் தம் கருத்தை மறைத்தும் சிறிது வெளிப்படுத்தியும் பேசுகிறார். அறிய மாட்டாய் என்ற சொல் மறைக்கிறது. இரண்டாம் அடி விளக்குகிறது. மெய்யென மயங்கும் பொய். உலக வாழ்வு

உலக வாழ்விலே மேல்மேல் உயர்வதற்கு உரிய வழிகளைக் கருதியே மகனுர் சென்னைக்குப்போக நினைக்கின்ருர் எனக் கருதி அவர் கருத்தை மாற்றவே இங்ஙனம் பேசுகின்ருர்.

"கண்ணினீர்த் துளிகள் தூங்கக்
காதலி னுருவந் தாங்கும்
பெண்ணினீர் மையிலே மிக்க
பேதைநின் தாயு மைந்த
மண்ணிலே யிருக்குங் காலம்
வாழ்வெலாம் வகுத்த தேவன்
எண்ணிய வண்ண மெல்லாம்
இயங்குமென் றுரைக்கின் ருளே" 57

உரை:- கண்ணீர்த் துளிகள் கண்ணிலே தூங்க அன்பின் உருவம் தாங்கும் பெண் தன்மையில் மிக்க பேதையான உன் தாயும் மைந்தா நாம் பூமியில் இருக்கும் காலமும் வாழ்வும் வகுத்த தேவன் எண்ணிய வண்ணமெல்லாம் நடக்கும் என்று உரைக்கின்ருன்.

விளக்கவுரை :- தாய்மை விளங்க நிற்கும் தாய் இங்கு பேதை என்று உரைக்கப்பட்டது, உலக மக்கள் அனுபவம் என்று கருதும் களங்கம் அற்ற தூய நிலைமையை உடையார் உலகம் தெரியாத மனிதர் என்று உரைக்கப்படுவதை இங்கு நினைக்க வேண்டும். காலமும் வாழ்வும் வகுக்கும் தேவன் பிரமதேவனும். தாயாதலின் "எல்லாம் அவன் செயல்" என்ருள்.

"தேனினுமினிய நந்தம் தெலுங்கநன் மொழி பேசாத
வானினு முயர்ந்த மாடமாளிகை வகிக்கும் சென்னை
யானினு மெதுசொற் ருலும் ஏகவே கருதுவாயேல்
ஆனினை வேணு வானே அழைப்பவ னருளஃ தேயோ"

உரை :- தேனினும் இனிமைமிக்க நம் நல்ல தெலுங்க மொழி பேசாத வானினும் உயர்ந்த மாடமாளிகைகளைத் தாங்கும் சென்னைமா நகரத்துக்கு நான் இன்னும் எது சொன்னாலும் நீ போவதாகவே கருதுவாயாயின் பசுக்களைத் தன் வேய்ங்குழலால் அழைக்கும் கண்ணன் அருள் அதுதானா !

விளக்கவுரை :- "தெலுகு தேட்ட அரவம் அத்வானம் என்பது" ஒரு தெலுங்கப் பழமொழி. தெலுங்க மொழி தேன் போன்றது. தமிழ் ஒலியற்றது என்பது அதன் கருத்து தமிழ் மொழியில் ககர முதலிய ஐந்து வர்க்கத்திலும் இடையில் உள்ள மும்மூன்று எழுத்துக்கள் இன்மையே அது ஒலியற்ற மொழி என்ற பழிபெறக் காரணம் ஆயிற்று. தெலுங்கு, மலையாளம், கன்னடம் என்ற மொழிகளில் இவ்வொலிகள் எல்லாம் உண்டு. தம்மால் இயன்ற வளவு கருத்துரைத்த பிறகு தம் சொல் பயன் படாது என்று உணர்ந்த பிறகு அத்வைத குரு பரம்பரையிலே ஆசாரிய மூர்த்திகளுள் ஒருவன் ஆன கண்ணன் அருள் என்று கூறி அமைகின்றார்.

" இன்னணம் தந்தை கூறும்
 இன்மொழி செவிக்கொள் மைந்தர்
நன்னயம் யானே யெய்த
 நயந்தனிர் உரைத் தீரேனும்
மன்னவர் மொழியும் தேறி
 மற்றவர் நீதி மார்க்கம்
துன்னவு முன்னு நெஞ்சத்
 துணிவிலே சிதைவே னில்லை " 59

உரை :- இவ் வண்ணம் தந்தையார் கூறிய இனிய சொற்களை ஒன்றுவிடாது பணிவோடு செவியில் ஏற்ற குமாரர் நான் நலம் பெற வேண்டும் என்று விரும்பியே இவ்வளவும் நீங்கள் உரைத்தீர்கள் ஆயினும் அரசர் மொழியைக் கற்றுத்

தெளிந்து அவர் வகுத்த நீதி மார்க்கத்திலே பிரவேசிக்க எண்ணும் மனத்துணிவிலே தளரமாட்டேன்.

விளக்கவுரை :- இன்ன வண்ணம் என்ற தொடர்மொழி இன்னணம் என்று மருவிற்று, மன்னவர் மொழி - ஆங்கிலம் நீதிமார்க்கம் -- நீதி பரிபாலனத்துக்கு உதவும் சட்டக்கல்வி. தந்தையார் தம் கருத்தைத் தெளிவாக எடுத்துரைத்தும் மைந்தர் அதனுல் தம் மனவுறுதி சிதையாமல் சென்னைக்கு போகவே துணிந்திருப்பதை உரைத்தார்.

" பார்த்த சாரதியைப் போன்ற
 பரம மெய்க் குரவனுண்டோ
தீர்த்தமா மனைத்து மேற்கும்
 சிறப்புள பாரா வாரம்
போர்த்தபே ரலைக ளோடு
 பொங்குதல் சென்னைக் குண்டே
சீர்த்த பூம்பாவை முத்தி
 சேர்ந்த மாமயிலை யாங்கே " 60

உரை :- பார்த்தசாரதியைப் போன்ற சத்யமுரைத்த பரமாசாரியன் உண்டோ! உலகத்துத் தீர்த்தங்களை யெல்லாம் தனக்குள் அழைத்து அடக்கிக் கொள்ளும் சிறப்புள்ள பெருங் கடல் மேலே போர்த்த பெரிய அலைகளோடு பொங்கும் அழகு சென்னைக்கு உண்டே. சிறப்பு மிக்க சிறப்புடைய பூம்பாவை என்ற பெண்மணி முக்திச் செல்வம் பெற்ற திருமயிலையும் அங்கு உண்டு.

விளக்கவுரை :- பார்த்தசாரதியாக இருந்த கண்ணன் பகவத் கீதையை உபதேசித்தான் அது பிரஸ்தானத்ரயத்துள் முதன்மை பெறுவது. அவனே திருவல்லிக்கேணியிலே கோயில் கொண்டிருக்கிருன். நதிகளை அடக்கி ஆளும் நதிபதியான கடல் சென்னைக்கு உண்டு. பூம்பாவை சம்பந்தர் அருட்பேற்றுல்

எலும்பு பெண்ணான தவச்செல்வி. மயிலாப்பூரில் இவ்வருட் சிறப்பு இன்று அறுபத்துமூவர் திருவிழாவாக நடைபெறுகிறது

“ நதிகளி னறுநீ ராட்ட நயந்துறு நெஞ்ச முள்ளீர்
நதிகளே நடந்துவந்து நாயகன் நீயென் றோதும்
துதிபெறு கடலினீரைத் தூயதன் றென்பீர் போலும்
பதிகளின் மிகுந்த சென்னை படர்மன மடைந்தி லீரே” 61

உரை :- நதிகளின் நல்ல நீரில் நீராடுவதை விரும்பும் மனம் உள்ளீர். நதிகளே நெடுந்தொலை நடந்து வந்து நீயே எங்கள் நாயகன் என்று உரைத்து அடங்கும் புகழ்பெற்ற கடலின் நீரைப் பரிசுத்தம் உள்ளது அன்று என்பீர் போலும். நகரங்களின் மிகுந்த சென்னைக்குச் செல்ல மனம் இல்லாது இருக்கின்றீரே.

விளக்கவுரை :- நதிமுழுக்கு விரும்பும் தந்தைக்குச் சென்னைச் சிறப்பை மகனார் உரைக்கின்றார் சென்னை தமிழகத்து நகரங்களுள் மிகச் சிறந்தது. தெலுங்கர்க்கும் உரிமை தரும் தன்மையுளது.

“ காலத்தின் போக்கிற் கேற்பக்
கலைநிலை மாற வேண்டும்
ஞாலத்தின் உறையு மக்கள்
ஞானத்தின் சிகரம் சேர்தல்
சாலத்தின் வருவ தன்று
தகுதியான் வருவதே யாம்
மூலத்தின் ஒன்றே யன்றோ
முப்பது கோடி யாகும் ” 62

உரை :- காலம் போகும் போக்குக்கு ஏற்றபடி கற்கும் கலைகளின் நிலை மாறவேண்டும். உலகத்தில் வாழும் மக்கள் எல்லாம் ஞானத்தின் சிகரத்தை அடைதல் சாலத்தால் வருவ

தன்று தகுதி இருந்தாலே வருவதாம். மூலத்தில் ஒன்ருக உள்ள பொருள்தானே முப்பது கோடியாகத் தோன்றுகிறது.

விளக்கவுரை :- இந்திய மக்களுக்கு ஆங்கிலக் கல்வி யைத் தரவேண்டும் என்ற கருத்தை முதற்கண் வெளியிட்ட மெக்காலே பிரபு நம் நாட்டுப் பண்டைக் கலைகளின் பெருமை களைச் சிறிதும் அறியாமல் இழித்துரைத்து அவை உலக வாழ் வுக்கு உதவாதன என்று கூறினுர். இக் கதாநாயகர் அத் தகைய கருத்துள்ளவர் அல்லர். தந்தையார் பழைமையே போதும் என்றும் புதுமையில் நுழையவே கூடாது. என்றும் உரைப்பதை மறுத்துரைக்கவே இங்ஙனம் பேசுகின்ருர். இவர் வேத நூல்களை நன்கு பெற்ற பிறகே மேனுட்டுக் கல்வியில் இறங்கினுர். ஞானம் என்பது மூலத்தில் ஒன்றே. அது வெளிப் பட்டுப் பாவும் போது பலவுருவம் பெறுகிறது.

“ ஒருமக னெனவே தோன்றி
உங்குலச் செல்வ னுனேன்
அருமக னெனவே நீவிர்
ஆர்வமாய் வளர்த்து ளீரே
பெருமகனெனவே நாளைப்
பெயர்பெற விழைகின் றேனே
மருமகனெனவே கொள்வார்
வாழ்த்த வேவளர்த் தல்நன்றே” 63

உரை :- ஒரு குமாரன் என்றே பிறந்து உங்கள் குலத் தின் செல்வனுனேன். அரும்பெறற் செல்வன் என்று கருதி நீங்கள் ஆர்வத்தோடு என்னை வளர்த்துளீர்கள். நாளைக்கு இக் குலத்தின் பெருமகன் என்று பெயர்பெற விரும்பும் என்னை மருமகனுகக் கொள்ளவரும் குடும்பத்தார் வாழ்த்தும்படி வளர்ப் பது நன்று.

விளக்கவுரை :- மேனாட்டுக் கல்வியிலே இளைஞர் மோகங் கொண்டு மிகப் புகுந்த காலம் அது. அக் கல்வி பெற்ற இளஞ் செல்வனையே பெண் பெற்றோர் தம்மருமகனாகக் கொள்ள மனம் கொள்வர். வேத சாத்திரம் எத்தனை கற்றாலும் ஆசார சம்பன்னனாயிருந்தாலும் அவனைப் பெண் மக்கள் மணக்க விரும் பாத நிலை தொடங்கிய காலம் அது.

“ பிரிகிலேன் நும்மை யென்றாற்
பெறத்தகு பெருமை எல்லாம்
தருகுவே னியன்ற மட்டும்
தருமமே தாங்கி நிற்பேன்
உருகுவே னறிவர் தந்த
உயர்பொருட் புதையல் கண்டே
பெருகுவேன் புதுமைச் செல்வம்
பெற்றுநற் சிறப்பு வாய்த்தே” 64

உரை :- உங்களை நான் பிரிந்து போகமாட்டேன். என்றால் நீங்கள் பெறத்தக்க பெருமை எல்லாம் தேடித் தருவேன். இயன்ற மட்டும் தருமத்தையே தாங்கி நிற்பேன். நம் முன்னோ ரான ஞானச் செல்வர் தந்த உயர்வு மிக்க பொருட் புதையலைக் கண்டு மனம் உருகுவேன். புதுமைச் செல்வம் பெற்று நல்ல சிறப்பு அடைந்து பெருகுவேன்.

விளக்கவுரை:- தந்தையின் கருத்துக்கு மாறான கருத்தை உரைத்தாராயினும் பித்ரு பக்தியிலே சிறிதும் குறையாத புத்ர ரத்னம் ஆதலால் அவர் மனம் சிறிதும் வருந்தாதிருக்கும் பொருட்டே இக் கருத்தை உரைக்கிறார். ஆங்கிலக் கல்வியில் எழுந்த மோகத்தால் பெற்றோரையே அவமதிக்கும் பிள்ளைகள் உள்ள இக்காலத்தில் இப்புத்திரர் வாழ்பவர் அல்லர். இவர் காலம் தந்தை மகன் அன்பு முறை பழுதுபடாத காலமே. புதுமைச் செல்வம் என்றது ஆங்கிலக் கல்வி, நீதிபரிபாலனக்

கல்வி முதலிய கல்விச் செல்வங்களை, ஞானச் செல்வர் தந்த பொருட் புதையல் என்றது பழம் பெருஞ் செல்வத்தையே ஆகும்.

"யாங்கடை ந்தாலு மென்னே
இறையவ னெங்கு முள்ளான்
பாங்கமை நல்லோர் சென்னைப்
பதியிலும் இருப்பதுண்டே
தீங் கடை நெஞ்சத்தோரைச்
சேராது சிறப்பவாழ
ஊங்கனை தந்தை நீயிர்
உடன்வரல் நன்று மன்றே" 65

உரை :- எங்கே போனாலும் என்ன? எங்கும் இறைவன் இருக்கின்றான். நற்குணம் அமைந்த நன்மக்கள் சென்னைமா நகரத்திலும் இருப்பதுண்டு. தீங்கு நிறைந்த மனம் உள்ளவர்களைச் சேராது சிறப்பாக வாழ்வதற்கு உதவியாக உயர் பொருளிலே மனம் வைத்த தந்தை தாய் நீர் என்னுடன் வருதல் நன்று.

விளக்கவுரை :- கோதாவரிக் கரையிலும் கிருஷ்ண வேணிக் கரையிலும் பற்றுள்ளம் கொண்ட தந்தையார் மனத்தை சென்னைப் பக்கம் திருப்புவதற்காக இம்மொழி உரைக்கப் படுகிறது. இறைவன் எங்கும் உள்ளான். நல்லோர் எங்கும் உள்ளார் என்ற உண்மை தந்தை அறியாத தன்று. ஆயினும் மைந்தர் வாயாற் கேட்கத் தக்க சிறப்புள்ளதாயிற்று ஊங்கு- உயர்ந்த இடம்; உம்பர் என்பது போலவே. வேதாந்த தத்வம்.

"என்றனர் இறைஞ்சா நிற்கும்
இன்குணச் செல்வர் நோக்கம்
நன்றளந் தறிந்த தந்தை
நம்மையா ளிறைவன் செய்கை

இன்றள விங்கு வாழ
வியைத்தது நாளைச் சென்னை
சென்றனிர் வாழ்மி னென்று
செய்வது நன்றென் றூரே" 66

உரை :- என்று கூறி வணங்கும் இனிய குணம் உள்ள மகனுர் நோக்கத்தை நன்ருக அளந்தறிந்த தந்தையார் நம்மை யாளும் இறைவன் செய்கை இன்றளவும் இந்நகரில் வாழ இயைத்தது. நாளைக்குச் சென்னை சென்று வாழ்மின்கள் என்று இயக்குவது. அது நன்றே என்று கூறுகின்ருர்.

விளக்கவுரை :- தம் கருத்தை நன்குரைத்தமைந்தர் தம் தந்தை தாயாரைச் சென்னைக்கு அழைத்துப் போக அனுமதி பெற வேண்டி இருமுது குரவரான அவர்களை வணங்குகின்ருர். வாதத்தால் மனம் வருந்திஞலும் வணக்கத்தை ஏற்காத பெரியோர் இந்நாட்டில் இல்லை. அவ்வணக்கத்தால் மனம் குளிர்ந்த தந்தை தம் மனத்துக்குத் தேறுதலாக இக்கருத்தை உரைக்கிருர் இங்கு வாழவைத்த இறைவன் அங்கு அழைக்கின்ருன். அவனன்றி ஓரணுவும் அசையாது அன்ரே ! அவ்வணமே ஆகுக என்ருர்.

மைந்தர்நெஞ் சுறுதி தேர்ந்த
மறையவர் மனைவியோடு
சிந்தனை யொருமை தோன்றச்
சென்னையம் பதிக்கு வந்தார்
வந்தவர் மயிலாப் பூரில்
வள்ளலை யிறைஞ்சி வாழ்த்திச்
செந்திரு நிலைத்து வாழும்
திருவல்லிக் கேணி சேர்ந்தார் 67

உரை :- குமாரர் மனவுறுதியைத் தெரிந்துகொண்ட வேதமூர்த்தி தம் மனைவியாரோடு மன ஒற்றுமை தோன்றச்

சென்னைமா நகரத்துக்கு வந்தார். வந்தவர் திரு மயிலாப்பூரில் கோயில் கொண்டிருக்கும் கபாலீசனைக் கற்பகத்தோடு தொழுது வாழ்த்தித் திருமகள் நிலைத்து வாழ்கின்ற திருவல்லிக்கேணிக்கு வந்தார்.

விளக்கவுரை : புத்திரர் சென்னை வாழ்க்கையிலே தீவிரராக இருப்பதைத் தந்தை உணர்ந்ததும் தாயை இசைவித்து இருவரும் மன வேற்றுமையை மறந்து சென்னைக்கு வந்தனர். அங்கு, திரு மயிலாப்பூர்த் திருக்கோவிலில் இறைவனையும் இறைவியையும் வணங்கித் திருவல்லிக்கேணிக்கு வந்து பார்த்தசாரதியைப் போற்றித் தக்கதோர் இடத்திற் குடிபுகுந்தார்.

முதுபெரும் புலவர் வேத
முறையெலாம் தெளிந்த சான்றோர்
மதுமய மொழிக ளாலே
மனங்கவர் பிரசங் கத்தால்
விதுமுக மகளி ரோடு
மிக்கவா டவருங் கேட்டு
பொதுவறு புகழின் மாலை
பொருத்தவே வாழ்வாரானார் 68.

உரை :- ஆண்டு அறிவு அனுபவங்களால் முதுமை சான்ற பெரும் புலவர் வேதத்தின் முறையெல்லாம் ஆராய்ந்து அறிந்த பெரியோர் தேன் போன்ற இனிய மொழிகளால் கேட்பவர் மனம் கவரும் பிரசங்கத்தால் சந்திரன் போன்ற முகம் உள்ள பெண் மக்களோடு எண்ணற்ற ஆண் மக்களும் கேட்டுப் பிறர்க்குப் பொதுவாகாத சிறப்பான புகழ்மாலை பொருத்த வாழ்வாரானார்.

விளக்கவுரை :- வேதமூர்த்தி சாஸ்திரிகள் இக்காலத்தில் அறுபதாண்டுக்கு மேற்பட்ட பிராயம் உள்ளவர். குமாரர் ஆங்கிலக் கல்வியும் சட்டக் கல்வியும் கற்கவே சென்னைக்கு

வந்ததால், அவரே பொருள் தேடிக் கல்வியும் கற்பது அசாத்யம் ஆதலால், சென்னையிலே குடும்ப வாழ்க்கை நன்கு நிகழும் பொருட்டுத் தமக்குப் பழக்கமான தெலுங்க மொழியாலே உபன்யாஸம் செய்யத் தொடங்கினுர். சில மாதங்களில் தமிழ்மொழியிலும் கருத்தை விளக்க வல்லவரானுர்.

சாத்திர நுணுக்க மெல்லாம்
சரளமாய் விளக்கு நாவர்
தோத்திரம் விரும்பா நெஞ்சர்
சுவைமலி கதைக ளாலே
மாத்திரம் விளக்க லாகா
மறைப்பொருள் கிளக்குங் காலை
சோத்திரம் பெற்ற பேற்றைத்
துதிப்பவர் பலரா ஞரே 69

உரை :- சாஸ்திர நுட்பங்களை யெல்லாம் எளிமையாக விளக்கியுரைக்கும் நாவன்மை உள்ளவர்; பிறர் புகழும் புகழ்ச்சியை விரும்பாத நெஞ்சர்; சுவைமிக்க கதைகளால் மாத்திரம் விளக்க இயலாத வேதப் பொருளை உரைக்கும்போது தம் செவி பெற்ற பேற்றைச் சொல்லித் துதிப்பவர் பலர் ஆயினுர்.

விளக்கவுரை :- ஆந்திர மக்கள் மிகுதியாகக் கூடிச் செவிக்கின்பம் பெறும் நகரப் பகுதிகளில் இப் பெரும் புலவர் பிரசங்கங்கள் நடந்தன. அவற்றைக் கேட்ட மக்கள் பக்தி பரவசர் ஆயினர். உயர்ந்த வேதாந்த தத்வங்களை இப்புலவர் எளிதாக உரைப்பது கேட்டு எல்லாரும் மனம் உருகி அவரைத் துதித்தனர்.

மகனுரின் கல்விச் செல்வம் வளர்வதே கருத்தாம் தந்தை
முகனுறு கொண்ட வேலன் முக்கணன் செவியி லேற்றும்
அகனுறு மோங்கா ரத்தில் அருத்தமும் பிறவும் கூரு
மிகனுறு பொருளும் பெற்ருர் மேதகு புகழும் பெற்ருர் 70

உரை:- குமாரரின் கல்விச் செல்வம் வளர்வதே கருத்தாகக் கொண்ட தந்தையார் ஆறுமுகம் கொண்ட முருகப் பெருமான் ஒரு முகப் பெருமான் ஆகித் தந்தையான முக்கண்ணன் திருச் செவியில் ஏற்றிய உள்ளத்தில் விளங்கும் பிரணவத்தின் உட் பொருளும் அதுபோன்ற பிற பொருளும் கூறிப் பெருமை தரும் செல்வமும் பெற்றார் மிக்க புகழும் பெற்றார்.

விளக்கவுரை :- அந்நாளில் பாகவத சம்பிரதாயத்தோடு கிருஷ்ண பக்திப் பிரவாகத்தை நாட்டிற் பெருக்கிய மணல்மேற்குடி கிருஷ்ணபாகவதர் இளஞ் செல்வராய் இருந்தார். பருத்தியூர் கிருஷ்ண சாஸ்திரிகளும் இளங்குமாரராக இருந்தார். அவர் இருவரும் காலக்ஷேபம தொடங்கிய காலம் இப்பெரும் புலவர் முது பெரும் புலவராக இரு மொழிகளைப் பயன்படுத்தி மக்களுக்கு அறிவுச் செல்வத்தை அள்ளித் தெளித்து அற்புத ரசத்தை எங்கும் பொழிந்தார்.

ஆங்கில மொழியிற் றேர்ச்சி யடைந்தபின் சட்டக் கல்வி
வீங்கிய கல்லூரிக்கண் விழைவொடு நுழைவு பெற்றார்
யாங்குள வறிவி னேரும் எடுத்துரை த்தியல்சா லைக்கண்
ஓங்கிய புகழி னோராம் உயர்வுபூண் டகன்று ரன்றே 71

உரை :- ஆங்கில மொழியிலே விவகாரத்துக்கு வேண்டுமளவு தேர்ச்சி அடைந்த பிறகு சட்டக் கல்வி வளர்ந்து வரும் கல்லூரியில் விருப்பத்தோடு நுழைவுற்றார். எந்நாட்டு அறிஞர் களும் உயர்வாக எடுத்துரைக்கும்படி அமைந்த கல்லூரியில் நன்கு பயிற்சி பெற்று உயர்ந்த புகழ் பெற்றவர் என்ற சிறப்புப் பூண்டு அகன்றார்.

விளக்கவுரை :- கலைச் செல்வம் பெற்ற பிறகு சட்டக் கல்லூரிக்குள் பிரவேசித்தார். பாரத தேசத்தில் அந்நாளில் அமைந்திருந்த சட்டக் கல்லூரிகளில் மிக்க புகழ் படைத்திருந்த

அக்கால நிலையத்தில் இவர் சிறந்த பயிற்சி பெற்று இரண்டு ஆண்டுகளில் வெளியேறினர்

பல்கலைக் கழகம் புக்குப் பட்டமும் புனையப் பெற்றார்
ஒல்கலைக் கலவா வுள்ளத் துணர் வோடு நியாயவாதச்
செல்கலைப் பணியின் மிக்க சீரியர் ஒருவர் பாற்சென்று
அல்கலைப் புரிந்து சட்ட அனுபவம் பெறுதலானர் 72

உரை :- சென்னைப் பல்கலைக் கழகத்திலே பட்டமளிப்பு விழாவிற் சென்று சட்டம் வல்லவர் என்ற பட்டம் புனையப் பெற்றார். சுருக்கமே கலவாத உள்ளத்தின் உணர்வோடும் நியாய வாதம் என்ற செல்லும் கலைப்பணியில் மிக்க அனுபவ சாலி ஒருவரிடம் சென்று தங்கியிருந்து சட்ட அனுபவ ஞானம் பெற்றுக்கொண்டார்.

விளக்கவுரை :- இவர் பல்கலைக் கழகத்தில் பி. ஏ , பி. எல் என்ற இரண்டு பட்டங்களும் பெற்றவர். ஒல்கல்-சுருங்குதல் நியாயவாதம். நீதி மன்றத்திற் சென்று மன்ருடும் தொழில் செல்கலைப்பணி கலைப்பணிகளுள் ஓவியம் சிற்பம் முதலிய பணிகள் சிலகாலம் தோல்வி விளைப்பதும் உண்டு வாழ்வு சிதையக் காரணம் ஆவதும் உண்டு. நியாயவாதக் கலையைக் கற்றுப் பணிபுரிபவர் செல்லும் சொல் வல்லவராய்ச் செல்வம் சிறந்து வாழ்வது பெரும்பாலும் நிகழக் கூடியது. ஆதலின் அது செல்கலைப்பணி ஆயிற்று அல்கல்-தங்குதல்.

தந்தையர் வேத நூலின் தத்துவம் விளக்கி யீட்டும்
நிந்தையில் பொருளி ஞலே நிறைகலை பெற்ற செல்வர்
சந்தைசொல் மறைநூல் தேர்ந்த சந்ததிப்பண்பு வாய்த்து
முந்தையர் முறையினிங்கார் முதற்பணி யெடுக்கலானர்

உரை :- தந்தையார் வேத சாஸ்திர தத்துவத்தை விளக்குவதால் தேடும் நிந்தையற்ற செல்வத்தாலே நிறைந்த

கல்விச் செல்வம் பெற்ற செல்வர் சந்தை சொல்லிப் பயிலும் வேத நூல் தெரிந்த சந்ததியின் பண்பு வாய்த்து முன்னோர் முறையிலிருந்து அகலாது முதன்மை தரும் மன்றாடிப் பணியைத் தொடங்கினர்.

விளக்கவுரை :- பி. ஏ., பட்டமும், பி. எல். பட்டமும் தந்தையார் பிரவசன சம்பாத்தியத்தால் இவர் பெற்றார். தம் குலத்துக்கு அமைந்த சிறந்த பண்பும் வாய்ந்தவராகி, நியாய வாதத் தொழிலை நல்ல இடத்தில் நல்ல நாளில் தொடங்கினர்.

பொருட்டுறை வழக்கு மேனைப்
புலத்துறை வழக்கு முள்ள
மருட்டுறை மாந்தர் பல்லோர்
வந்தனர் இளமன்றாடி
தெருட்டுறை தெளிந்து மேன்மேல்
திசை திசையிருந்து வந்தார்
அருட்டுறை உரிமை பூண்டார்
அனைவர்க்கும் அறமே செய்தார் 74

உரை :- பொருள் கொடுக்கல் வாங்கலால் வரும் வழக்குகளும் மற்ற நெறிகளில் அமைந்த வழக்குகளும் கொண்டு நீதி மன்றத்திற்கு வரும் மருட்சி வழியில் நின்ற மனிதர் பலர் இவரிடம் வந்தனர். இளமைப் பருவத்து மன்றாடியார் அறிவுத்துறையெல்லாம் நன்கு தெரிந்து மேலும் மேலும் பல திசைகளிலிருந்து வந்த மக்களுக்கும் வழக்குத் துறையில் உதவி புரியும் உரிமை பூண்டார். எல்லாருக்கும் அறமே செய்தார்.

விளக்கவுரை :- வழக்கு வகை பலவாயினும் பொதுவாக அவற்றை இரண்டு வகைக்குள் அடக்கலாம். பொருள் வழக்கு ஒரு வகை. குற்ற வழக்கு மற்றொரு வகை. இவ்விருதுறைகளிலும் இவர் சிறந்த அனுபவம் பெற்ற மன்றாடியாரிடம் தேர்ச்சி பெற்றதால் தொழில் தொடங்கிய காலம் முதலே முன்னணியில்

நிற்பவர் ஆயினர். நம் கண் காண சி. பி. ராமசாமிஐயர் இப்படி வழக்கறிஞர் துறையிலே சிறந்து விளங்கியதை அறிவோம்.

அறத்தாற்றின் அல்லற் பட்டார்
அறமுறை வழக்குக் கன்றி
மறத்தாற்றின் வழக்குக் கேனும்
வலியவர்க் குதவி செய்யார்
புறத்தாற்றின் வலிந்து பொய்ம்மை
புகலுவார் அழிந்து போகத்
திறத்தாற்றின் முறைமை யெல்லாம்
தெளிவித்து வென்ரு ரன்றே 75

உரை :- தரும மார்க்கத்திலே துன்பம் உற்றவர் வழக்குக்கு அல்லாமல் அதரும மார்க்கத்தால் வழக்குக்கு வரும் வலிய வழக்காளிகளுக்கு ஒரு போதும் உதவி புரிய மாட்டார். புற வழிகளில் வீம்புக்காகவே பொய் பேசுவார் அழிந்து போகும் படி, தம் அறிவுத் திறத்தின் முறையே மன்ருடித் தெளிவித்து வழக்குக்களை வெல்வார்.

விளக்கவுரை :- நியாயவாதி என்ற பெயர் நன்கு பொருந்தும்படி தம்மிடம் வரும் வழக்குகளில் நன்கு ஆராய்ந்து எவை உண்மையில் தருமம் தவருதவையோ அவற்றையே எடுத்துக்கொண்டு நீதி மன்றத்தில் தம் நாத்திறத்தால் நன்கு மன்ருடி வெற்றி பெறுவார் என்று கூறுவது இவர் வரலாற்றின் உண்மையாம். படிகம் போன்ற மனம் உள்ளவர் பாவத்துக்கு அஞ்சுவார்.

" தோல்வியே விளையு மேனும்
தூயமெய் வழக்கின் கோட்பாடு
எல்லைநன் குணர்ந்து மன்றத்
திருப்பவர் செவிக்க ணேற்றி

மேல்வரு மெதிர்மன் றுடி
வெற்றியைப் பெற்று ரேனும்
சால்பினி லுயர்ந்தார் என்று
தம்பெயர் நிறி இயினுரே" 76

உரை :- தோல்வியே விளைந்தாலும் தூய்மையான உண்மை வழக்கின் நுட்பமான கோட்பாடுகளை இடம் காலம் நன்கு அறிந்து நீதி மன்றத்தில் அமர்ந்திருக்கும் நீதிபதிகள் செவியிற் புகுப்படி யேற்றி மேல் வருகின்ற எதிர்க் கட்சியின் வழக்கறிஞர் வெற்றியைப் பெற்றுலும் சால்பிலே உயர்ந்து விளங்குவார் என்று தம் பெயரை நிறுவினுர்.

விளக்கவுரை :- இவர் எடுத்த உண்மை வழக்குகளுள் ஏதோ ஒன்று எதிர்த்திறத்தில் உள்ள மன்றுடியின் திறமை யாலோ சட்டத்தின் போக்காலோ, சாட்சிகள் சொல்லிய சொல்லாலோ உண்மைக்கு மாருக இவர் கருத்துக்கு மாருக முடிவு கூறப்பட்டு இவர்க்குத் தோல்வி விளைக்குமாயினும் "உனக்கு, நீ செய்யும் கடமையில் தான் அதிகாரம் உண்டு. விளையும் பயனில் இல்லை" என்று கண்ணன் கூறிய கருத்தை நம்பி மனத்தில் கலக்கம் அடையாது சால்பு விளக்குவார்.

" உயர்நீதி மன்றத்தின்கண்
உயர்நீதிவாதி யென்ற
பெயர்நீதி நன்கு தேர்ந்த
பிள்ளையார் பெறுதல் கண்டு
செயல்நீதி தெளிந்த தந்தை
திருமணம் நிகழ்த்தி யிட்டார்
உயல்நீதி யுணர்ந்த பெண்டோ
டுவப்புற வாழ்ந்தார் நன்றே" 77

உரை :- சென்னையில் உள்ள உயர்நீதி மன்றத்தில் அந் நாளில் மன்றுடிய மன்றுடியருள் மிக உயர்வுள்ள நீதிவாதி என்ற

பெயர்ப் பொருத்தத்தை நன்கு தேர்ந்த தம் குமாரர் பெறுகின்ற உண்மையை உணர்ந்து செய்கையில் நியாய மார்க்கம் தெளிந்த தகப்பனுர் தம் குமாரர்க்குத் தக்கதோர் குலத்திலே திருமணம் நிகழ்த்தி விட்டார். உய்யும் நெறியை உணர்ந்த அப்பெண் மணியோடு இவர் உவப்புமிக வாழ்ந்தார்.

விளக்கவுரை :- இருபத்தைந்து வயதை அடையுமுன்பு இவர் சிறந்த உயர் நீதி மன்ற வழக்கறிஞராக விளங்கக் கண்ட தந்தை தமக்கேற்ற குலத்திலிருந்து ஒரு கற்பரசியை இவர்க்கு வாழ்க்கைத்துணை ஆக்கினுர்.

"கற்பெனு நெறியை யுள்ளம்
கருதியே பிடித்த மங்கை
வெற்பெனு முறுதி பெற்ற
மேதகு கொழுந ரோடும்
அற்பெனு மாழி நீந்தி
அருளெனு மமுதம் கண்டாள்
பொற்பெனு முண்மையாய
பொருளையு முணர்ந்தா ளன்றே" 78

உரை :- கற்பு என்ற சன்மார்க்கத்தைத் தம் மனத்தால் நன்கு கருதி வாழ்வு நெறியாகப் பற்றிக்கொண்ட அப்பெண்மணி மலைபோல் மனவுறுதி பெற்ற பெருமைமிக்க நாயகரோடு அன்பு என்ற கடலில் நீந்தி இறைவனருள் என்ற அமுதத்தைக் கண்டாள். அழகு என்ற உண்மையான பொருளையும் உணர்ந் தாள்.

விளக்கவுரை :- இல்லறத்தில் இன்று வாழ்கின்றுர் ஆயினும் பரம வைராக்கிய மூர்த்தியாக விளங்கவே பிறந்தவர் ஆதலால் அதற்கு அங்கமாகவே இல்வாழ்க்கை அமையப் பெறுகிறுர். அருள் என்னும் அன்பின் குழவி என்பர் வள்ளுவர். அன்பு துணை கொண்டு அருளை அறிவதே மெய்யறிவு. அழகு

என்பது உண்மையில் வெளித் தோற்றத்தில் உள்ள பொலிவு அன்று. உள்ளப் பொலிவு என்ற உண்மை நிலையே. இப் பெண்மணி தலைவர் மனநிலை அறிந்து அதற்கேற்ற உள்ளக் கனிவு உற வாழ்ந்ததால் உண்மை யபூகை வாழ்வில் உணர்ந் தாள்.

" புறவாழ்வும் அகத்தின் வாழ்வும் பூரண னருளா லாமென்
றறவாழ்வில் அழுந்தி வாழ்ந்த அந்தணர் தந்தை தாயர்
திறவாழ்வு தெளிந்து காசி செல்லவே விழையக் கண்டு
துறவாழ்வு துணிபென் றன்றே தூமன விடை தந்தாரே."

உரை :- புறத்து வாழ்வும் அகத்து வாழ்வும் இருபாலும் நிரம்பியிருக்கும் பரிபூரணப் பரம்பொருளின் திருவருளால் ஆகும் என்று தருமமயமான வாழ்க்கையில் அழுந்தி வாழ்ந்த இவ் வந்தணர் தம் பெற்றோரின் மனம் உவக்கும் திறம் உள்ள வாழ்வை உணர்ந்து அவ்விருவரும் காசிக்குப் போக விரும்பியது உணர்ந்து, தந்தையார் கருத்துத் துறவறத்தில் ஆழவே துணிந்தது என்று அன்றே அறிந்து பரிசுத்தமான சித்த விருத்தியோடு விடை தந்தார்.

விளக்கவுரை :- புறவாழ்வு-உலக நலத்தில் உவக்கும் வாழ்வு, அகவாழ்வு - இறைவன் அருளில் அடங்கியிருக்கும் வாழ்வு. பெற்றோர் தேகதிடம் இருக்கும்போதே காசியிற்சென்று நிலைத்து வாழ விரும்பியதால் மகனார் விடை தந்தார்.

" காசியே நினைந்து சென்ற காதல்சால் பெற்றோர் செய்கை
மாசிலா தெனவே யெண்ணு மனத்தினர் சென்னைக் கண்ணே
ஆசிலா அறத்தைக் காக்கும் அகவொழுக் குடைய ராகிக்
காசிலா மனைவியோடு கடன்முறை வாழ்ந்தா ரன்றே" 80

உரை :- காசியம்பதியையே நினைத்துச் சென்னை நீங்கிய அன்பு உருவமான பெற்றோர் செய்கை குற்றமற்றது என்று

எண்ணும் மனம் உள்ளவராய்ச் சென்னைப் பட்டினத்தில் குற்ற மற்ற நீதி தருமத்தைப் பரிபாலிக்கும் அகவொழுக்க முடையராகி எவ்வகைக் குற்றமும் இல்லாத மனைவியோடு தருமம் நிகழும் முறையில் வாழ்ந்தார்.

விளக்கவுரை :- "காயாச்ம்து மாணுத் முக்தி:, அதவா புத்திர சந்நிதௌ" என்று உள்ள புராண வாக்கியத்தில் ஊறிய மனம் கொண்ட பெற்றோர் இருவரும் இந்திரிய பாடவம் குறையாதிருக்கும்போது காசிக்குப் புறப்பட்டனர். மன்றுடித் தொழில் புரிந்த குமாரர் செல்வம் தேடுவதே நோக்கமாக அத்தொழில் அறம் மறந்து செய்யாமலும் காமம் துய்ப்பதே கருத்தாக இல்லறம் கொள்ளாமலும் இரண்டிலும் கமல பத்ரஜலம் போல ஒட்டியும் ஒட்டாதும் இருந்தார்.

இரண்டாவது

"நீதிபதியான படலம்"

"திருமயிலைக் கபாலீசன் திருவருளோ
வேட்டீசன் செயலே தானோ
ஒருமயிலை நாவலர்க்கு மணம்புணர்த்த
வொற்றியப்பன் உள்ளப் பாங்கோ
கருமயலை யொழிக்கவரு பிறவிபெற்ற
பனவர்பிரான் கடன்மை தேர்ந்து
வருமுயலை விரைந்தருளும் சிவைசெயலோ
புதுமைநலம் வளர்ந்த தன்றே" 81

உரை :- திரு மயிலாப்பூரிற் கோயில் கொண்டருளும் கற்பகாம்பிகை தலைவன் கபாலீசன் திருவருளோ திருவேட்டீசுவரன் பேட்டையிலே கோயில் கொண்ட ஏட்டீசன் திருவருளோ நாவலூர் நம்பி சுந்தரமூர்த்தி நாயனுர்க்கு ஒப்பற்ற மயில் போன்ற சங்கிலி நாச்சியாரை மணம் புணர்வித்த ஒற்றியூருடையான் திருவுள்ளப் பாங்கோ கருப்பவாச மயக்கத்தை ஒழிப்பதற் கென்றே பிறப்பெடுத்த பிராமண உத்தமர் கடமையே கருத்தாயிருப்பது தெளிந்து அவர்க்கு வருதற்குரிய உய்தியை விரைவிலே அருளும் பராதேவதையின் திருவருட் செயலோ அவர் வாழ்விலே ஒரு புதுமை நலம் தோன்றி வளர்ந்தது.

விளக்கவுரை :- சென்னை நகரத்து உயர் நீதி மன்றத்திலே மன்றுடித் தொழில் சிறப்பப்பெற நன்மதிப்போடு

வாழ்ந்த இவர் செல்வச் சிறப்பும் பேரும் புகழும் பெற்றுத் தம் பெற்ஞேர்க்குக் காசிவாசம் அமையச் செய்து அமைதியுற வாழ்ந்து வருகையில் இவர் வாழ்விலே உண்டான ஒரு புதுமை யான வளர்ச்சியை இப்படலம் கூறுகின்றது. வாழ்க்கையில் உயர்வு தாழ்வு வருதல் இறைவன் செயலாலே என்று துணிந்த மனப் பண்பு உள்ளவர் ஆதலால் கபாலீசன், ஏட்டீசன், ஒற்றியூரிறைவன் என்ற பல பெயர்களோடு சென்னை நகரத்து அகத்தும் புறத்தும் வீற்றிருக்கும் சிவனருளோ, சிவையருளோ இவ்வளர்ச்சிக்குக் காரணம் என்ற சிந்தனை இங்கு ஆசிரியன் மனத்தில் எழுகின்றது.

"குணநிறைந்த மனைத்தலைவி கொழுநர்மனக்
குறிப்புணர்ந்து கொழுமை சான்ற
மணநிறைந்த கமலமலர் போல்மலரும்
முகத்திஞெடு மனத்தின் மாண்பு
வணநிறைந்த செயலானே வாழ்க்கையிடை
விளக்கமுற வாழுங்காலை
கணநிறைந்த கயிலையிறை திருவருளால்
ஒருமகவைக் கருக்கொண் டாளே" 82

உரை :- நற்குணம் எல்லாம் நிறைந்த அம்மனைத் தலைவி தன் கொழுநர் மனக் குறிப்பை அறிந்து கொழுமை சிறந்த மணம் நிரம்பிய தாமரை மலர் போல மலரும் முகத்தோடு மனத்தின் மாண்பு நிறைந்த செயலால் உலக வாழ்க்கையிலே அவர் வாழ்க்கைத் துணையாக வாழ்ந்து வருங்காலத்தில் சிவகணங்கள் நிறைந்த திருக்கயிலாயப் பெருமான் திருவருளால் ஒரு மகவை வயிற்றிலே தாங்கிஞள்.

விளக்கவுரை :- கணவரும் மனைவியும் ஆகிய உறவிலே இருவரைச் சேர்த்துவைத்த இறைவன் அவர் இருவரும் காமக் களியாட்டே நோக்கமாக உலக வாழ்க்கை நிகழ்த்தாதிருப்பினும்

'மகன் என்ற முறையே வரும் சந்ததி தந்துவை அறுக்காதொழிக' என்று வேதம் விதிப்பதால் வேள்விகள் பல செய்து வேதத்தைப் பொருளோடு போற்றி வந்த குலத்தின் வளர்ச்சிக்கு உரிய செல்வமாக ஒரு குமாரனைக் கொடுக்கத் திருவுள்ளம் கொண்டதால் 'அவனன்றி ஓர் அணுவும் அசையாது' ஆதலின் பரம வைராக்கிய மூர்த்தியாக உலகிலே திரியப் பிறந்த அந்தணர்க்கு ஒரு குமாரன் தோன்றுகின்றான். சித்தார்த்தர் உலகத்துக்கே சாதன சதுஷ்டயத்தில் துணைகொண்டு பரம வைராக்கியம் போதிக்க வந்தாராயினும் அவர் யசோதரையை மணந்து இராகுலனைப் பெற்ற பிறகே காட்டுக்குப் புறப்பட்டார். அவர்போல இப்புனிதரும் தம் மனைவியாரிடம் குமாரரைக் காண நேர்ந்த இறைவன் செயலை அறிகின்றார்.

பேரனுதித் துறுவதனை யறியாதே
காசிநகர் பிரிந்த பெற்றோர்
ஈரமன நிலையுணர்ந்த மன்றுடி
யிருவர் கழல் இதயத்தேற்றி
வாரமிகு மனைவிமகப் பேறுபெறு
நன்னாளில் மனைக்கண் நின்றே
தாரமெனு முறவுதரு சந்ததியாம்
பெரும்பொருளைத் தாம்கண் டாரே 83

உரை :- தமக்குப் பௌத்ரன் பிறக்க இருப்பதை அறியாமலே காசி நகரத்துக்குச் சென்ற பெற்றோரின் அன்புமிக்க மனநிலையை அறிந்த நியாயவாதியார் அவ்விருவர் பதங்களையும் மனத்தே தியானித்து அன்பு மனைவியார் புத்திரபாக்யம் பெறும் நன்னாளிலே தம் மாளிகையில் இருந்து தாரம் என்ற உறவு தரும் சந்ததி என்ற பெரும் பொருளைக் கண்ணாற் கண்டார்.

விளக்கவுரை :- தந்தை ஆகும் பேறு பெற்றவர் தம் தந்தை தாயரை வணங்கித் தியானித்துத் தம் புத்திரனை நோக்கினார்.

மகன்பிறந்த மகிழ்ச்சியினுல் அவிமுக்த
புரத்திருந்த மறைமே லானை
அகன்பிறந்த உருக்கமொடு நினைந்தெழுந்தார்
கடற்கரையில் அல்லிக் கேணி
முகன்பிறந்த கருணையொடு காட்சிதரு
முகுந்தனையும் முறையே போற்றி
சகன்பிறந்த பேறுபெற்றே னிறைவனே
வினித்திருவுளம்போற் சரிப்பே னென்ருர்

உரை :- குமாரன் பிறந்த மகிழ்ச்சியால் காசிநகரில் கோயில் கொண்ட விசுவநாதனை மனத்திற் பிறந்த உருக்கத்தோடு தியானித்து எழுந்தார். கடற்கரையிலே திருவல்லிக் கேணியிலே முகத்துப் பிறந்த கருணையோடு காட்சிதரும் பார்த்த சாரதியையும் முறையே போற்றி உலகத்திற் பிறந்த பேறு பெற்றேன், இறைவ! இனி உன் திருவுள்ளம் ஊக்கியபடி திரிவேன் என்ருர்.

விளக்கவுரை :- உலக வாழ்வே நாட்டமாக வாழப் பிறந்தவர் அல்லர் என்பது இதனுல் குறிப்பிக்கப்படும்.

"மறைமணக்கும் குலம்பிறந்த திருமதலை
மறைநெறியே வளர்வா ஞனுன்
நிறைமணக்கும் உளத்தாயின் பால்மணக்கும்
முகத்திேைடு நிமிர்ந்து தந்தை
பொறைமணக்கும் முகநோக்கி மழலைமொழி
தேன்மனக்கப் பொழியா நின்ருன்
இறைமணக்கும் நீதிமன்றம் புகுந்தாறும்
மழலைநினை வெழுமா நன்றே. 85

உரை :- வேதம் பரம்பரையாக மணக்கும் குலத்திலே பிறந்த திருக்குமாரன் வேதம் கூறிய வழியிலே வளர்ந்து

வந்தான். கற்பு ஒழுக்கம் மணக்கும் மனம் உள்ள தாயின்பால் மணக்கும் முகத்தோடு நிமிர்ந்து தந்தையார் பொறுமை மணக்கும் முகத்தை நோக்கி மழலை மொழிகளைத் தேன்போல இனிக்க உரைத்தான். அரச அதிகாரம் விளங்கும் நீதி மன்றத்திலே புகுந்த போதும் அவர் மனத்தில் மழலையின் நினைவு எழும்படி மழலையாடினன்.

விளக்கவுரை :- நீதி மன்றத்தில் மழலை நினைவு எழுமாறு மழலை மொழிந்தான். வேதம் உரைத்த சடங்குகளைப் பெற்று வளர்ந்தான்.

" அகவையொரு மூன்ருகு முன்னவற்கோர்
அனுசனுமங் கடைவ தானன்
மகவைமுக நோக்கியதாய்மனமிகவே
மகிழ்ந்துமுக மலரா நின்ருள்
தகவையறி மகளிர்பலர் தாலாட்டுப்
பாடுவதும் தனயர் தம்மை
மிகவையுற வாழ்த்துவதும் புரிந்தனரால்
இனியமொழி விளம்பி நின்றே " 86

உரை :- மூன்று வயது ஆகுமுன்பு அவனுக்கு ஒரு தம்பி பிறந்தான். சிறு மகவை முகம் பார்த்த தாய் மனமகிழ்ந்து முகம் மலர்ந்தாள். தகுதி அறிந்த பல மங்கள மகளிர் தாலாட்டுப் பாடுவதும் குழந்தைகளை மேன்மையடைய வாழ்த்துவதும் இனிய மொழிகளை உரைத்துச் செய்தார்.

விளக்கவுரை :- முதல் மகனுக்கு மூன்று வயது ஆகு முன்பு இரண்டாமகன் பிறந்தான். விருத்த சுமங்கலிகள் வந்து தொட்டிலில் இட்டுச் சிறுவனை வாழ்த்தி ஆசி கூறினர்

" தாசரத ரிருவர்பொரத் தனயரிரு
வரும்வளரும் தகுதி கானூஉ
மாசரித நாயகரம் மகார்மழலை
மொழிகேட்டு மயங்கும் தாயின்
பாசரத மனநிலைமை நன்குணர்ந்து
மனத்தடக்கிப் பயிலுங்காலை
ஈசனவர் நிலையுயர்த்தத் திருவுள்ளங்
கொளும்வரலாறு இயம்பு லாமே" 87

உரை :- தசரத குமாரரான இராம லக்ஷ்மணர்க்கு ஒப்பாகத் தம் குமாரர் இருவரும் வளரும் தகுதியைக் கண்டு இப் பெருஞ் சரித நாயகர் அச்செல்வர் மழலை மொழியைக் கேட்டு மயங்குகின்ற தாயின் பாசமும் ஆசையும் மிக்க மன நிலைமையைக் கண்டு மனத்தில் அடக்கி வாழ்ந்துவரும் பொழுது இறைவன் அவர் நிலையை உயர்த்தத் திருவுள்ளம் கொண்ட வரலாற்றை இனிக் கூறுவோம்.

விளக்கவுரை :- தாதாதர்-தசரத குமாரர். பாசம்+ரதம் -பாசரதம் பாசம்-பற்று, ரதம்-ஆசை. மகார்-செல்வர். உயர்த்துவது-நியாயவாதி நிலையிலிருந்து நியாயாதிபதி ஆக்கி அதனிலும் உயர்த்துதல்.

" கேரளத்தி னரசர்பிரான் நீதிமன்றத்
திடைத்தலைமைக் கிரியை பூணும்
சீரளத்த லரியவொரு சேவகரைத்
தேருகின்ற செயலின் கண்ணே
நாரளக்கு மனப்பண்பின் நட்புரிமை
பூண்பவர்பால் நவின்ற சொல்லால்
ஏரளக்கு நீதிமுறை தெளியுமிவர்
வாழ்வுமுறை எய்திற் றன்றே. 88

உரை :- சேரநாட்டு அரசர் பெருமான் தமது நீதிமன்றத்தில் தலைவர் செயலைப் பூணவல்ல சிறப்பு, அளத்தற்கரிய ஒரு பெருஞ் சேவகரைத் தேடும் செயலில் அன்பு கலக்கும் மனம், பண்புள்ள நட்புரிமை பூண்ட சிலரிடம் உரைத்த சொல்லால் அழகுமிக்க நீதிமுறை தெளியும் இவர் வாழ்வின் முறை உயர்வு அடைந்தது.

விளக்கவுரை :- சேரமன்னர் தம் நாட்டிலுள்ள உயர்நீதி மன்றத்தில் தலைமை பூணத்தக்க ஒரு மன்ருடியாரைத் தேர்ந்தெடுக்க விரும்பித் தம் அன்பரோடு உசலாவிக்கொண்டிருந்த பொழுது சென்னையிற் பயிற்சி பெற்ற ஒருவர் இவர் வரலாற்றை அவர்க்கு உரைத்தார்.

" தென்ஞட்டு மன்ருடியினத்து மணி
யெனத்தக்க சிறப்பே பூண்டார்
பொன்ஞட்டு மொழியினிலே பூரணராய்
மனுமுதலாம் புலமை நூலும்
மன்ஞட்டு மொழியிலியல் அறநூறும்
தெளிந்துணரு மனப்பண் புள்ளார்
பன்ஞட்டு மொழியறிவார் போலுமவர்
பணிநமக்குப் பலித்தல் நன்றே. 89

உரை :- தென்ஞட்டில் உள்ள மன்ருடிகள் இனத்தில் சிகாமணி என்னத் தகுந்த சிறப்பைப் பெற்றவர் தேவபாஷையான வடமொழியிலே பரிபூரண ஞானமுடையவராய் மனுதர்ம சாஸ்திரம் முதலிய புலமை விளக்கும் சாத்திரங்களும் அரசர் நாட்டுக்குரிய ஆங்கில மொழியில் இயன்ற சட்ட நூல்களும் தெளிந்துணர்ந்த மனப்பண்புள்ளவர் பல நாட்டு மொழிகளையும் அறிந்தவர் போலும். அவர் பணி நமக்குப் பலித்தல் நன்ருகும்.

விளக்கவுரை :- சேரவரசரும் அவர் அமைச்சரும் தமக்குள் பேசிக்கொண்ட மந்தண மொழி இது. பொன்ஞடு—

தேவருலகம். பொன்னாட்டு மொழி, தேவபாஷை-ஸம்ஸ்கிருதம். மன்-ஆங்கிலேய அரசர்

அறிவுமிகு மமைச்சுரைக்கும் அரசுதிரு
முகக்குறிப்பை அகத்திற் கொண்டே
செறிவுதெளி வருமை செம்மை
நுண்மையுள நாவன்மைச் செல்வர்நந்தம்
நெறியுநமர் மொழியுமறி யாதவரென்
றொருகுறையே நிகழ்த்த லாகும்
அறிவர்குலம் பிறவி பெற்றோர்க்கிவையரிய
வேனவுரை யேனரசே யென்றே 90

உரை :- அறிவுமிக்க அமைச்சர் அரசர் பெருமான் திருமுகத்தின் முகக் குறிப்பை மனத்திற் கொண்டு செறிவு தெளிவு அருமை, செம்மை, நுண்மையென்ற குணம் உள்ள நாவன்மைச் செல்வரான அவர் நம் நாட்டுச் சம்பிரதாயமும் நம்மவர் தாய் மொழியும் அறியாதவர் என்ற ஒரு குறையே சொல்லலாம். சிறந்த ஞானாத்மாக்களின் வம்சத்திலே பிறவி பெற்ற அவர்க்கு இவ்விரு குறைகளும் கடத்தற்கரியன என்று உரைக்கமாட்டேன் அரசே என்று கூறினார்.

விளக்கவுரை :- தென்னாட்டு மன்றாடி இனத்தின் தலைமணி எனத்தக்க இவர் மலையாள மொழியும் சேர நாட்டுத் தார்மிக முறையும் அறியாதிருப்பினும் விரைவில் அவற்றை அறிந்து கொண்டு தம் பணியை நன்கு நிறைவேற்றுவர் என்று அரசரிடம் அமைச்சர் உரைத்தார். அரசர் மவுனம் பூண்டார்.

" ஆழ்ந்தகன்ற அறிவினராம் அமைச்சர்மொழி
யாய்ந்துணர்ந்த அரசர் கோமான்
வாழ்ந்தகன்ற செல்வமொடு சிறந்திருந்த
சென்னைநகர் மன்றத் தாடி

சூழ்ந்தகன்ற சூழ்ச்சியராம் ஆதலினு
லவர்நமது துணைமை பூணத்
தாழ்ந்தகன்ற தூதுமுறை தகாதுமிக்கார்
தமைப்போக்கல் தகுவ தன்றே" 91

உரை :- ஆழமும் அகலமும் உள்ள அறிவு சிறந்த அமைச்சர் மொழிகளை ஆராய்ந்துணர்ந்த அரசர் பெருமான் உலகில் வாழ்ந்து பெருகிய செல்வத்தோடு சிறந்திருக்கும் சென்னைமா நகரத்து மன்ருடியார் சூழ்ந்து விசாலமான சூழ்ச்சித் திறம் படைத்தவர் ஆதலினுல் அவர் நம் அரசியல் துணைவராகும் தலைமை நீதிபதி பதவியை ஏற்றுக்கொள்ளத் தாழ்வு என்று விலக்கத்தக்க தூது முறையைப் போக்கத் தகாது பெரியோர்களை அனுப்புவதே தக்கது என்ருர்.

விளக்கவுரை :- இஃது அரசர் கூறும் கருத்தாம். சாமானியமான தூதரைப் போக்கி அத்தகைய மன்ருடியாரை இங்கு அழைப்பது தகாது. நம் நாட்டிலே சிறந்த ஒருவரை அனுப்பி அவர் வாக்கு உதவியால் வரவழைக்க வேண்டும் என்று கூறினுர்.

"அறநூலினுணுக்க மெலா மளந்துரைத்து
நாயசபைக் கங்க மாகப்
பிறநூலு நுனித்தறியும் புகழாளர்
தமிழறிந்து பிறங்கு நூலோர்
மறம்வாழு மனத்தரையு மறநெறிக்குச்
செலுத்தவல வாய்மையாளர்
திறம்வாழு மறைவாணர் தருமவதி
காரியவண் செலல்நன் ருமே" 92

உரை :- தரும சாஸ்திரங்களின் நுணுக்கமான கருத்துக்களையெல்லாம் காலம் இடம் அறிந்து அளந்துரைத்து நம்,

நாட்டு நியாய சபைக்கு அங்கமாக அமர்ந்து பிற சாஸ்திரங்களை யும் நுட்பமாக ஆராய்ந்து அறியும் புகழாளர், தமிழ் மொழியை யும் பயின்று அறிந்து சிறக்கும் புலவர், பாவமே வாழும் மனம் உள்ள தீயோரையும் தரும மார்க்கத்திலே செலுத்த வல்ல நாவன்மை உள்ளவர், பலதிறப்பட்ட மறைகளும் பயின்றவர்; நம் நாட்டுத் தருமாதிகாரி அங்கு போய் வருதல் நன்ரும்.

விளக்கவுரை :- இதுவும் அரசர் கூற்று. சேர நாட்டுத் தலைமை நீதிபதியாகச் சென்னையிலிருந்து சிறந்த ஒரு மன்ருடி யாரை அழைத்து வருவதற்குத் தகுதியுடையவர் என்று அரசரே ஒருவரைக் குறிப்பிடுகிருர். அந்நாளில் சேர நாட்டிலும் புதுக்கோட்டை அரசிலும் நியாய சபைகளில் தரும சாஸ்திர உண்மைகளை விளக்கியுரைக்கும் திறம் படைத்த தருமாதிகாரி ஒருவர் இருந்தார். அவர் சிறந்த புலவராய் இருப்பார்

" அவ்வணமே புரிதனன்ரு மெனவமைச்சர்
புகன்றரசர் ஆணைகூறி
மைவ்வணமே பூத்த திருமேனியினுன்
அடிமையெறு மன்னனுட்டுக்
கெவ்வணமே யிவரை யழைத்துயர்நீதி
மன்றத்திலிருத்த லாமென்
றிவ்வணமே யேருவவென் றத்தலைவர்
சென்னைநகர்க்கேகினுரே " 93

உரை :- அங்ஙனமே செய்தல் தக்கதாம் என்று அமைச் சர் அரசரிடம் கூறிய பிறகு தருமாதிகாரியைக் கண்டு அரசர் ஆணையை வெளியிட்டதும் மேக வண்ணம் பூத்த திருமேனி கொண்ட அனந்த பதுமநாபன் அடிமையாக அரசாளும் கேரள மன்னர் நாட்டில் எப்படி இவரை அழைத்து வந்து உயர் நீதி மன்றத்தில் பிரதான நீதிபதியாக அமர்த்தலாம் என்று எண்ண

மிட்டுக்கொண்டு இந்நிலையிலேயே புறப்படுவேன் என்று தருமாதிகாரி சென்னைமா நகரத்துக்குச் சென்றார்.

விளக்கவுரை :- சேர நாட்டுத் தருமாதிகாரி அரசராணை பெற்றுத் தம் நாட்டுக்கு உயர் நீதிபதியாக வரவேண்டிய இக் கதா நாகரை அழைத்துவர அங்கு வருகிறார்.

" தருநிறைந்த வாராமத் திடையிருந்த
மாளிகையில் தரும நுட்பம்
வருநிறைந்த மனச்செல்வர் வீற்றிருந்த
நிலங்குறுகி மறைகள் ஓதி
உருநிறைந்த திருவனந்த பதுமனது
பிரசாதம் உவப்பால் நீட்டும்
புருநிறைந்த நரையாளர் முகநோக்கி
யந்தணரும் புகல்வர் நன்றே " 94

உரை :- மரங்கள் நிறைந்த சோலையின் இடையே இருந்த பெரியதோர் மாளிகையில் தரும சூட்சுமங்கள் வளருகின்ற நிறை மனச் செல்வர் வீற்றிருந்த புத்தக சாலையை அடைந்து வேத வாக்கியங்கள் கூறி ஆசீர்வதித்து அழகு நிறைந்த அனந்த பதுமநாபன் பிரசாதத்தை உவப்போடு நீட்டிய புருவத்தில் நிறைந்த நரை படர்ந்த தருமாதிகாரியின் முகத்தை நோக்கி அந்தணரான இவர் கூறுவார்.

விளக்கவுரை :- இப்பொழுது இவர்க்கு ஐம்பது வயது ஆகிறது. இருபது ஆண்டுகளுக்கு மேலாக உயர் நீதி மன்றத் திலே மன்றாடித் தொழில் செய்து பெரும் பொருள் திரட்டியும் பெருமக்கள் மிகுந்து வாழும் பகுதியில் பெருந் தோட்டத்தின் இடையேயுள்ள ஒரு பெரு மாளிகையில் தம் செல்வர்களோடு வாழ்ந்து வருகின்றார். அங்கு இவரைச் சேரர் குல மன்னர் போக்கிய தருமாதிகாரி அநந்த பதுமநாபன் பிரசாதத்தோடு வந்து கண்டு கொள்கிறார். புரு-புருவம் ப்ரு என்ற வடசொல் தமிழில் புரு என வந்தது.

"மறைபயின்ற பெரியீரேல நும்வரவு
மிகநல் வரவே யாக
குறை பயின்ற்சிறியேனைமதித்திறைவன்
பிரசாதம் கொடுத்த நல்லீர்
முறை பயின்ற மன்னர்பிரான்எனையேவி
நிறைவேற்ற முயலும் கன்மம்
நிறை பயின்ற நும்வாக்கால்மொழிதிரென
வணக்கமோடு நிகழ்த்தி னுரே" 95

உரை :- வேதம் ஓதிய பெரியீரே. உம் வரவு மிக நல்ல வரவே ஆகுக. குற்றம் பழகிய சிறியேனை மதித்து அநந்த பதுமநாபனது பிரசாதம் கொடுத்த நல்லவரே, அரசமுறையிலே வாழும் சேரமன்னர் பெருமான் என்னை ஏவி நிறைவேற்ற முயலும் காரியம் பூரண ஞான மொழி பயின்ற உம் திருவாக்கால் உரைப்பீரென்று வணக்கத்தோடு உரைத்தார்.

விளக்கவுரை :- மாளிகை தேடிவந்த புலவர் என்ற மரியாதைக்காக அவருக்கு நல்வரவு உரைத்தார். குறை பயின்ற சிறியேன் என்றது நைச்சியாநுசந்தானம். இறைவன் பிரசாதம் என்பது ஈசுவரப் பிரசாதத்தையும் அரசன் ஆணையையும் குறிக்கும். பிறகு அரசர் ஆணை தனிப்பட வருகிறது.

" தருமநெறி விளக்கியநூல் பலதேர்ந்த
பெரும்புலவர் தனயர் நும்மை
மருமமறி மன்னர்பிரான் தன்னரசில்
நீதிபதி மாண்பை யேற்கக்
கருமமறி யமைச்சர்மொழி துணையானே
யழைப்பலெனக் கருதா நின்ருன்
அருமையறி பெருமையினீர் ஆணையினை
யேற்றுவந்தேன் அளியே னென்ருர்" 96

உரை :- தரும மார்க்கம் விளக்கிய தரும சாத்திரம் பல தேர்ந்த பெரும் புலவர் குமாரரான உம்மை உலக ரகசியங்களை நன்கு உணர்ந்த எங்கள் மன்னர் பெருமான் தன் அரசில் நீதிபதி யாகும் பெருமையை யேற்க அரசியற் கருமம் நன்கறிந்த அமைச்சர் மொழியே துணையாக அழைப்பதற்குக் கருதுகின்றான். அருமையை யறிந்த பெருமையுடையீர், அரசர் ஆணையைத் தாங்கி வந்தேன் யான் என்றார்.

விளக்கவுரை :- வேதமூர்த்தி சாஸ்திரியார் வேத வேதாங்கங்களிற் சிறந்த பயிற்சி பெற்றவர். வேத பாஷ்யம் நன்கு கற்றவர். தரும சாஸ்திரங்களில் பூரண அனுபவம் பெற்றவர். அச் செய்தியை நன்கு உணர்ந்த சேரநாட்டுத் தருமாதிகாரி மகனார் முன் அப்பெருமையை உரைக்கிறார். அரசர் விழிக்கு இலக்காதல் அருமை. அரசர் அருட்குரிமை பெறுதல் அதனினும் அருமை. அந்த அருமையை அறிந்த பெருமையினர் இவர் என்று கூறுகின்றார் புலவர்.

நன்றிசைத்தீர் பெரியீரே நன்மையிலே
நாட்டமுள ஞான மன்னன்
என்றிசைக்கே மனம்போக்கி யெனைப்பணிக்கே
தகுவனென வெண்ணலானே
தென்றிசைக்கே புகழ்சிறக்கச் சங்கமிருந்
துயர் குலத்துச் சேரமன்னர்
மன்றிசைக்க வருந்தலைமை இறைவனருட்
டுணையாலே வகிப்பன்யானே 97

உரை :- பெரியீர்! நன்கு உரைத்தீர். நன்மையில் நாட்டம் உள்ள ஞானம் மிக்க சேரமன்னன் நான் இருக்கும் திசையில் தன் மனத்தைப் போக்கி என்னை நீதிபதி உத்தியோகத்துக்குத் தக்கவன் என்று நினைப்பதால் தென்றிசைக்கே புகழ் சிறக்கும்படி தமிழ்ச் சங்கத்திலிருந்து உயர்வுபெற்ற சேரகுலத்து

மன்னன் நீதி மன்றத்தில் அமர்த்தவரும் தலைமையை இறைவன் திருவருட்டுணையால் நான் ஏற்றுக்கொள்வேன்

விளக்கவுரை :- திருவாங்கூர் மன்னர் வடமொழியிற் சிறந்த புலமைபெற்றவர் தருமத்தின் போக்கை நன்குணர்ந்தவர் சங்கமிருந்து தமிழ் வளர்த்த புலவர்களை ஆதரித்த பண்டைக் குலமரபிற் பிறந்தவர் அவர்பணி சிறந்ததே.

பொருள்தேடும் தொழிலாக மன்ருடும்
பணியினிலே புகுந்தேனில்லை
இருள்தேடும் மனத்தாரை ஒளிதேடும்
நெறிநோக்கி இயங்க வைத்தே
மருள்தேடும் வாழ்க்கையிலே வழக்காட
வருவாரை மயக்கம் போக்கி
அருள்தேடும் புதுமைநெறி யமைத்தல்தகு
மெனக்கருதும் அகத்தினேனே. 98

உரை :- செல்வப்பொருளைத் தேடும் தொழிலாகக் கருதி நான் இம்மன்ருடித் தொழிலிலே புகுந்தேனில்லை. இருளையே தேடித் திரியும் மனம் உள்ள மாக்களை ஒளியைத் தேடும் வழி நோக்கி இயங்கச்செய்து மயக்கமே தேடும் வாழ்க்கையில் வழக்காட வருகின்ற மனிதர்களை அவர் மன மயக்கம் போக்கி அருளைத் தேடி வாழும் புது வழியிலே அமைத்தல் தகும் எனக் கருதும் எண்ணமே உடையேன்.

விளக்கவுரை :- சென்னை நகரத்திலே உயர் நீதி மன்றத்துப் பெரு மன்ருடியாக இருக்கும் ஒருவர் திருவாங்கூர் சமஸ்தானத்திலே நீதிபதி பதவியை வகிக்கப் போவதாயின், தாம் இருக்கும் நகரில் தாம் பெற்ற பெரும் பொருளையும் புகழையும் மறந்தே செல்லவேண்டும். அங்கு உத்யோகத்தால் வரும் வேதனம் அதிகம் இல்லை. வெளிவருவாய் எதுவும் இல்லை.

இதனை நன்கு அறிந்தே தம் மன நிலையை நன்கு விளக்கியுரைக் கின்றார்.

தென்னகத்து வரலாற்றிற் சேரர்குலம்
பெறும்பெருமை தெளிவேன் யானே
மன்னகத்து வணக்கமோடு பணிபூணு
மரபினிலே வருவே னேனும்
பன்னகத்து வளருமண்ணல் பிரசாதம்
அருளியெனைப் பயிர்த லானே
என்னகத்து மாறுகருத் துளதென்று
கூறமனம் இல்லேன் அன்றே 99

உரை :- தென்னாட்டு வரலாற்றில் சேரர் குலம் அடையும் பெருமையை நான் நன்கறிவேன். அரசர் குலங்களிலே வணக்கத்தோடு பணி பூண்டிருந்த மறையோர் குலத்திலே பிறந்தேன் ஆனாலும், சேஷ சயனத்திலே பள்ளி கொண்டருளும் பதும நாபன் பிரசாதம் அருளி என்னை அழைத்தலால் என் உள்ளத்தில் வேறுபட்ட கருத்துளது என்று கூறவும் மனம் இல்லேன்.

விளக்கவுரை :- தென்னாட்டின் வரலாற்றில் சேர நாட்டின் வரலாறு மிகப் பழமையும் சிறப்பும் அறுபடாத தொடர்ச்சியும் உள்ளது. முன்னோர் அரசவைப் புலவராய் இருந்தனர், பன்னகம்-காலால் நடக்காத பாம்பு; ஆதிசேஷன்.

சுதந்திரத்தி லெவர்க்குமன மிருப்பதனை
யானுமக்குச் சொற்றல் வேண்டா
இதந்திரத்தி னடைவதற்கே நாட்டமுளார்
அரசர்பணிக் கிசைய மாட்டார்
பதந்திரத்தி னருளுமன்னர் பணிபூண
வருகவெனப் பதும நாபன்
அதந்திரத்தி னுகரனே யானுலு
மழைக்கின்றான் அடிச் சேவைக்கே 100

உரை :- சுதந்திரத்தில் எனக்கு மனம் இருப்பதை நான் உமக்குச் சொல்லவேண்டா. நன்மையை உறுதியாகப் பெறும் நோக்கமுள்ளவர் அரசர் பணிக்கு இசையார். தம் கொடையிலுள்ள பதவியை எனக்குத் திரம் தெரிந்து எனக்கு அருளும் மன்னர் பணிபூண வருவாய் என்று பதுமநாபன் அதந்திரத்தின் ஆகரனே ஆனாலும் என்னைத் தன் திருவடிச் சேவைக்கு அழைக்கின்றான்

விளக்கவுரை :- நியாயவாதிக்கு சுதந்திரம் உண்டு. நீதிபதி அவ்வுரிமையை இழக்க வேண்டும். திரம் - ஸ்திரம்; பதம்-பதவி; அதந்திராகரன் - கட்டுப்படாதிருக்கும் நிலைக்கு இடமானவன்; பதுமநாபன் எதற்கும் எவர்க்கும் கட்டுப்படாதிருப்பவனே ஆயினும் என்னைத் தன் அடிப்பணிபூண அழைக்க உவந்தான் என்கிறார். அரசர் பதுமநாப தாசர் ஆதலால் நீதிபதி பதுமநாபதாச தாசரே. அரசர் ஆணைக்கு மதிப்புக் கொடுத்தே புறப்பட நினைத்தார் ஆனாலும் அரசர் திருமால் அம்சமே என்று பெருமக்கள் உரைப்பதை அறிந்தவரே ஆயினும் அரசர் ஆணை ஒன்றே காரணமாகத் தாம் புறப்படவில்லை என்பதை இங்குக் குறிப்பிக்கிறார். பதுமநாமப் பிரசாதத்தோடு பதுமநாபதாசர் ஆணையைத் தாங்கிவந்த சாஸ்திரஞ்ஞர் வாக்குக்கு மதிப்புத்தர வேண்டியும் பதுமநாபதாச தாசராம் பதவி கிட்டுவது அறிந்தும் ஏற்கின்றார்.

"ஊற்றமிகு மனத்தானே மறையனந்தம்
பொருள்தேறி யோது நாவார்
ஏற்றமிகு குலம்பிறந்தே னென்பதனு
லெனக்கிந்தப் பொறுப்பை யீந்தான்
நாற்றமிகு துழாயணிவா னருளானே
நராதிபனின் நன்மை நெஞ்சம்
தேற்றமிகு பணிபுரிய அவனருளே
துணையெனயான் சேற லாமே" 101

உரை :- உறுதி மிக்க மனத்தின் உதவியால் வேத வாக்கியம் பலவற்றின் உரைத் திறத்தை நன்கு தெரிந்து உரைக்கும் நாவலரது ஏற்றம் மிக்க குலத்திலே பிறந்தேன் என்ற காரணத்தால் (பதுமநாபதாசன்) எனக்கு இப்பொறுப்பைத் தந்தான். மணம் மிக்க திருத்துழாய் அணியும் பதுமநாபன் திருவருளால் அரசன் செய்த இந்நன்மையை நினைக்கும் என்மனம் தெளிவான பணிபுரியும்படி அவனருளே துணையென நான் புறப்படலாம்.

விளக்கவுரை :- வேதப் பொருள் தெளிந்தவர் குலத்திலே பிறந்த காரணத்தால் நராதிபன் எனக்கு இப்பதவியை ஈந்தான் என்று முடிக்க வேண்டும். அரசன் தந்த பணியை யேற்று நன்கு நிறைவேற்ற இறைவன் துணை வேண்டும் என்க.

" எனவுரைக்கு மனச்செல்வர் முகநோக்கி
மறைமுதல்வர் இயம்பு கின்றார்
கனவுரைக்கும் உலகநிலை வேதாந்தக்
கருத்தறிந்த கலையின் செல்வ
வினவுரைக்கு வேறில்லை வேந்தர்பிரான்
திருவுளத்தின் மேன்மை யெல்லாம் "
நனவுரைக்கு நாளை யனுபவத்தறிக
நானுரைத்தல் நடலையாமே. " 102

உரை :- என்று உரைக்கும் மனச்செல்வர் முகத்தை நோக்கி வேத மோதிய தருமாதிகாரி கூறுகின்றார். உலக நிலையைக் கனவு என்று உரைக்கும் வேதாந்தக் கருத்து அறிந்த கலைச் செல்வரே உம் வினாவுக்கு விடை வேறு ஒன்றும் இனி இல்லை. எம் அரசர் பிரான் திருவுள்ளத்தின் மேன்மையெல்லாம் நாளை நனவில் அடையும் அனுபவத்தால் அறிக. நான் உரைத்தல் நடிப்பாம்.

விளக்கவுரை :- உலக நிலை கனவு என்பது அத்வைத வேதாந்த அபிப்ராயம் ஆகும். அதனை அறிந்தவர் இக்கலைச்

செல்வர் வின + உரை—விஞவும் விடையும் ஆகிய பேச்சு. நனவு-விழித்த நிலையில் உள்ள அனுபவம். நடலை-உண்மையாகாத பொய்த் தோற்றம். வேதாந்தம் தெளிந்த ஞானச் செல்வர்க்கு உலக வாழ்க்கையில் உள்ள நிலைமைகளைப் பற்றி விளக்கி யுரைக்க வேண்டா என்ற கருத்தைத் தருமாதிகாரி உரைக்கிருர்.

" நுந்தைபுகழ் செவியார் வறிந்துள்ளேன்
நுங்குலத்தின் நோன்மை தேர்வேன்
எந்தைநுந்தையொரு சாலைமாணவராய்க்
காசிநகா இருந்தார் என்பேன்
சந்தைமறை முறையாலும் சாத்திரத்
தினெறியாலும் சதுராராய
தந்தைமகஞர் எமது தருமவரசினிற்
பதவி தாங்கல் நன்றே. 103

உரை :- உம் தந்தை கலைப்புகழை நான் என் காதாரக் கேட்டு அறிந்துள்ளேன். உம் குலத்தின் அறிவுவன்மையை நன்கு அறிவேன். என் தந்தை உம் தந்தையோடு காசியிலே ஒரு சாலை மாணவராய் இருந்து சாத்திரப் பயிற்சி பெற்ருர் என்று கூறுவேன். சந்தை கூறிப் பயின்ற வேதத்தாலும் சாத்திரப் பயிற்சியாலும் உம் தந்தை சதுரர் ஆவார். அத்தகைய தந்தையின் குமாரர் எம் தரும ராஜ்யத்தில் நீதிபதி பதவியை ஏற்றல் நன்று.

விளக்கவுரை :- தருமாதிகாரி தந்தையும் வேதமூர்த்தியும் காசியிலே சாத்திரப் பயிற்சி பெற்றவர்.

வருக திருவனந்தைக்கு நன்ஞளிற்
குடும்பமோடு மறைவல் லீரே
தருகவிடை யெனக் கெனவேதருமவதி
காரி புறஞ்சார்த உலாஞர்

முருகனென விளையாடும் இருகுமர
ருடன்மனைவி முகத்தே தோன்றும்
இருகண்விளை குறிப்புணர்ந்து பணியேற்க
அனந்தன்காடு எழுந்தா ரன்றே. 104

உரை :- பிராமண உத்தமரே திருவனந்தபுரத்திற்கு நல்ல நாளிலே குடும்பத்தோடு புறப்பட்டு வருக. எனக்கு இப்பொழுது விடை தருக என்று கூறித் தருமாதிகாரி புறப்பட்டார். முருகனைப் போல விளையாடும் இரு குமாரர்களோடு மனைவியார் முகத்தே தோன்றும் இரு கண்களிலும் விளையும் குறிப்பை உணர்ந்து நீதிபதி பணியை உரிய நாளில் ஏற்றுக்கொள்ளும் பொருட்டு அனந்தன் காட்டுக்குப் புறப்பட்டார்.

விளக்கவுரை :- தருமாதிகாரி இவரை நன்னாளில் வருமாறு அழைத்துவிட்டுப் புறப்பட்டுப் போனார். இவரும் தம் மனைவியார் மாறு கருத்து உரையாமை உணர்ந்து குடும்பத்தோடு திருவனந்தபுரத்துக்கு நன்னாளிற் புறப்பட்டார். முருகன் போல் விளையாடும் குழவியர் வால்மீகி இராம லக்ஷ்மணர்க்கு உவமையாக "குமாரௌ இவ பாவகீ" என்று பாடுகின்றார். அதனைப் பின்பற்றிய கருத்து இது. இங்கு இது தகுவது.

"திருவனந்த புரம்புகுந்து தேவேசன்
திருவடியிற் சென்னி சாத்தி
தருவனந்தம் வளர்நாட்டில் ஐந்தருவே
போலிருக்கும் தருமவேந்தைக்
கருவனந்தம் புகாதருளும் திருமாலே
யெனக்கண்ணுற் கண்டு போற்றி
வருவனந்தம் திருப்பணிக்கே யென
வுரைத்தார் மறையோதும் வாயினரே. 105

உரை :- திருவனந்தபுரத்திற் புகுந்து தேவதேவனான பதுமநாபன் திருவடியிலே தம் தலையை வைத்து மரங்கள் மிகுதி

யாக வளரும் சேர நாட்டிலே, தேவருலகத்து ஐந்து தருக்களைப் போலவே இருக்கும் தரும பூபதியை, எண்ணற்ற பிறப்புக்களில் மீண்டும் மீண்டும் புகாமல் அருள்புரியும் திருமாலே என்று கருதிக் கண்ணுற்கண்டு, தம் வணக்கம் தெரிவித்து, நும் திருப் பணியின் பொருட்டே சென்னை நீங்கி இங்கு வருகின்றேன் என்று வேதம் ஓதிய வாயுள்ள நீதிபதி உரைத்தார்.

விளக்கவுரை :- பதுமநாபன் திருப்பணிக்கு உரிமை பெறுதற்காக முதற்கண் அப்பெருமானை வணங்கினுர். சேர நாட்டில் மரங்கள் மிகவும் உண்டு. அரசன் இந்திர தருப்போலக் கொடை வள்ளல். திருமால் அரசனே.

"புரவலறும் நீதிபதி முகநோக்கி
மிகமகிழ்ந்து புகழ்ந்து வாழ்த்தி
இரவலரும் ஆதுலரும் இலாததிரு
நாட்டகத்தில் இறைவ னெம்மான்
பரவலரும் பணிபூணும் பேறுபெற்றீர்
நாயசபை பரித்து நந்நாடு
உரவலரும் திருநாடா விளங்கும்வணம்
இயன்றவள வுதவுவீரே" 106

உரை :- அரசர் பெருமானும் நீதிபதியின் முகத்தைப் பார்த்து மிகவும் மகிழ்ந்து புகழ்ந்து கொண்டாடி, இரந்து வாழ்ப வரும் வறியவரும் இல்லாத இத்திரு நாட்டில் எம்மை ஆளும் பதுமநாபனுக்கு உரிய, பரவுதற்கு அரியதான திருப்பணிபூணும் பேறு பெற்றீர். நியாய சபையின் தலைமை தாங்கி நம்நாடு வலிமை வளரும் திருநாடாக விளங்கும் வண்ணம் இயன்றளவு உதவி புரிவீராக.

விளக்கவுரை :- புரவலன்-சேரமன்னன். மக்கள் எல்லாம் தம்தம் முயற்சியாலும் கல்விச் சிறப்பாலும் வாழும் நாடு ஆதலால் அங்கு எவரும் இரப்பவர் ஆவதில்லை. ஏழைகளும் இல்லை

இறைவன்-தலைவன். பரவுதல்-புகழ்தல். இறைவன்பணி இத் தன்மை யுள்ளது என்று புகழ்தற்கு அரிது. புகழப் புகழ அதன் எல்லைக்கு மேற்சென்று நிற்பது. உரவு - வன்மை அறிவு, பெருமை முதலிய பொருள்கள் உள்ள சொல். அலர்தல்-வளருதல் நீதிபதியின் உதவியாலே நாடு சிறக்கவேண்டும் என்று அரசர் கூறுகின்றார்.

" நாயநிலை யரசெனவே நீதிபரி
பாவனத்தின் நயத்தைத் தேர்ந்தார்
தூயமன வுணர்வோடு புகலுவது
கேட்டிருப்பீர் சொல்லை வீறும்
மாயவனே யிந்நாட்டின் பேரரசன்
அவனடிமை மற்றி யானே
ஆயவனே நாயமிருப் பிடமெனவே
நன்குணர்வீர் ஐயன் மீரே " 107

உரை:- இந்நாட்டில் உள்ள நீதிபரிபாலனத்தின் நயத்தை ஆராய்ந்து அறிந்த பெருமக்கள் இவ்வரசு நியாயம் நிலைபெற்ற அரசு என்று தூய மனவுணர்ச்சியோடு சொல்வதைக் கேட்டிருப்பீர். சொல்லை மீறிச் செல்லும் பதுமநாபனே இந் நாட்டின் பேரரசன் ஆவான். நான் அவன் அடிமையே. அந்த இறைவன் நியாயத்துக்கு உறைவிடம் என்று நன்கு உணர்வீர் ஐயன்மீர்.

விளக்கவுரை :- திருவனந்தபுரத்துக்கு அனந்தனால் மகிமை. அவன் ஆட்சி அமைந்ததால் அந்நாட்டுக்கே பெருமை. அரசர் அவன் அடிமை. சேரநாடு நியாயம் நிலைத்த நாடாக இருக்க அவன் அருளே காரணம் ஆகும். உண்மையில் இந் நாட்டு அரசன் பதுமநாபன் அத்தகையவன். நாயத்துக்கு உறைவிடமாவான்.

" அவனருளா லெதுநாய மெனத்தோன்று
மதனையெமக் களிப்பீர் நீரே
பவனருளா லரியருளாற் பாலகரும்
பாமரரும் பண்பு சான்றே
சவனமெலா நாவார வுரைத்திறையைப்
பணிந்தேத்தும் தரும பூமி
பவனசுதன் போலவட மொழிபயின்றீர்
நாயத்தின் பதியாவீரே" 108

உரை :- அவன் அருளாலே எது நியாயம் என்று தோன்றுமோ அதனை எமக்கு நீர் தருவீராக. சிவன் அருளாலும் நாராயணன் அருளாலும் பாலகர்களும் பாமரர்களும் நற்குணம் சிறந்து நாவாரத் துதிகளைக் கூறி இறைவனைப் பணிந்து போற்றும் புண்ணிய பூமியில் வாயு குமாரன் போல ஆரியமொழி பயின்ற நீங்கள் நியாயத்தின் தலைவர் ஆவீர்கள்.

விளக்கவுரை :- நியாயத்தின் நுட்பத்தை இறைவனே தெரிவிக்க வேண்டும் என்பது திருவிளையாடலில் பழியஞ்சிய படலத்தால் நன்கு விளங்கும். பாமரர்-கல்வி இல்லாத மக்கள். பாலகர்-அறிவு நிரம்பாச் சிறுவர். சவனம்-துதி. தரும பூமி-நூற்றுக் கணக்கான ஊட்டுப் புரைகளாலே தருமத்தையே பரிபாலித்த பூமி. பவன சுதன்-வாயு குமாரன் அனுமன். ஆரிய மொழியில் அவன் எல்லையற்ற கல்வியுள்ளவன். சூரியன் முன் அபிமுகத்தோடு ஓடியே ஒன்பது வியாகரணமும் வேதாந்தமும் கற்றவன். நாயத்தின் பதி-நியாயாதிபதி.

தலைமைபெறு நீதிபதி யிங்காட்டி
லரசருக்குத் தரும நுண்மை
நிலைமையினை விரித்துரைக்கும் பொறுப்புடையார்
எனநுமக்கு நிகழ்த்தா நின்றேன்

மலையைநிகர் நூற்கல்வி சுமந்தாலும்
மனத்தூய்மை வாயா மாந்தர்
தலைமைநிலை பெறுதல்தகா தெனவுரைப்பன்
நீருமது தகுமென் பீரே. 109

உரை :- இந் நாட்டிலே தலைமை நீதிபதியாக இருப்பவர் அரசருக்குத் தருமத்தின் நுட்பமான நிலைமையை விரித்து உரைக்கும் பொறுப்பு உடையவர் ஆவர் என்று நான் உமக்கு உரைக்கின்றேன். மலைக்கு ஒப்பாக நூற் கல்விச் சுமையைச் சுமந்தாலும் மனத்தின் தூய்மை இல்லாத மனிதர் தலைமை நிலை பெறுவது தகாது என்று உரைப்பார். நீயிரும் அது தகும் என்றே கூறுவீர்.

விளக்கவுரை :- நியாயாதிபதியாக இருப்பவர் அரசர்க்கு எப்பொழுது ஐயம் நிகழுமோ அப்பொழுது தரும சூக்ஷ்மத்தை விளக்கும் அதிகாரம் பெற்றவர் என்று அரசரே கூறுகிறார். சாஸ்திர பாரவாகியாக இருந்து மனத் தூய்மை இல்லாதவர் நன்மக்களால் மதிக்கப்படார் என்ற உண்மையும் இங்கு வருகின்றது.

தெம்முருக்கி நாடுபெறு பழங்கால
மாறியது திசையின் வேந்து
நம்மிருக்கு முழங்குதிரு நாட்டினுக்குத்
தலைமைகொண்டான் நாமு மன்னேன்
கம்மிருக்கும் திசைநோக்கிக் கைகுவித்து
வாழ்கின்றேம் காலப் போக்கால்
சொம்மிருக்கு நிலையறியோம் பிறரறத்தில்
மிகப்பயின்று சொக்கி னேமே. 110

உரை :- பகைவரை அழித்து நாட்டைப் பெறும் பழங் காலக் கதை மாறிவிட்டது. மேற்றிசையிலிருந்து தன் நாட்டை அரசாளும் அரசர் நம் வேதம் முழங்கும் பாரத பூமிக்குத் தலைமை

பூண்டார் நாமும் அவர் தலை இருக்கும் திசை நோக்கிக் கை குவித்து வாழ்கின்றோம். காலப் போக்கால் நம் செல்வம் இருக்கும் நிலை அறியோம். அயன் மக்கள் தருமத்தில் மிகப் பழகி மயங்கினோம்.

விளக்கவுரை :- தெவ்+முருக்கி-பகையை அழித்து தெம் முருக்கி என்று சேரவேண்டும். பழங் காலத்தில் ஐம்பத்தாறு மன்னர் ஒருவரை ஒருவர் எதிர்த்து வென்று நாடு பற்றிய கதை இன்று இல்லை. மேல்நாட்டு ஆங்கில மன்னன் நமக்குத் தலை வன் ஆனான். அவன் முகம் சிலை ஒவியம் இருக்கும் திசை நோக்கி வணங்க வேண்டும். அரசரும் இவ்வணக்கத்துக்கு உட்பட்டவரே. பதுமநாமதாசன் ஆதலால் அயல் மன்னன் பாதம் வணங்குகிறேன் என்று கூறாமல் அவன் முகம் நோக்கி வணங்க வேண்டியிருக்கிறது என்று கூறுகிறார். கம்-தலை. சொம்-சொந்தமான செல்வம் பாரதீய தருமத்தை மறந்து விதேசிய தருமத்தில் விழுந்து மயங்குகின்றோம் என்று வருந்தி உரைக்கிறார்.

இணையாக வெதனையுமே யுரைப்பரிய
　　நம்மறநூல் எல்லாம் அந்தோ
துணையாக விருந்தபிற நூல்களோடு
　　கையாலும் தொடுவா ரின்றி
மணையாக வைத்தசிறு பலகையிலே
　　பூசைபெறும் வாய்ப்பே கொண்டு
பிணையாக வருபவரைப் பெருதழிந்து
　　போவதனைப் பேச லாமோ. 111

உரை :- எந் நூலையும் இணையாக உரைத்தற்கு அரிய நம் நாட்டு அற நூல்கள் எல்லாம் அவைகளுக்குத் துணையாக இருந்த பிற நூல்களோடு கையாலும் தொடுபவரே இல்லாமல் அவைகளுக்கு மணையாக வைத்த சிறு பலகையில் பூஜைபெறும்

பாக்யமே பெற்றுத் தமக்குப் பிணையாக நிற்க வருபவரைப் பெருதழிந்து போவதை நாம் வாயாலும் பேசலாமோ? ஐயோ!

விளக்கவுரை:- ஸ்மிருதிகள் பல என்பதைச் சமீப காலத்திலே ஸ்மிருதியை விளக்கப் புறப்பட்ட வைத்யநாத தீக்ஷிதர் தம் நூலில் நன்கு விளக்குகின்ருர். அத்தகைய மகத்வம் வாய்ந்த ஸ்மிருதிகளும் அவைபோன்ற நூல்களும் இன்று தேடுவார் அற்று மறையும் நிலையில் உள்ளன.

வடமொழியி லறிவுமிக்க மறைக்குலத்தார்
இந்நாட்டில் வளர்ந்தே யுள்ளார்
மடமொழியு மவருலக வாழ்க்கையினை
மதியாதே மறைத்து வாழ்வர்
குடமொழியின் மயக்கமது மயக்கத்தின்
மிகுவதென்று கூருநின்றேன்
திடமொழியும் வாதியர்க்கு நாயம்வழங்
குறுபணியைச் செல்வீர் நன்றே 112

உரை:- வடமொழியில் அறிவுமிக்க நம்பூதிரிப் பிராம்மணர் இந்நாட்டில் நன்கு வளர்ந்தே இருக்கின்ருர். அறியாமை ஒழிந்த அவர்கள் உலக வாழ்க்கையின் ஆடம்பரத்தை மதியாது அடங்கி ஒடுங்கி மறைந்து தம் இல்லங்களில் வாழ்வார்கள். மேல்நாட்டு ஆங்கில மொழியில் உள்ள மோகம் மதுபானத்தில் உள்ள மயக்கத்தைக் காட்டிலும் அதிகமாய் இருக்கிறது என்று நான் கூறுவேன். இத்தகைய காலத்தில் வலிமை கெட்ட வாதி பிரதிவாதிகளுக்கு நியாயம் வழங்கும் திருப்பணியை நீர் நன்கு புரிவீராக.

விளக்கவுரை:- ஆரிய மொழியிலே சிறந்த புலமைபெற்ற அரசர் அம்மொழிப் புலமை மிக்க குலத்திற் பிறந்த நீதிபதியை நோக்கித் தம் கருத்துக்களை மனவுணர்ச்சி தோன்றத் தெளிவாக

உரைக்கிருர். வடமொழி-ஸம்ஸ்கிருதம். குடமொழி-ஆங்கிலம்- குடக்கு-மேற்கு. மேல்நாட்டிலிருந்து வந்த மொழியாதலாற் குடமொழியாம்.

'பொன்ஞழி தருகின்றேன் பொறுப்பேற்கும்
குறிப்பாகப் பொறுப்பீ ரைய
தன்ஞழி சங்கமொடு தன்னடியார்
குலங்காக்கும் தலைவன் மாயன்
முன்ஞழ மிகவலைகள் கொழிக்கின்ற
குடவாழி முழங்கு நாட்டில்
உன்ஞழ வுணர்வுடையீர் உம்பொறுப்பை
இன்றுமுத லுறுக வென்றே" 113

உரை :- நீங்கள் நீதிபதிப் பொறுப்பேற்கும் குறிப்பாக இந்தப் பொற் கணையாழியைத் தருகின்றேன். ஐய இதைப் பெற்றுக் கொள்க. தன் சக்கர சங்கத்தோடு தன் அடியார் குலத்தைக் காக்கும் தலைவஞன பதுமநாபன் முன்னே ஆழம் மிக அலைகள் கொழிக்கின்ற மேற்குக் கடல் முழங்கும் நாட்டில் நினைக்கும் ஆழ வுணர்வுடைய பெரியீர் உமது பொறுப்பை இன்றுமுதல் அடைவீராக.

விளக்கவுரை:- நீதிபதி உத்யோகத்தை ஏற்பதற்கு அறி குறியாக அரசர் பெருமான் ஒரு கல் பதித்த மோதிரம் கொடுத் தார். ஆழி-சக்கரம். ஆழி-மோதிரம். திருவனந்தபுரத்தில் கரையோரம் ஆழம் மிக இருக்கும் கடல் உண்டு. ஆழஉணர்வு- எப்பொருளையும் நன்கு ஆய்ந்து உணரும் ஆழமான உணர்வு.

" மன்னுரைத்த திருமொழியைச் செவியேற்ற
மறைவலவர் வணக்கம் தோன்ற
என்னுரைத்தல் புரிவேன்யான் எம்பெருமான்
திருவனந்த னிறைமை பூண்ட

பொன்னுரைத்த திருநகரிற் பொன்னின்மிக்க
புலவர்மிகும் பூமி தன்னில்
கொன்னுரைத்த மறைமுடியின் பொருளறிவார்
குலம்பிறந்தேன் குடியா னேனே" 114

உரை :- அரசர் கூறிய நன்மொழியைச் செவியேற்ற வேதியர் வணக்கம் தோன்ற நான் என்ன சொல்வேன். எம் பெருமான் அனந்தபதுமநாபன் தலைமை பூண்ட பொன் விளங் கும் அழகிய நகரத்தில் வியாழ தேவனைக் காட்டிலும் மிக்க அறிவுள்ள புலவர்கள் மிக்க நாட்டில் அபூர்வப் பொருளை உரைத்த வேதாந்த சாத்திரத்தின் பொருளை யறிந்த பெரியோர் குலத்திற் பிறந்தேன் குடியானேன்.

விளக்கவுரை:- மன்-கேரள வேந்தர். மறைவலவர்-வேத சாஸ்திர அனுபவம் உள்ள நீதிபதி. திருவாநந்தன் - திருமகள் உறையும் மார்புடைய அனந்தனான நாராயணன். பொன் உரைத்த நகர்-எத்தகையவர் பெருமையும் ஆராய்ந்து பார்த்து அவர்க்குத் தக்க மதிப்புக் கொடுக்கும் நகரம். பொன்னை உரைத்துப் பார்த்தல் போல அவரவர் பெருமையை ஆய்ந்தறி தல். பொன்-வியாழன் கொன்-வாக்கு மனங்களுக்கு எட்டாத அபூர்வமான பொருள். மறைமுடி-வேதாந்த சாஸ்திரம். இவர் குல முன்னோர் எல்லாரும் வேத வேதாந்த விற்பன்னராய் இருந் தார்.

" எனவுரைத்துத் தமக்கமைந்த திருமனையில்
மனைவிமகார் இருக்கக் கண்டு
முனமுரைத்த நெறிப்படியே நீதிமன்றம்
புகுந்ததன்கண் முதன்மை பெற்றார்
மனமுரைத்த கருத்தினையே வாக்காலும்
உரைத்ததனை வாழும் செல்வர்
தனமுரைத்த பெருமையினை மதியாதே
நாயபதி தாமா னாரே" 115

உரை :- என்று கூறித் தமக்கெனக் கொடுக்கப்பெற்ற மாளிகையில் மனைவியும் மக்களும் இருப்பதைப் பார்த்து முன்பு உரைத்த வழிபற்றி நீதிமன்றம் புகுந்து அதில் முதன்மை நிலை பெற்றுக்கொண்டார். தம் மனம் உரைத்த கருத்தையே வாக்கால் உரைத்து அக் கருத்தின்படியே வாழும் செல்வரான அவர் செல்வம் சொல்லும் பெருமைகளை மதியாமல் தாம் நியாயாதிபதி ஆனார்.

விளக்கவுரை :- நியாயாதிபதி வாழும் மாளிகை அரசினர் தருவது. அரசர் கூற விரும்பிய கருத்துக்களைக் கேட்டுக் கொண்டு நீதிபதி பதவியை ஏற்றுக்கொண்டார். மனம் வாக்கு செயல் என்ற மூன்றும் ஒன்றாய் இருப்பவர் மகாத்மா என்ற பட்டம் பெறுவர். சென்னை வருவாயிற் குறைந்தது இப்பதவிக் குரியது.

" வழக்குமுறை நுனித்துணர்ந்து வாதிபிரதி
வாதியரின் வழக்குக் கேட்டு
கிழக்குமுறை யறநூலும் குடக்குமுறை
யறநூலும் கிளந்த வண்ணம்
உழக்குமுறை மன்றுடு நாவீறர்
உரைக்குமொழி யுளத்தே கொண்டு
தழக்குமுறை முரசுடைய தராபதியின்
மனமகிழத் தகுவ செய்தார் " 116

உரை :- சேரநாட்டு வழக்கு முறைகளை நுட்பமாக ஆய்ந்து உணர்ந்து வாதி பிரதிவாதிகளின் வழக்கைக் கேட்டு கீழ்நாட்டு முறை கூறும் தரும சாஸ்திரமும் மேல்நாட்டு நீதி நூலும் உரைத்த வண்ணம் சபையைக் கலக்கும்படி மன்றுடும் நாவல்லார் சொல்லும் வாதங்களை மனத்தே கொண்டு முழங்குகிற நியாய முரசம் உள்ள அரசர் மனம் மகிழத்தக்க தீர்ப்புகளை உரைத்தார்.

விளக்கவுரை :- வழக்கு முறை, உலக வழக்கு, நூல் வழக்கு, நாட்டு வழக்கு குலமுறை வழக்கு என்ற நான்கையும் ஆராய்ந்து செய்யும் முறை. சேரநாட்டுச் சம்பிரதாய முறை தெரியாதிருப்பின் நீதிபதி பதவியில் இருந்து அந்நாட்டு மக்கள் ஏற்கத்தக்க முறை செய்ய இயலாது. மன்ருடும் நாவீறர்-வழக்கையே மனம்போலப் புரட்டத் தக்க நாவன்மை உள்ளவர். முறை முரசு-நீதி வழங்குவதற்கு முழங்கும் முரசு. அறமுரசு, மணமுரசு, போர் முரசு போல இதுவும் அரசர் அகங்களில் இருக்கும்.

" வருவாயிற் குறையிருந்தும் சுதந்திரத்தை
யிழந்துநின்றும் மன்னர் நெஞ்சத்
துருவாய கருத்தறிந்தே வாழ்தனலம்
எனப்பலரும் உரைக்கக் கேட்டும்
கருவாய காலமுதல் மரபுமுறை
பயின்றவறக் கருத்தின் போக்கே
திருவாய போக்கெனவே துணிந்துசென்ருர்
அறந்தெளிந்த சிந்தை யாரே " 117

உரை :- செல்வ வருவாயிலே குறைவுவந்தும் சுதந்திரத்தையே இழக்க நேர்ந்தும் மன்னர் மனத்திலே தோன்றும் கருத்தைத் தெரிந்து அதற்கேற்பவே வாழ்வது நல்லது என்று பலர் கூறக் கேட்டும் பிறந்த நாள் முதலாகப் பரம்பராக் கிரமத்தில் அறிந்து கொண்ட தரும நூற்கருத்தின் போக்கே சிறந்த போக்கு என்று துணிந்து சென்ருர். அறந்தெளிந்த மனத்தவர்.

விளக்கவுரை :- அறந்தெளிந்த சிந்தையார் துணிந்து சென்ருர் என்று முடிக்க வேண்டும். அவர்க்கு மூன்று வகையான தடைகள் இருந்தும் பொறுப்பை நன்கு நிறைவேற்றினுர். சுதந்திரம் இழத்தல், வருவாய் குறைதல், அரசர் கருத்து

அறிந்து வாழ்தல் என்ற குறைகளைப் பொருட்படுத்தாது அறப் போக்கில் நடந்தார்.

“ ஆருண்டு நீதிபதி நிலைமையிலே
சிறப்புற்றே அறத்தைக் காத்தார்
நூருண்டு வாழ்ந்தவரு மறிவரிய
நாட்டுநிலை நுனித்துத் தேர்ந்தார்
பேருண்டு மனமயங்காப் பெருமையினர்
பலபதியும் பெருமான் கோயில்
வேருண்டு மொருமையிலே விளங்குவதை
யுணர்ந்துருகி விம்மி னாரே ” 118

உரை :- ஆறு வருட காலம் நீதிபதி பதவியிலே சிறப்பாக அமர்ந்து அறத்தைக் காத்தார். நூறு வருடம் இந்நாட்டில் வாழ்ந்தவர்களும் அறிதற்கு அருமையான நாட்டு நிலைமையை நுட்பமாகத் தேர்ந்தார். தமக்கு வாய்த்த பாக்கியங்களை நன்கு அனுபவித்து அதனால் மனம் மயங்காத பெருமையுள்ளவர் ஆகிய நீதிபதி பல க்ஷேத்திரங்களிலும் இறைவன் வேறு வேறு கோலம் கொண்டிருந்தும் ஒருமையில் விளங்குவதை உணர்ந்து மனம் உருகி விம்மினார்.

விளக்கவுரை:- இவர் மலையாளத்தில் பிரதம நீதிபதியாக ஆறு வருஷ காலம் இருந்தார். அந்த ஆறு வருஷ காலத்துக்குள் நாட்டு மக்கள் சம்பிரதாயம் எல்லாம் நன்கு உணர்ந்து அதற்கு ஏற்ப நீதி வழங்கினர். செல்வம் பதவி முதலிய பேறுகளால் மனம் மயங்காத பெருமை இவர்க்கு உண்டு உருவம் வேருக இருந்தும் பொருள் ஒன்றே என்று தெய்வத் தன்மையைச் சமரச பாவதத்தாலே நன்கு அறிந்திருந்தார்.

“ தாய்மொழிபோற் றமிழினிலும் மலையாளங்
கன்னடத்தும் தலைமை பூண்டார்
வாய்மொழியாற் கருத்துரையாப் பதவியிலே
யிருந்ததனல் மக்கள் யாரும்

ஙோய்மொழியாற் பழிமொழியால் தமைப்பற்றி
யொன்றேனும் நுவலா வாறு
சாய்மொழியாற் புகலாது நிமிர்மொழியால்
தீர்ப்பையெலாம் சாற்றி னுரே" 119

உரை:- தாய்மொழியான தெலுங்கிலே புலமை பெற்றிருப்பது போலவே தமிழ் மொழியிலும் மலேயாள மொழியிலும் கன்னட மொழியிலும் தலைமை பூண்டார். வாய் மொழியாலே தம் கருத்துரைக்க வேண்டாத நீதிபதி பதவியிலே இருந்ததனுல் வழக்காட வரும் மக்கள் எல்லாரும் வருத்தங் கூறும் மொழியாலும், பழிமொழியாலும் தமைப்பற்றி ஒன்றுமே சொல்லாதிருக்கும்படி ஒரு பக்கம் சாயும் (பாரபக்ஷ) மொழியால் கூருது இருதிற வாதியர்க்கும் பொதுவாக நிமிர்ந்து நிற்கும் நேர்மொழியாலே தீர்ப்பை யெல்லாம் சொன்னுர்.

விளக்கவுரை :- இவர் பன்மொழிப் புலவர். நீதிபதி கருத்தை எழுத்தால் உரைப்பதே முறை. வாய்மொழியைப் பயன்படுத்த அவர்க்கு இடமே இராது. சாய்மொழி-ஒருபக்கம் சாயும் மொழி–மன்றேரம் சொன்ன வாக்கு.

" புலமையிலே சிறந்துவட மொழியாலும்
தெலுங்காலும் புதுமை நூல்கள்
சிலசிலவே யியற்றியுல காளுமன்னன்
தலையசைக்கச் செப்ப லானுர்
குலநலமும் கலைநலமும் கொள்ளுமிவர்
சிறப்புணர்ந்த கோமான் ருனும்
நிலவுலகம் அவையறிய வெளியிடுநல்
லுதவியினை நிகழ்த்தி னுனே" 120

உரை :- புலமையில் தலை சிறந்து ஆரிய மொழியாலும் தெலுங்காலும் சில சில புது நூல்களை இயற்றி உலகாளும் மன்னன் தலையசைக்க அந்நூற் கருத்துக்களை வெளியிட்டார்.

குலத்தின் சிறப்பும் கல்விச் சிறப்பும் கொண்ட இவர் பெருமை யுணர்ந்த திருவாங்கூர் மன்னன் நிலவுலகம் அவற்றை யறியும் படி வெளியிடும் பேருதவியைச் செய்தான்.

விளக்கவுரை :- இப் பெரியார் நான்கு மொழிகளில் நூல் இயற்றத் தகுதியுடையவராய் இருந்தார். மலையாளத்திலும் நன்கு விவகரிக்கும் அறிவு படைத்திருந்தார். தம் பதவிக்குரிய கடமைகளை முறைப்படி இயற்றி வந்ததால் ஒய்வு ஒழிவு அதிகம் பெற இயலாதிருந்தார். ஆயினும் கற்றும் கேட்டும், உள்ளத்திலே சேர்த்த அரும்பொருள்களை வடமொழி தெலுங்கு, கன்னடம் என்ற மூன்று மொழிகளாலும் எழுதி வைத்தார். சில நூல்கள் அந்நாளில் இருந்த மன்னன் உதவியால் வெளிவந்தன. பின்னாளிலும் சில நூல்கள் செய்தார். அவை யெல்லாம் இன்று மறைந்து விட்டன. ஒன்று இரண்டு வெளியாகியிருக்கின்றன.

“ நிலங்கருதிப் பொருள்கருதி நேரும்வழக்
கெலாமுறையி னெறியே கேட்டு
நலங்கருதிக் கருத்தாய்ந்து வாதியரா
மிருவருக்கும் நாயம் சொல்வார்
குலங்கருதிக் குடிகருதிக் கோயில்வளர்
பணிகருதிக் குறைவிலாத
வலங்கருதிப் புகும்வழக்கும் வழங்குமுறைக்
கமைமுடிபு வழங்கி னாரே ” 121

உரை:- நிலத்தின் பொருட்டும் கொடுத்து வாங்கிய செல்வத்தின் பொருட்டும் நேர்ந்த வழக்குகளை யெல்லாம் நெறி முறைப்படியே கேட்டு நன்மையே கருதி அவற்றின் கருத்தை ஆராய்ந்து வாதி பிரதிவாதிகளான இருவருக்கும் நியாயமான தீர்ப்புரைப்பார். குலங்களைப் பற்றியும் குடிமுறை பற்றியும் கோயிற் திருப்பணியைப் பற்றியும் குறைவற்ற வலிமை காரண

மாகவும் புகுகின்ற வழக்குகளையும் நாட்டில் வழங்கும் முறைக்கு ஏற்றவாறு தீர்ப்புக் கூறி முடிவு செய்தார்.

விளக்கவுரை :- வழக்குகள் எத்தனையோ வகைப்படும். முன்னோர் அவற்றைக் கடன் கொள்ளுதல் முதலிய பதினெட்டு வகைக்குள் அடக்குவர் இந்நாளில் புதுப் புது வழக்குகள் எல்லாம் தோன்றுகின்றன.

" பொதுப்பொருளைத் தமதுகுலப் பொருளாக்கும்
புண்ணியரும் பொதுமை யின்றி
மதிப்புறவே யொருகுலத்தே யொருவாது
நெடுநாளாய் வந்தவொன்றைப்
பொதுப்பொருளே யெனத்துணிந்து புகலவரும்
திறத்தினரும் புகுந்து பேசும்
விதுப்புறுவாய் மொழிகேட்டு மனுமுதல
நூன்முறையே விதிப்பா ரன்றே " 122

உரை :- பல குலத்தார்க்கும் குடியினர்க்கும் வகுப்பினர்க்கும் பொதுவாக இருந்த ஒரு பொருளைத் தம் குலத்துக்கே உரிய பொருளாக்கிக்கொள்ள வழி செய்யும் புண்ணியர்களும், பல வகையார்க்கும் பொதுவாகாமல் நெடுங்காலமாக உலகம் மதிக்க ஒரு குலத்தை நீங்காது வந்த ஒரு செல்வத்தை இது பொதுப் பொருளே என்று துணிந்து வழக்காட வரும் திறமையுள்ளவரும் நீதி மன்றத்திற் புகுந்து பேசும் மரு' சி விளக்கும் வாய்மொழி களைக் கேட்டு மனுதரும சாத்திரம் முதலிய நூல்களின் வழிபற்றி அவ் வழக்குகளில் தீர்ப்புக்களை உரைப்பார்.

விளக்கவுரை :- ஊர்ப்புறத்தே ஆடு மாடுகள் மேய்வதற் காகவே சில நிலங்கள் பொதுவாக ஒதுக்கப்பட்டிருக்கும் அவற்றை அருகில் உள்ளவர் தம் நிலத்தோடு சேர்த்துக்கொள்வர்

ஒரு குடும்பத்தில் தக்க அதிகாரி இல்லை என்று துணிந்து அவர்க்கே நெடுங்காலம் உரியதாய். இருந்த நிலத்தைக் கர்ணம் முதலிய அதிகாரிகள் ஊர்க்குப் பொது என்று கணக்கில் எழுதி விடுவதும் உண்டு.

குற்றவழக் காராய்ந்து குற்றமுளார்
  தமையொறுத்தல் குற்ற மில்லார்க்
குற்றகுண நன்குணர்ந்து தக்கவணம்
  தீர்ப்புரைத்தல் உறுதி யென்றே
உற்றவுயர் நீதிபதி தமக்குமுன்னே
  கொலைக்குற்றம் உரைக்கப் பட்ட
நற்றகைசால் ஒருவனது வழக்குவந்த
  வரலாற்றை நவிற லாமே. 123

உரை:- குற்ற வழக்குகளை ஆராய்ந்து குற்றம் உள்ளவர்களை முறையே தண்டனைக்கு ஆளாக்குவதும் குற்றம் இல்லாதவர்களுக்கு உள்ள இயல்புகளை நன்கு ஆராய்ந்து அவர்க்குத்தக்கவாறு தீர்ப்புக்கள் உரைப்பதும் உறுதி என்று நீதி செலுத்திவந்த இந்த நீதிபதி முன்பு கொலைக் குற்றம் உரைத்து நிறுத்தப்பட்ட நற்குணம் உள்ள ஒருவன் வழக்கு வந்த வரலாற்றை இனி உரைப்பாம்.

விளக்கவுரை:- குற்ற வழக்குகள் கொலை, கொள்ளை, தீயிடுதல், புண்படுத்தல், பழிசாற்றுதல், கற்பழித்தல் முதலிய பலவகைப்படும். குற்றம் சாட்டி நிறுத்தப்பட்ட எல்லாரும் குற்றம் உள்ளவரே என்று துணிவது நீதி முறையாகாது. குற்றமில்லாதவரை அறிந்து விடுவிப்பது எளிய பொறுப்பன்று கொலை வழக்கு வருகிறது.

ஒறுப்பதற்கு மனமிலராய் உலகவுயிர்க்
  கிரங்குமனத் தொருமை யாளர்
வெறுப்பறவே வழக்கனைத்தும் நீதிமுறை
  செவியேற்ற விபுதர் வேந்து

நிறுப்பதற்கே யமைதுலைநா நின்றதுபோல்
ஏழுதினம் நிலைத்துநின்றே
கறுப்பதற்கே நெறியறியார் நீதிபதி
யிருக்கைநின்று கலங் கினுரே. 124

உரை.- அவனைத் தண்டிக்க மனம் இல்லாதவராய் உலகத்தின் உயிர்களுக்கெல்லாம் இரங்கும் மனத்தின் ஒருமை உள்ளவர் வெறுப்பின்றி வழக்கு முழுவதும் நீதி முறைப்படியே செவியேற்ற புலவர் பெருமான் நிறுப்பதற்காக அமைந்த துலாக் கோலின் நாக்குமேல் நிமிர்ந்து நின்றதுபோல ஏழு நாட்கள் வழக்கின் இரு திறக்கட்சி வாதங்களையும் கேட்டு நிலைத்து நின்று அவனைக் கோபிக்கும் வழியறியாது நீதிபதியின் இருக்கையில் இருந்தவாறு கலங்கினுர்.

விளக்கவுரை :- குற்றம் உரைப்பார் பக்கத்துச் சான்றுகள் விசாரித்து முடிந்த பின்பு குற்றவாளியாக நிறுத்தப்பட்டவன் தன் கட்சிக்கு விளக்கம் தர அழைத்த சான்றுகளையும் கேட்டு இரு திறத்து மன்ருடிகளும் பேசக் கருதிய சட்ட நுணுக்கம் வாதப் பிரதி வாதம் எல்லாம் கேட்ட பிறகும் நீதிபதியின் மனம் அவன் கொலைக் குற்றம் செய்திருப்பான் என்று துணியாததாலே தம் இருக்கையிலே இருந்தவாறு அவர் மனம் கலங்கி இன்னது செய்வது என்று அறியாதிருந்தார்.

“ மன்ருடு நாவிறர் வாக்கின்வரு
மொழிநுட்பம் மதித்துத் தேர்வார்
நன்ருய மெய்ந்நெறியே தீர்ப்புரைக்க
விழைவுபெறு நன்னெஞ் சுள்ளார்
கொன்ருலு மொருவனையாம் கொலைபுரிதல்
தகாதென்னும் கொள்கை யாளர்
நின்ருலு மனத்தினெடு கொலைவழக்கின்
நெடும்பொழுது நிலைபெற் ருரே ” 125

உரை :- மன்றத்தில் வழக்கை விளக்கி வாதம் புரியும் நாவன்மை மிக்க மன்ருடிகளின் வாக்கில் வரும் சொல்லின் நுட்பம் எல்லாம் மதித்துத் தெளிந்தார். நன்ருன உண்மை வழியில் தீர்ப்புரைக்க விரும்பும் நன்மனம் உள்ளவர் ஆதலாலும், கொன்ருலும் ஒருவனை நாம் கொலை புரிதல் தகாது என்ற கொள்கையுள்ளவர் ஆதலாலும் நின்று அசையும் மனத்தோடு கொலை வழக்கில் நேரம் போவது தெரியாது மவுனமாக இருந்தார்.

விளக்கவுரை :- நாவீறர் - நாவின் வன்மை சிறந்தவர். நியாயம் ஒரு பக்கம் இருக்கத் தம் நாவன்மையால் தம் கட்சிக்கு வெற்றி வரவழைக்க வல்லவர். ஒருவன் கொலையே செய்து குற்றவாளியாலுைம் அவனைக் கொல்லலாகாது என்பது கருத்து.

வருவழக்கிற் குற்றமிழைத் தொறுப்புண்ண
　வருவானை மனத்தால் நோக்கிப்
பெருவழக்கிற் ருகுமையம் எனுநன்மை
　யவன்பெருப் பீழை தேர்ந்தார்
தருவழக்கிற் றகவுரைத்த வரசியலார்
　மன்ருடீ தஞ்சொல் லானே
திருவிழக்கக் கொலைப்படுத்தல் முறையன்ரும்
　எனமனத்தே சிந்தித் தாரே" 126

உரை :- தமக்கு முன் வந்த கொலை வழக்கிலே குற்றம் செய்தவனுகத் தண்டனைக்கு வந்து நின்றவனை மனத்தாற் கூர்ந்து நோக்கி உலகத்திற் பெருவாரியாக வழங்கும் ஐயம் என்ற பெருத்த நன்மையை அவன் பெருத துயரக் கதையும் தெரிந்து கொண்டார். அவ் வழக்கிலே தம் கட்சியைத் தக்கபடி எடுத்துரைத்த அரசியலார் நியாயவாதி கூறிய வாதத்தின் வண்ணமே அவன் தன் வாழ்வெல்லாம் இழக்கக் கொலைப்படுதல் முறையன்று என்று மனத்திற் சிந்தித்து உருகினுர்.

விளக்கவுரை :- குற்ற வழக்கு. குற்றம் சாட்டப்பட்டவனை, குற்றக் கூண்டிலே நிறுத்தி இருதிற வாதமும் கேட்க இடம் தருவது. அவன் பக்கத்துக்கு நாவன்மை மிக்க மன்றுடி அமையவில்லை யென்றால் அவன் தண்டனைக்கு ஆளாவது உறுதியே. அவன் குற்றமற்றவன் என்று நீதிபதியின் மனம் உரைத்தது. சந்தர்ப்ப சாக்ஷியம் அவனுக்கு எதிராக இருந்தது. ஐயம் என்ற நன்மை அவனுக்கு அமையவில்லை. இவன் தானா, வேறு ஒருவனா, இவன் அங்கு இருந்தானா இல்லையா முதலிய ஐயங்களை எழுப்பி இவனுக்கு உதவலாம். அது இல்லை.

குற்றமிழைத் தொறுப்புண்ணும் குழுவினரைச்
சிறையிடலும் கொலையே செய்து
முற்றவிழைத் தொழிப்பதுவு நன்றன்றென்
றெண்ணுமன முறைமை யாளர்
பற்றறவே கொலைவழக்கிற் புகுந்தவிரு
திறப்புலவர் பகர்ச்சி கேட்டு
வற்றல்மர நோக்குநர்போல் மனமயங்கி
யிரண்டொருநாள் மறுகினாரே. 127

உரை :- குற்றம் செய்ததால் தண்டனைக்குத் தக்கவராய் இருக்கும் கூட்டத்தாரைச் சிறை செய்வதும் கொலைத் தண்டமே விதித்து அவர் வாழ்வு முடியச் செய்து ஒழிப்பதும் நன்று அன்று என்று எண்ணும் மனக் கருத்துள்ளவர். ஒரு பக்கமும் பற்றின்றி அக் கொலை வழக்கில் வந்த இரு திறத்து மன்றுடிகளின் வாதப் பிரதி வாதங்களைக் கேட்டு வற்றிய (பலனற்ற) மரத்தைப் பார்ப்பவர் போல மனம் அடங்கி இரண்டொரு நாள் மனம் வருந்தினார்.

விளக்கவுரை :- குற்றமிழைத்தவரைச் சிறை செய்து வருத்துவதால் அவர் திருத்துவதில்லை. பெருங்குற்ற மனத்தார் ஆகின்றார் என்று கருதுவார் உளர். கொலைக் குற்றத்திற்குக் கொலைத் தண்டம் தக்கதன்று என்று கூறுவார் உலகத்தே சான்றோர் பலர்.

தீர்ப்பெழுத மனம்நடுங்கிச் சிந்தனையி
லாழ்புலமைச் செல்வர் தாமே
பார்ப்பரவன் முகத்தினையே பயின்றவற
நூற்கருத்தும் பரவிப் பார்ப்பர்
ஓர்ப்பரிரு திறத்தினிலும் உரைவல்லார்
மன்ருடும் ஒண்மை யாவும்
வேர்ப்பருடல் மனங்குமுற விழிப்பரொரு
முழுத்தமவர் வியந்த வாறே. 128

உரை :- கொலை வழக்கின் தீர்ப்பை எழுத மனம் நடுங்கிச் சிந்தனையிலாழ்ந்த பெரும் புலமைச் செல்வர் தாமே அவன் முகத்தை மனத்தில் நிறுத்திப் பார்ப்பர். நெடுங்காலமாகப் பயின்றறிந்த தரும சாஸ்திரக் கருத்துகளையும் ஆராய்ந்து பார்ப்பர் இரு திறத்திலும் நாவன்மைமிக்க மன்ருடிகள் உரைத்த நுண்ணிய கருத்துகளையெல்லாம் அலசிப் பார்ப்பர். மனம் குமுறியதால் உடம்பு எங்கும் வேர்வைத துளி தோன்ற இருப்பர். இஃது என்னே என்று வியந்தவாறு ஒரு முகூர்த்த காலம் விழித்திருப்பார்.

விளக்கவுரை :- நீதிபதி பெரும்புலமைச் சிறப்புள்ளவர். ஆழ்ந்தகன்ற அறிவின் செல்வர். நூற்கருத்தை நுனித்தறிந்ததே யன்றித் தம் மனப் போக்காலும் ஒரு பொருளைப் பற்றி ஆராய்ந்து தக்க முடிவு காணும் திறம் உள்ளவர். இத்தகைய பெரியார் இவ் வழக்கிலே முடிவு கூற அறியாது திகைத்தது வியப்பேயில்லை. சந்தர்ப்ப சாக்ஷியம் அவனைக் கொல்லத் தூண்டுகிறது. நீதிபதி மனச் சான்று அவனை வாழ்விக்க நினைக்கிறது. தரும சங்கடம் என்பது இத்தகைய நிலையே.

ஒருயிரை வாழ்விக்க உதவுகிலாப்
பதவிமிசை யுறுத லானேன்
ஆருயிரை யோம்புவதே கருத்தாக
அளியேனிங் கமர்த லாமோ

பேருயிரை யுணர்த்தவல பெரியாரைக்
கழல்பிடிக்கப் பெறுவே னுயின்
நீருயிரு நிலத்துயிரு நேயவுரு
வெனத்தெளியு நிலைகாண் பேனே. 129

உரை :- ஒரு மனிதன் உயிரை வாழவைக்க உதவாத நீதிபதி பதவியில் இந் நாள் வரை இருந்தேன். என் அரிய உயிரைக் காப்பதே கருத்து என்று கொண்டு நான் இங்கு இருக்கலாமோ! பரமாத்மா இது என்று உணர்த்த வல்ல ஞான குருவை வணங்கப் பெறுவேனுயின் நீரில் வாழும் உயிரும், நிலத்தில் வாழும் உயிரும் அன்புருவமே என்று தெளிந்துணரும் ஞான நிலையைக் காண்பேன்.

விளக்கவுரை :- குற்றக் கூண்டில் நிற்கும் மனிதன் குற்றமற்றவன் என்று தம் மனம் அறிந்தும் அவனைச் சுதந்திர மாகப் போக விடுதற்குச் சட்டம் இடம் தராததால் நீதிபதியின் மனம் இங்ஙனம் வருந்துகின்றது. நீரில் வாழ் உயிர் நிலத்தில் வாழ், உயிர், வானில் வாழ் உயிர் என்ற எவ்வகை உயிரும் ஒன்றே என்று உணர்வது ஞானம்.

பராசரரே முதலாய பழுத்ததவ
முனியரசர் பகர்ந்த நூல்கள்
சராசரமே லன்பறவோ தண்டநெறி
தனைவிரித்துச் சாற்று மாலோ
கராசலமே முதலைபற்றக் கதறியபோ
தெழுந்தருளும் கருணை மூர்த்தி
வராசரண வடியேற்கு வழிகாட்ட
உருவெடுத்து வரமாட் டாயோ. 130

உரை :- பராசரர் முதலிய பழுத்த தவச்செல்வரான முனிவேந்தர் இயற்றிய தரும சாஸ்திரங்கள் இயங்குவன நிலைப்

பன என்ற இரு வகை உயிரிடத்தும் அன்பு இல்லாமலோ தண்ட நீதியை விரித்து உரைத்தன ? கஜேந்திரன் தன் காலை முதலை பற்றி இழுக்க வலி இழந்து கதறிய போது எழுந்தருளிய கருணை மூர்த்தியான திருமாலே, உயர்ந்த தருமத்தை உடையாய் அடியேனுக்கு வழி காட்ட உருவெடுத்து வரமாட்டாயோ ?

விளக்கவுரை :- பராசரர், மனு, யாக்ஞவல்க்யர், சங்கர் லிகிதர் முதலிய முனிவரர் தரும சாஸ்திரம் இயற்றினர். சரம், அசரம்-உயிர் வகை அசையும் உயிரும் அசையாத தாவர உயிர் களும். தண்டநீதி கூறும் சாஸ்திரங்கள் ஜீவகாருண்யம் இல்லாதவையா என்ற ஐயம் இவர் மனத்தில் எழுந்தது. கர + அசலம். கையுள்ளமலை. யானை கஜேந்திரனைக் காத்தருள எழுந்தருளிய கருணைமூர்த்தி நாராயணனே. வர + ஆசரணன் - உயர்ந்த ஆசாரம் உள்ளவன் வரா - உயர்ந்தவனே. சரண— உயிர்களுக்குச் சரணமாய் இருப்பவனே என்றும் உரை கூற லாம்.

பதுமமலர் உந்தியினுய் பதுமையம
 ருரமுடையாய் பதும பாத
பதுமநிகர் முகமலராய் பதுமமெனும்
 திருக்கரத்தாய் பதும மூர்த்தி
பதுமபவன் திருத்தந்தாய் பதுமசங்க
 மளித்தருளும் பதுமை கேள்வ
பதுமசத கோடிபுகு பதுமமய
 மேனியினுய் பரிப்பாய் நீயே. 131

உரை :- தாமரைப் பூ மலரும் திருவுந்தி உடையாய், கமல மலரில் இருக்கும் திருமகள் கோயில்கொண்ட திருமார்புடை யாய், தாமரை மலர் போன்ற பாதங்கள் உடையாய், தாமரை மலர்க்கு ஒப்பான முகமலர் உடையாய், தாமரை என்று கூறத் தக்க திருக்கரம் உடையாய், தாமரையில் வாழும் மூர்த்தியே,

தாமரையிலேயே பிறந்த பிரம தேவனுக்குத் திருத் தந்தையே பதும நிதியும், சங்க நிதியும் அடியவர்க்கு அருளும் பதுமை யின் தலைவனே, நூறு கோடி பதுமங்கள் புகும் பதும மயமான திருமேனி உடையாய், நீயே காப்பாயாக.

விளக்கவுரை :- அன்பர் இதய பத்மத்தில் வாழ்வான் ஆதலின் அவன் பதும மூர்த்தி ஆனான். பதும சங்கம்-இரு வகை நிதி.

"நீதிபதி பதவியிலே நியமித்த
 பெருந்தலைவன் நீயே மாயா
கோதுபதி யாதகுணம் குவலயத்து
 வாழ்வகத்தே கொடுப்பா யல்லை
மாதுபதி யர்யபிரான் வாணிபதி
 யிருவருமே வரங்கேட் டாலும்
தீதுபதி யாதநிலை நல்காயோ
 திருவனந்த தேவ தேவ" 132

உரை :- மாமாயனே நீதிபதி பதவியில் என்னை நியமித்த பெருந் தலைவன் நீயே. குற்றமில்லாத குணத்தை உலக வாழ் விலே நீ எவர்க்கும் கொடுப்பதில்லை. பார்வதி காந்தனான பரமசிவனும் வாணி காந்தன் ஆன பிரமதேவனும் ஆகிய இரு வருமே நேர் வந்து வரங்கேட்டாலும் தீமை கலவாத இன்ப நிலையை நீ அருள மாட்டாயோ, திருவனந்த பதுமநாப தேவ தேவனே.

விளக்கவுரை :- அரசரே அப்பதவி அளித்தவர் ஆயினும் திருவிதாங்கூர் நாட்டில் உண்மைத் தலைமை அனந்த பதும நாபன் அதீனத்தில் இருந்ததாலும் அவன் அடிமையாக அரசர் பிரான் ஆணை செலுத்தி வந்ததாலும் தம்மை நியமித்த பிரபு அவனே என்று கூறுகிறார். பதுமநாபன் காருணிக மூர்த்தியே ஆயினும் உலக வாழ்வில் எங்கும் குற்றமே கலவாத குணத்தை

வைப்பதில்லை. குணமே கலவாத குற்றமும் அவன் அருளாட்சி யில் இல்லை. பரமசிவனும் பிரமனும் வரம் வேண்டி வந்தாலும் அவர்க்கும் இப்படியே வரந்தருவாயோ என்று கூறியது தம் மன நிலையை விளக்கவந்த துதி வாசகம்.

"நான்முகனை யேந்துதிரு நாபிமல
 ருடைப்பரம ஞானச் செல்வர்
மான்மியமே கேட்டுருகு மாயவனே
 மறைவிளக்கு மறையோர் தேவே
யான்மனமே மிகக்கலங்க மன்றகத்தே
 வரும்வழக்கின் இயல்பு தேர்தி
கான்மறைய நினைக்கின்றேன் திருவுள்ளக்
 குறிப்பதனைக் காட்டு வாயே" 133

உரை :- நான்கு முகம் உள்ள பிரமதேவனை ஏந்தி நிற்கும் நாபி கமலம் உடைய பரமனே, ஞானச்செல்வர் மகாத்மியத்தைக் கேட்டு உருகும மாயவனே, வேதத்தின் பொருளை விளக்கும மறையவர்க்குத் தேவனே, நான் மிகவும் மனங் கலங்கும்படி இந்நீதி சபையில் வந்திருக்கும் கொலை வழக்கின் இயல்பை அறி வாய். இத் தரும சங்கட பதவியை விட்டுக் காட்டில் மறைந்து வாழக் கருதுகின்றேன் திருவுள்ளக் குறிப்பை விளக்குவாயாக

விளக்கவுரை :- மான்மியம் - மகாத்மியம், மகாத்மாக் களின் தன்மை. மனவாக்குச் செயல்களால் தூயோர் வரலாறு. காட்டுள் மறைய அவனருள் வேண்டுகின்றார்.

"மனைவிமகார் இவணிருப்பர் பெற்றோரோ
 காசிநகர் வதிகின் றாரால்
எனைவினவி யேனிதுநீ புரிகின்றா
 யெனக்கேட்பார் எவரும் காணேன்

புனைமொழிய சான்றுகளால் ஒருபாவ
மறியாதான் புரிந்தா னாகி
மனைவிமகார் தெருவில்நின்று மறுகவுயி
ரிழப்பதுதான் மநுவின் வாக்கோ'' 134

உரை :- மனைவியும், மக்களும் இங்கு (திருவனந்தபுரத்தில்) இருக்கின்றார். பெற்ற தாய் தந்தையரோ காசி நகரத்தில் இன்று நிச்சிந்தையாக வாழ்கின்றார். இங்கு என்னை அடுத்து விசாரித்து நீ ஏன் இப்படிச் செய்கின்றாய் என்று கேட்பவர் எவரையும் காணேன். புனை சொற்களால் வெளிப்பட்ட சாட்சி வாசகங்களால் ஒரு பாவமும் அறியாதவன் கொலைக் குற்றம் புரிந்த குற்றவாளியாக மதிக்கப்பட்டுத் தன் மனைவி மக்கள் தெருவில் நின்று கதறும்படி உயிர் இழப்பதுதான் மனுதர்ம சாஸ்திரத்தின் வாக்கியமோ!

விளக்கவுரை :- குற்றம் அற்றவன் என்று தம் உள்ளம் தேறிய ஒரு மனிதனைச் சட்டத்தின் போக்கால் தண்டிக்கவே வேண்டியிருந்த நிலையிலிருந்து தம்மை விடுவித்துக்கொள்ளவே இவர் பதவியைத் துறந்து ஓடத் துணிகின்றார். குற்றவாளியாக வந்து நிற்பவன் நீதியற்ற முறையிலே மனைவி மக்கள் மறுக இறக்கும் காட்சியைப் பார்க்க மனம் இன்மையால் இவர் தம் மனைவி மக்களைத் துறக்கத் துணிகின்றார் இது நியாயமா இல்லையா என்று இறைவன் அறிவன்.

பதவியிலே மயக்கமுற்று மன்றாடி
மொழிப்படியே பாவம் பாராது
உதவியிலா மரம்போல முடிபுரைக்க
ஒருநல்லோன் உயிரை மாய்க்க
சுதவியலா வெனைவளர்த்த தாய்தந்தை
பதத்தாணை துணியே னைய
கதவியலோ வறியகிலேன் உலகதனை
வெறுத்தகலக் கருது வேனே. 135

உரை :- நீதிபதி பதவியில் மயக்கம் உற்று மன்றுடி உரைதத வாதத்திற்கேற்ப முடிபு உரைத்தல் பாவம் விளையுமே என்று சிறிதும் கருதாது உதவியற்ற மரம்போல் இங்கு அமர்ந்து தீர்ப்புரைக்கவும் ஒரு நல்ல மனிதன் உயிரைப் போக்கவும் குமாரன் என்ற முறையிலே என்னை வளர்த்த தாய் தந்தை பாதத்தின் ஆணையாக நான் துணிய மாட்டேன். ஐய, நான் கோபத்தின் போக்கோ அறியமாட்டேன். இவ்வுலகத்தை வெறுத்தகலவே கருதுவேன்.

விளக்கவுரை :- குற்றமற்றவனைத் தண்டிக்கும் நீதிபதி உதவியற்ற மரம் போல்-வார் என்று இவர் கருதுகிறார். பெற்றோர் பதத்தின் ஆணையாக இவனைத் தண்டியேன் என்றார். ஆணையிடுதல் சிறப்பு.

கடமைமறந் தகல்கின்றான் காணீரோ
வெனப்பலரும் கழறி னாலும்
மடமைமறந் தொழிகின்றேன் மனைவிமகார்
உறவினையும் மறந்தே போவேன்
உடைமைமறந் துடையவனை யுறுதியினாற்
பற்றுதற்கே ஓடா நின்றேன்
தடையைமறந் தகல்வேனைத் தகைக்கவலார்
தமைமதியேன் தரணிக் கண்ணே 136

உரை :- தனக்குரிய கடமையை மறந்து ஓடுகின்றான், இவன செயலைப் பாருங்கள் என்று பலரும் என்னை இகழ்ந்துரைத்தாலும் நான் உண்மையாக அறியாமை மறந்து ஒழிகின்றேன். மனைவி மக்கள உறவையும் மறந்தேபோவேன். என் உடைமை என்று கருதிய பொருள்களையெல்லாம் மறந்து என்னை உடையவனான பரமனை உறுதியோடு பற்றிக்கொள்ளவே ஓடுகின்றேன். தடைகளை மறந்து புறப்படும் என்னைத் தடுத்து நிறுத்த வல்லவர் இப்பூமியில் இருக்கின்றார்களோ?

விளக்கவுரை :- கடமை - நீதிபதியாக இருந்து புரிதற்குரிய கடன். கழறுதல்-பழித்து உரைத்தல். மடமை—அஞ்ஞானம். உலகத்தையும் மனைவி மக்களையும தனது என்று கருதும் உணர்வு. உடைமை உடையதாய் இருக்கும பொருள் வகை. உடையவன்-உயிர்களையெல்லாம் தன் அதிகாரத்தில் நிறுத்தி அவை இயங்கத்தக்க வழியில் இயக்கும் இறைவன். தகைத்தல்-தடுத்து நிறுத்துதல்.

எனவிதயத் தெழுங்கருத்தை இறைவனுக்குத்
 தெரிவித்தார் இணையில் ஞானி
கனவிதனக் காரணமா நீதிபதி
 பதவியினைக் கழன்று போனர்
வனமதனில் விளையாடும் வனமாலை
 மார்பினனை வணங்கி வாழ்த்தி
மனமதனில் நிறுத்தியற மன்றமகன்
 றேகினரால் மறைவல் லோரே. 137

உரை :- என்று தம் உள்ளத்தில் தோன்றிய கருத்தைக் கடவுளுக்கு விண்ணப்பித்தார். இணையற்ற ஞானியான அவர் மிக்க விசனமே காரணமாக நீதிபதி பதவியை விட்டு வெளிப்பட்டுப் போனர். பிருந்தாவனத்தில் விளையாடும் வனமலர் மாலையணிந்த மார்பினனான கண்ணபிரானை வணங்கி வாழ்த்தி மனத்தில் நிறுத்தி நீதி சபையை நீங்கிவேதம் வல்ல பெரியோர் போனர்.

விளக்கவுரை :- இணையில் ஞானி தெரிவித்தார் என்றும் முடிக்கலாம். பதவி கழன்று போனர். புளியம்பழம் தோடு நீங்கி நிற்பது போலவே பற்றற்று இருந்தவராதலால் பாம்பு தோல் உரித்தாற் போல அகப்பற்றும புறப்பற்றும் துறந்து வெளிப்பட்டார். அறமன்றத்தை அகன்று செல்வது அரிதாக அவர்க்குத் தோன்றவில்லை.

மைந்தரையு மனைவியையு மறந்தொழிந்து
விலங்குவளர் வனத்தை நோக்கிச்
சிந்தனைவே ருயினதாற் செயலறியா
மருள்போன்றே செல்வ ராஞர்
பந்தனைக ளொழிவதுவே பணியினியென்
றுறுதிபெறு பனவர் பெம்மான்
தொந்தமகல் துணியிஞெடு தூயபெரும்
பொருள்துருவித் துணையற் ருரே. 138

உரை :- குமாரர்களையும் பத்தினியையும் மறந்து பிரிந்து மிருகங்கள் வாழும் வனத்தை நோக்கித் தம் மனம் வேருனதால் ஒரு வகை வியாபாரமும் உணராத பிரமத்தன் போன்று போவாராஞர். உலக பந்தங்கள் ஒழிவதே இனி நம் காரியம் என்று உறுதி செய்து பிராமண உத்தமரான அவர் பற்று ஒழியும துணிவோடு தூய பெரும பொருளைத் தேறத் துணையற்றவர் ஆஞர்.

விளக்கவுரை :- சிந்தனை வேறு ஆதல்-உலக வியாபாரத்தில் நாற்பது ஆண்டு ஈடுபட்டிருந்தும் அதனை முற்ற மறந்து துறவு நெறியில் நினைக்க மனம் கொளளுதல். பணி-காரிய பந்தனைகள், தாரேஷணை, வித்தேஷணை, புத்ரேஷணை என்ற ஏஷணுத்ரயமும் அவை போன்ற பிறபந்தங்களும் ஆகும். பனவர் கோமான்-பிராமண உத்தமர். தொந்தம் - துவந்துவம் இருமைப்பற்று, சுகம், துக்கம், லாபம், நஷ்டம், ஜயம், அபஜயம் முதலிய இரட்டைகளைப் பற்றி மனம் சஞ்சலம் உறுதல்.

குற்றநிலே நின்றவனும் குற்றமெடுத்
துரைப்பவரும் குறிப்புக் கேட்டுப்
பற்றறவே யகலுமவர் பண்பறியார்
மனந்திகைத்துப் பரிவி ஞழ்ந்தார்

கற்றகலே யெலாமறந்து கடமைதுறந்
தகல்கின்ருர் கருத்துக் கெட்டார்
எற்றவர்தம் நிலேயெனவே எண்ணிநின்ருர்
நீதிமன்றத் தேனே யோரே. 139

உரை :- குற்றவாளி ஆகும் நிலேயில் நின்றவனும், அக் குற்றத்தை எடுத்துரைப்பவரும் உலகக் குறிப்பு அழிந்து எவ் வகைப் பற்றும் அற நாய சபையை விட்டு அகலும் அவர் பண்பு அறியாது மனம் திகைத்து வருத்தத்தில் ஆழ்ந்தார். கற்ற கல்வியெல்லாம் மறந்து தம் கடமையைக் கைவிட்டுப் போகின்ருர் கருத்து ஒருங்கிழந்து கெட்டார். அவா நிலேமை எத்தகையதோ எனறு எண்ணி நின்ருர் நீதி மன்றத்தில் இருந்த பிறர்.

விளக்கவுரை :- நீதிபதி தீர்ப்புச் கூறும் தம் தரு'த் தைப் புறக்கணித்து நீதி மன்றத்தை விட்டு நீங்கும் காட்சியை அன்று வரை கண்டறியாத மக்கள் எல்லாரும் அவரைப்பற்றித் தம் கருத்துக்களே வெளியிட்டனர்.

எவரென்னென் றெண்ணுகினு மெனக்கென்னே
யெனுநினேப்போ டேகா நின்ருர்
உவரெண்ண மில்லறத்தே தோன்றுதலா
லுளத்துறவா லோடா நின்ருர்
கவரெண்ண மிலாதெழுந்து காடுமலே
யாறுதளம் கடந்து சென்ருர்
தவரெண்ண முருகுதமிழ்த் திருநாடு
விரைந்தடையும் தகுதி யானே. 140

உரை :- எவர் என்ன எண்ணினுலும் எனக்கு என்ன என்ற நினேப்போடு போகின்ருர். இல்லறத்தில் அருவருப்பு எண்ணம் தோன்றியதால் உள்ளத்துறவோடு ஓடுகின்ருர்.

கவர் படும் எண்ணம் இல்லாமல் எழுந்து காடுமலை ஆறு குளங் களைக் கடந்து சென்றார். தவம் புரிந்த மகான்கள் மனம் உருகும் தமிழ்த் திரு நாட்டை விரைந்து அடையும் கருத்தால்.

விளக்கவுரை :- தமிழ்நாடு விரைந்து அடையும் தகுதி யால் காடுமலை கடந்து சென்றார் என்று முடிக்கவேண்டும். அவர் மனத்தில் லௌகிக அபிப்ராயங்களைப் பற்றிய சிந்தனை சிறிதும் இல்லை. உவர் எண்ணம்-உவர்க்கும எண்ணம் அரு வருப்ப வெறுப்பு உள்ள எண்ணம் கவர் எண்ணம் - கவர் படுதல்-சினை கிளையாகப் பிரிந்து ஒருமுகப்படாது அழிதல். காடுமலை ஆறு குளப்-உம்மைத் தொகை. தமிழ்த் திருநாடு தவச்செல்வர் வாழும் நாடு ஆதலின் அதனைத் தகுதியால் அடை கின்றார் என்று கூறப்பட்டது.

முத்தமகன் தந்தைசெய லறிந்தவரைத்
தேடுதற்கே முடுகி வந்தான்
யாத்தவன்பர் சுற்றத்தார் துணைவரொடு
பின்சென்றே இளையா நின்றார்
கோத்தகர முடன்துறவு கொள்ளுவதே
கருத்தாகக் கொடுங்கான் புக்கார்
நீத்தமகல் கன்றினைபபோல் நெடுந்தொலையில்
நடந்தாரால் நேயத் தோரே. |4|

உரை :- முத்த குமாரன் தந்தை செயலை அறிந்து அவரைத் தேடுவதற்கு விரைந்து வந்தான். சுற்றம்போல் இணைந்த அன்பரும் உறவினரும் துணைவர்களோடு பின சென்று களைப்புற்றார். உலகை ஒதுக்கும்படி கோத்த கைகளோடு துறவு கொள்ளுவதே கருத்தாகக் கொடிய காட்டிற் பகுந்தார். வெள்ளத்திலிருந்து உயிர் தப்பி ஓடும் இளங்கன்றைப்போல அன்புள்ள முள்ள அவர் நெடுந்தூரம் நடந்து சென்றார்.

விளக்கவுரை :- உறவினரும் நண்பரும் பிறரும் மைந்தருக்கு உதவியாக அவரைத் தேட புறப்பட்டார். தேட வந்தவர் தோல்வியுற்றுக் களைப்போடு மீண்டனர். வெள்ளம்-ஸம்ஸாரம். கன்று-வைராக்ய சப்பத்துள்ளவர்.

பின்வருவார் தமையறிவார் ஒருமுகமா
ஞானகுருப் பேற்றை யெண்ணி
முன்வருவார் தமைநோக்கார் முடுகுகின்றார்
வடாதுதிசை முறைமை யானே
என்வருவார் இவரெனவே யறியாத
வில்லறத்தார் இயல்வ செய்தார்
மன்வருவார் மீண்டெனவே திசைநோக்கி
யிருந்தானல் மலையா ளத்தே. 142

உரை :- பின்வரும் மனிதரை இன்னவர் என்று அறியாத வராய் ஏகாக்கிர சித்தத்தோடு ஞான குருவை யடையும் பாககியத்தை எண்ணி, முன் வருவாரைப் பாராமல் வடக்கு நோக்கி முறையே வேகமாக நடக்கின்றார் இவர் ஏன் இப்படி வருகின்றார் என்று அறியாத இல்லறத்தார் தம்மால் இயன்ற உதவிகளைப் புரிந்தார். சேரமன்னன் இவர் மீண்டு வருவார் என்று எண்ணி மலையாளத்தில் இவர் சென்ற திசை நோக்கி இருந்தான்.

விளக்கவுரை :- உறவினரும் பிறரும் தேடி வந்ததை இவர் அறியவில்லை. நடந்து போகும் வழியில் முன் வந்தவர் எவர் என்று பாராமல் மேற்சென்றார். இவர் செல்லும் வழியிலே அங்கிருந்த இல்லறத்தார் இவர் முகம் பார்த்து உணவு தந்து உபசரித்தனர். எவரையும் இவர் ஒன்று வேண்டும் என்று கேளாமலே பராங் முகமாக நடந்தார் ஆதலின் பெரும்பாலும் உணவை நினைக்காமல் சென்றார். அரசனோ. இவர் மனம் மாறி மீண்டு வரினும் வரலாம் என்று கருதிச் சென்ற திசை நோக்கி யிருந்தான்.

நெல்லையப்பன் திருத்தளிக்கண் நெஞ்சுருகி
யிசைக்கவிதை நிகழ்த்தி நின்றார்
எல்லையற்ற கடற்கரைக்கண் இருந்தருளும்
குமாரனையும் இறைஞ்சா நின்றார்
சொல்லையற்ற பொருள்துருவி மதுரையெனும்
பெயர்பொருத்து துவாத சாந்தம்
வல்லையுற்று மனமுருகி யங்கயற்கண்
ணம்மைகழல் வணங்கி னாரே. 143

உரை :- நெல்லையப்பன் வீற்றிருக்கும் திருநெல்வேலிக் கோயிலில் மனம் உருக இசைப் பாட்டுக்களைப் பாடிக்கொண்டு நின்றார். எல்லையில்லாத கடற்கரையில் கோயில் கொண்ட திருச்செந்தூர் முருகனையும் வணங்கினார். சொல்லைக் கடந்த பொருளைத் துருவி மதுரை என்று பெயர் பெற்ற துவாத சாந்த க்ஷேத்திரத்துக்கு விரைந்து வந்து மனமுருகி அங்கயற் கண்ணம்மை திருவடிகளை வணங்கினார்.

விளக்கவுரை :- திருவனந்தபுரம் நீங்கிப் புறப்பட்ட இப் புண்ணியமூர்த்தி இடையிடையே உள்ள பல சிவ விஷ்ணு ஸ்தலங்களை அந்தரங்க சுத்தியாகத் தரிசித்து வணங்கித் திருநெல்வேலிக்கு வந்தார். அங்கு சாலிவாடி யீசனை தலையார வணங்கி நாவாரத் துதித்தபின் திருச்செந்தூர் சென்று முருகனை வணங்கி மனமுருகத் துதித்து மதுரைக்கு வந்தார்.

ஏடகமா நகரணைந்தார் ஏடகநா
தனைப்பணிந்தார் இணையி லாதாய்
கூடகமா யிருக்குமுயிர் கூடார்த்த
முணர்வதென்றோ கூறாய் தேவ
பாடகமே சதங்கையணி பாவையொடு
வீற்றிருந்த பரம நீயே
நாடகமே யுலகவாழ் வெனவிளக்க
நாடகமும் நடிப்பா யென்றார். 144

உரை :- திருவேடகம் என்ற திருப்பதியை அடைந்து அங்குக் கோயில் கொண்ட ஏடக நாதனைப் பணிந்தார். அவன் திருமுன் நின்று இணையில்லாத இறைவனே இந்தக் கூட்டினுள் இருக்கும் உயிர் தனக்குள் மறைந்திருக்கும் பரம்பொருளை உணர்வது என்றோ! தேவ கூறுக. பாடகம சதங்கை முதலிய ஆபரணங்களைப் பூண்ட பாவையான தேவியோடு வீற்றிருக்கும் பரமனாகிய நீ உலக வாழ்வு நாடகமே என்று விளக்குதற்கோ நாடகமும் நடிப்பாய் என்று கேட்டார்.

விளக்கவுரை :- புனலில் ஏடு எதிர சென்று நின்ற திருப்பதி திருவேடகம் சம்பந்தர் தேவாரம் எழுதிய ஏடு வைகை வெள்ளத்தை எதிர்த்து ஏறித் திருவேடகத்திற்குப் போய் நின்றது. கூடு-உடம்பு. கூட+அர்த்தம். மறைவானபொருள். உயிர்க்கு உள் உயிராக இருக்கும் ஆத்ம வஸ்து. உயிர்-ஜீவாத்மா. கூடார்த்தம்-பரமாதமா, ஜீவாதமா பரமாத்மாவை அறிவது ஐக்ய பாவத்திலும் பேத பாவததிலும் உண்டு அத்வைதிக்கு இரண்டு ஆத்மா இல்லை.

நன்றுடையான் தீயதில்லான் நரைவெள்ளே
றுமூர்தி நயப்ப தாக
ஒன்றுடையான் உமையொருபா லுவந்துடையா
னுலகமெலாம் உடைய தேவன்
சென்றடையாத் திருவுடையான் திருச்சிராப்
பள்ளியெனும் திருமிக் கேறும்
குன்றுடையான் திருமுன்பு மறையோதிக்
கரம்கூப்பிக் கும்பிட் டாரே. 145

உரை :- நன்மை உள்ளவன் தீமை இல்லாதவன் நரைத்து வெளுத்த மூபபு மிகக காளை ஒன்றை விரும்பத்தக்க வாகனமாக ஏற்றுக்கொண்டவன். உமா தேவியாரை இடப்பாகத்தே உவப்போடு கொண்டவன் உலகம் எல்லாம் தன் உடைமையாக

உடைய தேவன் சென்று அடைதற்கு அரிய பெருந்திருவுடையான் திருச்சிராப்பள்ளி என்ற அழகு மிக்க ஓங்கிய குன்றுடைய இறைவன் திருமுன்பு வேதமோதி இரு கையும் கூப்பிக் கும்பிட்டார்.

விளக்கவுரை:- நன்றுடையானைத் தீயதில்லானை என்று தொடங்கும் தேவாரச் செய்யுளை அடியொற்றி இது வருகின்றது. நரை வெள்ளேறு-நல்ல வெண்மை நிறம் உள்ள காளை முதுமையுள்ளது என்றும் உரைப்பர். மறை-இருக்கு வேதம்.

பெருவுடையார் திருக்கோயில் தஞ்சையிலே
பணிந்தேத்திப் பிரிந்த ஞானி
திருவுடையார் பணிந்துருகுந் திருவையா
றடைந்தரனைச் சேவித் தாரால்
உருவுடையாய் அருளுடையாய் உனதருளால்
அருட்குருவை யுறுவே னென்றே
அருவுடையான் பெருந்துறையும் அன்புளத்தோ
டடைந்துபணிந் தகன்றா ரன்றே. 146

உரை :- தஞ்சாவூரில் உள்ள பெருவுடையார் திருக்கோயிலைப் பணிந்து துதித்துப் பிரிந்த ஞானி திருவுடையார் பணிந்து மனம் உருகும் திருவையாறு அடைந்து சிவபரம் பொருளைத் தொழுதார். உருவம் உள்ளவனே அருள் உள்ளவனே உன் திருவருளால் அருட் குரவரை அடைவேன் என்று உருவம் இல்லாத இறைவன் கோயில் கொண்ட திருப்பெருந் துறையும் பக்தியோடு அடைந்து பணிந்து சென்றார்.

விளக்கவுரை :- தஞ்சையிலே கோயில்கள் பல உண்டு. அவற்றுள் மிகப் பெரியது பெருவுடையார் கோயில். பொன் மயமான காமாட்சி கோயில் இருப்பதை இவர் அறிவர். அங்கும் வணங்கித் திருவையாறு சென்று பஞ்சநதேசனை வணங்கி

·15

உருவமுள்ள மூர்த்திகள் அடையாத திருக்கோயிலான ஆவுடையார் கோயிலுக்கு வந்தார். அதுவே திருப்பெருந்துறை என்ற பெயர் உள்ளது. அங்கு மணிவாசகரே சிவக் கோலத்தின் சிறப்பை விளக்குகின்றூர் இத் திருத் தலத்தில் குருந்தமர நிழலில் இறைவன் குருமூர்த்தியாக இருந்து மணிவாசகர்க்குச் சிவஞான போதம் அருளினுர். இங்கு ஆலயத்தில் சிவ சக்தி மூர்த்தம் இரண்டும் இல்லே. அருவ வழிபாட்டுக்குத் தமிழகத்தில் உள்ள தலம் இஃது ஒன்றே உற்சவ மூர்த்தியாகும்பேறு இங்கு மணிவாசகர்க்கே உளது.

திருவாரூர் சிவனுலகம் தியாகேசன்
இதயமலர் செறியும் பேறு
மருவாதார் மணிதவுட லெடுத்தநல
மடையகிலா மாக்க ளாவார்
அருவாக வமர்பவனே அரும்புற்ருய்
விளங்குகின்ருன் அதனுல் இன்றே
கருவாயில் விழாதருளும் கமலேயினுன்
கழல்பணிவோம் கருத்தா லென்றே. 147

உரை :- திருவாரூர் சிவலோகமாம். தியாகேசன் இதய மலரில் வந்து பொருந்தும் பேற்றை அடையாதவர் மனிதவுடல் எடுத்த நன்மையை அடையப் பெருத மாக்களே ஆவர். அருவமாகத் திருப்பெருந்துறையில் இருக்கும் சிவபரப்பொருளே இங்கு அரிய பெரும்புற்றுருவமாக விளங்குகின்ருன். அதனுல் இன்றே கருப்பத்துள் விழாது அருளும் கமலாலயன் திருவடிகளைத் கருத்தோடு பணிவோம் (என்று அடைந்து வணங்கினுர்)

விளக்கவுரை :- திருவாரூர்த் தியாகராச லீலே முன்னூற்றறுபது ஆகும் என்பர். அவற்றுள் ஒரு சில மகா கவிகளால் தமிழில் பாடப் பெற்றன. மற்ற லீலேகளே எல்லாம் வசன நடையில் சமீபத்தில் தருமப் பிரபு பிட்சாண்டார்கோயில் இராஜகோபால பிள்ளே என்பவர் உலகுக்கு உதவினுர்.

திருமாலி னிதயமலர் எனப்புலவர்
புகழ்பெருமைத் திருவா ரூரில்
ஒருநாளு மொருபகலு முணர்வுருக
விருப்பபென வுறுதி பூண்டு
கருநாளு முறுமனித்தர் கலக்கமெலாந்
தவிர்த்தருளும் கருணைமூர்த்தி
இருதாளு மனத்தேற்றி இறைஞ்சிநின்றார்
அருணெறியி னிடைநின் றாரே. 148

உரை :- திருமாலின் இதய மலர் என்று புலவர் புகழும் பெருமை உள்ள திருவாரூரில் ஒரு நாளும் ஒரு பகற்பொழுதும் உணர்வு உருக இருப்போம் என்று உறுதி பூண்டு தினமும் கருக்குழியில் விழும் மனிதர் கலக்கத்தை யெல்லாம் தவிர்த் தருளும் கருணை மூர்த்தி இரு பாதங்களையும் மனத்தால் துதித்து அருள்நெறியின் இடையே நின்றவர் வணங்கி நின்றார்

விளக்கவுரை :- அருள் நெறியின் இடை நின்றார்-நீதிபதி பதவியை உதறி வந்த புண்ணியர். மேலே அடைய இருக்கும் திருவருள் விளக்கத்துக்கு இடை நெறியில இப்பொழுது இருக் கின்றார். திருவாரூர் எனற புண்ணியத் தலத்தின் பெருமை அறிந்து அங்கு இரண்டு நாள் இருக்க மனம் கொண்டார். திருவாரூர் கமலை எனறும் கமலாலயம் என்றும் உரைக்கப் படுவதுண்டு. திருமாலின் இதய கமலம் கமலாலயமாம். தியாக மூர்த்தி வன்மீக நாதனாக இருக்கும் தலமும் கமலாலயம் ஆம். “மாலிதயத்திற் பொலிந்த தியேகேசர்” என்பர் குமர குருபரர்.

உயிர்வகுக்க மனைத்துக்கும் ஒருகுரவன்
எனவிளங்கும் உயர்வொப் பில்லாய்
பயிர்வருக்கு மனைத்துக்கும் பார்ச்சனிய
மேனவமைந்த பரம நாத

செயிர்வருக்க மனைத்துமொழித் தடியேற்கும்
துறவருளத் திருவுள் ளத்தே
அயிர்வருக்க மிடைப்பாயு மாறடைந்த
சடைத்தலைவ அருளுண் டேயோ? 149

உரை - உயிர், இனம் எல்லாவற்றுக்கும் ஒரு பரமகுரு வாக விளங்கும் உயர்வு ஒப்பில்லாத இறைவனே பயிர் வகைக்கு எல்லாம் உயிர் தரும் பருவ மழை என அமைந்த பரமநாத குற்றவகை எல்லாம் போக்கி அடியேனுக்கும் துறவு அருள உன் திருவுள்ளத்தில் ம ண ல் வகையின் இடையே பாயும் கங்கை யாற்றை அடைத்து வைத்த சடைத் தலைவ, அருள் உண்டேயோ!

விளக்கவுரை :- உயிர் வருக்கம். ஓரறிவு உயிர் முதல் ஆறறிவு உயிர் வரை உள்ள எல்லா வகையும் அடங்க உரைத் தது. குரவன் குரவ: என்ற வடமொழிப் பன்மைப் பெயர் தற்பலமாக வந்தது. பாச்சனியம். காலத்தில் வேண்டுமளவு பெய்யும் மழை. அயிர் வருக்கம் - மணலில் கருமணல், செம் மணல், வெண்மணல், குறுமணல், பெருமணல் என்ற பல வகையையும் குறிக்கும்.

திருமணியை யுரத்தணியும் திருமாலின்
இதயமலர் செறிந்த தேவ
பெருமணியை வச்சிரத்தைச் செம்மணியை
வேண்டுகிலேன் பேச்சி லாத
குருமணியை யெனதுளத்தி னிருளறுக்கும்
குணமணியைக் குறையே யில்லா
அருமணியை அளித்தியென வேண்டுகின்றேன்
செவிகேளா தடங்கு வாயோ. 150

உரை :- ஸ்ரீ வத்ஸம் என்ற மணியை மார்பில் அணியும் திருமாலின் இதய மலரில் மறைந்திருக்கும் தேவ, நான்

உன்னிடம் பெருமணியான வயிரத்தை மாணிக்கத்தை அருள்க என்று வேண்டுவேன், அல்லேன். பேச்சு இல்லாத குரு மணியை என் உள்ளத்தில் இருக்கும் இருளை அறுக்கும் குண மணியைக் குறையே இல்லாத அருமணியை அருள்க என்று வேண்டுகிறேன் செவி கேளாது அடங்குவாயோ.

விளக்கவுரை:- ஸ்ரீ வத்ஸாங்கித வக்ஷஸம் என்றிசைக் கும் துதி உண்டு. வயிரம், மாணிக்கம் முதலிய மணிகளையோ, பொன், வெள்ளி முதலிய பொருள்களையோ நான் வேண்டவில்லை, வயிரமும் மாணிக்கமும் மணியாதலால் அவற்றை வேண்டேன் என்று உரைத்துக் குரு மணியை உள்ளத்து இருளறுக்கும் குண மணியை அருள்வாயாக என்று வேண்டுகின்றார். மாணிக்கமும் வயிரமும் மணியே ஆயினும் ஒளிதரும் சக்தி உள்ளவை ஆயினும் உள்ளத்து அகவிருளை ஒழிக்கும் சக்தி உடையவை அல்ல.

என்றுபுகன் றருள்வேண்டி யிறைவிமயி
 லுருப்புனைந்தே இறைவ னெம்மான்
நன்றுமகிழ் பூசனையே நயந்தபதி
 மாயூரம் நயந்து போற்றி
அன்றுதிரு முலைப்பாலைக் கவுணியர்தம்
 குலமதலைக் கருளும் காழி
சென்றுதிருத் தோணியப்பன் திருவடியைப்
 பணிந்தேத்திச் சென்று ரன்றே. 151

உரை :- என்று உரைத்துத் தியாகேசன் திருவருளை வேண்டி இறைவி மயில் உருவம பூண்டு இறைவன் எம்பெரு மான் நன்கு திருவுள்ளம் உவக்கும் பூசையைப் புரிந்த திருப்பதி யான மாயூரத்தையும் பக்தியோடு வணங்கி அன்று தன் திருமுலைப்பாலைக் கவுண்டினிய கோத்திரத்திற் பிறந்த குமார ரான சம்பந்தருக்கு இறைவி அருளும் சீகாழி சென்று திருத் தோணியப்பன் திருவடியைப் பணிந்து புகழ்ந்து வடக்கே சென்றார்.

விளக்கவுரை :- இறைவி பயிலானது மாயூரத்திலும் மயிலாப்பூரிலும் நிகழ்ந்தது. இங்கு உரைக்கப்பட்ட திருப்பதி மாயூரம். இது காவேரிக் கரையில் உள்ள மிகச் சிறந்த தலம். ஆதலின் இவ்வழியே சென்றூர். அங்கிருந்து சீகாழி சென்றூர்.

ஆகாய விலிங்கமமர் புண்டரிக
புரம்புகுந்தே அரனெம் மானே
வாகாய வடமொழியின் கவிதைகளால்
மனமுருக வாழ்த்தா நின்றூர்
சேகாய வினையகலச் சிவத்துறவு
நல்காயோ தேவா செவ்விப்
பாகாய தமிழ்சுவைத்த பரனேயோ
வெனப்பணிந்து பரவி ஞரே 152

உரை :- ஆகாய விலிங்கம் அமர்ந்தருளும் புண்டரிகபுரம் என்ற சிதம்பரம் புகுந்து எம்மானை பரமனை அழகிய வடமொழிக் கவிதைகளால் மனம் உருக வாழ்த்தினர். உறுதி பெற்ற கரும பந்தம் அகலும்படி சிவமயமான துறவு நிலை அருளாயோ தேவா, அழகிய தேம்பாகு போன்ற தமிழைச் சுவைத்த பரம்பொருளே என்று பணிந்து பரவினர்.

விளக்கவுரை :- சிதம்பரம் - ஞானமயமான ஆகாயம். பரம்பொருள் உலக உயிர் எல்லாம் ஒடுங்கிய காலத்தில் ஞான மயமான ஆகாசத்தில் ஆனந்த தாண்டவம் ஆடுகின்றான். அவ்வுண்மையை விளக்கச் சிதம்பர க்ஷேத்திரத்தில் ஆகாய லிங்க தரிசனம் உண்டு. பொன்னம்பலத்தில் தாண்டவமூர்த்தியின் உருப்படிவத்துக்கு வலப் பக்கத்தில் ஒரு புண்ணிய பூமியைக் காட்டி அங்கு ஆகாய லிங்கம் இருப்பதாக உரைப்பார். அங்கு பொன்மய வில்வமாலை அந்த மூர்த்தியின் அடையாளமாகக் காட்சி தரும். பஞ்சபூத க்ஷேத்திரங்களில் ஆகாய க்ஷேத்திரத்தில் இவர் வேண்டுகின்றூர்.

வேண்டியவர் வேண்டியவே விளைத்தருளும்
கூத்தப்பன் விளம்பா நிற்கும்
ஆண்டியென வரசனென வேற்றுமையொன்
றிலையைய அகத்து வேட்கை
மாண்டியலும் வாழ்வினையே கருதியே
மழித்தல்சடை வளர்த்து நீட்டல்
ஈண்டியலும் இருநெறியுள் எதனைமன
முவக்குமுதை யேற்பாய் நீயே. 153

உரை :- வேண்டியவர் வேண்டிய பேறுகளையே விளைத்து அருளும் கூத்தப்பன் (கனவில் வந்து) உரைக்கின்றான். ஐய! ஆண்டி என்றும் அரசன் என்றும் வேற்றுமை ஒன்றும் இல்லை. மனத்தில் உள்ள ஆசைகள் அழிந்து அடங்கும் வாழ்வையே கருதுவாயேல் தலையை முண்டனம் செய்தலும் சடை வளர்த்து நீட்டலும் ஆகிய இங்கு நடைபெறும் இருவகைத துறவுள் எதனை உன்மனம் விரும்புமோ அதனை அடைவாயாக.

விளக்கவுரை :- 'வேண்டுவார் வேண்டுவதே யீவான் கண்டாய்' என்பது தேவாரம். கூத்தப்பன் - நடராஜமூர்த்தி. வேட்கை - ஆசை, ஆசை அழிந்து அடங்கும் வாழ்வு துறவு நெறி - துறவு. இருவகை மழிததலும் நீட்டலும் அவற்றின் சின்னம்.

வாயுமய வுருவமொடு யாம்விளங்கும்
தலத்தினிலே வாழ்வு காண்டி
தேயுமய வுருவமொடு வீற்றிருக்கும்
தலத்தையுநீ தெரிசிப் பாயே
மாயுமன வுணர்வானே துறவுபெற
வருமதலாய் மாவின் கீழே
தோயுமுமை மனமுருக யாமிருக்குந்
தலத்தினைநீ சூழ்தல் நன்றே. 154

உரை :- வாயுமயமான உருவத்தோடு நாம் விளங்கும் காளத்தி என்ற திருத்தலத்தில் உன் மனம் உவக்கும் வாழ்வைக் காண்பாய் தேயு மயமான திருவுருவத்தோடு நாம் வீற்றிருக்கும் திருவண்ணுமலை என்ற சிவ தலத்தையும் நீ காண்பாய். அறிந்த மனவுணர்வோடு துறவு பெற வரும் மகனே ஏகாயபரத்தின் கீழே தன்னைத் தோய்ந்த உமாதேவி மனம் உருக நாம் வீற்றிருக்கும் காஞ்சி தலத்தையும் நீ சூழ்தல் நன்று.

விளக்கவுரை :- சிதம்பரநாதன் தன்னை இறைஞ்சித் திருவருள் வேண்டிய அந்தணர்க்குக் கனவில் வந்து அருளும் வாக்கு இது. வாயுலிங்கம் உள்ள தலம் திருக் காளத்தி. அத் திருத்தலத்திலே இவர் வேண்டிய வாழ்வு கிடைக்கும் என்று அருள்கின்ருன். காளத்தியில் இவர் குருமூர்த்தியைத் தரிசிப்பார் என்பது இங்கு இறைவன் அருளால் விளங்குகிறது திருவண்ணுமலையும் ஞானிகள் ஒதுங்கும் தலமாதலால் அதனையும் வணங்கிப் போகவே ஆணை பெறுகிருர். மாவின் கீழ் இறைவன் இருக்கும் தலம் கச்சித் திருவேகம்பம். கச்சியில் இவர் பெற்ற நலம் பிறகு உரைக்கப்படும்.

கனவகத்தே புலியூர்ச்சிற் றம்பலத்தான்
  கனிந்தருளும் கருத்தே கேட்டார்
நனவகத்தே யவனருளும் திறந்தெளிந்து
  காஞ்சியினை நாடிச் சென்ருர்
வினவகத்தே விடைமறைவ தறியாதே
  மயங்குமுயர் விழும நீங்க
இனவகத்தே மனம்பொருந்தாத் தனிமையிஞர்
  உதீசியினி லேகி ஞரே. 155

உரை :- கனவில் எழுந்தருளி வந்து திருப்புலியூர்ச் சிற்றம்பத்தில் ஆடும் கூத்தப்பன் கனிந்து அருளிய கருத்தையே கேட்டார். நனவில் அவன் அருளும் திறம் தெளிந்து திருக் காஞ்சி நகரத்தை நாடி நடந்து சென்ருர். விஞவின் உள்ளே

விடையும் மறைவதை அறியாதே மயங்கும் உயிர்களின் துன்பம் நீங்க இனத்தினிடம் மனம் பொருந்ாத ஏகாந்தியான இவர் வடக்கு நோக்கிச் சென்றார்.

விளக்கவுரை :- புலியூர்ச் சிற்றம்பலத்தான். புண்டரீக புரம் என்ற பெயர் உள்ள திருத் தலத்தில் பொன்னம்பலத்தில் நட்டம் இடும் திருவடி உடைய தேவன். வினவில் விடை மறைதல் ஆத்ம சாக்ஷாத்காரம் அமைதல். ஹம்ஸ: ஸோஹம் என்ற மந்திரத்தால் உண்மையுணர்ந்து அடங்கும் ஒருமை நிலை.

கருத்தறியாப் பொருள்விளக்கும் பரமகுரு
வருவாய காம கோடி
உருத்தெளிய வீற்றிருக்கும் திருக்கோயில்
பணிந்துமுரு குவப்ப வாழும்
திருத்தெளியும் கோட்டமும்போய் வாழ்த்துரைத்து
மாமரத்தின் சிறைவா ழீசன்
திருத்தளியை யடைந்ததனை மனமுருகச்
சூழ்ந்தனரால் தெளிவி னோரே. 156

உரை :- கருத்தினால் அறிய இயலாத பரம்பொருளை இன்னது என்று விளக்கும் பரமகுரு உருவமான காமகோடி அம்பிகை தன் திருவுருவை ஞானிகள் தெளியக் கோயில் கொண்டிருக்கும் திருக்கோயில் பணிந்து குமாரக் கடவுள் உவப் போடு வாழும் திருவைத் தெளிவிக்கும் குமார கோட்டமும் போய் வாழ்த்துரைத்துப் போற்றி மாமரத்தின் ஒரு சிறையில் இருக்கும் ஏகாயபரநாதன் திருக்கோயிலை அடைந்து அதனை அளவற்ற தெளிவுள்ள ஞானி மனமுருகச் சூழ்ந்தார்.

விளக்கவுரை :- காஞ்சீபுரத்தில் மூன்று தலங்கள் தனித் தனி இருக்கின்றன. சிவாலயம்-ஏகாம்பர க்ஷேத்திரம். அங்கு

மாமரத்தின் கீழே இறைவன் காட்சி தருகின்ருன். காம கோட்டத்தில் காமகோடி அம்பிகை இறைவனை வேண்டும் கோலத்தில் இருந்து அருள்கின்ருள். குமர கோட்டத்தில் முருகப் பிரானே காட்சி தருகிருன். மூன்று கோயில்களையும் வணங்கினுலன்றிக் காஞ்சி தரிசித்த பலன் இல்லை. விஷ்ணு காஞ்சியில் வரதராசன் கோயில் கொண்டருள்கின்ருன். அங்கும் இவர் மனம் உருகச் சென்று வணங்கி வந்தார்.

மூன்றாவது

குருவருட் படலம்

நிலையாமை வகைவகையா
  நிகழ்த்துமொரு மொழியுளதே
கலைவாணர் உளத்தினஃது
  காஞ்சியென வுருவெடுக்கும்
நிலையாய பரம்பொருளா
  நெற்றிவிழிப் பரனிருக்கும்
நிலையாய திருப்பதியோ
  நேருவதிப் பெயரினையே. 157

உரை :- நிலையாமையை வகைவகையாக உரைக்கும் ஒரு சொல் உண்டு அது புலவர் உள்ளத்திலே காஞ்சி என்று உருவெடுக்கும். நிலைத்த பரம் பொருளான நெற்றிவிழிப் பெருமான் வீற்றிருக்கும் என்றும் நிலையாக உள்ள திருப்பதியோ இப் பெயர் பெறுவது!

விளக்கவுரை :- காஞ்சி என்ற சொல் தொல் காப்பியர் கருத்தில் நிலையாமை உணர்த்துவது. பலவகை நிலையாமைகளையும் உரைப்பது அத்திணைக்குரியது, என்பர் அவர். காஞ்சிபுரத்தினை காஞ்சி என்ற சொல் உணர்த்தும் அது நிலையாமை உணர்த்துவதாக இருக்க அதுவே என்றும் நிலையாக உள்ள பரம்பொருள் வீற்றிருக்கும் நிலையாக அமைந்த தலத்தின் பெயராய் இருப்பது புதுமை.

ஒருதளியுள் மனைவிமகார்
உடனுறைய விழையாதே
வருதளிகள் பலவமைய
மாவின்கீழ் உறைபரம
கருதரிய பெருங்கருத்தைக்
காணரிய காட்சியினை
ஒருதமியன் அறிந்துகொள
உணர்த்துகுறிப் புனக்கிலையோ? 158

உரை :- ஒரு கோயிலுக்குள் தேவியும் குமாரரும் உடன் உறைவதை விரும்பாமல் அவரவர்க்கு என்று தனித்தனியாக வரும் கோயில்கள் பல அமைய, ஒரு மாமரத்தின் கீழ் வீற்றிருக்கும் பரமனே, கருதுதற்கு அரிய பெருங் கருத்தைக், காண்பதற்கு அரிய காட்சியை ஒரு தனியேன் உணர்ந்து உய்ய உணர்த்தும் திருவுள்ளம் உனக்கு இல்லையோ?

விளக்கவுரை:- காஞ்சீபுரத்தில் இறைவன் கோயில் வேறு இறைவி இருக்கும் கோயில் வேறு. குமாரன் இருக்கும் கோயில் வேறு. எது மனத்தால் நினைக்க இயலாததோ, எது மனத்தை நினைக்கச் செய்கிறதோ அப்பொருள் என்றும் எது கண்ணுற் காண இயலாததோ, எதன் உதவியால் கண் காண்கிறதோ அப் பொருள் என்றும் உபநிஷத்து உரைப்பதால் அப்பரம்பொருளை அறிந்து அனுபவிக்கத் திருவருள் புரியும் திருக் குறிப்பு இறைவனுக்கு இருக்கவேண்டும். அஃது அமைந்தாலன்றிக் குருவைக் காணலரிது.

பேச்சறியாப் பொருள்விளக்கும்
பெண்ணரசி தலைவாவோ
மூச்சறியாப் பெருயோக
முயன்றவர்த மிதயத்தாய்

ஏச்சறியாப் பாலிகம்பை
யிருமைநதி யுரிமையினுப்
ஓச்சறியாச் செங்கோலாய்
ஒருகுருவை யருளாயோ. 159

உரை :- பேச்சால் அறிவிக்க இயலாத பரம்பொருளைத் தேவர்க்கு விளக்கியருளிய பெண்ணரசின் தலைவனே மூச்சின் போக்கு வரவை அடக்கி வைக்கும் பெருமை மிக்க யோகம் முயன்ற நன்மக்கள் மனத்தில் இருப்பவனே, இகழ்ச்சியே யறியாத பாலியாறும் கம்பா நதியும் ஆகிய இரண்டு நதிகளுக்கு உரிமையுடையாய் ஒச்சுவதை அறியாத செங்கோல் உடையாய் ஒரு குருவை அருள மாட்டாயோ ?

விளக்கவுரை :- கேன உபநிஷத்தில் ஹைமவதியான உமாதேவி இந்திரன் வருணன் அக்னி என்ற மூவர்க்கும் பிரம தத்வத்தை விளக்கி யருளினுள். பாலாறும் கம்பநதியும காஞ்சிக்கு உரிய ஆறுகள். இவன் செங்கோல் ஒச்சுகின்ருன் ஆயினும் ஒச்சும் முறையை உலகம் அறியாது.

விரும்புவன வளித்தருளும்
விழிபடைத்த பெருமாட்டி
இரும்புவன மாண்டருளும்
ஈராறு கரக்குமரன்
அரும்புவன மாலையணிந்
தரியவரந் தரும்பெருமான்
கரும்புவன மிதன்கண்ணே
காட்டாரோ குரவரையே. 160

உரை :- அன்பர் விரும்பிய பொருளை அளித்தருளும் விழி பெற்ற பெருமாட்டியும் பெரும்புவனத்தை ஆண்டருளும் பன்னிருகைக் குமரப் பெருமானும் அரும்புகின்ற வனமாலை

யணிந்து அரிய வரங்களைத் தரும் பெருமானும் கரிய பூமி இதன் கண்ணே எனக்குக் குருமூர்த்தியைக் காட்டாரோ.

விளக்கவுரை :- காமாட்சி என்ற சொல்லின் பொருள் முதல் அடியில் உரைக்கப்படுகிறது. ஈராறு கரம் உள்ள குமரப் பெருமான தேவருலகமும், பூவுலகமும் வாழ்வு பெறும் பொருட்டே தேவசேனுபதி ஆகப் பொறுப் பேற்றான். பிரம பதவியும் வகித்தான். உலகம் ஆண்ட தலைவன் அவன். அரும்பு கலந்த வனமாலை யணிந்த, வரந்தருவான், அருளாளப் பெருமான் கச்சி வரதன் மூர்த்தி பேதத்தால் பேதபுத்தி உறாத மனப் பண்பு பெற்றவர் ஆதலின் வெவ்வேறு உருவத்திலே காட்சி தரும் பரம்பொருளை ஒரு மனத்தோடு வாழ்த்துகிறார். கரும் புவனம்-கலியின் கொடுமையால் அழிவு நிலைக்கு நடந்து கொண்டிருக்கும் உலகம்.

அவாவின்மை உளத்தகத்தே
அமைந்தளவிற் றுறந்தொழிதல்
தவாவின்மை பொருந்துவதாச்
சான்றோரு முரைத்தாரே
அவாவன்மை பெரிதேயோ
அழுத்துலகத் துயர்ச்சுழலில்
சிவாவன்மை யறவீழத்
திருவுளமோ வுரையாயே. 161

உரை.- மனத்திடம் வைராக்கியம் தோன்றியதும் உலகத்தைத் துறந்து ஒழிவது குற்றமற்ற தன்மை பொருந்துவதாகப் பெருமக்களும் உரைத்தனர். ஆசையின் வன்மை பெரிதோ அழுத்தும் உலகத் துயரச் சுழலில் அடியேன் வன்மை யிழந்து விழத் திருவுளமோ சிவனே உரையாய் !

விளக்கவுரை :- சங்கர மண்டன சம்வாதத்தில் சன்யாஸம் ஏற்கத்தக்க பருவத்தை உரைக்கும் சங்கரர் இக்காரணத்

தையே அங்கு உரைத்திருப்பது காணலாம். அவாவின் வன்மை இறைவன் அருளுக்கு உள்ள வன்மையிலும் பெரிதாகாது என்று துணிந்தே உரைக்கிறுர். சிவா-விளி, சிவனே-சிவ என்றும் வரும். அழுத்தும் உலகத் துயரச் சுழலில் அடியேன் வீழ்ந்து தத்தளியாமல் காத்தருளும் கருணை உனக்கு உளதாகலின் என் உள்ளத்து எழும் அவா வன்மை அழிந்து ஒழியும் என்றுர்.

தாயில்லை தந்தையிலை
தமரில்லை யுறவில்லை
வாயில்லை பொறியில்லை
மனமில்லை யினமில்லை
நோயில்லை பிறப்பில்லை
நுட்பமிலை பெட்புமிலை
காயில்லை கனியில்லை
கருத்துவிளங் கியவுடனே. 162

உரை :- தாய் இல்லை; தந்தை இல்லை; கிளைஞர் இல்லை; உறவினர் இல்லை; வாயில்லை; ஐம்பொறி இல்லை; மனம் இல்லை; இனத்தாரும் இல்லை; நோயில்லை; பிறப்பு இல்லை; நுட்பமும் இல்லை; விருப்பமும் இல்லை; காயில்லை; கனியும் இல்லை; கருத்து விளங்கிய போது.

விளக்கவுரை:- வேதாந்தம் விளக்கும் மெய்க்கருத்து விளங்கியவுடனே உலகத்தை ஒட்டிய உறவும் உணர்ச்சியும் தாமாகவே அகன்று ஒழியும். ஆதி சங்கரர் இளம் பருவத்திலே குருவைத் தேடி நருமதைக் கரைக்கு வந்து. அங்கு கோவிந்த பகவத் பாதரைக் கண்டு அவர் நீ யார் என்று வினவ உரைத்த மறுமொழியாக அமைந்த பதுச் செய்யுட்களின் சாரம் இச் செய்யுளில் வருகின்றது. அவர் மனம் அன்று இருந்த நிலையில் இன்று இவர் மனம் இருந்தது.

தேடுகின்றே னருட்குருவைத்
திசைவடக்கே செல்கின்றேன்
நாடுகின்றே னுடரிய
நாட்டத்தை நணுகுதற்கே
ஓடுகின்றே னுலகமகன்
றுணர்வொடுங்க வுயிரொடுங்கப்
பாடுகின்றே னினதுபுகழ்
பரமவிஃ தறிகிலையோ. 163

உரை :- அருட்குரவனைத் தேடுகின்றேன். அதன் பொருட்டு வடதிசைக்குப் போகின்றேன். நாடுதற்கு அரிய நாட்டத்தை அடையவே முயல்கின்றேன். உலகத்தை அகன்று உணர்வு ஒடுங்க உயிர் ஒடுங்க ஓடுகின்றேன். பரமனே உன் புகழையே பாடுகின்றேன். இதனை அறியாயோ !

விளக்கவுரை :- வடக்குப் புண்ணிய திசை. ஞானம் பிறந்த பூமி வடக்கே உள்ளது. இராமனும் கண்ணனும் அவதரித்த பூமி வடக்கே உள்ளது. உலகப் பெருமலை இமயம் ஏகாந்தமாக இறைவனைக் காட்டும் தலமாக உள்ளது. அதனால் இவரும் தாம் தேடும் குருமூர்த்தியைத் தியானித்து வடக்கு நோக்கிச் செல்கினறார். இறைவன் அருள் வழிகாட்டும்.

உலகளந்த பெருமானே
உயிர்புகுந்த ஒளியுருவே
வலமளந்த சுருதியுளே
மறைந்தனையோ நிறைந்தனையோ
உலமளந்த பெருந்தோளாய்
உனைவேண்டி யிரந்தபினர்
நிலமளந்து பிறர்பாலும்
நிலைகெட்டு நிற்பேனோ. 164

உரை :- மூன்று உலகங்களையும் அளந்த பெருமானே. உயிர் தோறும் புகுந்து உறையும் ஒளியுருவனே, உன் வன்மைகளை அளக்கப் புகுந்த வேதத்துள் நீ மறைந்தாயோ! நிறைந்தாயோ! பெருங் கற்களை அளந்த பெருந்தோள் உள்ள பரமனே உன்னை வேண்டி இரந்த பின்பு இவ்வுலகத்தை நடந்து அளந்து பிறரிடமும் நான் நிலைகெட்டு நிற்பேனோ!

விளக்கவுரை :- திரிவிக்கிரம அவதார தத்துவம் விளக்கும் மூர்த்தி உலகளந்த பெருமாள். உலகம் எலலாம் அவன் திருவடிக் கீழ் அடங்கியதால் அருட் குருவை அவன் திருவருளால் அடையலாம் என்று கருதுகிறார். உலம்-பெருங்பாறை தோள்கள் அப்பெருமான் திருவுநவததுக் கேற்ப மலைபோல் திரண்டிருக்க வேண்டும். நிலம் அளந்து உலகம் எங்கும் திரிந்து ஒவ்வொருவராக இரநது வேண்டிநிற்பேனோ என்று உரைத்து அருள்புரிய வேண்டுகிறார்.

ஒருமையினை யுண்மையென

வுணர்த்தியநூல் மும்மையினை

இருமையுணர் வறவளியேன்

எய்துவதற் கிம்மையிலே

அருமையற வருள்குருவை

அடையுநகர் இதுவேயோ

பெருமைமிகு பிறிதொன்றோ

பேசுகிலாய் பெருமானே. 165

உரை:- ஒருமையே உண்மை என்று உணர்த்திய மூன்று நூல்களையும் இருமை உணர்ச்சி அற அளியேன் பெற்றுக் கொள்ள இம்மையில் அருமையின்றி அருளும் குருவை அடையும் நகரம் இதுதானோ, பெருமை மிக்க வேறு ஒன்றோ, பெருமானே நீ பேசாதிருக்கிறாய்.

விளக்கவுரை :- "ப்ரம்ம ஸத்யம்; ஏகமேவ அத்விதீயம் ப்ரம்ம; தத்வமஸி; ப்ரம்மை வாஹம்." முதலிய வாக்யங்களால் வேதம் உணர்த்திய உண்மைகளை உரைக்கும் நூல் பிரஸ்தானத் திரயம் என்ற மூன்றும் உபநிடதம், பகவத் கீதை, பிரம சூத்திரம் என்ற அம் மூன்றும் சங்கர பாஷ்யம் பெற்றவை. உபதேச முறையால் பெறத்தக்கவை. அவற்றை உபதேசிப்பார் உளரேயோ என்று தேடி வருகின்றார்.

எனவுளத்தின் கருத்தெல்லா
மிறைவனிட முறையிட்டே
கனவகத்தி னவன்வந்து
கருணையினு லருளுமொழி
நனவகத்து விளக்கமுறு
நாளெண்ணி நடக்கின்றார்
வனவகத்து நடப்பவர்போல்
மாநகரம் சூழ்ந்தனரே. 166

உரை :- என்று தம் மனக் கருத்தை யெல்லாம் இறைவனிடம் முறையிட்டு அவன் கனவிடை வந்து கருணையால் அருளும் மொழிகள் நனவிடையே விளக்கமாகும் நன்னுளை யெண்ணி நடக்கின்றார். காட்டிடையே நடப்பவர் போல அம் மாநகரத்தைச் சூழ்ந்து வந்தார.

விளக்கவுரை :- சிதம்பரத்தில் இறைவன் கனவில் வந்து அருளிய அருள் மொழியை நினைத்துக்கொண்டு வடக்குநோக்கி வருகின்றார். அவன் அருள் சுவப்பனத்தில் விளங்கியது போலவே ஜாக்ராவஸ்தையிலும் நன்கு விளங்க வேண்டுமென்று கருதி நடக்கின்றார். நனவு-விழிப்பு நிலை. கனவு உறக்கத்தில் கனவு காணும் நிலை. வனத்து அகத்து என்று வருவதே முறை ஆயினும் செய்யுளோசை நயம் கருதி வனவகத்து என்று அமைக்கப்பட்டுள்ளது. காஞ்சி நகரில் பலகாட்சி உண்டா

யினும் ஒன்றையும் பாராமல் காட்டு வழியே நடப்பவர் போற் போகிறார்.

காலகாட்டிக் கைகாட்டிக்
கண்காட்டிக் கண்ணுதலே
மால்காட்டி மயக்காது
வழிகாட்டி வந்ததனால்
ஆல்காட்டி யருள்காட்டு
மப்பனமர் மடம்போன்ற
நூல்காட்டி யோங்குநிலம்
நுழைவுற்றார் நுண்ணியரே. 167

உரை :- நெற்றிக்கண் உள்ள பரம் பொருளே உலகமயக்கத்தைக் காட்டி மயக்காமல் திருவடி மலரைக் காட்டித் திருக்கரத்தை நீட்டிக் கடைக்கண் கருணையும் காட்டி முன்னே வழி காட்டி வந்ததால் ஆலமரத்தை இருக்கையாகக் கொண்டு திரு வருள் விளக்கம் காட்டும் தட்சிணாமூர்த்தியே அமர்ந்தருளும் திருமடம் போன்ற சாத்திரப் பொருளை விளக்கிக் காட்டி ஓங்கிய புண்ணிய பூமியில் நுண்ணறிவுள்ள இவர் புகுந்தார்.

விளக்கவுரை :- பாததீக்ஷை, ஹஸ்ததீக்ஷை, திருஷ்டி தீக்ஷை என்று மதிக்கத்தக்க திருவருட் காட்சியை இறைவன் அருளி முன்னே வழிகாட்டி நடந்ததால் இவர் குருமூர்த்திகளை யும் வேதாந்த ரகசியத்தையும் தேடி வருகின்றார்.

ஒப்பரிய பொருள்தேடி
உபநிடத மடம்புகுந்தார்
வைப்பரிய வைப்பினையே
மறைத்தபெரு நூல்நிலையம்
செப்பரிய செல்வமெனும்
சிந்தையுறப் பலநாளும்
துப்பறியப் பெற்றவர்போற்
சுகசலதி படிந்தனரே. 168

உரை :- உயர்வும் ஒப்பும் இல்லாத பரமார்த்தத்தை அடைய நினைந்து தேடிக் கொண்டே (காஞ்சி நகரத்தில் சில நூற்றாண்டுகளாக நிலைபெற்றுள்ள) உபநிடத மடத்திற் புகுந்தார். அடக்கி வைத்தற்கு அரிய செல்வத்தை மறைத்து வைத்துள்ள ஏடுகள் நிறைந்த நூல் நிலையத்தைச் சொல்லற்கரிய செல்வம் என்று மனம் கொண்டு பல நாட்கள் அரிய துப்பைப் பெற்ற ஒருவர் போல சுக சாகரத்தில் படிந்தார்.

விளக்கவுரை :- உபநிடத மடம் என்பது நூற்றெட்டு உபநிடதங்களுக்கும் வடமொழியில் விரிவான உரைவகுத்த உபநிஷத் ப்ரம்மேந்திர ஸரஸ்வதிகள் தோற்றுவித்த திருமடம் ஆகும். அவர் சீடர் பரம சிவேந்திரர். அம் மடத்தில் இந்நாளில் சிறந்த வேதாந்த ஞானம் உள்ள மஹான் தலைமை பூண்டிருந்தார். அவர் ஏடுகளைப்போற்றி அங்கு வரும் அன்பர்க்கு அறிவு பெருக உதவியிருந்தார்.

உரைவிளம்பி நூற்றெட்டாம்
உபநிடதம் விளக்குமுனி
கரைகடந்த கருணையினாற்
கலைச்செல்வம் அருட்செல்வம்
வரையிறந்த மறைச்செல்வம்
மறைவித்த திருமடத்தில்
தரைமறந்த புகழினவர்
தம்மைமறந் தடங்கினரே. 169

உரை :- நூற்றெட்டு உபநிடதங்களுக்கும் உரிய உரையை இயற்றி அவற்றின் கருத்தை உலகம் அறிய விளக்கும் முனிவர் கரை கடந்த கருணையாலே கலைச் செல்வமும் அருட் செல்வமும் எல்லையற்ற வேதப் பொருளும் அடங்கியிருக்கச் செய்த திருமடத்திலே தரையை மறந்த புகழ் பூண்ட இவ்வந்தணர் தம்மை மறந்து அடங்கி யிருந்தார்.

விளக்கவுரை :- இம் மடத்தில் நூல் நிலையம் தோன்றி வளரக் காரணமாக இருந்தவர் உபநிஷத் ப்ரம்மேந்திரர் என்ற மஹான். அவர் இம் மடத்தில் மறைச் செல்வம் உரையோடு பயிலும் முறையிலே வளர வழி செய்தார். கலைச் செல்வமும் அருட் செல்வமும் அதன் துணைபெற்று வளர்ந்தன.

மடாதிபரா முனிவரர்பால்
வணக்கமுற வடங்கிநின்றே
வடாதுதிசை குருவரரை
மருவுதற்கே புறப்பட்டேன்
கொடாதகுறை யறியாத
கோமுனியே யடியேற்கும்
கெடாததுற வருளிநலம்
கிடைப்பவருள் புரிவீரோ ? 170

உரை :- அத்திருமடத்தின் தலைவரான முனிவரரிடம் வணக்கத்தோடு அடங்கி நின்று வடக்குத் திக்கிலே குருமூர்த்தியை அடையவே புறப்பட்டேன். கொடாத குறையை அறியாத முனியரசே அடியேற்கும் அழியாத துறவுச் செல்வம் அருளி நலம் கிடைக்க அருள்வீரோ !

விளக்கவுரை :- மடாதிபர் பரமசிவேந்திரர்க்குப் பின் மூன்றும் தலை முறையில் வந்தவர். இவர் அம் முனிவரைப் பணிந்து, "வடக்கே குருமூர்த்தியைத் தேடி வருகின்றேன். நான்புறப்பட்ட நகர்க்கு நெடுந் தூரம் வடக்கே இருக்கும் இப் புண்ணிய பூமியில் எனக்கு அருட்குரு கிடைக்கலாம், என்று கருதி மடத்துள் வந்தேன். துறவு அருளி ஆட்கொள்ள வேண்டும்," என்று வேண்டினர். கொடாது இருப்பது பெருங் குறை. அக்குறை இன்னது எனறே அறியாத முனிவர் இவர் தம்மிடம் உள்ள பொருளைக் கேட்பவர்க்குக் கொடுப்பவர்.

என்றிறைஞ்சி யெதிர்நிற்கும்
இனியவரை முகநோக்கி
நன்றறிந்து நன்றுரைத்தீர்
நல்லதுவே துணிந்துள்ளீர்
தொன்றிருந்து பயின்றபொருள்
துருவுகபன் னுளிருந்து
கன்றிருந்த திசைதேடிக்
கபிலைவரும் விரைவினிலே. |7|

உரை :- என்று வணங்கி எதிரே நிற்கும் நற்குணச் செல்வரான அந்தணர் முகம் பார்த்து நன்மை அறிந்து நன்றே உரைத்தீர். நல்லதே செய்யத் துணிந்திருக்கிறீர். முன்னுளி லிருந்து நீர் பயின்ற பொருளை இம்மடத்திற் சிலநாளிருந்து தேடுக. கன்று இருக்கும் திசை தேடி விரைவிற் கபிலை தானே வரும்.

விளக்கவுரை:- உபநிடத மடத் தலைவர் வைராக்யமூர்த்தி யாகத் தம் முன் நின்ற அந்தணரை நோக்கி உரைத்த மொழி களில் ஒரு மறைபொருள் இருக்கிறது. சச்சிஷ்யன் வாய்க்க வேண்டுமே என்று குருமூர்த்தியும் தேடுவார். சீடன் குருவை நாடி நடந்து வருவது இயல்பே. அச்சீடனை எப்பொழுது காண்போம் என்று குருவும் அவனுக்கு அருள்புரியக் காலம் இடம் நோக்கிக் காத்தே இருக்கின்றார் என்பது கன்று கபிலை உவமையால் விளங்கும்.

உலகுபுகழ் தவத்தாரிவ்
வுபநிடத மாமடத்தே
நிலவுகுரு பதமலரின்
நினைவுமற வாதிருந்தார்

அலகில்கலை பயில்மறையீர்
அவர்போன்று நீருமனக்
கலகமற வறிந்தடங்கு
காட்சியிவண் பெறலாமே. 172

உரை :- உலகம் புகழும் பெருமை மிக்க தவச்செல்வர் சிலர் இவ்வுபநிடத மகா மடத்தில் வீற்றிருக்கும் குருவரர் பாத கமலத்தின் நினைவு மறவாமல் உலகில் உள்ளவளவும் இருந்த வரலாறுகள் உண்டு அளவற்ற கலை கற்ற வேதியரே அவர் போல நீரும் மனத்தின் கலகம் அற்று மெய்ப்பொருள் அறிந்து அடங்கும் மெய்க்காட்சி பெறலாம்.

விளக்கவுரை :- உபநிஷத் பிரம்மேந்திர மடத்திலே ஞானச் செல்வர் பலர் துறவு பெற்றதுண்டு. அவருள் உலகப் புகழ் பெற்றவரும் உண்டு. அவர் சென்ற வழியே இவரும் செல்லவேண்டும் என்று குருதேவர் அருள்கின்றார். மனக்கலகம் என்பது பொறிபுலன்களின் வசப்பட்டு மனம் படுத்தும்பாடு. அதனால் ஆத்மாவே துன்பச் சுழலிற் சிக்கியது போல் வருந்த நேரிடும். அறிந்து அடங்கு காட்சியாவது அறியத்தக்க பெரும் பொருளைத் தக்க குரு உபதேசத்தால் அறிந்து அதனை அகத்தே கண்டு அனுபவித்து அடங்கும் நிலையாம்.

அத்தகைய பெருந்துறவி
னதிகார நுமக்குளதே
எத்தகைய குருவரரை
இத்தலத்தி லெய்துவிரோ
முத்தரவர் திருவருளை
முக்கணனே நுமக்கருள்வான்
பத்தகண முடனீங்குப்
பயில்கசில நாளெனவே. 173

உரை :- அத் தன்மையான பெருந்துறவு பெறும் உரிமை உமக்கு உண்டு. நீர் எத்தன்மையுள்ள குருமூர்த்தியை எத் தலத்தில் அடைவீரோ-நான் அறியேன்-முத்தரான அவர் திரு வருளைக் காஞ்சிபுர நாதனாகிய திரிநேத்ரமூர்த்தி உமக்கு அருள் புரிவான். நீர் இங்குள்ள பக்த கணங்களோடு சில நாள் வேதாந்த விசாரம் செய்யலாம்.

விளக்கவுரை :- உலகம் போற்றத்தக்க பெருந்திருவை இவரும் பெறுவார் என்ற உண்மையை மடாதிபதிகள் விளக்கி யுரைக்கின்றார்கள். சுத்த வைராக்ய ஸ்திதிக்குப் பூர்வாங்க மாகச் சாஸ்திர பரிசயம் பெற்று மனத்தை வேதாந்த விசாரத் தால் பவித்திரமாக்கிககொள்ள இம் மடத்தில் அவகாசம் உண்டு என்று உரைக்கிறார்.

முதியதவப் பெருமுனிவர்
 மொழிந்தமொழி கேட்டளவில்
விதியைவெலத் துறவலது
 வேறுநெறி யிலதாலோ
மதியைமுனி நெறிக்காக்கி
 வாழ்வலென வைந்தாண்டும்
அதிகவயி ராக்கியமோ
 டாங்கிருந்தா ரந்தணரே. 174

உரை .- தவம் பழுத்த பெரு முனிவரான உபநிடத மடாதிபர் உரைத்த அருள்மொழி கேட்டவளவில் விதியை வென்று வீறு பெறத் துறவை யொழித்து ஒரு வழியும் இல்லை. என் புத்தியைத் துறவுக்கே அளித்து வாழ்வேன் என ஐந்து ஆண்டு இவர் மகா வைராக்ய மூர்த்தியாக அங்கு இருந்தார்.

விளக்கவுரை :- இவர் காஞ்சி உபநிஷத் மடத்துக்கு வந்தபோது அங்கு மடாதிபதியாக இருந்தவர் மிக்க சாஸ்திர விசாரம் செய்த வைராக்கிய மூர்த்தியாவார் அவர் ஆண்டில்

முதியார்; அறிவிலும் முதியார்; துறவு பழுத்த பெரியோர் தாமே தம்முள் வந்த வைராக்கிய சம்பன்னர்க்குத் துறவறம் அருளத் தக்கவரே யாயினும் ஈஸ்வர சங்கற்பத்தால் அவர்க்கு வேறொரு குருமூர்த்தி வாய்த்திருப்பதை உணர்ந்துகொண்டார். ஆதலால் அங்குச் செல்லும் நற்காலம் வரும் அளவு இம்மடத்தில் அன்பர் குழுவோடு பயின்று மனத்தைத் துறவு வழியிலே பயிற்சி செய்விததுக்கொள்ள இடம் தந்தார்.

வேதாந்த நுட்பமெலாம்
விளக்குமுறத் தெளிவிக்கும்
போதாந்த முணர்முனிவர்
புகன்றவருள் மொழிகேட்டார்
மாதாந்த வருடாந்த
வழக்கனைத்து மறந்தொழிந்து
நாதாந்த முறுபொருளில்
நலம்பெருகக் கலந்தனரே. 175

உரை :- வேதாந்த சூட்சுமங்களை யெல்லாம் விளக்கமாகத் தெளிவிக்கும் ஞான முடிபு அறிந்த மடாதிபர் உரைத்த அருள் மொழியைக் கேட்டார். மாத முடிவு, வருட முடிவு என்ற வழக்கு வகைகளை மறந்து ஒழிந்து நாதத்தின் முடிவில் உள்ள பரம் பொருளில் நன்மை பெருகக் கலந்திருந்தார்.

விளக்கவுரை :- வேதாந்தம் - வேதத்தின் முடிவு. கர்மகாண்ட பக்தி காண்டங்களைக் கடந்து அடையும் ஞான காண்டத்தின் உட்பொருள். போதம் + அந்தம் - அறிவுக்கு விளக்கமான முடிபு. மாதாந்த வழக்கு - உத்யோகி வேதனம் எதிர்பார்க்கும் முறை. வருடாந்த வழக்கு - வருஷ வரவு செலவு கணக்கிடும் முறை.

துறவுநிலை பெருதிருந்தும்
சொற்கடங்கா மறைக்கருத்தை
உறவுணர வணைபவருக்
குரைத்துவரும் பணிபெற்ருர்
பிறவுணர்வு சிறிதுமின்றிப்
பிறப்பொழிய முயலுமிவர்
கறவைநினை கன்றுபொரக்
காஞ்சியையு மகன்றனரே. 176

உரை :- சன்யாஸ ஆசிரமத்தை அடையாமல் இருந்தும் சொற்களில் அடங்காத வேதக் கருத்தை நன்கு உணரவேண்டி அம்மடத்துக்கு வரும் சீடர்களுக்கு அப்பொருளைப் போதித்தும் திருப்டணி பெற்ருர். பிற உணர்ச்சி சிறிதும் இல்லாமல் பிறப்பு ஒழிய முயலும் இவர் தாய்ப் பசுவை நினைந்து ஓடும் கன்று போலக் காஞ்சியை அகன்று புறப்பட்டார்.

விளக்கவுரை :- மடத்தில் வேதாந்த விசாரம் செய்யவும் பாஷ்ய பாடம் கேட்கவும் வருவர் பலர். அவரெல்லாம் குரு தேவரைச் சரண்புக்கு வேண்டிய வேதாந்த ரகசியங்களை உணர்வது வழக்கமாக இருந்தது. அவர் முதுமை காரணமாக அமர்ந்திருந்து உயர்ந்த பொருளைத் தெளிவாகப் போதிக்கும் ஆற்றல் குறைந்த அக்காலத்தில் அவரிடம் வேண்டுமளவு பொருளைக் கேட்ட இவர் வந்த நன்மக்களுக்கு அப்பொருள்களைச் சம்பிரதாயம் தவருமல் எடுத்து உரைத்து விளக்கும் திருப்பணியை மேற்கொண்டார். இங்ஙனம் ஐந்து ஆண்டு கழியவே துறவறத்தில் தீவிரமான உள்ளம் எழுந்து மடத்திலும் தெரிவிக்காமல் வடக்கு நோக்கினுர்.

நினைந்தளவில் முத்தியருள்
நிருமலனே கனலுருவம்
புனைந்தொளிரு மருணமலை
புகுந்தசிவ சிவவெனவே

வனேந்தவட மொழிமாலே
மதுமயமாம் பணிதியினுல்
இனேந்தமன வுணர்வொடுங்க
இசைத்துநின்ருர் இணேயிலரே. 177

உரை :- நினைத்தவுடனே மோக்ஷம் அருளும் பரமேசுவரனே அக்கினி ரூபத்தைப் பெற்று விளங்கும் திருவண்ணுமலே புகுந்த சிவசிவ என்று தியானித்துத் தாமே இயற்றிய வடமொழித் துதிமாலேயைத் தேன்போன்ற இனிய நடையிலே வருந்திய மனவுணர்வு ஒடுங்க இணேயற்ற இவர் இசைத்து நின்ருர்.

விளக்கவுரை :- நினேக்க முத்தி தரும் தலம் திருவண்ணு மலே. காண முத்தி தருவது சிதம்பரம். பிறக்க முத்தி தருவது திருவாரூர். இறக்க முத்தி தருவது காசி. “ மதுமய பணிதீ நாம் மார்க்க தர்சீ மஹர்ஷி : ” என்று வால்மீகியைப் புகழ்வர் புலவர் மதுமய பணிதி. தேன்போல் இனிய நடை. இவர் வடமொழியை நன்கு வயப்படுத்திய புலமையாளர்.

முத்திக்கு வித்தாய
முதல்வாவோ மூன்றுமறை
தித்திக்கும் தமிழமறை
செவியேற்ற தேவாவோ
எத்திக்கு ளிருக்கின்ருர்
எனக்கருளும் குருவரனுர்
அத்திக்கு நெறிகாட்டி
யருளாயோ வென்றனரே. 178

உரை :- முத்திக்கு வித்தாக அமைந்த முதல்வனே ‘ இருக்கு, யசு, சாமம் ’ என்ற மூன்று வேதங்களேயும் செவிக்கும் உளத்துக்கும் இனிக்கும் தமிழ் வேதங்களேயும் திருச்செவியேற்ற

தேவனே எனக்கு அருளும் குருதேவர் எத்திசையில் இருக்கிறார். அத்திசைக்கு வழிகாட்டி அருளமாட்டாயோ என்று வேண்டினார்.

விளக்கவுரை :- முத்திக்கு வித்து, ஞானம். இறைவன் ஞானமே உருவானவன். மறை நான்கு உண்டு ஆயினும் தென்னாட்டில் பிரசாரத்தில் இருப்பவை மூன்றே, அதருவவேதம் பிறர்பாற் பகை காட்டி அழிக்க உதவும் மந்திரங்களை உடையதாதலால் அதனை ஓதும் பயிற்சி இந்நாட்டில் இல்லை. தமிழ் மறை தேவாரமும், திருவாசகமும் சிவபரமானவை. நாலாயிரப் பிரபந்தம்-வைஷ்ணவ பரம் ஆனவை இரண்டுமே பொது நோக்காளர்க்குத் தமிழ் மறையே. இச்செய்யுளில் ஒரு குறிப்பிட்ட மூர்த்தியை வேண்டவில்லை. ஆதலால் தமிழ்மறை என்பது இரண்டையுமே குறிக்கவேண்டும்.

கோயிலிலே பொன்மன்றிற்
　　குனித்தருளும் திருக்கழலான்
வாயுமய வுருவமொடு
　　மருவுதலம் செல்கென்றான்
தூயமன வுணர்வுடைய
　　துறவரசைத் துறந்துவந்தேன்
சேயதன்றே காளத்தி
　　செல்லுவலே நெறிபிடித்தே. 179

உரை :- கோயில் என்ற பெயர் பெற்ற சிதம்பர தலத்தில் பொன்னம்பலத்தில் ஆனந்த தாண்டவம் ஆடும் திருவடியுள்ள கூத்தப்பன் வாயுமயமான உருவத்தோடு நான் இருக்கும் தலத்துக்குச் செல்க என்று கனவிலே கூறினான். தூய மனவுணர்வுள்ள உபநிட மடத் தலைவரான துறவரசைத்துறந்து சொல்லாது வந்தேன். திருக்காளத்தி நெடுந் தொலையில் இல்லையே. அவ்வழி பிடித்துப் போகின்றேன்.

விளக்கவுரை :- சிவபக்தர் சிதம்பரத்தைக் கோயில் என்பர். விஷ்ணு பக்தர் திருவரங்கத்தைக் கோயில் என்பர். பரமாத்மா ஆனந்த தாண்டவம் ஆடும் இடத்துத் தெற்குநோக்கி இருக்கின்றான். யோக நித்திரை புரியும் தலத்தும் தெற்கு நோக்கி இருக்கின்றான். ஞானம் அருளும் மூர்த்தி தெற்கு நோக்குவதே மரபு.

எனநினைந்தார் ஊர்திகளை
யெண்ணாதே வனத்தினெறி
மனநினைந்த வணநடந்து
வருகின்றார் திருமயிலை
முனமிருந்த நிலைதெளிந்து
முறையானே வழிபட்டார்
வனமிகுந்த வழிநடந்து
வருகின்றார் ஊசியிலே. 180

உரை :- (திருக்காளத்திக்குப் போவேன்) என்று நினைத்தார் வாகனாதிகளை மதிக்காமல் காட்டு வழியிலே மனம் நினைத்தவாறு நடந்து வருகின்றவர் தமக்கு முன்னே திருமயிலாப்பூர் இருந்த நிலை கண்டு முறைப்படி அங்கு கபாலீசனைத் தொழுதார். பிறகு வனம் இருந்த வழியில் நடந்து வடக்கே வருகிறார்.

விளக்கவுரை :- ஊர்திகள் - யானை, குதிரை வண்டி, முதலிய வாகனங்கள் காஞ்சியிலிருந்து வடக்கே வந்தவர் சென்னைக்கு வந்து திருமயிலாப்பூரில் உள்ள இறைவனைத் தரிசித்தார். ஊருக்குள் எங்கும் எவரிடமும் எப்பொருளும் ஏற்க எண்ணாமல் இறைவனே துணையாக நம்பி நடந்தே காளத்திப் பக்கம் போகிறார். ஊசி என்ற சொல் உதீசி என்ற வடசொல்லின் சிதைவு வடக்கு என்ற பொருள் தரும். பாசி என்பது ப்ராசி என்றுள்ள வடமொழிச் சிதைவாக அமைந்து கிழக்கு

என்ற பொருள் தருவது. அவாசி-தெற்கு என்ற பொருள் தரும் சொல் - வடசொற் சிதைவு.

கயிலையினை மனங்கதுவக்
கடுகிநடந் துறுமவுனி
எயிலைவளை தலம்பவும்
இயதமுரு குறப்பணிந்தார்
கயிலையொடு காளத்தி
கலந்துவரு மந்தாதி
மயிலைமணந் தவனருளால்
மனத்தேற்றி நடந்தனரே. 181

உரை :- திருக்கயிலாயத்தை மனம்பற்ற விரைவாக நடந்துவரும் மவுனியார் திருமதில் சூழ்ந்த சிவ தலம், திருமால் திருப்பதி பலவும் மனம் உருகப் பணிந்தார். கயிலையும் காளத்தியும் கலந்து வரும் அந்தாதியை இறைவியை மணந்தவன் திருவருளால் மனத்தில் ஏற்றி நடந்தார்.

விளக்கவுரை :- திருக்கயிலாயத்தில் சனகாதியர் தத்வ ஞானம் பெறுமாறு தென்முகப் பெருமானாக வீற்றிருந்த பரமனைத் தியானித்து நடக்கின்றார். கயிலை பாதி, காளத்தி பாதி அந்தாதி நக்கீரர் பாடியது. பதினோராந் திருமுறையில் இடம் பெறுவது. அதன் சுவையில் ஈடுபட்ட இப்புனிதர் கயிலையும் காளத்தியும் ஒன்றே என்ற கருத்தோடு காளத்தி நோக்கி விரைகின்றார்.

திண்ணப்பன் வேட்டமெழு
சிறுபருவத் துளமுருக்கிக்
கண்ணப்பன் ஆக்கியவன்
கண்கொண்ட காளத்திப்

பண்ணப்பன் மறையப்பன்
பவனமய வுருவப்பன்
கண்ணப்பன் விளங்குதிருக்
காளத்தி கண்டனரே. 182

உரை :- திண்ணன் என்ற பெயர் பெற்ற வேட்டுவக் குமரன் வேட்டையாடப் புறப்பட்ட இளம் பருவத்தில் அவர் மனத்தை உருக்கி அவரைக் கண்ணப்பர் ஆக்கி அவர் விழிகளைப் பெற்ற காளத்தியில் உறையும் இசைத் தலைவன் மறைத்தலைவன் வாயுமயமான திருவுருவம் உள்ள இறைவன் உலகம் காக்கும் திருவிழி கொண்ட இறைவன் வீற்றிருக்கும் திருக்காளத்தியைக் கண்டார்.

விளக்கவுரை :- திண்ணன் என்பது பெற்றோர் இட்ட பெயர் ஆம் அவர் சிவனருளால் தம் கண்களை இறைவனுக்கு அர்ப்பணம் செய்ய நினைத்த வளவில் அவனே தந்த கண்ணப்பன் என்ற பெயர் பெற்றார். காளத்தித் தலத்தில் என்றும் இறைவனுக்கு அருகில் நிற்கும் பேறு பெற்றிருக்கிறார். பண்ணுக்கு உருகும் பரமன் ஆதலிற் பண்ணப்பன் எனப் பட்டான். தானே இசைக் கலையில் மூழ்கியிருப்பவன் என்றும் உரைக்கலாம். பவனவுருவம் காளத்திச் சிவ மூர்த்தம் அங்குக் கருப்பக் கிரகத்தில் உள்ள திருவிளக்கு ஆடும் காட்சியே அவன் வாயுவாம் தன்மையை விளக்குவது.

உருகுமுளத் தன்புருவை
யுவந்தேற்ற பிரான்திருமுன்
பருகுமுணர் வொடுபுகுந்தார்
பரவமுறை விழிவாயால்
கருகுபிணி யெலாமொழியக்
கருத்துருக மரந்திமகிழ்ந்
தொருகுரலு மெழும்பாதே
ஒடுக்கமுற நின்றனரே. 183

உரை :- உருகும் மனம் உள்ள அன்புருவமான கண்ணப்பரை உவந்து ஆட்கொண்ட குடுமித்தேவன் திருமுன்பு வேட்கையோடு அப்பரவமுதத்தை விழி என்ற வாயாற் பருகும் உணர்வோடு திருமுன் வந்தார். கருகும் உலகப் பிணியெல்லாம் ஒழிய மனக் கருத்து உருக அவ்வமுதைப் பருகி மகிழ்ந்து ஒரு குரலும் எழும்பாமல் உணர்வு ஒடுங்கவே நின்றார்.

விளக்கவுரை :- உருகும் உளத்து அன்புரு என்று கண்ணப்பர் இங்கு புகழப்படுகிறார். 'கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்' என்றார் மணிவாசகர், பரவமுது-பரம்பொருள். ஆகிய அமுதம் அமுதம் பருகும் உணர்வோடு கோயில் புகுந்தார் இவ்வமுதம் விழிவாயாற் பருகத் தக்கது.

கண்ணப்பன் முத்திபெறக்
கருணைபொழி கண்ணப்ப
மண்ணப்பன் எனுமுரிமை
மறைந்தடியேன் துறவுபெற
விண்ணப்பன் வணங்கவரும்
வேதியனே யருளாயே
எண்ணப்பன் செயலப்பன்
இசையப்பன் நீயலையோ. 184

உரை :- கண்ணப்ப தேவர் முத்திபெறக் கருணை பொழிந்த திருவிழிகளையுடைய இறைவனே நிலவுலகத்திலே அப்பனுக்கு மகனாகவும் மகனுக்கு அப்பனாகவும் வாழும் உரிமை மறைந்தொழிய அடியேன் துறவறம் புகுமாறு தேவர் மன்னன் இந்திரன் வணங்கவரும் வேத வேத்தியனே அருள்புரிவாய். என் எண்ணத்தின் தலைவனும் செயலின் தலைவனும் சொல்லின் தலைவனும் நீயே அல்லையோ !

விளக்கவுரை :- குடுமித் தேவன் விழிகளில் பெருகிய செந்நீரைக் கண்டு உருகித் தம் கண்ணைப் பிடுங்கி அப்பியதால்

திண்ணனார் கண்ணப்பர் ஆயினார். அவர் முத்திக்கு ஏது சிவன் விழிக் கருணை அப்பன் எனும் உரிமை. நிலவுலகத்தில் ஒருவனுக்கு மகனாகியும் மற்றவனுக்குத் தந்தையாகியும் வரும் உரிமை. உலக சம்பந்தம் அறவேண்டும் என்று வேண்டுகிறார் நினைவு செயல் சொல் என்ற முக்கரணச் செயலுக்கும் இறைவன் அவனே என்கிறார்.

சிவமருளும் திருவுளமேல்
தேவர்தொழும் குடுமியப்ப
பவமருளும் வாழ்வொழியப்
பரம்பொருளின் மயமாகத்
தவமருளும் பெருங்கருணைத்
தடங்கடலி னொருதுளியை
அவமருளும் நாயடியேன்
அடையவருள் புரிதியின்னே. 185

உரை :- தேவர் தொழும் குடுமியப்பனே எனக்குச் சிவம் அருளும் திருவுள்ளம் உண்டாயின் பிறப்பில் மயங்கும் உலக வாழ்வு ஒழியப் பரம்பொருளின் மயமாகத் தக்க தவத்தை அருளும் பெருங்கருணைத் தடங் கடலின் ஒரு துளியை வீணான பொருள்களால் மருண்டிருக்கும் நாயடியேன் அடைய இப்பொழுதே அருள்வாயாக.

விளக்கவுரை :- சிவம்-முக்திப் பேரின்பம். சிவம் + அருளும், பவம் + மருளும், பிறப்பில் மயங்கும், அவம் + மருளும்-வீண் பொருள்களில் மயங்கும். தவம் + அருளும்-தவ வாழ்வு அருளும். தவப்பேற்றை அருளும் பெருங்கருணைத் தடங்கடலில் ஒரு துளியை நாயடியேன் பெற அருள்க என்று வேண்டுதலால் தம் கருத்தை உணர்த்துகிறார்.

துறவுநெறி யெல்லேகண்டு
தூய்மையின தொளிபொருத்தி
உறவுமுறை யெலாமொழிய
உன்னொருமைத் துணைபூண்டு
புறவுசுரங் குறிஞ்சிநெய்தல்
பொலிமருத முணராதே
நறவுபெருகு யோகமுளார்
நணுகியருள் புரிவாரோ 186

உரை :- துறவு நெறியின் முடிவைக் கண்டு தூய்மை யொளி பொருந்தி உலகத்து உறவின் முறை யெல்லாம் ஒழிய உன் ஒரு துணையைப் பெற்று முல்லே, பாலே, குறிஞ்சி, நெய்தல் அழகிய மருதம் என்ற நிலவேற்றுமைகளே மதியாமல் ஆனந்தத் தேன் பெருகும் யோக சமாதியில் இருப்பவர் எனக்கு அருகில் வந்து அருளமாட்டாரோ.

விளக்கவுரை :- துறவின் எல்லே-ஞானம். ஞானத்தால் அத்துறவி முகத்தில் தூய ஒளி உண்டாகும். இங்ஙனம் பற்றற்ற துறவரசர் உறவின் முறை ஒன்றையும் கருதுவதில்லே. உறவு முறை எல்லாம் ஒழிந்த துறவிக்கு ஒரு பற்றும் இல்லே. ஆயினும் இறைவன் ஒருமைத் துணையாக முன்னும் பின்னும் மேலும் கீழும் பக்கத்திலும் இருக்கிறன் ஐவகை நிலங்களில் வேற்றுமை அறியாத மனநிலே ஞானத்தின சிகரத்தில் இருப்ப வர்க்கே அமையும். நெரூர்ச்சதாசிவர் இந்த நிலேயில் இருந்தார். யோகிகளுக்கு அனுபவமாக ஆனந்தத்தேன் பெருகும். அதனே அவர்கள் பருகுவர்.

எங்குறைவர் எவ்வுருவர்
எத்தகையர் என்றடியேன்
கொங்குறையு மலர்க்கழலேக்
கும்பிட்டுத் துறவுறுவேன்

பங்குறையு ஞானகலை
பரிந்தருளப் புரிதிகொலோ
சங்குறையுங் கரதலத்தாள்
தானேவந் தருளுவளோ. 187

உரை :- அவர் எங்கு இருப்பார்? எந்த உருவம் உள்ளவர்? எத்தன்மை உள்ளவர் என்று அறியேன். தேன் பொருந்தும் மலர் போன்ற பாதங்களைக் கும்பிட்டுத் துறவுநிலை பெறுவேன். இறைவனே உன் பங்கில் உறையும் ஞானகலை அம்மை என்பால் அருள் கூர்ந்து இரங்கி அருளப்புரிவாயோ, வளையல் அணிந்த திருக்கரம் உள்ள அவ்விறைவி தானே என் முன் வந்து அருள்வாளோ?

விளக்கவுரை :- காளத்திநாதனை வேண்டும் வைராக்கிய சம்பன்னர் குருதேவர் எங்கு இருப்பர் என்று கேட்டு எல்லார்க்கும் திவ்ய ஞானம் அருளும் குரு தெய்வமான ஞானகலை அம்மை அருள்வாளா? இறைவன் அத்தேவியை அருளச் செய்வானு என்று அவள் திருவருள் வருமாறு பணிந்து இறைஞ்சி வேண்டுகிறுர் ஞானகலை ஆதலால்.

எனவிரந்து பணிந்திறைவ
னிறைவியரை வேண்டுகின்ருர்
மனமிறந்த பெருந்தவத்து
மாமுனிவன் பரத்துவசன்
நினைவிருந்த திருத்தலதின்
நீள்கரையில் ஏகாந்த
முனையிருந்த பெரியார்தம்
முனமடைந்து நின்றனரே. 188

உரை :- என்று வேண்டிப் பணிந்து இறைவன் இறைவி என்ற இருவரையும் வேண்டுகின்ருர். மனம் ஒழிந்த பெருந்

தவம் புரிந்த மகா முனிவர் பாரத்துவாசர் நினைவுக் குறிப்பாக உள்ள பாரத்துவாச தீர்த்தத்தின் நீண்ட கரையிலே ஏகாந்த நிலையில் இருந்த ஞான முனிவர் முன் வந்து நின்றார்.

விளக்கவுரை :- இறைவி இறைவனை வேண்டிய புண்ணியர் திருக்கோயிலிலிருந்து சற்றே விலகி ஏகாந்தமாய் இருந்த பாரத்வாச தீர்த்தக் கரையில் உள்ளதொரு ஆசிரமத்தைக்கண்டு அங்கு உலகை மறந்து தவம் பூண்டிருந்த இராமகிருஷ்ண அவதூத ஸ்வாமிகளைக் காண மனம் கொண்டு ஆசிரமத்தின் அருகில் வந்தார். அங்குள்ள தவச் செல்வச் சிறப்பை உய்த்துணர்ந்தார். அருகில் மக்கள் போக்கு வரவு அதிகம் இன்மை உணர்ந்தார்.

அருந்தவத்தி னொளியுருவாம்
ஆனந்த மகோததியில்
இருந்தவத்தை யெலாமடங்கும்
இணையறுமாத் துறவரசை
இருந்தவத்து வுணர்த்தவல
இராமகிருஷ்ண அவதூதப்
பெருந்தவத்துப் பிழம்புருவைப்
பெருவிருப்பிற் பணிந்தனரே. 189

உரை .- அரிய தவத்தின் ஒளியுருவமாய் ஆனந்தப் பெருங்கடல் ஆகியிருந்து ஐந்து அவஸ்தைகளும் அடங்கும் இணையற்ற பெருந்துறவரசை என்றும் இருந்த மெய்ப்பொருளை உணர்த்த வல்லவரான இராமகிருஷ்ண அவதூதர் என்ற பெருந்தவப் பிழம்பின் உருவத்தை மிக்க விருப்பத்தோடு பணிந்தார்.

விளக்கவுரை :- தவச் செல்வர்க்கு முகத்தில் அருளொளி தோன்றும் தவ முதிர்ச்சியால் அவர் திருமேனியே ஒளிமயமாகும் அங்ஙனம் ஒளி உருவத்தோடு விளங்கிய மகானைக் கண்டார். அவஸ்தை: நனவு, கனவு, உறக்கம் முதலிய நிலைகள்: வஸ்து-

பொருள். இருந்தவஸ்து, பிரம்மவஸ்து, அவதூதர்-திகம்பரர்; தவப் பிழம்பு: தவம் பிழம்பாகக் காட்டத் தக்க பொருளன்று. அது பிழம்பானால் இப்படி இருக்குமென்று கூறியது.

பணிந்தளவி லவர்விழியின்
பரங்கருணைக் கிலக்கானர்
அணிந்தவர வாபரணன்
ஆசையென்னும் உடைபூண்டு
திணிந்தவிருள் ஒளியிருமை
சிந்தைசெயா திருப்பதுபோல்
துணிந்தபொருள் மயமான
துறவரசு விளங்கினரே. 190

உரை:- இவர் அம் மகாத்மாவைப் பணிந்ததும் அவர் விழியிலிருந்து புறப்படும் பெருங் கருணைக்கு இலக்கானர். சர்ப்பங்களை ஆபரணமாக அணிந்த பரமேசுவரன் எட்டுத்திசைகளையும் உடையாய் அணிந்து திணிந்த இருள், ஒளி இரண்டையும் சிந்தை செய்யாதிருப்பது போல உபநிடதம் துணிந்த ஆத்ம வஸ்துவின் உருவான துறவரசர் விளங்கினர்.

விளக்கவுரை :- அவர் இராமகிருஷ்ண அவதூத ஸ்வாமிகள் காளத்தியில் நெடுங்காலம் ஏகாந்த மவுன தவத்தில் இருந்து தவத்தின் பிழம்பாக இருந்தவர் அவர் திகம்பரராக இருந்ததாலும் தவத்தின் பேருருவாக விளங்கியதாலும பரமனே அவர்க்கு உரியவன் ஆனன். திணிந்த இருள் - அடர்ந்து சூழ்ந்த இருள்; ஒளி-எங்கும் பரவிய ஒளி; துணிந்த பொருள்-வேதம் துணிந்துரைத்த ஆத்ம தத்வம்; "பிரம்மை வாஹம் சிவகுரு க்ருபையா" என்று சதாசிவப்ரம்மம் பாடினர். "ஆனந்த பூர்ணபோதோஹம்" என்றும் அவர் பாடியுளார்

அம்முனிவர் தவச்சிறப்பை
யளந்தறிய வலாரிலரே
தம்முளமே தெளிந்தபொருள்
தனைநோக்கி யகத்தடங்கும்
செம்மையினு லிரவுபகல்
தெளியாத செயலினவர்
அம்மவொரு பொழுதுமலர்
ஆசிரம மகல்கிலரே. 191

உரை :- அம் முனிவர் தவப்பெருமையை அளந்து அறிய வல்லவர் இல்லை. தம் உள்ளம் தெளிந்த பொருளையே சிந்தித்து அதனுள் அடங்கும் செம்மையால் இரவு பகல் தெளியாத செயலினரான அவதூத மூர்த்தியார் ஒரு பொழுதும் தம் பர்ண சாலையை அகன்று வெளிச் செல்வதில்லை.

விளக்கவுரை :- திருக்காளத்தி மலையில் பாரத்துவாச தீர்த்தத்தின் கரையில் ஏகாந்த ஸ்தலத்தில் இருந்த சிறுகுடிலில் அடங்கியிருந்த இமமகான் இருள் ஒளி என்ற வேறுபாடு மதியாமல் இரவும் பகலும் அக்குடிலுக்குள் அடங்கித் தவமே வாழ்வாக இருந்தார். அவரை இவர் காண வந்தபோது அகஸ்மாத்தாக வெளி வந்தார்.

புறவுடலி னழுக்ககலப்
புனல்படியு நினைவறவே
உறவுணரு மகப்பொருளி
னுறியவர் நாள்பலவாய்
அறவுணரி னன்றியுல
கறியவெளி வரேனெனவே
திறவுறுதி விளக்குநர்போற்
சிறுகுடிலி னடங்கினரே. 192

உரை :- புறவுடலின் அழுக்கு அகலும்படி தண்ணீரில் வீழ்ந்து குளிக்கும் நினைவு இன்றி நன்ருக உணரும் அகப் பொருளில் ஊறிய அவர் நாள் பலவாக அப்பொருளைத் தெளி வாக அறிந்து கொண்டாலன்றி உலகறிய வெளிவரமாட்டேன் என்ற திடமான சங்கல்பத்தோடு இருப்பதை விளக்குபவர் போல அச்சிறு குடிலுக்குள் அடங்கியிருந்தார்.

விளக்கவுரை :- புறவுடல் - உடம்பின் வெளித்தோற்றம். தோலால் மூடிய காட்சி. அத்தோல் சதா அழுக்குக் கசியும் இயல்பு உள்ளது. ஆதலின் அதனைக் கழுவியே தூய்மைபெறச் செய்யவேண்டும். இராமகிருஷ்ணர் உடம்பையே மறந்து உள்ளத்துள் ஒடுங்கியிருந்ததால் உடம்பின் பொருட்டு வேண்டிய தூய்மைச் செயல் ஒன்றும் இல்லாதிருந்தார் அந்தராத்மா எனப்படும் பரம்பொருளை அறிந்தாலன்றி வெளிவரேன் என்று உறுதிசெய்து குடிலுள் இருந்தார்.

என்றேனுஞ் சமாதிநிலை
  யிகந்துசிறு வாயிலிலே
நின்றேனு யிருந்தேனு
  நெறிவருவார் விழிகாண
நன்றேய வெளிப்படுங்கால்
  நன்மனத்தார் சிற்றுதவி
ஒன்றேனு முறமனத்தின்
  உணருமுணர் வொழிவரன்றே. 193

உரை :- அம்மகான் என்றேனும் தாம் அடங்கிய சமாதி நிலையிலிருந்து வெளிப்பட்டுத் தம் சிறு குடிலின் சிறிய வாயிலில் நின்ருே இருந்தோ அவ்வழியில் வரும் மக்கள் கண் காண நன்கு பொருந்த வெளிப்படும்போது அந்நன் மனத்தவர் சிறிய உதவி

களுள் ஒன்றேனும் அடைய வேண்டும் என்ற மனவுணர்வு ஒழிந்திருப்பார்.

விளக்கவுரை :- இவர் அவரைத் தரிசிக்க நேர்ந்த காலம் இப்படி அமைந்த ஒரு தரிசன சந்தர்ப்பமே. அந்நாட்டு மக்கள் நாட் கணக்காக இவர் தரிசனம் கிடைக்கக் காத்திருப்பர். எப் பொழுது வெளிவருவார் என்பது எவர்க்கும் தெரியாது. பகலோ இரவோ எப்பொழுது சமாதி கலைந்ததோ அப்பொழுது சற்றே வெளிப்புறம் நிற்பார் இருப்பார்.

உடம்பினக மறைபொருளை
யுணர்ந்துணர்ந்து துய்க்குமவர்
உடம்புபடு பசிப்பிணியோ
உடம்பையடர் நோய்வகையோ
இடம்படுத லிலாவுளத்தோ
'டிருந்ததனுல் உண்வுறக்கம்
மடம்படநா வசைப்பதெனும்
வழக்கறியா திருந்தனரே. 194

உரை :- உடம்பின் உள்ளே மறைந்திருக்கும் பரம் பொருளை உணர்ந்து உணர்ந்து அனுபவிக்கும் அவர் உடம்பு அனுபவிக்கும் பசிப்பிணியையோ உடம்பை வருத்தும் நோய் வகைகளையோ நினைக்கவும் இடம் தராத மனத்தோடு இருந்த தால் உணவு, உறக்கம், அறியாமை உண்டாக வாய் திறத்தல் முதலிய வழக்குகள் இல்லாதிருந்தார்.

விளக்கவுரை :- உடம்பில் மறைபொருள்-ஆத்ம தத்வம்; அதனைத் தானுக அறிந்து அனுபவிப்பதே ஞான அனுபவம். ஆத்மாராமஞாக எப்பொழுதும் இருந்ததால் பசிநோய் முதலிய

வற்றை அறியாமலே இருந்தார். அதனால் விழிப்பு, உறக்கம் என்ற இரண்டிற்கும் வேற்றுமை அறியாது இருந்தார். பசி என்ற உணர்ச்சியையே மறந்ததால் இன்ன வேளையில் இன்ன உணவை இவ்வளவு உண்ண வேண்டும் என்ற நியதியே இல்லாது இருந்தார். பேச்சு என்ற வியாபாரம் ஒடுங்கியது.

வழக்குமுறை பலவறிந்து
வாதியர்தம் சொற்கேட்டுக்
கிழக்குகுடக் கறநுணுக்கம்
கிளத்துமவர் கருத்தறிந்து
தழக்குமுர சொலிமன்னன்
தலையசைக்க முடிபுரைக்கும்
வழக்கொழிய வோடிவந்த
மவுனிகரம் குவித்திருந்தார். 195

உரை :- (இத்தகைய பெருந்துறவரசர் திருமுன்னே) வழக்குகளின் முறைகள் பலவற்றையும் நூல்களாலும் அனுபவத்தாலும் அறிந்து வாதி பிரதிவாதிகளின் சொல்லைக் கேட்டுக் கிழக்கு மேற்கில் அமைந்த அறநூல் நுட்பங்களை எடுத்துரைக்கும் மன்றுடிகளின் கருத்தை அறிந்து முழங்கும் முரசொலி கேட்கும் சேர மன்னர் நன்றென்று தலையசைக்கும்படி தீர்ப்புரைக்கும் நியாயாதிபதியாக இருந்த நிலையொழிய அதனைவிட்டு ஒடிவந்த மவுனி கைகுவித்து வணங்கியிருந்தார்.

விளக்கவுரை :- நீதிபதி பதவியிலே மிக்க சிறப்போடு இருந்த இவர் ஒரு கணப்பொழுதில் மனத்தில் எழுந்த வைராக்கியத்தால் அதனைத் துறந்து மகான்களைத் தரிசித்து நற்பதம் பெறவே வந்தவர். ஆதலால் இம் மகாத்மா முன் வணங்கி நின்றார்.

துறவினது பெருந்திருவோ
துறவினரு ளுருவேயோ
துறவியலே யறிவதற்குத்
தோன்றியதோர் சுடர்விளக்கோ
துறவறத்தின் பெருமைகலார்
துணியவமை துணிபுருவோ
துறவுபெற விரும்பளியேன்
தொழவமைந்த விறைதானே. 196

உரை:- துறவு என்ற அறத்தின் பெருந்திருவோ, துறவின் அருள் பழுத்த உருவமோ, துறவின் தருமம் இன்னது என்று அறியும் பொருட்டு உலகில் தோன்றிய ஒரு சுடர் விளக்கோ, துறவறத்தின் பெருமைகளை நூல்களாலே கற்றுத் தெளியாத பாமர மக்கள் அதன் உண்மை நிலையைத் தெளிய அமைந்த துணிபின் உருவமோ, துறவு நிலையைப் பெறவிரும்பும் அளியேன் தொழ அமைந்த தெய்வந்தானோ?

விளக்கவுரை :- இராமகிருஷ்ண அவதூத பிரம்மேந்திர ரைக் கண் குளிரக் கண்ட இவர் அம் மகானைப்பற்றி நினைக்கும் கருத்துக்கள் இச்செய்யுளில் உரைக்கப்படுகின்றன. இல்லறத்தை வெறுத்துத் துறவறத்திற் புகத் துணிந்து வந்திருக்கும் இவர் தமக்கு முன் காட்சி தரும் திருக்கோலத்தைப் பற்றிக் கருதும் கருத்தும் மனப் பண்புக்கேற்றவாறு அமைந் துள்ளன. ‘அற்புதமோ, சிவனருளோ அறியேன்’ என்று சுந்தரர் வாக்கில் சேக்கிழார் வைத்திருக்கும் கருத்து இங்கு நினைக்கத் தகும்.

புறமொன்றும் உணராதே
புராரிதிகம் பரவுருவாய்
அறமொன்றும் துறவுநிலை
யாகரமாய் இருக்கின்றார்

உறவொன்றும் அளியேனை
உணர்வாரோ வுணராரோ
பிறவொன்றும் வேண்டுகிலேன்
பிடிப்பனிவர் கழலிணையே. 197

உரை :- புறத்தில் இயங்கும் பொருள் ஒன்றையும் உணராது திரிபுராந்தகன் ஏற்ற திகம்பர வடிவம் பூண்டு தருமம் தங்கிய சந்யாஸ தர்மத்தின் உறைவிடமாய் இருக்கின்றார். தம்மை அடைய வந்திருக்கும் அளியேனை அறிவாரோ யாட்டாரோ வேறு ஒன்றும் வேண்டேன். இவர் பாதங்களையே பற்றிக்கொள்வேன்.

விளக்கவுரை :- தம் மனத்தில் எழும் கருத்தை இவர் வெளியிடுகின்றார். ஒருவரையும் நோக்கி உரையாமல் தம் ஆத்ம திருப்திக்காகத் தமக்குள் உரைக்கின்றார். அளியேன் - அளிக்கத்தக்க யான் அருளுக்குரிமை பூண்ட அடியேன் என்று பொருள் தரும். ஒன்றும் வேண்டேன். அடிபிடிப்பேன் என்றது துறவு வேட்கை.

நேயமுற வீங்குறுவோர்
நிறைதவத்தின் திருவுணர்ந்து
தூயதொரு சுரைக்குடுக்கை
தூங்கவைத்தார் குடில்முனமே
மாயமெலாம் வென்றவர்க்கு
மவுனநிலை நின்றவர்க்கு
பேயமொடு மன்னமிடும்
பெருவிருப்பு விளக்குவரே. 198

உரை :- அன்புமிக இங்குவரும் பொதுமக்கள் இம்மகா முனிவரது நிறை தவத்தின் திருவை அறிந்துகொண்டு தூயதான ஒரு சுரைக் குடுக்கையை இக்குடில் முன்பு தொங்கவிட்டார்.

மாயம் எல்லாம் வென்ற இவர்க்கு, மவுனத்தில் நிலைநின்ற இவர்க்குப் பருகும் பொருளும் உண்ணும் பொருளும் இடுகின்ற பெரு விருப்பத்தை விளக்குகின்றார்.

விளக்கவுரை :- குடிலின் முன்புறத்தே ஒரு சுரைக் குடுக்கை தூங்குகிறது. அதனுள் அங்கு வந்த மக்கள் பாலோ பழமோ இடுவர். பலநாள் அவை தேடப்படாது கிடக்கும். என்றேனும் சமாதி கலைந்து வெளி வரும்போது இம்மகான் அவற்றுட் சிறிது உட்கொண்டு மற்றவற்றை அப்படியே விட்டு வைப்பர். எஞ்சிய பொருளை அங்கு வந்த அன்பர் தமக்குக் கிடைத்த மகத் பிரசாதமாகப் பக்தியோடு எடுத்துக்கொள்வர்.

உடுக்கையினை யறியாதார்
உணவுவகை நினையாதார்
கடுக்கையணி பரம்பொருளே
கரந்தடையும் வேடமென
துடுக்கடங்கு பொறிபுலனும்
தூய்மையுறு மனமுமுளார்
குடுக்கைநிலை மறந்திருந்தும்
கொணர்ந்திடுவர் வேட்டனவே. 199

உரை :- ஆடை உடுப்பதை அறியாதவர், நால்வகை உணவுகளையும் நினையாதவர், கொன்றை மலர் அணிந்த பரம் பொருளே மறைந்து வந்த திருவேடம் போன்று துடுக்கு அடங்கும் பொறி புலன்களும், தூய்மை நிறைந்த மனமும் உடையவர், குடுக்கை ஒன்று வாயிலில் இருப்பதை மறந்திருந்தாராயினும் அவ்வழியில் வரும் மக்கள் தாம் விரும்பிய பொருள்களை அதன் கண் இடுவர்.

விளக்கவுரை :- உடுக்கை - உடுக்கப்படுவது, உணவு- உண்ணப் படுவது. உண்டல், தின்றல் நக்கல், மருகல் என்று

நால்வகை உணவு. கடுக்கை - கொன்றை மலர். சிவனே இவ் வேடமாக வந்தானோ என்னும்படி இருந்தார். சிவன் வேடம் எடுத்த புராண கதை பல உண்டு. குடுக்கை-சுரைக் குடுக்கை. இவர்க்கு வேட்கை இல்லை.

வாயிலிலே கரங்கூப்பு
மனித்தரினம் நோக்குகிலர்
ஞாயிறகம் கரந்திருக்கும்
நற்பொருளை நினைந்திருப்பர்
ஞாயிறுநாள் ஈங்கடைந்தேன்
ஞானதிவா கரரிவர்தாம்
ஞாயிறுநாள் மீண்டுமெனை
நல்விழிகள் சாத்திலரே. 200

உரை :- வாயிலில் நின்று கை கூப்பும் மனிதர் கூட்டத்தைப் பார்க்க மாட்டார். சூரியனுக்குள் மறைந்திருக்கும் பரம் பொருளை நினைத்து தியான யோகத்தில் இருப்பார். ஞாயிற்றுக் கிழமை நான் இங்கு வந்தேன். ஞான சூரியர் ஆன இவர் ஞாயிறு நாள் திரும்பி வந்தும் என்னைப் பார்த்து ஒன்றும் விசாரிக்க வில்லையே.

விளக்கவுரை:- அபரோக்ஷ அனுபூதி அடைந்த மகாத்மா ஆதலின் எதிரில் நூறுபேர் நின்றாலும் அவர்களை அறியாமலே அமர்ந்திருந்தார். பரோக்ஷ திருஷ்டி சிறிதும் இல்லாத இம் மகான் நம்மைக் கண் குளிரப் பார்த்து நாம் வேண்டியது அருள வேண்டுமே என்று எண்ணுகின்றார். சாமான்ய திருஷ்டி விழுந்து விட்டது. விசேஷ திருஷ்டிக்கும் அனுக்கிரகத்துக்கும் பாத்திரம் ஆகவேண்டுமே என்று ஏழு நாள் காத்திருந்தார். அந்த ஏழு நாளும் அவதூத ஸ்வாமி புறவுலகத்தில் இருந்தார் என்பதில்லை. பெரும்பாலும் அகத்தே இருப்பார். எப்பொழுதேனும் வருவார். அப்பொழுது அங்கு வந்த பலரும் வணங்குதல் போல இவரும் வணங்குவார்.

ஏழுநாள் காத்துநின்றும்

யாரையென வினவுகிலர்

வாழுநாள் முழுதுமிவண்

வணங்கிநிற்கு மனத்தேனை

ஆழுநாள் எய்துகினு

மவலமுரு தடைவேனைத்

தாழுநாள் என்றளித்துத்

தாங்குவரோ முனிமணியே. 201

உரை :- ஏழு நாள் காத்திருந்தும் நீ யார் என்று வினவாதிருக்கிறார். என் வாழ்நாள் முழுதும் இங்கு வணங்கி நிற்க வேண்டும் என்ற நினைப்பு உள்ள என்னை ஆழும் நாளே வந்தாலும் வருந்தாது இங்கு வரும் என்னை நான் வணங்கத் தக்க நாள் இன்னது என்று அருள் புரிந்து இம்முனிமணி என்னைத் தாங்குவாரோ ?

விளக்கவுரை :- ஏழு நாள் காத்தும் இம் மகான் என்னைப் பார்த்து விசாரிக்க வில்லையே என்று ஏங்கும் இவர் அடுத்த வாக்கில் வாழ்நாள் முழுவதுமே இப் புண்ணிய பூமியிற் பணி புரிந்திருப்பேன் என்று கூறுகிறார். ஆழும் நாள் - மரணம எய்தும் நாள். இறப்பே வந்தாலும் மனந்தளரமாட்டேன் நான் என்கிறார். "யான் சீடன் நீவிர் என் குருமூர்த்தி. என்னைத் திருவடித் தொண்டுக்கு ஏற்க வேண்டும் என்று கூற இடம் வேண்டுகிறார்.

எனத்துணிந்து மனமடக்கி

யிருகரமும் கூப்பிநின்றார்

கனத்துணின்ற காளத்திக்

கண்ணுதலைத் தியானித்தே

மனத்துணின்ற கருத்தினையே
வாய்திறந்து புகல்வதற்கு
வனத்துணின்ற குடிலகத்தார்
மடங்குவரோ வெனநினைந்தே. 202

உரை :- என்று துணிந்து தம் மனத்தை அடக்கி இரண்டு கைகளையும் கூப்பி நின்றார். மேகத்துள் நின்ற காளத்திப் பரமசிவனைத் தியானித்துத் தம் மனத்துள் நின்ற கருத்தை வாய் திறந்து கூறுவதற்கு வனத்துள் ஏகாந்தமாய் இருந்த குடியில் இருக்கும் மகான் தம் பக்கம் திரும்புவாரோ என்று நினைத்தார்.

விளக்கவுரை :- தியானித்து நினைத்துக் கரம் கூப்பி நின்றார் என்று முடிக்க வேண்டும். குடில் இருக்கும் இடம் ஏகாந்தமாய் மரம் அடர்ந்த வனமாய் இருந்தது. இவர் மனத்துள் இருந்த கருத்து "யான் துறவறம் பூண வேண்டும். உலகப் பற்றை ஒழித்துப் பேரின்பப் பெருவாழ்வுக்குத் தகுதி பெற வேண்டும். சிதம்பரநாதன் தெரிவித்த ஞானமூர்த்தி இவரே ஆகவேண்டும். இவர் முன் என்னை அறியாமல் என் மனம் உருகி ஒடுங்குகிறது. இம் மகான் எளியேனைச் சீடனாக ஏற்றுக்கொண்டு தம்மைப் போலவே என்னையும் ஆக்கியருளும் பெரும் பேறு இன்று இப்பொழுது எனக்கு வாய்க்குமோ" என்பது.

எழுந்துவந்தார் அகத்தடங்கும்
இணையில்பெருந் தவமுனிவர்
கழுந்துபடு வினைகழலக்
கரங்குவித்த வந்தணரை
அழுந்துமனத் தன்பாலே
அகக்குளிர முகநோக்கி
விழுந்துபணி நிலையினிலே
வினவுவரால் அவர்கருத்தே. 203

உரை :- அகத்தே அடங்கியிருக்கும் இணையற்ற பெருந் தவ முனிவர் குடிலகத்திலிருந்து எழுந்து வெளிவந்தார். கழுந் தாக உறுதியுறறிருந்த இருவினைப்பற்று ஒழியும்படி கை கூப்பி நின்ற பிராமணரை அழுத்தமான மனத் தன் பால் அகம் குளிர மூகம் பார்த்து அவர் விழுந்து பணிந்திருக்கும் நிலையில் அவர் மனக் கருத்தைக் குறிப்பாலே கேட்டார்.

விளக்கவுரை :- அகத்து அடங்குதல். குடிலுக்குள் இருப்பது. மனத்துள் ஆத்ம தத்வத்தோடு ஐக்கியம் உற்று அடங்குதல். கழுந்து கோடரிக்கு மசியாத மொட்டை மரம. அம் மஹான் அகம் குளிர இவரைப் பார்த்ததே பிரதம தீக்ஷை ஆயிற்று. மவுனக் குறிப்பால் இவர் கருத்தைக் கேட்கிறார்.

மவுனநிலை யிருந்துதவ
  மரபுதெளி பெருமுனிவர்
சுவணம்வரு பெரும்பதவி
  துறந்தடையு மந்தணரை
உவணம்வரு பிரான்பெயரை
  உரைத்துரைத்து வாழ்த்தினராய்
இவணடைந்த கருத்தியாதே
  எனக்குறிப்பின் வினவுவரே. 204

உரை :- மவுன நிலைமையில் இருந்து தவத்தின் முறை களை யெல்லாம் தெளிந்த பெருமுனிவர் பொன்மிக வரும் நீதிபதி யாம் பெரும் பதவியை வைராக்கியதாற் கைவிட்டு வரும் வேதி யரை கருட வாகனத்தில் வரும் நாராயணன் திருநாமத்தை உரைத்து உரைத்து வாழ்த்தி இங்கு வந்து கருத்து யாது என்று குறிப்பாற் கேட்கிறார்.

விளக்கவுரை :- யதிவரர் முன் இல்லறத்தார் வணங்கும் போது அவ் யதிவரர் மவுன விரதம் பூணுதிருப்பின் நாராயண

நாமோச்சாரணம் செய்வது சம்பிரதாயம். இம் மகான் நெடுங்காலம் மவுனம் பூண்டு தவத்தில் இருந்தாராயினும் இவர்க்கு அருள் புரிய மனம் கொண்டதால் நாராயணன் ஸ்மிருதியோடு இவர் மேற் கடைக்கண் சாத்துகிறுர். இவர் பலமுறை வணங்க அவர் நாராயண நாம ஸ்மரணத்தில் இருக்கிறுர். உச்சாரணம் செய்தே ஆக வேண்டிய அவசியம் இம் மகானுக்கு இல்லை. ஸ்மரணமே வணங்கினவர்க்கு அனுக்கிரகம் ஆகும்.

துறவறமே புகுவலெனத்
துணிந்துவரு மனப்பண்பின்
அறவரசர் தம்முளத்தின்
அடங்குகருத் துரைக்கின்றுர்
புறமறியும் பொறிகளையும்
புலன்களையும் புறங்கண்டேன்
இறவருவ திலாநிலைமை
எய்தவருள் புரிவீரே. 205

உரை :- துறவறத்திற் புகுவது என்றே துணிந்து வரும் மனப் பண்பைக்கொண்ட தருமாத்மா தம் உள்ளத்தில் அடங்கிய கருத்தை உரைக்கின்றுர். வெளியே பாய்ந்து செல்லும் பொறிகளையும் புலன்களையும் ஒருவாறு வென்று விட்டேன். அழிவு என்பதே இல்லாத நிலைமையை அடைய அருள்புரிவீராக.

விளக்கவுரை :- மனமே தூண்டப் பொறிபுலன்களின் வழியே செல்லாமல் ஆத்ம வஸ்துவை அனுபவிக்கும் ஆனந்த அநுபவம் என்று பெறுவோம் என்ற நினைப்போடு திருவனந்தபுரத்திலிருந்து திருக்காளத்தி யளவும் வந்த இம் மவுனியார் தாம் குருவாக வரித்த மகா யோகி முன் தமக்கு வேண்டுவது இன்னது என்று உரைக்கிறுர். “ அமிருதத்வம் ”

பொருள்திரட்டிப் புகழ்படைத்த
புண்ணியர்தம் குலம்பிறந்தேன்
தெருள்திரட்டி மன்றுடும்
திருப்பணியும் புரிந்துவந்தேன்
இருள்திரட்டி வாழுலகை
யிகப்பதுவே துணிந்துள்ளேன்
அருள்திரட்டி யடங்கரசே
அடியேனை யாட்கொளவே. 206

உரை :- கலைப் பொருளையே தேடி அதனாற் புகழ் படைத்த புண்ணிய மூர்த்திகளின் குலத்திற் பிறந்தேன். அறிவு திரட்டி மன்றுடும் திருப்பணியும் செய்து வந்தேன். இப்பொழுது இருளையே திரட்டி வாழும் உலகத்தை விட்டு நீங்கவே மனம் துணிந்துள்ளேன். அருளைத் திரட்டி அடங்கியிருக்கும் துறவரசே அடியேனை ஆட்கொண்டருள வேண்டும்.

விளக்கவுரை :- இக் காவிய நாயகர் முன்னோர் எல்லாம் வேத சாத்திரங்களில் நீந்தித் திளைத்த பெரும் புலவர்கள். ஒருவரும் செல்வப் பொருளைத் திரட்ட நினைக்கவில்லை. மன்றுடுதல்-வழக்குகளை விவரித்துரைத்தல். இருள்-அஞ்ஞானம். இகப்பது-நீங்குவது அருள் - திருவருள், இறைவன் திருவருள். இம் மகான் தம்மை அண்டியவர்க்கு அருள்புரிய இதுவே பெருந் துணையாம் - அருளைத் திரட்டியிருந்தும் அதனை விளம்பரப் படுத்தாமல் அடங்கிய பண்பு உள்ளவர் என்பது நினைக்கத் தக்கது, ஆட்கொளல்-ஆளாக ஏற்றுக் கொள்க. வியங்கோள் முற்று.

இரப்பாளர் தமையிரப்பன்
இரப்பதுவே துணிந்திரேல்
கரப்பாளர் முளம்புகுந்து
கைமலர்த்தி யிரவேற்க

சுரப்பாளர் கபிலேங்கர்
தொழிலாளர் தமையடைக
பரப்பாளர் அவரெனவே
பகர்ந்தருள்வர் வள்ளுவரே. 207

உரை :- இரந்தே வாழக் கருதும் மக்களே நான் ஒன்று வேண்டிக் கொள்கிறேன். நீங்கள் இரப்பது என்றே துணிந்தீர்கள். ஆயின் தம்மிடம் உள்ள பொருளை மறைத்துக்கொண்டு ஒருவர்க்கும் ஒன்றும் கொடாதிருக்கும் உலோபிகள் முன்னே புகுந்து கையை விரித்து இரக்கவேண்டா. சுரக்கும் பண்புள்ள வரும் கன்று உள்ள பசுப்போன்ற செயல் உள்ள வரும் ஆன நன் மக்களை அடைந்து வேண்டுக. அவர்களே உலகம் எங்கும் பரக்கும் பெருமை உள்ளவர் ஆவர் என்று திருவள்ளுவர் உரைத்தார்.

விளக்கவுரை :-

"இரப்பன் இரப்பாரை எல்லாம் இரப்பின்
கரப்பார் இரவல்மின் என்று" -திருக்குறள்.

பரப்பாளர்-உலகப் பரப்பையே புகழால் அளக்கக் கூடிய பெருமை உள்ளவர்; பகர்ந்தனர் - சொன்னார்.


இன்றுதுற வெனும்பெரும்பே
றெளியேனுக் கீந்தருள்க
நன்றுதுற வெனவருளி
ஞானநெறி புகுவிக்க
ஒன்றுபுற மகம்பொருந்து
முத்தமரே யுமதருளால்
என்றுமழி யாதபொருள்
எய்துவலே யளியேனே. 208

உரை :- இன்று துறவு என்ற பெருஞ் செல்வத்தை அடியேனுக்கு ஈந்து அருள வேண்டுகின்றேன். துறவே உனக்கு நல்லது என்று கூறி ஞான மார்க்கத்தில் என்னைப் புகச் செய்யவேண்டும். புறமும் அகமும் ஒன்றுக உள்ள உத்தம ஞானியே, உம் அருளால் என்றும் அழிவுறுத பொருளை அறி யேன்; பெறுவேன்.

விளக்கவுரை :- 'மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம் பழித்தது ஒழித்து விடின்' என்று வள்ளுவர் கூறுவர் ஆயினும் உலகம் மதிக்கும் பெருந்துறவு நிலையிலே ஒருவர் புகக் கருதின் அந்த நிலையில் அனுபவம் பெற்று ஞானமணியாக இருக்கும் குருமூர்த்தியைத் தேடி அடைந்து அவர் தரும் துறவைப் பெறவேண்டும் தாமாக மழித்தும் நீட்டியும் கொள்ளும் துறவு நரகத்திற் சேர்க்கும்-மனத்தை அடக்க இயலாதவர் துறவு வேடம் தாமே பூண்டு அழிந்த கதைகள் பலவாம்.

இனமகன்று பதமகன்று
　ளெழுந்தபெரு வேட்கையினுல்
வனமகன்று மலைகடந்து
　வருகின்றுர் முகநோக்கி
அனமகன்ற விராமகிருஷ்ண
　அவதூத பரமஹம்ஸர்
கனமகன்ற காயமெனக்
　களங்கமறப் புகலுவரே. 209

உரை :- இனத்தாரைப் பிரிந்து இருந்த பதவியை ஒழிந்து உள்ளத்தில் எழுந்த பெரு வேட்கையாம் காட்டைக் கடந்து, மலைகளைக் கடந்து தம்மை நோக்கி வந்து வணங்கிய சீடரைக் கண் குளிர நோக்கி உணவு உண்ணும் வழக்கம் ஒழிந்தவரான இராமகிருஷ்ண பரமஹம்ஸ அவதூதர் மேகம் விலகிய ஆகாயம் போல நிர்மலமான சித்த விருத்தியோடு சொல்கிறுர்.



ஸ்ரீமத் ஸ்வயம்ப்ரகாச ப்ரம்மேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள்
சேந்தமங்கலம்

விளக்கவுரை :- வேட்கை-உலகப் பற்று ஒழிந்து துறவு பெறவே துணிவு கொண்டு கருத்து. பதம் - நீதிபதி பதவி. இனம்-மக்கள் சுற்றத்தார் முதலியோர். அனம் - உணவு, அன்னம். ஹம்சகாயத்ரீ ஜபத்தில் மிகவும் விசாலமாகப் பயின்றவர்.

ஐயவருந் துறவுபுகற்
கமைந்தமன நிலையுடையை
மெய்யமரும் பொருந்துணிய
வேண்டுதியா லிக்கணமே
பொய்யகல மனந்துளிந்து
போதந்தாய் காளத்தி
ஐயனருள் நினக்குளதே
அவனருள்வ னனைத்தையுமே. 210

உரை :- ஐய. அரிய துறவு நிலையிலே புகுவதற்கும் பொருத்தமான மனநிலை உடையாய், சத்யம் என்று வேதம் விளக்கிய பரம்பொருளைத் தெரிந்துகொள்ள இக்கணத்தில் விரும்புகின்றாய். பொய் வாழ்வை விட்டு அகல மனந்துணிந்து இங்கு வந்தாய். காளத்திநாதன் திருவருள் உனக்கு உண்டு. அவன் எல்லாம் அருள்வான்.

விளக்கவுரை :- ஐய - அண்மைவிளி. துறவுக்குத் தக்க மனநிலை முமுக்ஷுத்வம். வேதாந்த விசாரத்துக்கு உரைத்த நான்கு சாதனங்களில் நான்காவது; மெய் அமரும் பொருள். மெய் என்று இருக்கும் பொருள், தத்வார்த்தம், பரமார்த்தம் என்று உரைக்கப்படும் பரமபொருள். பொய் - உலகம் உடல் உறவு எல்லாம் பொய் என்பதை உணர்ந்து வந்தது உரைக்கப் பட்டது. போதந்தாய்-வந்தாய். போதா-பகுதி ஞானத்துக்கும் பக்தி பரமசாதனம். ஆதலால் இறைவன் அருள் உண்டு. என்று உரைக்கப்பட்டது. ஞான கலையின் நாதன் ஆதலால் காளத்தியப்பன் திவ்ய ஞானம் அருள்வன் என்பது.

தத்தகுரு திருமரபிற்
சத்தறியு முனிவர்பலர்
சித்தரென விளங்கியது
செவியகமேற் றிருப்பாயே
அத்தகைய பெருந்துறவை
அடையவரும் பேறுடையாய்
முத்தர்கண நிறைநாடு
முழுதும்வலம் வருதிநன்றே. 211

உரை :- தத்தாத்ரேய முனிவர் ஸந்யாஸ பரம்பரையில் அநேக மகான்கள் சித்த புருஷராக விளங்கிய வரலாற்றைக் கேள்வியுற்றிருப்பாயே அத்தன்மையான பெருமை மிக்க ஸந்யாஸத்தை அடைய வந்த பாக்கியம் உள்ளாய். முத்தர் கூட்டம் நிறைந்த நாடு முழுவதும் வலம் வருதல் நல்லதாம்.

விளக்கவுரை :- அவதூத ஸந்யாஸ பரம்பரைக்கு ஆதி குரு தத்தாத்ரேய முனிவர். அவ் வழியில் வந்த மகான் சுகப் பிரம்மம் சமீப காலத்தில் அந்நெறியில் நிலை நின்றவர் பலராவர். முக்த கோஷ்டிகள் பல இருந்து வாழ்ந்து சிறப்பு உதவிய நாடு ஆதலின் இதனை வலம் வருவதே ஞான மார்க்கமாம்.

ஐம்மைபெறு பெருநிலையை
அவனருளா லடைகின்றாய்
செம்மைபெறு முளத்தோடே
தேயமெலாம் திரிந்திடுக
மும்மையுளே யொருமையுணர்
முத்தர்புகு நெருர்நகரில்
இம்மைநல முழுதுமுற
இப்பொழுதே செல்வாயே. 212

உரை :- ஐந்தாவதாக உரைக்கப்படும் ஆசிரமத்தை அந்தக் குருதேவன் திருவருளால் நீ அடைகின்றாய். செம்மை

நின்ற மனத்தோடு தேசமெங்கும் சஞ்சாரம் செய்க. மும்மைக்குள் ஒருமையை உணர்ந்த முக்த சிகாமணி சதாசிவப் பிரமம் சமாதி கொண்ட நெரூர் நகரில் இப்பிறப்பின நன்மை முழுதும் அடைய இப்பொழுதே செல்வாயாக.

விளக்கவுரை :- ஆசிரமம் நான்கு என்பது ஒரு சம்பிர தாயம். அவை பிரமசரியம், கார்ஹ ஸ்த்யம், வானப்ரஸ்தம், ஸந்யாஸம் என்பன இந்த நான்கு நிலைகளுக்கும் மேம்பட்ட ஐந்தாம் நிலையாக அவதூத ஆசிரமத்தை உரைப்பது தத்த சம்பிரதாயத்தின் கருத்தாம். நான்காம நிலைக்கு குடீசகம், பஹூதகம், ஹம்ஸம் பரம ஹம்ஸம், பரிவ்ராஜகம் என்ற ஐந்து கிளைகள் உண்டு. தண்டகமண்டல தாரியாக மாடாபத்யம் பெறுத வைராக்கிய சீலர் பரமஹம்ஸ நிலை வரை வருவர். அதனமேல் மடாதிபதி ஆசிப் பரிவ்ராஜக பட்டம் பெறுவர். அவர்கள் முண்டனம், தண்டம், கமண்டலம் காவியுடை உடைய வர்கள். தத்த சம்பிரதாயஸ்தர்க்கு இவை ஒன்றும் வேண்டுவ தில்லை. தத்தமுனி போன்று அவதூதக் கோலம் பூண்பதே தருமம்.

அவரருளா லுனக்கவர்தம்
அருட்பெயரே பெயராகும்
எவரருளா னமதுமர
பின்றளவு விளங்குவதோ
அவரருணீ யடைந்தாயே
வடையவுள பிறவுளவோ
தவரருளே துணையாகத்
தாரணிசூழ் வருவாயே. 213

உரை :- அந்த மகாயோகி சதாசிவர் திருவருளால் இன்று இத்துறவு பெற்ற உனக்கும் அவர் பெயரே பெயராகும். எவர் அருளால் நம் துறவு மரபு இயன்றளவு விளங்குவதோ, அவர்

அருளை நீ அடைந்தாய் ஆதலால் அடைய வேண்டிய பிற பொருள் உண்டோ! தவச் செல்வர் அருளே துணையாக உலகத்தைச் சூழ்ந்து வருவாய்.

விளக்கவுரை :- சதாசிவப் பிரம்மேந்திர ஸரஸ்வதி என்ற பெயர் இவர்க்கும் அன்று வந்தது. ஸந்யாஸ நாமம் தவிர இவர் பூர்வாசிரம நாமம் தெரியாத காரணத்தால் இவ்வரலாறு வரும் அளவும் இம் மகான் பெயர் இன்னது என்று உரைக்கப்படவில்லை. சதாசிவர் அருளும் தத்தாத்ரேயர் திருவருளும் இவர் பெற வேண்டும் என்பது கருத்து.

எனவருளித் துறவளித்தே
இனியகுடில் புகுந்தனரே
மனமகிழத் துறவுபெறு
மறையவரும் சதாசிவராய்
அனமகமே அகமனமே
அதுநானே நானதுவே
எனவழுத்து நாவினொடு
மெழுந்தனரால் வலம்வரவே. 214

உரை :- என்று அருள் செய்து இவர்க்குத் துறவறநிலை அருளிய பிறகு தம் இனிய குடிலிற் புகுந்தார் தம் மனம் மகிழ அவதூத ஆசிரமத்தை யேற்றுக்கொண்ட பிராமண உத்தமர் சதாசிவராகி ஹம்ஸ: ஹோமம், ஸோஹம் ஹம்ஸ:; அஹம் ப்ரம்மாஸ்மி ப்ரம்மை வாஹம் என்று அனுசந்திக்கும் நாவோடு பாரத தேசத்தை வலம்வரப் புறப்பட்டார்.

விளக்கவுரை :- இராமகிருஷ்ண பரமஹம்ஸ அவதூத ஸ்வாமிகள் தம்மைச் சரண் புகுந்த இம் மகானுக்கு உலகம் புகழும் பெருந்துறவு அரசராய், முன்னாளில் வாழ்ந்த சதாசிவப் பிரம்ம நாமம் சூட்டி அருள் புரிந்தார். ஹம்ஸ: என்பது

அஹம்ஸ: என்பதன் சுருக்கம். நான் அவனே என்பது அது தரும் பொருள் அவன் நான் நான் அவன் என்பது இம்மந்திரத்தின் பொருள். அவன் பரப்பிரம்மம் நான் ஜீவன். ஜீவப்ப்ரம்மைக்கிய சித்தாந்தத்தை விளக்குவது இம்மந்திரத்தின் நோக்கமாம்.

பாரதமா தலம்பலவும்
பணிந்துவரு நினைவுறவே
நாரதமா முனிவரென
நல்லதறி சதாசிவனுர்
சாரதம சமாதிபெறும்
தலத்தருகு புகுந்தனரே
நீரமிகு கவேரகன்னி
நிறைகரையி னின்றனரே. 215

உரை :- பாரத பூமியில் உள்ள பல புண்ணிய தலங்களையும் கண்டு பணிந்து வரும் எண்ணம் உண்டாக நாரத மகா முனியைப் போன்று சத்தை அறிந்த சதாசி..ப் பிரமேந்திரர் சாரமான தவச் சமாதி பெற்ற நெரூர்த் தலத்தின் அருகே சென்றுர். தண்ணீர் மிகுந்த காவேரியின் நிறை கரையில் நின்றுர்.

விளக்கவுரை :- புண்ய பூமியில் உள்ள சிவ விஷ்ணு ஆலயங்களையும் மகான்கள் அவதரித்து தருமப் பிரசாரம் செய்து அடங்கிய தலங்களையும் தரிசிக்க வேண்டும் என்ற கருத்தால் புறப்படும் இவர் முதற்கண் குருதேவர் ஆணைக்கிணங்க தமக்குத் தவப்பெயர் தந்த சதாசிவ சமாதிகளில் ஒன்றுன நெரூர்க்கு நடந்துசென்றுர் க்ஷேத்ராடனம் நெரூரில் தொடங்கும்.

குண்டலமே குழையரகக்
கொண்டவளுக் கிடமளித்து
மண்டலமா வருமரவை
மணிமுடியாக் கொளும்பரமன்

மண்டலமே புகழுநெரூர்
வாழ்கோயில் புகுந்ததன்கண்
மண்டலமே மவுனதவம்
வகித்திருந்தார் சதாசிவரே. 216

உரை :- குண்டலமும் காதணியும் பாம்பாகக் கொண்ட, பார்வதிதேவிக்கு இடப்பாகம் அளித்து, மண்டலம் இட்டுப்படம் எடுக்கும் பாம்பை அழகிய முடியாகக் கொண்டருளும் பரமசிவன் நிலவுலகம் புகழும் நெரூரில் வாழும் கோயில் புகுந்து பக்தியோடு ஒரு மண்டலம் இச் சதாசிவ முனிவர் மவுன மயமான தவம் பூண்டிருந்தார்.

விளக்கவுரை :- இறைவி, கணையாழி, கங்கணம், குழை, காதணி முதலிய ஆபரணம் எல்லாம் நாகங்களே என்பர். இறைவன் இலிங்க உருவில் அமரும் ஆலயங்களில் மண்டலம் இட்டுப் படமெடுத்த பாம்பின் உருவமே நாகாபரணமாகப் பொன் வெள்ளி, செம்பிற் செய்து அணியப் பெறுவது உண்டு. விசுவநாதன் கண்டத்தில் நாக ஆபரணம் பூண்டிருக்கும் காட்சியைக் காணலாம். மண் + தலம் - பூமிதலம். மண்டலம்- நாற்பத்தைந்து நாள். தவச் செல்வத்தின் மூர்த்தியான சதாசிவர் அருள்பெற இங்கு இருந்தார்.

நான்காவது

தலயாத்திரைப் படலம்

நீதி வழங்கும் பதியாகும்
　　நிலைமை வெறுத்துத் துறவுபெற்றுப்
பாதி மதியை யணிந்தருளும்
　　பரமன் போன்று திகம்பரராய்
ஓதி யுணர்ந்த பொருள்தேறும்
　　உளத்தோ டேகும் சதாசிவனுர்
காதி சுதனுர் போற்றவத்தின்
　　கருத்தா னடைந்தார் நெருூர்நகரே. 217

உரை :- வாதி பிரதிவாதிகளுக்கு நீதியை வழங்கும் நியாயாதிபதி ஆகிய பதவியை வெறுத்துச் சன்னியாசம் பூண்டு இளம் பிறையைச் சடையில் அணியும் பரமேசுவரனைப் போல் திகம்பராகித் தாம் இளமை முதல் ஓதியுணர்ந்த பொருளை ஆராய்ந்தறியும் மனத்தோடு போகும் சதாசிவப் பிரம்மேந்திரர் காதி தனயர் விசுவாமித்திரர் போலக் கடுந்தவம் புரியும் கருத்தால் நெருூர் நகரத்தை அடைந்தார்.

விளக்கவுரை :- நீதி வழங்கும் பதி - நியாயாதிபதி. திகம்பரர்-திசையே உடையாகக் கொண்டவர், ஆடையற்றவர். உணர்ந்த பொருள்-ஆத்ம தத்வம். காதி சுதர்-விசுவாமித்திரர். கடுந்தவம் புரிந்து நினைத்தது பெற்றுர். இங்கு உவமை.

உறவின் முறையார் பலரிருந்தும்
உரிமை மனைவி மகாரிருந்தும்
அறமென் றுரைக்கும் பெருந்தெய்வம்
அனந்த பதும னரசாளும்
திறமொன் றியமா நகராரும்
திருவாழ் அனந்த புரமகல
மறமொன் றறியா மனத்தாரை
வாழ்வு திருந்த வியற்றியதே. 218

உரை :- உறவின் முறை பூண்டவர் பலர் இருந்தும் உரிமையான மனைவியும் மக்களும் இருந்தும், தருமம் என்று உலகம் கூறும் பெருந் தெய்வமானது அநந்த பதுமநாபன் அரசு செலுத்தும் பெருமை பொருந்திய நல்ல நகரமாகும் திருவனந்தபுரத்தை அகன்று போச்கிப் பாவம் ஒன்றும் அறியாத மனமுள்ள அவரை முன் இருந்த வாழ்வு திருந்தும்படி புரிந்தது.

விளக்கவுரை :- அறம் என்ற தெய்வம் உறவு இருந்தும் மனைவி மக்கள் இருந்தும் மறம் அறியா மனத்தாரைத் திருவனந்தபுரமாகன்று போகச் செய்து வாழ்வைத் திருத்தியது என்று பொருள் கொள்க. இங்கு அறம் என்றது விசேஷ தர்மத்தை; ஸன்யாஸ தர்மத்தில் மனம் பற்றிய வைராக்கிய சிந்தைக்கு இவரைத் தூண்டிவிட்டு இருந்த நிலையையும் மனைவி மக்களையும மறந்து பிரிந்து ஓடச் செய்தது. தருமமே இவர் செயத பாவம் அன்று. முன்னே பல பிறவிகளில் இவர் முயன்று இயற்றிய அறமே இங்ஙனம் இவரைப பெருநிலை பெறச் செய்தது.

கலங்குந் தாயும் மைந்தர்களும்
காவல் வேந்தன் நகர்நீங்கி
விலங்கும் புறவும் மாசுணமும்
மிகுந்த வனததே சென்றவரை

மலங்கும் உறவின் முறையினரும்
வழியே தேடி யிளைத்தபினர்
இலங்கும் அனந்த புரநீங்கி
எய்தத் துணிந்தார் ஆந்திரமே. 219

உரை :- குடும்பத் தலைவரைப் பிரிந்து மனம் கலங்கும் தாயும் மக்களும், காவல் புரியும் மன்னன் நகரத்தை விட்டுப் புறப்பட்டு மிருகங்களும் பறவைகளும் பாம்புகளும் மிகுந்து வாழும் வனத்திற் சென்றவரை நினைத்து வருந்தும் உறவின் முறையாகும். அவர் சென்ற வழியே தேடி இளைத்த பிறகு விளக்கம் மிக்க திருவனந்தபுரம் நீங்கி ஆந்திர நாட்டை அடையத் துணிந்தார்கள்.

விளக்கவுரை :- காவல் வேந்தன் - பதுமநாபதாசனுக இராஜ்யத்தின் பாரத்தை வகிக்கும் சேரமன்னன். புறவு-பறவைகளைப் பொதுவாகக் குறிக்க வந்தது. விலங்கு - குறுக்கே வளர்ந்த உடம்புள்ள உயிர்கள். மாசுணம் - பெரும் பாம்புகள். இவை எல்லாம் வனவாழ்வு உள்ள உயிர்கள். வழியைத தேடி வந்த சுற்றத்தார் இளைக்க இவர் முன் சென்ருர் என்பது கருத்து.

மாசில் மனத்து மைந்தர்தமை
மறவார் வானப் பிரத்தரெனக்
காசி நகரில் உறைபெற்ருேர்
காதற் பெயரர் நிருபத்தால்
ஊசி நடந்த மகனுரின்
உள்ளத் துறவின் நிலையுணர்ந்தே
ஆசி யுரைத்தார் குலக்கொழுந்தா
யமைந்த மகரரா மவருக்கே. 220

உரை :- குற்றமற்ற மனமுள்ள புத்திரசிகாமணியை மறவாதவர்களாய் வானப்ரஸ்த ஆசிரமிகள் போல காசி நகரில்

வாழ்ந்த இவர் பெற்ளுேர் அன்புருவம் பூண்ட பௌத்திரர் எழுதிய கடிதத்தால், வடக்கு நோக்கி நடந்த தம் குமாரர் மனத்தின் வைராக்கியத்தை நன்கு உணர்ந்து குலக்கொழுந்தாக அமைந்த பேரர்களுக்கு ஆசி உரைத்து நிருபம் போக்கினர்.

விளக்கவுரை :- தந்தையின் கலைச் செல்வமே இவர் பெருவாழ்வுகளுக்குக் காரணம் ஆயிற்று. அதனுல் உயர் நிலை பெற்ற இவர் பெற்ளுேர்க்குத் தாம் இயற்றற்குரிய கடமையும் மனைவி மக்களைக் காக்கும் பொறுப்பையும் மறந்து ஒதுக்கித் துறவறம் பூண்டு புறப்பட்டதால் பெற்ளுேர், மக்கள், மனைவி வரலாற்றை ஒருவாறு முடிவு செய்தற்காக இச்செய்யுட்கள் அமைகின்றன. துறவிக்கு இக் கதைத் தொடர்பு வேண்டா.

குடும்பம் பிரிந்து துறவரசாய்க்
குரவ ரருளால் நடக்கின்ருர்
குடும்பம் சிறந்த வரலாற்றைக்
குறிப்பித் தொன்றும் கூறுகிலேம்
குடும்பம் உலக வுயிரெனவே
கொண்டார் அவரும் ஆங்காங்கு
குடும்பம் பலவும் அருள்வெள்ளம்
குளிக்க வருவார் சிவன்போன்றே. 221

உரை :- குடும்பத்தை விட்டுப் பிரிந்து துறவின் அரசு பூண்டவராய் தம் குருதேவர் திருவருளால் நடக்கின்ருர். ஆகவே அவரது குடும்பம் இதன்மேற் சிறப்படையும் வரலாற்றைக் குறித்து ஒன்றும் கூறமாட்டோம். உலகத்து உயிர் இனத்தையே தம் குடும்பமாகக் கொண்டார். அவர் அங்கங்கே பல பல குடும்பங்களும் அருள் வெள்ளத்திற் குளிக்கச் சிவபரம் பொருள் போல வருவார்.

விளக்கவுரை :- இக்காவியத்துக்கு இம்மகான் துறவறப் பெருமை உரைப்பதே கருத்தாதலால் அதன் பூர்வாங்கம் ஆகிய

குடும்பக் கதையை மிகவும் விரித்து உரைக்க இங்கு இடம் இல்லை என்று உரைக்கப்பட்டது.

கரூரி னருகே பசுபதியின்
  காட்சி கண்டு சதாசிவனார்
நெரூரில் ஒருமண் டலமிருந்த
  நேய மழியா ஞானமுனி
தீரும் அனந்த புரநீங்கியார்
  செல்வார் வடக்குத் திசைக்கண்ணே
ஒருரும் விழையார் பலதலமும்
  உளத்தால் நோக்கி நடந்தனரே. 222

உரை :- கரூரின் அருகில் வந்து அங்குக் கோயில் கொண்ட பசுபதியீசன் காட்சி கண்டு சதாசிவர் நெரூரில் ஒரு மண்டல காலம் இருந்த அன்பு அழியாத ஞானமுனிவர் அழகு மிக்க அனந்த புரத்தை நீங்கி அதனை மறந்து புறப்பட்டு வடக்குத் திசையிலே போகின்றார். ஒரு ஊரையும் விரும்பாத வராய்ப் பல தலங்களையும் மனத்தால் நோக்கி நடந்தார்

விளக்கவுரை :- கரூரில் உள்ள பசுபதீச்சுரத்தில் முன்னைய சதாசிவப் பிரம்மம் இறைவனைப் பூசித்து மலர்களைக் குவித்த வரலாறு உண்டு. இச்சதாசிவரும் அத்தலத்தில் இறைவனை வணங்கிப் புறப்படுகின்றார். திரு + ஊரும், திருமிக்க. ஒரு+ஊர்-ஒரூர். இவர் பல ஊர்களின் வழியே வந்தார் ஆயினும் ஒரு ஊரிலும் பற்றுக்கொள்ளாமல் அங்கங்கு உள்ள இறைவனை வணங்கி வழிபாடு செய்து மேல் மேல் மவுனமாக நடக்கின்றார்.

பூத பதியாம் பசுபதிதான்
  பூத மைந்தின் உருப்புனைந்து
காதல் கசிந்து கைகுவிக்கும்
  கணத்துக் கருளும் கருத்தானே

வேத முழக்கம் செவியேற்று
விளங்குந் தலங்கள் தொறுநடந்து
சாத மரணம் தவிர்த்ததவம்
தாங்கு முனிவர் பணிந்தனரே. 223

உரை :- பூத நாயகனுன பசுபதி ஐந்து பூதங்களின் உருவம் ஏற்றுக்கொண்டு காதலாகிக் கசிந்து கைகூப்பும் அன்பர் கூட்டத்துக்கு அருளும் கருத்தால் வேத முழக்கத்தைச் செவி யேற்று விளங்கும் திருத்தலங்கள் தோறும் நடந்து பிறப்பும் இறப்பும் தவிர்த்த தவத்தை மேற்கொண்ட முனிவர் பணிந்து வந்தார்.

விளக்கவுரை :- பூதங்கள், சிவ கணங்கள், சிவனுலகத் தில் கைங்கரியம் புரியும் பேறு பெற்ற புண்ணிய ஜீவன்கள். பூதபதி-பூதகணங்களின் தலைவன். ஐம்பூத உருவம் பெற்ற தலங்கள். பிருதிவி - திருவாரூர்; அப்பு - ஆனைக்கா; தேயு- அண்ணுமலை; வாயு-காளத்தி; ஆகாயம் - சிதம்பரம்; சாதம்- பிறப்பு.

உண்ணு முலையி னுடனுகும்
உருவம் கனலாம் பரம்பொருளை
அண்ணு மலையை ஆண்டவனை
அகல மனமே யிலாதவராய்
எண்ணு ளிருந்து பணிந்துருகி
இசைத்த கவிதை மாலையினுல்
மண்ணுர் அறியா மறையவனை
வாழ்த்தி யகன்ருர் முனிவரரே. 224

உரை .- உண்ணுமலை என்ற பெயர் பெற்ற இறைவி யோடு அமர்ந்திருக்கும் அக்கினியே சொரூபமான பரம்பொருளை, அண்ணுமலையை ஆண்டவனை விட்டுப் பிரிய மனமே இல்லாத

வராகவே எட்டு நாள் அத்தலத்தில் இருந்து பணிந்து மனம் உருகித் தாமே இசைத்த பாமாலையாய் உலக மக்கள் அறியாத வேதப் பொருளை வாழ்த்தி இம் முனிவர் பிரிந்தார்.

விளக்கவுரை :- அக்னிமயமூர்த்தி அரசாளும் தலமாத லால் திருவண்ணாமலை ஞானபூமி ஆயிற்று. திருப்புகழ் பாடிய பன்மொழிப் புலவர் டிண்டிம கவி அருணகிரிநாதர் இம்மலைப் பெருமானிடம் எல்லையற்ற அன்புள்ளவர். உமை இங்கு உண்ணாமுலை என்ற பெயர் பெற்றனள். குகனும், விநாயகனும் கூடப் பருகப் பெறாத பால்முலை உடைய உலகத்தாய். சம்பந்தருக்குக் காழியில் பொன் வள்ளத்தில் எடுத்துத் தந்த வரலாறே உண்டு. உபமன்யுவுக்கும் கொடுக்கவில்லை. அபீதகு சாம்பிகை என்பது வடமொழிப் பெயர்.

நதிகள் வழங்கும் புனலானே
நலஞ்சால் நகரம் பலகண்டார்
பதிகள் புகுந்து பரமபதி
பாதம் பணிந்து புறப்பட்டார்
எதிகள் இனத்துப் பெரியோரை
யாங்கே தொழுதல் வாய்க்குமென
விதிகள் திருத்தும் துறவுபெற்ற
மெய்யி னறிவர் நடந்தனரே. 225

உரை :- ஆறுகள் கொண்டுவரும் நல்ல தண்ணீரால் நன்மை சிறந்த பல நகரங்களைக் கண்டார். அந்த நகரங்களிற் புகுந்து பரமபதியான இறைவன் பாதங்களைப் பணிந்து புறப் பட்டார். துறவிகள் இனத்தல் உயர்ந்த சான்றோரை எங்கும் கண்டு வணங்க வாய்க்குமென்று பிரமன் விதித்த விதியையே திருத்தும் துறவறம் பூண்ட தத்துவ ஞானி நடந்தார்.

விளக்கவுரை :- நகரங்களுக்கு நதிகள் அழகு தருவன, வளம் தருவன, வாழ்வு தருவன. காளி கட்டம் என்ற நகரம்

கங்கையைக் கடலாகக் கொண்டு தொழிலும் வாணிகமும் வளர்ந்து சிறக்கிறது. காசிமாநகரம் கங்கையைப் புண்ணிய தீர்த்தமாகக் கொண்டு தன்னை அடைவார்க்கு இம்மை மறுமை நலம் தருகின்றது. துறவு பூண்டவர் விதியைத் திருத்தலாம் என்பது சங்கரர் வரலாறு.

தண்ணந் தமிழ நாட்டிலுள
தலங்கள் பலவும் வணங்கியபின்
விண்ணந் தொழுமா திரிபதகை
விளக்கம் பெறுநா டடைந்தாரால்
திண்ணந் துறவு பெருமையுறச்
சிறிதும் நாவை யசையாமே
எண்ணந் துணிந்த பெருமுனிவர்
எளிது நடந்தார் வனநெறியே. 226

உரை:- குளிர்ச்சியும் அழகும் உள்ள தமிழ் நாட்டில் ஆங்காங்கு விளக்கமுறும் திவ்ய க்ஷேத்ரங்களைக் கண்டு வணங்கினர். தேவர் உலகம் தொழும் பெருமையுள்ள கங்கா நதி பெருமை பெறும் வடநாட்டை அடைந்தார். உறுதியாகத் தம் துறவுநிலை பெருமை பெறும்படி வாயைச் சிறிதும் திறவாது தம் எண்ணம் இது என்று துணிந்த அப்பெரு முனிவர் காட்டு வழியே எளிதாக நடந்தார்.

விளக்கவுரை :- தண்மையும் அழகும் தமிழ் நாட்டுக்கு உள்ள பண்பு. தமிழ்க்கும் அவ்விரு பண்புகளும் உண்டு. விண்ணம் - வானவுலகம்; ஆகாயம்; திரிபதகை-மூன்று வழிகளிற் செல்லும் ஆறு. வானம், மண், பாதலம் என்ப. நாவை அசைத்தல் விருப்பு வெறுப்புக்கள் பிறக்க இடம் தருதலால் இம்மகான் மவுனமே பூண்டிருந்தார். திகம்பரர் ஆதலால் நகரங்களில் நடக்கவில்லை.

வார ணாசி நகர்புகுந்து
வள்ளல் விசுவ நாதனையே
பூர ணாதி புராணவெனப்
புகழ்ந்து பணிந்து வணங்கினரே
கார ணாதி நீயலையோ
கருத்தா வலையோ வனைத்துக்கும்
நார ணாதி யுருவெடுத்தநாத
னீயே யருள் வாயே. 227

உரை :- காசி நகரம் புகுந்து அங்குக் கோயில் கொண்ட அருள் வள்ளல் விசுவநாதனைப் பூரணப் பொருளே, ஆதிநாத பழையோய் என்று புகழ்ந்து பணிந்து வணங்கினார். உலகங் களுக்கும் உயிர்களுக்கும் காரண வஸ்துவான ஆதி பரம்பொருள் நீ அல்லையோ? எதற்கும் கருத்தா நீ தானே அல்லையோ? நாராயணன் நான்முகன் முதலிய உருவங்களையெல்லாம் பூண்ட நாதனான நீயே அருள்வாயாக.

விளக்கவுரை :- வரணா அசி என்ற இரு நதிகளின் இடையே உள்ள தலம் வாரணாசி என்ற பெயர் பெற்றது. பூரணன், ஆதி புராணன், காரணன். கருத்தா நாரணன் நான் முகன் எல்லாமாய் அல்லவுமாய் இருப்பவன் அவனே.

கங்கை யடக்கு சடைப்பரம
கங்கைக் கரைக்க ணிருந்தனையே
மங்கை கவுரி மணம்விழைந்த
மனத்தாய் இனத்தா ரில்லாதாய்
சங்கை யறவே யுயிர்ச்செவியிற்
சாற்றும் பெரிய மந்திரத்தாய்
நங்கை யமுனை வாணியொடு
நடக்கும் கங்கை யறிவாயே. 228

உரை :- கங்கையை அடக்கிய சடையுள்ள பரமனே, நீயே கங்கைக் கரையில் வந்து கோயில் கொண்டாய். மங்கையர்க்கு அரசி கவுரி தேவியின திருமணத்தை விரும்பிய மனம் உள்ளாய். ஒப்பானவர் எவரும் இல்லாத இறைவனே, ஐயம் அற உயிர்களின் செவியிலே சொல்லியருளும் தாரக மந்திரம் உடையாய் பெண்ணுருப் பூண்ட யமுனே, வாணி என்ற நதிகளோடு கலந்து நடக்கும் கங்கையை அறிவாயோ!

விளக்கவுரை :- பகீரதன் தவத்துக்கு இரங்கிக் கங்கையைச் சடையில் ஏந்தி உலகுக்கு உதவினுன். அக் கங்கைக் கரைக்கே அவி முக்த க்ஷேத்திர நாதனுக இருக்க வந்தான். காசியில் மரணம் அடைந்தவர்க்கு முக்தி உறுதி என்று கூறுவர். முத்திக்குக் காரணம் அங்கு இறந்த உயிர்கள் செவியேற விசுவநாதன் தாரக மந்திரத்தை ஓதி அருள் புரிவதே ஆகும். இதனை இராமகிருஷ்ண பரம ஹம்ஸர் நேரிலே கண்டு உரைத்தார்.

காலங் கடந்த கணக்காள
   கருத்தைத் திருத்தும் கணக்காய
ஞாலம் பிறந்த வுயிரனைத்தும்
   ஞானம் பெறவே யருள்பரம
கோலம் புரிய வருவார்முன்
   குழைந்து கொடுக்கும் மேனியினுய்
ஆலம் கரந்த கண்டத்தாய்
   அருள்வாய் என்று பிரிந்தனரே. 229

உரை :- கால எல்லே கடந்த கணக்குள்ளவனே உயிர்களின் கருத்தை நல்வழியிலே திருத்தும் பரமகுருவே, உலகத்திற் பிறந்த உயிரினம் எல்லாம் ஞானம் பெற அருளும் பரமனே, அலங்காரம் புரியவரும் ஆராதகர் முன்னே குழைந்து கொடுக்கும் திருமேனி உடையாய் ஆலாலம் என்ற நஞ்சு மறைந்த கண்டம் உள்ளாய் அருள் புரிவாய் என்று வணங்கி அப்பாற் சென்றுர்.

விளக்கவுரை :- கணக்காளன் - கணக்கு உள்ளவன். காலக்கணக்கு அவனுக்கு எல்லையற்றது. கணக்காயன்- ஆசிரியன். மாலையில் சப்த ரிஷி பூஜை என்பது அலங்காரத் துக்கு அமைந்தது. ஆலப் கரந்த கண்டன்-ஸ்ரீ கண்டன், நீல கண்டன்.

இமய மலையின் அடிவாரம்
எய்தி முனிவர் கணநிரம்பும்
அமைதி பொருந்தும் அரித்துவாரம்
அடைந்து பலநாள் ஆங்கிருந்தார்
சமதை யறியா வருணெறியின்
தலைவர் நிரம்பு மலைமுடிக்கே
சமய முணர்த்து பொருள்தெளிவான்
தனியே நடந்தார் சதாசிவரே. 230

உரை :- இமய மலையின் அடிவாரத்தை அடைந்து தவச் செல்வர் கூட்டம் நிறைந்திருக்கும் அமைதி பொருந்திய ஹரித் துவார க்ஷேத்திரம் அடைந்து அங்கே பலநாள் இருந்தார். ஒப்பு உரைக்க அறியாத அருள் நெறியில் தலைவர் பலர் நிரம்பி யிருக்கும் இமய சிகரத்துக்கு மதம் உணர்த்தும் தத்துவப் பொருளைத் தெளியும் பொருட்டு சதாசிவ முனிவர் நடந்தார்.

விளக்கவுரை:- காசியின் நீங்கிய முனிவர் கங்கைக்கரை வழியே நடந்து ஆங்காங்கு உள்ள புண்ணிய புரங்களை வணங்கி இமயத்தின் அடிவாரத்தில் கங்கைக் கரையில் உள்ள அறித் துவாரம் என்ற நகரை அடைந்தார். அன்றும் இன்றும் அங்கு துறவறத்தார் பெருகியிருப்பதால் அச்சங்கததில் விருப்பம் கொண்டு இவர் அந்நகரில் மாதக் கணக்காக இருந்தார். திகம்பர விரதம் பூண்ட சந்யாசிகள் பலர் அங்கு உண்டு.

அரியே அரனே அயனுகி
அகததுப் பொருளாம் பரம்பொருளே
கரியே புலியே யதனுரித்துக்
கவினு வுடுத்துப் போர்த்தருளும்
பெரியாய் கரியாய் மறையுணரும்
பெட்பாய் எனவே போற்றிநின்று
தெரியா வருமைப் பொருள்தெளிக்கும்
சிவத்தை நினைந்து நடந்தனரே. 231

உரை :- திருமாலும், பரமசிவனும், நான்முகனுமாகி மனத்துள் மறையும் ஆதம வஸ்துவும் ஆகி விளங்கும் பரம் பொருளே யானை புலிகளைத் தோல் உரித்து அழகுறவே போர்த்தும் உடுத்தும் இருக்கிற பெரியவனே கரியவனே வேதம் உணர்ந்த அன்புருவே என்று போற்றி நின்று தெரியாத அருமைப் பொருளைத் தெளிவிக்கும் சிவத்தை நினைந்து நடக்கின்ருர்.

விளக்கவுரை :- யானைத் தோல் போர்த்துப் புலிததோல் உடுத்தவன் பரமசிவன். கரியவன்-திருமால். வேதம் ஓதியவன். பிரமதேவன் மும்மூர்த்திகளும் ஒன்றே என்ற கருத்தால் வணங்கி வாழ்த்துகின்ருர். தத்தமூர்த்தி மூன்ருன ஒன்று.

கடலி னருகே வளர்தலங்கள்
காட்டி னிடையே யெழும்பதிகள்
திடலி னமைய வளர்தளிகள்
சிகர மிசையே வளர்தலங்கள்
உடலி னடங்கு முளம்போன்றே
உலகமெங்கு மடங்கு தலம்
மடலின் விளங்கும் மலர்மழையைப்
மனத்தாற் பெய்து வருவாரே. 232

உரை :- கடலின் அருகே வளரும் தலங்கள், காட்டினி டையே எழுந்த க்ஷேத்திரங்கள் மேடைகளின் மேல் அமைய வளர்ந்த ஆலயங்கள் மலைச் சிகரங்களில் வளரும் தலங்கள் உடம்பில் அடங்கும் மனம் போல உலகம் எங்கும் உள்ள திருப் பதிகள் மடல்களால் விளங்கும் மலர் மழையை மனத்தாலே பொழிந்து வருவார்.

விளக்கவுரை :- கடலின் அருகே உள்ளவை திருச் செந்தூர், திருவனந்தபுரம். திருமயிலாப்பூர், திருவல்லிக்கேணி காட்டின் இடையே உள்ளவை திருவாலங்காடு, திருமறைக்காடு திருச்சாய்க்காடு. சிகரமிசை வார் தலங்கள் திருவேங்கடம், திருமாலிருஞ்சோலை, திருத்தணிகை, கடிகாசலம் சிம்மாசலம் உடலில் அடங்கும் உள்ளம் போன்றவை மதுரை, திருநெல்வேலி திருவையாறு முதலியவை திவ்யத் தலங்களில் மானசிக பூசை செய்து போவார்.

ததீசி முனிபோல் உடலையுமே
தத்தம் புரியு மனமுள்ளர்
உதீசி திசையில் இமயமுடி
உள்ள முருகப் பல்லாண்டு
நதீசி யெனவே யுலகுபுகழ்
நலஞ்சால் கங்கைக் கரையிருந்தார்
பதீசி பாசி யெல நடந்து
பணிந்து மீண்டார் அவாசியிலே. 233

உரை :- ததீசி முனிவரைப் போலத் தம் உடம்பையும் உலக உபகாரமாகத் தத்தம் செய்யும் மனம் உள்ளவர். வடக் குத் திசையில் இமய மலையின் சிகரங்களிலே மனம் உருகப் பல ஆண்டுகள் நதிகளுக்குத் தலைவியாக உலவும் புகழ்பூண்ட நன்மை மிக்க கங்கைக் கரையிலே இருந்தார். மேற்கு, கிழக்கு

முதலிய திசையெல்லாம் நடந்து அங்கங்குள்ள தலங்களைப் பணிந்து தெற்கே மீண்டார்.

விளக்கவுரை :- ததீசி முனிவர் - இந்திரனுக்கு வச்சிர யாகும் பொருட்டு முதுகு எலும்பைக் கொடுத்த முனிவர். தத்தம்-தானம் செய்தல். உதீசி-வடக்கு பதீசி-ப்ரதீசி-மேற்கு பாசி (ப்ராசி)-கிழக்கு அவாசி-அர்வாசி-தெற்கு, நதி + ஈசி → நதித் தலைவி.

ஞான நெறியே நடந்து முத்திநகத்தின்
  சிகர மணைவதற்கு
மோன நெறியே யுரியதென்று
  முன்னோர் மொழிந்த நெறிபிடித்தார்
வான நெறியே நோக்குமவர்
  மனத்தை யடக்கு மாமுனிவர்
கான நெறியே நடந்துதமிழ்க்
  கடம்பா ரணிய மடைந்தனரே. 234

உரை :- ஞானம் என்ற உத்தம மார்க்கத்தில் நடந்து முக்தி என்ற மலையின் சிகரம் அடைவதற்கு மவுன மார்க்கமே உரியதென்று முன்னோர் சொல்லிய நெறியைப் பிடித்துக் கொண்டார். சுவர்க்கத்துப் போகும் கரும மார்க்கத்தையே கதி யாக நம்பியிருப்பவர் மனத்தை யடக்கி வைராக்கிய மார்க்கத்திற் செலுத்தவல்ல மகா முனிவர் காட்டுவழியே நடந்து தமிழகத்தில் உள்ள கடம்ப வனம் என்ற மதுரைத் தலத்தை அடைந்தார்.

விளக்கவுரை :- முக்திமலை முடியுடைய ஞானமே வழி யாம். அந்த ஞானசம்பத்து அமைய மவுனம் சிறந்த சாதனம். வானநெறி-அர்ச்சிராதி மார்க்கத்தையும் குறிப்பிக்கும் அர்ச்சி ராதி மார்க்கத்தையே எப்பொழுதும் சிந்தித்துத் தூய மார்க்கத் தில் வழுக்காதிருப்பவர் என்று இவர்க்கே பொருத்தலாம்.

மனத்தைச் சிறு வழியிற் போகாது அடக்கும் அவர் கடம்பாரணியம்-காட்டுவழி வந்தார் காட்டிலேதான் மெய்யறிவு அடைய வேண்டும் அது கடம்பாரணியம் ஆயது.

ஆல வாயின் அரசாகி
அமரும் பிரானை அங்கயற்கண்
கால மேனித் தவக்கொழுந்தைக்
கரத்தாற் பிடித்த பெருமானை
ஞாலம் வாழு முயிரனைத்தும்
நலமே பெறுமா வாழ்த்திநின்று
சாலி வனத்து வழிநடந்து
தண்ணம் பொருநை குறுகினரே. 235

உரை :- திருவாலவாய் என்ற திருத்தலத்தில் அரசாகியமரும் சொக்கலிங்கனை அழகிய மீன் போன்ற கண்களையுடைய கரிய திருமேனி கொண்ட தவக் கொழுந்தான மீனாக்ஷி தேவியைக் கையாற் பிடித்து மணம் புரிந்த கலியாண சுந்தரனை, உலகத்தில் வாழும் உயிர் எல்லாம் நலம் பெறுமாறு வாழ்த்தி நின்ற பிறகு மிகவும் காட்டு வழியே நடந்து குளிர்ந்த அழகிய பொருநையாற்றை அடைந்தார். சாலிவனம் - சாலிவாடிபுரம். திருநெல்வேலித் திருத்தலம்.

விளக்கவுரை:- இவர் மீனாக்ஷி சுந்தரேசனை வாழ்த்தியது உலக நலத்துக்கென்றேயாம். தண் பொருநை பொருத்தம் தாம்பிரபரணி என்ற நதி.

யாற்று நீரின் இடையினிலே
இருந்தார் தவத்தின் பிழம்பாவார்
நாற்று நடுவார் களைகளைவார்
நடக்கும் வழியே நடந்தனரே

வேற்று நினைவை யறவொழித்து
விமலப் பொருளே மனத்தமைத்து
நீற்று மேனி நிமலனைப்போல்
நெறியே நடந்தார் செந்திலுக்கே. 236

உரை :- தவப் பிழம்பான இப்புனிதர் தண் பொருநை ஆற்று நீரின் இடையே இருந்தார். நாற்று நடுபவரும், களை களைபவரும் நடக்கும் வழியில் நடந்து சென்றார். வேற்று நினைப்புக்களை முற்றும் ஒழித்துப் பரம்பொருளையே மனத்தில் நிறுத்தித் திரு நீறணிந்த திருமேனி கொண்ட பரமசிவனைப் போலவே செந்தில் வழி நடந்தார்.

விளக்கவுரை :- யாறு - ஆறு - தாமிரபரணி. ஆற்றின் நடுவே உள்ள மேடைகளில் மவுனமாகத் தியான யோகத்தில் அமர்ந்திருப்பர் நீர்க்குள்ளும் மூழ்கி இருப்பர். உலகத்தார் கபடம் அறியாத சாது சனங்கள் இடையே திரிவார். வேற்று நினைவு-உலகத்தையும், உடம்பையும் பற்றி உண்டாகும் நினைவு வகை. விமலப் பொருள்-அழுக்கற்ற ஆனந்த மயமான பொருள். நீற்று மேனி நிமலன்-திருநீறு பூசிய உடம்புள்ள சிவபெருமான் திகம்பரராக வருதலால் நீறு பூசிய மேனியோடு சிவபிரான்போல நடந்தார். செந்தில்-திருச்செந்தூர், முருகன் படை வீடுகளுள் ஒன்று.

ஞான மூர்த்தி கலைமூர்த்தி
ஞான கலையின் மகவாகி
மோன மூர்த்தி முகத்தெழுந்த
மூர்த்தி சிவத்தி னருள்மூர்த்தி
தான மூர்த்தி தவமூர்த்தி
தமிழுக் குரிமை தருமூர்த்தி
வான மூர்த்தி, நிலமூர்த்தி
வைகும் செந்தில் புகுந்தனரே. 237

உரை:- ஞானத்தின் மூர்த்தி, கலையின் மூர்த்தி, ஞான கலையான பரதேவதையின் குமாரனுகி, மவுன மூர்த்தியாகிய சிவபிரான் திருமுகத்தில் உள்ள நெற்றி விழியிலிருந்து பிறந்த மூர்த்தி, சிவனருளே உருவமான மூர்த்தி, தானம் தவம் இதுவே என்று உரைத்தக்க மூர்த்தி, தமிழுக்கு உரிமையான உயர்வு தந்த மூர்த்தி, சுவர்க்கமூர்த்தி, பூலோகமூர்த்தி, வாழும் திருச் செந்தூர் அடைந்தார்

விளக்கவுரை :- கலை-சாஸ்திரம், ஞான கலை - இறைவி டெயர் மோனமூர்த்தி - தென்றிசைமூர்த்தி. முகம் - இங்கு பால நேத்ரம் தான மூர்ததி- இல்லற மூர்த்தி- தவ மூர்த்தி துறவற மூர்த்தி -வான மூர்த்தி தேவசேனு காந்தன. நிலமூர்த்தீ - வள்ளி நாயகன். செந்தில்-ஜயந்திபுரம், வெற்றியூர்.

வேளாண் மகளேச் சதாசிவனுர்
வேலப் பெருமான் அருள்துணையாக்
காளா முகத்துக் காலனிரு
கையி லிருந்து விடுவித்தே
தோளா மலைகள் அசையாது
தோன்றி மறைந்த தெருவெல்லாம்
தாளான் நடக்கத் துணியாதே
தலையால் நடந்தார் தவழ்ந்தனரே 238

உரை :- வேளாளர் குலத்துக் குமாரியை நெரூர்ச் சதா சிவப் பிரம்மேந்திரர் முருகன் திருவருள் துணைகொண்டு கரு முகம் உள்ள கால தேவன் இரு கைகளிலிருந்து விடுவித்துத் தம் தோள் மலைகள் அசையாது தோன்றி மறைந்த தெருக்களே யெல்லாம் காலால் நடக்கத் துணியாது தலையால் நடந்தார். கைகளால் தவழ்ந்தார்.

விளக்கவுரை :- திருச்செந்தூரில் ஒரு வேளாளப் பெண் திருமணம் நிகழ்ந்த ஆரும் நாள் பாம்பு கடித்து இறந்தாள். இரு குலத்தவரும் துயரில் மூழ்கி இருந்தபோது அங்கு நெரூர்ச்

சதாசிவர் வந்து இறந்த பெண்ணை எழுப்பி முருகன் அருளை இக் குடும்பத்துக்கு உதவினார். அம்மகான் நடந்த வீதியில் இவர் தம் காலால் நடக்க மனம் கொள்ளாமல் கையால் தலையால் நடந்தார். அவர் அடங்கிய சமாதி ஐந்தும் தரிசித்த இம்மகான் அவரிடம் பரம பக்திகொண்டு இங்ஙனம் செய்தார்.

ஆறு முகத்தெம் பெருமானை
அரிய மறையின் பொருளானை
மாறு முகத்த வவுணர்களை
வதைக்க வயில்கொள் கரத்தானை
நீறு முகத்த நிருமலனை
நினைக்கு நினைவின் அப்பாலாய்
வேறு முகத்தின் விளங்குனனை
வீழ்ந்து தொழுது பணிந்தனரே. 239

உரை :- ஆறுமுகம் கொண்ட எப்பெருமானை அருமையான வேதப்பொருள் ஆனவனை மாறுபட்ட முகம் உள்ள அசுரர்களை வதைப்பதற்காக வேல் ஏந்து கையுள்ளவனைத் திருநீறு பூசிய திருமுகம் கொண்ட நிர்மலனை நினைக்கும் நினைவுக்கு அப்பாலாய் வேறு புதுமையுருவோடு விளங்கும் இறைவனை விழுந்து தொழுது வணங்கினார்.

விளக்கவுரை:- மாறுமுகம்-தேவர் கருத்துக்கு மாறுபட்ட நோக்கம் யானை முகம் சிங்கமுகம் முதலிய மாறுபட்ட முகங்கள். நினைவுக்குள் அடங்கும் பொருள் பரம் பொருள் ஆகாது. முருகனைப்பற்றி எத்தனை வகையாக நினைப்பினும் அத்தனைக்கும் அப்பாற்பட்ட புதுவுருவம் அவனுக்கு உண்டு.

ஏகம் உண்மை அறிவர்கணம்
இயம்பும் பலவா றெனுமுண்மை
நாகம் அணிந்த பிரானருளால்
நன்கு தெளிந்த முனிவரனார்

வேகம் அடங்கு பொறிகளையும்
வீழ்ந்து கிடக்கு மனத்தினையும்
ஆகம் படிந்த அழுக்கினையும்
அறியார் புரண்டார் கடற்கரையே. 240

உரை.- ஒருமையான உண்மைப் பொருள் ஞானிகளால் பல புருவம் உள்ளதாக உரைக்கப்படும் என்னும் உண்மையை நாகாபரணம் பூண்ட பரமன் திருவருளால் நன்கு தெளிந்து கொண்ட சதாசிவர் வேகம் அடங்கிய ஐந்து பொறிகளையும் விழுந்து கிடக்கும் மனத்தையும் உடம்பிற் படிந்த அழுக்கையும் அறியாது கடற் கரையிற் புறண்டார்.

விளக்கவுரை :- " ஏகம் ஸத்விப்ரா பஹுதா வதந்தி " என்பது வேத சிரம். சங்கரர், இராமானுஜர், மத்வர், நீல கண்டர், கௌராங்கர், வல்லபர், இராமாநந்தர் முதலிய பலரால் பலவாறு உரைக்கப்பட்ட பொருள் ஒன்றே என்பதை நன்கு உணர்ந்து திரிந்தார். திவ்ய ஞானம் உண்டாவதற்குச் சிவானுக்கிரஹம் வேண்டும். ஆதலின் நாகம் அணிந்த பிரான் அருளால் நன்கு தெளிந்தார். என்று உரைககப்பட்டது. பொறிகள் வெளி நோக்கு அடங்கவே மனம் வியாபாரம் அற்று ஒடுங்கியது. அம்மனத்தில் ஆனந்த மயமான பரப் பிரம்ம வஸ்து விளையாடியது. அதனால் இவரும் தம்மை மறந்து மணலிற் புரண்டார் என்றது.

அன்னைச் சிறப்பை அரனுர்க்கே
அளித்த முருகா குருபரனே
நின்னைப் பிரிந்து செல்வதெனு
நிலையு முளதோ வுலகத்தே
என்னைப் பிரிந்து பிருண்டுசெல
இயல்வ துளதோ இறையவனே
மன்னைத் துயருக் குரிமையுண்டோ
வள்ளால் நின்னை யடைந்தவர்க்கே. 241

உரை :- தாய் ஆகும் பெருஞ் சிறப்பைப் பரமேசுவர னுக்கே அளித்த முருகா, குருதேவா, உன்னைப் பிரிந்து போவது என்ற நிலையும் உள்ளதோ, உலகத்தில் என்னையே பிரிந்து பிற இடத்தே போக இயல்வதாமோ, இறைவனே, வள்ளற்பெரும், உனனை அடைந்து பணிந்த மனிதர்க்கு மன்னைச் சொல்கொண்டு வருநதும் துயரம் உண்டோ?

விளக்கவுரை:- முருகனுக்குத் தந்தையும் தாயும் சிவனே. முருகன எங்கும் இருப்பதால் அவனைப் பிரிதல் இயலாது. நான் என்னைப் பிரிந்தால் உன்னைப் பிரியலாம் என்பது நான் வேறு நீ வேறு இல்லை எனற கருத்தை விளக்குவது. 'நான் வேறெனு திருக்க நீ வேறேனு திருக்க' அருணகிரி, மன்னே - ஐயோ போயிற்றே என்று இரங்கும் சொல்.

அடிமை யானே தலைமையினால்
 ஆளும் பெருமான் நீயேயென்
குடிமை யறிதி குலமறிதி
 கொள்கை யறிதி குறிப்பறிதி
மடிமை யறிதி மயக்கறிதி
 வாக்கு மனமும் புகுந்தறிதி
மிடிமை யுளத்தே யிலைகண்டாய்
 வேதப் பொருளே யருளுகவே? 242

உரை :- அடிமையாக இருப்பவன் நானே, தலைமை கொண்டு என்னை ஆண்டருளும் பெருமான் நீயே. நீ என் குடித்தன்மை அறிவாய். குலம் அறிவாய்; கொள்கை அறிவாய்; குறிப்பு அறிவாய் சோம்பல் அறிவாய்; மயக்கம் அறிவாய்; என் வாக்கும் மனமும் புகுந்து அறிவாய். என் மனததில் வறுமை இல்லை; வேதப் பொருளே அருள் புரிவாய்.

விளக்கவுரை :- அடிமை நான். ஆண்டவன் நீ என்ற பேத புத்தி உபாசனு காண்டத்தில் அவசியமே. இந்நினைவு

இல்லாது ஒழியும் போது “அவன் நான், நான் அவன் என்ற ஐக்கிய புத்தி உண்டாகும். அது உண்டாவது என்பது உபசாரம் அந்த உணர்வை மறைந்திருந்த அஞ்ஞானம் அகன்றதும் அது தானே வெளிப்படும். குடிமை-உயர்ந்த குடியிற் பிறந்தவனுக்கு இருக்கும் உத்தம குணம். மனத்தில் வறுமை இல்லை என்பது உன்னைப்பற்றி நினைக்க விசாலமான எண்ணும் திறம் வேண்டும். ஆதலால் அங்கு வறுமை இல்லை.

மனத்தை வாக்கை நினக்கமைத்து
வாழத் தெரிந்தார் வாழ்வுற்றார்
தனத்தை நிலத்தை மிகவீட்டித்
தரும மறியார் நினைமறப்பார்
புனத்தை யடைந்து வள்ளிகுழல்
பூவை யணிந்த விளங்குமர
இனத்தை யகன்றே னிதயத்தே
இருப்பாய் செந்தில் விருப்பாயே. 243

உரை :- மனத்தையும் வாக்கையும் உனக்கே உரியதாக அமைத்து வாழத்தெரிந்த வைராக்கிய மூர்த்திகள் உண்மையான வாழ்வு பெற்றார்கள். செல்வத்தையும் நில புலன்களையும் மிகவும தேடித் தருமம் அறியாத மக்கள் உன்னை மறப்பார்கள். தினைப் புனத்தை அடைந்து வள்ளியின் கூந்தலில் மலர் சூட்டிய இளங் குமர, இனத்தை அகன்று வந்தேன். செந்தில் நகரில் விருப்பம் கொண்ட செல்வ! என் இதயத்தில் வீற்றிருப்பாயாக.

விளக்கவுரை :- இறைவனுக்குத் தம் மன வாக்கு காயங்களை அர்ப்பணம் செய்தவர். அழியாத வாழ்வு பெறுவது உறுதி என்கிறார் உலக வாழ்வு பெரிது என்று எண்ணி நிலம் புலம் பணம் தேடியவர் நிலையான பெரு வாழ்வு பெறமாட்டார். இனம்-மனிதர் இனம்.

நெஞ்சு சிவத்தில் மூழ்கியது
நினைக்க வேறு பொருளில்லை
நஞ்சு பருகும் பெருமானை
நல்லோர் வினைகள் அறுப்பானைக்
கொஞ்சு கிளிபோல் மொழியுமையின்
குழலை வகிர்ந்து மலர்திணிக்கும்
அஞ்சு முகத்தெம் மையனையான்
ஆறு முகத்தே யறிந்தேனே. 244

உரை :- மனம் சிவபரம்பொருளில் மூழ்கியது. நினைக்க வேறு பொருள் இல்லை உலகம் வாழ நஞ்சம் உண்ட பெருமானை நன்மக்கள் இரு வினைகளையும் அறுத்து அருள்வானை, கொஞ்சும் கிளி போன்ற சொற்களையுடைய உமாதேவியின் கூந்தலை வகிர்ந்து மலர் சூட்டும் அஞ்சு முகத்து எம்பெருமானை இந்த ஆறுமுகத்துள் அறிந்தேன்.

விளக்கவுரை :- சிவ பரம் பொருளில் மனம் வயித்திருப்பதால் அங்கு நினைக்க வேறு பொருள் இல்லை. ஒரு பொருள் நிரம்பியிருக்கும் இடத்தில் மற்றொன்று நுழைதல் இயலாது. நெஞ்சுள் நிரம்பிய பொருள் பரம்பொருள் ஆதலின வேறு ஒன்றும் அங்கு நுழைய இடம் இல்லை. தேவர் வாழவே நஞ்சுண்டான் ஆதலின் அச்செயலே உயிர்க்கு உதவியான கருணைச்செயல். உமையோடு இன்புற்றிருக்கும் பரமன் அஞ்சு முகத்தான். அவன் தேவர் பொருட்டு அருளிய குமரன் ஆறு முகத்தான். ஆறுமுகத்தான் வேறு அஞ்சு முகத்தான் வேறில்லை.

கல்லி னுச்சி விளங்குமொளி
கடலின் முன்னே நின்றவொளி
சொல்லி னகத்தே சுடருமொளி
தூய்மை சிறந்த வாய்மையொளி

வில்லின் வாளின் வேலினொளி
வேல நீயே யெனவறிந்து
நெல்லின் மிகுந்த தமிழகத்து
நினையே நினைந்து நடப்பேனே. 245

உரை :- மலையின் உச்சியில் விளங்கும் ஒளியுருவமும் கடலின் முன்னே கோயில் கொண்ட ஒளியுருவமும் சொல்லின் அகத்தே விளங்கும் பொருளான ஒளியும் பரிசுத்தமிக்க சத்யம் என்ற பேரொளியும் வில்லில் வாளில் வேலில் விளங்கும் ஒளியும் வேலனே நீயேதான் என்று தெரிந்து நெல்லாற் சிறந்த தமிழகத்தில் உன்னை நினைத்தே நடப்பேன்.

விளக்கவுரை :- கல்லினுச்சி விளங்கும் ஒளி - தணிகை நாதன். பழமுதிர் சோலைக் குமரன்-கடலின் முன் நின்ற ஒளி. திருச்செந்தூர்க் குகன் சொல்லின் அகத்து ஒளி, வாய்மை ஒளி, வில் ஒளி வேல் ஒளி எல்லாம் முருகனே என்ற உண்மையைய் இம் மஹான் உணர்கின்ருர். தமிழகத்து முருகனே நினைப்புக் குரியவன் ஆனுன்.

ஆலங் களத்தி லணிந்தருளும்
ஐயன் உவந்த குற்ருலம்
காலங் கடந்த வருவியிலே
களித்துக் குளிக்கும் கருத்தாலோ
கோலம் தெரிக்கும் அருளிறைவி
குளிர்ந்த விழியின் வீழ்தற்கோ
ஞாலம் துறந்த ஞானமுனி
நடந்தார் அடைந்தார் நலமுறவே 246

உரை :- ஆலாலம் என்ற நஞ்சைக் கழுத்துக்கு அழகாக அணியும் பரமன் உவந்து கோயில்கொண்ட திருக்குற்ருலத்திலே யுள்ள காலம் கடந்த அருவியில் இன்புற நீராடும் கருத்தாலோ.

தன் திருக்கோலத்தை விளக்கும் இராஜ ராஜேஸ்வரி குளிர்ந்த விழிப் பார்வையில் விழுவதற்கோ, உலகத்தைத் துறந்த ஞான முனிவர் நடந்து நலமாக வந்து சேர்ந்தார்.

விளக்கவுரை :- குற்றால நாதனை அகத்தியர் வணங்கி உலகம் வணங்க வைத்தார். அவர்க்கு முன் திருமாலாய் இருந்த மூர்த்தி அவர் வருகையால் சிவனுருப் பூண்டான் என்பது புராண வரலாறு. குற்றாலத்து அருவியில் நீராடும் எண்ணம் இவர்க்கு உண்டாயிற்று என்பது உலக நோக்கால் அன்று-அருவி யாட்டமும் இறைவன் அருள் மயமே என்ற கருத்தால் எழுந்தது. திருக்குற்றாலக் கோயிலில் இறைவன் இறைவி தனியே இருப்பினும் விசேஷ சக்தியோடு இராஜராஜேஸ்வரி விளங்குதல் உலகம் அறிந்த உண்மையாம்.

உற்றார் இனத்தை உணராதே
உறவின் முறையை நினையாதே
பற்று மிருமை யொழித்தகன்ற
பரம ஞான தவமுனிவர்
கற்றார் கனிந்து பராவுகின்ற
கருணைப் பெருமான் திருமுன்னே
முற்று மதிய மிலைந்தபெரு
முதல்வன் போன்றே நின்றனரே. 247

உரை:- உற்றவர் இனத்தை மதியாமலும் உறவின்முறை கொண்ட சுற்றத்தாரை நினையாமலும் அகப்பற்று புறப்பற்று என்று இரு வகையும் ஒழித்து அகன்ற பிரம ஞான தவ முனிவரான சதாசிவப் பிரம்மேந்திரர் கற்ற புலவர்கள் கனிந்து புகழ்கின்ற கருணைப் பெருமான் திரு முன்பு இளம் பிறையை அணிந்த பரமன் போலவே நின்றார்.

விளக்கவுரை :- பரம வைராக்கிய மூர்த்தியாக வந்த சதாசிவப் பிரம்மேந்திரர் பரம ஞான தவ முனிவர் என்று புகழப்

படுகிறுர். அகப்பற்று - நான் என்ற உணர்வு; புறப்பற்று எனது என்ற உணர்வு; அகங்கார மமகாரங்கள்-முற்றுமதியம்-முதிர்ச்சி பெருத சந்திரன்; இளம்பிறை; மிலேதல் - அணிதல்; இவர் திகம்பரர் ஆதலால் சிவபெருமானுக்கு இணையானுர்.

மலேமேல் ஏறி மிகநடந்தார்
வனத்தி னிடையே மறைந்திருந்தார்
கலேமேல் மறைந்த பொருள்காணும்
கருத்தா லடங்கி யேகாந்த
நிலேயே துணிந்து விலங்குறவு
நிலேக்கும் சூழல் அகம்புகுந்து
துலேயே யிலாத பெருந்தவத்தின்
சுவையை யுணர முயன்றனரே. 248

உரை :- குற்றுல மலே மேல் ஏறி நெடுந்தூரம் நடந்தார். காட்டினிடையே மறைந்திருந்தார். சாத்திரங்களுக்கு மேலே மறைந்திருக்கும் பொருளேக் காணும் கருத்தால் அடங்கி ஏகாந்த மான நிலேயைத் துணிந்து விலங்குகளும் பாம்புகளும் வாழும் இடம் புகுந்து ஒப்பற்ற தவத்தின் சுவையை உணர முயன்றுர்.

விளக்கவுரை:- குற்றுல மலேயில் மேற் செல்லச் செல்ல மரங்களின் அடர்த்தியுள்ள காடுகளேக் காணலாம். பிறர் கண்ணிற் படாத ஏகாந்த யோகம் விரும்பும் இத்தகைய மகான் களுக்கு வேண்டிய மர நிழல் பல அங்கு உண்டு விலங்கு வகைகளும் அரவ வகைகளும் வருமாயினும் இவர் அவைகளேக் கண்டு சிறிதும் மனம் தளராது தனிமையில் மவுன தவம் பூண்டிருக்கத் துணிந்தார். துலே-ஒப்பு; தவத்தின் சுவையைத் தவம் புரிந்த தவச் செல்வர் அறியலாமே அன்றி அதைப்பற்றி ஆயிரம் ஏடு புரட்டியும் அறிய இயலாது.

கூத்தன் உவந்த குற்றாலக்
குன்ற முடியில் அருவிகளை
யாத்த துணையாப் பூண்டிருந்த
இணையே யறியா முனிவரனார்
கோத்த வினையின் பிணக்கொழிந்து
குணக்குக் குடக்கு நினையாதே
ஏத்த அரிய பரம்பொருளே
இருக்கும் திருப்பூ வணமடைந்தார். 249

உரை :- கூத்தப் பெருமாள் கோவில் கொள்ள விரும்பிய குற்றால மலை முடியில் உள்ள அருவிகளையே தமக்கு அமைந்த துணைகளாகக் கொண்டிருந்த இணையில்லா முனிவரர் பிறப்போடு கட்டுண்ட வினைப் பிணக்கு ஒழிந்து கிழக்கும் மேற்கும் நினையாமல் புகழற் குரிய பரம்பொருள் இருக்கும் திருப்பூவணம் அடைந்தார்.

விளக்கவுரை :- குற்றாலத்துள் உறையும் இறைவனைக் கூத்தன் என்றே அப்பர் புகழ்கின்றார். 'உற்றார் யார் உளரோ உயிர்கொண்டு போம் பொழுது குற்றாலத்துறை கூத்தனை யன்றியே' என்பது அவர் கருத்து. அருவிகளோடு ஏகாந்த வாசம் செய்தார். தேனருவி சன்பகாடவி அருவி என்ற எல்லைக்கு மேல் சென்று ஏகாந்தத்தில் இருந்தார், திருப்பூவணம் வந்தார்.

பூவால் நிறைந்த வனத்தகத்தே
புகுந்து விளங்கிப் பொன்னனையாள்
தேவால் உயர்ந்த நிலைமையுறச்
செய்த பெருமான் அடிவணங்கி
நாவால் இசைத்தற் கரியபுகழ்
நலஞ்சால் மானு மதுரைக்கு
பாவால் உயர்ந்த வாக்குடையார்
படர்ந்தார் வையை நடந்தாரே. 250

உரை :- பூவால் நிறைந்த வனத்தில் புகுந்து கோயில் கொண்டு பொன்னனையாள் தெய்வத்தால் உயர்ந்த நிலைமை பெறச் செய்த பூவண நாதன் பாதங்களை வணங்கி நாவால் உரைத்தற்கரிய புகழ்ப் பெருமையுள்ள மானுமதுரைக்கு இறைவனுக்கு அர்ப்பணம் செய்த பாவால் உயர்ந்த வாக்குடைய தவச் செல்வர் வைகை வழியே நடந்து வந்தார்.

விளக்கவுரை :- பூவால் நிறைந்த வனம் - பூவனம்; திருப்பூவனம்; பொன்னனையாள் - திருப்பூவணத்தில் வாழ்ந்த கணிகை. அவள் தன் செல்வத்தை எல்லாம் சிவார்ப்பணம் செய்து சிவகதி பெற்றாள். தே-தெய்வம், தெய்வத் தன்மை. மானுமதுரை திருப்பூவணத்திற்குக் கிழக்கே உள்ள சிவக்ஷேத்திரம். இது வானர வீர மதுரை என்று உரைக்கப்படும். இராம கைங்கரியம் புரிந்த வானர வீரர் இங்கு வந்து சிவபிரானை வழிபட்டதாகப் புராணம் கூறும்.

சோம நாதன் ஆலயத்தைச்
சுற்றி வருவார் ஒருபுறத்தே
காம மாதி யறுபகையும்
களைந்த முனிவர் சதாசிவனார்
ஏம முலகம் பெறவமைந்த
இருக்கை சமாதி நிலையுணர்ந்து
நாம முருவ மிலாவொருமை
நயந்து வியந்து பணிந்தனரே. 251

உரை :- மானுமதுரையிலே கோயில் கொண்டருளும் பரம மூர்த்தியான சோமநாதன் ஆலயத்தைச் சுற்றி வலம் வருவார். அங்கு ஒரு பிராகாரத்தில் காமம் முதலிய ஆறு பகைகளையும் களைந்து சுத்த சைதன்யமாக இருந்த சதாசிவப் பிரம்மம் உலக நலம் பெறுமாறு அமைந்த சிலா மயமான சமாதியில் அடங்கியிருந்த நிலையை உணர்ந்து நாமம் உருவம் இல்லாத பரம்பொருளைத் தியானித்து அச்சிலை முன் பணிந்து நின்றார்.

விளக்கவுரை :- மானுமதுரையில் சிவாலயத்துக்கு பின் புறம் உள்ள பிரகாரத்தில் ஒரு சிறு கல் தனியாக நிற்கிறது. அதனைச் சதாசிவப்ரம்மேந்திர சமாதி என்று அந்நகரில் உள்ள பழுத்த கிழவர்கள் கூறுவது உண்டு.

தீங்கே யறியா வாழ்க்கையினர்
சிவமே யாய சதாசிவனர்
நீங்கே மெனவே நிலைத்ததலம்
நிலத்து ஊைந்தா மவற்றுள்ளே
ஊங்கே பொன்னிக் கரையகத்தே
உள்ள சமாதி பணிந்தபினர்ப்
பாங்கே வேக வதிக்கரையிற்
பார்த்தார் இன்ன சமாதியையே. 252

உரை .- தீமையே அறியாத வாழ்வு உள்ளவர் சிவமே ஆகச் சஞ்சரித்த சத.சிவப் ப்ரம்மேந்திரர், நீங்கமாட்டோம் என்று நிலைபெற்ற தலம் இப் பூமியில் ஐந்தாம். அவற்றுள் தூரத்தில் காவேரிக் கரையிலுள்ள நெரூர்ச் சமாதியைப் பணிந்த பிறகு மூறைப்படி வைகை யாற்றின் கரையில் இந்த சமாதியைப் பார்த்தார்.

விளக்கவுரை :- அவர் பெயரே குருதேவரால் இவர்க்கு அளிக்கப்பட்டது. ஆதலின் அவர் சமாதிகளை எல்லாம் இவர் கண்டு வணங்குவார். சமாதிகள் ஐந்து. பாலசுப்ரமண்ய யதீந் திரர் பாடிய சதாசிவ அஷ்டகத்தில் இவை தெளிவாக உரைக்கப் பட்டுள்ளன. நருமதைக் கரையில் ஒங்கார க்ஷேத்திரம். வைகைக் கரையில் மானுமதுரை, காவேரிக் கரையில் நெரூர், கங்கைக் கரையில் காசி க்ஷேத்ரம், சிந்துக் கரையில் கராச்சி நகரம் என்பது அவர் குறித்த சமாதி பஞ்சக ஸ்தல வரலாறு.

இராமன் புரிந்த சமரகத்தில்
இயன்ற வுதவி யெலாம்புரிந்தே
இராம குணமாம் கடல்குளித்தே
இனிது மீண்ட வானரர்தாம்
இராம நாத னடிபரவி
யெய்தி மானு மதுரையிலே
இராம காதை பரப்புங்கால்
ஈண்டும் வழிபா டியற்றினரே 253

உரை :- இராமன் புரிந்த இலங்கைப் போரிலே தம்மால் இயன்ற உதவி எல்லாம் செய்து இராம குணம் என்ற கடலிற் குளித்து மகிழ்ந்து திரும்பிய வானரர்கள் இராமநாதனுடைய திருவடிகள் முறைப்படி வணங்கி அதன் பிறகு மானுமதுரையில் இராமபிரான் கதையைப் பாடிக்கொண்டிருந்த போது இங்கும் சிவன் வழிபாடு செய்தார்கள்.

விளக்கவுரை :- வானர வீரர் இராம காரியம் நிறைவேறிய பிறகு இராமேசுவரத்தில் மூர்த்தி தலம் தீர்த்தம் மூன்றும் சிறந்திருக்கக் கண்டு தம்மால் இயன்றவளவு பூசைகள் செய்துவிட்டு மரங்களில் ஏறிப் பாய்ந்து மானுமதுரைக்கு வந்து அங்கு சோமநாதனைத் தரிசித்துத் தம் தம் மனங்கள் எண்ணியபடி ஆராதனை செய்து மனம் மகிழ்ந்தார்கள்.

கவிகள் பணியை விரும்புபிரான்
கருணை பொழியும் விழிப்பரமன்
அவிகள் அமரர்க் களித்தவர்தம்
அருளால் மழையை வருவிக்கும்
புவிகள் வணங்கு புத்தேளிர்
பூசை யேற்று விளங்குதளி
செவிகள் குளிரும் கவிதைகளைச்
செப்பிப் பணிந்தார் முனியரசே. 254

உரை :- வானரர் செய்த திருப்பணியை விரும்பிய பரமன் கருணை மொழியும் விழிகளைக்கொண்ட சோமநாதன் தேவர்களுக்கு அவிர்ப் பாகத்தைக் கொடுத்து அவர் அருளாலே மழையை வருவிக்கும் பூமி வணங்கும் தேவர் ஆன வேதம் உணர்ந்த வேதியர் பூசைகளை யேற்று விளங்கும் கோயிலில் இறைவன் செவி குளிரும் கவிதைகளை இசைத்து இம்முனிவரர் பணிந்தார்.

விளக்கவுரை :- கவிகள் - கபிகள் – வானர இனத்தார். வானரர் திருப்பணியை விரும்பி யேற்றவன் சோமநாதன். அன்பர் நினைத்த எல்லாம் நிறைவேறக் கருணை அமுதம் பொழியும் விழியால் அவர் இருக்கும் திசையையே நோக்கும் பரமன். அன்பர் எத்திசையில் இருந்தாலும் பார்த்து அருளும் பொருட்டே அமலன் ஐந்து முகத்தோடு இருக்கின்றான் - புத்தேளிர் தேவர். புத்தேள்-ஒருமை. புத்தேளிர் - பன்மைச் சொல் புவிவணங்கு புத்தேளிர்-வேதப் பிராமணர்.

திங்க ளணிந்த சிவபெருமான்
  தேவி யோடு மமர்ந்தருளும்
சங்க மிகுந்த மதுரைநகர்
  தனக்கொப் பில்லாப் பூவணமே
பொங்கு புதழ்சால் திருச்சுழியல்
  புராரி விளங்கு காளப்பேர்
எங்கு நடந்தே யாடானை
  யெய்தி மீண்டார் கவிஙகரே. 255

உரை :- சந்திரனைச் சடைமுடிமேல் அணிந்த சிவபெருமான் இறைவியோடு கோயில் கொண்டருளும் தமிழ்ச் சங்கம் வாழ்வு பெற்ற மதுரை நகர் தனக்கு ஒப்பில்லாத திருப்பூவணம் மிகுந்த புகழ் பொருந்திய திருச்சுழியல் திரிபுராந்தகன் மூன்று உருவத்தோடு விளங்கும் திருக்காளப்பேர் எங்கும் நடந்து

போய்ப் பணிந்து திருவாடானையிற் சிவனைத் துதித்து மீண்டும் மானுமதுரைக்கு வந்தார்.

விளக்கவுரை :- பாண்டி நாட்டுத் தலங்களை எல்லாம் வணங்க விரும்பி மதுரைக்கு வந்தார். மதுரை சங்கம் இருந்த மதுரை என்று புகழப்பட்டது. திருப்பூவணம் - ஒப்பற்றது. புஷ்பவனக் காசி என்பர் திருச்சுழியல்; காளையார் கோவில் இங்கு மூன்று. சிவ மூர்த்தங்கள்; இதுவே காளப்பேர் என்ற பெயர் உள்ளது. சங்க காலத்தில் சிறந்தது.

சாந்த மூர்த்தி சதாசிவனார்
சமாதி சூழும் கருத்தாலோ
மாந்தர் அமைதி குலையாத
வழியி னொதுங்கு திறத்தாலோ
காந்த மிழுத்த விரும்பேபோற்
கருத்து ளொருமை படைத்தமுனி
வாய்ந்த வையைக் கரைக்கண்மை
மானு மதுரை மீண்டனரே. 256

உரை :- சாந்த மூர்த்தியான சதாசிவப்ரம்மேந்திரர் சமாதியை வலம் வரும் கருத்தாலோ, மனிதர் மனவமைதி குலையாது வழியில் ஒதுங்கி நடக்கும் நோக்கத்தாலோ, காந்தம் இழுத்த இரும்பு போல மனத்துள் பிரமானந்த அனுபவம் பெற்ற முனிவர் வைகைக் கரையில் இருக்கும் மானுமதுரைக்கு மீண்டு வந்தார்.

விளக்கவுரை :- ஒரு தலத்தில் நிலைத்து நிற்கும் கருத்து இவர்க்கு இல்லையாயினும் மதுரை திருப்பூவணம் திருச்சுழியல் காளையார் கோவில் திருவாடானை முதலிய புண்ணிய க்ஷேத்திரங்களை வலம் வந்த பிறகு ஏதோ ஒரு சக்தியால் தூண்டப்பட்டு மீண்டும் மானுமதுரைக்கு வந்தார். அங்கு அவர் மீண்டு

வந்ததற்குக் காரணம் கற்பிப்பது எளிதன்று, ஆதலின் சதாசிவ சமாதியை வணங்கவோ, ஏகாந்த ஸ்தலம் விரும்பியோ, இங்கு வந்தார். நாம் காரணம் அறியோம் என்கிறுர். காந்தம்-சதாசிவ் சமாதி; இரும்பு-இம்மகான்; இரும்பு காந்தம் இழுத்த பக்கம் போவது போல எங்கோ திரிந்த இவர் இங்கு வந்தார்.

ஐந்தாவது

சீடரைப் பெற்ற படலம்

குருவை நாடிய கருத்துள
    மாணியார் குரங்கினம் வழிபட்ட
உருவை நோக்கின ருளமலர்
    மதுவெழ உருகினர் கரங்கூப்பி
மருவை யேந்திய மலர்களால்
    அருச்சனே வழிமுறை புரிந்தேத்திக்
கருவை யென்றுமே புகுதரா
    நிலேதரும் கருணேயை இரப்பாரே. 257

உரை :- தமக்கு அமைந்த குருமூர்த்தியைத் தேடிய கருத்துள்ள பிரமசாரி ஒருவர் வானர வகுப்பினர் வழிபட்ட சிவலிங்கத்தை நோக்கினுர். உள்ள மலரிலே ஆனந்த மதுத் துளிக்க இருகரமும் கூப்பி உருகினுர். மணம் மிக்க மலர்களால் சம்பிரதாயப்படி அர்ச்சனே செய்து என்றும் கருப்பத்துட் புகாதிருக்கும் பரமானந்த நிலேயை அருளும் கருணேயை வேண்டினர்.

விளக்கவுரை :- இங்குப் பிரமசாரியாக வருபவர் புதுக்கோட்டை அருகில் கானப்பேட்டை என்ற அகரத்தில் வாழ்ந்த வைதிக குடும்பத்தினர், வடமொழி, தமிழ் மொழி, ஆங்கிலம் பயின்றவர். சில காலம் உத்யோகம் வகித்துக் குடும்பத்துக்கு உதவியவர். வைராக்கியம் பிறந்ததால் வடக்கே

நெடுந்தொலை சென்று மகான்களை வணங்கித் தெய்வத்தின் திருவருளைத் தெளிந்து வந்தவர். கிருஷ்ணமூர்த்தி என்ற பெயர் உள்ளவர்.

வாழ்ந்து போயின பிறவியோ
கணக்கில வள்ளலே இனிமேலும்
தாழ்ந்து தாயரின் அகட்டுளே
பிறப்புறு சழக்கினில் அழுத்தாதி
வீழ்ந்து நின்கழல் முடிமிசை
யேற்றிய விழலனேன் பொருள்தேறி
வாழ்ந்து போகவோர் குருவினை
யருள்கென வணங்கினர் பலகாலே. 258

உரை :- இன்றளவும் வாழ்ந்துபோன பிறப்புக்களோ கணக்கற்றவையாம். வள்ளலே இனியாவது இறங்கித் தாய்மார் வயிற்றுள் பிறப்புறும் வம்பில் அழுத்தாதிருப்பாயாக. விழுந்து உன் திருவடிகளை முடிமேல் ஏற்றிய சிறியேன் மெய்ப்பொருள் தெளிந்து வாழ்ந்து போகும்படி ஒரு குருமூர்த்தியை அருள்க வென்று மலர் சொரிந்து வணங்கினர்.

விளக்கவுரை :- புதுவைச் சதாசிவரைக் குருவாக அடையத் தக்க புண்ணியப் பேறு பெற்ற இப் பிரமசாரி தம்மூரிலிருந்து நடந்து மதுரை கடந்து மானமதுரைக்கு வந்து அங்கு சோமநாதனை இறைவியோடு துதித்து வணங்கி வேண்டும் வேண்டுகோள் இதுவாம். இன்றளவும் எத்தனையோ பிறப்பு பிறந்தேன். இனிப் பிறவாதிருக்கத் தக்க ஞானத்தை அருளும் குருமூர்த்தியை அருள்க என்று வேண்டுகிறார்.

சுற்றி வந்தனர் சதாசிவ
சமாதியிற் றோன்றிய தவமூர்த்தம்
பற்றி நீங்கிய தத்தவாத்
திரயனார் பரம்பரை முறையானே

வெற்றி தோற்றிய முகத்தொடு
மவுனமாய் வீற்றிருந் தருள்கோலம்
ஒற்றி யாண்டவன் உருவமோ
வென்னவே யுருகினர் பணிந்தாரே. 259

உரை :- பிராகாரத்தைச்சுற்றி வந்தார். சதாசிவப் பிரம்மத்தின் சமாதியிலே மவுனமாகத் தோன்றிய தவமூர்த்தம் பற்றற்ற தத்தாத்திரேய முனிவர் பரம்பரைச் சம்பிரதாயம் விளங்க அவதூதக் கோலமாய் வெற்றி தோன்றிய முகத்தோடு வாய் திறவாமல் வீற்றிருந்து அருள் புரியும் திருக்கோலம் திருவொற்றியூரில் உள்ள தியாகேசன் திருவுருவமோ என்று மனம் உருகிப் பணிந்தார்.

விளக்கவுரை:- பிரமசாரி பிராகாரம் சுற்றினுர். சதாசிவ சமாதி கண்டார். அச்சமாதி அருகே மவுனமாக இருந்த தவக் கோலம் கொண்ட குருமூர்த்தத்தைக் கண்டார் அவரே குரு என உள்ளத்தால் உணர்ந்தார். திருவொற்றியூர்த் தியாகேசனைப் பலமுறை தரிசித்திருக்கும் பழக்கத்தால் அம் மூர்த்தியோ இங்கிருப்பவர் என்று எண்ணமிட்டார்.

பணிந்து நின்றவர் கருத்தையு
மறிகிலர் பரவிய மொழிகேளார்
துணிந்து மெய்ப்பொருள் ஒளியிலே
மூழ்கிய துறவியார் நடந்தாரே
திணிந்து வீங்கிருள் ஒழிக்கவே
துறவெனும் திருவிளக் குறப்போந்தார்
அணிந்து போற்றினர் புகழ்ந்தனர்
மவுனியார் அருகுறத் தொடர்வாரே 260

உரை :- தத்துவப் பொருளை இது என்று தெளிந்து அதன் ஒளியிலே மூழ்கிய துறவியாரான சதாசிவப் பிரம்மேந்திரர்

தம்மைப் பணிந்து நின்ற பிரமசாரியின் கருத்தையும் அறிய வில்லை. அவர் புகழ்ந்து பேசிய சொற்களையும் செவியில் ஏற்க வில்லை. அடர்ந்து பெருகிய அஞ்ஞான அந்தகாரத்தை ஒழிக்கத் துறவு என்ற திருவிளக்கை யடைய வந்த சிறுவர் துதித்துப் போற்றிப் புகழ்ந்தார். துறவியார் அதனைக் கேளாது நடந்தார். சீடராக வந்தவர் அம்மவுனியார் அருகே நிழல் போல நடந்தார்.

விளக்கவுரை :- முன்னிரண்டடியும் சதாசிவர் மனச் செயலை உரைப்பன. பின்னிரண்டடியும் அவரைக் குருவாகப் பெற வந்த பிரமசாரி செயலை விளக்குவன. அவர் மனம் பிரமானுபவத்தில் இருந்தது. சீடரோ குருவைப் பற்றி விரை கின்றார். இருவரும் நடக்கின்றார்கள்.

நாடு நோக்கிலர் நகரமும்
பார்க்கிலர் நடந்தனர் தவச்செல்வர்
பீடு நாடினர் பிறகுறும்
வன்னியும் பிரிகிலர் வருகின்றார்
நீடு மாப்புகழ் அகத்தியர்
பொதியமா நிகழ்த்துறு குன்றத்தே
தேடு செல்வத்தை யெடுப்பவர்
போலவே சென்றனர் முனிவேந்தே. 261

உரை :- தவச் செல்வம் மிக்க சதாசிவர் நாட்டையும் பார்க்கவில்லை. நகரத்தையும் பார்க்கவில்லை. மேலே நடந்து கொண்டேயிருந்தார். பெருமையைத் தேடிப் பின்வரும் பிரம சாரியும் பிரியாது வருகின்றார். நீண்ட பெரும் புகழ் பூண்ட அகத்தியர் வாழும் பொதிய மலை என்று கூறப்படும் குன்றில் தேடும் செல்வத்தை எடுப்பவர் போல முனிவேந்தர் சென்றார்.

விளக்கவுரை :- தவச்செல்வர்-முனிவேந்தர். சதாசிவப் பிரமம். வன்னி - பிரமசாரி. கிருஷ்ணமூர்த்தி என்ற பெயர் உள்ளவர். அவர் நாடிய பீடு-துறவு பெற்று உயரவேண்டும்

என்பதே. பொதியமலை - அகத்தியர் உறைவிடம் என்பது நெடுங்காலமாக வழங்கும் வரலாறு. அம்மலையின் மேல் முனிவரர் நெடுங்காலமாகத் தேடிய செல்வத்தை எடுப்பார் போலப் போனார்.

அருவி தம்மையே கடந்தனர்
உம்பரி னடைந்தனர் தனிமைக்கே
உருவு தந்ததோர் பெருமரத்
தடியிலே உருவுள சிவமேபோல்
வெருவு வேங்கையும் பாம்புமே
யெய்தினும் விழிப்புரு நிலைபெற்றே
சருவ சாந்தியி னிலையத்தே
யடங்கினர் தமையுணர் தவத்தோரே. 262

உரை :- இரண்டு அருவிகளையும் கடந்து மேலே தனிமைக்குச் சென்றார். அழகுமிக்கதான ஒரு பெரிய மரத்தின் அடியிலே உருவம் பூண்ட சிவ பரம்பொருள் போல அச்சந்தரும் வேங்கையும் பாம்பும் வந்தாலும் கண் திறந்து அவற்றைப் பாராத யோக நிலையில் அமர்ந்து சர்வ சாந்தி நிலையத்தில் அடங்கியிருந்தார். தம்மை அறிந்த தவமுனிவர்.

விளக்கவுரை :- தவத்தோர் அடங்கினர் என்று முடிக்க வேண்டும். நிலத்துக்கருகே இரண்டாகப் பிரிந்து விழும் அருவி உள்ளது. கோயிலுக்கு அருகே உள்ள இவ்வருவியே பொதுவாக எல்லாரும் குளிக்க உதவுவது. மேலருவி இரண்டுக்கும் போய் வருவது எளிதன்று, அந்த அருவிகளுக்கு மேலும் இம்முனிவர் நடந்து ஒரு பெருந்தனி மர நிழல் கண்டு அங்கே ஏகாந்தமாக அமர்ந்தார்.

வான ராதிபர் வழிபடு
மதுரையில் வழிபடப் பெறும்வன்னி
ஞான மோனியார் தவநிலை
தெளிந்தனர் நாள்பல பொறுத்தாரே

தீன மானிடர் தேடியு
மறிகிலாத் தெய்வமே யிவரென்று
பேன மேறிய வருவியின்
கரையினைப் பெயர்கிலா திருந்தாரே. 263

உரை :- வானரத் தலைவர்கள் திருப்பணி புரிந்த வானர வீரர் மதுரையில் இம் மகானைக் கண்டு வணங்கும் பேறுபெற்ற பிரமசாரி ஞான மவுனியாகிய இவரது தவநிலையைக் கண்டு பல நாள் அத் தவத்துக்கு இடையூறு செய்யாமற் பொறுத்திருந்தார். வலிமையற்ற மானிடர் தேடியும் அறிய இயலாத தெய்வமே இவர் என்று நுரைகள் எழுந்த அருவிக் கரையை விட்டு அகலாது இருந்தார்.

விளக்கவுரை:- மானுமதுரையிலிருந்து இம்மகானைத் தொடர்ந்து வந்த பிரமசாரி இங்கு ஏகாந்த நிலையத்தில் அடங்கித் தவம் புரியும் அவர் நிலைகண்டு தாம் வந்த காரியத்தைத் தெரிவிக்க வேண்டும் என்ற உணர்ச்சி வேகம் மிகவும் இருந்தும் தவத்துக்கு இடையூறு விளைக்காது நின்றார்.

தோட மின்றிய மனத்தோடு
தம்மையே தொடர்ந்தனர் அடைகின்ற
சீடர் நெஞ்சினை யுணர்ந்தனர்
விழித்தனர் சிவமய முனிவேந்தர்
ஏட வந்தெனை யுலகொடு
பிணிக்கவோ யிங்கணை தனையென்று
சாட வோங்கிய கரத்தோடு
கல்லினைச் சரக்கென வெறிந்தாரே. 264

உரை :- சிவமயயோக சமாதியில் அமர்ந்த சதாசிவப் பிரமம் குற்றமற்ற மனத்தோடு தம்மைத் தொடர்ந்து வந்த சீடர் மனக் கருத்தை உணர்ந்தார், விழித்தார். ஏட என்னை

உலகத்தோடு பிணிக்கவோ இங்கு வந்து சேர்ந்தாய் என்று அடிக்க ஓங்கிய கையோடு சிறிய கற்களை எடுத்து விரைந்து வீசினர்.

விளக்கவுரை :- சதாசிவப் பிரம்மேந்திரர் தம்மைப் பின் பற்றி வந்த பிரமசாரி தம் முன் நிற்பதை உணர்ந்து கண் விழித்தார். உடனே அருள் புரிய மனம் இருந்தும் சீடர் வைராக்யத்தைச் சோதிக்க எண்ணி அவர் மேற் சிறு கற்களை எடுத்து எறிந்தார். இங்கு நீ வந்து என்னை உலகத்தோடு பிணிக்கவோ என்ற வினவைக் குறிப்பால் உரைத்தார். கல்லால் எறிந்ததன்றி நெருங்கி வந்தவரைக் கையால் அடிப்பது போலவும் காட்சி கொடுத்தார். சீடர் இவற்றை அருட் செயல் என்று கொண்டு நெருங்கினர்.

எறியும் கல்லெலா மெடுத்தனர்
வன்னியு மிறைஞ்சினர் முனம்வைத்தார்
அறியும் நுண்பொருள் அறிந்துபே
ரானந்த ஆகரத் தடைஞானி
நெறியும் நீர்மையும் நிலவிய
மாணியை நேயநன் குறநோக்கி
உறியும் வெண்ணெயும் உவந்தருள்
கண்ணனை யுளத்தினி லடைத்தாரே. 265

உரை :- சதாசிவ முனீந்திரர் எறிந்த கற்களையெல்லாம் எடுத்துகொண்டு அந்தப் ப்ரம்மசாரி வணக்கத்தோடு அவர் முன் வந்தார். அறிதற்குரிய நுண்ணிய பொருளை அறிந்து பேரானந்த நிலையத்தில் அடங்கியிருந்த ஞானியார் நெறியும் நேர்மையும் பொருந்திய பிரம்மசாரியை அன்புமிக நோக்கி உறியும் வெண்ணெயும் உவந்த கண்ணபிரானை மனத்தில் தியானித்தார்.

விளக்கவுரை :- குருவாக வரித்த மகான் தம் மேற் கல்லெறியக் கண்ட இளைஞர் அக்கற்களைப் பக்தியோடு எடுத்துக் கொண்டு உடல் வணக்கத்தோடு அவர் முன் வந்து தம் கருத்தை உரைக்கப் புகுகின்றார். நெறி - சன்மார்க்கம்; நீர்மை - நற் பண்பு.

எந்தை யெய்தினர் சிவபதம்
யாயுளாள் ஏட்டரும் இருக்கின்றார்
சிந்தை சென்றது துறவுளே
காசியும் சென்றனன் மீண்டுற்றேன்
சந்தை யாகிய வுலகவாழ்
விடையிலே சரித்திடு நினைப்பில்லேன்
நிந்தை நீங்குறு நிலையருள்
புரிகென நிலத்திடை விழுந்தாரே. 266

உரை .- என் தந்தை சிவபதம் அடைந்தார். என் தாய் உயிர் வாழ்கின்றாள். எனக்குத் தமையன்மாரும் இருக்கின்றனர் என் மனம் துறவு நிலையிலே தீவிரமாகப் பாய்ந்தது. நான் காசிக்குச் சென்று மகான்களைத் தரிசித்து மீண்டு வந்தேன். சந்தை போலத் தோன்றும் உலக வாழ்வில் இயங்கும் நினைப்பு எனக்கு இல்லை. நிந்தை நீங்கும் துறவு நிலையை அருள் புரிய வேண்டும் என்று கூறி நிலத்தில் விழுந்து வணங்கினார்.

விளக்கவுரை :- என் தந்தை எந்தை என்று மரூஉமொழி ஆகும். சிவபதம் எய்தினர் என்றது சமீப காலச் செய்தி. யாய்-தாய்; ஏட்டர்-ஜ்யேஷ்டர், மூத்த சகோதரர். தமிழில் இம் மொழி சேட்டர் என்று வரும்; கனிஷ்டர், கனிட்டர் என்று வரும். மலையாளத்தில் ஏட்டர் என்றே வரும். திசைச்சொல் என்றும் கொள்ளலாம், வட சொல்லும் ஆகும். உலக வாழ்வு சந்தை என்றார். சந்தையில் பலர் கூடிப் பழகினும் ஒருவர்க்

கொருவர் ஒட்டாமல் பிரிவது உண்மை. உலக வாழ்வு அத்தகையுள்ளதே என்று கருதித் துறவு பெற வேண்டு கின்றார்.

வீழ்ந்த வன்னியை யருளொடு
நோக்கிய மெய்ப்பொரு ளுணர்ஞானி
ஆழ்ந்த காதலர் தாயினைத்
தந்தையை அகல்வது மெளிதன்றால்
வாழ்ந்த வாழ்வினை முற்றிலு
மறந்தபின் மருவலாம் தவக்கோலம்
போழ்ந்த கன்மத்த ராகுவ
தெளிதிலை போகென வுரைத்தாரே. 267

உரை:- நிலத்தில் விழுந்து வணங்கிய பிரம்ம சாரியை அருளோடு நோக்கிய தத்துவப் பொருள் தெரிந்த ஞானியான சதாசிவர் ஆழ்ந்த அன்புள்ளவர்களான தாய், தந்தையரை அகன்று துறவு பூண்பது எளிதன்று. இன்றளவும் வாழ்ந்த வாழ்வினை முற்றிலும் மறந்தபின் தவக்கோலம் பூணலாம். கன்ம பந்தத்தை அழித்தவர் ஆவது எளிதில்லை நீ போவாய் என்று உரைத்தார்.

விளக்கவுரை :- சதாசிவ ப்ரமம் தம் மனைவி மக்களையும் தாய் தந்தையரையும் ஒரு நொடியில் மறந்து புறப்பட்ட வைராக்ய மூர்த்தியே யாயினும் இப் பிரம்மசாரியின் வைராக் யத்தை நன்கு சோதிக்கவே இப்படி உரைக்கிறார்.

மவுன நீங்கினர் அருள்மொழி
வழங்கிய வள்ளலைக் கழல்பற்றி
உவண மூர்ந்தருள் நாரணன்
ஆணையா லுளக்கருத் துரைக்கின்றேன்

சுவணம் வேண்டிலேன் சுற்றமும்
விழைகிலேன் துறவிலே நுழைதற்கே
கவன மிக்குளேன் கழல்வதும்
கருதினேன் காத்தருள் கென்றுரே. 268

உரை :- மவுன விரதத்தை விட்டு அருள்மொழி பேசிய குருமூர்த்தியான வள்ளலைத் திருவடி பற்றிக்கொண்டு கருட வாகனத்தில் அமர்ந்த நாராயணன் திருவடி மேல் ஆணையாக என் மனக் கருத்தை உரைக்கின்றேன். நான் பொன்னை வேண்டுவதில்லை. சுற்றத்தாரையும் விரும்பவில்லை. துறவறத்தில் நுழைவதற்கே மிகக் கவனம் கொண்டிருக்கிறேன். குருமூர்த்தியை விட்டுப் பிரிந்து போகும் கருத்தில்லேன். காத்தருள வேண்டுகின்றேன் என்றுர்.

விளக்கவுரை :- மவுன விரதம் பூண்டமகான் வந்தவர் தம் சீடர் ஆவது உறுதி என்பதை உணர்ந்து வாய் திறந்து பேசுகிறுர். இராமகிருஷ்ண அவதூதர் தம்மைக் காளத்தியிற் கண்டபோது நெடுங்காலமாக மவுன விரதம் பூண்டிருந்தும் அழகிய உபதேச மொழி உரைத்த செய்தியை மறக்காமல் இங்கு இப்படிப் பேசுகிறுர். சீடர் என்ற நிலைபெறவந்தவரும் தமக்கு உலகப்பற்று இல்லை என்ற உண்மையை உறுதியாக உரைக்கிறுர். அதைக் கேட்ட பிறகு குருதேவர் ஆணை பிறக்கிறது.

சென்று மீளுதி தாய்மனம்
வெறுப்பன செய்வது தகாதைய
தொன்று தோன்றிய தத்தனுர்
துறவறம் துணிவதோ வெளிதன்றுல்
இன்று நீமிக விளமையின்
செல்வத்தில் இருப்பதை யறிவாயே
மன்று ளாடிய மன்னவன்
ஆணையால் மறுவலும் வரலாமே. 269

உரை :- ஐய, நீ உன் ஊருக்குச் சென்று திரும்பி வருவாயாக. தாடார் மனம் வெறுக்கும் காரியத்தை எவரும் செய்யக் கூடாது பண்டு அவதரித்த தத்த சம்பிரதாயத்தில் துறவறம் மேற்கொள்வது எளிதன்று. இன்று நீ மிக்க இளமைச் செல்வத்தோடு இருப்பதை அறிவாய். பொன்னம்பலத்தில் ஆனந்தக் கூத்தாடிய இறைவன் அருளால் நீ மீண்டும் வரலாம்.

விளக்கவுரை :- தாய் மனம் வெறுக்கத் துறவில் நுழைவது தகாது என்ற உண்மையைச் சதாசிவர் உரைக்கின்றூர். தத்த சம்பிரதாயத்தில் அவதூத ஆச்ரமம் பிரதான ஆசாரம் ஆதலால் அந்த ஆசரணத்தை அங்கீகரிக்கத் தக்க பருவம் இல்லாத சீடரை ஊருக்குப் போகச் சொல்கிறூர்.

சந்தை யோதிய மறையிலே
நூற்பொருள் சற்றுமே உணர்கில்லாய்
கந்தை யாடையும் விழையலா
ஞானத்தைக் கதுவவே விழைகின்றுய்
தந்தை யாணையோ தாயின
தருளோயோ தாங்கிலாய் துறவெய்தல்
நிந்தை யாகுமே சங்கர
சரிதமும் நினைதியோ முருகோனே. 270

உரை :- முருகனைப் போன்ற இளங் குமரனே! நீ சந்தை சொல்லி வேதம் பயின்றுய் இல்லை சாத்திர தாத்பர்யங்களை சிறிதும் அறியமாட்டாய் கந்தை ஆடையைக்கூட விரும்பாத இத் துறவு நிலையை அடையவே விரும்புகின்றுய். தந்தை கட்டளையோ தாய் திருவருளோ பெருத துறவு நிலை உலகில் இழிக்கப்படும். சங்கர சரிதம் நினைத்தாயா?

விளக்கவுரை :- இச் சமயத்தில் இங்கு வந்த பிரம்மசாரி வேத அத்யயனம் சாஸ்திர அப்யாஸம் முதலிய பூர்வாங்க

அனுபவம் இல்லாதிருந்ததால் குருதேவர் அவற்றைச் சுட்டிக் காட்டுகிறார். துறவறம் பூண அவை வேண்டுமென்பது பொதுக் கருத்து. பெற்றோர் அனுமதியின்றித் துறவு பெறுவதும் தகாது என்கிறார். ஆதி சங்கரர் உலகுக்கே குருமூர்த்தியாக அவதரித்த சிவ மூர்த்தம் ஆயினும் தாயின் அனுமதி பெற்றே துறவு பூண்டார். அவர் துறவு பெற நினைத்தபோது தந்தையை இழந்த குமாரர் ஆவர்.

வடக்கி லெய்தினை ஞானமா
முனிவரை வணங்கினை யவரீயார்
மடக்கி மீட்டனர் பெற்றவர்
மீண்டனை வளத்தமிழ் அகத்துக்கே
குடக்கி லெய்தினும் குணக்கிலே
லெய்தினும் கொடுக்கவல் லவருள்ளார்
அடக்கி யைந்தையும் வென்றவாழ்
வுறுதற்கு மருகதை யுனக்குண்டே. 271

உரை :- நீ வடநாட்டுக்குச் சென்றிருந்தாய். ஞானவான்களான முனிவர்களை வணங்கினாய். அவர்கள் உனக்குத் துறவுதரவில்லை. உன்னைப் பெற்ற தாய் தந்தையர் அங்கிருந்து மடக்கி உன்னை வளம் மிக்க தமிழ் நாட்டுக்கே மீட்டார். இனி மேற்கே சென்றாலும் கிழக்கே சென்றாலும் நீ விரும்பும் நிலையை உனக்குத் தரவல்ல பெரியோர் இருக்கின்றார். ஐந்து புலன்களையும் அடக்கி வென்ற பெருவாழ்வு அடைய உனக்குத் தகுதி உண்டு.

விளக்கவுரை :- காசியில் இருந்த போது பெற்றோர் இவரைத் துறவில் நுழைய விடாமல் கடிதம் எழுதித் தமிழ் நாட்டுக்கு அழைத்தனர் என்பது ப்ரம்மசாரியின் வரலாறு.

என்னைச் சீடனு யேற்றவர்
கழலிணை யேற்றிய சிரமுள்ளேன்
நின்னைச் சீடனு யேற்பது
தகுமெனு நினையுமென் னெஞ்சைய
அன்னைக் கன்பினு லருச்சனை
புரிந்தனை ஆணையேற் றடைவாயேல்
பின்னைக் காணுதி பெயர்ந்தனை
போகெனப் பிரிந்தனர் மறைந்தாரே. 272

உரை :- என்னைத் தன் சீடனுக ஏற்றுக்கொண்ட மகானது திருவடி இணையைச் சுமந்த சிரம் உடையேன். என் மனம் உன்னைச் சீடனுக ஏற்பது தக்கது என்றே நினைக்கிறது. ஐய, நீ உன் தாய்க்கு அன்பால் அர்ச்சனை செய்து அவள் ஆணையேற்று வருவாயேயானுல் பிறகு என்னை நீ காண்பாய். இப்பொழுது நீ புறப்பட்டுப் போவாயாக என்று கூறிப் பிரிந்தார்.

விளக்கவுரை :- இராமகிருஷ்ண பரம ஹம்ஸ அவதூதரிடம் சதாசிவர்க்கு மிக்க பக்தி உண்டு என்பது அவர் இயற்றிய நூல்களில் வரும் குரு வணக்கத்தால் அறியத்தக்க உண்மையாம். இன்று சேந்தமங்கலம் ஸ்வாமிகள் என்று புகழப்படும் மகாத்மா அன்று இவரிடம் பிரமசாரியாக வந்து சந்யாஸ ஆச்ரமம் வேண்டுகினுர். "தாயின் ஆணைபெற்று இங்கு வருக. மீண்டும் என்னைக் காணப் பெறுவாய் உன் எண்ணமும் நிறைவேபறும்" என்று கூறி விடை கொடுக்கின்ருர் பிரம்மசாரியாக வந்த புண்ணிய சீலர் இதற்கு மேற் பேச வழியின்றி இருக்கிருர்.

மீண்டு சென்றனர் கிருட்டின
மூர்த்தியின் வியன்பெயர் பெறுஞ்செல்வர்
காண்டு மீளவு மிவரையே
யெனவெழு கருத்தின தூற்றத்தால்

யாண்டு மேயினும் எவரையே
வணங்கிறும் இவர்பொரா ரெனவெண்ணி
நீண்டு பரவிய நெறியிடை
நடந்தனர் நெருங்கினர் தமருரே. 273

உரை :- கிருஷ்ணமூர்த்தியின் பெரும் பெயர் பூண்ட செல்வர் தம் ஊருக்குத் திரும்பிச் சென்றார். இவரை நாம் மீண்டும் காண்போம் என்று எழுந்த மனக்கருத்தின் உறுதியால் எங்கே சென்றாலும் எவரை வணங்கினாலும் இவருக்கு இணையாக மாட்டார் என்று எண்ணி நீண்டு பரவிய வழியில் நடந்து தம் ஊரை அடைந்தார்.

விளக்கவுரை :- கருத்தின் ஊற்றத்தால் மீண்டு சென்றார் என்று முடிக்க வேண்டும். குருவாக இவரையே சரண்புகுவது என்ற மனவுறுதி வந்து விட்டபடியால் அவர் சொன்னவாறு கிழக்கில் மேற்கில் பெரியோர் இருந்தால் எனக்கு அருள் புரிவதில் இவர்க்கிணை ஆகார் என்று முடிவு செய்த மனத்தோடு நடந்தார். ஞான குரு அரியர்.

ஞானப் பேற்றையே நினைவுறு
மனத்தினர் ஞானவா ரிதியூடே
மோனப் பேற்றையே நாடுநர்
மொழிவழி முடுகினர் விரைவானே
கானப் பேட்டையே யடைந்தனர்
தாய்கழல் கனிவொடு பணிவுற்றே
ஈனப் பாட்டையே யொழிவுற
வருள்கென விரந்தனர் மகனுரே. 274

உரை :- ஞானம் என்ற மகா பாக்யத்தையே நினைக்கும் மனம் உடையவராய் ஞானப் பெருங்கடலிடையே மவுனம் என்ற செல்வத்தையே நாடி நின்ற சதாசிவர் வாக்கின்படி விரைவாகவே நடந்தார். கானப்பேட்டை அடைந்து தம் தாயார் பாதத்தில்

அன்போடு பணிந்து இழிந்த வாழ்வாகிய இல்லற வாழ்விலிருந்து ஒழிந்து போவாய் என்று அருள வேண்டும் என்று குமரர் வேண்டி நின்ருர்.

விளக்கவுரை :- ஞானத்தை அடைவது என்பது உப சாரமே. ஞானம் என்றும் உள்ளது. அது ஒரு நாள் ஒரு இடத்தில் இல்லாதிருந்து மறுநாள் வருவது அன்று. அதனை மறைக்கும் இடையூறு ஒழிந்ததும் ஒளியோடு வெளிப்படுவது. தன் செல்வத்தை இழந்தவனுக எண்ணுபவன் அது தன்னிடமே இருப்பதை அறிவது போன்றது. ஞானம் அனுபவிக்கும் நிலை. மவுனம் ஞானத்துக்குச் சாதனம். ஈனம் + பாடு, ஈனம் + பாட்டு ஈனம் + பாட்டை என்ற மூன்று வகையாகப் பிரித்துப் பொருள் செய்யலாம். பாடு-வருத்தம். பாட்டு-பாடப்படுவது. பாட்டை வழி.

இழந்த தந்தையை நினைந்திலை
குடும்பத்தின் ஏற்றமே மனத்துக்கொண்
டுழந்த மூத்தவர் கருத்தையு
மதித்திலை யுறவெலா மறவிட்டே
எழுந்த சிந்தையை துறவையே
நாடினை என்துயிர் நீயன்றே
குழந்தை நீசெலின் என்னுயிர்
கூட்டுளே குடிகொள விசையாதே. 275

உரை :- சமீப காலத்தில் இழந்த தகப்பனுரை நீ நினைக்க வில்லை. குடும்பத்தின் உயர்வையே மனத்திற்கொண்டு உழைப் பவர் ஆகிய தமையன்மார் கருத்தையும் நீ மதிக்கவில்லை. உறவு களை யெல்லாம் அடியோடு மறந்துவிட்டு எழுந்த சிந்தையை உள்ளவனுய்த் துறவறத்தையே நாடி நின்ருய். மகனே என் உயிர் நீயே அன்றே, குழந்தையான நீ இந்நிலையில் என்னைப் பிரிந்து சென்ருல் என் உயிர் இக் கூட்டுள்ளே குடிகொண்டிருக்க இசையாது.

விளக்கவுரை :- தந்தை கருத்து இவர் துறவறத்துக்கு உதவியோ இல்லையோ என்று கூற இயலாது. அவர் இறக்கும் போது இக் குமாரர் பக்கத்தில் இல்லை. சுடுகாட்டுக்கே வந்து சேர்ந்தார். தமையன்மார் மூவரும் குடும்பப் பொறுப்புள்ளவர்

ஆருக் கார்துணை அடைந்தநாள்
வளருநாள் அழியுநாள் அளவுந்தான்
நீருக் காகவோ நெருப்பினைக்
கொடுக்கவோ நிலைஇல நெறிவிட்டே
சீருக் காயினும் சிறப்புற
வாயினும் செல்கிலை சீர்கெட்டே
ஊருக் கோரிர விருக்கவோ
விரக்கவோ ஓடுதி யுரையாயே 276

உரை :- பிறந்த நாள், வளரு நாள், அழியும் நாள் அளவும் உலகில் யாருக்கு யார் துணை, நமக்குரிய வழியைவிட்டு நீ உன் பெற்றோருககுக் கொடுக்க வேண்டிய நீர்க் கடனுக்கோ நெருப்புக்கோ நினைவில்லாதிருக்கிறாய். நீ போவதோ சீருக்கோ, சிறப்புக்கோ போகவில்லை. சீர்கெட்டு ஊருக்கு ஒரு இரவு இருக்கவோ அங்கங்கே கையேந்தி இரக்கவோ ஓடுகின்றாய். உன் கருத்தைச் சொல்வாய்.

விளக்கவுரை :- தாய் உரிமையால் இம்மொழிகள் வருகின்றன. நீ என் உயிர் என்று கூறிய தாயே அடுத்த மூச்சில் யாருக்கு யார் துணை என்கிறாள். இது மனச் சலிப்பால் வந்த சொல். நீர்-வாசோதக திலோதகம் கொடுத்தல்-நெருப்பு-ஸம்ஸ்காரம் செய்தல். சந்யாஸ தர்மத்தின் பெருமை அறிந்த தாய் அதனை மனத் தாங்கலால் இகழ்கின்றாள். ஊருக்கு ஒரு இரவு இருப்பதும் அங்கு இரந்து வாழ்வதும் யதிதர்மம் என்பதை அறிந்தே உரைக்கின்றாள்.

அன்னை யின்னணம் துறவினை
யிழித்துரை யாடுதல் பொருமைந்தர்
என்னை கூறுதி யென்பெருந்
தெய்வமே என்னையே பிரியாதே
நின்னை யாண்டவ னேர்முனம்
போதியோ நேயமும் நிலையுந்தாம்
பின்னை யெய்துமோ சங்கரர்ப்
பெற்றதாய் பேற்றினை யறியாயோ ! 277

உரை :- தம் தாயார் இவ்வண்ணம் துறவறத்தை இழிவாகப் பேசுவதைப் பொருத குமாரர் என் பெருந் தெய்வமே என்ன கூறுகின்ருய். என்னைப் பிரியாது உடன் அழைத்துக் கொண்டே உன்னை ஆண்ட கடவுளுக்குமுன் நேரே போவாயோ. நேசமும் நிலையும் இறந்த பிறகும் வருவதுண்டோ. சங்கரரைப் பெற்ற தாய் அடைந்த மகா பாக்கியத்தைப் பற்றிக் கேட்டறிந்த தில்லையோ !

விளக்கவுரை :- தந்தையை வணங்க வைக்கும் துறவி தாயை வணங்கவே வேண்டும். ஆதலால் என் பெருந் தெய்வமே என்று அழைத்தார். தந்தை, தாய், மைந்தர் உறவு எல்லாம் உயிர் உள்ள அளவுதானே. இறக்கும்போது தந்தை தாயாரை மக்கள் தொடர முடியுமோ என்ற உண்மையை விளக்கினுர். சங்கரர் தாய், விஷ்ணு லோகம் சென்ருள்.

அருளி ஞணையை நல்குக
விடையுமீங் தருளுக அடியேனை
மருளி னீக்குறு திருப்பணி
பூணுக மறைதெளி குருமூர்த்தி
இருளை நீக்கியே யென்னையாட்
கொள்ளவே இருப்பதை யறிகின்றேன்
உருளு மாழியான் மறையுமுன்
புறப்பட வுத்தரம் தருவாயே. 278

உரை:- அருள் கலந்த ஆணையைத் தருக. விடையும் தந்து அருளுக. அடியேனை மயக்கத்தினின்று நீக்கும் திருப் பணியைப் பூனுக. வேதப் பொருள் தெரிந்த குருமூர்த்தி அஞ் ஞானத்தை நீக்கி என்னை ஆட்கொள்ளக் காத்திருக்கிறார் என்று அறிவேன். உருளும் ஒற்றை யாழித் தேரோன் மறையுமுன்பு நான் இங்கிருந்து புறப்பட உத்தரம் தருவாய்.

விளக்கவுரை :- அருளால் வரும் ஆணை. அருள் ஆகிய ஆணை திருவருள் லயப்பட்ட ஆணை. குருமூர்த்தி தம்மை ஆட்கொண்டு அருள இருப்பதைத் தாய்க்குத் தெளிவாய்க் கூறியே விடை வேண்டுகின்றார். சூரியன் மறையுமுன் ஆணை தந்தருளுக என்று இவர் வேண்டியது இன்னொரு நாள் இங்கு இருக்க மனம் அற்றதை வெளியிடுவது ஆம். முன் செய்யுளில் ஆரியாம்பை சங்கரர்க்கு விடைகொடுத்துத் துறவி புகவிட்டதை நினைவூட்டி அவர் தாய் பெற்ற பெருமை நீயும் பெறவே உத்தரம் தருக என்கிறார்.

ஏட்டர் எண்ணமும் இசைவுறப்
  புரிகவோ என்னையே எனுமைந்தர்
நாட்ட மோர்ந்துணர் நல்லனை
  யொருகண நாயகர் பதமெண்ணி
வேட்ட வாறுநீ செல்கென
  மலர்முக விருப்பினுல் விடைதந்தார்
கேட்ட செல்வரும் வணங்கினர்
  தென்றிசை கினர்ந்தனர் விரைந்தாரே. 279

உரை :- என் தாயே தமையன்மார் கருத்தும் என் வேண்டுகோளுக்கு இசையும்படி செய்க என்று கூறும் குமாரர் நாட்டத்தை ஆராய்ந்தறிந்த தாய் ஒரு கணப் பொழுது தன் நாயகன் பாதங்களைத் தியானித்து நீ விரும்பியவாறு போவாய் என்று மலர்ந்த முகத்தின் விருப்பத்தோடு விடை தந்தாள்.

இம்மொழி கேட்ட குமாரரும் தாயை வணங்கி விரைவாகத் தென்றிசை நோக்கிப் புறப்பட்டார்.

விளக்கவுரை :- ஏட்டர் - தமையன்மார் : நல்லன்னை- வைராக்ய சித்தம் உள்ள குமாரரைச் சம்சாரத்தில் அகப்படுத்த நினையாத சித்தவிருத்தி பெற்றதாய். தாய் உத்தரம் கிடைத்த உடனே தமையன்மார் கருத்துக்குக் காத்து நிற்காமல் இரவு பகல் பாராது புறப்பட்டார்.

தேட்டு நாடிய வண்டென
  வேறுறு சிந்தனை சிறிதின்றி
மீட்டும் வந்தனர் பொதியமா
  மலைமுடி வேகமே துணையாக
ஈட்டும் மெய்ப்பொருள் பெறுகென
  வருள்புரி இரும்பெருங் குருமூர்த்தி
ஓட்டும் வேட்கையர் மவுனமோ
  டிருந்தருள் உயர்மரம் அடைந்தாரே. 280

உரை :- தேனை நாடிய வண்டு போல அதற்கு அன்னிய மான வேறு சிந்தனை சிறிதுமில்லாமல் தம் மனோவேகமே துணையாகக்கொண்டு பொதிய மலை முடிக்கே மீட்டும் வந்தார். ஈட்டுதற்கு உரிய மெய்ப் பொருளை நீ பெறுக என்று அருள் புரியும் மாபெருங் குருமூர்த்தி வேட்கை ஒழிந்தவராக மவுன யோகத்தில் அமர்ந்திருந்த உயர்ந்த மரத்தின் நிழலைக் கண்டு அடைந்து வணங்கினார்.

விளக்கவுரை :- தேட்டு-தேன்; தேன் தேடிச் செல்லும் வண்டு வேறு எதனையும் நினையாது தேன் உள்ள மலர்க்கே போவது போல இவர் ஞானம் அருளும் குரு இருக்கும் இடம் தேடித் தம் மனோ வேகம் துணையாக வருகிறார். ஈட்டுதல்- செல்வப் பொருளைத் திரட்டுதல் இங்கும் ஞானப் பொருளைத் திரட்டும் தொழிலைக் குறிக்க வந்தது. ஓட்டும் வேட்கையர்-

வேட்கையை ஒட்டியவர். வடமொழி முறையில் அமைந்த தொடர் மொழி.

சீடர் சென்றது மீள்வது
  மறந்தனர் சிவத்திலே மனம்வைத்தே
நாடல் ஒன்றெனு நயப்பினு
  விழிமலர் நலமுற முகிழ்ப்பித்தே
கோடல் சண்பகம் கோங்கெறு
  மலரெலாம் கொட்டிய குன்றத்தே
தேடல் செய்பவர் எவருமே
  நெருங்கருஞ் சிறையினி லிருந்தாரே. 281

உரை:- சீடராக வந்தவர் தம் ஊருக்குப் போனதும் மீண்டு வந்ததும் மறந்தார். சிவத்தில் மனத்தை வைத்து நாடத் தக்க பொருள் ஒன்று தான் என்ற விருப்பம் உள்ளவராய் விழிமலர்களை நன்கு மூடிக்கொண்டு கோடல் சண்பகம் கோங்கு என்ற மலரெலாம் மலர்ந்து சிந்தும் குற்றால மலையில் தேடி வருவார் எவரும் நெருங்குதற்கரிய ஏகாந்த ஸ்தலத்தில் இருந்தார்.

விளக்கவுரை:- சீடர் தம் தாயிடம் அனுமதிபெற்று வர வேண்டும் என்ற ஆணையேற்றுப் பிரிந்தார். அவர் மீளும் அளவும் முன்னிருந்த மரத்தின் நிழலில் மவுன யோகத்தில் இருந்த சதாசிவ ப்ரம்மேந்திரர் அச் சீடர் மீண்டு வந்ததை அறியாது கண் மூடித் தியான சமாதியில் இருந்தார்.

மீண்ட வன்னியும் வாயுவின்
  மூர்த்தியாய் விளங்கிய காளத்தி
ஆண்ட ஞானியை மறந்திலார்
  யோகத்தி லமர்ந்தருள் முனிமுன்னர்

மாண்ட மாதவ வுருவமே
　　பொறுத்தருள் வள்ளலே யருள்கென்று
நீண்ட கையோடு கழலிடை
　　வீழ்ந்தனர் நினைவறக் கிடந்தாரே. 282

உரை :- திரும்பி வந்த பிரமசாரியும் வாயுலிங்கத்தால் விளக்கம் பெற்ற காளத்தி க்ஷேத்திரத்தில் தவக் கோலமாய் இருந்த இராமகிருஷ்ண அவதூதரை மறவாது தியான யோகத்தில் அமர்ந்த சதாசிவப் பிரம்மேந்திரர் முன்பு சிறந்த பெருந்தவ உருவம் பொறுத்தருளும் வள்ளலே அடியேனுக்கு அருள்புரிக என்று கூறிக்கொண்டு நீண்ட கையோடு பாதங்களில் வீழ்ந்து நினைவற்றுக் கிடந்தார்.

விளக்கவுரை :- வன்னி-பிரமசாரி; கிருஷ்ணமூர்த்தி என்ற பெயர் உள்ளவர். காளத்தியில் உள்ள லிங்கம் வாயு லிங்கம் என்று உரைக்கப்படும். காளத்தியை ஆண்ட ஞானி, காளத்தி நகரில் உள்ள திருவருட் செல்வத்தை ஆண்ட ஞான யோகி. மாண்ட - மாண்பு பெற்ற. மாட்சி - மாண்பு, பெயர். அப் பெயர்ப் பகுதி அடியே வந்த பெயர் எச்சம் இது. இராம வாக்யமாகக் கோசலை முன்னர்க் கம்பர் உரைக்கும் “மாண்ட மாதவரோடு உடன் வைகிப்பின் மீண்டு நீ வரல் வேண்டு மென்ருன் என்ருன்” என்ற தொடர் இங்கு நினைக்கத் தகும்.

விழித்து நோக்கிய சதாசிவ
　　முனிவரர் விழுந்தெழா திருப்பாரை
மழித்து நீட்டுறு துறவற
　　நெறியிலே வருவிக்கு மனத்தோடே
கழித்து வந்தனே யுறவினே
　　மைந்தனே கழன்றனே பற்றெல்லாம்
ஒழித்து வாழுதி உலகையே
　　யென்றனர் உதவினர் அருட்பேறே. 283

உரை :- விழித்துப் பார்த்த சதாசிவப் பிரம்மேந்திர அவதூத ஸ்வாமிகள் பாதத்தில் விழுந்து எழாதிருக்கும் பிரம சாரியை மழித்து நீட்டுகின்ற துறவற நெறியில் வருவிக்கும் மனத்தோடு மகனே உறவை எல்லாம் கழித்து வந்து விட்டாய். மற்றெல்லாம் கழன்று ஒழிந்தாய். உலகத்தை ஒழித்து வாழ் வாயாக என்று கூறித் திருவருட் பேற்றை அருளினர்.

விளக்கவுரை :- சமாதி கலைந்து விழித்த சதாசிவர் தம் முன்னே விழுந்து எழாதிருக்கும் பிரமசாரியின் உள்ளக் கருத்தை நன்கு உணர்ந்து கொண்டார். என் தந்தை என் தாய் என்று கூறுதிருக்கும் நிலைமை தெரிந்து அப்பொழுதே அவர் துறவு பூண்டு ஞானம் பெறத் திருவருள் புரிந்தார்.

துறவு பூண்டனை சுருதியின்
முடியிலே சுடருறு பொருள்தேர்தி
பிறவி யென்பதோர் பிணிப்பினி
யுகுவகை பெருந்தவ முயல்வாயே
அறவர் ஞானியர் யோகியர்
நிரம்புறு மருந்தமிழ் நாட்டுள்ளே
குறவர் வாழ்வுறு குன்றமே
லமருதி குடிலையை மறவாதே. 284

உரை :- மகனே துறவறம் பூண்டாய். வேத சிரத்தில் விளங்கும் பரம் பொருளை உள்ளத் துள்ளே காணமுயல் வாயாக. பிறப்பு என்ற பந்தம் இனி வாராவண்ணம் பெருந்தவம் முயல் வாயாக. தருமாத்மாக்களும் ஞானிகளும் யோகிகளும் நிறைந்த அருந்தமிழ் நாட்டில் குறவர் வாழ்வு பெறும் குன்றத்தின் மேல் அமருதி. பிரணவத்தை மறவாதிருப்பாயாக.

விளக்கவுரை :- சுருதி - கேள்வி முறையே பெற்ற வேத வாக்யம். சுருதிமுடி - வேதசிரசு உபநிஷத்து. உபநிஷத்தில் உரைத்த பொருளை உலகெங்கும் காண்பதும் அதனை உள்ளத்தே

கண்டு அதன் மயமாய் இருப்பதும் வேதாந்த விசாரத்தால் வரும் பரம லாபமாம். குரு கடாக்ஷத்தால் அன்றி இந்த அனுபவம் வேறு எவ்வழியாலும் எவர்க்கும் வருவதன்ரும். தமிழ் நாட்டின் தவச் செல்வத்தை நன்கு விளக்குகிறுர். குன்றுகள் இயல்பாகக் குறவர் வாழ அமைந்தவை. குறவர் குறிஞ்சிக் குரியர். குற வருப மருளும் குன்றமும் தவத்துக்குத் தக்கதாம்.

தவத்தின் மிக்கனே தருமத்தி
  னின்றனே சாந்தியை யடைவாயே
சிவத்தின் மெய்ம்மையை மனத்துளே
  தேறுதி சென்மமு மொழிவெய்தா
அவத்தின் வாழ்வுறு மனித்தரை
  யறநெறிக் கழைப்பது புரிவாயே
நவத்தின் ஞானியர் நாயக
  மென்னவே நாட்டிலே யிருப்பாயே. 285

உரை:- தவத்தாற் சிறந்து யதி தருமத்தில் நின்று மனச் சாந்தியை அடைவாய். பரம்பொருளின் தத்துவத்தை மனத்துள்ளே தெளிவாய் அதனுல் பிறப்புத் தொடர்பற்று ஒழியும் வீண் வாழ்வில் உலகத்தில் வாழும் மனிதரைத் தரும மார்க்கத் துக்கு வருவிப்பாய். புதுமையில் அமைந்த ஞானியர் நாயகம் என்னும் புகழ்பெற்று நாட்டில் விளங்குவாய்

விளக்கவுரை :- மிக்கனே, நின்றனே என்பவை முற்றெச் சங்கள். தவத்தில் மிகுந்து அதனுல் யதி தருமத்திலே சிறந்த நிலை பெற்று அதன் பயனுக மனச்சாந்தி பெறுவாய் என்று விளங்க வேண்டும். இச் சாந்தி வந்த பிறகே சிவத்தின் மெய்ம்மை மனத்துள் விளங்கும். இங்ஙனம் சிவ மயமானவரே மக்களுக்கு உபதேசம் புரிந்து அவர்களை நல்வழி புகுத்தத்தக்கவ ராவர்.

ஐந்து புண்ணிய தலங்களி
    னடங்கிய அறிவனுர் செயல்தேர்தி
இந்து மோலியன் பொருமவர்
    தலங்தோறு மேகினை பணிவாயே
நந்து சக்கரம் தாங்கிய
    நாரணன் நகரமும் நணுகுற்றே
கொந்து பூந்துழாய் கைக்கொடு
    போற்றுதி குணமெலாம் குவியும்மே. 286

உரை:- ஐந்து புண்ணிய பூமிகளிலே சமாதிகொண்டிருக்கும் மகா ஞானியாகிய சதாசிவப் பிரம்மத்தின் பெருமையை அறிவாய். சந்திரசேகரனைப் போன்று அவர் இருந்த தலந்தோறும் போய்ப் பணிவாயே. சங்க சக்கரங்கள் ஏந்திய திருமால் ஆலயம் தோறும் அடைந்து கொததுக் கொத்தாக அழகிய திருத்துழாய் கொண்டு வழிபாடு செய்வாய். அதனுல் நலன்கள் குவியும்.

விளக்கவுரை :- சதாசிவப் பிரம்மம் ஐந்து புண்ணிய பூமிகளில் சமாதி கொண்டிருப்பது முன்னமே உரைக்கப்பட்டது. இந்து மோலியன் - சந்திரசேகரனை பரமேசுவரன். சதாசிவர் பரமசிவனுக்கு ஒப்பாக அங்கங்கு விளங்கும் தலங்களைப் போய்ப் பணிய வேண்டும் என்று குறிப்பிக்கிருர். நந்து — சங்கம். நகரம்-ஆலயம். விஷ்ணு ஆலயங்களை வணங்குக எனவே உபலக்ஷணத்தாற் சிவாலயங்களும் கொள்க.

த்த்த மாமுனி துறவற
    நெறியிடைச் சார்ந்தனை யதனுலே
சித்த சுத்தியும் ஞானவை
    ராக்கியச் செல்வமும் பெறுவாயே

சுத்த சத்துவ மார்க்கமே
பொருந்தினை தூயவர் துணைகொண்டே
மத்த மாமலர் அணிபவன்
போலவே வாழுதி பலவாண்டே. 287

உரை :- தத்தாத்ரேய முனிவர் தாபித்த அவதூத சந்யாஸ மார்க்கத்திலே சார்ந்துள்ளாய். அதனுல் சித்த சுத்தியும் ஞான வைராக்கியச் செல்வமும் நிரம்பப் பெறுவாய். தூய ஞானியர் துணைகொண்டு சுத்த சத்துவ மார்க்கத்தில் நிலைபெற்று ஊமத்தம் பூவை அணிகின்ற பரமசிவன் போலவே பலவாண்டு தவக்கோலம் பூண்டு இருப்பாயாக.

விளக்கவுரை :- சித்த் சுத்தியும் ஞானமும் வைராக்கியமும் தத்த முனி சம்பிரதாயத்தில் நுழைந்த சந்யாசிகளுக்கு எளிதில் அமையும் என்பது இங்கு உரைக்கப்படுகிறது. ராஜஸ தாமஸ குணங்களின் சம்பந்தம் ஒழியச் சுத்த சத்துவ மார்க்கத்தில் இருப்பது பரம வைராக்கிய மூர்த்திகளுக்கே இயல்வதாம். மத்தம்-ஊமத்த மலர்.

நின்னுள் வாழ்வுறு மொளியினை
நாடியே நெடுந்தவம் முயல்வாயே
என்னுள் உள்ளதும் எங்குரு
வகத்திலே இருந்ததும் வேறன்றே
தன்னுள் ஒள்ளொளி கண்டனர்
காட்டிய தத்தனுர் மரபுற்ருய்
பொன்னுள் மண்ணுளே பெண்ணுளே
கலங்குருப் புலமையி னெளிர்வாயே 288

உரை :- உனக்குள் அடங்கியிருக்கும் ஒளியை நாடி அதனை உணர்ந்துகொள்ளும் அளவும் பெருந்தவம் புரிவாய். என்னுள் இருப்பதும் எம் குருவரர் மனத்துளே இருந்ததும் வேறு

பொருள் இல்லை தன்னுள் விளங்கும் பேரொளியை உலகத்துக்கு விளக்கி உணர்த்திய தத்தாத்திரேயர் பரம்பரையில் புகுந்திருக் கிருய். பொன்னிலும், மண்ணிலும், பெண்ணிலும் கலங்காத பேரறிவு பெற்று விளங்குவாய்.

விளக்கவுரை :- புறத்திலே காணும் மூர்த்தி, தலம் தீர்த்தம் முதலியவைகளைக் கண்டு அவற்றுள் மயங்கி இருந்து விடாமல் அகத்தில் சத்யம், ஞானம், அனந்தம், ஆனந்தம் என்ற குணம் உள்ள பரஞ்சோதியைத் தரிசித்து அதனுள் அழுந்துக என்று உபதேசம் செய்கிருர். அந்த ஒளியுருவம் உலகம் எங்கும் ஒன்றேயாய் இருக்கும் உண்மையை விளக்கு கிருர். குரு பரம்பரையிலே தாம் பெற்ற பேற்றையே இவர்க்கு அளித்திருப்பதை எளிது விளக்குகிருர். ஏஷணுத் திரயங்களை ஒழிக்க வேண்டும் என்ற உபதேசமும் வந்தது.

உலக நின்னையே சுயம்பிர
காசமாய் உணர்வுறு முயர்வுண்டே
கலக மிட்டன பொறிகளை
வென்றனை கடத்துளே மலைமேலே
விலக லின்றியே துறவற
விளக்கமாய் விளங்குதி முதற்கண்ணே
உலக மெங்கணும் வலம்வர
வேண்டுமால் உறுபொருள் உணர்வானே. 289

உரை :- உலகம் உன்னைச் சுயம்பிரகாசம் என்று உணரும் பெருமை உண்டாகும். கலகம் இட்டுக்கொண்டே யிருக்கும் பொறி புலன்களை வென்று காட்டிலும் மலைமேலும் விலகாது துறவறத்தின் விளக்கமாய் விளங்குவாய் அந்நிலை வருமுன் உண்மைப் பொருளை உணரும் பொருட்டு உலகம் எங்கும் வலம் வரவேண்டும்.

விளக்கவுரை :- ஆசிரமத்தைக் கொடுத்து விட்டதால் அதற்குரிய புதிய நாமமும் அருளிச் செய்கிறூர். இங்கு ஸந்யாஸம் பெற்றவர் சுயம்பிரகாசப் பிரம்மேந்திர அவதூத ஸ்வாமிகள் என்று சேந்தமங்கலத்தில் நெடுங்காலம் ஏகாந்தமாகத் தவம் புரிந்த மகான் என்பது இங்கு உரைக்கப்படும்.

தத்த மாமுனி தலம்பல
தளிபல தயங்குவ வடநாட்டில்
உத்த மாங்கமேல் அவர்பதம்
தாங்கிய உறவினேம் யாமெல்லாம்
சத்த சாகர மருத்தவா
ரிதியோடு தாந்திளேப் புறுமுன்ருர்
பத்தர் யாமென விளங்குதற்
கொருபணி பரிவினுற் புரிவாயே. 290

உரை .- வடநாட்டிலே தத்த முனிவர் க்ஷேத்திரங்கள் பலவும் ஆலயங்கள் பலவும் விளங்குகின்றன. நாமெல்லாம் அவர் திருவடியைத் தலேமேல் தாங்கிய உறவு உடையோம். சப்த சாகரத்திலும், அர்த்த வாரிதியிலும், நீந்திய அவர் பக்தர் நாம் என்று விளங்க ஒரு திருப்பணியை விருப்பத்தோடு புரிவாயாக.

விளக்கவுரை :- வடக்கே மகாராட்டிரத்திலும், மத்தியப் பிரதேசத்திலும் தத்தாலயங்கள் பல உண்டு. அவை போலத் தமிழகத்திலும் ஒரு சிறந்த தத்தாலயம் அமைய வேண்டும் என்ற விருப்பை வெளியிடுகின்ருர். உத்தம அங்கம் - தலே உறவு தத்த சம்பிரதாயஸ்தர் என்ற தொடர்பு. சப்தம் - சொல். சாகரம் - கடல். சொல்லாகிய பெருங்கடல். அர்த்த வாரிதி-பொருள் என்ற கடல் தத்த முனி. வேதம் மறைத்தசொற்பொருட் கடல் எல்லாம் நீந்தித் திளேத்தவர். நாம் தத்த பத்தர் என்பதற்கு அடையாளம் வேண்டும் என்கிருர்.

யாங்கு வீழினும் வீழுக
வுடலமென் றிருப்பதே நெறியாகும்
தீங்கு செய்நரும் உலகினி
லிருப்பரே சித்தமே தளராத
பாங்கு வேண்டுமால் நந்துற
வறத்திலே பருவரல் பலவுண்டாம்
ஓங்கு மெய்ப்பொருள் உளத்திலே
யுறுதலால் ஒருகுறை இலதாமே. 291

உரை :- இந்த உடம்பு எங்கே விழுந்தாலும் விழுக என்று மனம் அமைந்து இருப்பதே நமக்குத் தருமம் ஆகும். உலகத்திலே தீங்கு செய்பவரும் இருப்பர். அப்பொழுதும் மனம் தளராத தன்மை வேண்டும். நம் துறவற நெறியில் துன்பம் பல உண்டு. ஓங்கும் மெய்ப்பொருள் மனத்தில் உறைதலால் அக்குறை ஒன்றும் இல்லையாம்.

விளக்கவுரை :- இந்த உடம்பு தவத்துக்கு உதவும் அளவும் இருக்க. விழ வேண்டிய காலம் வந்தால் எங்கே விழ வேண்டும் என்ற அமைப்பு உண்டோ அங்கே விழுக. இதற்காக நாம் சிறிதும் கவலை கொள்ளலாகாது. அவதூத ஆச்ரமிகளுக்கு உலக மக்கள் பலவிதத் துன்பங்கள் விளைப்பர். அவற்றைப் பொறுக்கும் மனவுறுதி வேண்டும் என்கிறார்.

சொல்லின் வல்லவர் பொருளினில்
மிக்கவர் சூழுவர் நினைநாளை
எல்லின் மிக்கவர் சீடரும்
பலர்பலர் எய்துவர் நிலையத்தே
கல்லின் வாழ்வதே கருதினை
யாயினும் கனிவுறு முளத்தானே
நெல்லின் மிக்கநம் நாட்டிலே
திகம்பர நெறியிலே திரிவாயே. 292

உரை :- நாளை உன்னைச் சொல்லில் மிக்க புலவர்களும் பொருளின் மிக்க புரவலர்களும் சூழ்ந்து பற்றுவர். நீ இருக்கு மிடத்தே ஞான ஒளியுள்ள சீடரும் பலர் வருவார். மலையில் ஏகாந்தமாக வாழ்வதே துணிந்தாய். ஆனாலும் கனிவுபெற்ற மனத்தாலே நெல் வளம்மிக்க நம் நாட்டில் திகம்பர மார்க்கம் வழுவாமல் திரிவாய்.

விளக்கவுரை :- ஆசிரமம் அமைத்து மலைக் குகையில் இருக்க இவர்க்கு வாய்ப்பு உண்டு என்பதை உணர்ந்தே உரைக்கிறார். அந்தப் புண்ய பூமியில் ஏகாந்த வாழ்வு வாழ்வது சிரம சாத்யம் இல்லை மக்கள் மிக்க நாடு நகர்களில் திகம்பர விருத்தி விடாமல் வருகின்ற சிறுமை பெருமைகளைப் பொருட் படுத்தாமல் திரியவேண்டும் என்று உபதேசிக்கிறார். இந்த சன்யாஸ தர்மம் தமிழகத்தில் அதிகமாகப் பிரசாரம் பெருமையால் இதன் பெருமையை உலகறியச் செய்தல் வேண்டும் என்ற கருத்து; புலவரையும் செல்வரையும் ஒருபடியாக மதிக்க வேண்டும் என்பதும் இங்கு வந்த உபதேச மொழியாம்.

கவனம் வேண்டுமே பெருந்தவத்
துறையிலே கவர்பட லாகாதே
சவனம் வேண்டுமே தத்தசந்
நிதிமுனே தவத்துறை தெளிமைந்த
பவனம் வேண்டுமோ குடிசையும்
வேண்டுமோ பரந்துன விண்ணத்தே
மவுனம் வேண்டுமே காவியி
னுடையோ மதிப்பதே தகாதன்றே. 293

உரை:- பெருந்தவத் துறையிலே மவுனவுறுதீ வேண்டும். மனம் இங்கும் அங்குமாகக் கவர்பட்லாகாது. தவத்துறை தெளிந்த குமார, தத்த சந்நிதி முன்பு துதி கூறும் சம்பிரதாயம் வேண்டும். இருப்பதற்கு மாளிகையும் வேண்டுமோ, குடிசை

யும் வேண்டுமோ பரந்த ஆகாயத்தையே நோக்கும் மவுன யோகமே வேண்டும். நம் சந்யாசத்துக்குக் காவி வஸ்திரத்தை மதிப்பது தகாது.

விளக்கவுரை :- கவனம் - ஏகாக்ர புத்தி, கவர்படுதல்- ஒருபாற் படாமற்பல பக்கமும் செல்லுதல். சவனம்-துதி; ததத சந்நிதி. தத்தர் திருவுருவத்தின் முன்பு. பவனம் - மாளிகை. விண்ணம் - ஆகாயம். காவி வஸ்த்ரம் தண்ட. கமண்டலம். இவர்களுக்கு இல்லை.

உடலை முடுதல் நந்துற
வறத்திலே உரியதன் றறிவாயே
அடலை வேண்டுமால் பொறிகளை
மனத்தினை அவைதிற மடங்காமே
மிடலை யெய்துமா றில்லையே
யுலகினர் விழைவெலா மேவாதே
கடலை யொப்பவே தெளிவுற
வாழமாய்க் காலத்தைக் கடப்பாயே. 294

உரை :- நம் துறவு நெறியிலே உடம்பை முடுதல் உரியது அன்று என்பதை அறிவாய். பொறிகளையும் மனத்தையும் அடக்கிவைக்க வேண்டும். அவை தம் திறம் அடங்காமல் தவச் சிறப்பு அடையும் வழி இல்லை. உலகினர்க்குரிய ஆசையெல்லாம் கொள்ளாமல் கடலை ஒப்பவே தெளிவும் ஆழமும் கொண்டு காலத் தைக் கடப்பாயே.

விளக்கவுரை :- அவதூத ஆசிரமத்தின் முக்ய தர்மம் காவி வஸ்த்ரம், தண்டம், கமண்டலம் முதலிய சின்னங்கள் இல்லாதிருத்தல். சிரோ முண்டனம் செய்யாமல் சடை முடி வளர்த்தல். இந்த நெறியில் இருக்கத் துணிவில்லாதவர் இச் சம்பிரதாயத்தின் இம்மரியாதையைக் காக்கத் துணிவற்றவரே ஆவர் என்பது துணிந்து இளந் துறவியான சுயம்பிரகாசப் பிரம்

மேந்திரரை நோக்கி முதுபெருந் துறவியான குருதேவர் இங்ஙனம் ஆணையிடுகின்றார். சுயம்பிரகாசரும் இந்தக் குருப் பிரசாதத்தைத் தம் காலம் எல்லாம் கடைப் பிடித்தார். தருமத்தைக் காக்கப் பல துன்பமும் அடைந்தார். அவ்வரலாறு களை அவர் சரித்திரத்திற் காணலாம்.

அரசு பூண்டவன் தன்னடி
பணிந்தவற் கரசினை யருளானே
முரசு நல்குவன் திருவையு
நல்குவன் முடியினை யுதவானே
பரசு பாதத்து மாமுனி
யாகிய பரம்பொருட் குருமூர்த்தி
விரசு வாழ்விலே தன்னையே
யருள்வது விளங்கிய விளக்கன்றே. 295

உரை :- அரசு பூண்ட ஒருவன் தன் அடியைப் பணிந்து வேண்டிய அன்பனுக்குத் தனது அரசைக் கொடுக்க மாட்டான். முரசைக் கொடுப்பான் செல்வத்தையும் கொடுப்பான். தான் பரம்பரைக் கிரமமாய் அணிந்த கிரீடத்தைக் கொடுக்கமாட்டான். பணிந்து புகழ்ந்த பாதத்தையுடைய முனிவரான பரம்பொருட் குருமூர்த்தியான ஒருவர் உலகில் வழங்கும் வாழ்விலே தம் சீடனுக்குத் தன்னையே அருள்வது விளங்கிய விளக்கம் அன்றோ.

விளக்கவுரை :- அரசன் செல்வம் கொடுப்பன் வாழ்வு தருவன். முடியைத் தந்து தன்னிலை பெற ஒருவரையும் வருவிக்கமாட்டான். பரம்பொருள் விளக்கும் குருவோ தாம் அடைந்த மகோன்னத நிலையில் தம் சீடரும் இருப்பதைப் பார்த்து மகிழ்வர்.

பிரமம் யானென வுணர்வுறு
பெருநிலை பெற்றருள் பெரியாரைப்
பிரமம் என்னவே யுணர்கெனச்
சங்கரர் பேசிய தறிவாயே

பிரமம் வேறியான் வேறென
விளக்கிய பிறருமே சிவமாவர்
பிரமம் எங்குமாய் யாவுமா
யிருப்பது பிறங்குமே மறையுள்ளே. 296

உரை :- நான் பிரமம் என்று உணரும் பெருநிலை பெற்ற பெரியோர்களையும் பிரமம் என்றே உணர்க என்று சங்கரர் உரைத்தது அறிவாய். பிரமம் வேறு நான் வேறு என்று விளக்கிய பிற கொள்கையினரும் சிவம் ஆகிறதாகக் கேட்கிறோம். பிரம்மம் எங்குமாய் யாவுமாய் இருப்பது வேதத்துள் விளங்கும்.

விளக்கவுரை :- 'அஹம் ப்ரம்மாஸ்மி' என்ற மஹா வாக்யத்தின் தத்வத்தை அனுபவித்து அதன் மயமாய் இருக்கும் மஹான்கள் சங்கர சம்பிரதாயத்திலும் உண்டு. தத்த சம்பிரதாயத்திலும் உண்டு. மனீஷா பஞ்சகத்தில் 'ஸப்ரம்மைவ நப்ரம்மவித்' அவன் ப்ரம்மமே ஆகிறான். பிரமத்தை அறிந்தவனே ஆகான் என்று உரைத்திருப்பது இங்கு நினைக்கத்தக்கது சைவ சித்தாந்திகள் சுத்தாத்துவைத சித்தாந்தம் பேசுவர் அவர்கள் சிவத்தோடு இரண்டறக் கலப்பதாக உரைப்பர். அந்நிலை பெற்ற துறவறத்தாரைச் சிவம் என்றே கருதுவார் ஆண்டான் அடிமை வேற்றுமை உள்ள சித்தாந்தமே இந்த உண்மையை ஒத்துக்கொள்கிறது. அத்வைதிகளுக்கு இது உரிமை. ஆதலால் அத்வைத முக்தி பேதமற்ற பரமுக்தியாம்.

நமது மார்க்கத்தில் ஞானமும்
பக்தியும் நலமுற விணையுற்றே
தமது தன்மையை விளக்குதல்
சுகமுனி சரிதத்தே காண்பாயால்
குமரி வாழிலென் இமயத்தே
வாழிலென் குருவார் அருளாலே
அமரும் வாழ்விலே ஆனந்த
சாகரத் தாழுவம் அறிவாயே. 297

உரை :- நம் தத்த சம்பிரதாயத்திலே ஞானமும் பக்தியும் நன்மை பெற இணைந்து தமக்குள்ள நன்மையை விளக்குதல் சுகப்ரமத்தின் சரித்திரத்திற் காண்பாய். கன்னியா குமாரியில் வாழ்ந்தா லென்னே ! இமயத்தின் முடிமேல் இருந்தா லென்னே ! குருவரர் திருவருளாலே அமர்ந்த யோக வாழ்க்கையில் ஆனந்த சாகரத்தழுந்துவோம் என்பதை அறிவோம்.

விளக்கவுரை :- தத்த சம்பிரதாயத்தில் ஞானத்தோடு பக்தி யோகம் இணைந்திருக்கிறது. சங்கர சம்பிரதாயத்திலே பக்தி ஞானத்துக்குக் கீழ்ப்படியாக உள்ளது. சுகப்ரம்மம் அவ தூத பரம்பரையில் உன்னத நிலையில் இருந்தார். ஆபினும் அவர் கிருஷ்ண சரித்திரம் பரீக்ஷித்துக்கு உரைத்தார்.

என்னை யொட்டியே யென்றுமே
  யிருப்பதும் இயல்பிலை இளஞ்செல்வ
நின்னை யொட்டவே யான்வர
  நினைவதும் நெறியிலை யுலகத்தே
பொன்னை மாதரை மறந்துநீ
  துறவறப் பொலிவிலே விளங்குற்றே
மன்னை பாடவே வகையுறு
  நிலைமைக்கண் வாழ்வுற மனங்கொள்ளே.

உரை :- இளஞ்செல்வ நீ என்னை ஒட்டியே என்றும் இருப்பது சாத்தியம் இல்லை. உலகத்தில் உன்னை ஒட்டியிருக்கும்படி நான் வர நினைப்பதும் முறையன்று. நீ பொன்னையும் பெண்ணையும் மறந்து துறவறப் பொலிவில் விளங்கி எதிர் காலத்தில் மன்னைக் காஞ்சி பாடவேண்டிய வகை உருத நிலயில் வாழ மனம் கொள்வாயாக.

விளக்கவுரை :- குருவைப் பிரியாமல் சீடர் என்றும் இருப்பது இயலாது. சீடர் போகும் இடம் எல்லாம் குரு உடன் போவதும் இயலாது. பிரிந்தாலும் குருவரர் திருவடிகளை மறவாத

சிடர் குருவருளுக்குப் பாத்திரம் ஆவர் என்பது ஆஸ்திகா சித்தாந்தமாகும். பிரிய வேண்டிய நிலையில் உள்ள சீடருக்கு உரிய உபதேசம் அருள்கின்றார். மண், பெண், பொன் என்ற மூன்று ஆசைகளை ஒழித்து வைராக்யத்தோடு வாழ முயல்வாயாக என்று கூறுகிறார். மன்னை-கழிந்ததற்கு இரங்கி வருந்துதல். மூன்னும் வந்தது. மன்னைக் காஞ்சி-புறத்துறை.

என்று நல்லுப தேசங்கள்
அருளிய இறைவரை வழிபட்டே
குன்று மோவருள் பிரிவதால்
என்றுமே குருவுரு மறவாதே
நன்று வாழ்வுற நல்லருள்
நல்கிய நாயக தவவாழ்வில்
நின்று நேர்மையி லோங்குவன்
தருமத்தின் நெறியிலே பிழையேனே. 299

உரை :- என்று நல்ல உபதேசங்கள் அருளிய குரு தேவரை வணங்கிச் சீடன் பிரிவதாலே குருவருள் குறையுமோ? என்றும் குருவின் திருவுருவத்தை மறவாமல் நன்கு வாழ நல்லருள் தந்த குருதேவ அடியேன் தவ வாழ்விலே நிலைபெற்று நேர்மையில் ஓங்குவேன் தரும நெறியிலும் தவறமாட்டேன்.

விளக்கவுரை:- நல்ல உபதேசம்-உலக வாழ்விற்கு என்று உரைக்கும் சொல் இல்லாமல் பிரமானந்த அனுபவம் பெற அருளும் உபதேச மொழிகள். பிரிந்தால் அருள் குறையுமோ என்பது சீடர் ஒவ்வொருவரும் கருதத் தக்க மொழியாம்.

என்ன வோதினர் வணங்கினர்
தமிழகம் எங்கணும் திரிதந்தே
மின்ன லொக்குமென் றருள்மறை
பேசிய மெய்ப்பொருள் தெளிவுற்று

மன்ன ரெய்திலாப் பெருமையு
மெய்தினர் குருவரர் மலர்த்தாளே
நன்னர் எண்ணியே வாழ்ந்தனர்
சீடராய் நணுகிய பெரியோரே. 300

உரை :- என்று கூறி வணங்கினர். தமிழகம் எங்கும் திரிந்து மின்னலைப் போல் விளங்கும் என்று வேத சிரம் பேசிய மெய்ப் பொருளைத் தெளிவாக உணர்ந்து அரசர் அடைதற்கரிய பெருமையும் அடைந்தார். குருதேவர் பாத மலர்களை நன்கு தியானம் பண்ணியே வாழ்ந்தார். சீடராக வந்த பெரியோர்.

விளக்கவுரை :- சீடராக நண்ணிய பெரியோர் எழுவாய் ஓதினர் வணங்கினர், பெருமை எய்தினர், எண்ணி வாழ்ந்தனர். என்று பயனிலைகளை அமைத்து முடிக்கவேண்டும். சதாசிவப் பிரம்மேந்திர சரஸ்வதி அவதூத ஸ்வாமிகள் திருவருளால் அவ தூத சந்யாஸம் பெற்ற ஸ்வயம் பிரகாச பிரம்மேந்திர அவதூத ஸ்வாமிகள் சேந்தமங்கலத்தில் நிலைத்து இருந்தார் ஆயினும் குருவருள் நினைந்து குருவாணையின் வண்ணம் பாரத தேசம் முழுதும் இரண்டு முறை வலம் வந்து ஆங்காங்கு உள்ள தத்தா லயங்களை வணங்கித் தத்தப் பிரசாதம் பெறத்தக்க நிலைமை அடைந்தார்.

ஆறுவது

மகாசமாதிப் படலம்

பித்தர் போலவும் பேதையர் போலவும்
மத்தர் போலவும் வாழ்ந்த சதாசிவர்
சுத்த தத்துவத் தூய்மைக் கடலுளே
நித்த மூழ்கி நினைவற் றிருந்தனர். 301

உரை :- பித்துப் பிடித்தவர் போலவும் அறிவு நிரம்பாதவர் போலவும் மயக்கம் கொண்டவர் போலவும் வாழ்ந்த சதாசிவப் பிரம்மேந்திரர் சுத்த தத்துவம் ஆகிய தூய்மைக் கடலுக்குள் என்றும் மூழ்கி உலக நினைவு இல்லாதிருந்தார்.

விளக்கவுரை :- கம்பர் இராமாவதார அவையடக்கத்தில் "முத்தமிழ்த் துறையில் முறை பொலிய உத்தமக் கவிகட்கு ஒன்று உணர்த்துவன். பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும் பக்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ!" என்று பாடுகிறார். பித்தர் அறிவுநிலை கொள்ளாதவர் பேதையார் அறிவு வளரப் பெறாதவர் மத்தர் இயற்கையில் நல்லறிவு உடையராயினும் மந்திரம் மருந்து முதலியவற்றால் நிலை கெட்டவர். ஞான நிஷ்டையில் இருந்த இம்மகான் உலகத்தார் முன் இப்படித் தோன்றுகிறார்.

காண லாகிய காட்சியை நோக்கிலர்
பூண லாகிய பூண்களை யெண்ணிலர்
பேண லாகிய பெட்டிரு வேண்டிலர்
நாண லாகிய ஞானமற் றுரரோ. 302

உரை :- இவர் உலகத்திலே காணத்தக்க காட்சிப் பொருள்களை விழியால் பார்ப்பதில்லை. திருமேனியிலே பூணத் தக்க ஆபுரணங்களையும் அலங்காரங்களையும் அணிவதில்லை- விரும்பத்தக்க அன்புருவங்களை வேண்டுவதில்லை. நாணம் என்ற உணர்ச்சியே இல்லாதவராய் இருந்தார்.

விளக்கவுரை :- பொறிகள் புலன்களை நாடி நடப்பது உலக இயல்பு. காட்சி விழிப்புலனால் பெறும் இன்பம் உப லக்ஷணத்தால் மற்ற நான்கு புலன்களையும் இங்கு ஏற்றுக் கொள்ளவேண்டும். பூண்களை அணிவது தேகாபிமானம் உடையவர்களுக்கு இயல்பாக உள்ள குணம் பெட்பு + உரு- விரும்புதற்கு உரிய உருவம். பெண்களைக் காதலித்து அவர் அழகில் மனம் வைத்து அதனால் தம் அன்பு அவர் உருவத்தில் இருப்பதாகப் பாவிப்பது உலக மக்கள் இயல்பு. பெண் காதல், மக்கள் காதல் எல்லாம் ஒரு வகை. இவர் உடம்பை மறைக்கும் உணர்ச்சி இழந்தவர் ஆதலின் நாணம் இல்லாதிருந்தார். இவருக்குப் பிறரிடம் விருப்பு வெறுப்பு இல்லை.

குருவி பாடும் குளிர்வரை யுச்சியும்
அருவி பாயும் அகன்கரைப் பக்கமும்
பொருவி லாத புராதன யோகத்தே
மருவி நின்றனர் மாயமகன் றதே. 303

உரை :- குருவியினங்கள் இனிய கீதம் பாடுகின்ற குளிர்ந்த மலைச் சிகரங்களிலும் மலையருவிகள் பாய்கின்ற அகன்ற கரைப் புறங்களிலும் ஒப்பற்ற பழமையான ஞான யோகத்தில்

அடங்கியிருந்தார். உலக மாயம் அவர் மனத்தை விட்டு நீங்கியது.

விளக்கவுரை :- தவத்தில் நாட்டம் உள்ளவர் ஏகாந்த ஸ்தலங்களையே நாடிச் செல்வர். நாடு நகரங்களிடையே தனி நிலை வாய்ப்பது அருமை ஆதலின் காடுகளைத் தேடிச் செல்வர். மலைகளும் காடுகள் அடர்ந்த நிலங்கள் உள்ளவை ஆதலின் உயர்ந்த இடத்தில் இயல்பாக மனத்துக்கு அமைதி பிறப்பது உண்டாதலின் இம்மகான் அருவிக் கரைப் பக்கமும் மரங்கள் அடர்ந்த மலையுச்சியிலும் தனி நிலை விரும்பி இருந்தார். குரு தேவர் சென்ற நெறி இது.

உடைகள் வேண்டா உடம்புடை யாரெனச்
சடைகள் தாங்கிய சாந்தர் இவரென
நடைகள் எங்கும் நடக்கும் மனித்தரே
அடைவர் நோக்கி அகமுறப் போற்றுவர். 304

உரை .- உடைகளை உடுக்க வேண்டாத உடம்பு உடையவர் என்றும் சடைகளைச் சுமந்த சாந்தமூர்த்தி இவர் என்றும் போகும் வரும் வழிகளில் நடக்கும் மனிதர் எல்லாம் அவரை நெருங்கிப் பார்த்து மனமுறப் போற்றி வணங்குவர்.

விளக்கவுரை :- தேக அபிமானம் அறவே ஒழிந்தாலன்றி அவதூத ஆசிரமத்தில் உறுதியாக நிற்றல் இயலாது. தம்முன் வரும் மக்கள் ஆடவர் பெண்டிர் என்ற பேத பாவமே அவர் உள்ளத்தில் எழக் கூடாது. அந்த எண்ணம் எழுமாயின் தம் உடம்பை மறைக்கவும் மறைவிடம் தேடி ஒளிந்திருக்கவும் மனம் தூண்டும். தத்த சம்பிரதாயத்தில் உறுதி பெற்ற அவதூத ஆசிரமிகள் தம்மை நோக்கி உலகத்தார் உரைக்கும் எவ்வகைச் சொற்களையும் பொருட்படுத்தாத உன்னதமான நிலையில் நிற்றல் வேண்டும். இம்மகான் நெடுங்காலம் சடை முடி உடையவராக இருந்தார். பழுத்த முது பருவத்தில் சில துஷ்டர்கள் இவர்

சமாதியில் இருந்தபோது சடை தாடிகளைக் களைந்து விட்டனர். அதனால் இன்று இவர் திருவுருவம் ஆசிரமச் சம்பிரதாயத்துக் கேற்பச் சடை முடியோடில்லை.

கலையி னுச்சி கரந்த பொருள்தெளி
நிலையி னுச்சி நிரப்பு பெருமுனி
மலையி னுச்சி மடங்கி யடங்கியே
சிலையி னுச்சி சிவண விருந்தனர். 305

உரை :- சாத்திரங்களின் உச்சியிலே மறைந்திருக்கும் பரம வேதாந்த ரகசியத்தை உணர்ந்த துறவு நிலையின் உச்சியை நிரப்பிய இப் பெரு முனிவர் மலைச் சிகரத்தில் பொறி புலன்களும் மனமும் உள்நோக்கம் பெறச் செய்து அடங்கி விக்கிரகம் ஒன்றின் தலைப் பகுதியோ என்று கூறும்படி இருந்தார்.

விளக்கவுரை :- சாஸ்திரங்களின் பரம சித்தாந்தம் பிரம்ம சத்யம் ஜகத்மித்யை என்பதே ஆகும். இவ்வுண்மையைத் தம் அனுபவத்தில் அறிந்த ஞான சீலர் இவர். மித்தை என்று நன்கு தெளிந்த உலகத்தை அறவே அகன்று மலையுச்சியிலே தம்மை எவரும் கண்டு அறியத் தகாத நிலையில் தவச் செல்வத்தில் ஆழ்ந்து இருந்தார். விக்கிரகமோ என்று தோன்றுவார்.

ஆங்கு போந்த அறிவில் சிறுர்சிலர்
பாங்கு சென்றனர் பார்த்தனர் ஞானியை
தீங்கு நன்மை தெளிவறு நெஞ்சினுல்
ஒங்கு நீள்சடை ஒட்டக் களைந்தனர் 306

உரை :- அங்கே வந்த அறிவற்ற சிறுவர் சிலர் அருகே சென்றனர் இந்த ஞான மூர்த்தியைப் பார்த்தனர். இது தீமை, இது நன்மை என்று தெளியாத மனம் உள்ளவர் ஆதலால் மகான் (திருமேனிக்குச் சிறப்பாக அமைந்த) உயர்ந்த நீண்ட சடைகளை ஒட்டக் களைந்து எறிந்தனர்.

விளக்கவுரை :- சடை முடி தாங்கும் தவக்கோலம் பூண்ட சதாசிவர் முண்டனக் கோலம் உள்ளவராகவே இன்று காட்சி கொடுப்பதற்குக் காரணம் இங்கு உரைக்கப்படுகிறது. புதுக்கோட்டைக்கு இம் மகான் வருவதற்கு முன்பே சடைமுடி நீங்கி முண்டனக் கோலம் வந்துவிட்டது. இவர் ஒன்றையும் விரும்புவதில்லை. வெறுப்பதும் இல்லை சமாதி நிலையில் இருந்தபோது அவ்வழி வந்த சில இளம பிள்ளைகள் தாம் செய்யும் செயலின் பாவ புண்ணியங்களை உணராது சடைகளையும் தாடிகளையும் அறவே களைந்தனர். களையும்போது இவர் அச் செயலை அறியவில்லை. களைந்த பிறகு எப்பொழுதோ உணர்ந்து கொண்டாராயினும் அதனைப் பொருட் படுத்தாது நடந்து சென்றார்.

சிறுவர் செய்த சிறுசெயல் ஞானத்தின்
உறுவர் மெல்ல உணர்ந்தனர் மோனியாய்
அறுவர் உட்பகை யாதலின் ஒன்றையும்
செறுவர் இன்றியே சென்றனர் நாட்டுளே. 307

உரை :- அறிவிற் சிறியவரான சிலர் செய்த அற்பச் செயலை ஞானத்திற் பெரியோரான இவர் பிற்காலத்திலே உணர்ந்து கொண்டார். மவுன விரதம் பூண்டவராய் உட்பகை அற்றவர் ஆதலால் ஒன்றையும் வெறுக்காமல் நாட்டுள் நடந்து சென்றார்.

விளக்கவுரை :- சிறுவர் - ஆண்டு, அறிவு, ஒழுக்கம், நன்னடை முதலியவற்றிற் சிறுமையுற்ற மக்கள். இவர்களை மாக்கள் என்று கூறுவதே பொருத்தம். உறுவர் - பெரியோர். ஞானத்தின் உறுவர் என்று விசேஷத்தால் உலக நோக்கில் உள்ள பெருமைகளை மதியாத உன்னத நிலையில் இருந்தார் என்பது தெளிவாகும். உட்பகை-காமம் குரோதம் முதலிய ஆறு. செறுதல்-கண்டித்தல். செறுவர்-செறுகின்றவர்.

பாண்டி நாடு படர்ந்தனர் ஆலவாய்
வேண்டி நின்று விமலனை யேத்தினுர்
ஆண்டி வாழும் அசலப் பழனியும்
காண்டி யென்ற கருத்தின்பின் போயினுர். 308

உரை :- பாண்டிய நாட்டுக்கு வந்தார். திருவாலவாயில் சென்று அங்குக் கோயில் கொண்ட இறைவனை வேண்டி நின்று துதித்தார். ஆண்டி வேடம் பூண்ட முருகன் வாழும் மலையான பழனியும் காண்க என்று தூண்டிய கருத்தைப் பின் பற்றி நடந்தார்.

விளக்கவுரை :- பாண்டிய மன்னர் ஆண்ட தமிழ் வளர்ந்த நாட்டின் தலை நகர் மதுரை. அது ஆலவாய் என்ற பெயர் உள்ளது. அத்திருத் தலத்தில் சொக்கலிங்கன் அங்கயற் கண்ணம்மையோடு கோயில் கொண்டிருக்கிறுன். ஆண்டி என்பது பழனியில் தேவியர் இன்றிக் கோயில் கொண்டிருக்கும் முருகன் திருப்பெயர் - பண்டாரம், ஆண்டி முதலிய பெயர்கள் அவனுக்கே தக்கது. அசலம் — மலை மதுரைத் தலத்தை வணங்கிய இம்மகான் அருகேயுள்ள பழனித் தலத்தையும் வணங்க விரும்பி அங்குச் சென்றுர் நல்ல நெறியில் இழுக்கும் கருத்தின்பின் நடந்தார் என்பது.

முருகன் முன்பு முறையிற் பணிந்தனர்
இருகண் கொண்டுனை எங்ஙனம் காண்பலோ
அருகர் மாய அடைந்தருள் காழியாய்
வருக நெஞ்சகம் வாழ்வுற வென்றனர். 309

உரை :- முருகன் முன்னே முறைப்படி பணிந்தார். உன்னை என் இரு கண்களைக்கொண்டு எப்படிக் காண்பேன். அருகர் அழியும்படி அவதரித்த சீகாழி ஞான சம்பந்தப் பிள்ளையே என் மனத்தகம் வாழ வருவாயாக என்றுர்.

விளக்கவுரை :- பழனி முருகன் திருமுன் பணிந்து நின்ற ஞான வேந்தர் தம் மனததில் எழுந்த கருத்தைக் குறிப்பாகத் தெரிவிக்கிறார். எல்லாம் வல்ல இறைவன் முன்னே நின்ற நிலையில் தமக்கு உள்ள குறைகளையும் அவனுக்குள்ள பூரணச் சிறப்பையும் விளக்கும் சொற்களை உரைக்கின்றார். அருகர்-சமணர். அவர்கள் தமிழகத்தில் வேத மார்க்கம் அழிய வழி செய்தனர். முருகன் சம்பந்தராக வந்து வேத பாஹியரை அழித்தான்.

தாயு மான தலைவன் விளங்குறும்
கோயில் வந்து குறைவறப் போற்றியே
தேயு மேனிச் சிதைவுணர் நெஞ்சினர்
வாயு நாரத மாமலை யெய்தினார். 310

உரை :- தாயும் ஆனவன் என்ற திருப்பெயர் பூண்ட இறைவன் கோயில் கொண்டு விளங்கும் ஆலயத்துக்கு வந்து எவ்வகைக் குறையும் அறப் போற்றித் தேய்ந்து வரும் திருமேனியின் அழிவை உணர்ந்து கொண்ட மனம் உள்ளவராய் அருகே உள்ள நாரத மலையை அடைந்தார்.

விளக்கவுரை :- திருச்சிராப்பள்ளியில் கோயில் கொண்டிருக்கும் சிவ பரம் பொருள் தாயுமானவன் என்ற பெயர் கொண்டவன். ஒரு செட்டிப் பெண்ணின் பேறு காலத்தில் காவேரி கடந்து தாய் வர இயலாது போகவே அப்பொழுது தானே தாயுருவம் பூண்டு சென்று அப் பெண்ணுக்கு மருத்துவத் திருப்பணி யேற்றான். இப் பரம் பொருளின் திருவிளையாடல் இறைவனது பரம காருணிக குணத்தை நன்கு விளக்குவது. முதுமைத் தளர்ச்சி இம் மகான் உடலை வருத்தியதால் மெல்ல நடந்து புதுக்கோட்டைப் பக்கம் வருகிறார். வழியில் திருச்சிராப் பள்ளியிலிருந்து புதுக்கோட்டை நெருங்கும் போது நாரதமலை உள்ளது. இங்கு வந்து சிறிது தங்கினார்.

மாந்தர் போற்றி வணங்கி வரம்பெறும்
சாந்த ஞான சதாசிவ மாமுனி
போந்த வெற்பிற் புராரி தளியுளே
ஏந்தல் போகத் திருந்தனர் என்பவே. 311

உரை :- மனிதர் எவரும் போற்றி வணங்கித் தமக்கு வேண்டிய வரங்களைப் பெறத்தக்க உயர்நிலை கொண்ட சாந்தரும் ஞானமூர்த்தியுமான சதாசிவப் பிரம்மேந்திரர் தாம் வந்த நாரத மலையில் உள்ள சோழர் காலத் திருப்பணியான சிவாலயத்தில் இராஜ யோகத்தில் அமர்ந்திருந்தார்.

விளக்கவுரை :- தவமும் தவம் உடையார்க்கு ஆகும் என்ற வள்ளுவர் வாக்குக்கு இலக்கியமாக விளங்கும் இம் மகாதமா இனி இவ்வுடம்பு வீழும் காலம் நெருங்கியது என்பதை உணர்ந்து காடோ, மடமோ, வீடோ, கோயிலோ, புறந் திண்ணையோ, எங்கேனும் இது விழுக என்று துணிந்து எவ்வகைச் சங்கற்பமும் இன்றிப் பிரம்மானந்த அனுபவியாக வந்து கொண்டிருந்த நிலையில் நாரத மலையில் உள்ள புராதன சிவாலயத்தில் ஒருபுறம்[இருந்தார் தவமே உருவமாக யோகத்தில் இருந்தார்.

புதுவை மக்கள் புகுந்தனர் நோக்கினர்
மதுவை யெய்திய மாமுனி யோகினைக்
கதுவ வந்தனர் காலில் வணங்கினர்
புதுமை யீதெனப் போற்றினர் நெஞ்சினால். 312

உரை :- புதுக்கோட்டை மக்கள் அக் கோயிலுக்கு வந்து பார்த்தனர். மதுப் பிராமணத்திற் கூறிய பரம ஆனந்த மதுவைப் பருகி அதன் கண் அடங்கியிருக்கும் மகாமுனிவரான யோகியை நெருங்கி வந்தனர். அவர் திருவடிகளில் விழுந்து வணங்கினர். தம் மனத்தால் இஃது ஒரு புதுமை என்று கூறிப் போற்றினார்கள்.

விளக்கவுரை :- நாரதமலை புதுக்கோட்டைக்கு வட மேற்கே ஒன்பது கல் தொலைவில் உள்ளது. அங்குள்ள சிவாலயம் சோழர் திருப்பணி. இன்று பழமைக் காட்சியாக உள்ளது. அங்கு ஒரு மாரியம்மன் கோயில் உண்டு. அக் கோயிலுக்குப் பல்லாயிரக் கணக்கான மக்கள் பூச்சொரிந்து வழி பட வருவது உண்டு. ஊர் சிறியதே ஆயினும் கோயிலாற் சிறப்புற்றது. அங்குப் புதுக்கோட்டை மக்கள் வருவதுண்டு

அற்பு மிக்கவர் ஆயிரர் நாரத
வெற்பு மேவிய மெய்யறி ஞானியைப்
பொற்பு மிக்கதோர் பூஞ்சிவி கைக்கணே
கற்பின் வைத்தனர் கைகொடு தாங்கினர். 313

உரை :- அன்புமிக்க ஆயிரம் மக்கள் நாரத மலையிலே வந்து ஞானயோக சமாதியில் இருந்த தத்துவ தரிசியான ஞான மூர்த்தியை அழகுமிக்க தான ஒரு சிவிகையில் திறமையோடு வைதது தம கைகளால் தாங்கி எடுத்தனா.

விளக்கவுரை:- நாரதமலையில் இராஜயோகியாக அமர்ந்த சதாசிவர் உடல் தளர்ந்து நிர்விகல்ப சமாதி அடையும் நிலையில் இருப்பதை அறிந்த மெய்யன்பர் சிலர் பக்தி சிரத்தையோடு வந்து அரண்மனையிலிருந்து ஒரு அழகிய சிவிகையைப் பெற்று அதன் மேல் மெல்ல மெல்ல அவரை எடுத்து வைத்துக் கைத் தாங்கலாக அசைவு கொடுக்காமல் ஆட்டம் தாராமல் மெல்ல மெல்லப் புதுக்கோட்டைக்குக் கொண்டுவர முயல்கின்றனர்.

ஞான மாமுனி ஞானத்தின் காட்டையை
மோன யோகத்து முற்று முணர்ந்தனர்
தான பேதம் தனையு மறிந்திலார்
வான வாழ்வை மதித்திருந் தாரரோ. 314

உரை :- ஞானிகளுட் சிறந்த மகா முனிவரான சதாசிவர் ஞானத்தின் பேரெல்லையை மவுன மயமான யோகத்தால் முற்றிலும் உணர்ந்து இடம் மாறுவதைப் பற்றிய அறிவு இல்லாமல் பிரம்மானந்தப் பெரு வாழ்வை மனத்தில் நினைத்து அமைதியாய் இருந்தார்.

விளக்கவுரை :- பக்தி, ஞானம் என்ற இரண்டு யோகங்களையும் ஏற்றுக்கொண்ட சம்பிரதாயத்தால் துறவு பூண்டு தத்த முனிவரைப் போல அவதூதக் கோலத்தில் இருந்த இம்மகான் சமாதி நிலையில் இருக்கும் போது தேவ ஆலயத்தில் அடங்க நேர்ந்தால் சிவ கைங்கர்யத்திற்குச் சிறிது இடையூறு நேரலாம் என்று எண்ணிய அன்பர் சிலர் கூடிச் சிவிகையில் இம்மகான் உணராமலேயே எடுத்து வைத்துப் புதுக்கோட்டைக்கு வருகின்றார். இவரோ தாம் இருந்த இடம் மாறியதையும் அறியாத யோக சமாதியில் இருந்தார்.

தத்த மூர்த்தி சரண்மலர் போற்றினர்
சுத்த ஞான சொருப குருவரர்
சித்த நின்று சிறப்ப துணர்ந்தனர்
முத்த மோன முழுநிலை யெய்தினர். 315

உரை :- சதாசிவப் பிரம்மேந்திரர் தத்தாத்திரேய மூர்த்தியின் சரண மலரை மனத்தால் தியானித்தார். தம் ஞான குருவான சுத்த ஞான சொரூபம் உள்ள இராமகிருஷ்ண யதீந்திரரையும் தியானித்தார். அவர் தம் சித்தத்தில் நின்று சிறப்பதை உள்ளூற உணர்ந்தார். முக்தருக்குரிய பரிபூரண மவுன நிலையில் அடங்கினர்.

விளக்கவுரை :- பிரம்மானந்த அனுபவம் பெற்ற மகான்களுக்கு உள்ளத்தில் எவ்வகைப் பேத பாவமும் இருப்பதற்கு நியாயம் இல்லை. நெஞ்சில் அடங்கிய சதாசிவப் பரம்மம் பாடியருளிய நூல்களில் முழு தியானத்தைத் தெளிவாக உரைக்கிறார்.

பிரம்மை வாஹம் என்று பாடும் கீர்த்தனத்தில் பல்லவியிலேயே குரு கிருபையை உரைக்கிறார். அதனால் குரு சிந்தை இருப்பது பொருத்தம்.

சிந்தை யன்பிற் சிவிகை சுமந்தவர்
சந்தை வேதம் தகவே யிசைத்தனர்
கந்தை யாடை கருதாத துறவியை
எந்தை என்னை யெனப்பணிந் தேத்தினர். 316

உரை :- தம் மனத்தில் எழுந்த மெய் அன்பால் இம் முனிவர் அமர்ந்த சிவிகையைச் சுமந்த மெய்யன்பர் மெல்ல நடந்து சென்றனர். தாம் சந்தை சொல்லி ஓதிய வேதத்தை மெல்ல இசைத்து நடந்தனர். கந்தையுருவமான சிற்றுடையையும் கருதாத இம் முனிவரை எம் தந்தையே, எம் தாயே என்று பணிந்து புகழ்ந்தனர்

விளக்கவுரை :- ஞானிகள் நிர்விகல்ப சமாதி அடைந்த நிலையில் அவர்கள் திருமேனியைச் சுமக்கும் பேறு பெற்றவர் ஸ்நாநாதிகள் முறையே செய்து தமக்கு உரிய புண்ட்ரம் தரித்துப் பக்தி சிரத்தையோடு வேத வாக்கியங்களையும் உபநிஷத்துக்களையும் ஓதியே அவர்களை எடுத்துச்செல்ல வேண்டும் என்பது சத் சம்பிரதாயம் ஆதலால் புதுக்கோட்டை வைதிகர் பலர் இக் கைங்கரியத்திற் கலந்து தமக்கு இப்பேறு வாய்த்ததே என்ற மகிழ்ச்சியால் வேத கோஷம் செய்து வந்தனர்.

பல்ல வன்குளப் பாங்கர் அடைந்தனர்
நல்ல வன்புரு ஞானத்தின் மெய்யுரு
வல்ல வன்புரு மாயவே பேரொளி
மெல்ல நன்குறு மெய்ம்மை யுணர்ந்தவர். 317

உரை :- பல்லவன் குளத்தின் அருகில் வந்தனர். நல்ல அன்பின் உருவமும் ஞானத்தின் மெய்யான உருவமும் வன்மை

மிக்க வன்பின் உருவம் அழியவே பேரொளியை மெல்ல நன்கு அடைந்து தத்துவம் தெளிந்த சதாசிவர்.

விளக்கவுரை :- மெய்ம்மை உணர்ந்தவர் அடைந்தார் என்று வாக்கியத்தை முடிக்கவேண்டும். பிரமானந்த அனுபவத்திலே சமாதி நிலையில் இருந்த சதாசிவ மாமுனிவர் உடம்பு உணர்வு சிறிதும் இல்லாதிருந்தார். ஆயினும் நாரத மலையிலிருந்து சிவிகையிலே ஏற்றி வந்த நன்மக்கள் உதவியாலே புதுக்கோட்டை நகர்க்குள் நுழைந்து பல்லவன் குளத்தின் வட கரையில் துறவிகள் வந்தால் இடம் பெறும் மடத்துக்கு வந்து சேர்ந்தார். அங்கு வரும் வரையில் திருமேனி வாடவில்லை. உயிர் இருந்தது.

துறவுச் செல்வர் துறைக்கண் அடைந்தனர்
அறவச் செல்வர்க் கமைந்த மடத்திலே
உறவைத் தேத்தி உறுபுகழ் மன்னர்க்கு
மறவற் காகிலா மாற்றம் உரைத்தனர். 318

உரை :- துறவுச் செல்வம் வளர்த்த சான்றோர் இறங்கும் படித் துறைக்குச் சிவிகையில் வந்தார். அத்துறவறச் செல்வர்க்கு அமைந்த மடத்தில் (அவரைச் சிவிகையில் எடுத்து வந்த நன் மக்கள்) மெல்ல இறக்கி வைத்துத் துதித்து வணங்கி மிக்க புகழ் பூண்ட புதுக்கோட்டை அரசர் பெருமானுக்கு மறத்தற்கு இயலாத செய்தியை உரைத்தனர்.

விளக்கவுரை :- புதுக்கோட்டை நகரத்தில் நடுநாயகமாய் உள்ள அரண்மனையை ஒட்டியுள்ள பல்லவன் குளம் சரித்திரப் பிரசித்தி பெற்றது. முன்னாளில் அக்குளத்தின் படித் துறைகள் இன்னவர் இத்துறையில் இறங்குக என்ற அரசர் ஆணைக்கு அடங்கியிருந்தன. அவ்வண்ணம் துறவிகள் வந்து தங்கும் மடத்துக்கு அருகே ஒரு சிறு படித்துறை அவர்களுக் கென்றே ஒதுக்கப் பெற்றிருந்தது. அத்துறைக்கு அருகே உள்ள

32

மடம் பின்னாளில் வேத பாடசாலை ஆயிற்று. இன்று அச்சிறப்பையும் இழந்து அடங்கியுள்ளது.

அன்று மன்னன் அமைச்சியல் பூண்டவர்
தொன்று கொண்டதோர் தோழமை யெண்ணியே
நன்று ஞானியர் நங்நகர் எய்தியது
என்று கூறி யிறைஞ்சின ரேத்தினர். 319

உரை:- அந்நாளில் புதுவையரசர்க்கு அமைச்சராய் இருக்கும் பதவியைப் பெற்றவர் முன்பு இத்துறவரசரோடு கொண்டிருந்ததோழமையை நினைத்து இந்த ஞான சீலர் நம் நகரத்துக்கு வந்தது நல்லதே என்று கூறிவணங்கிப் புகழ்ந்தார்.

விளக்கவுரை:- புதுக்கோட்டையில் இம் மகான் சமாதி பெற எழுந்தருளியபோது சமஸ்தான திவானாக இருந்தவர் வெங்கட்ராமதாச நாயுடு என்ற பெயர் பூண்டவர். இவர் நியாயவாதத் தொழில் நடத்தும் போதும் நியாய கலாசாலையிற் கற்கும் போதும் உடன் பயின்று நண்பு பெற்ற பாக்கியவான். ஆதலால் யதிவரரான அவர் சமாதி சமயத்தில் இங்கு வந்தது கண்டு மகிழ்ந்தார்.

ஏம வாழ்வினில் எய்திய வேங்கட
ராம தாசராம் நாயுடு முன்னைநாள்
சேம மோங்கிய சென்னையில் வாழுநாள்
வாம வாகுவாய் வாழ்ந்ததுண் டென்பரே. 320

உரை :- உலக நலம் நிரம்பிய வாழ்வில் இருந்த வெங்கடராமதாச நாயுடு முற்காலத்தில் காவல் சிறந்த சென்னைமா நகரத்தில் வாழும் போது [துறவரசராயிருக்கும் மகானுக்குப் பூர்வாசிரமத்தில்] இடத் தோள் போல வாழ்ந்த வரலாறு உண்டு என்பர்.

விளக்கவுரை :- தோழராகவும், கல்வியில் துணைவராக வும் உடன் கற்ற சிறப்பினராகவும் உள்ள திவான் வெங்கடராம தாச நாயுடு தம் இளமைத் துணைவர் துறவுக் கோலத்தில் புதுக்கோட்டை நகர்க்குள் வந்தது தெரிந்து அரசாங்க மரியாதை களோடு வரவேற்கத் தகுவன செய்தார். பல்லவன் குளக் கரையில் உள்ள மடத்தில் இருக்கச் செய்தார். தம் இளமையிற் பயின்ற நுண்மாண் நுழைபுலம் உடைய நியாயவாதியின் வரலாறுகளை நினைந்துருகி இன்று அவர் அடைந்துள்ள பெரு நிலை கண்டு மனத்தைப் பறிகொடுத்தார்.

நேய மாண்பு நெருங்கி யிருந்தவும்
நாய வாத நடாத்திய நாளிலும்
ந்நாய நூல்கள் நவிற்றுறு காலையும்
தூய ஞானி சொருப மறிந்தனர். 321

உரை :- நட்பின் பெருமையால் நெருங்கிப் பழகியவர் நியாய வாதத் தொழில் நடத்திய காலத்திலும் சட்ட நூல்களைப் பயின்ற பயிற்சிக் காலத்திலும் தூய்மை மிக்க இந்த ஞானியின் பூர்வீக சொருபத்தை அறிந்திருந்தார்.

விளக்கவுரை :- திவான் வெங்கடராமதாச நாயுடு தம் இளமைக் கால நினைவுகளை ஒவ்வொன்றாக நினைந்து இம்மகான் அக்காலத்தில் இப்படி இருந்தார் என்பதைத் தம்முன் வணக்கத் தோடு நின்ற அந்தணர்க்கு உரைத்தார் அவர் எல்லாரும் இவர் ஒரு மகான் என்பதை உணர்ந்தாரே யன்றி இவரே பூர்வா சிரமத்தில் நீதிபதி உத்யோகம் பார்த்தவர் என்பதை அறியா திருந்தனர். மகாத்மாவின் பூர்வாசிரம சரித்திரத்தை நன்கு அறிந்திருந்ததிவான் அவற்றை அந்தணர் எல்லாம் அறியும்படி நன்கு விளக்கி யுரைத்து அவர் மகா சமாதி பெற்ற காட்சியைக் கண்டு மனம் உருகினர்.

அன்று நண்பர் அறிஞர்மன் ருடியார்
இன்று ஞானத் திறைவர் அறிவரே
என்று கூறி யிறைஞ்சி யமைச்சரும்
நன்று வேதியர் நண்ணுக வென்னவே. 322

உரை :- அன்று நண்பராய் இருந்தார். சிறந்த அறிவாளியாக இருந்தார். நுண்ணறிவுள்ள நியாயவாதியாக விளங்கினுர். இன்று ஞானத்தின் தலைவர் ஆனுர். மகா ஞானி யாக உளர் என்று கூறித் திவான் வணங்கி (அவர் மகா சமாதி பெற்றது தெரிந்து நல்லது) இனிப் பிராமணர் வேண்டுவன செய்ய வருக என்ருர்.

விளக்கவுரை :- திவான் நிர்விகல்ப சமாதியில் இருக்கும் துறவரசைப் பார்த்துத் தலையார வணங்கினுர். " மகான் இவர் இன்று இப்படிக் காட்சி கொடுக்கிருர். இது அபூர்வ சன்யாசம். அவதூத சம்பிரதாயத்தில் சுகப் பிரம்மம் இருந்தார். சதாசிவப் பிரம்மம் இருந்தார், என்பதை நம் சமஸ்தானம் அறியும். அவரைப் போன்றே இவரும் பல்லாண்டு இந்தத் துறவு நிலையில் இருந்தார் என்பதை நான் அறிவேன். நம் புதுவை நகர்க்கு இவர் இந்நிலையில் வந்தது நம் பரம பாக்கியமே " என்று கூறினுர்.

தலங்கள் ஐந்திற் சமாதி புரிந்தவர்
புலங்கள் வாழும் புதுவை புகுந்தனர்
அலங்கல் மன்னன் அறத்தை வளர்த்தனன்
நலங்கொள் நாட்டை நுணுகினர் ஈங்கிவர். 323

உரை :- ஐந்து புண்ணியத் தலங்களிலே சமாதி பெற்ற சதாசிவப் பிரமேந்திரர் நிலங்கள் செழித்திருக்கும் புதுக்கோட்டை அரசுக்குள் வந்தார். மாலை அணிந்த மன்னர் பிரான் மேற்கொண்ட தருமங்களை வளர்த்தார். அவர் போலவே

இப் புண்ணிய சீலரும் புதுக்கோட்டையில் நன்மையை நிலை நிறுத்த வந்தார்.

விளக்கவுரை :- சதாசிவப் பிரம்மம் சமாதி பெற்ற தலங்கள் நெரூர், மானுமதுரை, ஓங்காரம், காசி, கராச்சி என்பன. நெரூர்ச் சமாதியில் புதுக்கோட்டை மன்னர் தருமங்கள் மிக உண்டு. அம் முனிவர் அருள் பெற்ற அரசர் விசயரகுநாதராயத் தொண்டைமான் என்ற தருமப் பிரபு. அவர் முனிவர் விருப்பிற்கு இணங்கத் தருமம் பல செய்தார். அவை நேற்றுவரை நடந்தன.

அன்ன ஞானத் தறிவர் அடங்கிய
பொன்னி பாயும் புகழ்கொள் நெரூரினில்
இன்னும் நந்தம் இறைதன் திருப்பணி
நன்னர் நின்று நடப்பது காண்பமே. 324

உரை:- அத்ததைய ஞானமூர்த்தி சமாதி பெற்றுள்ளதான காவேரி நதி பாயும் புகழ்மிக்க நெரூரில் இன்னும் நம் புதுக்கோட்டை அரசர் திருப்பணி நன்றாக நிலைபெற்று நடப்பதைக் காண்போம்.

விளக்கவுரை :- நிர்விகல்ப சமாதியில் இருந்த சதாசிவப் ப்ரம்மேந்திரர் பெருமையை உரைத்த திவான் புதுக்கோட்டைப் பெருமையைத் தெரிவித்ததற்காக முன்னைய சதாசிவப்ரம்மத்தின் தரும சம்பந்தம் புதுக்கோட்டை அரசுக்கு உள்ளது என்று விளக்கியுரைக்கிறார். மானுமதுரையில் சமாதி சிவாலயத்துக்குப் பின் ஒரு சிறு கல் அளவில் இருக்கிறது. நெரூர்ச் சமாதி அங்குள்ள சிவாலயத்தின் பின் உள்ள வில்வ மரத்தை ஒட்டி அன்று பிரதிஷ்டையாகிய பாணலிங்கத்தோடு விளங்குகின்றது. இச் சமாதியில் நித்திய நைமித்தியகங்களுக்குப் புதுக்கோட்டை அரசர் தருமம் பல செய்திருக்கிறார்.

தான தன்மம் தழைக்கும் புதுவையில்
மான மன்னன் மனமு மகிழ்வுற
ஞான மன்னவர் நல்ல நிலத்திடை
ஈன மற்ற இருக்கை பெறுவரே. 325

உரை.- தான தருமங்கள் வளர்ந்து வரும் புதுக்கோட்டை நகரத்தில் மானம் மிக்க அரசர் பிரான் மனமும் மகிழ்ச்சி பெற ஞான மன்னரான இவர் நல்லதொரு புண்ணிய பூமியில் குறை வற்ற சமாதித் தலம் பெறுவார்.

விளக்கவுரை :- மன்னர் தருமம் செய்யும் தலைவர் ஆயினும் அதனை மேற்பார்த்து நடத்தும் பொறுப்பு அமைச்சருக்கு உரியதாதலின், திரு. வெங்கடராமதாச நாயுடு இப்புண்ணியர் சமாதி இருப்பதற்கு உரிய இடம் ஒன்றை அப் பொழுதே அரசர் தந்த தானமாகத் தந்து விரைவில் அங்கு சமாதி கைங்கரியம் நடத்த வேண்டும் என்ற குறிப்பையும் வெளியிட்டார். பொது மக்கள் பலர் முன் வந்து தருமம் சிறப் பித்தார்.

வடகி ழக்கில் மனித்தர் இருக்கைகள்
தொடர்ப றப்பெறுந் தூய நிலத்திலே
தொடர்ப றுத்துயர் தூய தபோநிதி
தடம மர்த்து சமாதியை யேற்கவே. 326

உரை:- நகரத்தின் வடகிழக்குப் பகுதியில் மனிதர்வாழும் உறைவிடங்கள் தொடர்பாக இல்லாது இருக்கும் தூய்மை மிக்க தலத்தில் உலகத் தொடர்புகளை ஒழித்துத் தவ வாழ்வு வாழ்ந்த தூய தவச் செல்வர் சமாதித் தலம் பெற்று அடங்குவாராக.

விளக்கவுரை :- பிறந்த நாடு வேறு. லௌகீக வாழ்வு வாழ்ந்த நகரங்கள் வேறு. துறவு பெற்ற புண்ணியத் தலம்

வேறு. மகா சமாதி பெற இறைவன் வகுத்த தலம் புதுக் கோட்டையாகப் பெற்ற இம்மகான் இன்று " அதிஷ்டானம் " என்று வழங்கும் நிலத்தில் அன்றே சிறிது இடம் பெற்று சமாதியுள் அடங்கியிருக்கத் தக்க கைங்கரியத்தை திவான் வெங்கடராமதாச நாயுடு ஏற்றுக்கொண்டார். அன்று அமைந்த பழைய சமாதியைப் பின்னுளில் இடம் தேடித் தெரிவித்தவர் சுயம்பிரகாச முனிவரே.

இடத்தைத் தந்தனன் ஏந்தல் தமிழிறை
மடத்தைக் கட்டுக மற்றுள செய்கவே
மடத்தை மாற்றும் வழியைத் தெளிமுனி
தடத்தைக் கொண்ட சமாதி பொருந்தவே 327

உரை :- தனித் தமிழரசர் ஆன புதுக்கோட்டை மன்னர் பிரான் சதாசிவ அதிஷ்டானத்துக்கு வேண்டிய சிறிப இடத்தை அன்று தந்தார். நீங்கள் இங்கே மடம் கட்டுங்கள் மற்றும் உள்ள திருப்பணிகளும் செய்யுங்கள். அஞ்ஞானத்தை மாற்றும் வழியை யறிந்த முனிவர் பெருமான் விசாலமான இடத்தோடு கூடிய இந் நிலத்திலே மகா சமாதி கொள்வாராக.

விளக்கவுரை :- சுவாமிகள் சமாதி அடைந்த காலத்தில் இக் குறிப்பிட்ட நிலம் அரசினர்க்கு உரியதாய் இருந்தது. ஆதலின் அரசினர் அதிகாரியே நேரில் வந்து நின்று சமாதிக்கு வேண்டிய அளவு நிலத்தை ஒதுக்கிக் கொடுத்து அதனே அரசர் இயற்றிய தருமம் என்று உரைக்கிருர். பிற்காலத்தில் இந் நிலத்தின் நிலே வேறு ஆயிற்று

மேளம் எய்தும் வியன்சங்கம் எய்துமே
தாளம் கஞ்சம் தாந்தரம் எய்துமே
வாளம் ஏந்திய மன்னவன் சேவகர்
காளம் ஊதிக் கனிவொடு செல்வரே. 328

உரை :- கொட்டு மேளம் முழங்கும் கூட்டம் வரும். பெரிய சங்கம் முழங்க வரும், தாள வகையும் கஞ்சங்களும் தக்க படி வரும். வாள் ஏந்திய அரச சேவகர் தமக்குரிய இசைக் கருவியை ஊதிக்கொண்டு மனக் கனிவோடு முன்வருவர்.

விளக்கவுரை :- சந்யாசிகள் சமாதி பெறும் போது பிராமணர்கள் அவர் திருமேனியை வேத முழக்கத்தோடு தூய நிலையிலே எடுத்துச் சென்று அடக்கம் செய்வதே சம்பிரதாயம். ஆயினும் புதுவைத் தனியரசுக்குள் அடங்க வந்த இம் முனிவர்க்கு அவ்வரசினர் சார்பாகச் சில மரியாதைகள் செய்யப் படுகின்றன. சாமானியர் தென்றிசைக்கோன் வசம் ஆகும்போது துக்க மயம் என்று கருதும் உலகம் மகான்கள் சமாதி காலத்தில் அதே செய்தியைப் பெரும் பக்தி சிரத்தையோடு பின்பற்றுகிறது.

சிவிகை யேந்துநர் செல்குவர் முன்னரே
கவிகை தாங்குநர் காண்பர் இருபுறம்
குவிகை யோடு முழுக்கொண்ட அந்தணர்
அவிகை யேந்தும் அமரவாக் கோதுக 329

உரை :- சிவிகையைச் சுமப்பவர் முன்னே நடப்பார். குடைகளை ஏந்தும் மனிதர் இருபுறமும் வருவர். குவிந்த கைகளோடு கூட்டம் கூடிய பிராமணர் அவிர்ப் பாகத்தைக் கையில் ஏந்தும் தேவர்க்கு உவப்பான வேத வாக்கியங்களை ஓதுவாராக.

விளக்கவுரை :- பல்லவன்குளக் கரையில் இருந்து அதிஷ்டான ஸ்தலத்துக்கு இம்மகான் சமாதி பெற்ற சிறப்பை நகரறியச் செய்து சிவிகையில் ஏற்றிக் குடை, கொடி முதலிய மரியாதைகளோடு வேத முழக்கத்தோடு எடுத்துவரச் செய்தனர். புதுக்கோட்டை சமஸ்தானத்தில் அரச குருவுக்குச் சிவிகை உண்டு. அபூர்வமாகத் தானாதிகாரிக்கும் சிவிகை உண்டு. அரசர்க்கு நெருங்கிய உறவினர் சிவலோகப் பிராப்தி அடையும்

போது பல்லக்கில் எடுத்துப் போவது உண்டு. அப்பல்லக்குத் தனியே இருக்கும் அரசர்க்கு. வேறு உண்டு. இங்கு வந்தது வேறு.

என்ன மந்திரி இன்னணம் ஓதிய
மன்ன ஞணை மனத்துறு மந்தணர்
பொன்ன மேனிப் புராரியைப் போலுறும்
அன்ன ஞானி அடக்கம் முயன்றனர் 330

உரை :- என்று மந்திரி இங்ஙனம் கூறிய அரசர் ஆணையை மனத்தில் ஏற்றுக்கொண்ட அந்தணர் பொன்மேனிகொண்ட திரிபுராந்தகன் போல் இருந்த அந்த மகான் மகா சமாதிக்கு உரிய முயற்சிகள் செய்தனர்.

விளக்கவுரை :- இராசாங்க சம்பிரதாயங்களை யொட்டி அரசர் தருமம இவை என்பதைத் திவான் தெரிவித்த வளவில் பல்லவன்குளக் கரையில் உள்ள மடத்திலிருந்து அதிஷ்டான ஸ்தலத்துக்கு இம்மகான் திருமேனியைச் சிவிகையிற் சுமந்து வரும் பொறுப்பை அந்தணர்கள் ஏற்றுக்கொண்டனர். அவர்கள் வேத முழக்கமும் வாத்திய முழக்கமும் உடன்வர அடக்க வொடுக்கத்தோடும் ஆசார முறைகளோடும் சிவிகையைச் சுமந்து வந்தனர். நூற்றுக் கணக்கான மக்கள் பின்னே நடந்து வந்தனர். திவானும் அரசர் பிரதிநிதியாக வந்தார். அரச வீதிகளைச் சுற்றி வந்து அதிஷ்டானத்தை அடைந்து மேலே உரியன செய்தனர்.

ஞான வாரிதி ஞானத்தின் மாமலை
மோன மூர்த்தி முழுத்தவ மாமணி
வான வாழ்வையும் மண்ணக வாழ்வையும்
ஈன மென்னவே எண்ணிய யோகியார். 331

உரை :- ஞானப் பெருங்கடல், ஞான மயமான பெருமலை, மவுனத்தின் மூர்த்தி, முழுத்தவத்தின் பெருமணி தேவர் உலக வாழ்வையும் பூவுலக வாழ்வையும் அற்பமானவை என்று கருதிய யோகியார்.

விளக்கவுரை :- சதாசிவப் பிரம்மேந்திரர் ஞானத்தின் உன்னத நிலையில் இருந்தார். ஆதலால் ஞானக் கடல், ஞான மலை என்று புகழப்பெற்றார். வானும் செல்வமும் இம்மண்ணரசும் யாம் வேண்டேன் என்று பெரியோர் அருளிய வண்ணம் பூலோகத்தின் பரம பாக்கியத்தைத் துச்சமாக உதறி வந்தவர். சுவர்க்காதி போகங்களையும் மதியாத மனவுறுதியுள்ளவர் என்பது தெளிவு.

சத்து சித்தே தனிப்பர மானந்தம்
ஒத்து நின்ற ஒருபெரு மெய்ப்பொருள்
வித்து ஞால விளக்க மனைத்துக்கும்
பொத்து யோகம் பொருந்தி யறிந்தவர். 332

உரை :- சத்து, சித்து, ஒப்பற்ற பரமானந்தம் என்ற மூன்றும் ஒத்துப் பொருந்தி நின்ற ஒரு பெரிய மெய்ப்பொருள் ஞான விளக்கம் எல்லாவற்றுக்கும் வித்தாக அமைந்தது ஆகிய ஆத்ம தத்வத்தை உள்ளே அடக்கியிருக்கும் ஞானயோக சமாதியில் இருந்து அறிந்தவர்.

விளக்கவுரை :- ஞான விளக்கம் என்பது ஞானமே ஆன விளக்கம் என்ற பொருள் உள்ள தொடர்-ஞான விளக்கம் ஒன்று தானே. அஃது ஒன்றாக இருக்க, 'அனைத்தையும்' என்று பன்மைப் பட உரைக்கலாமோ எனின். அதவைதி, விசிஷ்டாத்வைதி, த்வைதி என்ற த்ரிமதாசாரியர்களும் இம் மதங்களின் வேறான வழியில் வந்த பரமாசார்யர்களும் தம் தம் சம்பிரதாயத்தில் விளக்கியருளிய விளக்கம் எல்லாம் ஒரே ஞான விளக்கம் என்ற கருத்தை அடக்கி இங்ஙனம் உரைக்கப்பட்டது.

அவரவர் கண்ட ஞான விளக்கத்துக்கும் வித்தாய் இருப்பது ஒரு பெரும் பரம் பொருளே. அது சத்து சித்து ஆனந்த மயமாய் இருப்பது என்றவாறு.

தத்த மூர்த்தி தவத்தின் நெறியுளே
வைத்த வாழ்வின் மணத்தை மனத்தினால்
நித்தல் ஞானம் நிரம்பி வழியவே
பத்த ராகப் பரிந்து சுவைத்தவர். 333

உரை :- தத்தாத்திரேய பரம குருவின் தவத்துறவு நெறியிலே வைத்திருக்கும் பேரானந்தம் பெரு வாழ்வின் மணத்தை மனத்தால் நாள்தோறும் ஞான அனுபவம் நிரம்பி வழியும்படி பக்தராக இருந்து அன்போடு சுவைத்தவர்.

விளக்கவுரை :- தத்த சம்பிரதாயம் ஞான யோகத்தையே அடிப்படையாகக் கொண்ட அவதூத சந்யாஸ சம்பிரதாயமே. ஆயினும் பக்தி யோகத்தையும் அது புறக்கணித்ததில்லை. ஞானமும் பக்தியும் ஒன்றுக்கொன்று உதவியாக இணைந்து செல்ல அமைந்த நெறியாம். அந்நெறியிலே பக்தியோடு புகுந்து அதன் போக்குக்களைத் தெளிவாக அறிந்து அது தரும் பரம ஆனந்த அனுபவத்தை அடைந்து தவத்தின் முடியில் இருந்தவர்.

ஈடில் ஞானத் திராம கிருட்டிணர்
தேடி வைத்த திரவிய மாகிய
வாடி யென்று மறையாப் பரம்பொருள்
நீடி நின்று நிறைந்த தவத்தினர். 334

உரை :- இணையற்ற ஞானம் உள்ள இராமகிருஷ்ண பரமஹம்ஸ அவதூதர் தேடி வைத்த பெருஞ் செல்வமாகிய என்றும் வாடி மறையாத பரம்பொருள் நிலை பெற்று நின்று நிறைந்த தவத்தை உடையவர்.

விளக்கவுரை :- ஞான மூர்த்தியான இராமகிருஷ்ண தேவர் காளஹஸ்தியில் ஏகாந்த நிலையில் நெடுங்காலம் அமர்ந்து தேடிய ஞான அனுபவத்தைத் தம் சீடராக ஏற்றுக்கொண்ட சதாசிவர்க்கு அருளினர். விவேகானந்தர் குருவான இராம கிருஷ்ணர் பல சீடருக்கு ஞான உபதேசம் செய்தார். ஆயினும் இறுதியிலே தம்அனுபவ லாபத்தை அப்படியே விவகானந்தர்க்கு அருளிய பிறகே கைவல்யம் அடைந்தார். அவர் போலவே காளத்தி இராமகிருஷ்ணரும் தம் அருஞ் சீடர்க்குத் தம்மிடம் சேர்ந்திருந்த தவச் செல்வத்தை முழு மனத்தோடும் அருளிச் செய்தார். அத்திருச் செல்வமே சுயம்பிரகாசர்க்கு வந்தது.

அறிவி னெல்லை யருமறை பேசிய
செறிவின் மிக்க செறிவு தெளிஞரே
நெறியின் எய்த நினைக்கத் தகுவது
பொறியின் எய்திப் பொருந்திய யோகியார். 335

உரை:- ஞானத்தின் எல்லை என்று உபநிடதங்கள் பேசிய செறிவுள்ளே மிகுந்த செறிவாக உள்ள பரம்பொருளைத் தம் உள்ளத்தே தெளிந்தவர் சன்மார்க்கப் பிரவிருத்தி என்ற நிவிருத்தி தருமத்தால் அடைந்து உள்ளத் துணர்ச்சியாலே அனுபவிக்கத் தக்க ஆனந்த அனுபவத்தை விதி வசத்தால் அடைந்து அந்த அனுபவத்தில் அடங்கியிருந்த மகாயோகியார்.

விளக்கவுரை :- அறிவின் எல்லை "ஸாகாஷ்டா ஸாபரா கதி" என்று உபநிடதம் உரைத்த உண்மை. செறிவின் மிக்க செறிவு-" குஹ்யாத் குஹ்யதமம் " என்று கண்ணன் உரைத்த அரும் பொருள். நெறி - சன்மார்க்கம். " ஏகம் சத்விப்ரா: பகுதா வதந்தி " என்ற உண்மையை அறிந்து செல்லும் வழி அது பிரவிருத்தி போலத் தோன்றும் நிவிருத்தி சஞ்சாரம்.

அடங்க லாகும் அருந்தவம் வாய்த்தது
கிடங்கு பேரரண் கேடில் புதுவையில்
மடங்கல் போலுயர் மன்னவர் நாட்டினில்
விடங்கர் ஓங்கி விளங்கு தலத்துளே. 336

உரை :- இத்தகைய மகா முனிவர் மகா சமாதியிலே அடங்கியிருக்கும் புண்ணியம் வாய்த்தது, அகழியும் பெரிய அரணும் சூழ்ந்த குற்றமே இல்லாத புதுக்கோட்டை என்ற சிங்கம் போற் சிறந்த அரசர் ஆண்ட நாட்டில் விடங்க மூர்த்தி யான கோகர்ணேசுவரன் ஓங்கும் உருவத்தோடு எழுந்து விளங்கும் புண்ணிய பூமியில்.

விளக்கவுரை :- தலத்துள் அடங்கும் தவம் வாய்த்தது என்று முடிவு செய்யவேண்டும். புதுக்கோட்டை அரண்மனை ஒரு கோட்டைக்குள இருப்பதை இன்றும் காணலாம். நகரத்தின் புறத்தே ஒரு பெரு மதில் இருந்தது அது இருந்த சின்னம் கும்பந்தான் குளம் என்ற குளததின் அருகே இன்றும் உள்ளது. திருமெய்ய நகரும் இப்படியே அரண் அகழி சூழ்ந்திருந்தது புதுக்கோட்டை அகழி இருந்த இடம் இப்பொழுது தெரியாது. அரசரை ஆட்கொண்ட கோகர்ணேசன் விடங்கமூர்த்தி.

பிரண வப்பொருள் பேணும் சதாசிவர்
சரண வற்புறச் சக்தி யறிந்தவர்
இரண மிக்க விருக்கை யுணர்ந்தவர்
மரணம் வென்றவர் மன்ற வடங்கினர். 337

உரை :- பிரணவத்தின் உட்பொருளை உள்ளத்தே பேணிப் போற்றிய சதாசிவ முனிவர் தாம் அடைதற்குரிய பரகதியின் அற்புத சக்தியை அறிந்தவர். துன்பம் மிக்க உலக வாழ்வின் நிலையை நனகு உணர்ந்தவர். மரணத்தை வென்றவர் நன்கு அடங்கினர்.

விளக்கவுரை :- துறவிகள் தமக்கு உரிய மகாமந்திரமாக எப்பொழுதும் செபித்தற்குரிய பிரணவ மந்திரமே. அந்த ஜப பலத்தால் அவர்கள் அதன் உட்பொருளாக உள்ள பிரமத்தை உள்ளத்தே காண்பர். இதனையே யமதருமன் நசிகேதனுக்குக் கடத்தில் தெளிவாக்கினன். இரணம்-மிக்க இருக்கை. பொன் மயமான நிலை. ஸதா ஜாஜ்வல்யமாய் இருக்கும் பிரம்மானுபவ நிலை எனவும் கூறலாம்.

உடம்புள் உண்மை உறுபொருள் தேர்ந்ததால்
மடம்ப டாத மவுனத்தில் நின்றவர்
இடம்ப டுந்திரு வெய்து மதிட்டானத்
துடம்பொ டும்புகுந் துள்ளுற லாயினர் 338

உரை :- தம் உடம்புக்குள்ளே தத்துவார்த்தத்தை உணர்ந்து தெளிந்ததால் அஞ்ஞானம் நெருங்க இடம் தராத மவுன யோகத்தில் இருந்த தவர், சமாதி பெறும் பரம பாக்கியத் தைப் பெற்ற அதிஷ்டானத்தில் உடம்போடு உட்புகுந்து அடங்கலாயினர்.

விளக்கவுரை :- வேத சாஸ்திர அனுபவம் மிக்க பலர் இருந்து சன்யாசிகளுக்குச் சமாதி கைங்கரியமும் பூஜா விசேஷ வைபவங்களும் நிகழ்த்த விதித்த மூறைப்படி எல்லாவற்றையும் நன்கு இயற்றி உரிய காலத்தில் அந்த அதிஷ்டானத்தில் இயன்றிருந்த சமாதியுள் அடக்கம் செய்தனர். அதிஷ்டானம் என்ற பெயர் பெறும் புண்ய பூமி இம்மகான் அங்கு அடங்கிய தால் விசேஷ மகிமை பெற்று இன்று ஒரு மகாக்ஷேத்திரமாக விளங்குகிறது. அச் சமாதி ஆதியில் அடக்கமாக அமைந்தது அஃது இன்று அடைந்துள்ள நிலை வேறு. அதன் விளக்கம் வரும்.

நேச பாசம் நினைப்பில் நினைந்திலா
ஈச ஞக இருந்த பெருந்தவர்
வாச ஞதி மடங்கு மனத்திஞர்
தேச மேத்தும் சிவமய மாயினுர். 339

உரை :- நேசம் என்ற பாசத்தை நினைப்பிலும் நினையாத மகான் இறைவன் போலவே திகம்பரராக இருந்த பெருந் தவச் செல்வர், வாசனை முதலியவைகளை மடக்கி ஒழித்த மனம் உள்ளவர், தேசம் புகழத் தக்க சிவமயம் ஆஞர்.

விளக்கவுரை :- மகான்கள் சமாதிபெற்ற புண்ணியத் தலத்திலே சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து பூசிப்பது புராதனமான சம்பிரதாயம். சதாசிவப் பிரம்மம் என்ற பெயரோடு சஞ்சரித்த மகான் பிரமத்தின் வேருக என்றும் இல்லாதிருந்தவர். ஆதலின் அவர் அடங்கிய நிலத்தில் சிவலிங்கம் தோன்றியதும் பிரம தத்துவமே ஆக விளங்கிஞர். என்பது கருத்து - வாசனைகள் சம்சாரிகளைப் பிணிக்கும். பற்றுக்கள்- பற்றற்ற முனியை அவை அணுகா.

மும்மை மூர்த்தி முழுவுரு மேவிய
செம்மை சான்ற திருத்தகு தத்தனுர்
தம்மை யோர்ந்து தனிப்பர மானந்தம்
இம்மை யெய்தி யிருந்தன ரீங்கிவர். 340

உரை :- மூன்று உருவாகத் தோன்றிய பரம மூர்த்தியின் முழுவுருவத்தையும் தம் திருவுருவமாக ஏற்றுக்கொண்ட செம்மை சிறந்த அழகுள்ள தத்தாத்திரேய மகா முனியை உள்ளத்தே தியானித்து ஒப்பற்ற பரமானந்தமான அனுபவத்தை இம்மையே எய்தி இவர் இங்கு இருந்தார்.

விளக்கவுரை :- தத்தாத்ரேயர் திருமூர்த்திகளின் பரமானுக்கிரகத்தாலே அத்திரி முனிவர்க்கும் அனசூயைக்கும்

அற்புதக் குழந்தையாக அவதரித்தவர். மூவரும் கொடுத்த செல்வம் முன்னே கிடக்கக் கண்டு தாய்மை பெற்ற அநசூயை எடுத்து வளர்த்தாள். இவர் மூன்று தலை உள்ளவர். சிவ சின்னமும் விஷ்ணு சின்னமும் பிரம சின்னமும் தம் உடம்பில் விளங்கத் தோன்றியவர். இவரே இந்த அவதூத சம்பிரதாயத்துக்குப் பரமசாரியர். இவர் பிரமமே ஆதலின் இவர் திருவுருவைத் தியானித்தல் பிரமானந்த அனுபவம் பெற உதவுகின்றது.

ஆசை நீத்த அகத்து முனிவரர்
மாசை வேண்டு மனமிலா வந்தணர்
பூசை யாவும் புரிவோ டியற்றவே
ஓசை யற்ற வொடுக்கத் தொடுங்கினர். 341

உரை :- உலகப் பொருள்களில் ஆசையற்ற மனத்தையுடைய சதாசிவ ப்ரம்மேந்திரர் பொன் வேண்டும் மனம் இல்லாத பிராமண உத்தமர் பூசை வகைகளை யெல்லாம் பக்தி சிரத்தையோடு இயற்ற பிரணவ ஓசையும் கேட்பதற்ற மகா சமாதியில் ஒடுங்கினர்.

விளக்கவுரை :- இரு செவியையும் அடைத்த பிறகும் பிரணவத்தின் ஓசை கேட்பது யோகம் உணர்ந்தவர் அறிந்த உண்மை. அவ்வுணர்வும் அற்ற ஒடுக்க நிலை என்பது மகா சமாதி நிலையேயாம். நிர்விகல்ப சமாதியில் இருப்பவர் பொறி புலன்களுக்கு அப்பாற்பட்ட பொருளோடு ஒன்றாகி வேற்றுமையற்ற பெரும் பேரின்பத்தில் மூழ்கியிருப்பர். வங்க நாட்டு முனிவர் இராமகிருஷ்ண பரம ஹம்ஸர் இச் சமாதியின் அனுபவத்தை அறிந்துரைத்தவர்.

சிவத்தைப் பெற்றுச் சிறந்த சதாசிவர்
தவத்தைத் தேறும் தவம்பெறு மந்தணர்
அவத்தைப் போக்கும் அதிட்டான மோங்குமா
நவத்தைத் தோற்றவே நன்கமைத் தாரரே. 342

உரை :- சிவத்தைப் பெற்று அதனுள் அடங்கிய சதாசிவர் தவச் சிறப்பைத் தேறித் தெளியும் பாக்கியம் பெற்ற அந்தணர்கள் வீண் பொருள்களை ஒழிக்கும் அதிஷ்டானம் சிறப்புறும் வண்ணம் புதுமை தோன்ற நன்கு அமைத்தார்கள்.

விளக்கவுரை :- சிவம் என்ற சொல் உபநிடதங்களில் அத்வைத சித்தியை விளக்க வருகிறது. சதாசிவர் அத்வைத சித்தி பெற்றவர். தத்த சம்பிரதாயத்தில் பராகாஷ்டையை அடைந்தவர். அவர் தவக்கோலத்தைக் கண்டு அத்திருமேனிக்கு உரிய திருப்பணியை அப்பொழுது இயற்றும் பேறு பெற்ற அந்தணர் அனைவரும் முன் பல பிறவிகளிற் புண்ணியம் புரிந்தவரே என்பது உணரத்தக்கது. அதிஷ்டானம் சிவத்தைத் தருவது சிவத்தைக் காப்பது, சிவம் ஆக்குவது. சிவம் ஆவது. ஆதலின் அவத்தைப் போக்குவது ஆயிற்று. நலம்-புதுமை, மேன்மை முதலிய பொருள் உள்ளது. புதுக்கோட்டை நகரில் வேறு பல மகான்கள் அடங்கியிருப்பினும் அதிஷ்டானம் என்பது இந்தப் புண்ணிய சமாதிக்கே காரண இடுகுறியாயிற்று.

சாந்த மொன்று தவத்துச் சதாசிவர்
போந்த வாறும் புதுவை யதிட்டானம்
வாய்ந்த வாறும் வகையுறக் கேட்டிலர்
சேந்த மங்கலம் சேர்ந்த முனிவரே. 343

உரை :- சாந்தம் பொருந்திய தவத்தை மேற்கொண்ட சதாசிவப் ப்ரம்மேந்திரர் வந்த வரலாறும் புதுக்கோட்டை அதிஷ்டானத்தில் அடங்கிய வரலாறும் சேந்தமங்கலத்தில் இருந்த சுயம்பிரகாசப் பிரம்மேந்திரர் முறையே கேட்டார் இல்லை.

விளக்கவுரை :- சமாதி எய்தவேண்டும் என்ற சங்கல்பத்தோடு புதுக்கோட்டை நோக்கி வந்தவர் போல நாரதமலைக்கும் விராலிமலைக்கும் வந்த சதாசிவ ப்ரம்மேந்திரர் சஞ்சார சமாசாரம்

ஒன்றும் குகையில் அடங்கித் தவம் புரிந்திருந்த சுயம்பிரகாசர்க்கு எட்டவில்லை. புதுக்கோட்டை அந்தணர் அந்நாளில் சேந்த மங்கலத்தோடு அதிகத் தொடர்பு பெறவில்லை, என்றே கருத வேண்டும். அவரும் சங்கத்தை வெறுத்து அசங்கர் ஆகவே இருந்ததால் நெருங்கிப் பயின்ற ஓரிரு சீடரையன்றிப் பிறர் எவரும் அவரிடம் செய்தி கூறவரவில்லை.

அன்பர் ஒன்றி அறத்தின் பெருமைசால்
இன்பம் ஓங்கிய ஈடில் புதுவைக்கண்
துன்பம் நீங்கிய சோதி புகுந்தவர்
நன்பு தோன்ற நடாத்தினர் பூசையே. 344

உரை :- தருமத்தின் பெருமை சிறந்து இன்பம் ஓங்கி யிருக்கும் இணையற்ற புதுக்கோட்டை நகரத்தில் அன்பர் பலர் ஒன்று சேர்ந்து எவ்வகைத் துன்பமும் அற்ற சோதியும் புகுந்த சதாசிவப் பிரம்மேந்திர அவதூத ஸ்வாமிகள் மகிமை உலகத்துக்குத் தெரியும்படி பூசை நடத்தி வந்தார்.

விளக்கவுரை :- சதாசிவ அதிஷ்டானம் சுருக்கமாக அன்று அமைந்தது. மஹாபிஷேகம், மண்டலாபிஷேகம் எல்லாம் நடந்தன. பிறகு அன்பர் சிலர் சங்கம் சேர்ந்து அதிஷ்டான கைங்கரியத்தை வகித்து வந்தனர். சின்னாட்களில் அத் திருப்பணியின் சிறப்பு மக்களுக்குத் தெரியாமல் மறைந்தது. அதிஷ்டானம் இருக்கும் நிலம் இது என்று தெரியா வண்ணம் அங்கு ஊர்க் குப்பைகள் வந்து குவிந்தன. குப்பை மேட்டின் இடையே குன்றாத ஒளியுள்ள இம்மாமணி சில காலம் அடங்கி யிருந்தது.

ஏழாவது

குடமுழுக்குப் படலம்

அருமையாம் பொருளைக் குருவரர் அருளால்
அடைந்தவர் சுயம்பிர காசர்
பெருமையாம் நிலையே பெற்றனர் தவத்தின்
பிறங்கலாப் பிறங்கினர் முனைநாள்
ஒருமைமா துறவை யுதவிய பெரியார்
ஒடுங்கிய சமாதியை ஒருநாள்
கருமையாம் இருளிற் கைகளாற் தடவிக்
கருத்துற வறிந்துணர்த் தினரே. 345

உரை :- அறிதற்கரிய பொருளைக் குருவரர் திருவருளால் அடைந்த பெருந்துறவரசான சுயம்பிரகாசப் ப்ரம்மேந்திரர் பெருமையாகிய தவநிலையைப் பெற்றார். தவத்தின் மலையாகவே விளங்கினர். முன்னாள் தமக்குத் தத்த சம்பிரதாயத்தை ஒட்டிய பெருந் துறவை அருளிய சதாசிவ ப்ரம்மேந்திரர் ஒடுங்கியிருந்த சமாதி ஸ்தலத்தை ஒரு நாள் கரிய இருட்டு வேளையில் கைகளால் தடவிக் கருத்தால் அறிந்து பிறகு அதனை உலகுக்கு உணர்த்தினர்.

விளக்கவுரை :- சதாசிவப் பிரம்மேந்திரர் அதிஷ்டானம் இருந்த இடம் இன்னது என்று தெரியாது மறைந்த பிறகு ஒரு

நாள் சுயம்பிரகாசர் அங்கு வந்து தவத்திறந்தால் அதனைக் கண்டுணர்ந்து உணர்த்தினர்.

தனிமையி லடைந்து புதுவைமா நகரில்
தம்பெருங் குருவரர் இருந்த
இனிமைய சமாதி யிருந்திட மறைந்த
இயல்பினை நினைத்தனர் வருந்தி
பனிமழை பொழியு மிரவுளே நடந்து
பண்டைய நிலத்தரு கடைந்தே
முனிமணி யடங்கு சமாதியை யுணர்ந்து
மூன்றுநாள் விளங்கவைத் தனரே. 346

உரை:- தனிமையாகவே வந்து புதுக்கோட்டை மா நகரில் தம் குரு தேவர் அடங்கியிருந்த இனிமை மிக்க சமாதித் தலம் மறைந்துபோன இயல்பை நினைத்து மனம் வருந்தி பனி மழை பொழியும் இராக் காலத்தில் நடந்து வந்து பண்டைய நிலத்தின் அருகே வந்து முனிவரர் மணி அடங்கிய சமாதியைத் தெரிந்து மூன்று நாள் அங்கு விளக்கேற்றும் திருப்பணி புரிந்தார்.

விளக்கவுரை :- சுயம்பிரகாசர் இங்ஙனம் தனியே வந்து குப்பை மேட்டிடையே மறைந்திருந்த குரு சமாதியைத் தேடி யடைந்த காலம் அம் மகான் சமாதி பெற்று ஆறு ஏழு ஆண்டு களுக்குப் பிற்பட்டதாம். அன்று சுயம்பிரகாச முனிவர் பெருமையைப் புதுவை மக்கள் நன்கு அறியாதிருந்ததால் அவர் அங்கு வந்து மூன்று நாள் விளக்கேற்றித் தனிமையில் தியானத் திலிருந்து புறப்பட்டுப் போன வரலாற்றை நன்கு அறியாதிருந் தனர்.

சேந்தமங் கலமே மீண்டனர் குகையிற்
சிவமய தவத்திலே யிருந்தார்
போந்தநாள் வழிபா டியற்றிய புதுமை
புதுவையா ரறிந்தில ரிருந்தார்

மாந்தரே மிகவும் படர்கிலா விடத்தே
மண்ணுளே மறைவுறு சமாதி
சாந்தமா முனியால் மேன்மையை யுறவே
சமைத்தன னிறைவனுல் இருந்தே. 347

உரை :- சுயம்பிரகாசர் சேந்தமங்கல தத்த கிரிக்குத் திரும்பினுர். தத்தகிரியில் உள்ள குகையில் சிவமயமான தவத்தில் இருந்தார். அவர் புதுக்கோட்டைக்கு வந்த காலத்தில் தம் குருமூர்த்தியின் சமாதியிலே வழிபாடியற்றிச் சென்ற புதுமையை அந்நகரத்து மக்கள் அறியாதிருந்தார். மனிதர் மிகுதியாக நடமாடுதல் இல்லாத அவ்விடத்தில் சதாசிவ சமாதி மண்ணுள் மறைந்தது. இறைவன் அப்புண்ணிய பூமியில் இருந்து சாந்தானந்த முனிவர் பெருமை பெறத்தக்க திருவருளை இயற்றினுர்.

விளக்கவுரை :- சுயம்பிரகாசர் தம் குரு சமாதியைத் தேடித் தெரிந்து வழிபாடு செய்து போன வரலாறு இந்நாளில் எல்லார்க்கும் தெரிந்ததே. ஆயினும் அன்று ஒருவரும் அறியாத செய்தியாய் இருந்தது. சாந்தானந்தர் திருப்பணி சிறப்புற நிகழும் யோகம் இன்று அமைந்தது.

அறத்தினிற் சிறந்த புதுவையார் ஒருகால்
அருள்பொழி சேந்தமங் கலத்தே
புறத்தினை யகத்தைப் பொருளுளே பொருத்திப்
போதமாம் தத்தமூர்த் தியுளே
திறத்தினை நிறுத்தி யடங்கின ரிருந்த
சிலம்புறு முழைக்கரு கடைந்தே
உறத்தகு முறையான் முனிவரை யடைந்தே
உளமுறப் பணிந்தனர் நிரலே. 348

உரை :- தருமத்திற் சிறந்த புதுக்கோட்டை நகரத்தார் ஒரு சமயம் திருவருள் வெள்ளம் பெருகும் சேந்தமங்கலத்தில்

அகத்தையும் புறத்தையும் ஆதம தத்துவத்தில் அடக்கி ஞான மூர்த்தியான தத்த குருவிடம் தம் சக்தியை யெல்லாம் நிறுத்தி மடங்கி இருந்த மலைக் குகையை யடைந்து அங்கு சுயம்பிரகாச முனிவரை அடையத் தகுந்த முறையால் அணுகி மனமாரப் பணிந்து நின்றனர்.

விளக்கவுரை :- புதுக்கோட்டை நகர மக்கள் சேந்தமங் கலம் சுவாமிகளை அணுகி அவர் பெருமைகளை நன்கு உணர்ந்து அவர் திருவருளைத் துணைகொண்டு இவ்வதிஷ்டானத்தை நன்கு அமைக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு அங்கு அடைந் தனர். சாந்தானந்த சுவாமிகள் இத் திருப்பணியில் தொடர்பு கொள்வதற்கு முன்பு நிகழ்ந்தது இது.

தத்தமா கிரியே சமைந்தது தெளிவீர்
  தத்தவா லயத்தையும் பணிந்தீர்
சுத்தசத் துவத்தே தோய்ந்தமாக் குரவர்
  சொல்லிய பணிநிகழ்ந் துளதே
சத்தரா மவரை யடக்கிய நிலத்தைத்
  தருமமே வளர்புது வையினர்
எத்தனை நாளாய் மறந்தனர் பெரியோர்
  இருக்கையை மறப்பது தகவோ. 349

உரை :- தத்தகிரி தத்த முனிக்கு உரியதாக அமைந் திருப்பதைக் கண்டு கொண்டீர்கள். அங்குள்ள தத்தமுனி திருக்கோயிலையும் பணிந்தீர்கள். சுத்த தத்துவத்தில் என்றும் தோய்ந்து உலகத்தை மறந்திருந்து சற்குரு சொல்லிய வண்ணம் திருப்பணிகள் இங்கு நடந்துள்ளன. மகா சத்தரான அவர் திருமேனியை அடக்கியிருக்கும் புண்ணிய பூமியைத் தருமம் மிகுந்த புதுக்கோட்டை நகர மக்கள் எத்தனை நாளாய் மறந் தொழிந்தார்கள். பெரியவர்கள் அடங்கியிருக்கும் புண்ணிய க்ஷேத்திரத்தை மறப்பது நல்லதாகுமா?

விளக்கவுரை :- தத்தகிரி முனிவர் பெருமான் நெடுங் காலம் மவுனம் பூண்டவர். அபூர்வமாக மெய்யன்பரிடம் இக் கருத்துக்களைக் குழறும் மொழிகளாலே வெளியிட்டார்.

என்றனர் வருந்து முனிவரர் கருத்தை
இதயத்தே யேற்றனர் வணங்கி
நின்றனர் புதுவை யந்தணர் பலரும்
நிறையருட் குரவனுர் அடங்கிச்
சென்றன காலம் பலப்பல வளியேம்
தெளிந்திலேம் சமாதியி னிலையம்
இன்றள வதனை யுரைத்தவ ரிலையே
எங்ஙனம் துருவுவே மெனவே 350

உரை .- என்று கூறி மனம் வருந்திய சுயம்பிரகாச முனிவரர் திருவுள்ளக் கருத்தைப் புதுக்கோட்டை நகர மறையவர்கள் மனத்தில் ஏற்றுக்கொண்டு அம்மகானைத் தலையால் வணங்கிக் கை கூப்பி நின்ருர்கள். பிறகு அருள் நிரம்பிய பரமகுருநாதர் அடங்கிய பிறகு சென்ற காலம் பலவாம். அளியேம் அம்மகான் சமாதி இருந்த நிலத்தை அறியேம். தவமுனியே அதனை எங்களுக்கு உரைத்தவரும் இல்லை. நாங்கள் எப்படி அதனைத் தேடிக் காண்பேம் என்று கூறினர்.

விளக்கவுரை :- மகான்கள் சமாதியை மறப்பது அழகோ என்று சுயம்பிரகாசர் கேட்ட கேள்விக்குப் புதுவை யந்தணர் கூறிய விடை இங்கு சுருக்கமாக வருகிறது. பத்தாண்டு ஆகு முன் நிலமே மாறி விடும் உலக வியற்கையைத் தெளிந்த சுவாமி களும் அவர்கள் கருத்தை யேற்றுக்கொண்டார்.

நீர்நிலைக் கிழக்கே தோட்டமொன் றுளது
நெறிதரும் வாயிலாங் குளதே
சீர்நிலைக் குரிய செல்வருக் குரிய
சிறப்புறு மங்நிலத் திடையே

பேர்நிலைக் குரிய பெருந்தவக் குரவர்
பெருநிலை யிருப்பதை யறிவேன்
ஊர்நிலைக் குரிய பெருமையிர் அதனை
யுணர்வது யெளிதென வுரைத்தார். 351

உரை :- பெரிய நீர்நிலையின் கிழக்கே ஒரு தோட்டம் இருக்கிறது. அததோட்டத்துக்கு வழி செய்யும் வாயில் அங்கு உள்ளது. சீரான நிலைமைக்குரிய செல்வர் ஒருவருக்கு உரிய தாக இருக்கும் சிறப்புள்ள அந்நிலத்திடையே. உலகததிலே தம் பெயர் நிலைபெறத் தக்க பெருமை பூண்ட தவமிக்க குருநாதர் சமாதி இருப்பதை நாம் அறிவோம். ஊரை நிலைநிறுத்தும் பெருமையுள்ள நன் மக்களோ அதனை அறிவது எளிது என்றே முனிவர் பெருமான் அருளிச் செய்தார்.

விளக்கவுரை :- இந்தத் தோட்டம் மூன்று மனைகள் உள்ளதாய் மேற்கிலும் கிழக்கிலும் சிறு சிறு வாயில் பெற்றிருந்தது. அன்று இதற்கு உரிமை பெற்றவர் பதுமநாப சாஸ்திரியார் என்ற நீதிபதி. அங்குள்ள மனைகளைப் பிறர் பெற்றனர்.

குடக்குறு வாயில் குணக்குறு வாயில்
குலவுறு நெறியிலே நினைவால்
நடக்கவே நிலத்தைப் பத்தடி யளவில்
நன்குறக் குடைந்தனி ரெனிலே
அடக்கமாம் குரவர் சமாதியை யடைவீர்
அவர்க்கியான் பூசனை யியற்றி
விடக்கரு திலாமல் மீண்டதை யறியீர்
மிகப்பல நாட்களின் முனமே. 352

உரை :- மேற்கே உள்ள வாயிலும் கிழக்கே உள்ள வாயிலும் ஒட்ட இடையே உள்ள வழியில் நினைவோடு நடக்க வேண்டும், பத்து அடிக்குச் சற்று அதிகமாக நடந்ததும்

நிலத்தை வெட்டிப் பார்க்கவேண்டும். அந்த நிலத்தில் முன்டு அடக்கமாகிய நம் குருநாதர் சமாதி தலத்தைப் பார்க்கலாம். அந்தப் புண்ய பூமியில் நான் அவர்க்குப் பூஜை செய்து அங்கிருந்து பிரிந்துவர மனம் இல்லாது இங்கு வந்த பழைய கதையை அறியமாட்டீர்கள். இச் செய்தி மிகப் பலநாட்களின் முன் நிகழ்ந்தது.

விளக்கவுரை :- சுவாமிகள் புதுவை மக்களுக்குத் தம் குரு சமாதி இருக்கும் நிலத்தை விளக்கமாகத் தெரிவிக்கிறார்கள். குளத்தின் கிழக்கரையில் ஒட்டி இத்தோட்டம் உள்ளது. தோட்டத்தில் மேற்கு வாயில் வழியே உள் நுழைந்து கீழை வாயிலைப் பார்த்துப் பத்துப் பன்னிரண்டு அடி நடந்தால் அங்கு நிலத்தின் கீழே சமாதியைக் காணலாம் என்று கூறுகின்றார்.

குருவருள் புனைவீர் குருசமா தியினைக்
குறைவறப் பெருமையி னமைப்பீர்
திருவருள் துணையால் யாமுமங் கடைந்து
திருப்பணி யிடம்பெற விழைவேம்
பெருகருள் நிலமா யிங்கிது விளங்கும்
பீட்டினை யறிபவர் சிலரே
வருவரங் கிருந்து திருப்பணி சிறக்கும்
வகையிலே புரிவது முளதே. 353

உரை :- குருவருளைப் பெறுவீர்களாக. குருதேவர் மகா சமாதி அடைந்த புண்ணிய க்ஷேத்திரத்தைக் குறைவறப் பெருமையுற அமைப்பீர்களாக. திருவருள் துணையால் நாமும் அங்கு வந்து அத்திருப்பணியில் இடம்பெற விரும்புவோம். பெருகும் அருள் நிலமாக இது விளங்கும் பெருமையை அறிய வல்லவர் சிலரே. இனிவரும் புண்யாத்மாக்கள் அங்கு இருந்து திருப்பணி சிறப்புறும் வகையிலே செய்வதும் உண்டு.

விளக்கவுரை :- இஃது சேந்தமங்கலம் சுவாமிகள் திருவருட் கட்டளை. இதனைத் துணைகொண்டே புதுக்கோட்டைப் புண்ணிய சீலர் பலர் மண்ணுள் மறைந்த இம்மகா சமாதியைத் தேடியெடுத்துத் திருப்பணி பூணத் துணிந்தனர்.

என்றனர் திருநீ றளித்தனர் விடையு
மீந்தனர் புதுவையின் பணிதான்
நன்றமை வுறவே நிகழ்த்துமின் எனவே
நவின்றனர் பெருந்தவ முனிவர்
சென்றவர் மீண்டு புதுவையி லடைந்து
திருப்பணிக் குழுவையு மமைத்தே
ஒன்றறி முனிவர் சமாதியை யழகாய்
உருப்பெறச் செயமுயன் றனரே. 354

உரை :- என்று கூறி விபூதிப் பிரசாதம் அருளினர். வந்த அந்தணர்களுக்கு விடையும் அருளினர். புதுக்கோட்டை அதிஷ்டானத் திருப்பணியை நன்கு அமைய நடத்துவீர்களாக என்று அருளிச் செய்தனர், பெருந்தவ முனிவரான சேந்த மங்கலம் சுவாமிகள். சேந்தமங்கலம் சென்ற அந்தணர்கள் மீண்டும் புதுக்கோட்டைக்கு வந்து திருப்பணிக் குழு ஒன்று அமைத்து அத்வைத சித்தி பெற்ற சதாசிவப் பிரம்மேந்திரர் சமாதியை அழகாய் உருப்பெறச் செய்ய முயன்றார்கள்.

விளக்கவுரை :- புதுக்கோட்டைக்கு மீண்ட ஆஸ்திக சிகாமணிகள் திருப்பணிக் குழு அமைத்து இச் சமாதியைத் தேடித் தெரிந்து நன்கு அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். இத் திருப்பணிக் குழுவிலே சிறப்பான பொறுப்பை யேற்ற தரும சீலர் புதுக்கோட்டையில் நெடுங்காலம் நியாயவாதியாக இருந்து நியாயாதிபதி உத்யோகமும் வகித்து ஒய்வு பெற்று இருந்த ஸ்ரீ P. V. இரகுநாதையர் என்பார்.

சேந்தமங் கலத்துத் தவமுனிக் குரிய
திருப்பணித் திறத்திலே சிறந்த
சாந்தமே திரண்ட மனமுறு துறவி
தாமுமிப் பணியுற வடைந்தார்
வாய்ந்தமா மனையுள் மரங்களி னிடையே
மனமுறத் துருவினர் நடந்தே
ஏய்ந்தமா சமாதி யிருப்புறு நிலையம்
இஃதென வுணர்த்தலா யினரே. 355

உரை :- சேந்தமங்கலத்தில் நெடுங்காலம் ஏகாந்த யோகத்திலிருந்த சுயம்பிரகாசப் பிரம்மேந்திரர்க்குரிய திருப்பணி களைக் காலம் இடம் அறிந்து இயற்றுவதிலே மிக்க சிறப்புற்ற சாந்தமே உருவமாகத் திரண்ட மனம் உள்ள சங்கரானந்தரும் இத் திருப்பணியிலே தொடர்புபெற வந்தார். சமாதி ஸ்தலம் அமைந்த பெரிய மனையில் மரங்களின் இடையே மனத்தோடு தேடிக்கொண்டு நடந்து சதாசிவ சமாதி இருக்கும் நிலம் இது என்று தெரிந்து உரைத்தார்.

விளக்கவுரை :- குரு ஆக்ஞையோடு புதுவை அந்தணரு டன் புறப்பட்டு வந்த சங்கரானந்தர் சதாசிவ அதிஷ்டானத்தை இந்நிலத்தில் தான் உள்ளது என்று இரவெல்லாம் தேடி அறிந் தார்.

நீதியின் நிலையும் தருமத்தி னுயர்வும்
நெறிபடத் தெளிரகு நாத
வேதியர் பலர்நற் றுணையோடு சமாதி
விளங்குறு பணிதொடங் கினரே
ஆதியில் அடங்கு நிலத்திலே யிருந்த
அழகிய சமாதியைப் பெருக்கி
போதிய வளவு திருப்பணி நிகழ்த்திப்
பொருவது முனிக்குணர்த் தினரே. 356

உரை :- நீதியின் நிலைமையும் தருமத்தின் உயர்வும் முறைப்படி பெரியோரிடம் கேட்டு அறிந்திருந்த இரகுநாதையர் என்ற பிராமண உத்தமர் பல அன்பர் துணைகொண்டு இம்மா சமாதி விளக்கம் பெறும் திருப்பணியைத் தொடங்கினர். ஆதியிலே சதாசிவ முனிவர் பெருமான் அடங்கியிருந்த அழகிய சிறிய சமாதியைச் சற்றே பெரிதாக்கி வேண்டுமளவு திருப்பணி நிகழ்த்தி ஒப்பற்ற சேந்தமங்கலம் சுவாமிகளுக்குத் தெரிவித்தார்.

விளக்கவுரை:- புதுக்கோட்டையில் நீதிபதியாய் இருந்த **P. V.** இரகுநாதையர் சிறந்த சட்ட நிபுணர். ரசிக சிகாமணி. ஆஸ்திக சிரத்தை மிக்கவர். ஆருத்ரா தரிசனத்தன்று பெருந் தருமம் நிகழ்த்தும் பொறுப்பை யேற்றுக்கொண்டிருந்த புண்ணிய சீலர். தரும கைங்கர்யங்களில் இயல்பாகவே உற்சாகம் கொள்ளும் இவர் இந்தப் புண்ணிய கைங்கர்யத்திலும் முன்னின்றார். மண்ணுள் மறைந்த சிறு சமாதியை சங்கரானந்தர் தேடித் தெரிவித்ததும் அச் சமாதியைச் சற்றே பெருக்கி அமைக்கும் பொறுப்பை ஏற்க முன் வந்தார். பல நன்மக்கள் இவர்க்குத் துணை நின்றனர். சமாதிக் கட்டிடம் நன்கு அமைந்து பூஜா கைங்கரியம் முறையே நடக்கவேண்டிய ஏற்பாடுகள் ஆயின.

புதுவையங் தணருட் பலர்சதா சிவனர்
  புகுந்துறை திருச்சமா தியிலே
புதுமையி னிகழ்ந்த திருப்பணி முடியும்
  பொழுதிலே சேந்தமங் கலத்தே
மதுவைநன் கறிந்து தத்தவாத் திரையர்
  மலர்ப்பத பூசனை நிகழ்த்தும்
முதுமைய தவத்துச் சுயம்பிர காச
  முனிவரை யழைப்பது துணிந்தார். 357

உரை :- புதுக்கோட்டை நகரத்து வேதியருட்பலர் சதாசிவப் பிரம்மேந்திரர் மஹா சமாதி கொண்ட சமாதித் தலத்திலே புதுமையாக அமைந்த சமாதித் திருப்பணி முடியும் பொழுது சேந்தமங்கலத்தில் மதுமயமான பிரமத்தை நன்கறிந்து தத்தாத்திரேயர் திருவடி மலர்க்கு வழிபாடு நிகழ்த்தும் பழமையான தவம் உள்ள சுயம்பிரகாச முனிவரை இக் கும்பாபிஷேகத்துக்கு அழைத்துவரத் துணிந்தார்.

விளக்கவுரை :- சமாதிக் கட்டடம் நன்கு அமைந்தது. முன்புறம் ஒரு சிறு கீற்றுக் கொட்டகை போடப்பட்டது. திருமடைப் பள்ளியாகப் பின் நாளில் உதவிய கட்டடமும் வேறொரு சிற்றறையும் அன்றே அமைந்தன இவை எல்லாம் புதுக்கோட்டை நீதிபதி பதுமநாபசாஸ்த்திரியார்க்கே உரிமையாயிருந்த தோட்டத்துள் எளிய முறையில் எழுந்த திருப்பணிகள்.

குருசமா தியிலே திருப்பணி நிகழ்ந்து
குருவருள் பெருகுவ தறிந்த
திருவுறு சேந்த மங்கல முனிவர்
சிவமய மெதுவுமென் றருளிப்
பொருவறு தமிழ வரசெனு விளங்கு
புதுவையிற் சிவிகையாற் புகுந்தார்
மருவறு மறையின் முறையினுல் மறையோர்
வணங்கினர் வரவுரைத் தனரே. 358

உரை:- குரு தேவர் சமாதியிலே திருப்பணிகள் நன்கு நிகழ்ந்து குருவருள் பெருகுவதை அறிந்த சிறப்புள்ள சேந்தமங்கலம் சுவாமிகள் எதுவும் சிவமயம் என்று அருளிச் செய்து ஒப்பற்ற தனித் தமிழரசராக விளங்கிய புதுக்கோட்டையிலே சிவிகையிலமர்ந்து புகுந்தார். பிரமத்தைப் பற்றிப் பிடிக்கும் வேத வாக்கிய கோஷத்தோடு பிராமணர் வணங்கி வரவேற்றனர்.

விளக்கவுரை :- சமாதித் திருப்பணி நிகழ்ந்த செயலைத் தெரிவிக்க வந்த அந்தணர் கருத்தை அறிந்து மனமுவந்த சுவாமிகள் தம் குருதேவர் சமாதியிலே மகாலிங்கத்தை நன்கு பிரதிஷ்டித்து சமாதியைச் சற்றே பெரிதாக்கிச் செய்துள்ள திருப்பணிச்குக் கும்பாபிஷேகம் நிகழ்த்தும் நல்ல நாளைக் குறித்துக் கொடுத்து அந்நாளுக்கு முன்பே புதுக்கோட்டைக்கு சிவிகையில் வந்தனர். நகரத்தை பிரதக்ஷிணம் செய்து அதிஷ்டானத்துக்கு வந்து கிழக்குப் பகுதியில் உள்ள அறையிலே தங்கியிருந்து கும்பாபிஷேகத்தை நிகழ்த்தினர்.

குருவினை மானு மதுரையில் வணங்கிக்
குறிப்புணர் கருத்தோடு நடந்து
தருநிறை பொதிய மலையிலே யடைந்து
சரண்புகும் பழங்கதை நினைந்து
பருவமெத் தனையோ கடந்தன விளமை
பறந்தது முதுமையு மடைந்து
செருவிளைப் பதனை யறிந்தனன் குருவின்
திருவருள் துணையுள தினுமே. 359

உரை :- சற்குருநாதரை மானுமதுரையிலே முதன் முதற் கண்டு வணங்கி அவர் திருக்குறிப்பை உணரும் கருத்தோடே மெல்ல நடந்து மரங்கள் நிறைந்த பொதிய மலையிலே அடைந்து அவரிடம் சரண் புகுந்த பழைய வரலாற்றை நினைத்து எத்தனையோ ஆண்டுகள் கடந்துவிட்டன. இளமை பறந்து போயிற்று. முதுமையும் அடைந்து போர்புரிவதை அறிந்தேன். குருவின் திருவருள் இன்னும் துணையாக உள்ளது.

விளக்கவுரை:- சுயம்பிரகாசம் இளமைப் பருவத்தில் பரம வைராக்கிய சம்பன்னராகித் தம் கருத்தை எதிர்த்த மூத்தோர் சொல்லையும் மதியாமல் பெற்றோர் அனுமதியை அரிதிற் பெற்றுச் சதாசிவ முனிவரிடம் துறவுநிலை பெற்ற வரலாறு அவர் சரித்திரத்தில் விளக்கமாகும்.

எனமன நினைந்து மறைவிதிப் படியே
இணையறு சதாசிவ முனிவர்
புனிதமா மிலிங்க வுருவிலே புகுந்து
பொறுவரு நலம்விளைத் திடவே
அனிதர தியான ராகியே யிருந்தங்
கந்தணர் மறைகளை முழங்கிப்
பனிதரு புனலாற் குடமுழக் கியற்றும்
பணியினை நடாத்தின ரவரே. 360

உரை :- என்று மனத்தில் நினைந்து வேத விதிப்படி ஒப்பற்ற சதாசிவ முனிவர் தமக்கு அமைந்த புனிதமான இலிங்க உருவத்திற் புகுந்து அதனை வணங்குவார்க்கு ஒப்பற்ற நன்மைகளை விளைக்கும் பொருட்டு அனிதர தியானபரராக இருந்து அங்கு பிராமணர்கள் வேதத்தை முழங்கிக் குளிர்ந்த நீர்கொண்டு கும்பாபிஷேகம் நடத்தும் திருப்பணியை மேல்நோக்கி இருந்தார்.

விளக்கவுரை :- சமாதித் தலத்திலே மகாலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்வதும் அவ்விலிங்கத்தை முறை படி வழிபட்டு வேண்டுவார் வேண்டிய நலங்களை அடைவதும் நன்கு நிகழவே இக் கும்பாபிஷேகத் திருப்பணி நிகழ்கிறது. வைதிக சிரத்தை மிக்க மெய்யன்பர் பலர் இப்பணியிலே கலந்துகொண்டனர். சேந்தமங்கலம் சுவாமிகள் இங்கு நிகழும் ஒவ்வொரு பணியையும் நன்கு நோக்கி அவை முறைப்படி நிகழ்வதே தம் கருத்து என்பதை விளக்கியிருந்தார். வேத முழக்கம் வாத்திய முழக்கம் இசை முழக்கம் சிவநாம முழக்கம் முதலிய பெரு முழக்கங்களுக்கிடையே திருக் குட முழுக்கு நிகழ்ந்தது.

பரிதியே யெழுமுன் தொடங்கிய சமாதிப்
பணியிலே பலர்மன முருகக்
கருதியே பொருளைத் திரட்டுமெய் யன்பர்
காதலால் வழிபடு முறையே

சுருதியே முழங்கப் பிற்பக லளவும்
தூய்மைசால் பூசனை நிகழத்
திருதியே யுடைய முனிவரும் அனைத்தும்
திருவிழி குளிரநோக் கினரே. 361

உரை :- சூரியன் உதிக்கு முன்பு தொடங்கிய சதாசிவ பிரம்மேந்திர அதிஷ்டான கும்பாபிஷேகத் திருப்பணியிலே பல வகையான ஆஸ்திக ஜனங்கள் மனமுருகக் கருதி வேண்டிய பொருளைத் திரட்டிய மெய்யன்பர்கள் அன்போடு வழிபடும் முறையாலே வேத மந்திரங்கள் முழங்கப் பிற்பகல் வரையிலும் தூய்மை சிறந்த பூஜைகள் நடைபெற மனவுறுதி பெற்ற சுயம் பிரகாச முனிவரும் எல்லாச் செயல்களையும் தம் திருவிழிகள குளிரப் பார்த்தார்கள்.

விளக்கவுரை :- கும்பாபிஷேக சம்பந்தமாக நிகழ்த்தற் குரிய ஜபம் ஹோமம் முதலிய கைங்கரியங்கள் முறைப்படி வேத வித்துக்கள் செயலால் நிகழ அபிஷேகத்துக்கு என்று விதித்த முகூர்த்தத்தில் அபிஷேகமும நிகழ, இக்காட்சிகளைக் கண் குளிரக் கண்ட சேந்தமங்கலம் சுவாமிகள் தம் குரு கைங்கரியம் நிறைவேறியது உணர்ந்தார்.

வாசனை யறவே மவுனமா தவத்தே
மலைமுழை யடங்குமா முனிவர்
ஒசனை மணக்கு மலர்களும் புனைந்தே
ஒப்பனை செய்தமா விலிங்கம்
ஈசனை விளக்குந் திருவருள் விளக்கும்
இணையறு மெய்யருட் குருவின்
தேசினை விளக்கு மெனவுரைத் துரைத்துத்
திருவுறு நீறளித் தனரே. 362

உரை :- வாசனைகள் ஒழியும்படி மவுன மயமான பெருந் தவத்தில் மலைக் குகையில் நெடுங்காலம் அடங்கியிருந்த

சுயம்பிரகாச முனிவர் யோசனை தூரம் நறுமணம் கமழும் மலர்களால் அலங்கரித்து ஒப்பனை செய்த மகாலிங்கவுருவமான குருமூர்த்தம் ஈசுவரனையே விளக்கும் திருவருட்செல்வத்தை விளக்கும் ஒப்பற்ற மெய்யருட் குருமூர்த்தியின் ஒளிமையே விளக்கும் என்று உரைத்து உரைத்துத தமமை வணங்கிய மெய்யன்பர்களுக்கு சமஸ்த பாக்கியங்களையும் தரும் விபூதிப் பிரசாதத்தை அளித்தார்

விளக்கவுரை :- முன் பயின்ற பொருள்களின் மேல் மீண்டும் உண்டாகும் பற்றே வாசனையாம - இது வாசனாமலம் என்றே உரைக்கப்படும். பிறவி தோறும் இது தொடர்பு கொள்வது. தீர்க்கமான தபோ மார்க்கத்தில் நிலை நின்ற மகான்களே இம்மலத்தை ஒழிக்க இயலும். யோசனை - ஒரு காத தூரம். ஒப்பனை-அலங்காரம். அபிஷேகம் ஆன பிறகு மகாலிங்கத்தை அலங்கரித்துத் தீபாராதனை செய்தனர்.

முனிசமா தியுளே திருமறை முழக்கும்
  முனிமொழி முழக்கமும் விளங்க
மனிதரீங் கடைந்து நினைந்தன வரங்கள்
  மனமுறை வேண்டுக பெறுக
தனிமையை விழைவார் தம்முளே மறைந்த
  தத்துவம் துருவிள ருணர்க
இனிமையே காந்த மென்பதை யேவரு
  மீங்குணர்ந் துய்கென வுரைத்தார். 363

உரை :- சதாசிவப் பிரம்மேந்திர சமாதியில் வேத கோஷமும் பிரஸ்தானத்ரய விசாரமும் விளங்குவதாக சாது ஜனங்கள் இங்கு வந்து தாம் நினைத்த வரங்களை வேண்டிப் பெறுவாராக. தனி நிலையை விரும்புவோர் இங்கு வந்து அமர்ந்து தம் உள்ளத்துள்ளே மறைந்திருக்கும் தத்துவத்தைத் தேடித் தெளிவாராக. ஏகாந்தம் இனிது என்பதை எவரும் உணர்ந்து இங்கு அடைந்து உய்தி பெறுவாராக என்று உரைத்தார்.

விளக்கவுரை :- சுயம்பிரகாசப் பிரம்மேந்திரர் உபதேச மொழிகள் இவை. 'இனிது இனிது ஏகாந்தம் இனிது' என்பது ஔவையார் திருவாக்கிலும் வருகிறது. சதாசிவ அதிஷ்டானம் ஒரு பெருந் தோட்டத்தின் நடுவே சாத்துவிகம் வளர அமைந் துள்ளது.

சோதியாம் பொருளைச் சுருதிமேற் பொருளைச்
சுரகணந் தெளிவுறும் பொருளை
ஆதியாம் பொருளை அந்தமாம் பொருளை
அடிநடு முடிவிலாப் பொருளை
வேதியாம் பொருளை வேதமே விளக்க
விளங்குவ தரியதாம் பொருளை
நீதியால் அறிந்த சதாசிவ முனிவர்
நிற்பரங் கவ்வுரு வியைந்தே. 364

உரை :- சோதியாகிய பொருளை வேதத்தின் முடிமேல் விளங்கும் பொருளை தேவர் இனத்தார் இன்றும் தெளிந்து கொள்ளாத பொருளை ஆதியாக உள்ள பொருளை அந்தத்தில் உள்ள பொருளை அடி, நடு, முடி என்று மூன்றும் இல்லாத பொருளை அறிவுருமான பொருளை வேதமே விளக்குதற்கு அரியா தன பொருளை முறையே அறிந்த சதாசிவப் பிரம்மேந்திரரே இங்கு அவ்வுருவம் அடைந்து இருக்கின்றார்.

விளக்கவுரை :- சோதி-மற்றென்றால் ஒளி செய்யப் பெரு மல் தானே தன்னையும் மற்ற வற்றையும் விளக்குவதாய் உள்ள ஆத்மசோதி. தேவருள் இந்திரன், அக்னி, வாயு என்போர் தெளிய முயன்று தெளியாது இறைவி அருளால் தெளிந்து கொண்டார் என்பது கேளத்திற் கண்ட உண்மையாம். வேதி: அறிவிப்பது அறிவாவது என்று பொருள்தரும். 'அறிவானும் தானே அறிவிப்பான்தானே' என்றார் பிறரும் - சதாசிவர்

பிரமப்படி வைராக்கிய மார்க்கத்தால் இப் பொருளை உணர்ந்து இதன்மயம் ஆகும் என்பது இங்கு விளக்கப்பட்டது.

பிரமவித் தடங்கு நிலத்திலே சிவனும்
  பிரமனும் நாரணப் பிரானும்
பரமசத் தமையும் தலமெனக் கருதிப்
  பரவுற நிலவுத லுறுதி
கரமது குறிப்புப் பொருளையே விளக்கும்
  காட்சிய தென்முகங் குரவன்
சிரமமே யறவே வாய்திறந் தருள்வன்
  சித்திபெற் றவர்சமா தியிலே. 365

உரை :- பிரம்ம வித்து ஒருவர் மகா சமாதி கொண்டு அடங்கியிருக்கும் நிலத்திலே சிவபெருமானும் பிரம்ம தேவனும் நாராயண மூர்த்தியும் பரம சத்து அமைந்த மாதலம் என்று கருதி மக்கள் வந்து வாழ்த்தும்படி குடிகொள்வது உறுதியாம். தன் கையைக் கொண்டு வேத வேதாந்தக் குறிப்புப் பொருளை விளக்கும் காட்சியை அருளும் தக்ஷிணாமூர்த்தியான குருதெய்வம் சிரமம் இன்றித் தன் வாய் திறந்து வேதப்பொருளை அருள்வான் சித்தி பெற்றவர் சமாதியில்.

விளக்கவுரை :- பிரம வித்து அடங்கும் நிலம் சித்தி பெற்றவர் சமாதி என்ற இரண்டும் ஒன்றே. பிரம விஷ்ணுமகா தேவ மூர்த்தம் கொண்ட பரமாத்மா இங்கு எழுந்தருள்வது அற்புதம் இல்லை. சனகாதிகளுக்கே மவுன உபதேசம் செய்த தக்ஷிணாமூர்த்தி இப் புண்ணிய பூமியில் வாய் திறந்து உபதேசிப்பன் என்றார்.

தத்தமா முனியெங் தவப்பெருங் குரவன்
  தமிழகத் திலகுருக் குறையை
உத்தம பத்த ருதவிகொண் டொருமை
  யுலவிய தத்தமா கிரியின்

வைத்தநற் றளியால் மாற்றவே முயன்றே
மாமுனி வரரரு ளிவணும்
சித்தமாம் விரைவி லெனவெம தகத்தே
செறியொளி விளக்குவ துளதே. 366

உரை :- தத்தமா முனிவர் எம் தவ நெறியின் பெருங் குரவர் தமிழ் நாட்டில் இல்லை என்னும் குறையை உத்தம பக்தர் பலர் உதவியைக் கொண்டு ஏகாந்தம் விளங்கும் தத்த கிரியில் அமைத்துள்ள தத்தா லயத்தால் மாற்ற முயன்றேம். அம் மகா முனிவர் திருவருள் இங்கும் விரைவிலே சித்தமாகும் என்று எம் உள்ளத்தில் செறிந்திருக்கும் அருளொளி உரைக்கின்றது.

விளக்கவுரை :- தத்த சம்பிரதாயத்தை அவலம்பித்து அவதூத சந்யாஸ தருமத்தை ஏற்றுக்கொண்டவராதலால் இந்த உபதேச வாக்கியங்களின் இடையே ஒரு உண்மையை வெளியிடுகிறார். தத்தாலயமில்லாக் குறையைத் தத்தகிரி ஒருவாறு மாற்றுகிறது. இத்துணைப் பெருமை மிக்க தமிழகத்தே தத்த குருவுக்கு ஒரு திருக்கோயில் இருப்பது சாலும் என்று கருதேன். மேலும் பல திருக்கோயில்கள் தோன்ற வேண்டும். இந்தப் புண்ய பூமியிலும் அம் முனியரசர் திருக்கோயில் உண்டாகும் என்று குறிப்பிடுகின்றார். பின்பு உண்டாயிற்று.

சாதுசங் கற்பம் சங்கர னருளாற்
றழைப்பது திரமென விளங்கக்
கோதுநீங் கியமா தவச்சதா சிவனார்
குடிலையுள டங்கிய நிலத்தே
தாதுவற் சரமே மிதுனமா மதியே
தவழுமு வாறெனு நலநாள்
மீதுபாய் கரங்க ளாயிர முடையான்
மிகுதினம் புகழ்பொருந் தியதே. 367

உரை :- சாதுக்களின் சங்கற்பம் இறைவன் திருவருளால் நிறைவேறுவது உறுதி என்று விளங்கக் குற்றமற்ற பெருந் தவம் புரிந்த சதாசிவப் பிரம்மேந்திரர் ஓங்கார மகா மந்திரத்துள் அடங்கிய புண்ணிய க்ஷேத்திரத்தில் தாது வருஷம் வைகாசி மாதம் பதினெட்டாம் நாள் வானத்திலே உலாவும் ஆயிரம் கரங்கள் உள்ள சூரிய தேவனுக்குரிய ஞாயிற்றுக்கிழமை மிகவும் புகழ் பொருந்தியது.

விளக்கவுரை :- சாது - ஞானவான், கர்மயோகி, பக்த சிகாமணி, தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன் முதலிய பலரையும் குறிப்பிடுவது. சங்கற்பம்-செய்ய நினைத்தசெயல். சங்கர ராமானுஜ, மத்வசைதன்ய, வல்லப, நிம்பார்க்க, நானக் இராம கிருஷ்ணாதியர் சாதுக்களாவர். இவர்கள் சங்கற்பம் நிறை வேறும் காட்சியை உலகம் கண்டது.

குடமுழுக் கியற்றப் பயின்றவர் பலரும்
குறைவற மறைதெளிந் தவரும்
படமுழுக் கொழித்த சுயம்பிர காச
பவித்திர முனிவர ரருளால்
மடமுழுக் கழித்த சதாசிவ முனிவர்
மான்மியம் விளங்கதிட் டானம்
இடமுழுக் கருணை வளர்தனி யெனவே
யிலங்குற வியற்றினர் பணியே. 368

உரை :- கும்பாபிஷேக கைங்கரியத்தை நன்கு இயற்றத் தெரிந்த பலரும், குறைவற வேதம் பயின்றவரும் வஸ்திரத்துள் மூழ்கியிருக்கும் நிலையை ஒழித்த அவதூத ஆச்ரமியான சுயம் பிரகாசப் பிரம்மேந்திரர் என்ற பரிசுத்த ஞான மூர்த்தியின் திருவருளால் அஞ்ஞானத்துள் மூழ்கும் உலக வாழ்வை ஒழித்த சதா சிவப் பிரம்மத்தின் மகிமை விளங்கும் அதிஷ்டானத்தின் இடம் முழுக் கருணை வளரும் கோயில் என்று விளங்கும்படி திருப்பணி இயற்றினர்.

விளக்கவுரை :- உபதேச மொழிகளைக்கேட்ட வைதீகரும் சாஸ்திர வாதிகளும், கலைஞரும் கைங்கரிய பரரும் தரும சீலரும் சாந்த சீலரும் பிறரும் சதாசிவ அதிஷ்டானத்தின் கும்பாபிஷேக கைங்கரியம் நன்கு நிகழத் தம்மால் இயன்ற பணிகளைப் புரிந்தனர். இக் கும்பாபிஷேகம் நிகழ்ந்த நாள் தாது வருஷம் வைகாசி மாதம் பதினெட்டாம் நாள். ஞாயிற்றுக்கிழமை என்ற புண்ணிய தினமாம். இதனைக் கல்லெழுத்தால் அறியலாம். இதன்பின் நிகழ்ந்த கும்பாபிஷேகம் சமீப காலத்தது.

அத்திரி முனியும் அவர்தமை மணந்த
அருந்திறற் கற்பெனும் தவஞ்சால்
பத்தினி மகளும் புரிபெருந் தவத்தாற்
பரமன துருவமாப் பிறந்த
ஒத்தினி யெவரு முரைப்பதற் கரிய
உத்தம தத்தனூர் துறவின்
சித்தினி திலங்கச் சதாசிவ சமாதி
சிறப்புறப் புதுவைபெற் றதுவே. 369

உரை :- அத்திரி மகாமுனிவரும் அவரை மணந்து கொண்ட அரிய திறமை உள்ள கற்பு என்ற தவம் சிறந்த தரும பத்தினியான அநசூயா தேவியும் புரிந்த பெருந்தவத்தாலே பரமனது திருவுருவமாய் அவதரித்த, எவரையும் ஒப்பாக உரைப்பதற்கரிய தத்தமா முனிவர் துறவு நெறியின் சித்து இனிது விளங்கச் சதாசிவ சமாதியைப் புதுக்கோட்டை நகரம் சிறப்பாகவே ஏற்றுக்கொண்டது.

விளக்கவுரை :- மும்மூர்த்திகளும் அத்திரி அநசூயை தவம் கண்டு மகிழ்ந்து காட்சி கொடுத்து மூவரும் சேர்ந்த ஒரு குழவி பிறப்பதாக அருள் புரிந்து அப்படியே மும்முகத்தோடு முன் கிடந்த குழந்தையை முனி தம்பதியர் எடுத்து வளர்த்தனர்.

தங்குரு சமாதி தமிழகந் தனிலே
　　தமிழர சிலங்கிய நகரில்
பொங்குவ துணர்ந்த சுயம்பிர காச
　　புண்ணியர் கிருதகிரு த்தியராய்
மங்குவ தறியா மாதவ நெறியில்
　　வாழ்வுறச் சேந்தமங் கலமே
தங்குவ துவந்து சிவிகைமீ தமர்ந்து
　　சார்ந்தவ ருடனெழுந் தனரே. 370

உரை :- தம் குரு மூர்த்தியின் சமாதி தமிழகத்தில் தமிழரசு விளங்கிய நகரத்தில் விளங்குவது உணர்ந்த சுயம்பிர காசப் பிரம்மேந்திர அவதூத சுவாமிகள் செய்தற்குரியது செய்து முடித்தவராக மங்குவதையே யறியாத மகா தவத்தின் வழியே வாழ்வதற்கு சேந்தமங்கலத்திலே நிலைத்திருப்பதை விரும்பிச் சிவிகைமேல் அமர்ந்து தம்மைச் சார்ந்தவரோடு புறப்பட்டார்.

விளக்கவுரை :- மண்ணுள் மறைந்து குப்பை மேட்டாலே மூடுண்டு கிடந்த சமாதியைத் தாமே உணர்ந்து தம்மைச்சார்ந்த மெய்யன்பர்க்கு உணர்த்திய சுயம்பிரகாச முனிவர் பெருந்தகை அப் புண்ணிய பூமியிலே ஒரு சிறு சமாதி எழுந்து வைதிக சம்பிரதாயப்படி கும்பாபிஷேகம் நிகழ்ந்த காட்சி கண்டு மனம் மகிழ்ந்து தாம் கிருத கிருததியர் ஆனதாக உணர்ந்து புதுக்கோட்டைக்கு வந்த புண்ய கைங்கரியம் கிரமப்படி நிறைவேறிவிட்டதால் தம் ஏகாந்த ஸ்தலமான தத்தகிரிக்குப் புறப்பட நினைத்தார். சிவிகையும் வந்தது. புறப்படச் சித்த மாகினார்.

எழுகையி லவர்முன் இருகரங் கூப்பி
　　இறைஞ்சிய வந்தணர் வணிகர்
குழுவினை நோக்கி முகமலர்ந் தொருசொல்
　　கூறுவர் சுயம்பிர காசர்

வழுவறும் வழிபா டியற்றியித் தலத்தே
வாழ்பவர் நலமெலாம் பொருந்தத்
தொழுவலெங்கு குருவை யவதிட் டானம்
சுடருக தவச்சிறப் புறவே 371

உரை:- சிவிகையில் அமர எழும்போது அச்சுயம்பிரகாசப் பிரம்மேந்திரர் திருமுன் வணங்கி இருகரம் கூப்பி நின்ற அந்தணர் வணிகர் முதலிய நன்மக்கள் கூட்டத்தை நோக்கி முகம் மலர்ந்து அம் முனிவர் பெருமான் ஒரு சொல் கூறுவார். குற்றமற்ற வழிபாடுகளை இயற்றி இத் தலத்தில் வாழும் நன் மக்கள எல்லா நன்மைகளையும அடைய வேண்டுமென்று எம் குருநாதரைத் தொழுகின்றேன். அவர் எழுந்தருளியிருக்கும் இவ்வதிஷ்டானம் தவச்சிறப்போடு விளங்குவதாக.

விளக்கவுரை :- சிவிகையில் அமரு முன்பு பொதுவாக எல்லா மக்களுக்கும் வாழ்த்துரைப்பது ஆசிரம சம்பிரதாயம் ஆதலின் சுயம்பிரகாசர் அம்மொழி கூறினர். பிறகு ஒரு நினைப்பு வந்தது.

ஒவ்வொரு நாளு மிப்பெருந் தனியில்
உரிமையால் நிவேதன மமையச்
செவ்வன மமுது படியினை யுதவும்
செல்வரீங் கெவரென வறியேம்
எவ்வெவ ரெவ்வெத் திருப்பணி யியற்ற
விசையினு மிதுமுதன் மையெனு
எவ்வமில் முகத்தார் பலருநன் குணர
இயம்பினர் முனிபுராங் தரரே. 372

உரை :- ஒவ்வொரு நாளும் இத் திவ்ய க்ஷேத்திரத்தில் உரிமையால் மகாலிங்கத்துக்கு நிவேதனம் ஆகும்படி முறையே அமுது படியை உதவும் செல்வர் இங்கு எவர் என்று அறியேம்.

எவர் எவர் எந்தெந்தத் திருப்பணியை இயற்ற இசைவார் ஆயினும் இது முதன்மைப் பணியாம் என்று குற்றமற்ற முகம் உள்ள பலரும் நன்கு உணர முனியரசர் உரைத்தார்.

விளக்கவுரை :- சிவிகையில் அமர்ந்த பிறகு அது புறப்படுமுன் வணங்கி நிற்கும் குழுவை நோக்கி உரைத்தமொழி இது. எதிர் காலத்தில் இப்புண்ய க்ஷேத்திரத்தில் தருமங்கள் பல நிகழலாம் என்பதை உள்ளத்தால் உணர்ந்த முனிவர்பிரான் மகாலிங்க மூர்த்தமாக இருக்கும குருதேவருக்கு மகா நைவேத் தியத்துக்கு வேண்டிய அளவு அமுதுபடி(அரிசி)எவர் கொடுக்க இருக்கிருரோ என்ற சிந்தனையை இரண்டு மூன்று சொற்களால் உரைத்தார். பல செல்வர் அக் கூட்டத்தில் இருந்தார். ஆயினும் அந்தணர் ஒருவர்க்கு இப்புண்ணியம் அமைவதாயிற்று.

திருத்தகு கானப் பேட்டையில் வதிந்த
சீர்ச்சிவ ராமவங் தணரே
தரத்தகு பொருளிற் சிறத்திலே னெனினும்
தக்கவித் தருமமே விழைவேன்
உருத்தகு தவத்துச் சுயம்பிர காசர்
உவந்தவா றரிசியித் தளிக்கே
கருத்துற முறையே தினந்தின மளிக்கும்
கடமையான் பூண்பலென் றனரே. 373

உரை :- அழகு மிக்க கானப்பேட்டையில் வாழும் சிறப்புள்ள சிவராமையர் என்ற பிராமணர் சுவாமிகளை வணங்கி, இவ்வதிஷ்டானத்துக்குக் கொடுத்தற்குரிய செல்வத்தாற் சிறந்திலேன் ஆயினும் தகுந்ததான இம் மகா தருமத்தை ஏற்றுக் சொள்கிறேன். பெருமைக்குரிய தவத்திற் சிறந்த முனிவர் பெருமான் திருவுள்ளம் உவந்தவாறு இத் திருக்கோயிலுக்கு வேண்டிய அரிசியைப் பக்தி சிரத்தையொடு முறைப்படி தினந் தோறும் கொடுக்கும் கடமையை நான் மேற்கொள்வேன் என்ருர்.

விளக்கவுரை :- கானப்பேட்டை என்ற சிறிய அக்ரகாரம் வேத வித்துக்கள் வாழ்ந்த புண்ணியம் மிக்கது. சுயம்பிரகாசர் [illegible] முடியும் பேற்றைப் பெற்றது. துறவு தந்தது.

துறவினைப் பெறயான் துணிபுறப் புரிந்த
  தொல்பதிப் பிறந்தவ ரறத்தால்
அறவுருப் புனைந்த வெங்குரு வரனுர்க்
  கமைந்தது நிவேதன மெனவே
புறவொழுக் கினிலும் அகவொழுக் கினிலும்
  புண்ணியத் தவத்தினு முதிர்ந்த
திறவொழுக் குடைய சுயம்பிர காசர்
  செப்பினர் சிவிகையே றினரே. 374

உரை :- சந்யாச ஆசிரமத்தை அடைய நான் மனத் துணிவு பெறும்படி செய்த பழமையான ஊரிற் பிறந்தவர் தருமத்தால் சந்யாச தருமத்தின் உருவத்தைப் பெற்ற எம் குறவரர்க்கு அமைந்தது நிவேதனம் என்று புறவொழுக்கத்திலும் அகவொழுக்கத்திலும் புண்ணியத் தவத்திலும் முதிர்ந்த உறுதியான ஒழுக்கம் உள்ள சுயம்பிரகாசர் உரைத்துவிட்டுச் சிவிகை யேறினுர்.

விளக்கவுரை :- கானப் பேட்டைக்கு இவர் பூர்வாசிரம குடும்பம் புறப்பட்டு வருமுன்பே இவர்க்குத் துறவுள்ளம் பிறந்தது. ஆயினும் சென்னையிலிருந்த உத்யோகத்தை உதறிவிட்டுக் காசிக்கு நடந்து சென்று அங்கு மகத் தரிசனம் பெற்று மீண்டும் தந்தையார் உடம்பு சிதையில் நீருகும் போது வந்து சேர்ந்து அதன் பிறகு குடும்பத்தோடு கானப்பேட்டை வந்து [illegible] ஆணை பெற்றே சதாசிவ ப்ரம்மேந்திரரிடம் துறவு பெற்றுக்கொண்டார். ஆதலின் கானப்பேட்டை தமக்கு உதவிய புண்ணிய பூமி என்ற நினைவோடு இருக்கின்ருர் முனிவர் பிரான்.

எட்டாவது

சாந்தானந்தர் திருப்பணிப் படலம்

சதாசிவமா முனியருளால் தருமவகை பலதழைத்து
மதாமதமாம் பொருள்தெளிக்கும் மறைவளர வளர்புதுவை
சதாசிவமா முனிவர்பிரான் சமாதிகொளு மதிட்டானம்
சதாசிவமே யுலகுபெறத் தகுநிலைய மாகியதே. 375

உரை :- நெரூரில் சமாதி கொண்டருளிய சதாசிவப் பிரம்மேந்திர சுவாமிகள் திருவருளால் பலவகையான தருமங் களும் தழைத்து அறியப்படும். அறியப்படாது என்று கூறல் அரிய பரம்பொருளை விளக்கும் வேதம் வளர வளர்ந்து வரும் புதுக்கோட்டை நகரம். சதாசிவப் பிரம்மேந்திர சரஸ்வதி அவ தூத ஸ்வாமிகள் மகா சமாதி கொண்டருளிய அதிட்டானத்தின் மூலம் உலகம் எப்பொழுதும் மங்கள வாழ்வுபெறத்தக்க நிலைய மாக இருந்தது.

விளக்கவுரை :- புராதன சதாசிவ முனிவர் திருவருட் குறிப்பாலே புதுக்கோட்டையில் நவராத்திரி தருமமும், வித்வான் களை ஆராதிக்கும் சிறந்த தருமமும் இரண்டு நூற்றுண்டுகள் நிகழ்ந்தன. புதுக்கோட்டை தனித் தன்மை இழந்ததால் இத் தருமங்கள் மறைந்தன. நூதன சதாசிவர் சமாதியில் இன்று தெய்விகம் விளங்குகிறது.

சிறியதொரு சமாதியுளே சிவமயமாய் அமர்முனிவர்
நறியமலர் மாலைமலை நயந்தருளும் புவனேசி
அறிவரிய பொருள்விளக்க அருகடைய வேண்டியதால்
மறிமழுவன் வாழ்தளிபோல் வளர்வுபெறு சிறப்புரைப்பாம்

உரை :- சிறியதான ஒரு சமாதியுள்ளே சிவமயமாய் அடங்கியமர்ந்த சதாசிவ ப்ரம்மேந்திரர் மணம் மிக்க மலர்மாலைகளை மலைபோல உவந்து அணிந்துகொள்ளும் புவனேசுவரி தேவி ஞானுத்மாக்களும் அறிதற்கு அரிய பொருளை விளக்க அருகே அடைய வேண்டியதால் மானும் மழுவும் ஏந்திய பரமசிவன் கோயில்கொண்ட சிவாலயம் போல இவ்வதிஷ்டானம் வளர்ந்த சிறப்பை இனி உரைப்போம்.

விளக்கவுரை :- சமாதியில் அடங்கி மண்ணுள் மறைந்த சதாசிவ குருவரரை உலகம் அறியத் தத்தகிரிச் சுயம்பிரகாசர் வெளியிட்ட பிறகு அவ்வதிஷ்டானம் ஒரு சிறு சமாதி ஸ்தலம் என்ற அளவில் அடங்காது, புவனேசுவரி திருக்கோயிலைப் பெற்று அக்கோயிலிற் சிறப்பாக நிகழ்ந்து வரும் நித்திய நைமித்திகாதிகளால் உலகம் அறியத்தக்க பெருமையோடு விளங்குவதை இன்று அங்குவரும் மெய்யன்பர்கள் அறிந்து மனம் மகிழ்ந்து இன்புறுகின்றனர்.

அருட்குரவர் அதிட்டானம் அடக்கமுற அமைபணிக்குத்
தெருட்குரவர் எனவுலகம் தெளிந்தசுயம் பிரகாசர்
மருட்குறவாய் வாழ்மனித்தர் மனங்களுமே யொளிபொருந்த
இருட்குருவம் இலாதொழித்தே இயற்றியன புகன்றேமே.

உரை :- திருவருட் செல்வம் அருளும் தம் குருநாதர் சதாசிவ ப்ரம்மேந்திரர் மகா சமாதி கொண்ட அதிஷ்டானத்தை அடக்கமாக அமைக்கும் திருப்பணிக்கு ஞானகுருமூர்த்தி என்று

உலகம் தெளிந்த சுயம்பிரகாச வள்ளல் உலகத்தின் மயக்கங்களுக்கே உறைவாக வாழும் மனிதர்களின் மனங்களும் ஞான வொளி பொருந்த அஞ்ஞான அந்தகாரத்துக்கு உருவமே இல்லாது ஒழியச் செய்து திருப்பணி புரிந்ததை முன்பு உரைத்தோம்.

விளக்கவுரை:- சுயம்பிரகாசப் பிரம்மேந்திரர் தம் ஏகாந்த தவச் சாலையினிங்கிப் புதுக்கோட்டைக்கு வந்து குரு கைங்கர்யம் செய்து சென்ற வரலாறு புதுவைக்குச் சிறப்பு.

தத்தகிரி புகுந்தமுனி சதாசிவரை நினைந்தாங்கு
சுத்தசிவ மயமான தூயசிற்ப மொன்றமைய
எத்தகைய சிற்பியைநா மினியழைப்ப தெனநினைந்தார்
பத்தகண மஃதறிந்து படர்ந்ததுமா முனியிடமே 378

உரை:- தத்தகிரி குஹாயலத்துக்குப் போய்ச் சேர்ந்த சுயம்பிரகாச முனிவர் தம் குருவரரான சதாசிவரைத் தியானம் செய்தவாறே சுத்த சிவமயமான பரிசுத்த சிற்பம் ஒன்று அவர்க்கு அமைய எத்தகைய சிற்பியை இனி நாம் அழைப்போம் என்று நினைத்தார்-பக்தர் கணம் அவர் திருக்குறிப்பை அறிந்து அவரிடம் வந்தது.

விளக்கவுரை :- சமாதி கைங்கரியம் நன்கு நிறைவேற்றி மகாலிங்கத்தைப் பிரதிஷ்டை பண்ணிய நன்னுளையே குரு தேவர்க்கு உரிய சிறந்த நாளாகக் கருதிய சுயம்பிரகாசர் அந் நாளில் ஆண்டு தோறும் அம்மகான் அடங்கிய புண்ய பூமியிலே விசேஷ அபிஷேக ஆராதனைகளும் ஊர்வலமும் நிகழ்த்துவது தக்கது என்று கருதி உற்சவமூர்த்தி ஒன்று வேண்டுமே என்று விரும்பி அதனை நன்கு அமைக்கத்தக்க சிற்பி ஒருவனை நாடுவார் ஆயினர். மெய்யன்பர்களே அவனை அழைத்து வந்தனர்.

ஐம்பொனியல் சிலையமைக்கோ அருங்கனகச் சிலைவடிக்கோ
செம்பினியல் திருப்படிவம் செய்கேனோ வெனவுரைத்துச்
சம்பரிநான் முகனுருவாம் தத்தமுனி திருத்தளிமுன்
கம்பமறு சிற்பிவந்து கைகுவித்து நின்றனனே. 379

உரை :- ஐம் பொன்னால் இயலும் சிலை அமைக்கவோ, அபூர்வமான பொன்மயச் சிலையை வடித்துத் தருகவோ, செம் பால் இயலும் திருப்படிவம் செய்து தருகேனோ என்று உரைத்துக் கொண்டு பரமசிவன் நாராயணன் நான்முகன் என்ற மும்மூர்த்தி உருவமான தத்தாத்திரேயமுனி திருக்கோயிலுக்கு முன்னே தன் தொழிலிலே நடுக்கமற்ற சிற்பி ஒருவன் வந்து கைகுவித்து நின்றான்.

விளக்கவுரை :- உற்சவ விக்கிரகம் செம்பு பொன் ஐம் பொன் என்ற மூன்றாலும் அமையலாம். பொன்னால் அமைந்த விக்ரகங்கள் பெரிய திருக்கோயில்களில் உள்ளன. சதாசிவ ப்ரமத்தின் திருப்படிவம் செம்பினால் அமைவது இறை வன் திருவருள் ஆதலால் அதுவே இறுதியில் உரைக்கப்பட்டது.

கலைதெளியும் புகழாளன் கருத்தறிந்த முனிவர்பிரான்
அலைதெளியும் கடல்போலும் அறிவுகொளும் சதாசிவனார்
நிலைதெளியும் அதிட்டானம் நிலைபெறவோர் செம்புருவம்
விலைதெளியு மனமில்லாய் விரைந்தமைக்க வென்றனரே.

உரை :- சிற்பக் கலைபைக் குலத்தின் கலையாகப் பரம் பரைச் செல்வமாக நன்கு கற்றுத் தெளிந்த புகழ் பூண்ட சிற்பி யின் கருத்தை அறிந்த முனிவர் பெருமான் அலைகள் தெளிந் திருக்கும் கடல் போன்ற மெய்யறிவு படைத்த சதாசிவ ப்ரம்மத் தின் ஞான நிலையை உலகம் தெரிய அமைந்த அதிஷ்டானத்தில் என்றும் நிலைபெற்றிருக்கத்தக்க ஒரு செம்புருவச் சிலையை

அதன் விலையை மதிக்கும் மனமில்லாத சிற்பியே விரைவில் அமைத்துத் தருக என்று சுயம்பிரகாசர் அருளினர்.

விளக்கவுரை :- பொற்சிலை, ஐம்பொன் சிலை, செம்பின் சிலை என்ற மூன்றும் இறைவன் அருளைப் பெறுவிக்கும் திறம் உள்ளவையே. ஊர்ப்புறத்தே உள்ள அதிஷ்டானத்தில் இருக்க வேண்டும் ஆதலின் செம்பின் சிலையே தகும் என்ருர்.

துறவறத்தி னுழைவுபெற்றுத் தூயமனத் துறுதியினுல்
அறவொழுக்க நிலைநின்ற ஆறிரண்டு சீடருளே
புறமனத்து மகமனத்தும் புவனேசிக் கிடந்தந்தே
உறவனைத்து மறந்தவரை உருக்கமுற வருகழைத்தே. 381

உரை :- குருவரர் திருவருளாலே துறவறத்தில் நுழைந்து பரிசுத்தமான மனத்தில் எழுந்த உறுதியால் தரும ஆசாரத்தில் நிலைத்து நின்ற சீடர் பன்னிருவருள் புறமனத்திலும் அகமனத்திலும் புவனேசுவரி தேவிக்கு இடம் கொடுத்து உலகத்துறவு அனைத்தையும் மறந்த சாந்தானந்த முனிவரை அருகில் அழைத்து.

விளக்கவுரை :- இச்செய்யுள் தன்னுள் முடிவுபெறவில்லை. பின் உள்ள சில செய்யுட்களோடு தொடர்ந்து சென்று முடிகின்றது. தவமும் தவமுடையார்க்கு ஆகும் என்ற வள்ளுவர் வாக்குக்கு ஏற்ப இம்மகான் பெருந்தவ மலையாக இருந்து தம்மால் பல ஞானுத்மாக்கள் தவக்கோலம் பெற அருளி யுள்ளார். அவருள் இளமைத் தவச் செல்வர் சாந்தானந்தர். இனி இவ்வரலாற்றில் விசேஷமாக இடம் பெறுகின்ருர்.

ஆனந்த மவதியிலா தாழியென விருத்தல்கண்டு
மானந்த மரனந்த மனித்தர்சுரர் கணநந்த
யானந்த மயமாக விருப்பேனென் றெண்ணுகிற
மோனந்தன் இன்பமுணர் முயற்சியினுய் பணியுளதே. 382

உரை :- பிரம்மானந்தம் எல்லையில்லாது கடல்போல இருப்பது கண்டு, மிருகங்கள் இன்பமுற, மரங்கள் வளர்ச்சிபெற மனிதர் தேவர் கூட்டங்கள் இன்பமுற யான் அதன் உருவ மாகவே இருப்பேன் என்று எண்ணுகின்ற மவுனயோகத்தின் இன்பத்தையுணரும் முயற்சியுடையாய் உனக்கு ஒரு பணி உள்ளது

விளக்கவுரை :- ஆனந்த அவதி தைத்திரிய உபநிடதத்திலும், பிரகதாரணியக உபநிடதத்திலும் விளக்கமாக உரைக்கப்பட்டுள்ளது. ஆனந்தமய அதிகரணத்திலும் விளக்கப்படு கிறது. நந்தல் - ஆக்கம் வளர்ச்சி இன்பநிலைமுதலிய பொருள் தரும் சொல். மரன் - மரம் போலி. மான் மா என்ற சொல் "ன்" என்ற சாரியைப் பெற்றது, மா - விலங்கு மான் - விலங்கு மிருகம் என்ற சொல் வடமொழியில் இருப்பதுபோல் மான் என்ற சொல் தமிழில் இருபொருள் தர அமைந்துள்ளது. சாந்தானந்தர் இளம்பருவத்தே துறவுபெற்று நெடுங்காலம் மவுனத்தில் இருந்தவர்.

தத்தகிரி தமிழகத்தே தலையெடுத்த தறிந்தனைகாண்
தத்தநெறி துணிந்தரிய சாந்திபெறத் தாம்புரிந்த
சத்தருளே முத்தருளே சதாசிவமா முனிவரைப்போல்
இத்தரையி லொருவரிலை யென்பதைநீ யறிவாயே. 383

உரை :- தத்தகிரி குஹாலயம் தமிழகத்திலே தலையெடுத்துச்சிறப்புறுவதை நீ அறிந்திருக்கிறாய். தத்தசம்பிரதாயத்தைத் தமக்குரிய மோக்ஷமார்க்கமாகத் துணிந்து அபூர்வமான மனச் சாந்திபெறக் கடுந்தவம் புரிந்த சத்தருள்ளும் முத்தருள்ளும் என் குருவரரான சதாசிவ முனிவரைப்போல் இந்நிலத்தில் ஒருவரும் இல்லை என்பதை நீ அறிவாய்.

விளக்கவுரை :- சேந்தமங்கலத்துக்கு அருகே உள்ள தத்தகிரி குஹாலயத்தில் நெடுங்காலம் ஏகாந்தத் தவத்தில்

இருந்த சுயம்பிரகாச முனிவர் தம் சீடரான சாந்தானந்தரிடம் தம் குருநாதர் பெருமையை விளக்கியுரைக்கின்றார். இளந் தவச்செல்வர் பரமகுருவைப் பார்த்ததில்லை.

மோனத்தால் உயர்ந்தவரா மொழிவதுவோ முத்திதரு
ஞானத்தால் உயர்ந்தவரா நவில்வதுவோ குருவரரை
மானத்தால் உயர்ந்தவரா மதிப்பதுவோ மறைப்பொருளின்
தானத்தால் உயர்ந்தவராச் சாற்றுவதோ வறியேனே. 384

உரை :- அம் மகானை மவுனத்தாலே உயர்ந்தவராக உரைப்பதோ முக்தியைத் தரும் ஞானத்தாலே உயர்ந்தவராக உரைப்பதோ, மானத்தால் உயர்ந்தவராக மதிப்பதோ, வேதப் பொருளின் தானத்தாலே உயர்ந்தவர் என்று உரைப்பதோ நான் அறியேன்.

விளக்கவுரை:- தம் குருவரர் பெருமைகளை ஒவ்வொன்றாக நினைத்து உள்ளம் உருகி உரைக்கின்றார். மவுனத்தாலே ஞானம் வந்தது. ஞானத்தால் மகத்துவம் வந்தது. மகத்துவம் பெற்ற முனிவர் யாம்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்று திரு வுள்ளம் உவந்து சீடருக்கு வேதாந்த அநுபவத்தைத் தெளிவாக உபதேசித்தருளினர். ஆதலால் சுயம்பிரகாசர் தம் குருவரரை மனமாரத் தியானித்துச் சீடருக்கு அவர் சிறப்பு நன்கு விளங்கும் படி இச் சொற்களை உரைக்கிறார். மானம் என்ற சொல் இங்கு மகத்துவம் என்ற பொருளில் ஆளப்பட்டுளது. உலகத்தார் சாமானியமாக நினைக்கும் மான அவமானங்களை இம் மகான் கடந்து நின்றவர்.

அன்றிருந்த சதாசிவனார் அருட்சிறப்பைக் கேட்டறிவோம்
தொன்றிருந்த சுகமுனிபோற் றேன்றினரா லவரென்ப
இன்றிருந்த சதாசிவரை இறைவரென வணங்கியுளேன்
சென்றிருந்த புதுவையிலே சிற்றிருக்கை கொண்டனரே.

உரை :- சில நூற்றுண்டுகளின் முன்பு இவ்வுலகத்திலே சஞ்சரித்த நெரூர்ச் சதாசிவ ப்ரம்மேந்திரர் அருட் சிறப்பை நாம் கர்ண பரம்பரையாற் கேட்டு அறிவோம். பாரத காலத்தில் இருந்த வியாச முனிவர் குமாரரான சுகப் பிரம்மத்தைப் போல உலகில் வந்தவர் அவர் என்று உரைப்பார்கள். இன்று என் கண் கான இருந்த சதாசிவ ப்ரம்மேந்திரரை நான் குருமூர்த்தியாகக் கொண்டு வணங்கியிருக்கிறேன். நான் போய் வந்த புதுக்கோட்டை நகரத்தில் ஒரு சிறிய இடத்தில் அடங்கியிருக்கிருர்.

விளக்கவுரை :- சுகப்பிரம்மம் சதாசிவப் பிரம்மம் என்ற முன்னேய குருமூர்த்திகளை மனக்கண் முன் நிறுத்தித் தம் குருநாதரை அவர்களைப் போன்ற பெரியோர் என்று கருதி உரைக்கின்ருர்.

சமாதிசட்க சம்பத்தில் தலைநின்ற முனிவர்பிரான்
யமாதியெண்மை முறையானே இனிதுபயில் தவச்செல்வர்
நமாதிமொழி யுரையாதே நாரணனு விளங்கியவர்
எமாதிகுரு தத்தகுலம் இயல்பெருக வந்தவரே. 386

உரை :- சமம் முதலிய அறுபெருஞ் செல்வத்தில் தலைமை பூண்டிருந்த முனிவர் பெருமான் இயமம் முதலிய எட்டு அங்கங்களை முறையே பயின்ற யோகேசுவரர் நம முதலிய மொழிகளை எவர் பொருட்டும் உரையாமல் நாராயண மயமாக விளங்கிய மகாத்மா, நம் ஆதி குருவான தத்தாத்திரேய முனிவர் தவக் குலம் நலம்பெற வந்தவர்.

விளக்கவுரை :- சமம், தமம், கருணை, உபாதி திதீக்ஷை முதலிய குணங்களைச் சம்பத்து என்பர். தவம் சிறந்தார்க்கு இயல்பாக அமையும் குணங்கள் இவை. யமம்-இயமம்-இயமம் முதலிய எட்டு-இயமம், நியமம், ஆசனம், பிராணுயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம் சமாதி என்பவை. நம ராமாய,

கிருஷ்ணுய, சிவாய, நாராயணுய முதலிய சொற்களின் பின் வரத்தக்க வாசகம் அத்வைத அனுபவிகளுக்கு இந்த நமவாசகம் அவசியம் இல்லே. நம + ஆதி, எம் + ஆதி எமக்கு முதல்வர் ஆன தத்தகுரு குலம் என்று கூட்டுக.

நன்ஞளி லிங்கடைந்து ஞானநெறி புகுந்துள்ளாய்
முன்ஞளி லிருந்தபல முனிவரையும் அறமறந்தோம்
என்ஞளி லிருந்தவரை என்றுமுல கயர்க்காமை
நின்ஞளி லியன்றபணி நீபுரிய வேண்டுமன்றே. 387

உரை :- நீ ஒரு நல்ல நாளில் இங்கு வந்து ஞான மார்க்கத்திலே புகுந்துள்ளாய். முன்ஞளில் இருந்த பல முனிவர் களையும் நாம் முற்றிலும் மறந்தோம் என் காலத்தில் இருந்த மகாத்மாவை என்றும் உலகம் மறக்காத வண்ணம் உன் காலத்தில் உன்ஞல் இயன்ற திருப்பணியை நீ செய்யவேண்டும்.

விளக்கவுரை :- மஹாமஹத்தன்று சாந்தானந்தர் சுயம்பிரகாசரிடம் சந்யாஸ ஆசிரமத்தைப் பெற்றுக்கொண்டார். மிகவும் இளம் பருவத்தில் வேதாத்தியானம் செய்து பிரம்மசாரி யாகவே வந்து தத்த சம்பிரதாயத்தில் சேர்ந்து கொண்டார். தத்த பரம்பரையில் அநேக மகான்கள் இருந்தனர். அவர்கள் வரலாறுகள் எல்லாம் இன்ஞளில் வழக்கின்றி அழிந்தன. தத்த அவதாரம் என்றே சில சரித்திரங்கள் வழங்குகின்றன. அவை யும் தமிழ் மக்களுக்கு எட்டவில்லே.

பொன்ஞசை பொருந்தாத பொற்பதத்தைப் பூண்டுள்ளாய்
என்ஞசை யெனவொன்று மெனக்கில்லே நன்கறிதி
நின்ஞசை வளர்கவென நெஞ்சாலு நினேயேன்யான்
தன்ஞசை யெலாமறுத்த சற்குருவை மறவாதே. 388

உரை:- பொன்ஞசை சிறிதும் மனத்தில் ஒட்டாத அழகிய வைராக்கிய விரதத்தைப் பூண்டிருக்கிருப் என் ஆசை என்று

எனக்கு ஒன்றும் இல்லை என்பதை அறிவாய். உன் ஆசைகள் வளர வேண்டும் என்று மனத்தாலும் நான் நினைக்கமாட்டேன். நம் மனத்தாசைகளை யெல்லாம் அறுத்த என் சற்குருவை என்றும் மறவாதிருப்பாயாக.

விளக்கவுரை :- பொன், பெண், மண் என்ற மூன்று ஆசைகளில் குருதேவர் பொன்னுசையை எடுத்துரைக்கிருர். சாந்தானந்தர் பெண்ணுசை மண்ணுசைகளால் மயங்கமாட்டார் என்ற உண்மையை நன்கு உணர்ந்த குருதேவர் அவர் இனி நிகழ்த்த வேண்டிய திருப்பணிகளுக்குப் பொன் மிகவும் வேண்டுமாதலால் அப்பொன்னேடு பயில நேரும் போது அவர் பொன்னுசை அற்றவராய் இருப்பார் என்பதை அறிந்தே துணிந்து கூறுகிருர்.

அவரடங்கி யிருக்கின்ற அதிட்டானம் எதிர்காலத்
தவரடங்கி மெய்ப்பயனைச் சாதிக்கும் நிலைக்களமாய்
உவரடங்கி யமுதமருள் ஒப்பற்ற பெருங்கடலாய்ச்
சுவரடங்கி யொடுங்காத தூநிலையா விளங்குவதே. 389

உரை :- சற்குருநாதர் அடங்கியிருக்கின்ற அதிட்டானம் எதிர்காலத்திலே வரும் தவச்செல்வர்கள் தவநிஷ்டையில் அமர்ந்து பிறவிக்குரிய மெய்ப் பயனைச் சாதிக்கும் புண்ணியத் தலமாய் உவர்ப்பு அடங்கி அமுதத்தை அருளும் ஒப்பற்ற பெருங்கடல் ஆகி, நாற் சுவர் எல்லைக்குள் அடங்கி ஒடுங்காத தூய நிலையமாக விளங்குவது ஆம்.

விளக்கவுரை :- சதாசிவ அதிஷ்டானம் எதிர்காலத்திலே மிகவும் சிறப்புறும் என்பதை உள்ளத்தால் உணர்ந்து உரைக்கின்ருர். நிலைக்களம் - நிலையம், இடம், ஸ்தானம். உவர்- உப்புச்சுவை. கடல்-உவர் நீர் உள்ளது. ஞானப் பெருங்கடல் உவரற்ற அமுத மயமானது.

சமாதியமைங் திருக்கின்ற சதுரித்த நிலமேனும்
யமாதிகளா லிணையற்ற வெங்குரவர்க் குரியதென
நமாதிஃதென் றின்றிசைக்கும் நன்மக்கள் நல்குவரேல்
சமாதியிடை யமர்கின்ற சாந்தியெனக் கெளிதாமே. 390

உரை :- குருதேவர் சமாதி அமைந்திருக்கின்ற சதுரித்த சிறு நிலமாவது யோக சாதனங்களால் இணையற்ற எம் குருவரர்க்கு உரியது என்று இந்நிலம் நமது என்று இன்று கூறும் நன்மக்கள் கொடுப்பாராயின் சமாதியில் அமரும் சாந்தி எனக்கு எளிதாகும்.

விளக்கவுரை:- சுயம்பிரகாசர் திருவுள்ளத்தில் எவ்வகைப் பற்றும் எழாமையால் குருதேவர் சமாதி நிலம் பிறர் பூமியாக இருக்கும் வரலாற்றை அறிந்தது முதல் அந் நிலத்தைச் சமாதி கொண்ட குருவரர்க்கே உரியதாக்க வேண்டும் என்று எழுந்த எண்ணத்தைச் சீடரிடம் விளக்குகின்றார். இந்நிலம் புதுக்கோட்டையில் நீதிபதியாக இருந்த பதுமநாப சாஸ்திரியார்க்கு உரியதாய் இருந்தது. சதாசிவர் அடங்கிய காலத்தே அரசாங்கச் செல்வமாய் இருந்தது. அரசினர் மனைகளுக்கென்று இவைகளை ஒதுக்கி விற்றபோது சமாதி இருக்கும் இடம் பதுமநாப சாஸ்திரியார்க்கு வந்தது. அவர் குடும்பத்தார் இன்று நிலத்தை அதிஷ்டானத்துக்கு அளித்து விட்டனர்.

போகநெறி புகுந்தாலும் புண்ணியமே புரிஞருளர்
யோகநெறி யவலம்பித் துடற்கடிமை யாகுநருண்
ஏகநெறி தத்தநெறி யிறங்கியசாந் தானந்த
தேகநெறி மறந்துதவம் செய்யுமுணர் வுனக்குளதே. 391

உரை :- போக மார்க்கத்திலே புகுந்து உலகில் வாழ்ந்தாலும் புண்ணியமே புரியும் நன்மக்கள் பலர் இருக்கின்றார். யோக மார்க்கத்தை மேற்கொண்டும் உடலில் எழும் உணர்ச்சிகளுக்கு அடிமை ஆபவர் பலர் உண்டு. ஏக மார்க்கமான தத்த

சம்பிரதாயத்தில் இறங்கிய சாந்தானந்த, தேகத்தின் போக்கை மறந்து தவம் புரியும் உணர்வு உனக்கு உண்டு.

விளக்கவுரை :- உலக வாழ்க்கையில் உழல்பவர் நெறி போக நெறி, புண்ணிய புருஷர்கள் போகிகளிடையே உளர். யோகிகளாக உள்ள இனத்திலும் உடம்புக்கு அடிமைப்பட்டு அழிந்த பாவிகள் உண்டு. ஏகம்-அத்வைதம். சங்கர சம்பிர தாயத்துக்கும் தத்த சம்பிரதாயத்துக்கும் சிறிது வேற்றுமை உண்டு. தேகம் இழுக்கும் வழி தேக நெறியாம்.

மந்திரத்தா லருந்தவத்தால் மனமடங்கு ஞானத்தால்
தந்திரத்தால் உலகுபுகழ் சாத்திரநுண் ணூலறிவால்
எந்திரத்தால் அறிவுமருள் எழிற்கலையால் இயலாத
தந்திரத்தால் உயருநெறி சாற்றுவலோ செவிக்கொளவே.

உரை :- மந்திர உபதேச முறையாலும் அரியதவ முறை யாலும் மனம் அடங்கும் ஞானத்தாலும் தந்திர சாஸ்திரப் பயிற்சி யாலும் உலகம் புகழும் சாஸ்திரங்களான நுட்பநூல் அறிவாலும் மந்திரங்களாலும் அறிவு மருளுகின்ற அழகுக் கலையாலும் இய லாத உபாயத்தால் உயரும் வழியை உரைப்பேன் கேட்பாயாக.

விளக்கவுரை :- மந்திர சித்தியாலே தெய்வத் திருவருள் பெற்றவர் பலர். ஞானத்தால் மோக்ஷத்தை அணுகுவார் சிலர். சாக்த தந்திரம் போன்ற தாந்திரிக மார்க்கத்தால் அருள்நெறி பற்றுவார் பலர். வேதாந்த சித்தாந்த சாஸ்திர ஞானத்தால் உயர்வு பெற்றவரும் பல மந்திரங்களைத் தகடுகளில் எழுதிச் சக்கரத்துள் அடக்கி அவற்றை உபாசனைக்கு உரியவையாகக் கொண்டு ஆராதிக்கும் மார்க்கம் ஒன்று உண்டு. அவ் வழியாலும் உயர்வு பெற்றார் பலர். சித்திரம் சிற்பங்கள் எழிற் கலைகள். சங்கீதமும் எழிற் கலையே. இவற்றால் இறைவன் அருளைப் பெற்றவரும் உளர். இங்கு ஒரு புது வழி உரைக்கப் படும்.

பயனேயெதிர் நோக்காது பயில்கரும யோகத்தால்
இயனுநலம் ஞானத்தா லெய்துவதற் கிணையாமென்
றுயனுவலும் கீதையிலே உரைத்துள்ளான் கண்ணபிரான்
மயனலிய மனந்தூய்மை வாய்ப்பவஃ துதவியன்றே. 393

உரை :- பயனை எதிர்பார்க்காமலே கருமங்களை இயற்றும் கரும யோகத்தால் அடையும் நன்மை ஞானயோகத்தால் வரும் நன்மைக்கு இணையாகும் என்று மோக்ஷமார்க்கம் பேசும் பகவத் கீதையிலே கிருஷ்ணவதார மூர்த்தி உரைத்தருளியிருக்கிறான். மயக்கம் ஒழிய மனத்தின் தூய்மை பொருந்த அஃது உதவியாகும்.

விளக்கவுரை :- கர்மம் செய்யாமல் ஒருவனும் ஒரு கணமும் இருக்க இயலாது. செய்யும் கருமத்தைச் சிறப்பாகச் செய்து உய்திபெற வழி உளது என்று கண்ணன் அருள்கின்றான் கர்ம யோகம் ஞானயோகம் இரண்டுமே மோக்ஷம் தருபவை இரண்டும் ஒன்றுக்கு ஒன்று இளைத்தவை இல்லை. அர்ஜுன, உனக்குத் தக்கது கர்மயோகமே. இப்பொழுது நீ ஞானயோகத் துக்கு அதிகாரியில்லை. ஆகவே யுத்தம் செய்வது கருமயோக மாகக் கொள்க என்றார்.

மன்னர்பிரான் சனகனைப்போல் மனப்பற்றே யிலாதவரை
அன்னமிதி லாபுரியில் அந்நாளும் காண்கிலமே
இன்னகலி யுகத்தினிலும் இராமகிருஷ்ண சமிதியினர்
உன்னதஞா னியரெனும் உலகநல மியற்றுவரே. 394

உரை :- அரசர் பெருமான் ஆகிய ஜனகனைப் போல மனப்பற்றுச் சிறிதும் இல்லாதவரை அத்தகைய சிறப்புள்ளதான மிதிலா நகரத்தில் அந்நாளிலும் நாம் காணவில்லை. இந்தக் கலியுகத்திலும் இராமகிருஷ்ண பரம ஹம்ஸர் சம்பிரதாயத்தை

யேற்ற துறவிகள் உன்னத ஞான யோகிகளாக இருந்தும் உலக நலத்துக்காகப் பலன் எதிர்பாராத கரும யோகத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

விளக்கவுரை :- சனகன் முதலிய பெருமக்கள் கரும யோகத்தாலேயே கரையேறினர் என்பது கண்ணன் கருத்து. சனகன் மனப்பற்று இல்லாதவன் என்பது " மிதிலாயாம் பிரதிப் தாயாம் நமே தஹதி கிஞ்சன " "மிதிலை எரியுங்கால் என் பொருள் ஒன்றும் எரியவில்லை என்று அவன் கூறிய சொல்லால் விளக்கலாம். அவன் போலக் கர்மயோகியாக வைராக்கிய மூர்த்தியாக விளங்குவதே சிறப்பு என்று உபதேசிக்கிறார்.

செல்வமுளார் உதவியின்றிச் சிறுபணியும் நிகழாமை

நல்வகையில் அடங்கியுள ஞானியரும் அறிகின்றார்

ஒல்வகையி லுயர்பணிக்கே உனையூக்கு மனமுள்ளேன்

செல்வமுளார் சொற்கேட்கும் சிறுமைநினை யணுகாதே 395

உரை :- செல்வம் உள்ளவர்கள் உதவியில்லாமல் அற்ப காரியமும் நடக்க இயலாதிருக்கும் நிலையை நல்ல வகையிலே உலகப் பற்றுக்களை ஒழித்து அடங்கியிருக்கும் ஞானிகளும் அறிகிறார்கள். இயன்ற வகையால் உயர்ந்த திருப்பணிகள் இயற்றும் பொருட்டு உன்னை ஊக்கவே நினைவுகொண்டிருக்கிறேன். செல்வம் உள்ளவர் சொற்களைக் கேட்டு அவர்களுக்கு அடிமையாய் இருக்கும் சிறுமை உன்னை அணுகாது.

விளக்கவுரை :- பரம வைராக்கிய சீலர்களே பரம்பரையாக வந்துள்ள மடங்களின் தலைவர்களும் செல்வர் கைப்பதுமையாக விளங்கும் சிறுமை உலகத்திற் கண்கூடாக இருப்பதால் செல்வர்க்கு அடிமையாகாது திருப்பணி செய்ய உபதேசிக்கிறார்.

கரதலத்தே வரும்பொருளைக் கடவுள்தரும்பெரும்பேறென்று
உரதலத்தே திருமகளை ஒடுக்கியவன் பெயருரைத்துச்
சிரதலத்தே சடைவளரச் சிறுபொருளும் விழையாது
பரதலத்தே மனம்வைத்துப் பணிபுரியத் துணிவாயே. 396

உரை :- கையிற் பெறும் பொருளைக் கடவுள் தரும் பெரும் பேறு என்று ஏற்றுக்கொண்டு திருமார்பிலே திருமகளை மறைத்துக்கொண்டிருக்கும் நாராயணன் திருப்பெயரை உரைத்து தலையிலே சடைவளர்த்து உலகத்தாரிடம் அற்பப் பொருளையும் விரும்பாமல் பரதலமான ப்ரம்மானந்த அனுபவ நிலையில் மனத்தை வைத்துத் திருப்பணி புரியத்துணிவாய்.

விளக்கவுரை :- "கரதலபிக்ஷ: தருதலவாஸ: என்ற சன்யாஸ தர்மத்தை வற்புறுத்துவதும் குருமூர்த்தி கருத்தாம் சீடர் இளந்தவக் கோலத்தராக இருப்பதாலும் அவரைக்கொண்டு சதாசிவர் அதிஷ்டானத் திருப்பணியை நன்கு நிறைவேற்றத் திருவுள்ளம் கொண்டதாலும் பணிபுரியும் அவசரத்திலும் உலக மக்களோடு அவர் பழக வேண்டிய நெறியைத் தெளிவாக உரைக்கிறார். தத்த சம்பிரதாயத்தருக்கு சடைமுடியே அடையாளம். அவதூதத் திருவேடமே தவக்கோலம். கால உசிதமாக் காவி யுடை போர்க்கும் வழக்கம் வந்துள்ளது.

புண்ணியமே பழுத்தநமர் பூமியிலே பண்டெழுந்த
கண்ணியமே மிகுந்தபல கடவுளரி னுலயங்கள்
திண்ணியநன் மனம்பொருந்து சீரியராம் துறவரசர்
எண்ணியவா றியற்றுவித்த இடும்பணியென்று னுணர்வாயே

உரை :- புண்ணியம் பழுத்த நமது பாரத பூமியிலே முன்னாளிலே எழுந்த பெருமை மிக்க பல தேவாலயங்கள் உறுதி யான நல்ல மனம் உள்ள சிறந்த துறவரசர்கள் தாம் நினைத்த வாறு இயற்றிய திருப்பணி யென்றே உணர்வாயாக.

விளக்கவுரை :- நமர்-நம்முன்னேடும் நம் காலத்தவரும் நம்மின் வழித்தோன்றல்களும் ஆகிய மூவகையாளரையும் குறிப்பது. நமர்பூமி-நம்மவர்க்கு உரியதான பாரத பூமி. சீரியர்-சிறப்பு உள்ள பெரியோர். நம் நாட்டுத் தேவாலயங்கள் பண்டைய காலத்தில் அகப்பற்றும் புறப்பற்றும் இல்லாதிருந்த துறவிகளாலே திருப்பணி செய்யப்பெற்றன. துறவிகளிடம் பொறுப்பை விடுவார்கள்.

பெருந்துறையெம் பெருமானைப் பேணுதா ரிபேணுதார்
அருந்துறையஃ தெனவறிதி யங்கமைந்த திருப்பணிகள்
தருந்துறையில் ஒருதுறவி தனிப்பணியே விளங்கியதென்
றிருந்துறையும் அத்தலத்தார் இன்றுமுரைக் கின்றனரே

உரை :- திருப்பெருந்துறையிலே கோவில் கொண்டிருக்கும் எம்பெருமானைப் பேணுதவர் தம்மைப்பேண அறியாதவரே. அத்திருத்தலம் அரிய துறையாம் என்று அறிக. அங்கு அமைந்த திருப்பணிகள் எல்லாம் நன்கு நிகழும் முறையிலே ஒரு துறவரசர் தனிச்சேவையே விளங்கியது என்று இன்றளவும் அத்தலத்தில் இருந்து வாழும் தலத்தார் உரைக்கின்ருர்.

விளக்கவுரை:- மாணிக்கவாசகர் ஞான உபதேசம்பெற்ற மகாக்ஷேத்திரம் திருப்பெருந்துறை ஆகும். இந்நாளில் இதனை ஆவுடையார் கோவில் என்கின்றனர். இத்தலத்தில் அபூர்வமான திருப்பணிகள் நடந்துள்ளன. இவற்றை பரம வைராக்கிய மூர்த்தியான ஒரு துறவியார் நேரில் இருந்து நடத்திக் கூலிக்காரர்களுக்கு அன்றன்று உரிய கூலியை முறைப்படி கொடுத்து வந்தார். அத்தலத்துக்கு வந்த நன்மக்கள் கொடுத்தபொருளும் திருப்பணியிற் சேர்ந்திருக்கலாம். துறவரசர் எங்கிருந்து பணம் பெற்ருர் என்பது தெரியாது.

எண்ணறுமாத் திருப்பணிகள் இயன்றுளந ந்தமிழகத்தே
கண்ணறுமு கருமுணரும் கடவுளருட் செல்வத்தைத்
திண்ணமுற நீபெறவே செப்புமொழி செவிக்கொளுதி
அண்ணல்குரு அதிட்டானம் அறம்வளரப் பணிபுரியே. 399

உரை :- கணக்கிட இயலாத பெருந் திருப்பணிகள் நிகழ்ந்துள்ள நம் தமிழகத்தில் கண்ணில்லாத ஊமைகளும் உணர்ந்தற் கமைந்த கடவுள் திருவருட் செல்வத்தை உறுதியாக நீ பெறவேண்டும் என்றே கூறும் மொழிகளைச் செவிக்கொள்வாயாக. பெருந்தன்மை சிறந்த குருதேவர் அதிஷ்டானத்தின் தருமம் வளரும்படி திருப்பணி புரிவாயாக.

விளக்கவுரை :- கண்ணில்லாதவர் பிறர் சொல்வதையே கேட்டு உண்மை உணரவேண்டும். மூகர்-செவிடாகவும் இருப்பது இயல்பாதலின் அவர் பிறர் கூறியும் உணரார். இத்தகைய குறையுறுப்பினரும் இறைவன் அருளை அறிகின்றார் என்பது அவரவர் வாழ்வை உற்று நோக்கி உணரவேண்டிய உண்மையாம்.

ஈமினென எவரையுநீ யெப்பொழுது மிரவேற்க
யாமினிய திருப்பணியை யேற்கின்றே மென்பவரைப்
போமினென வுரையாது புகழ்பொருந்த விடந்தருக
சீமினென வுரையாதே சீப்பவருக் குதவுகவே. 400

உரை :- எவரையும் நீ எனக்கு இப்பொருள் தருவீர்களாக என்று எப்பொழுதும் இரவாதிருக்கும் முறையைக் கைப்பற்றுக. யாம் இவ்வினிய திருப்பணியை ஏற்றுக்கொள்கின்றோம் என வரும் மெய்யன்பர்களைப் போங்கள் என்று கூறாது அவர்கள் திருப்பணி செய்து புகழ்பெற உதவி புரிவாயாக. நிலத்திலே உள்ள புல், முள் முதலியவற்றைக் களையுங்கள் என்று எவரையும் ஏவாமல் அங்ஙனம் தானே வந்து பணிபுரிவார்க்கு உதவி புரிக.

விளக்கவுரை :- 'ஏற்பது இகழ்ச்சி' என்ற கருத்தைக் குருதேவர் சீடருக்கு வலியுற விளக்குகின்றார். திருப்பணி புரிகின்றேன்-இப்பொருள் தருக என்று கேட்க வரும் துறவியரை உலகம் மதிப்பதில்லை. இன்னது தருக என்று எவரையும்

கேளாதே. இருந்த இடத்தில் இருந்து தாம் கருதிய திருப்பணி நிகழ இறைவனையே துணையாகக் கொண்டுள்ள துறவிகளை நாத்திகரும் மதிப்பர். குப்பை கூட்டுதல் திருவலகிடுதல், புல் செதுக்குதல், பிரகாரங்களில் வளர்ந்த வேற்றுச் செடிகளைப் பிடுங்குதல் முதலிய சிறிய பணிகளும் விருப்பத்தோடு ஒருவர் செய்ய வரவேண்டும். ஏவிச்செய்யும் பணி சிறிது. ஏவாது செய்யும் பணி கருமயோகம் ஆகிறது.

இமயமுதற் குமரியள வெம்பெருமான் கழல்பணிந்தாய்
சமயமுடி பொருளறியுஞ் சாந்தகுணம் படைத்துள்ளாய்
குமரபரு வத்துறுதி கொழிக்கின்ற முகமுள்ளாய்
தமரமறை பயின்றுள்ளாய் தத்தகுலத் தொருமகனே. 401

உரை :- இமாசலம் முதலாகக் கன்னியாகுமரியீருக உள்ள புண்ய பூமியிலே உள்ள பலக்ஷேத்திரங்களில் எம்பெருமான் திருவடிகளைப் பணிந்தாய். மதங்களின் முடிபொருளை அறியத் தக்க சாந்த குணம் படைத்திருக்கிறாய். குமார பருவத்தின் மனவுறுதி கொழிக்கும் முகம் உள்ளாய். முழக்கம் மிக்க வேதங்களையும் ஓதியுள்ளாய். தத்த பரம்பரையில் வந்த ஒரு குமாரனே.

விளக்கவுரை :- தத்த குலத்து ஒரு மகனே என்று விளித்துக் குருதேவர் தம் சீடனுக்கு உரைக்கும் சொற்கள் இவை. எம்பெருமான் என்று கூறியது சிவபெருமான், சிவபெருமான்; திருமால் தத்தாத்திரேயர் இராமன் கிருஷ்ணன் முதலிய பல உருவங்களாலே தோன்றும் ஒரு பரம்பொருளையாம். சொல்வன இனி வரும்.

வேண்டுதல்வேண் டாமையினை விட்டொழித்து மெய்யறிவு
தூண்டுகுரு வரர்கழலிற் சோர்வறியாப் பத்திகொண்டு
நாண்டுறந்த நந்துறவு நன்குபயன் பெறவேண்டின்
யாண்டுநமை அயலவர்தாம் எய்தாமை நலமாமே. 402

உரை:- விருப்பு வெறுப்புக்களை விட்டொழித்துத் தத்துவ ஞானத்தை அகத்தே வளரச் செய்த குருவரர் திருவடிகளிற் சோர்விலாத பரமபக்தி பூண்டு நாணத்தைத் துறந்த நம் துறவு நெறி நன்கு பயன்பெற வேண்டும் என்றால் எங்கும் நம்மை அயலார் நெருங்காதிருப்பது நல்லது.

விளக்கவுரை :- விருப்பு வெறுப்பு ஒழிந்த உள்ளத்திலே மெய்யறிவு ஒளிவிடும். அதனைத் தூண்டும் திருவருட் செயல் குருவரர்க்கு அமைந்தது. சோர்வு அறியாப்பக்தி - குருவரரைக் கண்ட போதும் உபதேசம் பெற்ற போதும் எழுந்த பக்தியைக் காட்டிலும் பன்மடங்கு உயர்ந்த பக்தி அவர் திருமேனி மறைந்த பிறகும் அவர் நினைப்பு ஒன்றே உள்ளத்தில் எஞ்சியிருக்கும் பொழுதும் இருக்கவேண்டும் என்ற யதிதர்மத்தை விளக்கு கின்றது. நெரூர்ச் சதாசிவ ப்ரம்மம் இத்தகைய குருபக்தி உள்ள மகான். நாண் துறந்த துறவு. ஆடை அணிகளை மதியாமல் திகம்பரக் கோலம் பூண்டிருக்கும் தத்த சம்பிரதாய முறை.

நாமொருவர் தமையணுகி நல்குகென விரவாதே
தரமவரே யுவந்துதரும் தனத்தையெலாம் தருமத்தில்
ஆமுறைமை யறிந்துசெல வழிப்போமேல் உலகினவர்
நாமலர நமைப்பழித்தல் நமக்கிலையென் றெண்ணுவமே.

உரை :- நாம் ஒருவரை அணுகி எங்களுக்கு இன்ன பொருளை உதவுங்கள் என்று இரந்து நில்லாமல் அவர் தாமாகவே உவந்து தரும் செல்வத்தை யெல்லாம் தரும கைங்கரியங்களில் தக்கமுறை தெரிந்து செலவழிப்போமே ஆகில் உலகமக்கள் நாமலர வாய் திறந்து நம்மைப் பழிப்பது நமக்கில்லை என்று எண்ணலாம்.

விளக்கவுரை:- தரும கைங்கரியங்களில் ஈடுபடும் எவரும் உலகமக்கள் பழிப்புரை கூறத்தக்க செயல்களைச் செய்யக்கூடாது என்ற பொது நெறியை இங்கே விளக்க வில்லை. சிறப்புநெறி

உரைக்கப்படுகிறது. நம் கடைமையில் நம்மனச்சான்று அறிய நாம் ஒழுங்காக நடந்துகொள்ள வேண்டும். பழிப்புரை வந்தால் மனம் தளரவேண்டாம் என்கிருர்.

செத்துவரே வலக்கரத்தைச் செஞ்சாந்தை யிடக்கரத்தில்
பொத்துவரே முடிமிசையே பூமலையை யேற்றுவரே
வத்துவறி பெரியரென வாழ்த்துவரே கள்வனெனக்
கத்துவரே கல்லெறிந்து காசினிவாழ் மனித்தர்களே 404

உரை :- உலகத்தில் வாழும் மனிதர் (ஒரு வைராக்கிய சம்பன்னன்) வலக்கையைக் கருவிகொண்டு செதுக்குவார். இடக்கரத்தைச்செந்நிறமுள்ள சந்தனக்குழம்பை நிரம்பப்பூசுவர். முடியின் மேல் மலைபோலப் பூக்களை யேற்றுவார். பிரம்ம வஸ்துவை அறிந்த பெரியவர் என்று பலர்முன் வாழ்த்துவர். வேற்றிடம் சென்று கள்வன், வஞ்சகன், கயவன் முதலிய இழி சொற்களைக் கூறிக் கத்துவர். வேறு சிலர் கல்லால் எறிந்து இகழ்வார்.

விளக்கவுரை :- இங்ஙனம் எவர் எது செய்தாலும் மனம் சிறிதும் சலனம் உருது பொறுக்கவேண்டும் என்பது கருத்து. மரியாதை செய்பவர் பலர் இருக்கலாம். இழித்துரைப்பவரும் துன்பம் தருபவரும் பலர் இருக்கலாம். சுயம்பிரகாச பிரம்மேந்திரர் இந்த இருவகை அனுபவமும் தாமே பெற்றவர். ஆதலின் தம் சீடருக்கு இவற்றைப் பொறுக்கும் குணம் வேண்டும் என்று அருள்கிருர்.

இன்பதுன்ப விருமையினை யெண்ணுத மனமிருப்பின்
அன்புடைய ரிவரெனவும் ஆர்வலர்தா மிவரெனவும்
வன்புடைய கடும்பகைஞர் மற்றிவரே யெனவுமெண்ணித்
துன்புறும் நிலைநமது துறவுருவைப் பற்றுவதோ. 405

உரை :- இன்பம் துன்பம் என்ற இரட்டையை எண்ணுத மனம் இருக்குமாயின் அன்புள்ளவர் இவர் என்றும் விருப்பம்

மிக்கவர் இவர் என்றும் வன்மைமிக்க கடும் பகைவர் இவர் என்றும் எண்ணித் துன்பம் அடையும் நிலை நம் துறவுக் கோலத்தைப் பற்றுமோ !

விளக்கவுரை:- குடீசக, பஹூதக, ஹம்ஸ, பரமஹம்ஸ, பரிவ்ராஜக என்ற ஐந்து நிலைகளிலும் சிறந்து ஆசாரிய பீடங்களை அலங்கரிக்கும் மஹாத்மாக்கள் விருப்பு வெறுப்பு உள்ளவராய் இருப்பது போலத் தோன்றுவது உண்டு. உண்மையில் அவர்களுக்கு எவ்வகை விருப்பு வெறுப்பும் இல்லை. அந்த நிலையிலும் மிக்கதான தத்த சந்யாஸ ஆச்ரமத்தில் விருப்பு வெறுப்பு உள்ளத்தே சிறிதும் நுழையக்கூடாது என்பது விதி.

தந்தையெனச் சிலர்புகல்வர் தமையனெனத் தம்பியெனத்
நிந்தையற நினைப்பவரும் நீணிலத்தி லிருப்பாரே
எந்தையெவர் எப்படியே இசைத்தாலும் நமதுமனம்
சந்தையுற வெனத்துணிந்து சாந்தியுறல் நன்றுமே 406

உரை :- சிலர் தந்தை என்று உரைப்பர். தமையன் என்றும் தம்பி என்றும் குற்றம் அற நினைப்பவரும் நீண்ட உலகத்திலே சிலர் இருப்பர். என் அப்பனே, எவர் எப்படி உரைத்தாலும் நம் மனம் இவை யெல்லாம் சந்தையுறவு என்று துணிந்து அமைதிபெற வேண்டும்.

விளக்கவுரை :- இயற்கையுறவான தாய் தந்தை தமையன், தம்பி, தமக்கை, தங்கை, மாமன், மாமி முதலிய எல்லாக் கட்டுக்களையும் அறுத்தெறிந்து ஏகாகியாகித் தண்டம், காவியுடை கமண்டலம் முதலிய பற்றும் வேண்டாது ஒதுக்கி ஏகாந்தத்தில் பிரமானந்த அனுபவம் பெற முயன்றுகொண்டிருக்கும் தத்தசம்பிரதாயத் துறவிக்கு உலகத்திலே நெருங்கிப் பழகுதலால் அழிந்த உறவு மீண்டும் எழுவது போலச் சிலர் உறவு முறை கொண்டாட வருவாராயின் அதனையும் ஒழித்துப் பற்றற்று இருக்கவேண்டும் என்பதே உபதேசமாம்.

குரவரையே தெய்வமெனக் கொள்கவெனு நூல்களெலாம்
பரமகுரு வரர்பெருமை பகர்ச்சியள விலேகண்டாய்
வரமதருள் தத்தமுனி வந்ததென்றே குரவர்தமை
உரமதுற நினைப்பதுண்டே உத்தரநா டுடையவரே. 407

உரை :- குருமூர்த்திகளையே தெய்வமாகக்கொள்க என்று நூல்கள் உரைக்கும் பரம குருவரர் பெருமை நான் சொல்லும் சொல் எல்லையில் இல்லை. வரம் தரும் தத்தாத்ரேய முனிவர் மீண்டும் அவதரித்ததாகவே குருமூர்த்திகளை உததரநாட்டு மக்கள் உறுதியுற நினைப்பதுண்டு.

விளக்கவுரை :- வடமொழியிலும் மகாராட்டிர மொழியிலும் தத்தகுரு பரம்பரையில் வந்த மகான்களைத் தத்தகுரு என்றே மதித்துக் குரு சரித்திரம் இயற்றிய பெரியோர் இருக்கின்றார். குரு சரித்திரம் தமிழிலும் மொழி பெயர்ந்துள்ளது. அதுபோல வேறு பல புண்ணிய சரித்திரங்களும் வடநாட்டில் வழங்குகின்றன. தத்தர் பல அவதாரம் எடுத்தார் என்ற வரலாறு உண்டு.

யாமுமவர்க் கிந்நெறியில் இணையாதேம் என்பதனை
நாமனமு மொருங்கவொரு நன்னிலையை நமக்களித்த
தேமதுர மொழியிசைத்த திருவாக்கின் குரவர்தமை
ஏமமருள் தெய்வமென எண்ணுவதால் விளக்குவமே. 408

உரை :- நாமும் அவ்வுத்தராதிகளுக்கு இந்தப் பக்தி மார்க்கத்தில் இணையாதவர்களே என்பதை வாக்கும் மனமும் ஒன்ற ஒரு ஞான நிலையை நமக்களித்த இனிய மதுரவாக்கியத்தால் உபதேசித்த மந்த்ர மூர்த்திகளான குருதேவர்களை நன்மை அருளும் தெய்வம் என்று எண்ணுவதால் விளக்குவோம்.

விளக்கவுரை :- வடநாட்டார் பக்தி விசேஷத்தால் தத்த குரு பரம்பரையில்வந்த பலரை தத்தமுனியாகவே கருதி வணங்கும் வழக்கம் இருப்பது இன்றும் உண்மையே. தமிழ் நாட்டில்

தத்த சம்பிரதாயம் தோன்றி வளர முக்கியஸ்தராய் இருப்பவர் நாமக்கல்லுக்கு அருகே உள்ள சேந்தமங்கலத்தின் பாங்குஉள்ள தத்தகிரியில் இன்று அடங்கியிருக்கும் சுயம்பிரகாசப் பிரம்மேந்திரரே. அவரே இங்குத் தம் சீடருக்கு இந்நெறி வளர்ச்சிக்குரிய உபாயங்களை உபதேசிக்கிறார். ஆதலின் குரு பக்திவிசேஷத்தைச்சிறப்பித்து உரைக்கிறார்.

சதாசிவமா முனியரசர் தவம்விளங்கு மதிட்டானம்
சதாசிவமா முனிவரருள் தழைத்தோங்கு புதுவையிலே
சதாசிவமாம் பொருள்தெளிசா ந்தானந்த முயற்சியினல்
சதாசிவமாம் வாழ்வெவர்க்கும் தழைப்பவிளங் குறுமன்றே

உரை :- சதாசிவப் பிரம்மேந்திர சரஸ்வதி அவதூத ஸ்வாமிகள் தவம் விளங்கும் அதிஷ்டானம் புராதன சதாசிவப் பிரம்மேந்திரர் திருவருள் தழைத்தோங்கும் புதுக்கோட்டையிலே எப்பொழுதும் பிரம்மானந்த அனுபவம் பெறத்தக்க பொருளைத் தெளிந்த சாந்தானந்த, உன் முயற்சியால் எவர்க்குமென்றும் நலந்தரும் வாழ்வு தழைப்ப விளங்குவதாம்.

விளக்கவுரை :- அதிஷ்டானத்தில் அடங்கிய சதாசிவப் பிரம்மேந்திரர் காளஹஸ்தியில் அருந்தவச் செல்வராக விளங்கிய இராமகிருஷ்ண அவதூத ஸ்வாமிகள் சீடர் ஆவர். நெரூர்ச் சதாசிவப் பிரம்மேந்திரர் பரமசிவேந்திரர் சீடர் ஆவர். சாந்தானந்தர் சதாசிவரைப் பரமகுருவாகப்பெற்ற புண்ணிய சீலர். குருதேவர் திருவருளைப் பெறுகின்றார்.

ஆங்கடைந்து பணிபுரியும் அதிகார நினைப்பற்றும்
தீங்கடைந்து கலங்குபற்றுச் சேராதே நினதகத்து
யாங்கடைந்தும் தத்தகிரி இறையருளை மறவாதே
பாங்கடைந்து செல்கவெனப் பரிவின்விடை யருளினரே.

உரை :- சதாசிவப் பிரம்மேந்திர அதிஷ்டானத்தை அடைந்து திருப்பணி புரியும் அதிகார மமதை இன்றி தீங்கடைந்து கலங்கும் ஆசைகள் மனத்தில் நுழையாது நீ எங்கிருந்தாலும் தத்தகிரியில் உள்ள நம் குல குருவின் திருவருளை மறவாமல் நற்பண்பு அடைந்து போய் வருக என்று அன்போடு விடை தந்தருளினர்.

விளக்கவுரை :- அதிகார நினைப்பு: தேவாலயங்களுக்குப் பல வகையான தருமங்களைச் செய்த மன்னர்கள் வைராக்கிய சம்பன்னர்களை அவற்றை மேற்பார்க்கும்படி நியமித்தனர். இங்ஙனம் திருவேங்கடம் முதல் சேதுசேத்திரம், இராமேசுவரம் வரை அநேக க்ஷேத்திரங்களில் துறவிகள் மேற்பார்வை உண்டு. அவர்கள் தம அதிகாரத்தை அதிகார மமதையின்றி நடத்தவேண்டும் என்பதே முன்பு இங்ஙனம் அமைத்த மன்னர் கருத்து-அக்கருத்தையே இங்கு உரைக்கின்றார்.

குருவருளின் மாண்புணர்ந்த குணமணியாம் சாந்தமுனி
திருவருளின் பெருங்கடலிற் றினைப்பதுவே கருத்தாக
மருவருளின் பெருநிலையம் மறைமுழங்கு திருக்கோயில்
தருவருளின் திறமுணரத் தலைவணங்கும் தலம்வந்தே.

உரை :- குருவரர் திருவருளின் பெருமையை நன்கு உணர்ந்த குணமணியான சாந்தானந்த முனிவர் தெய்வத் திரு வருள் என்ற பெருங்கடலில் மூழ்கி அனுபவிப்பதே கருத்தாக மனிதர் பெறத்தக்க அருளின் பெரிய நிலைக்களமும் வேதம் எப் பொழுதும் முழங்கும் திருக்கோயிலும் பஞ்ச தருக்கள் அருளின் திறத்தை அறியும்படி வந்து தலை வணங்கத்தக்க தலமுமான புதுக்கோட்டைக்கு வந்து.

விளக்கவுரை:- புதுக்கோட்டைக்குள்ள தெய்வத் தன்மைப் பெருமை எத்தனை முறை உரைத்தாலும் உரைத்த தாகாது. சதாசிவ பிரம்மேந்திர அனுக்கிரக சம்பந்தத்தால் இரு

நூற்றம்பது ஆண்டுகள் தருமஸ்தானமாகவே இருந்த புண்ணிய நகரம் ஆதலின் இங்கு புகழப்பட்டது.

காப்பிலதாய் அருந்தவத்தின் காட்டையுணர் சதாசிவனூர்
கோப்புளதாம் சமாதியெனுங் கோயிலக முடையதுவாய்
மாப்புகழால் விளங்குவதாம் வடகுணக்குப் புதுவைநகர்
யாப்புளதாம் அதிட்டானம் எய்திநன்கு பணிந்தனரே. 412

உரை :- க்ாவல் இல்லாததாய், அரிய தவத்தில் கொடுமுடியை உணர்ந்த சதாசிவப் பிரம்மேந்திரர் அடங்கியிருக்கும் சமாதிக் கோயிலைத் தன்னகம் உடையதாய், மிக்க புகழால் விளங்குவதாய் புதுக்கோட்டை நகரத்தின் வடகிழக்குப்பகுதியில் அமைந்ததாய் உள்ள அதிஷ்டானத்தை அடைந்து அங்கு பரமகுரு திருமுன் பணிந்து கைகூப்பி நின்றார்.

விளக்கவுரை :- குருவருள்பெற்று மவுன தவத்தோடு ஏகாகியாகபுதுக்கோட்டைக்குவந்தசாந்தானந்தமுனிவர் சதாசிவ அதிஷ்டானம் இருந்தஇடத்தை அறிந்துகொண்டு தோட்டத்துள் ஏகாந்தமாய் இருந்த அப்புண்ணிய பூமியை அடைந்து பரம குருதேவரையே தரிசிப்பதாகக் கருதி மனம் உருகி ஆனந்தக் கண்ணீர்வரப்பணிந்து நின்றார். ஒருவரையும் ஒன்றும் கேட்டுப் பெறக்கூடாது என்ற குருவாணை உண்மையால் அடங்கியே இங்கு இருக்கவேண்டிய விரதம் உள்ளவராய் இருந்தார்.

ஒருவருமே தமையுணரா வொருமையிலே பற்பலநாள்
வெருவருபே ரதிட்டான மேவிநின்றார் சாந்தமுனி
தருவருகே சார்ந்திருப்பர் தருத்தந்த விலையயில்வர்
பருவரலோ மகிழ்வதுவோ பார்த்தறியா மனத்துடனே. 413

உரை :- ஒருவரும் தம்மை உணராத ஏகாந்த யோகத்தில் எவரும் நெருங்க அஞ்சும் தனிநிலையான அதிஷ்டானத்தில்

சாந்தானந்த முனிவர் தவக்கோலத்தில் இருந்தார். வேப்ப மரத்தின் அருகே சாய்ந்திருப்பார். அம்மரம் தந்த இலைகளையே உணவாகக் கொள்வர் துன்பமோ, இன்பமோ மனத்தால் உணராத நிலையில் இருந்தார்.

விளக்கவுரை :- இச்செய்தி தன்மை நவிற்சியே சிறிதும் உயர்வு நவிற்சி இல்லை. இன்று பலர் சூழத் திருப்பணி மன்னராக விளங்கும் சாந்தானந்தர் அன்று புதுக்கோட்டை அதிஷ்டானத்தில் இரவு பகல் அச்சம் அறியாது ஏகாந்தமாக இருந்தார். எவரும் பிக்ஷைக்கு வரவேற்காமையால் பலநாள் வேப்பிலை உணவு கொண்டார்.

மோனநிலை யுறுதியினுல் முத்தருப தேசநெறி
ஞானநிலை தனிநின்ற நற்பண்பின் முனிவரரைத்
தானதன்ம மதிப்புணர்ந்த தமிழ்ப்புதுவை நகரமக்கள்
தேனமரு மலர்சொரிந்து சித்தமுறப் பணிந்தனரே. 414

உரை :- மவுன நிலையில் உறுதியோடு முக்தரான குருதேவர் உபதேசித்த வழியில் ஞான மார்க்கத்தில் தனியே நிலை பெற்றிருந்த நற்பண்புள்ள சாந்தானந்தர் வந்ததால் தான தருமங்களின் மதிப்பை உணர்ந்த தனித் தமிழரசான புதுக்கோட்டை நகரமக்கள் தேன் ததும்பும் மலர்களைச் சொரிந்து மனமாரப் பணிந்தார்கள்.

விளக்கவுரை :- முன்பு கண்டு பயிலாத அற்புதக்காட்சி ஒன்று அதிஷ்டானத்தில் நிகழ்வதைப் புதுவை மக்கள் உணர்ந்தனர். இளந்துறவி ஒருவர் உணவு தண்ணீர் முதலியவை ஒருவரிடமும் வேண்டாமல் பலநாளாக ஊர்ப் புறத்தே ருத்ர பூமிக்கு அருகே உள்ள அதிஷ்டானத்தில் அச்சம் உணராது தனித்து இருந்தது கண்டு அவரை வணங்கி வழிபட வந்தனர். மவுன விரதம் பூண்டிருந்த முனிவர் அவர்கள் கருத்தை யறியவோ தம் கருத்தை விளக்கவோ முயலாதிருந்தார்.

வாய்வாளா நோன்பகத்தே வரந்தருவான் போலிருந்த
சேய்வேளா மழகுபோலி திருமுனியைப் பணிந்தவன்பர்
பாய்தாளார் பரிபோலும் பற்றுமிகு மனமடக்கி
நாய்போல வேவலவீர் நல்லருளைப் பொழிவீரே. 415

உரை :- மவுன விரதத்திலே நிலைத்து வரந்தரும் பெருமான் போல அமர்ந்திருந்த முருகப் பெருமான் போன்ற அழகு விளங்கும் சாந்தானந்த முனிவரைப் பணிந்த மெய்யன்பர்கள் பாய்கின்ற பாதங்களையுடைய குதிரை போன்ற பற்றுமிக்க மனத்தை அடக்கி அதனை நாய்போல ஏவவல்லீர், நல்லருளைப் பொழிவீராக.

விளக்கவுரை :- வாய் வாளாமை - மவுனம். நோன்பு - விரதம். வரந்தருவான்-சிவபிரான், திருமால் இருமூர்த்திகளுக்கும் பொதுப் பெயர் - பிரமதேவனையும் சிறப்பிக்கத் தக்கது. மனம் குதிரை போல்வது. அது இழுத்தபடி போகவிடாது அடக்கி அமர்ந்தவரை எல்லாரும் பணிவர்.

இத்தலத்தில் அதிட்டானம் இடைவிளங்கச் சிறந்துநிற்க
முத்தசித்தர் அருட்கடலில் மூழ்குதிரு வெமக்கமையச்
சுத்தசித்த முடையபெரியீர் சொற்றருள்க மார்க்கமென
அத்தன்வைத்த தஃதாகில் ஆகுகென்றார் குறிப்பாலே.

உரை :- இந்தப் புண்ணிய பூமியிலே சதாசிவ அதிஷ்டானம் இடம் அகன்று சிறந்து விளங்க முக்தரும் சித்தருமான அம் மகானின் திருவருட்கடலில் மூழ்கும் பெரும்பேறு எங்களுக்கு அமையச் சுத்தமான சித்த விருத்தி உடைய பெரியீர் வழிசொல்லி அருளவேண்டும் என்று வேண்டிக்கொள்ள இறைவன் திருவருள அதுவானால் அங்ஙனமே ஆகுக என்று முனிவர் குறிப்பால் உரைத்தார்.

விளக்கவுரை :- அதிஷ்டானத்தில் மவுன யோகத்தில் இருந்த சாந்தமூர்த்தியைப் பார்த்து அங்கு வந்து பணிந்த அன்பர் வேண்டிய வேண்டுகோள் இது அந்நாளில் அதிஷ் டானத்துக்கு இன்று வருவது போலப் பெருந்திரளான மக்கள் வருவது வழக்கம் இல்லை. வருகின்ற ஒருவர் இருவர் மாலைக் காலத்தே திவ்யநாம சங்கீர்த்தனம் செய்து அதிஷ்டானத்துக் கிணற்றில் அனுஷ்டானம் செய்து போவர். அத்தகைய மக்கள் இம்முனிவரால் திருப்பணி நிகழும் என்று உணர்ந்து இங்ஙனம் வேண்டலால் முனிவர் இறைவன் அருள் என்றார். மவுனவிரதம் ஆதலால் கருத்தை எழுத்தால் உரைத்தார்.

அடங்குசதா சிவமுனிவர் அதிட்டானம் பெறுநிலத்தை
வடங்கெழுமு மூர்த்தியொடு மாதவர்க்கே யளிப்பலென
இடங்கொளுமெய் யறத்துணிபால் எழுபதும நாபர்மகன்
புடம்கொளும்பொன் போன்மனத்தாய் பொருந்தநல்க
[வந்தனனே 417

உரை :- மகா சமாதியிலே அடங்கிய சதாசிவ முனிவர் அதிஷ்டானம் இருந்த தோட்ட நிலத்தை வட விருக்ஷத்தின் கீழ் இருக்கும் தக்ஷிணாமூர்த்தி போன்ற அம்முனிவருக்கே தானமாகத் தருகின்றேன் என்று தன் மனத்திடம் கொண்ட உண்மையான தரும புத்தியின் துணிவாலே கருதிய பதுமநாப சாஸ்திரி குமாரன் பாலசுப்பிரமணிய சாஸ்திரி புடம் இட்ட பொன்போல் இருந்த மனம் கொண்டுள்ள தன் தாயின் சம்மதமும் தெரிந்து பூதானம் செய்ய வந்தார்.

விளக்கவுரை :- பதுமநாப சாஸ்திரிகள் பத்தினியார் தம் குமாரனை முன்னிட்டுக்கொண்டு சேந்தமங்கலம் சுயம்பிரகாசப் பிரம்மேந்திர ஸ்வாமிகளிடமே இக்கருத்தை உரைத்திருந்ததால் அதனை இம் முனிவரிடமும் தெரிவித்துத் தருமத்தை உறுதி செய்தனர்.

முனிவரரின் திருவுருவ முத்திலிங்கம் இருந்தநிலம்
புனிதமிகு தலமாகப் பொருந்துகெனத் தத்தமுனி
இனியதிருப் படிவமொடும் இளையபிள்ளை மூத்தபிள்ளை
கனிவுதரு சிலைப்படிவம் கருத்துறவே செயநினைந்தார். 418

உரை :- சதாசிவ முனிவர் திருவுருவத்தின் பிரதிபிம்பமாகக் கருதத்தக்க முக்திலிங்கம் வீற்றிருந்த அப்புண்ணிய க்ஷேத்திரம் புனித மிக்க திவ்ய ஸ்தலமாக அமைகவென்று தத்தாத்திரேயர் திருப்படிவத்தோடு தண்டாயுதபாணியையும் விக்னேசுவரரையும் கனிவு தரும் கற்சிலைகள் ஆகச் செய்து கொடுக்கச் சிலர் முன் வந்தனர்.

விளக்கவுரை :- சமாதித் தலம் என்ற அளவில் அடங்கியிருந்த நிலத்தில் பரந்த பூமியை அதிஷ்டாதாவுக்கு உரியதாகி விட்டதால் அவர்களுக்குத் தனிமை தராமல் அவர் அடங்கிய இடத்தில் இருக்கத்தக்க விநாயகனும் தண்டபாணியும் தத்த முனியும் விக்கிரக உருவம் பெற்று வரத்தக்க சந்தர்ப்பம் அமைந்தது. இலிங்கமூர்த்தி இருக்கும் இடத்திலே அம்மூர்த்திக்கு மேற்கே தத்தப் பிரதிஷ்டை செய்து தெற்கிலும் வடக்கிலும் விநாயக தண்டபாணிகளை அமர்த்தலாம் என நினைத்தனர் இங்கு வந்த மூர்த்திகள் எல்லாம் ஏகாந்த மூர்த்திகளே. முருகன் இரு தலைவியரைப் பிரிந்த ஞானக் கோலத்தில் இங்கு இருப்பதே பொருத்தம் என்று மெய்யன்பர் கருதினர்.

பொருள்சிறந்த வணிகரொடு பூசுரரும் ஏனையரும்
அருள்சிறந்த சதாசிவனார் அதிட்டானத் திருப்பணிக்குத்
தெருள்சிறந்த வகையானே செயத்தகுவ செய்வதற்கு
மருள்சிறந்த நிலவுலக மயக்கொழிவான் புகுந்தனரே. 419

உரை :- செல்வம் மிக்க பொருள் வணிகர் குலத்தாரோடு வேதம் போற்றிய அந்தணர் குலத்தாரும் மற்றவர்களும்

திருவருள் பொழிவருட் சிறந்த சதாசிவப் பிரம்மேந்திர அவதூத ஸ்வாமிகள் அடங்கிய அதிஷ்டானத்தில் நிகழ்தற்குரிய திருப் பணிக்காக அறிவுமிக்க வழிகளால் தாம் தாம் செய்யத்தக்கசெயல் களைச் செய்வதற்கும் மயக்கமிக்க பூவுலகத்தின் கலக்கம் ஒழியவும் அங்கு வந்தார்.

விளக்கவுரை:- திருப்பணி நிகழ்த்தவேண்டும்என்று சில மெய்யன்பர் கூறினர், சாந்தானந்தரும் அங்ஙனனே இறை வன் அருள், நிகழ்த்துக எனக் குறிப்பித்தார். இங்ஙனம் அதிஷ்டானத்துக்கு நிலம் வந்ததும் அதன் அகப் பணிகள் வளர்வதும் உறுதி என்று உணர்ந்த செல்வச்சீமான்கள் பலர் இந்தப்புண்ணிய கைங்கர்யத்திலே தாம் கலந்துகொள்ள விரும் புவதை அங்கு வந்து ஏகாந்த மூர்த்தியிடம் தெரிவித்தனர்.

முன்றில்வளர் மண்டபத்தை முறையானே சிலர்பொருளால்
ஒன்றியநன் மனமுனிவர் உவப்பினெடு நிறைவேற்றி
வென்றிகழு வேற்பரமன் விநாயகனே வீற்றிருக்க
என்றியலும் திருத்தளிகள் இருபுறமும் இயற்றினரே. 420

உரை :- வாயிற்பக்கம் உள்ள மண்டபத்தை முறைப்படி சில செல்வர் கொடுத்த பொருளால் அடங்கிய நன் மனமுள்ள சாந்தானந்தர் விருப்பத்தோடு நிறைவேற்றி அதன் பிறகு நினைத்த செயலில் வெற்றி தரும் வேல்தாங்கிய முருகனும், விநாயகனும் வீற்றிருக்கவேண்டுமென்று இயலும் திருக் கோயில்களை இருபுறமும் இயற்றினர்.

விளக்கவுரை:- முன்மண்டபம் அழகுற அமைந்தது. சதாசிவ அதிஷ்டானம் சிறிது உருவம் வளரப்பெற்றது. மகா லிங்கத்தின் அருகே தத்தாத்ரேயர் இடம் பெற்றார். இந்தத் திருத்தனி நடுநாயகம் ஆயிற்று- இதற்குத் தெற்கே ஒரு சிறிய தளி எழுந்தது. அங்கு விநாயகன் இடம்பெற்றான். வடக்கே எழுந்த தளியில் தண்டபாணி இடம்பெற்றான். கர்ப்பகிரகம்,

அர்த்தமண்டபம் என்ற இரண்டும் அமையவே பிராகாரம் தோன்றுவதாயிற்று.

அணிபொருந்து விமானத்தை அகற்சியுற வமைத்ததனுல்
துணிபறிந்த மாமுனிவர் தோன்றடங்கு பெருநிலமேல்
நணியிருந்த விமானநிலை நலம்பொருந்தச் சிறப்புறவே
மணியிருந்த மண்டபமும் வளர்ந்ததுகாண் ஒருபுறத்தே.

உரை :- அழகு பொருந்திய புதிய விமானத்தை அகலமாக நன்கு அமைப்பதனுல் வேதத் துணிபை உள்ளத்தே உணர்ந்த பெருமுனிவரான சதாசிவ முனிவர் முன்பு சமாதி அடங்கியிருந்த பெருநிலத்தின் மேல் அமைந்திருந்த விமான நிலையை நன்மை பொருந்தும்படி சிறப்பாக அமையச் செய்த பிறகு மணிகட்டு மண்டபமும் ஒரு புறத்தே வளர்ந்தது.

விளக்கவுரை :- விமானம் பெரியதாயிற்று. கர்ப்பக் கிரகத்துக்கு இடம் விசாலித்தது. அதனுள் தத்தரும் புகுந்து கொண்டார். இருபுறமும் விநாயக சுப்ரமணியர் இடம் பெற்ருர். முன் மண்டபம் சித்திரமாக அமைக்கப்பெற்றது. அதிஷ்டானம் தன்னுரு மாறிக் கோயில் ஆதலால் மணிகட்டு மண்டபம் ஒன்று தோன்ற வேண்டியது ஆயிற்று.

ஆதியிலே அமைந்தவறைக் கருகரொடு தவநிலையம்
சோதியிலே நிலைப்பவர்க்குத் தூய்மைதர வமைந்ததுவே
நீதியிலே யுயர்ந்தமுனி நிலையத்தே நந்தவனம்
வேதியிலே வளர்கனல்போல் விளங்கலரி சுமந்ததுவே

உரை :- ஆதி நாளில் சதாசிவ சமாதியோடு கட்டப்பட்ட சிறிய அறைக்கு அருகே ஒரு தவச்சாலை எப்பொழுதும் சுயஞ் சோதியில் அடங்க விரும்பும் சாந்தானந்தர் பொருட்டுத் தூய்மையுற அமைந்தது. நீதியில் உயர்ந்த சதாசிவப்பிரம்மேந் திரர் அதிஷ்டானத்தில் நந்தவனம் ஒன்று யாகவேதியில் நெய்

பெற்று நன்கு வளரும் வைதிக அக்னிபோலக் கிணற்று நீரால் நன்கு பெருகி வளர்ந்தது. அலரிப்பூக்கள் அங்கு நன்கு வளர்ந்தன.

விளக்கவுரை :- ஆதியில் அமைந்த அறை என்றது சுயம்பிரகாச முனிவர் கும்பாபிஷேகம் செய்ய வந்தபோது அதிஷ்டான கைங்கரியப் பொருள்களை வைத்துக்கொள்ளும் பொருட்டு அமைந்த சிறிய அறையைக் குறிப்பது. இது சமாதிக்கு வடமேற்கில் உள்ளது. இவ்வறையை ஒட்டியே இப்பொழுது புதிய யாகசாலை ஒன்று தோன்றியது. இங்கு சாந்தானந்தர் எப்பொழுதும் மவுன யோகத்தில் இருப்பது வழக்கம் ஆயிற்று. நெய்யால் நெருப்பு வளர்வது. நீரால் அலரிகள் வளர்ந்தன. நிறத்துக்கும் தூய்மைக்கும் பொருத்தமான உவமை.

பொற்புநிலை யிஃதெனவே பொருந்தியதோர் காவணத்தே
அற்புதமாம் சிற்பநில மமைவிக்கும் கருத்தாலே
சொற்பொருளி னுருவாய தூயபுவ னேசுரியின்
விற்பொலியு மோவியத்தை விளக்கமுற வைத்தனரே. 423

உரை :- அழகின் நிலையம் இதுவே யென்று எவரும் கருத அமைந்த ஒரு தென்னல் கீற்றுக் கொட்டகையில் அற்புதமான சிற்பங்களை எதிர் காலத்தில் அமைக்கும் கருத்தோடு சொல் பொருள் என்ற இருமையின் ஒருமையுருவான புவனேசுவரியின் ஒளி விளங்கும் ஓவியம் ஒன்றை விளக்கமுறத் தெற்கு நோக்கி வைத்தார்.

விளக்கவுரை :- மஹாலிங்கம், தத்தாத்திரேயர், தண்டபாணி, விநாயகர் என்ற நான்கு மூர்த்தங்கள் உள்ள திருக்கோயிலில் ஞானச் செல்வம் அருளும் புவனேசுவரியும் அரசு செய்வது பொருத்தம் என்று எண்ணிய சாந்தானந்தர் தஞ்சாவூர் சம்பிரதாயப்படி ஓவியம் அமைக்கும் திறம்பெற்ற, ஒரு கலைஞனை

வருவித்து அவன் வரைந்தளித்த புவனேசுவரியின் பேரோவியத்தைப் பிரதிஷ்டித்தார்.

அவாவறுத்த சதாசிவனுர் அதிட்டானம் புகழ்பொருந்த
அவாவறுத்த சாந்தமுனி அருகிருந்து நோக்கிநிற்க
உவாவிருத்த மிடைவிளங்கு முவமையிலாப் பெருமாட்டி
நவாவருத்த நடுவிலிருந்து ஞானவொளி விளக்கினளே.

உரை :- உலகத்தைப் பற்றும் ஆசைகளை யெல்லாம் வென்று உயர்ந்த சதாசிவப் பிரம்மேந்திரர் அதிஷ்டான நிலையம் புகழ் பொருந்தும்படி ஆசையை ஒழித்த சாந்தானந்த முனிவர் அருகில் இருந்து சாட்சி மாத்திரமாகக் காட்சி கொடுக்க சந்திர மண்டலத்தின் இடையே விளங்கும் உவமை இல்லாத அழகுருக் கொண்ட புவனேசுவரி புதுமையான நிலையில் நடுவில் வீற்றிருந்து ஞான ஒளியை வீசினுள்.

விளக்கவுரை :- சதாசிவர் தமக்குப் பெரிய ஆலயம் வேண்டும் என்றும் உலகம் தம்மைக் கொண்டாடவேண்டுமென்றும் ஒரு நாளும் விரும்பியதில்லை. இத்திருப்பணி செய்த புகழ் எனக்கு வேண்டுமென்று சாந்தானந்தரும் விரும்பியதில்லை. பரம வைராக்கிய மூர்த்தியாக இருந்து பலர் கைங்கரியத்தால் இவ்வதிஷ்டானத்தை ஒரு பெரிய ஆலயம் ஆக்கும் திருப்பணியை நோக்கிக்கொண்டு இருந்தார். புவனேசுவரி ஓவியத்தில் அமர்ந்து தெற்கு நோக்கித் திருவருள் மழை பொழிந்திருந்தாள்.

கருப்பமுறு துயரொழியக் கடுந்தவத்தை மேற்கொண்ட
திருப்பொலிவு ஞானமுனி சிறக்கவமர் அதிட்டானத்
துருப்பொலியும் சிற்பமோடு மோவியநன் கமைந்தபினர்
அருப்பமுறு குடமுழுக்கிற் கமைதிருநாள் நினைந்தனரே.

உரை :- கருப்ப வாசம் செய்யும் துயரம் ஒழியும்படி கடுமையான தவவாழ்வை மேற்கொண்ட அழகு விளங்கும்

ஞானமுனிவரான சதாசிவப்பிரம்மேந்திரர் சிறப்பாக அமர்ந்திருக்கும் அதிஷ்டானத்திலே அழகு விளங்கும் சிற்பங்களும் ஓவியங்களும் நன்ருக அமைந்த பிறகு அருமையான கும்பாபிஷேகத்திற்கு ஏற்ற திருநாளைப்பற்றி நினைத்தார்.

விளக்கவுரை :- சுவர்க்காதி போகங்களைக் கொடுக்கும் சோமயாகாதிகளால் அடையும் வாழ்வு நிலையற்றது என்பதை நன்குணர்ந்து ஞான யக்ஞத்தால் அடையத்தக்க ஆனந்த அனுபவத்துக்குரிய முயற்சியே பழுத்திருந்த சதாசிவர் அதிஷ்டானம் புதுவு நவம் பெற்றது. அருகே புவனேசுவரி இருக்கும் இடமே யாக சாலையாக உதவக் கும்பாபிஷேகம் தொடங்கியது.

வடமிழுக்கும் தேர்சூழும் மாநகரம் புதுக்கோட்டை
மடமிழுக்கு நுழையாதே மவுனநெறி வாழ்வுபெற்ற
படமெழுப்பு மரவணியும் பரன்போன்ற சதாசிவனுர்
குடமுழுக்கு முறையுறவே கோளவுறுநாள் வந்ததுவே.

உரை :- பெரிய தேர் வடம் இழுக்கும் தேர்கள் சூழும் பெரு நகரம் ஆன புதுக்கோட்டை நகரத்தில் அறியாமையென்ற குற்றத்துட் படாமல் மவுன மார்க்கத்தில் நிலைபெற்ற படத்தை எழுப்பும் சர்பத்தை ஆபரணமாகப் பூண்ட பரமேசுவரனை போல் உள்ள சதாசிவப் பிரம்மேந்திரர் அதிஷ்டானத்தில் முறைப்படி கும்பாபிஷேகம் நிகழ்தற்குரிய நாள் வந்தது.

விளக்கவுரை :- சதாசிவ அதிஷ்டானத்தை ஒரு பெரிய தேவாலயம் போல் ஆக்கி ஐந்து மூர்த்திகளை ஆராதிக்கவேண்டிய கர்ப்பக் கிரகங்களை அமைத்து அந்தந்த மூர்த்திகளுக்கு உரிய வழிபாடு முறையே நடக்கவேண்டிய தருமங்களுக்கும் முயற்சி நிகழ்ந்த இந்நாளில் ஒரு நல்ல முகூர்த்தத்தில் கும்பாபிஷேகம் செய்வது தகும் என்று சாந்தானந்த முனிவர் கருதியதால்

மெய்யன்பர் பலர் உதவிகொண்டு நல்ல நாளில் அத்தருமம் நிகழ்வதாயிற்று.

கலைஞர்சிலர் கலைப்பணியாற் கண்டளித்த பெரும்பொருளும்
நிலைநிமிரும் செல்வர்பலர் நேயமுறத் தரும்பொருளும்
குலைநிமிரும் வாழையொடு குலைக்கமுகு தெங்குநிறை
தலைமைபெறு விழாச்சிறப்பு றத்தழைப்பமிக வுதவினவே.

உரை :- சில இசைக் கலைஞர்கள் தம் கலைப்பணியின் மூலம் தேடிக் கொடுத்த பெரும் பொருளும் உயர்ந்த நிலைகளில் உள்ள பெருமக்கள் பலர் அன்போடு தந்த பொருளும் குலைகள் நிமிர்ந்த வாழை மரங்களோடு குலைகள் தூங்கும் கமுகும் தேங்காய் இளநீர்களும் வந்து அலங்கரித்துத் தலைமை பெறும் கும்பாபிஷேகத் திருவிழாவின் சிறப்பு மிகவும் பெருக உதவின.

விளக்கவுரை :- இராமபிரான் தொடங்கிய தர்மகாரியத்துக்குக் கரடியும் குரங்கும் கழுகும், அணிற் பிள்ளையும் உதவியாலுற் போல தமக்கென்று ஒன்றும் தேடக் கருதாத துறவரசர் திருப்பணிக்கு உதவும் செல்வம் வரும் வழிகள் பல ஆயின. இங்ஙனம் இத்திருப்பணிக்கு உதவிய எல்லா நன்மக்கள் பெயரையும் எடுத்துரைக்க இப் புராணத்தில் இடம் பற்ருது.

துன்முகியின் மிதுனமதி தூயகதிர்க் கிழமையிலே
மன்மகிமை ஏழாநாள் வருமேகா தசியத்தம்
பொன்மிகுவார் புகழ்பொருந்தப் புதுவையதிட் டானத்தே
கொன்மலியும் பொருள்விளங்கக் குடமுழுக்கு
நிகழ்ந்ததுவே. 428

உரை :- துர்முகி வருடத்தில் மிதுன மாதத்தில் தூய்மை மிக ஞாயற்றுக்கிழமையில் மகிமை பொருந்திய ஏழாம் நாளில் ஏகாதசி திதியில் ஹஸ்த நக்ஷத்திரத்தில் பொன்னும்

பொருளும் மிக்க செல்வர்கள் புகழ்பெறப் புதுக்கோட்டை அதிஷ்டானத்தில் அபூர்வம் மிகுந்த பொருளை விளக்கத்தக்க கும்பாபிஷேகம் நிகழ்ந்தது.

விளக்கவுரை :- சுயம்பிரகாச முனிவர் நேரில் வந்திருந்து நிகழ்த்தி முதற் கும்பாபிஷேகத்தின் முன் நிகழ்ந்த திருப்பணிகள் சுருக்கம். இரண்டாம் கும்பாபிஷேகத்தின் முன் நிகழ்ந்த திருப்பணிகள் மிகுதி. அன்றும் பலவூர்ப் பொருட் செல்வர் தந்த பொருள் கொண்டே திருப்பணியும் குடமுழுக்கும் நிகழ்ந்தன. அந்த மகான் பிரம்மானந்த அனுபவத்தில் அடங்கிய பிறகு அவர் குருமூர்த்தியின் அதிஷ்டானத்தில் நிகழ்ந்த இக் கும்பாபிஷேகம் பெரிய திருவிழாப்போல நடந்தது. மக்கள் பலரும் ஈடுபட்டனர்.

காந்தமிரும் பிணைக்கவரும் கவின்போலத் தனஞ்சிறந்த
மாந்தர்தமை யதிட்டானம் வந்துபணி செயப்புரிந்த
சாந்தமுனி தவச்சிறப்பைத் தமிழகநன் குணர்ந்ததன்றி
போந்தபிற நாட்டவரும் புகழ்ந்துசென்றார் அகமகிழ்ந்தே.

உரை :- காந்தம் இரும்பைக் கவர்ந்து இழுக்கும் அழகு போலவே தவம் சிறந்த மனிதர்களை இவ்வதிஷ்டானத்துக்கு வந்து திருப்பணி செய்யப் புரிந்த சாந்தானந்த முனிவர் தவச் சிறப்பைத் தமிழ்நாடு முழுதும் நன்றாக உணர்ந்ததேயன்றி அங்கு வந்த பிற நாட்டவரும் மனம் மகிழ்ந்து புகழ்ந்து சென்றார்கள்.

விளக்கவுரை :- காந்தம் இரும்பை இழுப்பது இயற்கை. இரும்பு சடப்பொருள். காந்தமும் சடமே. அதற்கு அந்தச் சக்தி இறைவன் தந்தது. சாந்தானந்தர் தம் தவச் சிறப்பால் பல மக்களை வசீகரித்து இப்பணியில் ஈடுபடச் செய்தது இறைவன் அருள் குருவருள் என்றே கூறத்தக்கது. அடங்கியிருந்த அதிஷ்டானம் பெருமை பெறலாயிற்று

அறம்பலவும் விளக்கமுற அதிட்டானம் அமைந்ததனை
புறம்பரவும் அகம்பரவும் புண்ணியராம் சாந்தமுனி
திறம்பலவும் அருள்புவன தேவியிடம் தெரிவித்தே
நிறம்பலவும் விளக்கொளியால் நிறைவித்தார் பணியினையே.

உரை :- பலவகைத் தருமங்களும் பெற நிகழும்படி இவ் வதிஷ்டானம் அமைந்திருப்பதை எத்தகைய மக்களும் பகிரங்க மாகவும் அந்தரங்கமாகவும் பாராட்டத் தக்க புண்ணிய மூர்த்தி யான சாந்தானந்தர் தமக்கு எல்லாவகைத் திறமைகளையும் அருளும் புவனேசுவரியிடம் தெரிவித்துப் பலநிறங்கள் விளங்கும் புதுமை யொளியால் திருப்பணியைப் பூர்த்தி செய்தார்.

விளக்கவுரை :- சதாசிவ அதிஷ்டானத்தில் லக்ஷார்ச்சனை களும் மகாருத்திரம், கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், சண்டி ஹோமம் முதலிய வேள்விகளும் அடிக்கடி சிறப்புற நிகழப் பெறுவது இங்கு குறிப்பாக உரைக்கப்பட்டது. ஒன்றிலும் பற்றற்ற முனிவர் எல்லாம் இறைவி செயலே என்று புவனேசுவரி திருவுருவத்தைத் தியானத்தில் அமர்த்தி இருப்பது உரைக்கப்பட்டது.

ஒன்பதாவது

புவனேசுவரி திருவருட் படலம்

அறங்கள் விளங்கும் புதுக்கோட்டை
ஆட்சி புரியும் புவனேசி
புறங்கள் அகங்கள் ஒருமையெனப்
பொறுத்த தொழும்பர் முயற்சியினால்
மறங்கள் அகன்று மனித்தரெலாம்
வாழப் புரியும் கருணையினால்
திறங்கள் விளங்கக் கோயில்கொளும்
சிறப்பைச் சிறிது விளக்குவமே. 431

உரை :- பல நூற்றாண்டாகத் தருமங்கள் வளர்ந்து விளங்குகின்ற புதுக்கோட்டை நகரத்தில் இன்று அரசாட்சி நிகழ்த்தியிருக்கும் புவனேசுவரி தேவி புறச் செயல்களும் அகச் செயல்களும் ஒரே தன்மையாக அமையப்பெற்ற அன்பர் முயற்சி யாலே பாவங்கள் ஒழிந்து மனிதர் எல்லாரும் வாழச் செய்யத் திருவுள்ளம் கொண்ட கருணையால் தனது சக்தி வகை எல்லாம் விளங்கக் கோயில் கொள்ளும் சிறப்பை ஒரு சிறிது விளக்கி யுரைப்போம்.

விளக்கவுரை :- அநந்த கோடிப் பிரம்மாண்ட மண்டல நாயகியான பரதேவதை புவனேசுவரி என்ற உண்மையைத் தேவி பாகவதத்தால் நன்கு அறியலாம். தமிழகத்தில் முதல்



ஸ்ரீ ஸத்குரு சாந்தானந்த ஸ்வாமிகள்

முதலாகத் தன் அரசாட்சியை நிறுவத் தக்க தலம் என்று அவ் விறைவி தேர்ந்து கொண்டது தொண்டைமான் மன்னர் தருமத் தாற் சிறந்த புதுக்கோட்டை என்று உரைத்தது.

நீரே யாங்கும் பரம்பிநிற்க
நிமிர்ந்த கமல மலரின்மிசை
யாரே யானென் றிசைப்பதற்கும்
எய்யா திருந்த திசைமுகத்தான்
போரே தொடங்கு மறநினைப்பாற்
போந்த வவுணர் இருவர்தமை
நேரே விழித்து மனங்கலங்கி
நினைவை யிழந்து மயங்கினனே. 432

உரை :- எங்கும் தண்ணீரே பரவியிருக்க அதனிடையே நிமிர்ந்து தோன்றிய ஒரு பெருஞ் செந்தாமரை மலரின் மேல் நான் யார் என்று சொல்வதற்கும் அறியாதிருந்த நான்முகக் கடவுள் போர் தொடங்கும் பாவ நினைப்போடு அங்கு வந்த மதுகைடபர் என்ற அசுரர் இருவரை நேரே விழித்து நோக்கி மனம் கலங்கி நினைவை இழந்து மயங்கிக் கிடந்தான்.

விளக்கவுரை :- இவ்வரலாறு தேவீ பாகத்தில் உள்ளது. மூன்ருவது ஸ்கந்தத்தில் முதல் ஏழு அத்தியாயங்களால் புவனேசுவரி மான்மியம் சுருக்கி உரைக்கப்படுகிறது புதுக்கோட் டையில் சாந்தநாத ஆலயத்திலும், கோகர்ணேச ஆலயத்திலும் இறைவனுக்குத் துணைவியாக அமைந்த இறைவியர் உளர். சந்தைப்பேட்டையில் உள்ள சங்கராலயத்தில் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி வீற்றிருக்கிருள். புவனேசுவரி புதுமையிற் புகுந்தாள் என்பது பலகோடி நாம ருபங்களால் ஆராதிக்கப்பெறும் அவ்விறைவி புவனேசுவரியாகவே வந்து சதாசிவப் பிரம்மேந்திர அதிஷ்டா னத்தில் அமர்ந்ததை உரைப்பது.

மலரின் மூலம் துருவுவதே
மனமா நாள வழிச்சென்றே
உலக மனைத்து மகட்டொடுக்கும்
ஒருவன் உறங்கு நிலைகண்டே
கலக மிகுபே ரவுணர்தமைக்
கடிய வேண்டி நித்திரையாய்
இலகு மிறைவி யருள்வேண்டி
யெழுப்பல் செய்தான் மாலினையே. 433

உரை :- பிரமதேவன் தான் அமர்ந்திருந்த தாமரை மலரின் தோற்றத்தை ஆராய்ந்து உணரும் எண்ணம் கொண்டு அம்மலரின் தண்டின் வழியாகவே கீழே சென்று உலகம் அனைத்தையும் தன் திருவயிற்றுள் ஒடுக்கிக்கொண்டிருக்கும் புருஷோத்தமன் ஒருவன் உறங்கிக் கொண்டிருக்கும் காட்சியைக் கண்டு கலகம் புரிய வந்த மதுகைடபர்களைத் தண்டிக்க வேண்டி நித்திரை உருவத்தில் விளங்கும் பராசக்தியை வணங்கித் திருவருள் வேண்டித் திருமாலை எழுப்பினான்.

விளக்கவுரை :- தேவி பாகவதத்தில் வரும் வரலாறு ஆதலால் மற்ற எல்லாத் தெய்வங்களும் தேவிக்கு அடக்கமாகவே உணர வேண்டும். திருமால் தன் செயலால் உறங்கவில்லை. பராசக்தியே அப்படி அடக்கிவைத்திருந்தாள். அவளே வானில் நின்று தன் ஆணை தந்து உறங்கும் ஒருவனை எழுப்பும் சக்தியை நான்முகனுக்கு அருள்கிறாள்.

விழித்த திருமால் பலகாலம்
விறற்போர் புரிந்து மதுவினோடு
தெழித்த குரல்கொள் கயிடபனை
செழுத்து நான்கு முகத்தானை

அழித்து மெனவே வருமவரை
யழித்த செய்தி யிறைவியிடம்
சுழித்த வலைகொள் கடலிடையே
துணைத்தாள் வணங்கி யுரைத்தனனே. 434

உரை :- விழித்து எழுந்த திருமால் பலகாலம் போர் செய்து மது என்ற அசுரனோடு கடுங்குரல் கொண்ட கயிடபன் என்ற அசுரனையும் சங்கரித்து நான்கு முகம் கொண்ட பிரம தேவனை அழிப்போம் என்று வந்த அவர்களைத் தான் அழித்து விட்ட செய்தியை வான வெளியிற் காட்சி கொடுத்த இறைவி யிடத்தே சுழித்துப் பாயும் அலைகள் நிரம்பிய கடல் இடையிலே அவள் திருவடியிணையை வணங்கி உரைத்தான்.

விளக்கவுரை :- பிரமதேவன் தேவியருள் பெற்று எழுப் பிய திருமால் மதுகைடபரோடு போர் புரிந்தது தன் செயலால் அன்று இறைவி அருளிய அருட் சக்தியாலே ஆகும். கேநோப நிஷத்தில் தேவர் வெற்றிபெறப் பிரம்மமே ஆற்றல் தந்ததாக உரைக்கப்பட்டிருப்பது போல இங்குத் திருமால் போர் வெற்றிக் கும் பரப்பிரம்மமே ஆன பரதேவதை அரிள்புரிந்ததாக உரைக்கப் பட்டுள்ளது. ஆதலால் திருமால் தேவியை வணங்கித் தன் முதற்போர் வெற்றியைப்பற்றி விண்ணப்பித்துக்கொள்வது முறையே. மதுகைடப சம்ஹாரம் போலவே பிறகதைகளும் இங்கு வரும்.

இனிநீ ருலகு படைத்ததன்கண்
இருக்கத் தக்க வுயிர்த்தொகையை
நனிவாழ் வித்து நலம்புரிக
நலங்கள் நுமக்கும் உளவாக
தனியே யிருக்கும் நினைவொழிந்து
தகுவ துணர முயல்காவென
உனியே யுரைத்த விறைவிமுனம்
உடலம் வணங்கி யுரைத்தனரே. 435

உரை :- "இனி நீங்கள் உலகத்தைப் படைத்து அவ்வுலகத்தில் இருக்கத்தக்க உயிர்க் கூட்டங்களை மிகவும் பெருகச் செய்து வாழ்விக்கும் நற்பணி புரிவீராக. உங்களுக்கும் உங்கள் திருப்பணியாலே நன்மைகள் விளைவன ஆகுக. தனியே இருக்கும் எண்ணத்தை விட்டு உலக உயிர்களோடு இசைந்திருந்து தக்கதொன்றை உணர முயல்வீர்களாக" என்று எண்ணியுரைத்த பராசக்தி திருமுன் இருவரும் தம் உடம்பு வணங்க உரைத்தனர்.

விளக்கவுரை :- பராசக்தி புவனேசுவரி இருவருக்கும் உத்யோகம் தருகின்றாள். பிரம்மதேவன் படைப்புத் தொழில் ஏற்று உலகங்களையும் உயிர்களையும் படைக்கவேண்டும் என்றாள். விஷ்ணு அவற்றைக் காக்கவேண்டும் என்றும் அருளிச்செய்தாள். நீர் இடையில் இருக்கும் நிலையில் இருவரும் எத்தொழில் செய்வது, எப்படி செய்வது என்று அறியாமையால் தேவி சக்தி தந்து ஆணையும் பிறப்பிக்கிறாள்.

எவ்வா றுலகம் படைப்பேமோ
எவ்வா றுயிர்கள் புரப்பேமோ
எவ்வா றிளைய நீரகத்தில்
இருக்கப் பெறுமோ உயிரெல்லாம்
ஒவ்வா வாணை பிறப்பித்தாய்
உலகம் புரக்கும் இறைவியென
அவ்வா றுரைத்த மாலயனுக்
கருள்வாள் உலக காரணியே. 436

உரை :- நாங்கள் எவ்வாறு உலகத்தைப் படைப்போம்! எவ்வாறு உயிர்களைக் காப்போம்! இந்தப் பெருங் கடலிடையே உயிர் எல்லாம் எப்படி நிலைபெறும். உலகம் காக்கும் இறைவியே உன் அடிமைகளான எங்களுக்குப் பொருந்தாத ஆணையைப் பிறப்பித்தாய என்று உரைத்த திருமாலுக்கும் நான்முகனுக்கும் உலக காரணியான புவனேசுவரி உரைக்கின்றாள்.

விளக்கவுரை :- தேவீ பாகவத சித்தாந்தப்படி பிரம விஷ்ணுக்களுக்குப் பிறப்புவாழ்வு இறப்பு என்ற நிலைகள் உண்டு. இங்கு தேவியாலே படைக்கப்பட்ட பிரம விஷ்ணுக்கள் அவள் பிறப்பித்த ஆணையை நிறைவேற்றும் ஆற்றல் பெருத நிலையில் அவ்வாற்றல் அவனிடமிருந்தே வரவேண்டும் என்ற நோக்கத்தோடு இவ் விண்ணப்பத்தை வினுவுருவமாகத் தெரிவிக்கின்றனர். இறைவி இட்ட ஆணையை ஒவ்வா ஆணை என்று கூறியது அவள் மேல் குற்றமேற்றும் கருத்தால் அன்று. தம் குறை கூறவே.

சிவனை யிடையே வருவித்துத்
திருமா லயனே சிவனுகும்
உவமை கடந்த மும்மையினை
யுளதாய்ப் புரிந்த பராசக்தி
கவன மீருந்த விமானமொன்று
கடைக்க ணருளாற் படைத்தருளி
இவர்க இதன்மே லெனமும்மை
இறைவர் தமக்கு முரைத்தனளே. 437

உரை :- சிவ பரம்பொருளை இவ்விருவருக்கும் இடையே வருவித்துத் திருமால் பிரமதேவன் சிவபெருமான் என்ற மும்மூர்த்தியை உள்ளதாகச் செய்த பராசக்தி வேகம் மிகுந்த விமானம் ஒன்றையும் தன் கடைக்கண் அருளாலே படைத்து அருளி மும்மூர்த்திகளை நோக்கி இவ் விமானத்தின் மேல் ஏறுக என்று உரைத்தாள்.

விளக்கவுரை:- பிரமதேவனும் நாராயணனும் தேவியால் சிருஷ்டிக்கப் பெற்ற மூர்த்திகள். முக்கண்ணன் இறைவி குணத்தினின்று தோன்றியவன். இவ்வுண்மை மேலே நன்கு விளக்கம் பெறும். இம் மூர்த்திகளுக்கு அற்புதக் காட்சி ஒன்று காட்டிக் கொடுக்கும் நோக்கத்தால் இறைவி அவர்களைத் தானே படைத்த விமானத்தில் ஏற்றுகின்ருள்.

பேச்சுக் கடந்த பிரணவத்தின்
பெருமை தனக்கே யாகரமாய்
நீச்சும் நிலையு மறிவரிய
நீரிற் பிரித்து மூவர்தமை
வீச்சு மிகுந்த விறகுடைய
விமானத் தமர்ந்ததும் புவனேசி
ஒச்சு செங்கோ லரசாட்சி
யுணர்த்த வுள்ளம் கொண்டாளே. 438

உரை :- வாய்ப் பேச்சுக்கு அப்பாற்பட்ட பிரணவத்தின் பெருமைக்கே இருப்பிடமாய் நீந்துவதும் நிலைப்பதும் அறிய இயலாத அப்பெருங்கடலிலிருந்து பிரித்து மும்மூர்த்திகளை வீச்சு மிகுந்த இறகுகளையுடைய தெய்வ விமானத்தில் அமர்த்திய புவனேசி செங்கோல் செலுத்தும் அரசாட்சி நிலையை இனி உரைக்க மனம் கொண்டோம்.

விளக்கவுரை :- மும்மூர்த்திகளுக்குத் தன் ஆட்சி நிலத்தைக் காட்டத் திருவுள்ளம் கொண்ட புவனேசுவரி. பிரணவத்தின் பெருமையே உருவம் ஆனவள். பெருமைப் பொருள் பெற்றது பிரம்மம் என்ற சொல் பிரணவம் வேறு பிரம்மம் வேறு இல்லை. பிரம்மமும் பராசக்தியும் ஒன்றே. ஆதலால் பிரணவத்துக்கு எத்தனை பெருமை உண்டோ அத்தனை பெருமையும் பராசக்தி சந்நிதியில் விளக்கமாம். மஹாப் பிரளயத்தின் நீர் நிற்கவோ, நீந்தவோ எவர்க்கும் இடம் தராதது. விமானம் இறகு கொண்டு பறக்கிறது. அந்த இறகுகள் மிகவும் விரைவில் வீசி இயங்குவதால் விமானம் பறக்கிறது.

பறந்து சென்ற விமானத்தாற்
பரவு புனலைக் கடந்தவவர்
சிறந்து விளங்கு மொருகரைச்
சிறிய விழியால் நோக்கினரே

இறந்த பிறந்த மனித்தரைப்போல்
யாதே யிஃதென் றதிசயித்தார்
கறந்த பாலின் கருணையினுள்
காட்டி மேலும் ஊக்கினளே. 439

உரை :- பறந்துபோன தெய்விக விமானத்தாலே பரவியிருந்த மகாப் பிரளய சலத்தைக் கடந்து சென்ற மும்மூர்த்திகள் தாம் செல்லும் வழியில் சிறந்து விளங்கிய ஒரு நகரைத் தம் சிறிய விழிகளால் நோக்கினர். இறந்தும் பிறந்தும் வாழும் மனிதர் மருள்வது போல இது என்ன காட்சி என்று அதிசயித்தார். கறந்த பால் போன்ற கருணை கொண்ட பராசக்தி மேலும் காட்சிகளைக் காட்டி ஊக்கம் கொடுத்தாள்.

விளக்கவுரை :- பிரம்ம, விஷ்ணுருத்திரர்கள் விமானத்தில் இறைவி யருளாற் போம் பொழுது வழியில் ஒரு பெரிய நகரைக் கண்டனர். கடலுக்குள் இருந்து உலகங்களைப் பாராது பழகியவர் ஆதலின் புதுக்காட்சி கண்டபோது மனிதர்க்கு உண்டாகும் மருட்சி அவர்களுக்கு உண்டாயிற்று. ஆயினும் ஒரு நொடியளவில் அந்தக் காட்சியை அகன்ற விழிகளால் நோக்கி மேற் செல்ல வேண்டிய நிலைமையில் உள்ளனர்.

பரந்து வளர்ந்த நந்தவனம்
பார்த்தார் மூவர் தருநிழலில்
சுரந்து பயத்தை யருள்தேனு
தோன்றக் கண்டார் இந்திரனே
நிரந்த தேவ கணத்தோடு
நிலைத்த வரசின் நிலைகண்டார்
கரந்த தந்தக் காட்சியவர்
கடுக விமானம் பறந்தனரே. 440

உரை :- அம் மூவரும் அங்கு பரந்து வளர்ந்திருந்த நந்தவனம் ஒன்று பார்த்தனர். அந்நந்தவனத்தில் ஐந்தரு நிழலிலே

பாலே நிரம்பச் சுரந்து கொடுக்கும் காமதேனுவைக் கண்டனர். இந்திரன் வரிசையாக இருந்த தேவ கணத்தோடு நிலேத்திருந்த அரசின் நிலேயையும் பார்த்தனர். அக் காட்சி விரைவில் மறைந்தது. அவர் விரைவில் விமானத்திற் பறந்தனர்.

விளக்கவுரை :- இங்கு நந்தவனம் என்று வருணிக்கப் பட்டது குபேரலோகம் இல்லே. இந்திர லோகமே. இந்திர லோகத்தில் இம்மும்மூர்த்திகள் இந்திரன், அக்னி, வருணன், வாயு முதலிய தேவர்களேயும் சுர மகளிரையும் பார்த்தனர். பஞ்சதரு நிழலில் காமதேனு, நந்தினி முதலிய புண்ணிய பசுக் களேக் கண்டனர். விமானம் பறந்துகொண்டே இருக்கும்போது இடையே கண்ட காட்சி ஆதலால் உலகத்தில் இந்த எல்லாப் பொருள்களேயும் பார்த்து மேற்சென்ருர் என்று கூறுதற்கில்லே. இந்த சுவர்க்க லோகத்தில் சஞ்சரித்த தேவர்களும் பிறகும் வளர்ந்திருக்கும் தருக்களும் பிறசெல்வங்களும் மூவர் மனத்தைச் சற்றே மருட்டின.

பிரம னரசு நடத்துகின்ற
 பெரிய வுலகு மடைந்தனரே
பீரம னிவன்யார் யான்யாரே
 பேசா விரைவி யெனவேண்டிப்
பிரம னிரந்து நிற்கையிலே
 பிரிந்து விமானம் பறந்ததுவே
பரம னமரும் கயிலேயினேப்
 பார்த்தார் மூவர் கணத்தினிலே. 441

உரை :- பிரமதேவன் அரசாட்சி நடத்தும் பெரிய உலகத்தை அடைந்தார். மும்மூர்த்திகளுள் ஒருவனுய் விமானத்தில் இருந்த பிரமதேவன். இந்தப் பிரமதேவன் யார், நான் யார், இறைவி தெரிவித் தருள்க, என்று வேண்டிப் பரிந்து இரந்து நிற்கும்போது விமானம் அங்கிருந்து பிரிந்து பறந்து சென்றது.

விளக்கவுரை:- விமானத்தில் வந்த மூவர்க்கு முன் ஒரு பிரமலோகம் தோன்றியது, இந்த உலகம் யாது இங்கு அரசாளும் பிரமன் யார். நானும் பிரமன் தானே, எனக்கு அதிகாரம் எந்த எல்லையில், இந்தப்பிரமன் அதிகாரம் எங்கு நிகழ்வது என்ற சிந்தனை உண்டாகப் பராசக்தி திருமுகமண்டலத்தை நோக்கி உண்மையை உணர்த்தியருளும்படி வேண்டிக்கொண்டனர். இறைவி உணர்த்தத் திருவுள்ளங்கொள்ளாதவள் போல் விமானத்தை மேலும் செலுத்தினாள்.

இடையிற் புலித்தோ லுடுத்தருளி
இணையில் யானைத்தோல் போர்த்துச்
சடையிற் கங்கை பிறையோடு
சருவன் அமர்ந்த காட்சிகண்டார்
நடையிற் சிறந்த விமானத்தே
நன்கு நோக்கு முக்கண்ணன்
சடையிற் துளக்க மெழவிழித்துத்
தாயே யிஃதென் னென்றனனே. 442

உரை:- இடையிற்புலித்தோலை உடுத்திக்கொண்டு இணையற்ற யானைத் தோலைப் போர்வையாகப் போர்தது சடையிலே கங்கையும் இளம் பிறையும் அணிந்து சிவபிரான் அமர்ந்த காட்சியைக்கண்டனர். விரைந்து நடந்த விமானத்தில் இக் காட்சியை நன்ருகப் பார்த்த முக்கண்ணன் தன் சடை குலுங்க விழித்து நோக்கி, தாயே இது என்ன என்று கேட்டான்.

விளக்கவுரை :- சுவர்க்கம் பிரமலோகம் புதுமையிற் கண்டாற் போலச் சிவலோகத்தையும் மும்மூர்த்திகள் காண்கின்றனர் இந்த சிவனுலகத்தில் ஆட்சிபுரியும் சிவனுக்கும் தனக்கும் உருவத்தில் சிறிதும் வேற்றுமை இன்மையால் விமானத்தில் வந்த சிவன் இவன் யார், நான் யார், இரண்டு சிவன் உண்டோ என்று விசாரித்து அறியவேண்டிய நிலையில் இருந்

தான். புவனேசுவரி அவனுக்கும் ஒன்றும் அங்கு உரைக்க வில்லே. சடைத்துளக்கம் - தலேயசைத்து விசாரித்ததால் உண்டாயிற்று, விமானத்தில் இருந்தவாறே முக்கண்ணன் இந்த உலகத்தை நோக்கியது ஒரு நொடியளவே. அடுத்த நொடி அது மேற்சென்றது.

விரைய வியங்கும் விமானத்தால்
மேலும் சென்ருர் அவர்தாமே
கரையில் கருணே விழித்தருளும்
கரிய திருமால் வீற்றிருக்கும்
உரையை யிறந்த வுலகத்தை
உளமே பனிப்பக் கண்டனரால்
தரையோ விண்ணே வெனவறியார்
தவித்தார் அன்ன மூவருமே. 443

உரை :- விரைவாகப் போகும் விமானத்தின் உதவியால் அம் மூவர் மேலும் சென்றனர். கரையற்ற கருணேயால் விழித்து அருளும் கரிய திருமால் வீற்றிருக்கும் சொல்லுக் கடங்காத உலகத்தை மனம் நடுங்க நோக்கினர். இது பூமியோ ஆகாயமோ என்று அறியாமல் அம் மூவரும் தவித்தனர்.

விளக்கவுரை :- மூவரும் மேற் செல்லும் காட்சி விவரிக்கப்படுகிறது. திருமால் அமர்ந்திருக்கும் உலகம் ஒன்று தோன்றியது. மூவருள் ஒருவரான திருமால் இது என்ன புதுமை என்று அதிசயித்தான். அவ்வுலகம் சொல்லுக் கடங்காச் சிறப்போடு விளங்கக் கண்டான். அங்கிருந்த திருமால் கருணேயே விழித்த காட்சி கண்டனர். அக் கருணே கரையற்றது. மூவருக்கும் இப்புதுமை மருட்சி விளேத்தது.

திருப்பாற் கடலே யடைந்திட்டார்
தீபம் ஒன்றை நடுக்கண்டார்
விருப்பாற் சிறந்த பணியாளர்
வேண்டி வேண்டிப் பணிபுரிய

இருப்பாற் சிறந்த பைஞ்சோலை
விடையே காணுக் காட்சியெலாம்
தருப்பாற் பொலிய விடையமைந்த
தழைக்கும் கட்டில் நோக்கினரே. 444

உரை :- விமானத்தில் வந்த மூவரும் திருப்பாற் கடலை அடைந்தனர். அதன் நடுவே ஒரு தீவு இருக்கக் கண்டனர். விருப்பம் சிறந்த திருப்பணிப் பெண்டிர் வேண்டி வேண்டித் தமக்கு அமைந்த பணிகளைப் புரிய இருக்கை சிறந்த பைஞ்சோலை இடையே முன் என்றும் எங்கும் காணாத காட்சியைக் கண்டனர். மரங்கள் இடையே அழகுற அமைந்திருந்த அரசு கட்டிலை நோக்கினர்.

விளக்கவுரை:- விமானம் திருப்பாற் கடலை நெருங்கியது. இப்பாற் கடல் திருமாலுக்கு உறைவிடமான பாற்கடல் என்று நினைக்கத்தக்கதாக இங்கு தோன்றவில்லை. புவனேசுவரி அரசு கட்டிலில் வீற்றிருந்து தன் ஆட்சிக்குள் அடங்கிய புவனங்களை ஆளும் புண்ணிய ஸ்தலம் என்று கூறவேண்டும். பாற்கடல் நடுவில் ஒரு தீவு இருக்கிறது அந்தத் தீவு அபூர்வமான தேவ விருக்ஷங்களால் நிரம்பி எண்ணற்ற பறவைகளும் வண்டுகளும் இன்னிசை பாடத்தக்க புண்ணிய பூமியாக உள்ளது. அந்நிலை நடுவே அரசு கட்டில் ஒன்று நவரத்தின மயமாக விளங்கி நிற்கிறது. அக்கட்டில் அழகில் ஈடுபட்டு இம்மூவரும் அதனையே நோக்கி நின்றனர்.

மணியே பொன்னே மலிந்தமைந்த
வனப்பு விளங்கும் கட்டிலின்மேல்
அணியே அழகு பெறவணிந்தாள்
அழகாம் செம்பட் டாடையினுள்

எணியே கோடி மின்னல்எழுந்
திமைத்தல் போலும் திருவொளியாள்
குணியே காண்மி னெனவிளக்கும்
கோல வுருவக் கோமளேயே. 445

உரை :- நவமணிகளும் கனகமும் மிகுதியாய் அமைந்த அழகு விளங்கிய அரியணைமேல் ஆபரணங்கள் அழகு பெறும் படி தன் திருமேனியிலே அணிந்துகொண்டவளும் அழகிய செம்பட்டு ஆடை அணிந்தவளும் எண்ணி யுரைக்கத்தக்க கோடி மின்னல் எழுந்து ஒரே காலதேசத்தில் ஒளிர்தல் போன்ற திரு வொளி உள்ளவளும் குணங்களுக்கு ஆகரமான தேவதை இது காண்மின்கள் என்று விளக்கும் அழகிய உருவம் உள்ள கோமளை.

விளக்கவுரை :- அரசு கட்டில் பொன் அதிகமோ மணி கள் அதிகமோ என்று கூற இயலாத வண்ணம் அமைந்திருந் தது. சேடிகள் அணிந்த பல அபூர்வ ஆபரணங்களோடு காட்சி கொடுக்கின்றாள். ஆபரணங்கள் தேவி திருமேனி ஒளியால் தாம் அழகும் சிறப்பும்பெற்று விளங்கின. சூரியன் ஒளி, சந்திரன் ஒளியிலும மின்னல் ஒளி அதிகமென்றே தோன்றும். சூரியன் ஒளியாற் கண் கெட்டவர் பலர் இல்லை. மின் ஒளியைக் கவர இயலாது கண்ணே குருடாவது உண்டு. கோடி மின்னல் ஒளி இறைவிக்கு உண்டு.

அபயம் வரதம் இருகரத்தே
அழகாய் விளங்கும் விளக்குமவள்
உபய கரத்தே அங்குசத்தோ
டுயர்ந்த பாசம் ஏற்றியவள்
சபையி லிருந்து ஹ்ரீங்கார
சக்தி பீஜ மொலிக்கின்ற
சபமே மகிழ்ந்த புள்ளினத்தால்
தகவே சூழப் பெற்றவளே. 446

உரை :- வலக்கரத்தே அபய முத்திரையும் இடக்கரத்தே வரத முத்திரையும் விளக்கும் கோலத்தாள். வலக்கரத்தே அங்குசமும் இடக்கரத்தே பாசமும் ஏந்தியிருப்பவள். சபையில் இருந்த வண்ணம் தனக்குரிய மந்திர ராஜமும் சக்தி பீஜமுமான ஹ்ரீங்காரத்தை நல்ல ஒலியோடு இசைக்கின்ற சப்தத்தையே மகிழ்ந்து அரியணை சூழ்ந்து பறக்கும் புள்ளினங்களை உடையவள்.

விளக்கவுரை :- பராசக்தி திருக்கோலம் வருணிக்கப் படுகிறது. நான்கு கரம் உள்ள தேவதை ஆதலின் அக்சரங்களுக்கு உரிய அலங்காரம் உரைக்கப்படுகிறது. உபயகரம்- இரண்டு கை. புவனேசுவரி தியான சுலோகத்தில் பாசம் அங்குசம் வரதம் அபயம் உள்ள கரத்தாள் என்று வருகிறது. பிதாம்பரம் அணிந்தவள் என்று தெளிவாக வருகிறது. பொற்பணி மணிப்பணி பூண்டவள் என்றும் உரைக்கப்படுகிறது. தேவியைச் சூழ்ந்து வரும் பக்ஷிகள் இயல்பாகவே எழுப்பும் ஒலி அவளுக்கு அமைந்த பீஜாக்ஷரமாக அமைகிறது.

பொன்னால் இயன்ற அங்கதமே
    பொலிவு சான்ற கேயூரம்
மின்னா லிணையாம் கிரீடமொடு
    விளங்கு முகத்தாள் புவனேசி
தன்னா லெவையு மியலுமெனுந்
    தன்மை விளக்க வீற்றிருந்தாள்
என்னும் இஃதென் ருங்கடைந்த
    இறைவர் மருண்டு விழித்தனரே. 447

உரை :- பொன்னால் இயன்ற தோள்வளையும், அழகு சிறந்த அரதின மயமான கேயூரமும் மின்னலுக்கு இணையான ஒளியுள்ள திருமுடியும் பூண்டு விளங்கும் முகம் உள்ள புவனேசுவரி எவையுமே தன்னால் இயலும் என்ற தன்மை

விளங்கும்படி அரியணைமேல் அமர்ந்திருந்தாள். இது என்ன காட்சி என்று அங்கு வந்த மும்மூர்த்திகளும் மருண்டு விழித் தார்கள்

விளக்கவுரை :- நவரத்தின கசிதமான கடக, கங்கண, கேயூர அங்கதாதி ஆபரணங்களோடு கிரீடமும் அணிந்து சிம்மா சனத்தில் வீற்றிருக்கும் புவனேசுவரியை நோக்கி மூவரும் மருண்டது ஏன் எனின் இத்தகைய திருவுருவம் கொண்ட இறை வியை இன்றளவும் நாம எங்கும் கண்டதில்லையே. இவள் யார் ? யார் இவள் ? என்று மருண்டனர்.

ஸ்ரீசக் கரமே யுருவாகும்
திருத்தா டங்க மணிந்திருந்தாள்
ஸ்ரீசக் கரமே மலர்போலத்
திகழப் பாத மலர்வைத்தாள்
ஸ்ரீசக் கரமே அனைத்துமெனத்
தெளிய வுணர்த்து திருக்குறிப்பாள்
ஸ்ரீசக் கரமே தேவதையாச்
சிந்திப் பவர்முன் விளங்கினளே. 448

உரை :- ஸ்ரீ சக்கரமே தன் உருவமாகக் கொண்ட அழகு மிக்க தாடங்கம் என்ற காதணி அணிந்திருந்தாள். ஸ்ரீ சக்கரம் ஒரு தாமரை மலர் போல் விளங்க அதன் மேல் தன் பாதமலரை வைத்திருந்தாள். ஸர்வம் ஸ்ரீ சக்ர மயம் என்று தெளிவிக்கும் திருக் குறிப்பு உள்ளவளாகத் தோன்றினாள். ஸ்ரீ சக்கரத்தையே தேவதையாகக் கொண்டு தியானுதி பூஜைகள் செய்யும் மூவர் முன் தோன்றினாள்.

விளக்கவுரை :- விருத்தாகரமான கமலங்களின் நடுவே பல முக்கோணங்களைத் தன்னுள் உடையதாய் நடு நிலத்தில் பிந்துவோடு விளங்கும் ஸ்ரீ சக்கரம், பராசக்தியை அடக்கிவைக் கும் யந்திரம் ஆகும் உபாசகர்கள் தம் இஷ்ட காம்யார்த்த

சித்தியோடு மோக்ஷம் அளவும் அடைந்து பேரின்பம் பெற உதவும் இச் சக்கரத்தைச் சக்கரராஜம் என்பர். சங்கரர் அத்வைத சித்தாந்த ஸ்தாபகரே ஆயினும் ஸ்ரீ சங்கா பூஜையை விரதமாக ஏற்ற மரபை அமைத்துச் சென்றிருக்கிறுர். இச்சக்கர பூஜனை மும்மூர்த்திகள் முறையே செய்தது என்று தேவீ பாகவதம் கூறும். தேவியின் பாதத்தின் கீழ் ஸ்ரீ சக்கரம் இருக்கிறது. ஸ்ரீ சக்கர மத்திய நிலையம் அவள் இருப்பிடம் என்று உரைக்கப் பட்டுள்ளது. தாடங்கத்தில் பொன்னிற் பதித்த மணிகள் இச் சக்கர உருவம் காட்டச்செய்து தேவிக்கு அணியும் பணியைச் சங்கரர் விளக்கினுர்.

அனந்த முகங்கள் உடையாளை
அநந்த விழிகள் உடையாளை
அனந்த கரங்கள் உடையாளை
அனந்த வேதம் தொடர்வாளை
அனந்த நாம தேவதையை
அனந்த சக்தி வழிபடவே
அனந்த கோடி யுககாலம்
அறியா திருந்தார் வணங்கினரே. 449

உரை:- எல்லையற்ற முகங்கள் உள்ளவளை எல்லையில்லாத விழிகள் கொண்டவளை, எல்லையே சொல்ல இயலாத கைகள் உடையவளை, இத்தனை ஆயிரம் என்று அளக்கப்பெருத வேதங்களால் தொடரப்பெற்ற இறைவியைப் பலகோடி நாமம் உள்ள தேவதையைப் பலகோடி சக்திகள் பணிபூண்டிருக்க அனந்த கோடியுக காலம் அறியாது இருந்த மும்மூர்த்திகள் வணங்கினர்.

விளக்கவுரை :- அனந்த வேதங்கள் தேடிப்பிடிக்க இயலாது இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கும் மகிமை இறைவிக்கு உண்டு என்ற உண்மையால் வேதங்கள் இறைவிக்குப் பின் ஓதப் பெறும் திருவுலாக் காட்சி நிகழ்வதைக் காண்கிறேம். தேவதை

என்பது பாற் பொதுச் சொல் ஆயினும் இங்கு பராசக்தியைக் குறிக்க உரிய பெண்பாற் சொல்லாக வந்தது மும்மூர்த்திகளை அறியாதிருந்த தெய்வம் என்றது சிந்திக்கத் தக்கது

இவளே யாலி னிலையின்மேல்
இளமைக் குழலி யுருவத்தே
துவளா நின்ற அளியேற்குச்
சுரக்கும் அமுத மளித்தருளிப்
பவள வாயும் விரல்நுனியும்
பயனைப் பெறுமா றருளியவள்
இவளை வணங்கும் பேறுபெற்றோம்
என்றான் திருமால் இருவருக்கே. 450

உரை :- இவளே ஆலிலையின் மேல் இளஞ் சிறு குழந்தை யுருவத்தில் மகாப் பிரளயத்தில் அங்கு மிங்கும் அலைந்து கொண்டிருந்த எனக்கு நன்கு சுரக்கும் அமுதத்தை உதவி என் பவளவாயும் விரல் நுனியும் பயன்பெறச் செய்த புண்ணியமூர்த்தி ஆவாள். நான் இன்று இவளை வணங்கும் பேறு பெற்றேன் என்று திருமால் தன்னோடிருந்த சிவனையும் பிரமனையும் நோக்கி உரைத்தார்.

விளக்கவுரை :- தேவியைக் கண்டதும் திருமால் தன் நிலை உணர்ந்து மற்ற இருவருக்கும் ஒரு பேருண்மையை விளக்குகின்றான். பிரம ருத்திரர்களை இன்று நான் பெற்றபேறு என்னென்பேன்? இவளே என் தாய். உலகத்துக்கே ஒரு பெருந்தாய். மகாப் பிரளயத்தில் ஒரு ஆலிலை மேல் பாலகனாக நான் மிதந்த கதையை இன்று நினைத்துப் பார்க்கிறேன். நான் என் விரல் சுவைத்துப் பேரின்பம் கண்டேன். அவ்விரற்குள் இருந்து அமுதம் ஊறி வந்ததை உணர்ந்தேன். எவ்வாயும் விரலும் இன்பம் பெற அங்குப் பால் சுரக்க அருளிய பரதேவதை இவளே என்றான்.

அருகே சென்று வணங்குவதற்
கவாவி யெழுந்த மூவரையும்
முருகே யுருவாம் பெருமாட்டி
முறையே பெண்மை பெறுவித்து
வருகோ வருகோ வெனும்குறிப்பை
வழங்க வவரும் அணுகினரால்
உருகா மதுவே பெருகுளத்தோ
டோதா நின்றார் மறைகளையே. 451

உரை :- அருகிலே சென்று வணங்குவதற்கு விரும்பி எழுந்து நடந்த மும்மூர்த்திகளை அழகே உருவமான பெருமாட்டி முறையே பெண்ணுருவம் பெறச் செய்து வருக வருக என்ற திருக்குறிப்பை அருள அவரும் நெருங்கிவந்து உருகாத மதுவைப் பெறும் மனத்தோடு வேதங்களை ஓதா நின்றார்.

விளக்கவுரை :- இறைவி இருக்கும் நிலத்தில் ஆண் பறவையும் வண்டும் பறத்தல் ஆகாது. ஆடவராக இருந்த மூவர் அங்கு வந்ததே அன்றி அவள் வீற்றிருந்த அரியணையை அணுகவும் துணிந்ததால் அவர்களுக்குப் பேரின்பக் காட்சிதரும் திருவருள் நோக்காலே அவர்கள் பெண்ணுருவம் பெற அருளினள்-பெண்ணுருவம் பெற்ற அளவில் தம் நோக்கம் நிறைவேற இடம் அமைந்தது என்று உணர்ந்த மூவரும் மெல்ல அடக்க ஒடுக்கமாக நடந்து அம்பிகையின் திருமுன் வந்தனர். பலகோடி சக்திகள் பணி பூண்டிருந்த நிலத்தே இம்மூவர்பெற்ற அருட்காட்சி.

திருவில் வீசும் திருவடியிற்
சேரப் பெற்ற பாதுகையின்
திருவின் மயங்கி யுரைகுழறச்
சிந்தைகசிய நோக்கி நின்ற

உருவின் மிகுந்த மூவரையும்
உவப்பால் விழித்த புவனேசி
வருமின் அறிந்தோம் நல்வரவு
வழங்கு கின்றே மென்றனளே. 452

உரை :- தெய்விக ஒளி வீசும் திருவடியிலே சேர்ந்திருந்த பாதுகையின் அழகிலே மயங்கி நாக்குழற மனம் கசிய அத் திருவடி மலரையே வைத்த கண் வாங்காது பார்த்து நின்ற உருவத்தால் மிக்க மூவரையும் உவப்போடு கடைக் கணித்தருளிய புவனேசுவரி வருமின்கள், உங்கள் வரவு அறிந்தோம். உங்களுக்கு இவ்வுலகத்துக்கு நல்வரவு தருகின்றேம் என்ருள்.

விளக்கவுரை :- திருவில் - வானவில்லில் தோன்றுவது போன்ற எழுமை விளக்கும் ஒரு பேரொளி. ஒன்றே ஏழாவதும் ஏழும் ஒன்ருவதும் ஒளிக் கலையைப் பயின்றவர்க்கு விளங்கும். இத் திருவில் தேவியின் திருவடியினின்றெழுந்தது என்பதே யன்றிப் பாதுகையினின்றும் எழுந்தது என்றும் கூறலாம். பாதுகை நவரத்ன கசித கனக பாதுகை ஆதலால் இங்ஙனம் கருதுதல் தக்கதே. மூவரும் பெண்மை பெற்றதால் இங்கு உரு வில் மிகுந்தவர் என்று உரைக்கப்பெற்ருர். பலகோடி புவனங் களின் அரசு பூண்டிருக்கும் பேரரசி ஒரு சிறு உலகிலிருந்து வந்த மூவரை அறிதல் அவள் செயற்குப் பெருமையே இல்லை எனினும் வரவேற்பது முறை என்று உரைக்கப்படும்.

சிவந்த துகிலே யணிந்தபலர்
தேவி பணியை யேற்றிருந்தார்
உவந்த நீலத் துகிலணிந்தார்
ஒருகோ டியரங் கிருந்தனரே
நிவந்த பீதாம் பரமணிந்த
நேய மகளிர் பலர்இருந்தார்
தவந்த னுருவா யவரெல்லாம்
தம்மா லியன்ற பணிபுரிந்தார் 453

உரை :- செந்நிற ஆடை அணிந்த பல பெண் மக்கள் தேவி திருப்பணியை யேற்று அங்கு இருந்தார்கள். தமக்கு உவப்பான நீலப் புடவை அணிந்த பாவையர் ஒரு கோடியர் அங்குப் பணிபூண்டிருந்தார். இருவகைகளிலும் உயர்வுபெற்ற பொன்மய ஆடை அணிந்த அன்புமிக்க மகளிர் பலர் அங்குத் திருப்பணி பூண்டிருந்தார். அவர் எல்லாரும் தாம் தாம் முன்பு இயற்றிய தவத்தின் உருவம் ஆகி இறைவி திருமுன் தம்மா லியன்ற பணி புரிந்தார்.

விளக்கவுரை :- இப்பெண்டிர் எல்லாம் சக்திகளே. இவர் எல்லாரும் பராசக்தி போன்ற உருத்தோற்றம் பெற்றவரே. இவர்கள் புரியும் பணிகள் பல வகையாம். பூத்தொடுத்தல், மணப்பொருள் செய்தல், தேன் திரட்டுதல், சந்தனம் அரைத்தல், பால் கொணர்தல், ஆடைகளைக் கலைப்பொருளாக அமைத்தல், அணி பணிகளை முறைப்படி அமைத்தல் இங்ஙனமாகப் பல பணி களும் விருப்பாற் செய்தனர்.

தேவி மலர்ப்பூப் பதத்தினிலே
சிறக்கும் விரலின் நகத்திடையே
மேவி யிருந்த மூவருநல்
விளையாட் டியன்ற துணர்ந்தாரே
பாவி யிருந்த பிரமாண்டம்
பலவும் ஆங்கே தோன்றுவதும்
நாவி னியம்பற் கரியபல
நலமும் விளங்கக் கண்டனரே. 454

உரை :- புவனேசுவரி தேவியின் மலர் போல் அழகிய திருவடியிலே சிறப்புற்றிருக்கும் விரல் நகங்களில் மனம் பதித் திருந்த பெண்ணுருவம் பெற்ற மூவரும் அங்கு ஒரு சிறந்த திரு விளையாட்டு நிகழ்ந்ததை உணர்ந்தனர். பரவி இருந்த பல பிரமாண்டங்கள் அந் நகரங்களில் தோன்றுவதும் நாவால்

உரைப்பதற்கு அரிய வேறு பல நலங்களும் அங்கு விளங்கக் கண்டார்.

விளக்கவுரை :- விரல் நகத்தில் மின்னொளி உண்டு. அவ் வொளியின் ஊடே மூவரும் வைத்த கண் வாங்காது நோக்கி யிருந்தார். அங்கு அரியபல அற்புதக் காட்சிகளைக் கண்டனர். திருமால் அவதாரம் பத்தும் அந்நகரத்தின் ஒளியில் விளங்கிய தாக உரைப்பதும் உண்டு. தாம் இருந்து அரசாளும் பிரமாண்டம் போல அமைந்த வேறு பல பிரமாண்டங்கள் அங்கு உருண்டு ஓடும் அரும்பெருங் காட்சியை மூவரும் கண்டனர். நாம் இருந்த உலகங்களையே நாம் முற்ற அறியாதிருந்தோமே. அவ்வுலகம் போன்ற பல, இங்கு நகங்களுள் உருண்டு ஓடுகின்றனவே! என்ன புதுமை இது! என்று மூவரும் மருண்டு பார்த்தனர்.

அரியி னுலகும் அயனுலகும்
அர னு ருலகு மடங்கிநிற்கும்
பெரிய காட்சி புவனேசி
பிறங்கும் பதத்தின் விரல்நகத்தே
உரிய முறையே நோக்கிஉளம்
உருகும் பெண்மை யுருமூவர்
தெரிய வரிய தெய்வமிது
தெரிந்தேம் தெளிந்தேம் என்றனரே. 455

உரை :- திருமால் உலகமும் நான்முகன் உலகமும் சிவ பிரான் உலகமும் அடங்கியிருக்கும் பெரிய காட்சியையும் புவனேசுவரியின் ஒளி விளங்கும் பாத விரல் நகத்திலே உரிய முறைப்படிப் பார்த்து மனம் உருகிய பெண்மை உருப்பெற்ற மூவரும் இது தெரிதற்கு அரியா தெய்வம் என்ற உண்மையைத் தெரிந்து தெளிந்தோம் என்றனர்.

விளக்கவுரை :- தாம் இருந்து பயின்ற பிரம்ம விஷ்ணு சிவலோகங்களைப் போன்ற பல்லாயிரம் உலகங்கள் அங்கங்கு

இருத்தற்குரிய பிரம, விஷ்ணு சிவ ரூபங்களோடு விரல் நகத்தில் விளங்கக் கண்ட இம் மூவரும் தேவியின் திருவிரல் நகத்துக்கு இத்தனை மான்மியம் உண்டு என்றால் அவள் பெருமை முழுதும் அளந்தறிய நாம் யார், நம் உள்ளத்துக்குத்தான் ஆற்றல் உண்டா-இங்கு கண்ட அற்புதக் காட்சியை நினைக்கவும் சிந்திக்கவும் தியானிக்கவும் நமக்கு மனச்சக்தி உண்டா என்ற சிந்தனைக்கு உள்ளாகி எங்ஙனம் நன்றி கூறுவோம் என்று இருந்தனர்.

திசைய முகற்கு நூறாண்டு
  சென்ற தினைய வேல்வையுளே
இசைய விறைவி பணிவிடையில்
  இருந்த மகளிர் இனத்துள்ளே
நசைய மனத்தார் மூவர்வரும்
  நடலை யெவரு மறிந்தில்லார்
பசைய மனத்துப் பணிபூண்ட
  பாங்கு விளக்க வெளிதன்றே. 456

உரை :- நான்கு திசைகளிலும் முகங்களை உடைய நான்முகப் பெருமானுக்கு இங்ஙனம் நகக் காட்சி கண்டிருக்கும் பொழுதுக்குள் நூறாண்டு சென்றது. புகழ் பூண்ட புவன நாயகியின் திருப்பணி பூண்ட மகளிர் இனத்திலே ஆசைகொண்ட மனத்தார் மூவர் புதியர் வரும் நாடகத்தை எவரும் அறியவில்லை. அப்பெண்டிர் பக்தி பாவத்தோடு தேவி திருமுன் திருப்பணி பூண்டிருந்த அழகை விளக்குவது எளிதன்று.

விளக்கவுரை :- பராங்முக திருஷ்டியே இயல்பாக உள்ள பெண்டிர் பலர் அங்கு இருந்தும் அவருள் ஒருவரேனும் தேவி திருமுன் வந்த புதியவர் மூவரையும் ஏறிட்டு நோக்காது இவர் யார் என்று அறியும் விருப்பமும் தோன்றாது தம் திருப்பணியிலேயே நோக்கம் கொண்டு ‘ ததேகஸ்மரணமாக ’ இருந்தனர்.

தேவி யுலகத்தில் பெண் மக்கள் இருக்கும் நிலையை உணர்ந்த இம் மூவர் பிறவுலகங்களில் தாம் கண்டிருக்கும் பெண் மக்கள் இயல்போடு இவ்வியல்பை ஒப்பு நோக்கி தம் அனுபவத்துக்கும் இதற்கும் வேற்றுமை உண்மை தெளிந்து கொண்டார் என்று கூறலாம்.

நாரா யணனே புவனேசி
நாம ரூப குணசீலம்
பாரா யணமே செய்துமுனம்
பயின்ற வேதத் துதவியினுல்
நேரா யிருந்த அயனரனே
நெஞ்சு ளுருகும் வணம்துதியை
ஆராய் மொழியால் அமைத்துரைத்தாள்
அதனே விளக்க லெளிதன்றே. 457

உரை :- பெண் உருவம் பூண்டு புவனநாயகி திருமுன் நின்ற நாராயணன் புவனேசுவரி நாமம் உருவம் குணம் ஒழுக்கம் முதலிய சிறப்புக்களை முன்பு தினம் தோறும் பாராயணம் செய்து பயின்ற வேத மந்திரங்களின் உதவியால் தன் முன் இருந்த பிரமசிவ மூர்த்திகளான பெண்டிர் கேட்டு மனத்துள் உருகும்படி தேவி துதியை ஆராய்ந்தமைத்த சொற்களால் அமைத்து உரைத்தான். அவன் உரைத்த கருத்தை எல்லாம் நாம் விளங்க உரைத்தல் எளிதன்று.

விளக்கவுரை :- புவனேசுவரி நாமம் பலகோடி அவற்றை அனுதினமும் அனு சந்தானம் செய்து அதன் பயனுக அவள் திருவுருவச் சிறப்பும் குணச்சிறப்பும் ஒழுக்கச் சிறப்பும் உணர்ந்தான் நாராயணன். வேதபாராயணத்தாற் பெற்ற இப் பயனை உள்ளத்தே நினைந்து உருகிய நாராயணன் அருகில் நின்ற இருவரும் கேட்க இறைவி பெருமைகளைத் துதியாக உரைக்கின்றான். பெண்ணுருவத்தில்,

வணக்கம் உரைப்போம் பிரகிருதி
மாதா வாகும் இறைவிக்கே
வணக்கம் புரிவோம் படைத்தருளி
வாழ்வை யருளும் தலைவிக்கே
வணக்கம் நினைப்போம் பிறவியெனும்
வாரி கடக்கும் தோணிக்கே
வணக்கம் இசைப்போம் ஐந்தொழிலும்
வகையே நிகழ்த்து மன்னைக்கே. 458

உரை :- ஸர்வ ஜகத்துக்கும் மூலமான பிரகிருதி என்ற தாய்க்கு வணக்கம் உரைப்போம். உயிர்களையும் உலகங்களையும் படைத்து அருளி வாழ்வு அருளும் தலைவிக்கு வணக்கம் செய்வோம். பிறப்பு என்ற பெருங் கடல் கடக்க உதவும் தோணியான பெருமாட்டிக்கு வணக்கம் நினைப்போம் ஐந்து தொழில்களையும் வகை வகையாக நிகழ்த்தும் அன்னைக்கு வணக்கம் பாடுவோம்.

விளக்கவுரை :- மூலப் பிரகிருதியே உலகம் எல்லாம் தோன்றச் செய்வது. அது இங்கு மாதா என்று அழைக்கப் படுகிறது. புவனேசுவரியே அவள் என்பது திருமால் கருத்து. பிரகிருதியாய் இருந்தால் உலகம் வருமா! படைப்பு அழிப்பு நிகழ வேண்டுமே. அவற்றையும் அவளே செய்கின்ருள். ‘ பஞ்சகிருத்திய பராயணை ’ ஆதலின் படைத்தல். காத்தல், அழித்தல், மயக்கல், அருள் செய்தல் என்ற ஐந்தும் அவள் செயலே. இங்கு வணக்கம் நான்கு வகையில் உரைக்கப்பட்டது காண்க வணக்கம் உரைப்பது வணக்கம் புரிவது வணக்கம் நினைப்பது தனித்தனி இயன்ற திரிகரண வந்தனம். வணக்கம் பாடுதல் அவை மூன்றும் கலந்து ஒத்த வந்தனம் ஆகும்

புதையல் எனவே எவற்றுள்ளும்
புகுந்தாய் நின்னை வணங்குகின்ருேம்
புதையும் பொருளுட் பொருளாகும்
பொருளே நின்னை வணங்குகின்ருேம்

இதயத் தினியுள் ஒளிர்கின்ற
இறைவி நின்னை வணங்குகின்றோம்
எதையும் படைப்பாய் எனினெம்மை
ஈன்று யன்றோ வணங்குகின்றோம். 459

உரை :- எப்பொருள் அகத்திலும் புதை பொருளாகப் புகுந்து மறைந்து உறையும் உன்னை வணங்குகின்றோம். அப் புதை பொருளுக்கும் உட்பொருளாக விளங்கும் பொருளே உன்னை வணங்குகின்றோம். இதயம் என்ற கோயிலுள் விளங்குகின்ற இறைவியே உன்னை வணங்குகின்றோம். நீ எதையும் படைப் பாய் என்றால் எம்மைப் பெற்ற தாய் அல்லையோ ஆகவே மக்கள் என்ற உரிமையால் வணங்குகின்றோம்.

விளக்கவுரை:- முதலடியிற் சொல்லிய கருத்துக்கும் இரண்டாம் அடியில் உள்ள கருத்துக்கும் மிகவும் நுட்பமான வேற்றுமை உண்டு. இறைவி எவற்றுள்ளும் புதையலாய் விளங்குவாள் என்பது முதற் கருத்து. உலகப் பொருளுள் எல்லாம் புதைந்து கிடக்கும் பொருள் ஒன்று உண்டு என்பது. அதனுட் புதைந்த பொருள் இறைவி என்று இரண்டாம் அடி கூறுகிறது. எல்லாம் படைத்தவள் எமக்கும் தாய் என்பது உரிமை காட்டும்.

இறைவி நினது திருவருளால்
எல்லா வுலகம் இன்பமுறும்
இறைவி நினது பேரொளியால்
எங்கும் யாவும் ஒளிபெறுமால்
இறைவி பதினு றேழென்றே
இயம்பு மெய்ம்மைத் தத்துவநீ
இறைவி வேத மெலாமறிந்தேன்
என்பா னின்னை யுணர்வானே. 460

உரை :- இறைவி உனது திருவருளால் எல்லா உலகங்களும் அங்கங்கு வாழும் தலைவரும் உயிர்களும் இன்பம் பெறுவது உண்மையாம். இறைவியே உன் திருமேனிப் பேரொளியாலே எல்லா உலகங்களிலும் எல்லா உயிர்களும் ஒளிபெறுகின்றன. இறைவியே பதினாறு என்றும் ஏழு என்றும் உரைக்கும் உண்மையான தத்துவம் நீயே ஆவாய். இறைவியே வேதம் எல்லாம் ஓதி அம்மந்திரப்பொருள் எல்லாம் உணர்ந்தேன் என்பவன் உன்னை அறிவானா?

விளக்கவுரை :- உலக உயிர் எல்லாம் தாம் தாம் இருக்கும் நிலையில் இன்பம் வேண்டும். அவ்வவ்வுயிர்க்கேற்ற இன்பத்தை அளந்து அருள்வது இறைவி திருவருளே. உலகம் எங்கும் காணப்படும் ஒளி எல்லாம் இறைவி பரப்பிய ஒளியே. பதினாறு. ஏழு என்ற எண்கள் தேவி தத்துவத்தை விளக்கும் குறிப்பு மொழிகள். பதினாறு என்பது கலைத்தொகை விளக்குவது. ஏழு என்பது ஒளித்திறன் உரைப்பது. பதினாறு கலையும் ஒளி ஏழும் ஆகிய தத்துவம் தேவியே என்று உரைத்ததாக உணரலாம். அனந்த வேத அதீதர் எவரும் இல்லை. பாரத்துவாசர் அம்முயற்சியில் மூன்று பிறப்பு எடுத்தும் தோற்றார். ஆகவே இறைவி அறியள்.

மும்மைப் பதவிக் குரியேம்யாம்
முதன்மை யுடையேம் என்றெண்ணி
அம்மைக் கருகிற் பெருமிதத்தால்
அகந்தை மமதை யொடுபுகுந்தேம்
எம்மைத் திருத்தும் திருவருளால்
இனைய காட்சி யளித்தனையே
செம்மைத் திறத்து நினைப்போன்று
சிறந்தா ருளரோ அம்பிகையே. 461

உரை:- நாம் திருமூர்த்தி பதவிக்கு உரியோம். அதனால் முதன்மை உடையோம் என்று எண்ணி இறைவி திருமுன்பு

பெருமிதத்தோடு அகந்தை, மமதை தோன்ற வந்தோம். எம்மை நல்வழிப் படுத்துப் திருவருளாலே எமக்கு இத்தகைய அருட் காட்சி அளித்தாயே அம்பிகையே, செம்மைத் தன்மையிலே உன்னைப் போன்று சிறந்தவர் எவரேனும் உளரோ!

விளக்கவுரை :- மும்மைப் பதவி-சத்யலோக வைகுண்ட கைலாச அதிகார பதவி. அகந்தை - நான் என்ற நினைப்பு. மமதை-எனது என்ற நினைப்பு. இதனை நான் செய்தேன் என்பது அகந்தை. இது என் செயல் என்பதும் இவை என் கீழ்ப் பட்டவை என்பதும் மமதை. செம்மைத்திறம்-நியாயம் பிறழாத ஆட்சித்திறம். செங்கோல் அரசர் செயல் போன்றது. அளித்த காட்சி மூவர் சிறுமையும் தேவி பெருமையும் தெளிவாக்கியது.

அன்னாய் நினைச்சூழ் புவனங்கள்
அனந்த மென்ப தறிந்தேமால்
என்னால் அரனால் அயனாலே
எண்ணற் கரிய நிலந்தோறும்
மன்னா நிற்கும் மூர்த்தியரை
மதிக்க வறியா மையலினெம்
நின்னால் நினது திருவருளால்
நேர்ந்து கண்டேம் சிலசிலவே. 462

உரை :- தாயே உன்னைச் சூழ்ந்துவரும் புவனங்கள் எல்லையற்றவை என்ற உண்மையை அறிந்தோம். என்னாலும் சிவனாலும் பிரம்மனாலும் எண்ணற்கரிய உலகம் தோறும் உன் ஆணைப்படி அதிகார நிலையில் இருக்கும் மூர்த்திகளை இத்துணையர் என்று மதித்து உணர இயலாத மயக்கம் உடையேம். உன் செயலால் உன் திருவருளால் நேர் வந்து சிலகாட்சிகளைக் கண்டோம்.

விளக்கவுரை:- புவனேசுவரி என்ற சொல்லின் பொருளைத் திருமால் இங்கு தெளிவாக உரைக்கிறார். பலகோடி புவனங்களை

இறைவி ஆண்டருளும் உண்மையை அறிந்ததே அன்றி அப் புவனங்களில் பிரம்மா விஷ்ணு ருத்ரர்கள் தனித்தனியே இருப் பதையும் உணர்ந்து உள்ளம் உருகி உரைக்கும் துதி இது. தம்மால் இயலாத செயல் இது என்பதை நன்கறிந்த நாராயணன் தானே பெண்மை பெற்றுள்ள பெண்ணுருத்தெய்வம். அருகில் நிற்கும் பிரமப்பெண், சிவப்பெண் தெளிய இக்கருத்தை விளக் கியது இங்கு மிகவும் பொருத்தமே. விமானத்தைப் படைத்து அதன்மேல் அமர்த்தி உலகங்களில் ஒரு பகுதியை விளக்கிய திருவருளைப் பாராட்டி உரைத்த மொழி இது.

நின்ன தருளின் திருவுருவம்
நீங்கா விதயம் பெறுவேனே
நின்ன துரிய திருநாமம்
நிலவத் தகுமால் நாவகத்தே
தின்ன பதார விந்தவிணை
நீங்கா துறைக விழித்தலத்தே
நின்ன துளத்தே யடிமையெனை
நினைக்கப் பெறும்பே றுறுவேனே 463

உரை :- தாயே உனது அருள் மயமான திருவுருவம் என் றும் நீங்காதிருக்கும் இதயத்தை நான் பெறுவேனாக. உனது உரிமைத் திருநாமம் என் நாவினிடம் என்றும் நிலைபெற வேண் டும். உன்னுடைய உபய பாதாரவிந்தம் என் விழியிடம் நீங் காது இருப்பன ஆகுக. உன் திருவுளத்தில் அடிமையான என்னை நினைக்கும் பேறு பெறுவேனாக.

விளக்கவுரை :- திருமால் மனம் உருகி வேண்டிய வேண்டுகோள் இது. இவ்வேண்டுகோளில் நான்கு பாதங்கள் உள்ளன. முதற் பாதத்தில் திருவுருவம் நீங்காத இதயம். இரண்டாம் பாதத்தில் நாமோச்சாரணம், இடைவிடாத நாத் தலம். மூன்றும் பாதத்தில் பாதாரவிந்தம், நீங்காத நேத்திரத்

துவயம் வேண்டப்பட்டன. நான்காம் பாதம் இறைவிக்குத் தலைமை தருகிறது.

படைப்புத் தொழிலை யயன்பூண்டான்
பரித்துப் புரக்கும் தொழில்பூண்டேன்
துடைப்புத் தொழிலை யரன்பூண்டான்
தூயை யிறைவி நின்னருளால்
இடப்புக் கிருந்து மூவருக்கும்
இயலும் ஆற்றல் எலாமளிக்கும்
தடைப்புக் கிளையாத் தலைமையினுய்
சருவ சக்தி நீயலையோ ? 464

உரை :- படைக்கும் பணியைப் பிரமதேவன் பூண்டான். உயிர் வகைகளைத் தாங்கிக் காப்பாற்றும் பணியை நரன் ஏற்றுக் கொண்டேன். துடைத் தழிக்கும் தொழிலை முக்கண்ணன் மேற் கொண்டிருக்கிருன்-பரிசுத்த ரூபிணியான தேவி திருவருளால் எம் இடையே புகுந்து மறைந்து இருந்து மூவருக்கும் வேண்டிய சக்தியை எல்லாம் அளிக்கும் தடையிற் புகுந்து இளையாத தலைமையுடையாய், நீயே சர்வ சக்தி அல்லையோ ?

விளக்கவுரை :- படைத்தல் காத்தல் அழித்தல் என்ற உலக வாழ்வுக்கு வேண்டிய தொழில் மூன்றையும் பூண்டவர் அயன், அரி. அரன் என்பதைப் புராணம் எல்லாம் உரைத்திருப் பது உண்மையே யாயினும் அப்பதவி யேற்ற மூவருக்கும் அவரவர் இயற்றுதற்கு உரிய தொழிலுக்கு வேண்டிய சக்தியை அளித்து அவர்க்குள் இருந்து அவ்வத் தொழிலும் முறைப்படி நிகழ்தற்குஉரியஅமைப்பை அமைப்பவள் புவனேசுவரியே என்ற உண்மையை தேவி பாகவதம் திருமால் வாக்கால் வெளியிடு கின்றது. சக்தியைப் பரவஸ்துவாகக் கருதும் மெய்யன்பர் சித்தாந்தம் இது.

மாயோன் பகர்ந்த இறைவிதுதி
மனத்தாற் சுவைத்த முக்கண்ணன்
ஆயோன் இறைவி பதநோக்கி
அருளின் சிறப்பை வழுத்துகின்ருன்
நீயே படைத்தாய் அயனரியை
நினது குணத்தால் யான்வந்தேன்
தாயே நின்னே யறியாதார்
தம்மை யறிந்தா ராவதுண்டோ? 465

உரை :- திருமால் கூறிய புவனேசுவரி துதியைச் செவி யாரக் கேட்டு மனத்தால் நன்கு சுவைத்த முக்கண்ணன் ஆன பரமன் இறைவி திருவடிகளே நோக்கி அவள் திருவருட் சிறப் பைத் தான் அறிந்தவாறு விளக்குகின்ருன். நீயே பிரம்ம விஷ்ணுக்களேப் படைத்துப் பதவியில் வைத்தாய. உன் சத் குணத்தின் உருவமாக நான் வந்தேன். தாயே உன்னே அறியாதவர் தம்மை அறிந்தவர் ஆவது உண்டோ?

விளக்கவுரை :- தேவீ பாகவதத்தில் மூவரும் இறைவி யைத் துதித்த துதிகள் மிகவும் அதிகமாக உள்ளன. அவற்றை மிகவும் சுருக்கி இங்குப் புவனேசுவரி மகாத்மியம் விளங்கும் வண்ணம் அமைத்துள்ளது. சிவபெருமான் துதிக்கும் வாக்கி யங்களில் அரிய கருத்துக்கள் பல பொதிந்திருக்கின்றன.

அன்ருய் நினது திருவடிக்கீழ்
அடங்கிக் கிடக்கும் துகள்சிறிதே
பொன்ருய் எமது சிரத்தேற்றிப்
பூசை புரிந்த வதனுலே
மண்ணு நின்ற லெனக்காணும்
வாழ்க்கை யுலகை வளர்க்கின்ரேம்
மின்னுல் அணுகற் கரியநினே
வேதம் புகழ்ந்த தெத்தனேயே 466

உரை :- தாயே உன் திருவடி மலர்க்கீழ் அடங்கிக் கிடக்கும் தூளியில் ஒரு சிறிது எடுத்து அதனைப் பொன்போற் கருதி எம் தலைமேல் வைத்துப் பூஜை செய்த புண்ணியத்தால் இருப்பதாகத் தோன்றும் வாழ்க்கையுள்ள உலகவுயிர்களை நாங்கள் வளர்க்கின்றோம். மின்னலால் அணுகுதற்கு அரிய ஒளியுருவமாக உள்ள உன்னை வேதம் எத்தனை வகையாகப் புகழ்ந்துள்ளது.

விளக்கவுரை :- புவனேசுவரி கன்னிகை உருவம் பூண்ட பரதேவதை. பிரம வஸ்துவும் புவனேசுவரியும் அபேதமே. ஆதலால் பரமேசுவரன் அவள் பாதங்களை வணங்கித் துதி கூறுகின்றான். நிர்குணப் பிரம்மம், சகுணப் பிரம்மம் என்ற விவகாரம் வேதாந்தத்தில் உண்டு. நிர்குணப் பிரம்மமே பரப் பிரம்மம், பராகஷ்டை, பராகதி அதுவே இங்குப் பராசக்தியாக உரைக்கப்படுகிறது. அதன்முன் சகுணப் பிரம்மத்தின் மூன்று உருவங்களான பிரம்ம விஷ்ணு மகேசுவரர்கள் கைகட்டி நின்று துதி புரிவது எவ்வாற்றாலும் அவர்கள் வசிக்கும் நிலைக்குத் தகாதது ஆகாது. ஆதலால் இறைவி திருவடித்துகளைத் தலையில் ஏற்பதாக உரைக்கப்பட்டது.

அளியேம் அனைநின் பதாம்புயத்தி
  னருமைச் சேவை புரிதற்கே
ஒளியே செயலே ஒருங்குறுமிவ்
  வுருவம் பெற்றுப் பிறந்துள்ளேம்
வெளியே யகமே அகத்தகமே
  வேறே யெவையும் நீயாகும்
களியே காண்பே மதனாலே
  களிக்கூத் திடுவே முலகினிலே. 467

உரை :- இரங்கத்தக்க நிலையில் உள்ள நாங்கள் தாயே, உன் பாதாம்புயத்தின் அருமைத் திருப்பணி புரியவே ஒளியும்

செயலும் ஒன்ருக அமைந்த இவ்வுருவங்களைப் பெற்றுப் பிறந்திருக்கிறோம். புறத்திலும் அகத்திலும், அகத்துக்கு அகத்திலும் வேறெ எங்கும் எவையும் ஆகி இருப்பவள் நீயே ஆகும் ஆனந்தக் காட்சியை காண்போம். அதனுல் உலகத்தில் நாங்கள் களிக்கூத்து ஆடுவோம்.

விளக்கவுரை :- பிரம விஷ்ணு மகேசுவரர் மூவரும் ஒளியும் செயலும் ஒருங்கு அமைந்த உருவம் உடையார். ஒளியும் செயலும் பிறக்கும் இடைத்தைக் கண்டதும் தமக்கு வந்த சிறப்பு எல்லாம் அவள் அருளே என்று உணர்வது இங்கு விளக்கப் பட்டது. இஃது சிவன் வாக்கு ஆதலின் ஆனந்தக் கூத்து ஆடும் அனுபவம் உரைக்கப்பட்டது. சிவபிரான் நடனம் ஆடுவது உலகம் அறிந்த உண்மையே.

ஒன்பா னெழுத்தின் மந்திரத்தை
உடையே னெனவே தருக்குற்றேன்
அன்பா னுருவம் பெறுமிறைவி
அதனை யேனே மறப்பித்தாய்
என்பா லருளின் திவலேனை
திதயத் தின்னும் உளதாகில்
நன்பா லதனை யிப்பொழுதே
நல்காய் புவனே சுவரியென்ருன். 468

உரை :- ஒன்பது எழுத்துள்ள தேவி மந்திர்த்தை நான் பெற்றுள்ளேன் என்று கருவம் கொண்டிருந்தேன். அன்பால் திருவுருவம் பெற்ற இறைவியே அதனை ஏனோ இன்று நான் மறந்து தவிக்க வைத்தாய். என்னிடம் அருளின் ஒரு துளி உன் இதயத்தில் இன்னும் இருப்பதாகின் புவனேசுவரியே இப் பொழுதே அம் மந்திரத்தை எனக்கு நன்மை சிறக்க உப தேசிப்பாயாக.

விளக்கவுரை :- பரமேசுவரன் பரதேவதைக்குரிய மந்திரங்களும் சிறப்புமிக்க நவாக்ஷரி என்ற மகாமந்திரத்தை அனவரதம் ஜபம் செய்தே தன் சம்ஹார காரியத்தை நடத்திக் கொண்டிருந்தான். அகங்காரம் வந்து மூடியதும் மந்திரம் மறைந்தது. இங்கு திவ்ய சௌந்தர்ய தேவதை சந்நிதியில் தான் இழந்த பொருளின் பெருமையை உணர்ந்து அதனை மீண்டும் உபதேசித்து அருளும்படி வேண்டுகின்றான். தக்கவரிடம் மந்திரத்தைப் பெறவேண்டும் என்ற சம்பிரதாயம் இதனால் நன்கு விளக்கமாகிறது. மந்திர ஸ்வீகாரத்தைக் காட்டிலும் அரிதிற் பெற்ற மந்திரத்தைப் போற்றி வைப்பது சிறப்பு என்பதும் விளங்கும்.

பரமன் விருப்ப முணர்தேவி
பரம குஹ்ய நவரக்ஷரியை
வரமன் பெருக வென்வருளி
வாழ்த்து முரைத்தா ளவன்பெற்றான்
உரமன் எழுத்தி னுருவத்தே
ஒடுங்கி யடங்கி யதுவானான்
பிரமன் இதனை விழிநோக்கிப்
பேசிப் புகழ்வான் இறைவியையே. 469

உரை :- பரமேசுவரன் விருப்பத்தை உணர்ந்த புவனேசுவரி தேவி பரம ரகசியமான ஒன்பது எழுத்து மந்திரத்தைத் தகுதியுடைய தலைவன் பெறுக என்று அருளிச்செய்து வாழ்த்தும் உரைத்தாள். இறைவன் அவ்விரு பெருஞ் செல்வங்களையும் ஏற்றுக்கொண்டான். மனத்துள் நிலைத்த அந்த நவாக்ஷரி மகாமந்திரத்தின் உருவத்தில் ஒடுங்கி அடங்கி அதுவே ஆகி அமர்ந்து விட்டான். பிரம்மதேவன் இக்காட்சியைக் கண்ணுற்றுக் கண்டு இறைவியைத் தானே பேசிப் புகழ்கின்றான்.

விளக்கவுரை:- நவாக்ஷரி மகாமந்திரம் சமஸ்த பாக்கியங்களையும் தந்து தேவியைப் பிரசன்னை ஆக்கவல்லது. பெற்ற

மந்திரத்தை அக்கணமே உருவேற்றி அதனுல் பெறத்தக்க பரம லாபத்தைப் பெற முயல்வது முறை என்ற உண்மையை இங்குச் சிவன் செயல் நன்கு விளக்குகின்றது. பிரமன் துதி இனி வரும்.

சிவனுர் புகழ்ந்த வண்ணமுனைத்
தேவி சுருதி யுரைத்திலதே
அவனே யறியா அளவையினுய்
அரியே புரக்க வருளினையே
இவனே படைக்க வெனநினைத்தாய்
யானு மகந்தைக் கடல்மூழ்கி
புவனே சுரிநின் பூரணத்தை
போதம் பெறுது சிதைந்தேனே. 470

உரை:- பரமசிவன் புகழ்ந்தவாறு பரதேவதையே உன்னை வேதங்களும் புகழவில்லை. பரமனே அறிதற்கு அரிய ஆற்றல் உடையாய் திருமாலைக் காவற் கடமை பூண ஆணையிட்டாய். எளியேன் படைப்புத் தொழில் புரியவேண்டும் என்று சங்கற்பித் தாய். நானும் அகந்தைக் கடலில் மூழ்கி, புவனேசுவரி உன் பூரண நிலையை அறியாது அழிந்தேன்.

விளக்கவுரை:- சுருதி தேவியைப் புகழ்கின்றது. அதனினும் சிறப்பாக முக்கண்ணன் இறைவியைப் புகழ்ந்தான். சுருதி தான் அறிந்ததாக இப்படி இருக்கும் என்று எங்கும் உரையாது நழுவிச் செல்வதால் இங்ஙனம் உரைக்கப்பட்டது. அளவை-பிரமாணம். வேதம் புகழ அறியாத, பரமனும் அளந் துரைக்க இயலாத பெருமை இறைவிக்கு உண்டு இவன் என்ற சொல் இங்கு அடியேன் என்ற பொருளில் வந்தது. அகந்தை-நானே படைப்புக்கு இறைவன் என்று எழுந்த எண்ணம். பூரணம்-வேதமும் பரமனும் விளக்கஇயலாது பரிபூரணஸ்திதி.

தாயே நினது மெய்யுருவம்
  தனையே யறியா திறுமாந்த
சேயே யெனவே யெனையுணர்ந்து
  சிறுமை மாற்றி யருள்மொழிக
வாயே மனமே யுடலேநின்
  வண்ண மறிந்து தொழில்பூண
நீயே யெனக்குத் திருவருளின்
  நிறைவைப் பொழிய வேண்டுவலே. 471

உரை :- தாயே, உன் மெய்யுருவத்தை அறியாமல் பெருமிதம் கொண்டு கெட்ட பிள்ளை என்று என்னை உணர்ந்து என் சிறுமைகளை அகற்றி அருள் பொழிக. என் வாக்கும், மனமும், காயம் உன் திருக்கோலம் அறிந்து தொழில் செய்ய நீயே எனக்குத் திருவருளின் நிறைவைப் பொழியவேண்டும்.

விளக்கவுரை :- தேவியின் தத்துவத்தைப் பூரணமாக அறிவது மும்மூர்த்திகளுக்கே அரிதென்றால் மற்றவர் தம் நிலைக்கும் தேவியின் நிலைக்கும் உள்ள தூரத்தை எளிதில் உணரலாம். தைத்திரிய சுருதியிலும் பிரஹதாரண்யகத்திலும் ஆனந்தம் அளந்து காட்டப்படுகிறது. ஆனந்தத்தின் எல்லை இன்னதுதான் என்று அவ்வாக்கியங்களால் இன்றளவும் நாம் அறியவில்லை. அதுபோலவே தேவியின் செயலை அறிவதும் அரிது என்பதைப் பிரமன் வாக்கால் உணர்கின்றோம்.

துறக்கம் விழைந்தே வேள்வினைச்
  சுருதி முறையே நிகழ்த்துநரும்
இறக்க நடுங்கி யோகமெனும்
  ஏணி யேற்ற முயல்குநரும்
அறக்கண் மலரும் பெருமாட்டி
  அருளை விளக்கு மந்திரத்தை
உறக்கண் டனரேல் அவர்பெரும்பே
  றுரைத்தற் கெளிதா யமைவதுவோ. 472

உரை :- சுவர்க்கபோகம் பெற விரும்பி வேத விதிப்படி யாக யக்ஞாதிகளை இயற்றுகின்றவர்களும் உடம்பை இழக்க நடுங்கி அதனை நெடுநாள் நிறுத்தும் நினைவோடு யோகம் என்ற ஏணியேற்றம் முயல்பவரும் தருமங்கள் மலர அருளும் பெருமாட்டியின் திருவருளை விளக்கும் மந்திரத்தை நெருங்கிக் கண்டார் ஆயின் அவர் பெறும் பேறு இவ்வளவு தான் என்று உரைக்க எளிதாகுமா ?

விளக்கவுரை :- யாகங்கள் செய்து பெறும் உலகம் சுவர்க்கமே. யாகத்தாற் சேர்த்த புண்ணியச் செல்வம் அழிந்தவளவில் அந்த ஜீவன் மீண்டும் மனிதயுலகத்துக்கு வரவேண்டும், யோக சித்தியால் உடம்பு வஜ்ரம் ஆகப் பார்ப்பார் உண்டு. கொரக்கர் போன்ற யோகிகளும் இன்று இல்லை. யோக சூத்திரம் இயற்றிய பதஞ்சலியும் மறைந்தார். யோகம் ஏணியேற்றம் என்று இழித்துரைக்கப்பட்டது. மந்திரம் என்ற சொல் இங்கு இரு பொருளில் வந்தது. ஜபம் செய்ய உதவும் நவாக்ஷரி துவாதாசாக்ஷரி ஷோட்சாக்ஷரி, ஏகாக்ஷரி முதலியவை மந்திரம் என்று அறிந்து ஜபித்தால் அவள் அருள் எளிதாம். மந்திரம்-திருமாளிகை. இறைவி இருக்கும் மணித் வீபத்தை அறிந்து தியானிப்பதால் அவள் அருள் வரும் என்பதும் உண்டு.

நினது கடைக்க ணருநோக்கால்
நீல. மேனித் திருமாலும்
தனது பணியிற் சிறப்புற்றுன்
தானே வழித்தான் முக்கண்ணன்
எனது படைப்புத் திருப்பணியின்
இயல்பு நின்மேல் யருள்விளக்கம்
மனது வாக்கு நினக்காக்கும்
மார்க்க மறியார் இயங்குவரோ. 473

உரை :- உன் கடைக்கண் அருள் நோக்காலே நீலத் திருமேனி கொண்ட நாராயணனும் தன் திருப்பணியிலே சிறப்

படைந்தான். முக்கண்ணன் தன் திருப்பணியைத் தானே செய்தானு? உன் உதவி கொண்டுதான் செய்வான். என் படைப்புத் திருப்பணியின் இயல்பு உனது மெய்யருளை விளக்குவதே ஆகும். மன வாக்குக்களை உனக்கே உரிமையாக்கும் வழி அறியாதவர் உலகத்தில் நடமாட இயலுமா!

விளக்கவுரை :- திருமாலுக்கும் சிவனுக்கும் அருள் துணையாக இருந்து அவரவர் திருப்பணி நிகழச் செய்தாற் போலவே பிரமதேவனுக்கும் உரிய துணையாக இருந்து அவன் தொழிலை நிகழ்த்தினுள். பராசக்தியே இச்சா சக்தி கிரியாசக்தி ஞான சக்தி என்ற வேஷம் பூண்டு மும்மூர்த்திகள் காரியங்களை நன்கு நிறைவேற்றுகின்ருள். இயக்கமே அவள் அருள்.

ஏகம் பிரமம் அத்துவிதம்
எனவே யுரைக்கும் மறைமுடியே
சோகம் எனவே சிவோகம்எனச்
சொல்லும் மொழியும் உளலாலோ
மேகம் அறியா மின்னலில்லை
மின்னல் புகாத மேகமில்லை
ஏகம் சிவனே இறைவியென
இயம்பும் நீயோ அருளுகவே. 474

உரை :- வேத சிரமான உபநிடதம் பிரமவஸ்து ஒன்று என்றும் இரண்டற்றது என்றும் உரைக்கும். ஸோஹம் என்றும் சிவோஹம் என்றும் சொல்லும் மந்திரங்களும் உண்டு. மேகத்தை அறியாத மின்னல் இல்லை. மின்னல் புகாத மேகமும் இல்லை. ஏகவஸ்து சிவன் என்ற மூர்த்தியோ, பராசக்தியாகிய நீயோ அருள் புரிவாயாக.

விளக்கவுரை :- 'ஏகமேவ அத்விதியம் ப்ரம்ம' என்பது உபநிஷத்து. 'ஸர்வம்கலு இதம் ப்ரம்ம' என்ற வாக்யமும் உண்டு. வாக்கியம் நான்கு மகா வாக்கியங்கள் எனப்படும்.

அவையும் இக் கருத்தையே உரைக்கும் ஹம்ஸ மந்திரத்திற் கலக்கும் ஸோஹம் என்ற சொல் அவன் நான் என்று கூறுகிறது. சிவோஹம் என்பது சிவன் நான் என்கிறது. எல்லா மந்திரங்களுக்கும் பொருள் ஒன்றேயா வேறு வேறு உண்டா! பிரம்மம் என்ற பொருள் சிவனு சிவையா என்று ப்ரம்மதேவன் கேட்கின்றார். பிரம்ம பதம் ஆண் பெண் என்ற பாற் பகுதியிற் சாராது. "தத்ஸாஸ; என்ற முச்சொல்லாலும் பேசப்பட்டுள்ளது. இறைவி விடை தருவாள்.

எனவே யிறைஞ்சி நான்முகனே
யிசைத்த மொழியும் செவியேற்றாள்
முனமே திருமால் முக்கண்ணன்
மொழிந்த துதியும் மனமுவந்தாள்
மனமே வாக்கே யிறந்துநின்ற
மறைமேல் மறையே மூவருக்கும்
தனவே யருளின் பெருக்காலே
சாற்றப் புகுவாள் பராபரையே. 475

உரை:- என்று வணங்கிப் பிரமதேவனே உரைத்த சொற்களையும் திருச்செவியில் ஏற்றாள். முன்பு நாராயணனும் பரமேசுவரனும் சொல்லிய துதிகளையும் கேட்டு மனம் மகிழ்ந்தாள். மனம் வாக்கு என்ற இரண்டையும் கடந்து அப்பால் நின்ற வேதத்துக்கு மேற்பட்ட இரகசிய தத்துவத்தை மும்மூர்த்திகளுக்கும் தன் திருவருட் பெருக்காலே பராபரையான புவனேசுவரி சொல்கின்றாள்.

விளக்கவுரை:- பிரமதேவன் ஐய வினு வினவியதை இறைவி அறிந்தாள் மற்ற இருவரும் இவ்வினுவுக்கு உரிய விடை பெற வேண்டும் என்ற குறிப்போடு இருப்பதை உணர்ந்தாள். மூவர் துதிகளையும் மனத்தில் உவப்போடு ஏற்றுக்கொண்டாள். பிரமத்திடம் மனமும் வாக்கும் எட்ட இயலாது என்பது பல

சுருதி வாக்கியங்களால் தெளிவாக உரைக்கப்பட்டது. பிரம்ம தத்துவத்தை உரைக்கத் திருவுள்ளம் கொண்டு பிரம்மோபதேசம் செய்கின்ருள்

உக்தி உணர்ந்தேன் நான்முகனின்
உள்ளத் தெழுந்த வையமெலாம்
சக்தி சக்தன் எனுமொழியாற்
சற்றே தெளிவித் திடுகின்றேன்
பக்தி யுணர்வாற் பார்க்கின்ருர்
பரமன் பரமே சுவரியெனும்
வக்தி மகிழ்வார் அத்துவித
மனத்தார் கருத்து வேறின்றே. 476

உரை :- சொல்லியதை உணர்ந்தேன். நான்முக, உன் உள்ளத்தில் எழுந்த ஐயம் எல்லாம் சக்தி சக்தன் என்ற மொழிகளால் சற்றே தெளிவிக்கின்றேன். பக்தி பாவத்தோடு இப் பொருளைப் பார்ப்பவர் பரமசிவன் பரமசிவை என்ற வாக்கியத்தில் மகிழ்ச்சி பெறுவர். அத்துவிதக் கருத்துள்ளவர் எண்ணம் வேறு என்று கூற இயலாது.

விளக்கவுரை :- தேவி விடை கூறத் தொடங்குகின்ருள். உக்தி-உரைக்கப்பட்ட சொல்; ஸ்வபாவோக்தி, அதிசயோக்தி என்ற அலங்காரங்களில் இருப்பது அறிவோம் வத்தி-வாக்கு; வாக்கியம்; சக்தி பக்தி எளிய சொற்கள். சக்தி சக்தன் என்ற மொழிகள் பிரசாரத்தில் உள்ளன அவற்றைக் கொண்டு ஐயத்தைப் போக்கலாம். பிரமம் சக்தி என்ற இரண்டு சொல்லாற் சொல்லப்பட்ட பொருளும் ஒன்றே என்று உரைத்து விளக்கவே இதனைக் கூறுகின்ருள். சக்தி ஸர்வ வியாபினி. ஸ்வயம் ஜோதி. ஒருவர் அதிகாரத்துக்கு அடங்காது உலகங்களை எல்லாம் இயக்குவது. அச்சக்தியைப் பெற்றுத் தொழில் செய்பவன் சக்தன்.

உள்ள பொருள்தா னென்றென்பார்
உண்மை திண்ணி துரைக்கின்ருர்
உள்ள பொருட்கோ உருவமலர்
உரைப்ப தில்லை யறிவாயே
உள்ள ததுவோ அவனேயோ
உடலம் படைத்த அவளேயோ
உள்ள படியே வேதமின்னும்
உரைத்த திலேயா அறிவாயே. 477

உரை :- உள்ள பொருள் ஒன்றே என்று கூறும் த்த்துவ ஞானிகள் உண்மையை உறுதியாக உரைக்கின்ருர். அவர்கள் அந்த உள்ள பொருளுக்கு உருவம் உரைப்பதில்லை யென்பதை நீ அறிவாய். உள்ளது அதுவோ அவனே உடம்பு பெற்ற அவளோ இந்த உண்மையை உள்ளபடி வேதம் இன்றும் உரைக்க வில்லை என்பதை அறிவாய்.

விளக்கவுரை :- "ஸதேவ இதம் அக்ர ஆஸித்" என்ற மந்திரமும் 'ஏகம்ஸத்விப்ரா பஹுதா வதந்தி' என்ற மந்திரமும் உள்ள பொருளை உரைப்பவை ரமணர் இது கொண்டே உள்ளது நாற்பது பாடினர். உள்ளது ஒன்று என்பதில் பிரதி வாதம் இல்லை. அந்த ஒன்று ஆணு பெண்ணு அலியா என்பதில் கருத்து வேற்றுமை உண்டு ஆணல்லன் பெண்ணல் லன் அல்லர் அலியுமல்லன்' என்ற நம்மாழ்வாரே அவன் ஆண் என்று எண்ணியே அல்லன் என்ற பயனிலை தந்தார்.

வேதம் விளக்கும் பொருள்ஒன்றே
விண்டு சிவனே பிரமனெனும்
பேதம் அதன்கண் இலேகண்டாய்
பெண்மை யாண்மை யதற்கில்லை

போதம் பெறுக அதுநானே
புராரி யென்ற அவனதுவே
சேதம் உருத சத்தெதுவோ
சிவமே சிவையே அதுவாமே. 478

உரை :- வேதம் விளக்கும் பரம்பொருள் ஒன்றே. அப்பொருளில் விஷ்ணு சிவன் பிரமன் என்ற வேற்றுமை இல்லை. அப்பொருளுக்கு ஆண்மையும் இல்லை. பெண்மையும் இல்லை. அப்பொருள் நானே என்ற உண்மை தெளிக. புராரி என்ற பரமசிவனும் அப்பொருளே. அழிவு பெருத சத்து எதுவோ அதுவே சிவம் சிவை எல்லாம் ஆகும்.

விளக்கவுரை :- வேதம் நானுவாதம் பேசாது. பேசிய வாக்கியங்கள் உண்டென்பார். அவ் வொவ்வொரு தெய்வம் பெயரும் பிரமத்தைக் குறிக்க வந்ததே என்பதை உணரவேண்டும். இறைவன் இறைவி என்ற இரு சொல்லும் இறை என்ற ஒன்றுக்குள் அடங்கியவையே. பிரமம் ஒன்றே உண்டு. அது நானே என்று கூறிய இறைவி சிவன், அரி, அயன் என்ற தோற்றம்பெற்ற மூன்று அதுவே என்பன விளக்கியருள்கின்ருள். தத்வமஸி மகாவாக்கியம் ஜீவப்ரம்மைக்கியம் உரைப்பது உண்டு என்ருல் தேவி வாக்கால் சிருஷ்டிக்கப் பட்டவராகவே உரைக்கப்பட்ட மும்மூர்த்திகளும் பிரம்மமே பராசக்தியே.

அதுநீ ஆதி யெனும்உண்மை
யருளும் வேத மந்திரமும்
மதுவே வழங்கு மந்திரமும்
வழுத்தி யிருப்பாய் நான்முகனே
பொதுவே சிறப்பே யிரண்டில்லை
புதுமை பழமை வேறில்லை
எதுநீ யறியப் பெருப்பொருளோ
யானும் சிவமும் அதுவன்றே. 479

உரை :- அது நீ ஆவாய் என்ற உண்மையை அருளிச் செய்யும் வேத மகாமந்திரமும் மது இன்னது என்று வழங்கும் மந்திரமும் ஓதியுணர்ந்திருப்பாய் பிரம்மதேவனே, பொது சிறப்பு என்ற இரண்டு இல்லே. நீ அறியப் பெரும் பொருள் எதுவோ அதுவே நானும் சிவமும் ஆம்.

விளக்கவுரை :- தத்வமஸி மஹாவாக்யத்தால் உரைக்கப் படும் பொருள் பிரமதத்துவமே. மதுப்பிராமணத்தில் மதுஎன்ற பெயரால் உரைக்கப்பட்ட பொருளும் அதுவே. தத்துவ ஞானி கள் இவ்வுண்மையை அறிவர். பொது என்பது பரப்பிரமம். சிறப்பு என்பது மும்மூர்த்திகளே. பரப்பிரமமே பராசக்தி புவனேசுவரி என்று விளக்கப்பட்டிருப்பதால் பொதுப்பொருள் சிறப்புப்பொருள் வேறு வேறு இல்லே என்று இங்கு கூறியது ஈசுவர பேதங்களேக்கொண்டு வாதம் இட வேண்டா என்ற உண்மையை விளக்குவது. பிரமம், சக்தி, ஈசுவரன் எல்லாம் ஒன்றே என்ற கருத்து இங்கு உரைக்கப்பட்டது.

சிவம்வே றெழுந்த மூர்த்தியெனச்
சிவைவே றிருந்த செல்வியென
தவம்வே றியற்று முனிவரரே
சாற்றத் துணிந்தா ராஞலும்
பவம்வே றெழவே வருகின்ற
பழமை யாய வறிவின்மை
அவம்வே றஃதென் றறிந்துணர்க
அவன்நான் என்றும் ஒருமையன்றே. 480

உரை :- சிவ பரம்பொருளேத் தனியாக எழுந்த ஒரு மூர்த்தி யென்றும் சிவை என்ற பராசக்தி வேருக இருந்த ஒரு பெண் தெய்வம என்றும் தவத்தை நன்ருகத் தனித்திருந்து இயற்றிய முனிவர்களே உரைததார் ஆஞலும் பிறப்பு வேறு வேறு தோன்ற வருகின்ற பழமையான் அறிவின்மை வீண்

பேச்சு என்று அறிந்து கொள்க. அவனும் நானும் என்றும் ஒருமையே.

விளக்கவுரை :- மூர்த்தி என்ற சொல் வந்ததும் அது பிரம்மத்தினிடமிருந்து இழிந்தது என்ற கருத்து உண்டாகும். பிரமம் என்ற பரம்பொருளும் மூர்த்தியாக நினைக்கப்பெறும் சிவமும் ஒன்றே என்பதை முதற்கண் அறிந்துகொள்ள வேண்டும். மூர்த்தி என்ற சொல் பிரம்ம விஷ்ணு மூர்த்திகளையும் குறிக்க வல்லது. எல்லாம் சிவமே என்ற உண்மை விளங்கும்போது எல்லாம் பிரம்மமே என்பது புலனாகும். பிரம்மம் என்ற சொல்லால் உரைத்த பொருளே இங்கும் புவனேசுவரியாக அரியணைக்கண் அமர்ந்து தத்துவ உபதேசம் செய்கிறது. உபதேசம் செய்ய அதிகாரம் பெற்றமையாலேயே புவனேசுவரி தெற்கு நோக்கி அமர்ந்து காட்சி கொடுக்கின்றாள். தக்ஷிணாமூர்த்தியும் அரங்கநாதனும் தெற்கு நோக்கியே இருப்பது இதனை விளக்கிய கருத்தே.

இன்ன வணமே திருமாற்கும்
  இறைமை பொருந்து புராரிக்கும்
நன்ன ருணர்த்தி விடைதந்தாள்
  நாத பிந்து கலையாளுள்
முன்ன ரிருந்து விமானத்தே
  முடுகித் தத்தம் நகர்புகுந்து
மன்ன லானார் அவரென்றே
  வழங்கும் தேவி புராணமதே. 481

உரை:- இவ்விதமே திருமாலுக்கும் தலைமை பொருந்திய திரிபுராந்தகன் ஆன பரமனுக்கும் நன்றாக உணர்த்தி விடையும் அருளினாள் நாதம் பிந்துகலை எல்லாம் ஆன புவனேசுவரி. முன்னர் இருந்த விமானத்திற்குச் சென்று விரைந்துபோய்த் தத்தம் நகரம் புகுந்து அம் மூவரும் தம் தலைமைகளை ஏற்றார்கள் என்று தேவி பாகவதம் உரைக்கும்.

விளக்கவுரை :- இறைவி அருகே நெருங்கும்போது வந்த பெண்ணுருவம் நீங்க நினைத்த வளவில் மாறிப் பழைய ஆணுருவம் பெற்று மூவரும் தம்மை அழைத்து வந்த விமானத்தில் ஏறி தத்தமக்குரிய உலகத்திற்குச் சென்றார். மன்னல்நிலை பெறுதல்; பிரமன் தேவி திருமுன் நூறு வயது நிரம்பியும் பதவி இழக்காமல் அவள் அருளால் மீண்டு வந்து பதவி பெற்றான்.

சருவ சக்தி திருவருளால்
  தமது மனத்தே யிஃதுணர்ந்த
பருவ முதிராச் சாந்தமுனி
  பரதே வதைக்குப் புதுவைக்கண்
மருவ லமையும் தளியொன்று
  வகுப்பல் எனவே மனம்கொண்டு
கருவ மறியார் அகந்தையிலார்
  கருத்தை யுணர்த லாயினரே. 482

உரை :- சருவ சக்தியான புவனேசுவரி திருவருளால் தம் மனத்தில் இவ்வுண்மையை உணர்ந்த பருவம் முதிராத சாந்தானந்த முனிவர் பரதேவதைக்கு இப் புதுக்கோட்டை நகரத்தில் வீற்றிருக்கத் தக்கதாய் அமையும் கோயில் ஒன்று கட்டுவேன் என்று மனத்தில் நினைந்து கருவம் அறியாதவர் அகந்தை இல்லாதவர் ஆன மெய்யன்பர் கருத்தைஉணர்தலானார்.

விளக்கவுரை :- சருவசக்தி - எல்லாம் செய்ய வல்ல இறைவி. தேவி உபதேசத்தால் மூத்தேவர் பெற்ற பெருமைகளைத் தேவி பாகவதம் முதலிய புராணங்களாலும் தந்திர சாஸ்திரங்களாலும் மந்திரம் அறிந்த மகான்கள் பழக்கத்தாலும் அறிந்த சாந்தானந்தர் இத்தகைய தேவிக்குத் தமிழகத்தில் ஒரு ஆலயம் எழுப்ப எண்ணம் கொண்டு அதற்குத் தக்க இடம் தேடிச் சதாசிவேந்திர அதிஷ்டானமே தக்கது என்று உணர்ந்து

ஆஸ்திகர், சிரத்தாவான்கள், பக்தி மான்கள், திரவியவான்கள், உழைப்புமிக்கவர். ஊக்கமிக்கவர் முதலிய பலதிறத்து நன்மக்கள் அதிஷ்டானத்துக்கு வந்ததால் அவர்களிடம் மெல்லத் தம் கருத்தை வெளியிடலாயினர்.

வேழ வாழ்க்கைக் கேரளத்தும்
   விளங்கு முத்தம் வளர்நாட்டும்
ஈழ நாட்டும் பிறநாட்டும்
   எழில்சால் கங்கைத் துறைக்கண்ணும்
ஆழ நாட்டு மனக்கலைஞர்
   அமைத்த கலையின் செல்வங்கள்
சோழ நாட்டுப் பணியாலே
   தூய்மை பெறுதல் அறிந்தனரே. 483

உரை :- யானைகள் வாழ்கின்ற சேர நாட்டிலும் ஒளி விளங்கும் முத்தும் பிறக்கின்ற பாண்டிய நாட்டிலும் ஈழ நாட்டிலும் பிற நாடுகளிலும் அழகு மிகுந்த கங்கையாறு பாயும் நாட்டிலும், ஆழம் நாட்டிய மனம் உள்ள கலைஞர் அமைத்துள்ள கலைச் செல்வங்களை எல்லாம் சோழ நாட்டுக் கலையாலே தூய்மை பெறுவதை அறிந்தார்.

விளக்கவுரை :- ஓவியக் கலை கேரளத்தில் மிக்க சிறப்புற்றது என்பது. ரவிவர்மா என்ற ஓவியர் எழுதிய படங்களால் உணரத்தக்கது. பாண்டிய நாட்டிலே ஓவியக் கலைஞர் இருந்தார் என்பது மதுரைக் கோயிலில் உள்ள பழமையான ஓவியங்களால் உணரப்படும். வங்கத்து ஓவியம், இராஜஸ்தான ஓவியம் என்று புது முறைகள தோன்றியுள்ளன. ஈழ நாட்டு ஓவியம் தனிப்பட்டது. சோழ நாட்டில் தஞ்சை நகரத்து ஓவியம் மிகச் சிறப்புற்றது.

பொன்னி பெருகும் தஞ்சைநகர்
பொலிய வளர்ந்த கலைத்திருவுள்
மன்னி யிருந்த வெழிலுணர்ந்த
மனத்துச் சாந்த முனிவர்பிரான்
எண்ணி னிதயத் திருக்கின்ற
இறைவி புவனை யம்பிகையை
நின்னி னுளத்துக் கலைத்திறத்தால்
நேரே வருவிப் பாய்கொல்லோ. 484

உரை :- காவேரி நதி பெருகுகின்ற தஞ்சாவூர் நகரத்தில் அழகு விளங்க வளர்ந்த ஓவியக் கலைச்செல்வத்தில் நிலை பெற்றிருந்த அழகை அறிந்த மனம் உள்ள சாந்தானந்த முனிவர் என் இதயத்தில் இருக்கின்ற இறைவியான புவனநாயகியை உன் மனத்தில் உள்ள கலைத்திறத்தால் நான் காண நேரே வருவிப்பாயோ?

விளக்கவுரை :- அடுத்த செய்யுளையும் சேர்த்துப் பொருள் செய்யவே இங்ஙனம் அமைந்தது. ஓவிய முறைகளைப் பற்றிச் சிந்தனை செய்த சாந்தானந்தர் முன்பு ஒரு கலைஞன் வந்து நின்றான். தம் உள்ளத்தே வைத்துப் பூசித்து வரும் புவனேசுவரி திருவுருவத்தை அவனுக்கு விளக்கிக் கூறி இத்தகைய திருவுருவத்தை நீ உன் கலைத்திறத்தால் ஊனக்கண் கொண்டு எல்லாரும் கண்டு இன்புறும்படி தீட்டித் தருவாயோ என்று கேட்கின்றார் - கலைஞன் சுவாமிகள் உரைத்த திருவுருவத்தை மனத்தில் நிறுத்திக்கொண்டு அஃது உலகத்துக்கு வெளிப்படவே முயன்றான்.

என்றோர் கலைஞன் தனைவேண்ட
இறைவி யருளால் ஓவியத்தில்
நன்றே அவளை வருவித்து
நல்கப் பெறுவே னவளருளை

என்ருன் அழகுக் கொள்ளையென
எழிலிற் பொங்கு கடலென்ன
நன்ரு யோவம் அமைவித்தே
நன்று ளதனி லளித்தனனே. 485

உரை :- என்று ஒரு கலைஞனை அழைத்தும் தம் குறிப்புரைத்து வேண்ட அக் கலைஞன் இறைவி திருவருளால் நன்ருகவே அவளை அவதரிக்கச் செய்து இங்கே சமர்ப்பிக்கும் பேறு பெறுவேன். அவள் திருவருளை அதனுல் நானும் பெறுவேன் என்று கூறினுன். அழகுக் கொள்ளை என்றும் அழகு பொங்கும் கடலென்றும் கண்டோர் கூறும்படி நன்ருக ஓவியத்தை அமைத்து நல்லநாளில் சமர்ப்பித்தான்.

விளக்கவுரை :- நிலைப் பெருங் கலைத் திருவாக ஆறடி உயரமும் நான்கடி அகலமும் உள்ள பெரியதோர் ஓவியத்தைத் தீட்டி அதன் கண் வேதங்கள் பரவும் புவனேசுவரியின் திருவுருவம் நன்கு விளங்க வைத்து அதிஷ்டானத்துக்குக் கொண்டு வந்து கொடுத்துச் சுவாமிகள் திருவருள் பெற்ருன்.

மோன முனிவர் அதிட்டான
முகத்தே தெற்கு திசைநோக்கி
ஞான முனிவர் சாந்தமுனி
நம்மைப் புரக்கும் புவனேசி
தான மிஃதே யாகுமெனத்
தகவே யமைத்து மலர்க்குவைகள்
ஆன வளவு தருமன்பர்
அறத்தாற் பூசை நிகழ்த்தினரே 486

உரை.- மவுன முனிவர் சதாசிவர் அதிஷ்டானத்தின் முன் புறத்தில் தெற்குத் திசை நோக்கி நம்மையெல்லாம் காத்தருளும் புவனேசுவரி இருக்கத்தக்க இடம் இதுவே ஆகும் என்று தக்க

வாறு அமைத்து மலர்க் குவியலைத் தம்மால் இயன்றளவு தரும் மெய்யன்பர் தருமத்தால் ஞான முனிவர் சாந்தானந்தர் பூசையும் புரிந்தார்.

விளக்கவுரை :- சதாசிவப் பிரம்மேந்திர அதிஷ்டானத்தில் யாக சாலையாக உதவிய புண்ணிய பூமியில் தெற்கு நோக்கி அமரும்படி இச் சித்திரம் நிறுவப்பெற்றது. நன்னாளில் இங்கு புகுந்த புவனேசுவரி, நகரத்தின் இப் பகுதி புவனேசுவரி நகரம் என்ற பெயர் பெறச் செய்து சண்டி ஹோமம், நவக்கிரக ஹோமம், புருஷ சூக்த ஹோமம், ஸ்ரீசூக்த ஹோமம், துர்க்கா ஸூக்த ஹோமம், மஹா ருத்திரம் முதலிய பல வேள்விகள் நிகழ்த்தியருள்வதோடு வியாழன் தோறும் பெரும் பூக்குவை யினுள் தன் திருவுருவம் மறைய வீற்றிருந்து அருள்புரிகின்றாள். வெள்ளிக்கிழமைகளில் விசேஷ நிவேதனங்களை ஏற்றருள்கின்றாள் நவராத்திரியில் நவாவரண பூஜையேற்கின்றாள். புதுக்கோட்டை நகரத்துத் தெய்வீக சக்தி இங்கு வந்து புகுந்து விளங்க அருள் புரிகின்றாள் என்று சுருக்கியுரைக்கலாம்.

எண்ணில் மிருந்த அருச்சனையும்
ஏற்றம் சான்ற ஒப்பனையும்
விண்ணில் உளாரும் அதிசயிக்க
மேவப் பெற்றாள் புவனேசி
மண்ணில் அறத்தால் மலிந்தபுகழ்
வாழும் புதுவை நகரத்தில்
நண்ணி யுரையும் நாயகியை
நாடே யறித லாயினதே. 487

உரை :- எண் மிகுந்த அருச்சனைகளும் ஏற்றம் மிக்க அலங்காரங்களும் தேவலோக வாசிகளும் அதிசயிக்கும்படி புவனேசுவரி பெற்றுக்கொண்டாள். பூமியிலே தருமத்தால் மிக்க புகழ் வாழும் புதுக்கோட்டை நகரத்தில் வந்து கோயில் கொண்ட புவன நாயகியை இந்நாடு முழுதும் அறிதலாயிற்று.

விளக்கவுரை :- புவனேசுவரி ஆலயம் தமிழகத்தில் முதன் முதல் தோன்றும் பெருமை, இப் புதுக்கோட்டை அதிஷ்டானத்துக்கே அமைவது ஆயிற்று. இந்த ஓவியக் கோயிலில் உறையும் இறைவி ஒப்பனைகள் கற்பனை கடந்த வண்ணம் பெற்றன. மலர்களை மலைமலையாகக் கொண்டு வந்து தேவிக்கு அலங்காரம் செய்யும் பேற்றை நன்மக்கள் பெற்றனர். நூறு நாம அர்ச்சனைகள், ஆயிர நாம அருச்சனைகள் நூறாயிர நாம அருச்சனைகள் முதலியவை அடிக்கடி நிகழ்ந்தன. தேவி சாந்நித்யம் சிறந்தது.

செம்பொன் சிலையே செய்தாலும்
சிறப்புச் செய்தார் ஆவேமோ
நம்பன் அருளாற் புவனேசி
நண்ணி யிருக்கும் ஆலயத்தே
ஐம்பொன் சிலைதான் அமைப்பேனென்
றறத்தாற் சிறந்த வேளாளர்
பைம்பொன் அளிக்க மனமுவந்து
பணியு மேற்றார் ஒருநாளே. 488

உரை :- செம்பொன் சேர்த்துச் சிலைசெய்தாலும் தேவிக்கு உரிய சிறப்புச் செய்தவர் ஆவோமா ! இறைவன் திருவருளாலே புவனேசுவரி ஓவிய உருவத்தில் வந்து வீற்றிருக்கும் ஆலயத்தில் ஐம்பொன் சிலை ஒன்று அமைத்து வைக்கிறேன் என்று தருமத்தாற் சிறந்த தொண்டை நாட்டு வேளாளர் ஒருவர் வேண்டுமளவு பொருள் அளிக்க ஒரு நாள் மனம் உவந்து திருப்பணி யேற்றார்.

விளக்கவுரை :- ஓவியவுருச் செல்விக்கு நிகழும் சிறப்புகளைக் கண் குளிரக் கண்ட சாந்தானந்தர் இங்கு நாம் ஒரு ஆலயம் அமைப்பதே பொருத்தம் என்று எண்ணம் கொண்டார். அதிஷ்டானத்து இடம் பெரியதோர் ஆலயம் அமைக்கவேண்டுமளவு விசாலம் இல்லாததாயினும் இறைவன் அருளால் நம்

நினைவு நிறைவேறும் என்று கருதினர். அப்பொழுது அங்கு வந்த தருமசீலர் டால்ராம் முதலியார். உற்சவத்துக்கு உதவும் விக்கிரஹம் அமைக்க முன் வந்தார்.

எவரெப் பணியே ஏற்றாலும்
இனிய முகத்தால் வரவேற்கும்
தவருட் சிறந்த சாந்தமுனி
தம்மை யாண்ட புவனேசி
சுவருட் பொதியா விருக்கையிலே
தூய ஓவத் தமர்ந்தபினர்
கவரப் படாத வொளியெழிலைக்
கலையிற் பொறுப்பா ளெனநினைந்தே. 489

உரை :- எவர் எந்தத் திருப்பணியை ஏற்றுக்கொண்டா லும் இனிய முகத்தோடு வரவேற்கும் தவத்தாற் சிறந்த சாந்தா னந்தர் தம்மை ஆண்டருளிய புவனேசுவரி சுவருள் அடங்கிய சிறிய இருக்கையிலே தூய ஓவியமாக வீற்றிருந்த பிறகு எவர் மனத்தாலும் கவரப்படாத ஒளியோடு கூடிய அழகைக் கலைத் தொழிலாற் பெறுவாள் என்று நினைத்து.

விளக்கவுரை :- அடுத்த செய்யுளில் பயனிலை உள்ளது. சாந்தானந்த சுவாமிகள் தருமசீலரான வேளாளர் ஐம்பொன்சிலை அமைத்துத்தர மனம் கொண்டதை உணர்ந்து அதுவும் இறைவி செயலே என்று எண்ணி யாக சாலைக்கு உதவிய தென் னங் கீற்றுக் கொட்டகையில் வடமாய் உள்ள சிறிய சுவர்க்குள் ஒரு புரைக்குள் அடங்கிய ஓவியப் பிராட்டிக்குச் சிறப்பு வருவது உணர்ந்தார்.

பொன்னி னொளியே விளங்கவெழில்
பொலிந்த வைம்பொன் திருவுருவை
மின்னின் ஒளியை வென்றவொளி
விளங்கு மேனிப் புவனேசி

தன்னின் னிதயத் தொளிர்த்தாங்கு
தயங்க வமைந்த தறிந்துமகிழ்ந்து
என்னின் பணியே இஃதென்ன
இசைத்தார்க் கருளைப் பொழிந்தனரே. 490

உரை :- பொன்னின் ஒளி விளங்க அமையும் அழகுமிக்க ஐம்பொன் விக்கிரகத்தை மின்னல் ஒளியை வென்ற ஒளி விளங்கும் திருமேனி உள்ள புவனேசுவரி தேவி தம் இதயத்தே விளங்கிடவாறு ஒளியோடு அமைந்தது அறிந்து மகிழ்ந்து இது என் இனிய திருப்பணி என்று அமைத்துக் கொடுத்த செல்வர்க்கு இறைவி திருவருளைப் பொழிந்தார்.

விளக்கவுரை :- சென்னைச் செல்வர் டால்ராம் முதலியார் ஐம்பொன் விக்கிரகம் செய்து விரைவிற் கொண்டுவந்து அதிஷ்டானத்திலே சமர்ப்பித்து நின்றார். அவர் மனப் பண்பும் தரும சீலமும் அறிந்த சுவாமிகள் அவர்க்கு புவனேசுவரி தேவி நலம் எல்லாம் அருள்க என்று பிரசாதம் தந்தார். புவனேசுவரி திருவுருவத்தை மந்திர சித்தியால் அனவரதம் அகத்தே நோக்கும் பேறுபெற்ற முனிவர் தம்மைஆட்கொண்ட தேவி புதுக்கோட்டை நகரத்தில் புதியதோர் ஆலயம் பெற்றுச் சிறப்புதற்கு உரிய காலம் குறுகியது என்று உணர்ந்து கொண்டார். அவ்வுணர்ச்சியால் மனம் மகிழ்ந்து ஐம்பொன் சிலையை ஏற்ற அன்றே விசேஷ பூஜைகள் எல்லாம் செய்து விழாக் கொண்டாடினார்.

பூக்கள் மலையே போற்குவிந்து
புவனை மேனி தனைமறைக்க
நாக்கள் நாம மாயிரத்தை
நன்கு நவின்று பயனடைய
நோக்கள் பயமே வண்டர்மதுக்
கொடுத் துத்தம் மாலியன்பணிகள்
நோக்க வடைந்த புவனேசி
கோயில் கொண்டு சிறந்தனளே. 491

உரை :- மலர்க்குவியல் மலைபோற் குவித்து புவனேசுவரி திருமேனியை மறைக்க மந்திரம் பயின்ற அந்தணர் நாக்கள் இறைவியின் திருநாமம் ஆயிரத்தை நன்ருக உரைத்துப் பயன் பெறப் பசுக்கள் பாலையும் வண்டுகள் தேனையும் கொடுத்துத் தம்மால் இயன்ற திருப்பணிகளைப் புரிய அதிஷ்டானத்துள் வந்த, புவனேசுவரி தனக்கு அமைந்த இடத்திலே கோயில் கொண்டு சிறப்புற்ருள்.

விளக்கவுரை :- புவனேசுவரி இங்கு வந்த நாள் முதலே பூக்கள் இத்திருக் கோயிலுக்கு மிகவும் வந்து சிறப்பெய்து கின்றன. ஆயிர நாம அருச்சனைகள் பல அடிக்கடி நிகழுகின் றன. நூருயிரக்கணக்கு உள்ள அருச்சனைகளும் ஆண்டுக்கு நான்கு முறைக்குக் குறையாமல் நடைபெறுகின்றன. வேண்டு வார் வேண்டுவது அருளும் விமலை புவனேசுவ்ரி என்பது நாடறிந்த செய்தி ஆயிற்று.

மஞ்சள் நூற்றிச் சிவப்பேற்றி
வருவித் திருந்த குங்குமத்தால்
அஞ்சல் எனவே அடியவருக்
கருளும் புவனை திருவடிக்குத்
தஞ்சம் புகுந்த பேரன்பர்
சங்கை கடந்த அருச்சனைகள்
வஞ்சம் அறியா மனத்தகத்தே
மகிழ்ச்சி வளரப் புரிந்தனரே 492

உரை :- மஞ்சளைப் பொடி செய்து அதிற் சிவப்பேற்றி வருவித்துவைத்த குங்குமத்தாலே அஞ்சேல் என்று அடியவர்க்கு அருளும் புவனேசுவரி திருவடியிலே தஞ்சம் புகுந்த பேரன்பர் கள், எண்ணளவு எல்லைசொல்ல இயலாத அருச்சனைகள். வஞ்சகம், சூதுவாது அறியாத மனத்தில் மகிழ்ச்சி வளரச் செய் தார்கள்.

விளக்கவுரை :- இறைவி அமர்ந்திருக்கும் திருக்கோயில் களில் குங்குமத்தால் அருச்சனை செய்யும் வழக்கம் என்று உள் ளது. இறைவி திருவடிகளில் அருச்சனை செய்யத்தக்கது மஞ்சளை இடித்துப் பொடி செய்து நிறம் சேர்த்த குங்குமமே. குங்குமம் என்ற பெயரால் விலைபெறும் மாப்பண்டம் எதுவும் இறைவிக்கு அருகே வருதலும் தகாது. இறைவி அடிகளில் நஞ்சம் புகுந்த மெய்யன்பர் அவள் திருவருள் பெறவே அருச் சனை செய்கின்றார். ஆதலின் அவ்வருச்சனை பலன் தருவதாக அமைய வேண்டின் மஞ்சட் குங்குமமே சேர்த்துவர வேண்டும். வாட்போக்கி மலைமேல் உள்ள இறைவிக்குக் காவேரி நீரால் அரைத்துப் பொடி செய்த மஞ்சட் குங்குமமே அருச்சனைக்கு ஆகும்.

சண்டி யோமம் பலநிகழத்
　தயையைப் புரிந்தாள் புவனேசி
அண்டி யிருந்த சிவத்தோடும்
　அமைந்த வொருமை விளங்குதற்கு
மண்டி யெழுந்த மறையவரால்
　மாருத் திரமும் நிகழ்வித்தாள்
கண்டி யணிந்த கண்டத்தார்
　கனிவால் வேத முழக்கினரே. 493

உரை :- புவனேசுவரி தன் சந்நிதியிலே பல சண்டி ஹோமங்கள் நிகழ அருள் புரிந்தாள். அண்டியிருக்கும் சிவத் தோடு அமைந்த ஐக்கிய பாவம் விளங்குவதற்குப் பெருங் கூட்ட மாக வந்த அந்தணர்களால் மகாருத்திரமும் நிகழச் செய்தாள். ருத்திராக்ஷ தாரணம் செய்த கண்டம் உடைய அந்தணர்கள் கனிவோடு வேத முழக்கம் செய்தனர்.

விளக்கவுரை :- சாமானியமாக இங்குச் சண்டி ஹோமம் பல நிகழ்ந்தது சத சண்டி ஹோமம், ஸஹஸ்ர சண்டி

ஹோமங்களும் நிகழத் தக்க நிலைமை உண்டாயிற்று. சக்தி சந்நிதியிலே சண்டி ஹோமம் நிகழ்வது இயல்பே. ஆயினும் அவள் திருவிளையாட்டால் மகாருத்திரமும் நிகழ்ந்தது. தேவி பாகவதத்தில் அவளே தனக்கும் சிவத்துக்கும் பேதம் இல்லை என்று கூறுவதால் இங்ஙனம் நிகழ்ந்ததோ என்று நினைக்கும் படி இருந்தது. நூற்றிருபத்தொரு வேத வேதியர் இதிற் கலந்தனர். திருவருள் பெற்றனர்.

ஒவத் தகத்தும் விழாக்கொள்ள
உதவும் கோலம் கொளுமன்னை
தீவத் தகத்தும் விளங்கிநின்றாள்
தெருவில் உலவி யருள்புரிந்தாள்
ஆவத் தகத்தும் சம்பத்தாம்
ஆட்சி யகத்து மனிதரெலாம்
கோவத் தகத்தும் குணத்தகத்தும்
குறித்து நினைக்க விளங்கினளே 494

உரை :- திருவிழாவிலே புறப்பாட்டுக்குரிய திருக்கோலம் கொண்ட புவனேசுவரி ஓவியத்தின் கண்ணும் தீபத்திலும் தன் சக்தி விளங்க இருந்தாள். அவளே வீதிகளில் திருவுலா வந்து மெய்யன்பர்க்கு அருள் புரிந்தாள். ஆபத்துக் காலத்திலும் சம்பத்தை ஆட்சி புரியும் காலத்திலும் மனிதர் எல்லாரும் கோப காலத்திலும் குணக் கோலத்திலும் தன்னைக் குறித்து நினைக்க இறைவி விளங்கினாள்.

விளக்கவுரை :- ஓவியம் இருந்த இடத்திலிருந்து சிறப்பு எல்லாம் பெற உதவியது. உற்சவ விக்கிரகம் இருந்த வண்ணம் காட்சி தரவும் திருவுலாக் காட்சி தரவும் உதவிற்று. தீபத்திலும் தேவி பிரசன்னமாய் இருந்து அருள் புரிந்தாள். ஆபத்தும் சம்பத்தும் மனிதர்க்கு அமைந்தவை. கோபமும் குணமும் இறைவிக்கு உரியவை. கோபம் துஷ்ட நிக்ரஹம் செய்யும் போது தோன்றும். குணம் என்றும் உள்ளது.

துர்க்கா சூக்தம் ஸ்ரீசூக்தம்
துலையில் புருஷ சூக்தமெனும்
வர்க்க சுருதி வகையாலே
மலியு ஓம மெலாமேற்றுள்
கர்க்கர் வசிஷ்டர் வால்மீகி
கரத்தாற் பூசை புரிவதுபோல்
சர்க்க முறையே பாகவதம்
தமதுள் ளடைத்தார் வழிபடவே 495

உரை :- துர்க்கா ஸூக்தம் ஸ்ரீ சூக்தம் ஒப்பற்ற புருஷ சூக்தம் என்ற வருக்க பேதமுள்ள சுருதிகளாலே சிறந்த ஹோமம் எல்லாம் ஏற்றுக்கொண்டாள். கர்க்கரும் வசிஷ்டரும் வால்மீகி முனிவரும் தம் கையாலே பூஜை புரிவது போலவே தேவி பாகவதத்தை அது சொல்லும் முறைப்படி தம் உள்ளத்தில் அடைத்தவர் வழிபட்டார்.

விளக்கவுரை :- வேதத்தில் பல சூக்தங்கள் உண்டு. புருஷ சூக்தம் விஷ்ணு தத்துவம் உரைப்பது துர்க்கா சூக்தம் துர்க்கையின் பெருமை பேசுவது. ஸ்ரீஸூக்தம் மஹாலக்ஷ்மியின் மகிமை உரைப்பது பூ சூக்தம். நீளா சூக்தம் முதலியவையும் உண்டு. தேவி பரமான சூக்தங்களைக்கொண்டு ஹோமம் செய்வது இங்கு சிறப்பாக நிகழ்ந்தது. புருஷ சூக்த ஹோமமும் நிகழ இடம் பெற்றது.

நவராத் திரியாம் விழாநாளில்
நாடு சிறக்க விளங்கியதாம்
நவராத் திரியின் மகிமைதெளி
நகராம் புதுவை யகத்தினிலே
நவராத் திரிக்கே தலைமைதரும்
நலஞ்சால் சிறப்பின் நவாவரண
நவராத் திரிமா பூசனையும்
நயந்தாள் புவன நாயகியே. 496

உரை :- புவனநாயகி நவராத்திரி என்ற திருவிழாக் காலத்தில் நாடு சிறக்க விளங்கிய நவநிசி மகிமை தெளிந்த புதுக்கோட்டை நகரத்தில் நவராத்திரிக்குத் தலைமை தரும் நலம் உள்ள ஒன்பது இரவு நிகழும் நவாவரண பூஜையும் ஏற்றுக் கொண்டாள்.

விளக்கவுரை:- சிலஆண்டுகளின் முன்பு புதுக்கோட்டை தனித் தமிழ் அரசாக இருந்தது. அன்று அரசர் சதாசிவப் பிரம்மேந்திர மகாயோகியின் ஆக்ஞைப்படி நவராத்திரி பூஜையும் அன்னதானமும் தண்டுல தானமும் வித்வத் சம்பாவனையும் செய்து பாரத தேசத்துக்கே பெருமை தந்தார். அந்த நிலைமை யின் நினைவு மீண்டும் வரும்படி இந்தப் புவனேசுவரி திருக் கோயிலில் நவராத்திரி காலத்தில் வேத வித்துக்களின் வேத கோஷமும் தேவி பாகவத பாராயணமும் தினந்தோறும் சர்வத் திரவிய சமிருத்தமான நவாவரண பூஜையும் மந்திர வித்துக் களின் கைங்கரியமாக நடந்து வருகின்றது. இங்கு இப் பூஜாக் காலத்தில் முன்பு அரண்மனையும் திருக்கோகர்ண ஆலயமும் விளங்கும் காட்சி நினைவுக்கு வரும் என்று கூறலாம்.

பேறு மெவையும் தொழும்பருக்குப்
  பெருக வளிக்கும் பெருமாட்டி
நாறும் பயிரைக் கதிராக்கி
  நன்பொன் னருளும் விழியாட்டி
வேறு யிருந்த மனித்தரெல்லாம்
  வியக்கக் கலந்தே ஒன்றாகி
நூறா யிரமா மருச்சனைகள்
  நுழைந்து புரிய வேற்றனளே. 497

உரை :- எவ்வகைப் பேறுகளையும் தன் அன்பர்களுக்கு நிரம்ப அளிக்கும் கருணைப் பெருமாட்டி நாற்றாக உள்ள பயிரைக் கதிராக்கி நல்ல பொன் உதவும் திருவிழிகொண்டவள் குலம் நிலை

முதலிய காரணங்களால் வேருகப் பிரிந்து இருந்த மனிதர் எல்லாம் கண்டார் வியக்கக் கலந்து ஒன்ருகி நூருயிர அருச்சனைகளைத் தன் திருக்கோயில் நுழைந்து புரிய ஏற்றுக்கொண்டாள்.

விளக்கவுரை :- பேறு - பதிறுறு பேறு என்னலாம். எண்ணற்றவை என்றும் உரைக்கலாம். நாறு - நாற்று. தண்ணீர் தந்து நாற்றை வளர்த்துக் கதிராக்கி அருளும் கருணைப் பெருமாட்டி அருச்சனை காலத்தில் எங்கும் அன்பு பொங்கி வழியும்.

உலக மனைத்தும் நன்மைபெறும்
உள்ளத் தாலே பணியெல்லாம்
இலக வியற்றும் சாந்தமுனி
இனிய தொழும்பர் பலர்வேண்ட
விலக லறியாக் கருணையினுல்
விளக்கம் இன்றும் சிறப்புறுமா
நலகில் சிறப்பான் மிகுதளியே
அமைக்கத் துணிந்தார் புதுவையிலே 498

உரை :- உலக உயிர் எல்லாம் நன்மை பெறவேண்டும் என்ற நல்லெண்ணத்தால் திருப்பணிகளை எல்லாம் சிறப்பாக நடத்தும் சாந்தானந்த சுவாமிகள் நற்குணத் தொண்டர் பலர் வேண்டிக்கொண்டதால் என்றும் தன்னைவிட்டு விலகாதகருணையுள்ள புவனேசுவரியின் விளக்கம் இன்னும் சிறப்படையும்படி அளவற்ற சிறப்புமிக்க ஆலயம் ஒன்றை புதுக்கோட்டையில் அமைக்கத்துணிந்தார்.

விளக்கவுரை:- சாந்தானந்தர்செய்ததிருப்பணியெல்லாம் தமக்கும் புகழ் பெருமை சிறப்புவரவேண்டும் என்ற எண்ணத்தோடு தொடங்கப் பெற்றவை அல்ல. பரம வைராக்கிய மூர்த்தியான அவர் இத்திருப்பணியாலே இம்மையின்பம் எதுவும் தாம்பெற நினைக்கவேயில்லை. அவர் நினைப்பு எல்லாம் உலகமக்கள்

ஆஸ்திக மார்க்கத்தில் நடந்து இறைவி திருவருளுக்கு உரிமை பெறவேண்டும் என்பதேயாம். இறைவி பெயர்கூறி அவள் புகழ்பாடி, அன்னை உருவ ஓவியத்திற்கு மலர்பணி செய்து. மந்திர உருவேற்றி உரிய திரவியங்களோடு வழிபாடு செய்து, திருவருள் பெறலாம் எனினும், சிறந்த விக்கிரக வழிபாட்டில் உள்ளபெருமையை சிந்தித்தார்.

கருங்கற் சிலையி லிறைவியது
கருணை யுருவை யமைப்பதற்கே
பெருங்கற் பணிகள் பலபுரிந்த
பெருமை மரபிற் பிறந்தாளைத்
தருங்கற் பணியும் பொற்பணியும்
தகவால் அமைக்கும பலர்வேண்ட
இருங்கற் சிலம்பு நாடுவதற்
கெழுந்தார் சாந்த முனிவரரே. 499

உரை :- கருங்கற் சிலையாலே புவனேசுவரியின் கருணை பெறும் திருவுருவத்தை அமைப்பதற்குப் பெரியகல் திருப்பணிகள் பலவும் முன்னாளிற் செய்து பெருமை பூண்ட சிற்பியர் வமிசத்திற் பிறந்த ஒருவனை இறைவி பொருட்டு நவரத்தின ஆபரணங்களும் பொன்மயமான ஆபரணங்களும் அமைத்துக் கொடுக்கும் மனம் படைத்த பலர் வேண்டிக்கொள்ள, அவ் வேண்டுகோள் கேட்ட ஸ்ரீசாந்தானந்தர் இத்திருப்பணிக்கமைந்த மலை எங்கிருக்கும் என்று தேடிவரப் புறப்பட்டார்.

விளக்கவுரை :- கருங்கற் சிலை அமைக்கத்தக்க கற்பாறைகள் பல புதுக்கோட்டை நாட்டில் உண்டு. அருகில் இருந்த மெய்யன்பர் சிலர் இத் திருப்பணிக்குத் தக்க சிற்பியைத் தேர்ந்து தெளிந்து அவனிடம் பொறுப்பை ஒப்பிக்க வேண்டினர். அதுவும் நியாயமே என்று துணிந்த சுவாமிகள் திருப்பணிக்குத் தக்க மலை எத்திசையில் உள்ளது என்று தேடப் புறப்பட்டார்.

நாவல் நம்பி நிதிக்குவையை
நலங்தே ஞுத வேடுவதால்
காவல் சிறவா நாட்டகத்தே
கவர்ந்த முருகன் பூண்டியகம்
ஏவல் இயற்று மனப்பண்போ
டிறைவி புவனே கற்பணிக்கு
மேவல் பொருந்து தவச்சிற்பி
விளங்கக் கண்டார் முனிவரரே. 500

உரை :- நாவலூர் நம்பி சுந்தரமூர்த்தி சுவாமி பெற்ற நிதிக் குவையை நன்மை தெளியாத வேட்டுவர் சிலராற் காவல் சிறப்பாக இல்லாத கொங்கு நாட்டிலே கவரச் செய்த இறைவன் கோயில் கொண்ட திருமுருகன் பூண்டி நகரத்தே சான்றோர் ஏவிய பணியை இயற்றும் மனப் பண்போடு இறைவியான புவன நாயகி கற்பணிக்கு வாய்ப்பும் பொருந்திய புண்ணியம் உள்ள சிற்பி ஒருவன் இருப்பது கண்டார் சாந்தானந்த முனிவர்.

விளக்கவுரை :- சுந்தரர்க்குத் திருமுருகன் பூண்டியில் ஒரு திருவிளையாடல் நடந்தது. இறைவன் தான் அருளிய பொருளைக் கள்வர் கவர்வது போலக் காட்டி அவரைத் தன்பால் மீண்டும் அழைத்தான். தேவாரத்தில் இங்கு இச்செய்தி வருகிறது. இத்தலத்துச் சிற்பி பரம்பரைக் கல்வியால் நல்ல மலைக் கல் தேர்ந்து இத்திருப்பணி செய்வதாக வணக்கத்தோடு முன் வந்தான். அவன் குணம் தேர்ந்து பணியை அவனிடம் அளித்தார்.

மதுவை யருந்த வண்டர்புகும்
வனஞ்சூழ் முருகன் பூண்டியிலே
மதுவை மலரை யான்பயத்தை
மகிழு மிறைவி புவனேசி

விதுவை யிகழு முகத்தோடு
விளங்கு முருவத் திருக்கோலம்
பதுமை வணங்கக் கொளுமாறு
பணியைப் புரிவே னென்றனனே. 501

உரை :- தபதியான சிற்பக் கலைஞன், தேனைப்பருகும் பொருட்டு வண்டுகள் வரும் வனம் சூழ்ந்த திருமுருகன் பூண்டி யருகேயுள்ள மலைக் கல்லால் தேன் மலர், பசுவின் பால் என்ற திரவியங்களை உவந்தேற்கும் இறைவி புவனேசுவரி சந்திரனை இகழும் திருமுக மண்டலத்தோடு விளங்கும் உருவத் திருக் கோலம் திருமகளே வந்து வணங்குமாறு ஏற்றுக்கொள்ளும்படி திருப்பணி புரிவேன் என்று கூறினன்.

விளக்கவுரை :- பரம்பரைக் கலைஞனை இத்தபதி சாந்தா னந்தர் கருத்தைத் தன் மனத்தில் ஏற்றுக்கொண்டு விக்கிரகத் திருப்பணிக்கேற்ற நல்ல கற்கள் திருமுருகன் பூண்டிப் பக்கம் உள்ள மலைப் பாறைகளில் உண்டு என்று கூறிப் பக்தி சிரத்தை யோடு இத் திருப்பணியை யேற்றான்.

கலையிற் சிறந்த புதுவையிலே
கல்லும் பொன்னும் கனிவுபெற
சிலையிற் சிறந்த பலவமைந்த
சிறப்பை யறிவேன் வரலாற்றால்
நிலையிற் சிறந்த வாலயத்தே
நிமலை புவனை திருவுருவச்
சிலையிற் பணியைப் பொறுக்கவெனச்
சிறியேன் தனையும் அழைப்பாளே. 502

உரை :- ஓவியம், சிற்பம், காவியம், நாடகம், நாட்டியம் முதலிய கலைகள் எல்லாம் சிறந்த புதுக்கோட்டையிலே கல்லும் பொன்னும் கனிவு பெற்றனவாகத் தோன்றும்படி விக்கிரகங் களிற் சிறந்த பல சிற்பங்கள் கலைச் செல்வமாகவே அமைந்த

சிறப்பைத் தமிழகத்தின் வரலாற்ருல் அறிவேன். கோபுர நிலைகளாற் சிறந்த இப் புவனேஸ்வரி திருக்கோயிலில் வீற்றிருத்தற்குரிய பரதேவதையான புவனேஸ்வரி சிலைத் திருப்பணியை நீ ஏற்பாய் என்று அவளே சிறியேன் ஆன என்னை அழைக்கின்ருள்.

விளக்கவுரை :- புதுக்கோட்டை சுதேச சமஸ்தானமாக இருந்தபோது அங்கு அரண்மனையும் கோயிலும் கலைக்கோயிலாக விளங்கிய வரலாறு உலகம் அறிந்தது. அத்தகைய பழம் பெருமை படைத்த நகரத்தில் அமையும் புவனேசுவரி திருக்கோயிலுக்குப் பிரதானமான கைங்கரியத்தை யேற்கும் பொறுப்பை இக்கலைஞன் தன் பேச்சிறப்பாலோ கலைச் சிறப்பாலோ பெற்றதாக உரைக்கவில்லை. இறைவி அருட் சிறப்பால் பெற்றதாக உரைக்கிருன்.

எண்மை யிரத மொருநாளில்
　　இயற்ற அறிந்த தச்சனவன்
ஒண்மை விளங்க ஒருதிங்கள்
　　உள்ள முழுதும் பணிக்காக்கித்
திண்மை யிலங்கச் செய்தளித்த
　　செயற்பா டமைந்த சக்கரம்போல்
வண்மை யுடையீர் புவனைசிலை
　　வகுத்துத் தருவேன் என்றனனே. 503

உரை :- எட்டு இரதங்களை ஒரு நாளிற் செய்யத்தெரிந்த தச்சன் ஒருவன் தன் அறிவுத்திறமை எல்லாம் விளங்க ஒருமாத காலம் தன் மன முழுதும் பணிக்கே ஆக்கி உறுதி விளங்கச் செய்து தந்த செயற்பாடு நன்கு அமைந்த சக்கரம் போல வள்ளன்மை மிக்க சுவாமிகளே, புவனேசுவரி விக்கிரகத்தை அமைத்துத் தருவேன் என்ருன்.

விளக்கவுரை :- "வைகல் எண்டேர் செய்யும் தச்சன திங்கள் வலித்த கால் அன்னேனே" என்ற புறப்பாட்டின்

கருத்து இங்கு எடுத்து ஆளப்பட்டுளது. செயற்பாடு-தொழிற் சிறப்பு. ஒரு நாளில் எட்டுத் தேர் செய்யவல்ல தச்சன் ஒரு மாதம் எல்லாம் உழைத்துச் செய்த ஒரு சக்கரம் போல் சிலை அமையும் என்றான்.

தருக புவனே திருச்சிலையைத்
   தகுந்த முறையால் அமைப்பித்தே
வருக வெனவே சிற்பிக்கு
   வாக்குப் பிறப்பித் தருள்முனிவர்
உருக வுளத்தை யவட்காக்கி
   உரையை அவள்தான் மலராக்கிப்
பெருக வவட்கே பணிபுரியும்
   பெருமை விளங்க இருந்தனரே. 504

உரை :- புவனேசுவரி விக்கிரகத்தைத் தகுந்த முறை யாலே அமைத்துத் தருக. பணிபுரியப் போய் வருக என்று சிற்பிக்கு ஆணை பிறப்பித்தருளிய முனிவர் தம் உள்ளத்தை உருகச் செய்து அவளுக்கே உரிமையாக்கி, வாக்கை அவள் திருவடியில் அருச்சிக்கும் மலர் ஆக்கி அவளுக்கே மிகவும் திருப் பணி புரியும் பெருமை விளங்க இருந்தார்.

விளக்கவுரை:- தபதியை நோக்கி, "ஐய, உன் விருப்பம் போற் கருங்கல் எடுத்துவந்து இத்திருக்கோயில் கண் விற்றிருக் கத் தக்க அளவிலே ஐந்தடி உயரம், அதற்குத் தக்க ஆக்ருதி, அமர்ந்த சிலைசெய்துகொண்டு விரைவில் வருக" என்று கட்டளை யிட்டருளினர். தபதியும் தன் கடமை செய்யப் புறப்பட்டான் முனிவர் உள்ளமும் உரையும் இறைவிக்கே அர்ப்பணம் செய்து காலம் எல்லாம் அவள் திருப்பணிக்கே கழிய வேண்டும் என்ற கருத்தோடு தமக்குரிய மந்திரானு-சந்தானத்திலும் தியான யோகத்திலும் மெய்யன்பர்க்கு அவள் பிரசாதத்தை அளிப்பதிலும் பொழுது போக்கிக்கொண்டு பாகவத ரசத்தை அனுபவித்துக் கொண்டிருந்தார்.

தவத்தின் சிறப்பாற் றபதியெனும்
தகுதி பெற்ற பெருங்கலைஞன்
சிவத்தின் அகத்தே விளையாடிச்
சிவத்தை யருளும் புவனேசி
நவத்தின் வகைமை யெலாம்விளக்கும்
நலஞ்சால் சிலையை நன்கமைத்தான்
சிவத்தின் மகவைத் தியானித்தே
செய்வாற் கியலாச் செய்லுளவோ. 505

உரை :- தவத்தின் சிறப்பாலே பரம்பரைத் தபதி என்ற தகுதியைப் பெற்ற பெருங்கலைஞன் சிவத்தின் அகத்தே புகுந்து விளையாடி அன்பர்க்கு மங்கள வாழ்வு அருளும் புவனேசுவரி புதுமை மேன்மை என்ற குணங்களின் வகைகளை யெல்லாம் விளக்கும் நலம் பொருந்திய விக்கிரகத்தை நன்கு அமைத்தார். சிவகுமாரனைத் தியானித்தே எடுத்த காரியத்தைச் செய்பவர்க்கு இயலாத செயலும் உண்டோ.

விளக்கவுரை :- "குலவித்தை கல்லாமற் பாகம்படும்" என்ற பழமொழிப்படி பன்னிரு தலைமுறையாகக் குலத்தார் பயின்ற சிற்பக் கலையில் ஊறி இறைவனிடம் மெய்யன்பும் கொண்ட தபதி புவனேசுவரி விக்கிரகத்தைச் சாஸ்திர சம்பிரதாயப் பிழை படாமல் நன்கு செய்து நன்னாளில் சமர்ப்பிக்கச் சித்தம் ஆகியிருந்தான். சுவாமிகளுக்குச் செய்தி வந்தது.

பிரமம் யானே யெனவுரைத்துப்
பிரம தத்வ வுபதேசம்
பிரமன் திருமால் சிவன்பெறவே
பிறப்பித் தருளும் பெருமாட்டி
பரம சுபமங் களநாளிற்
பழமை சிறந்த புதுவைக்கண்
வரம தமைந்த வதிட்டானம்
வரவே யுள்ளம் கொண்டனளே. 506

உரை:- நானே பிரம்மம் என்று கூறிப் பிரமனும் திருமாலும் சிவபெருமானும் பிரம்ம தத்துவ உபதேசம் பெற அதன் மெய்யறிவைப் பிறப்பித்தருளும் புவனேசுவரி பரமசுபமான மங்கள நாளிலே பழமை சிறந்த புதுக்கோட்டையிலே உயர்வு பொருந்திய அதிஷ்டானத்துக்கு வரத்திருவுள்ளம் கொண்டாள்.

விளக்கவுரை :- ஓவிய உருவத்தில் அமைந்த பல சிறப்புக்களை யேற்று மெய்யன்பர்களுக்கு அருள் புரிந்து வரும் புவனேசுவரி கருங்கற் சிற்ப உருவம் பெற்று நாள்தோறும் அபிஷேக ஆராதனை பெற்று அலங்காரமும் ஏற்றுக்கொண்டு ஆராதகர்க்கும் அடியவர்க்கும், பணியாளர்களுக்கும் இவரை எல்லாம் இவ் வழியில் ஊக்கிய சாந்தானந்த சுவாமிகளுக்கும் அவரவர் விரும்பிய பேறுகளை அருளப் புதுக்கோட்டை அதிஷ்டானத்தில் தனக்கென அமைந்த திருக்கோயிலில் வரத் திருவுள்ளம் கொண்டாள். கோயிற் திருப்பணி இதற்குள் சிறந்த கற்பணியாளரால் நன்கு நடந்தது.

வளவர் குலத்தார் திருப்பணியும்
வழுதி குலத்துத் திருப்பணியும்
அளவை யிசைக்க வரிதாகும்
அழகோ டேற்ற புதுவைக்கண்
உளமு முயிரும் உணர்வுந்தன்
உருவுக் காக்கும் முனிவர்பிரான்
இளமை மனமே யுருக்கமுற
இனிது புகுவ தாயினளே. 507

உரை.- சோழ குலத்தார் திருப்பணியும் பாண்டிய குலத்தார் திருப்பணியும் அளவு உரைக்க இயலாத அழகோடு அமைந்த புதுக்கோட்டையுள் உள்ளமும் உயிரும் உணர்வும் தனது உருவத்துக்கே ஆக்கிய முனிவர் பெருமான் இளமை மனம் உருகும்படி புவனேசுவரி இனிது புகுவதாகும்.

விளக்கவுரை :- புதுக்கோட்டை இன்று சுதந்திர அரசுள் ஒரு சிறிய பகுதியாக இருக்கின்றது. இந்நாடு தனித் தமிழரசாக வாழ்ந்தபோது தென்னிந்திய சரித்திரத்துக்கு வேண்டிய பல புராதன சின்னங்கள் இங்கு இருப்பது கல்வெட்டு ஆராய்ச்சியாளர் அறிந்து உரைத்த உண்மையாம். இந்நாட்டுள் பாண்டியர் சோழர் பல்லவர் திருப்பணிகள் இன்றும் உண்டு

ஞான யோக முடிவேந்து
ஞானி பக்தர் சதாசிவனூர்
தான மெனவே தலைசிறந்த
தலத்தே யோவ வுருவத்தும்
மான மிகுந்த வைம்பொன்னின்
வனப்புச் சிலையி னமைப்பாலும்
வானம் வணங்க வரும்புவனே
வகுவாள் ஆனுள் சிலையெனவே. 508

உரை :- ஞான யோகத்தில் முடி மன்னர் ஞானியும் பக்தருமான சதாசிவ முனிவர் அதிஷ்டானம் என்று சிறப்புப் பெற்ற புண்ணிய பூமியில் ஓவிய உருவத்தாலும் பெருமை மிகுந்த ஐம்பொன் சிலை உருவத்தாலும் தேவருலகம் வணங்க வந்த புவனேசி இப்பொழுது கற்சிலை யுருவமும் ஏற்றுள்

விளக்கவுரை :- புதுக்கோட்டை அதிஷ்டானத்தில் அடங்கிய சதாசிவப் பிரமேந்திரர் பக்தியும் ஞானமும் கலந்து செல்லும் தத்த சம்பிரதாயத்தில் மிக்க சிறப்புற்ற தவச்செல்வர். தானம்-அதிஷ்டானம். இம்மகான் இங்கு புகுந்தபொழுது இந்நிலம் இருந்த நிலை வேறு, இன்று இருக்கும் நிலை வேறு. அன்று பொதுப் புறம்போக்காக இருந்தது. பின்பு குப்பைமேடு ஆயிற்று. பிறகு ஜட்ஜ் பதுமநாப சாஸ்திரியார்க்கு உரிய பூமியாயிற்று. இன்று அவர் குடும்பத்தார் ஏற்றுக்கொண்ட தருமத்தால் சதாசிவ முனிவருக்கே உரியதாயிற்று. இப் புண்ணிய

பூமியிலே புவனேசுவரி வந்து புகுந்தாள். அவளும் மும்மூர்த்திகளைப் போல மூன்று உருவம் ஏற்றுள். இப்பொழுது கற்சிலை உருவத்தில் இந்நாட்டுக்கு உறுதிதரப் புகுந்தாள்.

வரையைக் குடைந்து கோயில்செயும்
வனப்புக் கலையிற் பயில்தச்சர்
தரையிற் சிலைகள் கொணர்ந்தவற்றைத்
தகுமா றிழைக்கும் தொழில்வலவர்
கரையில் கருணைப் புவனேசி
கவின வமரும் திருக்கோயில்
புரையில் முறையா லமைப்பமெனப்
புகுந்தார் தகுந்த நினைப்போடே. 509

உரை :- மலையைக் குடைந்து குடைவரைக்கோயில் செய்யும் அழகுக் கலையிற் பயின்ற கற்பணியாளர் தரையிலே மலைக் கற்களை எடுத்து வந்து அவற்றைத் தக்கவாறு பணிக்குப் பயன்படச் செய்யும் தொழில் வல்ல சிற்பிகள் எல்லையற்ற கருணையுள்ள புவனேசுவரி அழகுற வாழும் திருக்கோயிலைக் குற்றமற்ற முறையாலே அமைப்போமென்று தகுந்த நினைப்போடு திருப்பணி செய்யப் புகுந்தார்.

விளக்கவுரை :- புதுக்கோட்டையில் திருக்கோகர்ணமும் திருமெய்யமும் குடைவரைக் கோயில்களாம். மூலஸ்தானங்கள் மலைக்குள் இருப்பதை இன்றும் காணலாம். மற்றக் கற்பணிகளும் இங்கு முன் மிக அழகாக நிகழ்ந்துள்ளன. இத்தகைய நாட்டில் இப் புதுப் பணிக்கு ஏற்ற கற்றொழிற் புலவர் பலர் வந்தனர்.

தெற்கு நோக்க வமைதளியிற்
சிறிய சிற்பக் கருவறைக்குள்
நற்கு விளங்கு முருவோடு
நங்கை புவன நாயகியே

விற்கு மிகுந்த மேனியோடு
விருப்ப முறவே வீற்றிருக்கச்
சொற்கு நெறிசொல் சுருதியெனத்
தூண நான்கால் மண்டபமே. 510

உரை :- தெற்கு முகமாக அமைந்த கோயிலில் சிறிய அளவில் இயன்ற சிற்பச் சிறப்புள்ள கர்ப்பக் கிரகத்துள் நன்கு விளங்கும் திருவுருவத்தோடு புவன நாயகியாகிய நங்கை ஒளியால் விளங்கும் திருமேனியோடு பெருமை பொருந்த விற்றிருக்கச் சொற்கள் அமையும் வழிகாட்டும் வேதம் போல நான்கு தூண்களைக் கொண்ட நாற்கால் மண்டபம் அமைந்தது.

விளக்கவுரை :- கோயில் தெற்கு முகமாகப் புவனேசுவரியின் பெருமை விளங்க அமைந்தது. கருப்பக் கிரகம் அக்கோயிலின் அளவுக்குத் தக்கபடி எழுந்தது. அர்த்த மண்டபம் கருப்பக் கிரகத்துக்கு முன்னே சிறிது இடம் விட்டு நான்கு கருங்கல் தூண்களோடு நன்றே அமைந்தது. இத்தூண்கள் கருமையும் வழுவழுப்பும் உள்ளவையாய் மிக்க அழகோடு விளங்கின. நாற்கால் மண்டபம் மேற்பகுதி இதற்கேற்ற அழகுற அமைந்தது. வேதங்கள் உலகச் சொற்கள் நடக்கும் நெறியை வகுத்துக் கொடுப்பன என்பது பாணினி ஆகிய வியாகரண ஆசிரியர் ஏற்றுக்கொண்ட கொள்கையே. காலபேதத்தாற் சொற்கள் மாறினும் ஆதியில் அவற்றை அமைத்தவை வேதங்களே.

கருங்கற் பணியும் செங்கல்லாற்
கலையின் நலத்தோ டமைபணியும்
இருங்கற் சிமயத் திருப்பாட்கே
இயைய மாறு பலர்புரிய
வருங்கற் குவையை யணையிட்ட
வாயு வன்னி மகார்போல
தருங்கற் களினுல் இயைபணியைத்
தகவே புரிந்தார் பலர்நன்றே 511

உரை :- கருங்கற்களால் இயன்ற திருப்பணியும் தளத்தின் மேற் செங்கல்லால் அமைந்த கலை நலம் உள்ள திருப்பணியும் பெருங்கல் உருவமான மலை முடி வீற்றிருக்கும் இறைவிக்கு எடுத்து வந்த கற்குவைகளைக்கொண்டு கடலில் அணை கட்டிய வாயு குமாரன் அனுமானும் அக்கினி குமாரன் நீலனும் போலவே சிறிய பணியாளர் எடுத்துத் தரும் கற்களினால் இயைந்த பணியைப் பெருந் தொழில் வல்லார் நன்கு புரிந்தனர்.

உரை :- கர்ப்பக் கிரகத்தில் அடித்தளம் கருங்கற்பணி. அதற்கு மேற் சுவர்கள் எல்லாம் செங்கற்பணி. மேலே உள்ள விமானமும் செங்கற் பணியே. முன் மண்டபத்தில் கர்பக் கிரகத்தை ஒட்டிய பகுதி செங்கல்லால் இயன்றது. நாற்கால் மண்டபம் கருங்கற்கால் மேல் நிற்பது. மேலே செங்கற் பணியே.

கோயில் எழுந்து கும்முடமும்
குணஞ்சால் நாற்கால் மண்டபமும்
ஞாயில் போலச் சுவரமைந்த
நலஞ்சால் முனிவர் அதிட்டானம்
வேயில் இலையே வெள்ளிமலை
வியன்பொன் மலையே யெனவிளங்கும்
வாயில் வேத மணக்குமன்னை
வருமா றமைந்த விரைவினிலே. 512

உரை :- திருக்கோயில் முறையே எழுந்து மேலே இருத்தற்குரிய கும்முடமும் முன்னே அமைதற்குரிய நாற்கால் மண்டபமும் அரண்மதில் போலப்பெருஞ்சுவர் அமைந்த நன்மை சிறந்த சதாசிவ அதிஷ்டானமானது கூரை வேய்ந்த இல்லம் இல்லை. வெள்ளிமலை சிறப்புள்ள பொன்மலையே என்று விளங்கும் திருவாக்கில் வேதம் மணக்கும் புவனேசுவரி எழுந்தருள அமைந்த காலத்துள் நிறைவேறின.

விளக்கவுரை:- கும்முடம்-விமானம். ஞாயில்-கோட்டை மதில். அதிட்டானத்துக்குரிய முனிவரை இங்கு நினைக்க வேண்டும். ஆதலின் உரைக்கப்பட்டது. வேயில் - கீற்றுக் கூரை வேய்ந்த இல்லம். ஓடு வேய்ந்த இல்லமும் ஆம். புவனேசுவரி அனந்த வேதங்களையும் அருளியவள். அனந்த வேதங்களாற் புகழப்பட்டவள். ஆதலால் வேதம் மணக்கும் வாய் உள்ளவள் என்று உரைக்கப்பட்டாள். அன்னை வருமாறு அமைந்த அதிஷ்டானம் வெள்ளியமலை பொன்மலை போல விளங்கும் என்று வாக்கியத்தை முடிக்க வேண்டும்.

குறித்த நன்னாள் குறுகியது
  குழுமி வந்தார் மெய்யன்பர்
நெறித்த குழலார் தமிழிசையும்
  நேயத் தொழும்பர் அரவொலியும்
கறித்த திரண வரிணம்போற்
  கண்கொள் இளமைக் கன்னியர்தம்
பிறித்த லுணராப் பாவையுமாப்
  பிறக்கம் பெறுமால் திருத்தளியே. 513

உரை :- புவனேசுவரி பிரதிஷ்டைக்கு என்று ஒளி நூலோர் குறித்த நல்ல நாள் நெருங்கியது. மெய்யன்பர் திரள் திரளாக வந்தனர். நெறிப்பு அமைந்த கூந்தலை உடைய பெண் மக்கள் பாடிய தமிழிசையும் பக்திமிக்க தொண்டர்களின் ஹரோஹரா முழக்கமும் புல்லைக் கடித்த மான் போற் கண்கொண்ட இளஞ்செல்வியர் சைவ வைணவ பேதம் அறியாத பாவைப் பாட்டும் ஆக அக்கோயில் விளங்கியது.

விளக்கவுரை:- புவனேசுவரி பிரதிஷ்டை கும்பாபிஷேகம் நிகழ்ந்த வைபவம் சுருக்கமாக உரைக்கப்படுகிறது. பக்த கோஷ்டிகள் தமிழ்நாட்டுப் பல பகுதிகளிலிருந்தும் வந்தனர். ஹராஹரா முழக்கம் இயல்பே. இளங் கன்னிகளை மான் போன்ற

விழியுடையார் என்பது மருட்சியை விளக்க. திருப்பாவை-திருவெம்பாவை.

வேத முழக்க மொருமருங்கு
  வீணை யாழே சாரீர
நாத முழக்க மொருமருங்கு
  ஞான நூலின் ஆராய்ச்சிப்
போத முழக்க மொருமருங்கு
  புவன வல்லி புகழ்பாடும்
கீத முழக்க மொருமருங்கு
  கிளர விழாவும் தொடங்கியதே. 514

உரை :- ஒரு பக்கத்தில் வேத முழக்கம் எழுந்தது. ஒரு பக்கம் வீணை, யாழ் சாரீர சங்கீத முழக்கம் எழுந்தது. ஒரு பக்கம் வேத வேதாந்த சாஸ்திர ஆராய்ச்சியை விளக்கியுரைக்கும் உபன்யாச முழக்கம் எழுந்தது. புவன நாயகியின் திருப்புகழ் பாடும் கீத முழக்கம் ஒரு பக்கம் எழுந்தது. இங்ஙனம் பலவகை முழக்கம் கிளரத் திருவிழா தொடங்கியது.

விளக்கவுரை :- சாரீர நாதம் என்பது சாரீர வீணை என்றும் உரைக்கப்படும். 'வாக்கேயகாரர்' தம் திறமை எல்லாம் காட்டிப் பாடினர். வீணை வேறு, யாழ் வேறு. யாழிற் பல வகை உண்டு. அதனை யாழ் நூலால் அறியலாம் ஞானநூல் ஆராய்ச்சிப்போதம்-ஞான நூல்களை ஆராய்ந்தறிந்த மகான்கள் தாம் அறிந்த உண்மைகளைப் பிறர்க்குத் தெளிவாக்கி உபந்யாசம் செய்வது. புவனநாயகி புகழ்க் கீதம் வடமொழியிலும் தமிழ் மொழியிலும் உண்டு. தேவி பாகவதத்தில் உள்ள பிரம விஷ்ணு சிவ மூர்த்திகள் செய்த துதிகளும் பாடப்பட்டன. கும்பாபிஷேகத் திருவிழா நிகழ்ச்சியில் ஒரு பகுதி இது.

புதுவை நகர மாந்தர்முனம்
புரிந்த சிறந்த புண்ணியமோ
மதுவை வேத வாக்கியத்தே
மதித்த முனிவர் தவப்பேறே
விதுவை யடிமை கொளத்தக்க
விளக்க முகத்துப் புவனேசி
வதுமை கொளவே வருங்கன்னி
மகள்போ லமர்ந்தாள் இருக்கையிலே. 515

உரை :- புதுக்கோட்டை நகர மக்கள் முற்பிறப்பிற் செய்த சிறந்த புண்ணியப் பயனே, வேத வாக்கியத்தில் மதுப் பிரமாணத்தை நன்கு மதித்துப் பொருள் தெளிந்த முனிவர் தவப் பேறே, சந்திரனை அடிமை கொள்ளத் தக்க ஒளிமிக்க முகமண்டலம் உள்ள புவனேசுவரி திருமணம் கொள்ளவரும் கன்னிப்பெண் போலத் தன் இருக்கையில் அமர்ந்தாள்.

விளக்கவுரை :- பரதேவதை பிரதிஷ்டை உரைக்கப் படுகிறது. இப் புண்ணிய பூமியில் ஆலயம் பெற்றுத் தனக்குரிய நிலத்தில் அமர்ந்தருளும் இறைவி திருவருளைப் பல படப் பராட்டுவது இச்செய்யுள். கன்னிப்பெண் சர்வாலங்கார பூஷிதையாகத் திருமண மண்டபத்தில் நுழைந்தாற்போல் தன் இருக்கையில் அமர்ந்தாள் என்றது. தேவிக்குத் திருக்கலியாணம் உண்டு என்ற கருத்தால் அன்று கன்னிப் பெண் வதுவை மண்டபத்துள் வருவது போல அமர்ந்தாள் என்ற அளவிற் கொள்ளவேண்டும்.

இறைவி யெழிலே ஒளிச்சிறப்பை
இனிதே காண்மின் விழிபடைத்த
நிறைவு பெறுக பெறுகவென
நிகழ்த்தும் வேத வொலியூடே

நறையும் பயமும் பழவகையும்
நறிய பிறவும் அபிடேக
முறையும் அடைந்து புகுந்தவண்ணம்
மொழிய வல்லார் உளரேயோ. 516

உரை :- புவனேசுவரி தேவியின் அழகையும் ஒளிச் சிறப்பையும் இனிதே காண்பீர்களாக. விழிகளைப் படைத்த நிறைவு பெறுக பெறுக என்று உரைக்கும் வேத முழக்கத்தோடு தேனும் பாலும் பழவகைகளும் மணம் மிக்க பிற பொருள்களும் அபிஷேக முறையைப் பெற்றுக் கோயிலிற் புகுந்தவாறு இவ்வாறு என்று உரைக்க வல்லார் உளரோ !

விளக்கவுரை :- வேதத்தில் உள்ள தேவி சூக்தங்கள் பர தேவதையின் ரூபலாவண்ய அதிசயத்தை அழகுபட விளக்குகின்றன. அவள் சக்தியை மிகத் திறம்பட உரைக்கின்றன. ஸ்ரீ சக்ரத்தில் தேவியை உபாசிப்பவர் தேன், பால் முதலிய இனிய பொருள்களை அபிஷேகத்திற்கு எடுத்துக்கொள்வது முறை. அவ்வண்ணமே புவனேசுவரி விக்கிரகத்துக்கும் மதுர பதார்த்தங்களால் அபிஷேகம் நிகழ்ந்தது. இறைவி திருக்கோலக் காட்சி காண்க. கண் பெற்ற பேறு பெறுக என்று தேவர்களே முழங்குவது போல உரைக்கப்பட்டது என்றும் கொள்ளலாம். வேதப் பொருளும் அதுவே ஆகும்.

கும்பம் நிரம்பப் புனிதசலம்
குணஞ்சால் சுருதி தெளிமறையோர்
நம்மன் பெருமை விளம்புபொறி
நயப்பால் உரைத்தே யுருவேற்றி
வம்பர் குறும்பர் இடம்பரெலாம்
மனமே மாறி வணங்கிநிற்க
இம்பர் உலகம் கண்தூங்கி
யெழவே இறைவிக் காட்டினரே. 517

உரை :- குடங்கள் நிரம்பப் புனிதமான மந்திர பூத தீர்த்தத்தைக் குணம்மிக்க வேதம் பயின்ற பெரியோர்கள் பரமேசுவரன் பெருமையே உரைக்கும் வாக்கியங்களை விருப்பத்தோடு உரைத்து உருவேற்றி வம்பர், குறும்பர், இடம்பம் உள்ளவர்களும் மனம் மாறி வணங்கி நிற்க இவ்வுலகம் இன்பம் பெருகித் துள்ளி யெழ இறைவிக்கு அபிஷேகம் செய்தனர்.

விளக்கவுரை :- ஸ்ரீ ருத்ர மந்திரத்தை பதினொரு முறை ஜபித்துப் பதினொரு கும்பங்களில் சுத்த தீர்த்தத்தை வைத்து அதனைப் பூதம் ஆக்கி ஸ்ரீ சூக்த, பூ சூக்தம் முதலியவையையும் ஜபித்து, அக் கும்ப ஜலத்தைக் கோயிலைச் சுற்றி எடுத்துவந்து தேவிக்கு முறைப்படி அபிஷேகம் செய்தனர். கும்பாபிஷேகம் என்ற சிறப்புப் பெயர்க்கு உரிமை தரும் செய்கை இதுவே ஆகும். மந்திர தீர்த்த அபிஷேகம் இது.

கல்விக் கிரகம் இவர்என்றே
 கணிக்கத் தக்க பேரறிஞர்
கல்விக் கிரகம் எனக்கருதும்
 கருத்தை யொழித்து மூவர்பணி
நல்விக் கிரகம் இதுவென்று
 நயப்பிற் பணிவின் வழிபட்டேம்
சொல்விக் கிரகம் இசைத்தென்று
 தொழுதார் பணிந்தார் புகழ்ந்தாரே 518

உரை :- கல்விக்கு உறைவிடம் இவர் என்றே மதிக்கத் தக்க பேரறிஞர்கள் இது கல்லால் செய்த சிலைதானே என்று கருதும் இழி கருத்தை விட்டு மும்மூர்த்திகள் பணிந்த நல்ல தெய்வ மூர்த்தம் இது என்று விருப்பத்தோடும் பணிவோடும் வழிபட்டேம் நற் சொற்களை இசைத்தோம் என்று தொழுதார், பணிந்தார், புகழ்ந்தார்.

விளக்கவுரை :- வேதமூர்த்தி என்பது போலக் கல்விக் கிரகம் என்பது தமிழிலே பிரிமொழிச் சிலேடையாக அமைக்கத்

தக்க தொடர் மொழி, முதல் அடியிலே கல்விக்கு உறையுளாக இருப்பவர் என்ற பொருளும் இரண்டாம் அடியில் சிலா விக்கிரகம் என்ற பொருளும் அமைந்துள்ளன. சொல் விக்கிரகம் என்ற தொடர் மொழி, தமிழில் சொற் சிற்பம், சொல்லோவியம் என்று வழங்கும் தொடர் மொழிகளை ஒத்த பொருள் உள்ளது. நல் விக்கிரகம் என்ற தொடர்மொழி-முத்தேவர் பணிந்த பரதேவதை யான புவனேசுவரியின் திருவுருவத்தை விளக்கும் பேறு பெற்றது. பெரும் புலவர்களும் பேரறிஞர்களும் அறிவர்களும் புவனேசுவரி கோலம் நோக்கி மனமாரப் புகழ்ந்தனர் என்பது கருத்து.

புவன வல்லி திருவுருவம்
 பொலிவை விளக்கும் பொறுப்பாலே
கவன முழுதும் அவள்பதத்தே
 கவிழா நின்ற திருப்பணியார்
சலன சுருதி முழக்கத்தே
 தமையு மறந்து புனேவித்தார்
பவன மமர்ந்த முடியரசி
 பார்வை விழுமே குழுவிடையே. 519

உரை :- புவனேசுவரி விக்கிரகத்தில் உள்ள பரதேவதை யின் திருவுருவத்தின் திவ்ய சோபையை மெய்யன்பர் காணவே விளக்கும் பொறுப்பால் தம் கவனம் முழுதும் அவள் திருவடி யிலே கவிழ வைத்த திருப்பணிச் செல்வர் துதிமயமாய் ஒலிக்கும் வேத முழக்கத்தினிடையே தம்மையே மறந்து திவ்ய வஸ்த்ராப பரணுதிகளாலும் மலை போல வந்த புஷ்பமாலை முதலியவற்றாலும் அலங்காரம் செய்தனர். அப்பொழுது திருக்கோயிலில் நல் முகூர்த்தத்தில் வந்து அமர்ந்த சர்வலோக நாயகியின் அருட் பார்வை பக்த கோஷ்டிமேல் விழுந்தது.

விளக்கவுரை :- தேவி திருவுருவத்தை அலங்கரித்துக் கண் குளிரப் பார்ப்பதே தன் வாழ்வின் நோக்கமாகக்கொண்ட

அர்ச்சகர் மூல விக்கிரகத்துக்கும் உற்சவ விக்கிரகத்துக்கும் அலங்காரம் செய்தார்.

தேவி நினது திருவருளாற்
செகமே நலத்தைப் பெறுகென்பார்
தேவி நினது விழிக்கருணை
சிறப்பை யருள்க வெமக்கென்பார்
தேவி நினது திருவடிக்கே
சேவை செய்வேம் யாமென்பார்
தேவி நினது பேராற்றல்
தெரியும் இனிநன் குலகென்பார். 520

உரை :- தேவி திருமுன் கூடியிருந்த நன்மக்கள் எல்லாரும் பரதேவதையே, உன் திருவருளாலே உலகமே நன்மை பெறுக என்று வேண்டுவார். ஜகந்நாயகி, உன் திருவிழி பொழியும் கருணைப் பெருக்கு அடியேங்களுக்கு 'நிச்சிரேயசம்' என்ற பெருஞ் சிறப்பை அருள்க என்று வேண்டுவார். ஜகதம்பிகே, நாங்கள் உன் திருவடிக்கே என்றும் தொண்டு பூண்டிருக்கப் பெறுவோம் என்பார். புவனேசுவரி தேவியே இனி உலகம், உனது மகிமை, சக்தி, அனுக்கிரகம் முதலிய பெருமைகளையெல்லாம் அறிந்துகொள்ளும் என்றனர்.

விளக்கவுரை :- தமக்கு என்று உலக நலங்களில் ஒன்றையும் வேண்டிக்கொள்ளும் சிறுமதிபடையாத பெருமக்கள் ஞானிகளே ஆகவேண்டும். அவர்கள் தேவி திருமுன் நின்று வேண்டும்போது உலகப் பொதுநலம் வேண்டுவரே அன்றி வேறு எதுவும் வேண்டார். சிறப்பு என்ற சொல் வள்ளுவர் வாக்கில்வருவது "பிறப்பு என்னும் பேதமை நீங்கச் சிறப்பென்னும் மெய்ப் பொருள் காண்பது அறிவு." "சிறப்பு-நிச்சிரேயசம்' - முக்தி.

புவனே சுவரி கவசமெனப்
பொருந்து துதியை யேற்றருள்வாய்
புவனே சுவரி அந்தாதி
பொலியப் பொலிய அணிந்தனையே
புவனே சுவரி சதகமெனப்
புலவர் சூட்டப் பெறுவாயே
புவனே சுவரி அவற்றுளெலாம்
புகுந்து நிரம்பி விளங்குதியே. 521

உரை :- புவனேசுவரி கவசம் என்ற பெயரோடு உனக்குப் பொருத்தமாக அமைந்த துதியை ஏற்றருள்வாய். புவனேசுவரி அந்தாதியை உன் திருமேனி பொலிவுபெற மாலை போல அணிந்தாயே. நாளை புவனேசுவரி சதகம் என்ற தோத்திரமும் புலவராற் சூட்டப் பெறுவாய். புவனேசுவரி தேவி, நீ அந்தத் துதிகளில் எல்லாம் புகுந்து நிறைந்து விளங்குவாய்.

விளக்கவுரை :- புவனேசுவரி கவசம், அந்தாதி, சதகம் என்ற மூன்று பிரபந்தங்களும் ஒருவர் திருப்பணி. பஞ்சரத்னம் என்ற பிரபந்தம் வேறு ஒரு புலவர் திருப்பணி, நாளை இப் புவனேசுவரி பிள்ளைத் தமிழ், திருப்பள்ளி யெழுச்சி திருவாயிரம் முதலிய பிரபந்தங்களையும் தன் அடிபற்றி அகலாதிருக்கும் மெய்யன்புள்ள புலவராற் பெற்றுக்கொள்ளத் திருவுளம் கொண்டிருக்கிறாள். வேதங்களுக்குள் அடங்காத மகிமையைக் கொண்ட பெருமாட்டிக்கு இவை பெரியன வாகுமா !

வேண்டு மனத்தார் வேண்டுவன
விழுப்ப மனைத்தும் நல்குகின்றாய்
நீண்டு நிமிரும் திருக்கோயில்
நிலத்தே விளங்கி அருள்பொழிதி
பூண்டு பொலிந்த ஆபரணம்
பொலிவே யொளியே பூரணையே
ஆண்டு புதுவை யரசாகி
அமர்தி யென்றார் முனிவரரே. 522

உரை :- இன்ன பொருள் நமக்கு வேண்டும் என்று நினைக்கும் மனமுள்ள மக்கள் வேண்டும் பொருள்களையும் பெருமைகளையும் பூரணமாகக் கணப் பொழுதிலே கொடுக்கின்றாய். உனது நீண்டு நிமிர்ந்த பெருந் திருக்கோலத்தைப் பூமண்டலத்தில் விளக்கி வணங்குவார்க்கு எல்லாம் அருள் பொழிவாயாக பூண்டு விளங்கும் ஆபரணங்களின் பொலிவும் ஒளியும் பரிபூரண வஸ்துவும் நீயே. நீ புதுக்கோட்டை யரசியாகி ஆட்சி புரிந்து இங்கு சாசுவதமாக அமர்ந்திருப்பாயாக என்று சாந்தானந்த முனிவர் மனமுருகக் கூறினர்.

விளக்கவுரை :- தேவி திருமுன் நின்று எனக்கு இது வேண்டும் என்று வேண்டாதிருப்பதே பெருமை. வேண்டினால் வேண்டிய அளவே வரும். வேண்டாதிருந்தால் அவள் கருணைக் கடல் பொங்கி வழிந்து விடும். சமஸ்த பாக்கியங்களையும் பெறுவதோடு வீதகைவல்யமும் பெறலாம் என்ற உண்மையை நினைக்க இதுவே தக்க சந்தர்ப்பமாம்.

சாந்த முனிவர் புவனேசி
 தருமம் வளர்க பொலிகவெனத்
தாந்த மமதை யின்மையொடு
 தகவே யுரைத்துப் பிரசாதம்
போந்த தொழும்பர் அனைவருக்கும்
 பொருளாற் கலையாற் பணிபூண்ட
மாந்தர் பிறர்க்கும் மனநிரம்பு
 மகிழ்ச்சி யோடு வழங்கினரே. 523

உரை :- சாந்தானந்த முனிவர் புவனேசுவரி தருமம் இந் நகரத்தில் வளர்க பொலிக என்று அடக்கம் மமதை இல்லாத பண்பு முதலிய குணங்களோடு தக்கவாறு உரைத்து அங்குக் கும்பாபிஷேகம் காணவந்த அன்பர் அனைவருக்கும் பொருள் வகையாலும் கலை வகையாலும் பணிபுரிந்த நன்மக்கள் அனைவருக்கும் மனம் நிறைந்த மகிழ்ச்சியோடு பிரசாதத்தை எடுத்து எடுத்து வழங்கினர்.

விளக்கவுரை :- இந்த மஹோத்சவ சமயத்தில் சாந்தானந்தர் பிரசாதம் கொடுத்தது இம் மகானுக்கு இந்நிலை தந்த பரமசாத்விக ஞானமூர்த்தி சேந்தமங்கலத்தே தத்த ஜயந்தி நிகழ்த்தித் திருவுலாக் கண்டு பிரசாதம் தரும் சிறப்பையே நினைப்பிக்கத் தக்கதாக இருந்தது.

சிறந்த ஆண்டு சுபகிருதே
சிறந்த திங்கள் வைகாசி
சிறந்த நாளாம் பூசமெனச்
சிறந்த திதியாம் சதுர்த்தியெனச்
சிறந்த நலங்கள் அனைவோர்க்கும்
சிறப்ப அருளும் புவனேசி
சிறந்த கோயில் குடிகொண்டாள்
சிறக்க இறைவி திருவருளே. 254

உரை:- அறுபது வருஷங்களில் உத்கிருஷ்டமான வருஷம் சுபகிருத் வருஷமே பன்னிரண்டு மாதங்களில் மிகவும் பேறுபெற்ற மாதம் வைகாசியே. இருபத்தேழு நக்ஷத்திரங்களில் மிகச் சிறப்புப் பெற்றது பூசம். பதினைந்து திதிகளில் மிகவும் சிறந்தது சதுர்த்தி. சிறந்த பாக்கியங்களை அனைவருக்கும் அருளும் புவனேசுவரி புதுக்கோட்டைக்கே தமிழகத்துக்கே பூவுலகத்துக்கே சிறப்புத்தரும் இத்திருக்கோயிலிற் குடிகொண்டு விளங்குகின்றாள். அவள் திருவருள் சிறப்பாக எங்கும் நிறைவதாக.

விளக்கவுரை :- தேவியைப் பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம் செய்யும பேறு பெற்ற காலமே சிறப்புப்பெற்றது வருஷம் மாசம் நக்ஷத்திரம் திதி என்ற நான்கையும் சிறப்பித்ததால் முகூர்த்தமும் கும்பாபிஷேகமும் நிகழ்ந்த நிமிஷங்களும் அக்காட்சி கண்ட மக்களின் புறக்கண்ணும் அகக்கண்ணும் சிறப்புப் பெற்றன என்பது கூறாமலே அமையும். இந்தக்கும்பாபிஷேகம் “ நபூதோ நபவிஷ்யதி ” என்று கூறும்படி அமைந்திருந்தது.

அமரா வதியோ இஃதெனவே
அமரர் நினைக்க விளங்குநகர்
அமரா வதியென் றுலகுரைக்கும்
ஆம்ர வதியின் பெருக்காலே
தமரா னவர்க்கு நலமருளும்
சம்பு பசுப தீச்சுரத்துள்
அமரா தருகே நெரூர்அமர்ந்த
அறிவர் அருளிற் பெருகியதே. 525

உரை :- அமராவதியோ இது என்று தேவர்களே நினைக்கும்படி விளங்கும் புதுக்கோட்டை நகரம் அமராவதி என்று உலகமக்கள் அறியாது உரைக்கும் ஆமிரவதி நதியின் பெருக்காலே தன்னைச் சார்ந்த மெய்யன்பர்க்கு எல்லாப் பாக்கியங்களையும் அருள்கின்ற சம்பு கோயில்கொண்டிருக்கும் பசுபதீச்சுரத்துள் அமராமல் அருகே உள்ள நெரூரில் சமாதிகொண்ட மகான் சதாசிவப் பிரம்மேந்திரர் திருவருள் பெற்றுப் பெருகியது.

விளக்கவுரை:- ஆம்ரம் - மாமரம், ஆம்ரவதி - மாமரங்களைக் கரையிற் கொண்ட ஆறு. கருவூர்ப் பசுபதிச்சுரம் ஆமிரவதி ஆற்றின் கரையில் உள்ளது. சதாசிவ முனிவர் அங்கு சிவராத்திரியிற் சித்து நிகழ்த்தினர். அருகில் உள்ள நெரூர் காவேரி நதியின் கரைமேல் உள்ளது. அங்கு அவர் அடங்கியிருக்கிறார்.

கருவூர் புகுந்து கலங்காது
கருவூர் பசுப தீச்சுரனை
உருவூர் அருமைப் பெருமானை
உவந்து பணிந்த சதாசிவனர்
நெருவூர் அடங்கி யிருந்தாலும்
நிறைந்த அறத்தை யிப்புதுவைப்
பெருவூர் பெறவே அருள்சரிதம்
பேசா ரிலரால் முதியருளே. 526

உரை :- கருப்பவாசத்திற் புகுந்து சம்சார பந்தத்திற் கலங்காமல் கருவூரிற் கோயில் கொண்ட பசுபதீச்சுரனை அழகு மிக்க அருமைத் திருமூர்த்தியை உவப்போடு பணிந்த சதாசிவப் பிரபமேந்திரர் நெருரிலே மகாசமாதி கொண்டிருந்தாலும் நிறைந்த நிலையான தருமம் நிகழும் மகாபாக்கிய வைபவத்தைப் புதுக்கோட்டை என்ற பெருநகர் பெறுமாறு புரிந்த பழைய வரலாறு இது என்று பேசாதவர் இந்நகரத்து முது பெருமக்களுள் இல்லை.

விளக்கவுரை :- கரு ஆகிய ஊர். கருப்பப் பிரதேசம். தாய் வயிறு. கருவூர்-ஆனிலைக் கருவூர். கருவூர்ப் பசுபதீச் சுரம் என்ற பெயர் பெற்ற கொங்குநாட்டுச் சிவதலம். நெரூரில் அம்மகான் சமாதி சிவாலயத்தின் பின் பகுதியில் உள்ள வில்வ மரத்தடியில் உள்ளது. பாணலிங்கவுருவத்தில் இன்றும் அங்கும் அவர்க்கு வழிபாடு நிகழ்கிறது. சதாசிவ அனுக்கிரகம் புதுக்கோட்டைக்கு உண்டு என்ற உண்மையும் புதுக்கோட்டை பெருந் தரும பூமி என்பதும் முதியவர்களுக்கே தெரிந்தவரலாறு ஆகும். இக்காலச் சிறுவர் அறிதற்கில்லை

இன்று மறிவர் திருப்படிவம்
 இயங்கும் நகரத் தரண்மனைக்கண்
நன்று நிகழ்ந்த பூசனையை
 நயந்த வெள்ளிப் பேழைமணல்
சென்று மறையா தினுமுளது
 தெற்கு முகத்துப் பெருமானும்
ஒன்று மவனென் றுரைக்கின்றார்
 உணர்ந்த பெருமை யுடையவரே. 527

உரை :- இன்றும் இந்நகரத்து நடுநாயகமாய் அமைந்த பழைய அரண்மனையில் உள்ள தக்ஷிணாமூர்த்தி ஆலயத்தில் இம்மகானின் திருப்படிவம் உள்ளது நன்றாக இரண்டு நூற்றாண்டுக்கு மேலாகவே நிகழ்ந்த பூசையே யேற்றுக்கொண்ட

வெள்ளிப்பேழை மணல் சென்று மறையாது இன்றளவும் இருக்கின்றது. தெற்கு முகப் பெருமான் அங்கு இருப்பான் என்று இவ் வரலாற்றை உணர்ந்த பெருமையாளர் உரைக்கின்றூர்.

விளக்கவுரை :- சதாசிவப் பிரம்மத்தை விஜயரகுநாத ராயத் தொண்டைமான் ஞான குருவாகப் பெற்றூர். அவர் தந்த மந்திரம் எழுதிய மணல் புதுக்கோட்டை அரச குலத்தாரால் வெள்ளிப் பேழையில் வைத்துப் பூசிக்கப்பட்டது. இன்றும் அப்பேழை தக்ஷிணமூர்த்தி ஆலயத்தின் அருகே உள்ளது. புதுக்கோட்டைப் பெருமைக்கு இது காரணமாம்.

தமிழ நாட்டு வரலாற்றிற்
  றகுதி சான்ற மதிப்புடைய
தமிழ வரசாம் புதுவையிலே
  தலங்கள் பலவே கோயில்பல
தமிழ மணமும் வடமறையின்
  தழைக்கு மணமும் கொழித்திருந்த
தமிழ மரபீர் அறிவீரே
  தவத்தார் பலருக் கிருப்பிஃதே. 528

உரை :- தமிழ் நாட்டு வரலாற்றிலே தகுதி சிறந்த மதிப்புடைய தமிழரசான புதுக்கோட்டையில் புண்ணியத் தலங்கள் பல உண்டு. பழைய திருப்பணி பெற்ற கோயில்கள் பல உண்டு. தமிழ் மணமும் வேத பாஷையின் திருமணமும் கொழித்திருந்த இந் நகரத்து தமிழ் மக்களே தவச்சான்றோர் பலருக்கு இருப்பிடம் இது என்பதை அறிவீர்.

விளக்கவுரை :- புதுக்கோட்டை நாடு தனித்தமிழரசாக வாழ்ந்த பெருமை இன்று கதையளவில் அடங்கிவிட்டது தரும க்ஷேத்திரம் என்று உரைக்கத்தக்க பெருமை பெற்ற புதுக்கோட்டை இன்று மற்றச் சிற்றூர்களைப் போலவே இந்தியப்

பேரரசுக்குள் அடங்கி ஒடுங்கி தன் பழைய ஒளி மழுங்கி இருக்கிறது. இந்நகரத்தில் நவராத்திரி காலத்தில் நான்கு வேதங்களும் சாஸ்திரங்களும் நன்கு பயின்ற வடமொழிப் பெரும் புலவர்களும் தமிழ்ப் பெரும் புலவர்களும் வந்து தம்தம் திறமையை விளக்கி ஆண்டுதோறும் பரிசில் பெற்றுப் போகும் சிறப்பும் அவ்வொன்பது நாளும் பல்லாயிர மக்கள் அன்னம் பாலிக்கப் பெற்ற சிறப்பும் மறக்க இயலாதவை.

எந்தங் குரவர் பெருமானை
எய்யா ரில்லை இந்நகருள்
தந்தங் குறைந்த களிறுபோரத்
தவத்தே யடங்கித் தத்தகிரி
நந்த வனமா நினைந்திருந்த
நல்லோர் அவர்தம் குருமூர்த்தி
இந்த நிலத்தே யிருப்பதனை
இசைத்தார் அவரே அறிவீரே. 529

உரை :- எம் குருதேவரை அறியாதவர் இந்நகரத்துள் இல்லை. பல்லிழந்த யானை போலத் தவக்கோலத்தில் அடங்கித் தத்தகிரியே குபேர நகரமாக எண்ணியிருந்த ஞானமூர்த்தியான அவர்க்குக் குருமூர்த்தி இந்தப் புண்ய பூமியில் இருப்பதை அவரே உலகுக்குத் தெரிவித்தார். என்பதை அறிவீர்கள்.

விளக்கவுரை :- சதாசிவ சமாதி மண்ணுள் அடங்கி மறைந்திருப்பதை இந்தப் புனித பூமி ஊர்ப்புற நிலமாக இருந்த பொழுது இரவில் வந்து நோக்கிய சுயம்பிரகாச முனிவர் தம் குருதேவர் சமாதியைத் தேடித் தெளிந்த மூன்று நாள் இருந்து சமாதிக்கு விளக்கு வைத்துச் சென்றூர் என்பது வரலாறு. அவரோ பிறகு சமாதி பெரிதானதும் முதற் கும்பாபிஷேகம் செய்தவர் ஆவர். இரண்டாம் கும்பாபிஷேகம் புவனேசுவரி வருமுன் நிகழ்ந்தது. இப்பொழுது நிகழும் கும்பாபிஷேகம் மூன்றுவது ஆகும். இரண்டும் மூன்றும் சாந்தானந்த சுவாமி கைங்கரியம் ஆகும்.

அன்ன பரம குருமூர்த்தி
அமரப் பெருமில் வதிட்டானம்
மன்ன வறங்கள் பலவளர்ந்த
வளஞ்சால் புதுவை வடகீழ்பால்
நன்ன ரமைந்த புவனேசி
நகரத் திருத்தல் நம்பெரும்
இன்ன பெயரை யிப்பகுதிக்
கியைத்தாள் இனிதிங் கிருப்பவளே. 530

உரை :- அத்தகைய எம்பரம குருநாதர் அடங்கியிருக்கும் இந்த அதிஷ்டானம் நிலையாகப் பலவகைத் தருமங்கள் வளர்ந்த வளம் மிக்க புதுக்கோட்டை வட கீழ்ப் பகுதியில் நன்கு அமைந்த புவனேசுவரி நகரத்தில் இருப்பது நம் பரம பாக்கியமே, இந்தப் பெயரை நகரத்தின் இப்பகுதிக்கு அருளியவள் இங்கு இன்று கோயில் கொண்டிருக்கும் இறைவியே.

விளக்கவுரை :- குருவின் குரு பரமகுரு. அவர்க்கும் குருவைப் பரமேஷ்டி குரு என்பது மரபு. சாந்தானந்தர்க்குக் குரு சுயம்பிரகாச முனிவர்-பரமகுரு சதாசிவ முனிவர். பரமேஷ்டி குரு இராம கிருஷ்ண ஆனந்தர். சாந்தானந்தர்க்குத் தம் குரு மரபினிடம் தெய்வபக்தி உண்டு. ஆதலின் குருதேவர் அடங்கியிருக்கும் சேந்தமங்கலம் தத்தகிரியிலும் பரம குரு அடங்கியிருக்கும் புதுக்கோட்டையிலும் பெரும் பொருட் செலவில் பல நன் மக்கள் முன்வந்து கைங்கரியம் செய்யச் சிறந்த திருப்பணிகள் செய்திருக்கிறார். இன்றும் செய்கிறார்.

முன்ன மிரண்டு குடமுழுக்கு
முறையே நிகழ்ந்த துளதாகும்
அன்ன மறிந்த சதாசிவர்க்கும்
அவரை யாண்ட தத்தருக்கும்

பன்ன வரிய பிரணவத்துப்
படிவப் பிள்ளை யிருவர்க்கும்
இன்ன தளியில் நிகழ்சிறப்பை
இனியும் நினைப்பார் உளரன்றே 531

உரை:- முன்னாளில் இரண்டு கும்பாபிஷேகங்கள் முறைப்படி நிகழ்ந்தது உண்மையே ஆகும். ஹம்ஸ மகாமந்திரத்தை உள்ளத்தே அனுபவித்த சதாசிவப் பிரம்மேந்திர சரஸ்வதிக்கும் அவரைத் தம் தவமரபிற் சேர்த்து ஆண்ட தத்தாத்திரேயப் பரம் பொருட்கும் சொல்லுதற்கு அறிய பெருமையுள்ள பிரணவமே தம் உருவமாக உடைய விநாயகன், முருகன் என்ற இரண்டு சிவ குமாரர்களுக்கும் இந்த ஆலயத்தில் நிகழ்ந்துள்ள சிறப்பை எல்லாம் நினைப்பவர் இன்றளவும் உண்டு.

விளக்கவுரை :- முதற் கும்பாபிஷேகம் தாது வருஷம் வைகாசி மீ 18ஆம் நாள் ஹஸ்த நக்ஷத்திரம் ஞாயிற்றுக்கிழமை (31-5-36) நடந்தது. இரண்டாம் கும்பாபிஷேகம் துர்முகி வருஷம் வைகாசி மாதம் 14ஆம் நாள் ஹஸ்த நக்ஷத்திரம் 20-5-56ல் நடந்தது. இவை நிகழ்ந்த சிறப்பைப் புதுவை மக்கள் நன்கு அறிவர்.

எம்மை யாண்ட குருவருக்
கியன்ற பணியைப் பூண்டிருந்து
தம்மை யெமது துறவறத்திற்
றகவே புகுத்தும் வறம்பெற்ற
இம்மை யறியாக் கைவலியர்
இருக்கும் சமாதி நிலைக்கருகே
அம்மை புகுந்தா ளோவியமாய்
அவளே தளிகொண் டனளின்றே 532

உரை:- எம்மை ஆட்கொண்டருளிய குருவருக்கு வேண்டிய பணியைப் பூண்டிருந்து தம்மை எம் சம்பிரதாயத் திலே தக்கவாறு புகுத்தப் பெறும் பாக்கியம் பெற்ற இம்மை

நலன்களை அறியாத கைவலியானந்தர் அடங்கியிருக்கும் சமாதிக்கு அருகில் புவனேசுவரி தேவி ஓவியமாகப் புகுந்தாள். இன்று அவளே இங்கு சிற்ப நலம் சிறந்த கோயிலிற் குடிகொண்டிருக்கிறாள்.

விளக்கவுரை :- கைவலிய ஆனந்தர் சுயம்பிரகாச முனிவர் சீடர்களுள் ஒருவர். இல்லறத்தில் இருந்தபோது தத்த கிரியில் தவம் பூண்ட பெரு முனிவர்க்குக் காலம் இடம் அறிந்து பிக்ஷா கைங்கரியம் செய்து வந்தவர். அவர் பின்னாளில் வைராக்கியம் பிறந்து குருவாக்த் தம தெய்வத்தையே வரித்துத் தத்த சம்பிரதாய சன்யாஸம் பெற்றுப் புதுக்கோட்டையில் முது பருவத்திலே தாத்தா சுவாமி என்றபெயரோடு இருந்து இந்த அதிஷ்டானத்தில் கைங்கரிய மூர்த்தியாக விளங்கி முது பெரும் பருவத்தில் மகா சமாதி பெற்றார். அவர் சமாதி இவ்வதிஷ்டானத்தில் ஈசான திக் பாகத்தில் உளது.

என்று புகுந்தா ளெனவினவி
  எவரு மனத்தி லவசற்க
என்று மிருப்பாள் இறைவியவ
  ளில்லா விடமு முளதேயோ
குன்று வளர்ந்த கோகன்னம்
  குடிகொள் பெரிய நாயகியும்
நன்று நடுவூர் கோயில்கொளும்
  நங்கை தானும் இவளன்றே. 533

உரை :- புவனேசுவரி இங்கு என்று வந்து புகுந்தாள் என்று விசாரித்து மனத்திலே கவலை கொள்ள வேண்டா. இறைவி என்றும் இருப்பாள். அவள் இல்லாத இடமும் உண்டோ! குன்று வளர்ந்த திருக்கோகர்ணத்திலே குடிகொண்ட பெரியநாயகியும் நன்றாக நடுவூர்க் கோயிலில் வீற்றிருக்கும் இறைவியும் இவளே யாம்.

விளக்கவுரை :- புவனேசுவரி புது வரவு என்று எண்ண வேண்டா என்ற கருத்தை அழகுற உரைக்கின்றார். அரசர் தெய்வமாக விளங்கிய பிரகந் நாயகி இவளே. சாந்தநாத ஆலயத்தில் உள்ள வேதநாயகி இவளே என்று கூறுதலால் புதுக் கோட்டை நாட்டில் உள்ள பல பழம் பெருங் கோயில்களிலும் உள்ள தேவியும் இவளே என்பது உணரத்தக்கது தேவி ரூபங் களில் பேதபுத்தி கூடாது என்பது "ஸர்வம்கலு இதம் பிரம்ம" என்ற மந்திரார்த்தம் போல உபதேசிக்கப்பட்டது. தேவ தேவி மூர்த்தங்கள் தேவியேக மூர்த்தங்கள் உண்டே அவை பேசுவார்.

இறைவன் இடப்பால் இறைவியினை
இருத்திப் பணியும் கோயில்உள
இறைவன் பணிந்த இறைவியினை
இறைமைக் கமர்த்தும் தனியுமுள
இறைமை யிவட்கோ வவற்கேயோ
எனயாம் வினவல் தகாதாகும்
இறைமை ஒருமை யுரிமையஃது
இறைகொண் டிருக்கு மிங்கன்றே. 534

உரை :- இறைவனுக்கு இடப்பக்கத்திலே இறைவியை அமர்த்திப் பணியும் கோயில்கள் உண்டு. இறைவனே பணிந்த இறைவியைத் தனியே அமர்த்திப் பணியும் கோயில்களும் உள்ளன. இறைமை இவளுக்கோ இறைவனுக்கோ என்று நாம் விசாரித்தல் தகாத தாகும். இறைமை என்பது ஒரு பரம் பொருளின் உரிமை. அப்பரம் பொருளே இங்கு இவ்வுருவத்திற் குடிகொண்டிருக்கிறது.

விளக்கவுரை :- சிவாலயங்களில் இறைவி சிவனுக்கு அடங்கி இருக்கும் பல தலங்கள் உண்டு. பரதேவதை தனிக் காட்சி தரும் தலங்களும் உண்டு. புவனேசுவரியை மும்மூர்த்தி களும் ஆராதித்தது தேவீ பாகவத வரலாறு. ஐசுவரசக்தியை

இறைமை என்று உரைத்துள்ளது. இந்தச் சக்தி ஆண் உருவம் கொண்ட இறைவனுக்கா பெண்ணுருவம் கொண்ட இறைவிக்கா என்று வினவி மனத்தைக் குழப்ப வேண்டா. இறைவி இறைவன் என்ற இருமையும் ஒருமையே என்று உணர்ந்து யார் பெரியவர் என்ற விசாரத்துக்கே இடம் இன்மை உணர்க என்கிறார்

ஆடி யைந்து தொழில்விளக்கும்
அவனும் அனந்த சயனத்தே
தேடி யடைந்த தொழும்பரினம்
தெரிய விளங்கும் பெருமானும்
வாடி யறியா மலர்மலைக்குள்
மறைந்த ஒளியின் பிழம்பாகும்
கோடி கதிரி னுருக்கொண்ட
குடிலை யிவளும் வேறிலரே. 535

உரை :- ஆனந்த தாண்டவம் ஆடி ஐந்து தொழில்களையும் விளக்கும் சித்சபாநாதனும், ஆதிசேட சயனத்தில் தன்னைத்தேடிவரும் பக்தகணம் தெளியவிளங்கும் பெருமாளும் வாடியறியாத மலர்மலைக்குள்ளே மறைந்திருக்கும் ஒளிப் பிழம்பாகிய கோடி சூர்யப் பிரகாசம் உள்ள ஓங்கார ரூபிணியான இவளும் வேறில்லை.

விளக்கவுரை :- சித்சபேசனே பஞ்சகிருத்ய தாண்டவம் நிகழ்த்துவதால் பரப்பிரம்ம வஸ்து என்பார் உளர். யோகநித்திரையில்ஆழ்ந்து ஸர்வ சாக்ஷியாக இருக்கும் அரங்கநாதனே பரம்பொருள் என்பாருமுளர். அவ்விருவரும் இங்கு இப்பொழுது அருட்காட்சி நல்கும் புவனேசுவரியும் வெவ்வேறு மூர்த்திகளாகத் தோன்றினும் ஒருமைப் பரம்பொருளே என்ற உண்மையை விளக்கினர். புவனையை வணங்கிய மும்மூர்த்திகளும் புவனையே என்பது பிரம்ம தத்துவ விசாரமாம்.

அகரத் தாலே தெரிவிக்க
லாகும் பொருளா மென்கின்றார்
உகரத் தாலே யதன்பெருமை
உணர்த்தப் பெறுமா லென்கின்றார்
மகரத் திணக்கம் இருமைக்கும்
வாய்த்தல் பொருத்தம் என்கின்றார்
அகர உகர மகரமெலாம்
அன்னை யிவளென் றறிவோமே. 536

உரை :- அகாராக்ஷரத்தால் தெரிவிக்கத்தக்க பொருள் என்பார் சிலர். உகாராக்ஷரத்தால் அதன் பெருமையை உரைப்பதே பொருத்தம் என்பார் சிலர். மகார அக்ஷரத்தின் சம்பந்தம் அகார உகாரங்களுக்கு அமைவது தகும் என்பார் சிலர். அகார உகார மகாரம் என்ற எல்லாம் புவனேசுவரியான இவளே என்கிறார்.

விளக்கவுரை:- "அக்ஷராணும் அகாரோஸ்மி" என்பது பகவத்கீதை. உகாரமே ஓங்காரத்திற்கு அடிப்படை ஆதலால் அது சக்திமயம் என்பர் சிலர். அகர உகர மகர சேர்க்கையே பிரணவம். அகரத்தை நாதம் என்றும், உகரத்தை கலைஎன்றும் மகரத்தை பிந்து என்றும் உரைப்பதும் உண்டு. தனித்தனி இவ்வக்ஷர தத்துவம் ஆராய்வது எளிதன்று. மூன்றாகத்தோன்றும் ஒன்று என்பது இவ்வக்ஷரத்திற்குள்ள பெருமை. அ உ ம் என்று பிரித்து நோக்குங்கால் மூன்றாகத் தோன்றினாலும் உண்மையில் ஓம் என்பது ஒரு அக்ஷரமே ஆதல் போல மூர்த்திகள் பேதப்படுவதாகத் தோன்றினும் உண்மையில் தத்துவம் ஒன்றே என்பதை இங்கு நன்கு விளக்குகின்றார்.

புதுவை நகர பெருமக்காள்
பொருளிற் சிறந்த பிறநகரீர்
புதுமை யொன்று புகல்கின்றேன்
பொறுத்துக் கொள்க மனத்தகத்தே

மதுவை யுணர்ந்து மதுமயமாய்
வாழ்ந்த பரம குருவரனுர்
பொதுமை யுடைமை யாகின்ருர்
புவனே யுமக்குப் பொதுப்பொருளே. 537

உரை :- புதுக்கோட்டை நகரத்துப் பெருமக்களே, செல்வச்சிறந்த பிறநகர்ப் பெருமக்களே. புதுமை ஒன்று சொல்கின்றேன். மனத்திலே அதைக் காக்கவேண்டும். மது என்ற பிரமதத்துவத்தை உணர்ந்து அதன் மயமாக வாழ்ந்த எம் பரம குருவரர் உங்களுக்கெல்லாம் பொது உடைமை ஆகின்ருர். அங்ஙனமே புவனேசுவரியும் உங்கள் பொதுச் செல்வமே ஆகினருள்.

விளக்கவுரை :- சாதாசிவ அதிஷ்டானத்துக்கு உரிய திருப்பணிகளை அழகுற நிறைவேற்றிய முனிவர் இனி அதனேடு ஒட்டியிருக்கும் மனம் இன்றி இவ்வதிஷ்டானமும் புவனேசுவரியின் ஆலயமும் தமிழ் நாட்டார் பொதுச்செல்வம் என்று கூறுவது இந்த ஆலயத்தில் இனி நிகழ்த்தற்குரிய நித்ய நைமித்த வழிபாடுகளெல்லாம் யாரோ ஒருவர் செய்வார்என்று பராங் முகமாய் இருந்துவிடாமல் எல்லாரும் தம் தம் உரிமையாகக்கொண்டு தம்தம்கைங்கர்யம் நடத்தவேண்டுமென்பதற்கே.

அறங்கள் சிறந்த நகரமென
அமைந்த பழமை பெரும்புகழை
அறங்கள் இனியும் சிறப்பதனுல்
அடைந்து வாழ்க புதுவையென்று
திறங்கள் அழியாப் பெருமாட்டி
நிலேமுன் னின்று பகர்கின்றேன்
புறங்கள் அகங்கள் புவனேபுகும்
புகழை யடைந்தீர் நீரன்றே. 538

உரை :- தருமங்கள் சிறந்த நகரம் என்று அமைந்த பழமையான பெரும் புகழை இனியும் தரும விருத்தி உண்டாவதால் அடைந்து இப் புதுக்கோட்டை நகரம் வாழ்க என்று இன்ன நிறமுடைய இறைவி என்று உரைத்தற்கு அரிய புவனேசுவரி திருமுன் நின்று கூறுகின்றேன்: நீங்கள் உங்கள் அகத்தும் புறத்தும் புவனேசுவரி புகுந்திருக்கும் புகழைப் பெற்றீர்.

விளக்கவுரை :- முன்பு தருமம் சிறந்திருந்த நகரம் என்ற புகழ்பெற்று அப்புகழின் நிழலில் வாழ நினைப்பது நகர்க்குப் பெருமை ஆகாது. இன்றும் நாளைக்கும் இந்நகரம் தருமம் சிறந்ததே என்று விளங்க இந்நகர மக்கள் தம்மால் இயன்றளவு தருமம் செய்து இவ்வாலயப் பணியில் ஈடுபட வேண்டும். அரசர் இருந்தபோது கைலாசம் போல் விளங்கிய திருக்கோகர்ணம் திருக்கோயில் இன்று சோபை குன்றி வருவது உங்கள் குறை என்றே கூறவேண்டும். இன்று எல்லாரும் அரசரே ஆதலின் இந்நாட்டில் உள்ள எல்லா ஆலயங்களையும் நன்கு பரிபலிக்கும் பொறுப்பு ஏற்கவேண்டும் என்று குறிப்பிக்கிறதாக உணரவேண்டும்.

குடக்கே யிருக்கும் கோகனமே
 குணத்தாற் சிறந்து புகுந்துளது
வடக்கே யிருந்து வருமக்கள்
 வணங்கி வாழ்த்தத் தகுந்தளியில்
படக்கே புகுந்து சிலைபுகுந்து
 படிவம் பெறுமிப் பெருமாட்டி
அடக்கே மெனவே பொறிபுலனால்
 அவலிப் பார்க்கும் நலம்தருமே. 539

உரை :- மேல் கடற்கரையில் உள்ள திருக்கோகர்ண சிவ தலமே குணத்தாலே சிறந்து இங்கு ஒரு திருக்கோகர்ணமாக வந்துள்ளது வடநாட்டிலிருந்து வரும் மக்கள் இந்நகருக்கு

வந்து பார்த்து வணங்கத்தக்க திருக்கோயிலில் ஓவியத்தில் முதற்கண்புகுந்து பிறகு ஐம்பொன் சிலைபில் புகுந்து இன்று சிலாவிக்கிரக உருவம் பெற்றிருக்கும் பெருமாட்டி எம்மால் அடக்க இயலவில்லையே என்று பொறி புலன்களால் வருந்தும் மக்களுக்கும் நன்மை தருவாள்.

விளக்கவுரை:- மேற் கரையில் சிவராத்திரி மகாக்ஷேத்திர மாக உள்ள கோகர்ணத்திலும் இத்திருக்கோகர்ணம் சிறந்தது என்று பிறநாட்டார் அறியும்படி நாம் செய்யவேண்டும். அப் பழங் கோயிலை வணங்க வரும் வட நாட்டார் இங்கும் வந்து வணங்கி இறைவி திருவருள் பெறுவர் என்று கூறுகின்றூர்.

தத்த புராணம் பெரிதாகும்
　　தமிழர் அதனே நன்குணரார்
முத்தர் இனத்தே முதன்மைபெறு
　　முனிவர் மவுனி சதாசிவனுர்
சித்த நலத்தை விளக்கவமை
　　சிறந்த புராண முளதன்றே
பத்தர் விரும்பி அதனைநன்கு
　　பயின்று புவனே யருள்பெறலாம். 540

உரை:- தத்த புராணம் மிகவும் பெரிது. (அது வட மொழியிலும் வடநாட்டுப் பிறமொழிகளிலும் இயன்றுளது.) தமிழ் மக்கள் அப்புராணத்தை நன்கு உணரமாட்டார். முத்தர் இனத்தில் முதன்மை பெற்ற முனிவரான மவுன விரதம் பூண்ட சதாசிவப் பிரம்மம் சித்த பக்குவத்தை நன்கு விளக்கும் சிறந்த புராணம் உள்ளது. பக்தர் அதனை விரும்பிப் பயின்று புவனேசுவரி திருவருள் பெறலாம்.

விளக்கவுரை :- தத்த புராணம் மிகவும் விரிவாக அமைந்தது. வடமொழி, மகாராஷ்டிரம், ஹிந்தி, வங்காளி முதலிய மொழிகளில் உள்ளது. ஸ்ரீ பாகவதம் போன்ற சிறப்புள்ளது

என்று வடநாட்டார் அதனைப் போற்றுகின்றார். அப்புராணம் தத்தாத்திரேய அவதாரம் பல உரைப்பதுண்டு. இங்கு அடங்கியிருக்கும் சதாசிவப் பிரம்மமும் தத்தாவதாரம் என்றே மதித்துத் தொழத்தக்க தவப் பிழம்பு ஆவர். இந்தச் சதாசிவ மஹாத்மியம் செய்யுளும் உரையுமாக இயன்று இவ்வாலயத்தின் செல்வமாக உள்ளது. இப்புராணத்தில் புவனேசுவரி மஹாத்மியம் அழகாக உரைக்கப்பட்டுள்ளது. இவற்றைப் படித்துப் பயன் பெறுவீர்களாக என்கின்றார்.

தேவி பெருமை யளந்துரைக்கும்
தேவி பாக வதமுளதே
கோவி லமைத்துக் கும்பிடுவோம்
கூத்து மிடுவோம் விழாக்காண்போம்
ஆவி யனைத்து மகவுயிராம்
அவள்பேர் உரைத்து வழிபட்டுப்
பாவி நமக்கு நலமாகப்
பயில மாட்டோம் உலகீரே. 541

உரை :- தேவியின் பெருமையை அளந்துரைக்கும் தேவி பாகவதம் உள்ளது. தேவிக்கு நாம் கோவில் அமைத்துக் கும்பிடுவோம். கூத்தும் ஆடுவோம். திருவிழாக்கள் நடத்துவோம். எல்லா உயிருள்ளும் உள்ளுயிராய் இருக்கும் இறைவி பெயர் உரைத்து வழிபட்டு எதிர்காலம் நமக்கு நன்கு அமையும்படி பயில மாட்டோம் உலகத்தீரே.

விளக்கவுரை :- உலக மக்களுக்குப் பகிரங்க ஆடம்பரத்தில் விஷேச ஆசை உண்டு. கோயில் அமைப்பர் குளம் வெட்டுவர். கூத்தாடுவர். தெய்வத்தை மனக்கோயிலில் ஏற்றித் 'ததேகத் தியான பரராய்' இருந்து தம் இஷ்டம் நிறைவேற வேண்டும் என்ற நினைவு இன்றியே பரதேவதையை மனக்கோயிலிற் காண முயல்வோர் பலர் இல்லை. கோடிக்கு ஒருவர் இருப்பது அருமை. எத்தெய்வத்தை இஷ்ட தெய்வமாகக் கொண்டாலும் அதனைக் காண முயலவேண்டும்.

பழமைத் தளிகள் பெற்றபுகழ்
பறைய வருவ தன்றிதுவே
கிழமைத் தளிகள் எலாமென்று
கிளத்தத் துணிவேன் கேளீரோ
கிழமைக் கணத்து வெள்ளிகுரு
கிளர்ச்சி பெறுமாள் இத்தளிக்கண்
பழமைத் துறையே யருச்சித்துப்
பயனைப் பெருவீர் அனைவருமே. 542

உரை :- பழமையான திருக்கோயில்கள் பெற்ற பெரும் புகழ் ஒழிய வேண்டி இக்கோயில் தோன்ற வில்லை. எல்லாக் கோயில்களும் ஒன்றுக்கொன்று நெருங்கிய உறவு உள்ளவை என்று அறியவேண்டும் என்பதை நான் தெளிவாக்கத் துணிவேன். செவியேற்றுக்கொள்ளும் கிழமைகளின் கூட்டத்திலே வெள்ளியும் வியாழனும் இக்கோயிலிலே மிக்க பெருமை பெறும் பழமையான முறைப்படியே அருச்சித்து எல்லாரும் நன்மை பெறுவிர்களாக.

விளக்கவுரை :- புதுக்கோயில் தோன்றிப் பழங்கோயில்களின் சரித்திரப் பிரசித்தியைக் குறைக்க வேண்டும் என்ற நோக்கம் எமக்கு இல்லை என்று கூறுகிறார். எல்லாக்கிழமைகளும் நல்லவையே ஆயினும் இந்தப் புவனேசுவரி திருக்கோயிலில் வியாழக்கிழமை மாலையில் விசேஷமான புஷ்பாலங்காரம் செய்வது உண்டு. சுக்கிரவாரத்திலும் அர்ச்சனை, அலங்காரம், நிவேதனம் விசேஷமாய் இருக்கும். மற்ற நாட்களில் பக்தர் விரும்பிய கோலம் தருவாள். நவராத்திரி காலம் மிகவும் விசேஷமாக இருக்கும். சந்தர்ப்பம் போல எல்லாரும் வழிபடலாம் என்கிறாள்.

துறவுச் செல்வர் அடங்குநிலம்
தூய்மை சான்ற தெனவுணர்ந்து
கறவைப் பசுப்போற் கன்றுகளைக்
காண விழிகொள் பெருமாட்டி

உறவுத் தகுதி யுமக்கருள
　　உவந்து புகுந்து கோயில்கொண்டாள்
மறவர்க் கிடமும் தராவண்ணம்
　　வழிபட் டிருப்பீர் முறையானே. 543

உரை :- துறவைத் தம் செல்வமாக உடைய மகான்கள் சமாதிகொண்டு அடங்கிய பூமி பரிசுத்தமானது என்று அறிந்து கறவைப் பசு தன் கன்றைக் காண்பது போல ஜீவ கணங்களான கன்றுகளைக் கண்டு அருளவே திருவிழி கொண்ட பெருமாட்டி உறவுத் தகுதியை உங்களுக்கு அருளவே இக்கோயிலில் உவப்போடு புகுந்து வீற்றிருக்கிறாள். மறதிக்கு இடமே, தராமல் தேவியை முறைப்படி வழிபட்டு வாழ்வீராக.

விளக்கவுரை:- அதிஷ்டானத்தில் அமைந்தபுவனேசுவரி ஆலயத்தில் மக்கள் மனம் பற்றவே இக்கருத்து உரைக்கப்படும். தேவாலய உற்சவங்களுக்குக் கூட்டம் வரும் நித்திய பூசை நிகழும் போது அர்ச்சகரே இருப்பர். இத்திருக்கோயிலில் என்றும் மக்கள் நிரம்பி வழிய வேண்டும் என்றே இங்ஙனம் உரைக்கிறார்.

நிலமே யளித்தார் நெல்லளித்தார்
　　நிறைந்த மெய்ம்மைப் பணியாய
நலமே யளித்தார் பொருளளித்தார்
　　ஞானக் கலையின் வளமளித்தார்
வலமே யளித்தார் இடமளித்தார்
　　மனத்தைத் தளியா அளித்தவன்பர்
குலமே யளித்தார் அனைவருக்கும்
　　கொடுப்பாள் வாழ்வு புவனையன்றே, 544

உரை:- நிலத்தைக் கொடுத்தவர், நெல்லைக் கொடுத்தவர் நிறைந்த தேக சப்பந்தமான கைங்கரியம் என்ற நன்மையை

உதவியவர், செல்வம் தந்தவர், தாம் கற்றறிந்த ஞான சாஸ்திரங்களின் வளத்தைப் பெறக்கொடுத்தவர், தம்வன்மையை உதவியவர், இடத்தைக் கொடுத்தவர் மனத்தையே கோயிலாக அமைக்க வல்லவர் குலத்தையே பணிக்கு அளித்தார். எல்லார்க்கும் புவன நாயகி வாழ்வு தருவாள்.

விளக்கவுரை :- இக்கோயில் வளர வேண்டிப் பலவகைக் கைங்கரியம் செய்த பலருக்கும் இறைவி திருவருள் பரிபூரணமாக உண்டு என்பதை மனம் நிரம்ப உரைக்கின்றார். பணம் உள்ளவர் பணம தருவது பெரிதில்லை. இல்லாதவர் தமக்கும் இப் புண்ணியத்திற் பங்கு வேண்டும் என்று வந்து கலந்துகொள்வதே சிறப்பாம். கலைஞருட் சிறந்தாரும் வந்தார். இடைத்தரத்தாரும் வந்தார். இளஞ்செல்வரும் வந்தார். எல்லார்க்கும் இறைவி அருள் பூரணமாக உண்டு என்பதை உரைக்கிறார். நிலம் தேவதானமாக வழங்கினவர் சிலர். அவை இன்று மழை வளம் பெற்றுத் தேவி களஞ்சியம் நிரம்ப நெல் தருகின்றன. பண்டு ஆலயம் அமைத்த அரசர்கள் முற்றூட்டாக நிலம் தந்ததுபோல இன்று தரவல்லவர் இல்லையாயினும் இறைவி பூசனைக்கு ஒரு குறைவும் இன்றி எல்லாம் வரத்தக்கவாறு சுவாமிகள் அமைத்த வரலாறு சுருக்கியுரைக்கப்பட்டது.

அன்பிற் பெரியீர் அறிவுடையீர்
அருளிற் புகுந்து திளைக்கின்றீர்
இன்பிற் பெரியீர் இயல்பெரியீர்
இசையிற் பெரியீர் எல்லீரும்
வன்பிற் பெரிய புவனவல்லி
வாழ வாழ்வு மணம்பெறுவீர்
நன்பிற் பெரியீர் ஆகியவள்
நலங்கள் விளக்க வழிபட்டே. 545

உரை :- அன்பாற் பெரியவரும் அறிவுமிக்கவரும் அருளிலே புகுந்து திளைப்பவரும் இன்பத்திற் பெரியவரும் இயல்பாற் பெருமை பெற்றவரும் புகழாற் பெருமை பூண்டவரும் ஆன

நீங்கள் எல்லீரும் சக்தியிற் சிறந்த புவன நாயகி இங்கு வாழ்வ தால் வாழ்வு மணம் பெறுவீர்கள். நீங்கள் நன்மையிற் பெரியி ராகி அவள் நலங்கள் விளக்க வழிபட்டு வாழ்வீர்.

விளக்கவுரை :- வழிபட்டு மணம் பெறுவீர் என்று முடிக்கவேண்டும். பலவகை மக்களையும் முன்னிலைப்படுத்தி அனைவரையும் ஒன்ருக்கி எல்லீர் எங்கும், வன்பு- சக்தி. நன்பு-நன்மை. வன்பு-சக்தி-சக்தியிற் பெரிய புவனேசி-மகா சக்தியுருவமான புவன நாயகி இன்பம். உலக வாழ்வின் நலம். இயல் - ஒழுக்கம். இசை - கீர்த்தி. [புவனவல்லி இத் திருக் கோயிலிலே நிலைபெற்று வாழ்வதால் இத்திருக்கோயிலில் திருப் பணியில் ஈடுபடும் எல்லார்க்கும் நலம் சிறக்கும் என்று கூறிய தாம்.

கருவி யெனவே அளியேனைக்
கடைக்க ணருளால் ஆண்டவல்லி
குருவி யிசைக்கு மந்திரத்தாள்
குணங்கள் குடிகொள் கடலாவாள்
அருவி பெருகும் பொதியத்தே
அடியேன் குரவர்க் கருள்குரவர்
திருவின் விளங்கும் அதிஷ்டானம்
சிறப்பி னிலங்க வருளுவளே. 546

உரை :- அளியேனைத் தன் திருப்பணிக்கு உரிய ஒரு சிறிய கருவி என்றே கடைக்கண் நோக்கின் அருளால் ஆண்ட புவனவல்லி குருவிகள் பாடும் ஹ்ரீங்கார மந்திரம் உடையவள், குணங்கள் எல்லாம் குடிகொண்டிருக்கும் கடல் ஆவாள். அருள் பெருகும் பொதிய மலையில் அடியேன் குருநாதருக்கு அருள்புரிந்த பரமகுரு திருவோடு விளங்கும் அதிஷ்டானம் சிறப்போடு விளங்க அருள்வாள்.

விளக்கவுரை :- தாமாக ஒன்றும் செய்யவில்லை என்பதை முனிவர் கூறுகின்ருர். தேவியிடம் கொண்ட பரம பக்தியை

விளக்கும். பாண தீர்த்தத்தின் மலைமேலே சுயம்பிரகாசர் சதாசிவப் பிரம்மத்தைக் கண்டு வணங்கி வழிபட்டார். புவனே அருளால் அதிஷ்டானம் சிறக்கும் என்கிறார். சுயம்பிரகாச ப்ரமேந்திரர்க்கு ஞானம் அருளிய குருமூர்த்தியான சதாசிவேந் திரர் அதிஷ்டானமாக அமைந்த புண்யபூமியிலே இடம் பெற்றுப் புகுந்த புவனேசுவரி என்பதை நினைப்பிக்கிறார். பரதேவதை யின் மந்திரமான ஹ்ரீங்காரமே குருவிகளால் இசைக்கப்படும் என்பது தேவி பாகவதம் கூறும் உண்மையாகும். அதனை இங்கு நினைப்பிக்கிறார் என்று அறிக.

குரவர் பெருமான் அடங்கியுள்
  குன்றிற் பணிகள் சிலநிகழும்
பரவ லுரிய புவநேசி
  பாதம் மறவா நாயடியேன்
கரவு சிறிது மறியாது
  கடமை பூணும் கருத்துள்ளேன்
உரவு பெரியாள் அருளாலே
  உலகந் திரிய நடப்பேனே. 547

உரை :- எம் குருமூர்த்தி அடங்கியிருக்கும் தத்தகிரியிலே இன்று சில திருப்பணிகள் நிகழும். போற்றத் தகுந்த புவ னேசுவரி பாதம் மறவாத நாயடியேன் வஞ்சகம் சிறிதும் அறி யாமல் கடமை பூண்ட கருத்துள்ளேன். சக்திமிக்கவள் அருளாலே இனி இந்நகர் நீங்கி உலகத்தில் திரிய நடப்பேன்.

விளக்கவுரை :- புவனேசுவரி கைங்கரியம் நிறைவேறிய தும் சேந்தமங்கலத்தில் எஞ்சி நின்ற திருப்பணி செய்யப் புறப் பட்டார். அங்கு நிறைவேறும் காலம் வந்ததும் ஒன்றிலும் பற்றற்று உலகம் சுற்றும் கருத்தோடிருந்தார் சேந்தமங்கலத் தில் புதிய மண்டபங்களும் உறையுளும் தரும சாலையும் பிறவும் அமைய இச் சுவாமிகள் திருப்பணி புரிந்து நிறைவேற்றிக் குரு

கைங்கரியம் என்ற நோக்கத்தால் ஒன்றிலும் பற்றற்று நிற்பதை உரைத்தவாறு.

எனவே யுரைத்தார் அனைவருக்கும்
இறைவி யருளுண் டென்றனரே
மனமே கருத்தே செயலெல்லாம்
வாழ்வை வளர்க்க நினைமக்கள்
அனமே கலுழன் அணுகரிய
அருமைப் பிராட்டி திருவருளால்
நனவே கனவே நலம்பெருக
நன்கு வாழ்த்தி நடந்தனரே. 548

உரை :- என்று சொன்னார். எல்லார்க்கும் இறைவி அருள் உண்டு என்றார். மனம் கருத்து செயலெல்லாம் தம் வாழ்வை வளர்க்கவே நினைக்கும் மக்கள் அன்னமும் கருடனும் அணுகுதற்கரிய அருமைப் பிராட்டி திருவருளால் நனவிலும் கனவிலும் நன்மை பெருக, நன்கு வாழ்த்தி நடந்தார்.

விளக்கவுரை:- இறைவி அருள் எவர்க்கும் உண்டு என்று கூறி புதுவை நகர் நீங்கிச் சாந்தானந்தர் நடந்தார். சதாசிவ மான்மியம் இவ்வளவில் பூர்த்தி ஆகிறது. இறைவன் அருள் துணை கொண்டால் எதுவும் நிறைவேறும் என்பதற்குச் சாந்தானந்த முனிவரே சிறந்த சான்று ஆகிறார். நடந்து பல புண்ய பூமிகளைத் தரிசிக்கும் நோக்கம் உடைய இம் முனிவர் இன்றும் பல வைதிக ஹோமங்கள் நிகழ்த்தும் நோக்கால் இந்தப் புண்ய பூமியிலே விசேஷப் பற்றுக்கொண்டு இருக்கிறார்.

வாழ்த்து

மும்மை மூர்த்தி வடிவாக முளைத்த தத்தா பிரான்வாழ்க
அம்மை கற்பின் அனசூயை அடிமென் கமல மலர்வாழ்க
தம்மை யுணர்ந்த அத்திரியாம் தவமாச் செல்வர் புகழ்வாழ்க
இம்மை நலங்கள் எலாமருளும் இறைமை பூண்டார்
வாழியவே

உரை :- பிரம விஷ்ணு சிவ மூர்த்திகளின் உருவமே தம் திருவுருவமாகப்பூண்டு அவதரித்த தத்தாத்திரேய பரம குருமூர்த்தி திருவடிகள் வாழ்க. தாய்மையே உருவம் ஆன கற்பின் செல்வி அனசூயா தேவியின் திருவடிகளான தாமரை மலர் கள் வாழ்க. தம்மை அத்யாத்ம தத்துவ தர்சனத்தால் உணர்ந்த அத்திரி என்ற தவப் பெருஞ் செல்வர் புகழ் உலகத்தில் வாழ்வதாக. இம்மையில் அன்பர்க்கு வேண்டிய நன்மைகளையெல்லாம் அருளும் இறைமை பூண்ட தலைமையாளர் வாழ்வாராக. இறைமை பூண்டார் மும்மூர்த்திகளே ஆவர். அம்மூர்த்திகளான புவன வல்லியுமாம்.

மூர்த்தி மும்மை வணங்குரிய முதல்வி புவனே சுவரிவாழ்க
கீர்த்தி மிகுந்த இமயத்தை கிளர்ந்த தேவி பதம்வாழ்க
பூர்த்தி ஞான வுருவாகும் புவனத் திறைவி கழல்வாழ்க
ஆர்த்தி குறைய அருள் விழியின் அன்னையென்றும்வாழியரோ

உரை :- மும்மூர்த்திகளும் வணங்குதற்குரிய தலைமை பூண்ட புவனேசுவரி வாழ்க. பெரும் புகழ் மிகுந்த இமயமலை

உச்சியில் விளங்கும் தேவி திருவடிகள் வாழ்க. ஞான நிறைவின் உருவம் ஆகும் புவன நாயகி பாதங்கள் வாழ்க. அன்பர் குறைகள் குறைய அருள்கின்ற விழிகளையுடைய அன்னை என்றும் வாழ்க.

தத்த மூர்த்தி துறவறத்தே தழைத்த மரபு நிலம்வாழ்க
முத்த மோன முனிவராம் முதல்வர் மரபின் நெறிவாழ்க
சத்த ஞான சதாசிவனார் தவத்தின் பெருமை தனிவாழ்க
சுத்த தத்வ மறிந்தபிரான் சுயம்பிர காசர் பதம்வாழ்க.

உரை :- தத்தாத்திரேயரின் சந்யாஸ பரம்பரையில் இன்றளவும் தழைத்திருக்கும் அவதூதர் மரபு உலகில் வாழ்க. முக்தரும் மவுனியும் முனிவரரும் ஆன தத்த சம்பிரதாயத்தின் தர்மம் வாழ்க. வேத சாத்திரங்கள் அடக்கிய பொருளை அறிந்த ஞான மூர்த்தியான சதாசிவப் ப்ரம்மேந்திரர் தவப் பெருமை தனிப்பட வாழ்க. சுத்த தத்வத்தை உணர்ந்த ஞானமுனிவரான சுயம்பிரகாசப் பிரம்மேந்திரர் திருவடி வாழ்க.

தரும நெறியே வாழ்வாகும் சாந்த முனிவர் கழல்வாழ்க
மரும மறிந்து ஞானத்தால் வாழ்ந்த துறவுக் குலம்வாழ்க
இருமை கருதி இவர்தம்மை இறைஞ்சு மன்பர் குலம்வாழ்க
அருமை யின்றி அறம்வாழும் அரசப் புதுவை நகர்வாழ்க.

உரை :- தரும மார்க்கமே தமது வாழ்வாகக் கொண்ட சாந்தானந்த முனிவர் திருவடிகள் வாழ்க. அறிதற்கு உரிய இரகசியத்தை அறிந்து ஞானத்தால் வாழ்ந்த சந்யாஸ பரம்பரை வாழ்க. இகபர லாபம் பெறும் பெறும் நோக்கத்தால் இம்முனிவரரை வணங்கும் அன்பர் குலம் வாழ்க. இன்றும் அருமையாகாமல் தருமம் வாழ்கின்ற புண்ய க்ஷேத்திரம் என்ற பெருமை பூண்ட அரசர் ஆண்ட புதுக்கோட்டை நகரம் வாழ்வதாக. புதுக்கோட்டை என்றும் தருமம் குன்றாது விளங்கும் என்பது.

விளக்கவுரை :- மருமம்-வேதாந்த ரகசியம். அது ஞானத்தையே விளக்குவது துறவுக் குலம் எதுவே ஆயினும அது வேதாந்த ரகசியம் அறிந்திருக்கவேண்டும். அறம் வாழ நகர் வாழ்வது.

வேத முணர்ந்த வித்தகரும் விச்சை பயின்ற சான்றவரும்
பேத மறந்த மனத்தவரும் பிறப்பை யொழிக்க முயல்பவரும்
போத நயந்த புண்ணியரும் புராண சரிதம் கேட்பவரும்
வாத மிறவா வொழுக்கினரும் மறைமெய் யருளால்
வாழியவே.

'உரை :- வேதத்தை ஓதிப் பொருள் தெளிந்த பெரும் புலவர்களும் வேதத்தின் வழிவந்த பிற நூல்களும் பயின்ற பெரியோரும் உயர்வு தாழ்வு மறந்த செம்மனச் செல்வரும், பிறப்பு என்ற பேதைமை ஒழியவே முயல்கின்ற பெருமக்களும் அறிவுச் செல்வத்தை உலகத்தார்க்கு அருளும் புண்ணிய மூர்த்திகளும் பழமையான வரலாறுகளையும் புதிய வரலாறுகளையும் முறைப்படி செவி சாய்த்துக் கேட்பவரும் வாத விவாத முறைகளிலே புகுந்து உண்மைப் பொருளை மறந்து தம்மை இழக்காத நல்லொழுக்கம் உடைய சான்றோரும் வேதம் என்ற நற்றாயின் திருவருளால் உலகில் என்றும் நன்கு வாழ்வராக.

விளக்கவுரை :- வாதம் இறவா ஒழுக்கம் என்பது சாஸ்திர சித்தாந்தங்களை அறிந்து பிறரோடு வாதம் செய்து வெல்வதற்கே என்று நினைந்து அப்படியே பாழாகாத ஆத்ம தரிசன உபயோகியான ஒழுக்கம்.

சிவகாமி அச்சகம், புதுக்கோட்டை.